அரசாங்க நிதி இயல்

அர.பெஷாசலம்

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வெளியீடு—122

அரசாங்க நிதி இயல்

PUBLIC FINANCE

ஆக்கியோர் :

அர. சேஷாசலம், எம். ஏ.

பொருட்டுறைப் பேராசிரியர்.

சரபோஜி மன்னர் கல்லூரி, தஞ்சாவூர்.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

முதற்பதிப்பு - அக்டோபர், 1963.

விலை ரூ. 4-75

விற்பனை உரிமை :

மெஸர்ஸ் ஹிக்கின்பாதம்ஸ் பிரைவேட் லிமிடெட்,

சென்னை-2

ப்ரீமியர் ஆர்ட் ப்ரஸ், மதராஸ்-1

அணிந்துரை

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழி ஆக்கி மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றார்கள். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன் வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன் வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி—இவை காரணமாக இத்திட்டம் நம்மிடையே திருத்திகரமாக நடைபெற்று வருகிறது.

பல துறைகளில் பணி புரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில், அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளார்கள். இவற்றுள் ஒன்றான 'அரசாங்க நிதி இயல்' என்னும் இந்நூலை அனைவரும் வரவேற்பார்கள் என நம்புகிறோம்.

கல்லூரித் தமிழ்க் குழு தமிழ் வெளியீட்டுக் கழகம் ஆகியவற்றின் சார்பில் இது வரை வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளிலும் 57 நூல்கள் வெளி வந்துள்ளன.

இத்துறையை இன்னும் விரிவுபடுத்தச் சென்னை அரசினர், தமிழ் வெளியீட்டுக் கழகம் ஒன்றை நிறுவியுள்ளனர். அதன் மூலம் இன்னும் வேறு பல நூல்கள் தமிழில் வெளிவர இருக்கின்றன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக! 'உழப்பின் வாரா உறுதிகள் உளவோ?' ஆதலின், உழைத்து வெற்றி காண்போம்.

தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பல வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்.
தமிழக முதலமைச்சர்.

ஆசிரியர் முன்னுரை

பொது நிதி இயலைத் தமிழில் எழுதும் முதல் முயற்சி இது என்று எண்ணுகின்றேன். என் பணியின் தரத்தை அறிஞர் உலகமும் எதிர் காலமுமே மதிப்பிட வேண்டும்.

பதினறு ஆண்டுகளுக்குமேல் பொது நிதி இயலை மாணவர்களுக்குக் கற்பித்து வந்திருக்கிறேன். பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலத்தில் பொது நிதி இயலைச் சற்று விரிவாகவே எழுதியிருக்கிறேன். இக்காரணங்களினுலும், என்னுடைய ஆங்கில நூலையே பெரும்பாலும் தழுவி இந்நூலைத் தமிழில் எழுதியதனுலும், இந்நூல் பி. ஏ. பாடத்திட்டத்துக்குச் சிறிது மேம்பட்ட நிலையிலேயே உள்ளது. 'தெளிவு எனப்படுவது பொருள் புலப்பாடே,' என்ற ஆன்ருேர் உரைக்கு இணங்க என்னுல் இயன்ற வரை இந்நூலைப் படிப்பவர் சிரமமின்றிப் பொருளைப் புரிந்துகொள்ளும் வகையில் எழுத முயன்றுள்ளேன். ஆயினும், சில இடங்களில் என் தமிழ் நடை தமிழ் இலக்கணத்துக்கும், மரபுக்கும் ஒவ்வாததாயிருக்கலாம். இதைப் படிக்கும் அன்பர்கள் குற்றங்களைத் தெரிவிப்பார்களாயின், அடுத்த பதிப்பில் குற்றங்களைத் திருத்திக்கொள்வேன் என்றும், அவர்களுக்கு நான் எழுமையும் கடப்பாடுடையேன் ஆவேன் என்றும் பணிவாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். குற்றம் களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடனென வேண்டுவன்.

இந்நூலை நான் சொல்லச் சொல்ல எழுதி உதவிய நண்பர் **மது. ச. விமலானந்தம், எம்.ஏ.,** அவர்களுக்கும், இதைப் பரிசுக்குரிய நூலாகத் தேர்ந்தெடுத்த தமிழ் நாட்டு அரசாங்கத்தினருக்கும், கவினுற அச்சிட்டு உதவிய சென்னைப் பிரிமியர் கலை அச்சகத்தினருக்கும் நான் என்றும் கடமைப்பட்டவனுவேன்.

அ.ர. சேஷாசலம்

பொருளடக்கம்

அரசாங்க நிதி இயல்

முதலதிகாரம்

பொது நிதி இயல்

1. தோற்றுவாய் :

பொது (அரசாங்கம்) நிதியியல் (Public Finance) என்பதற்கு அரசாங்க நிதியைக் கண்காணிக்கும் நூல் தன் விளக்கம் தரலாம். பொது நிதியியல் என்பதில் அரசாங்கங்களின் வருமானமும் செலவும் அடங்கும். இங்கு அரசாங்கங்கள் என்னும் சொல் - பஞ்சாயத்து களிலிருந்து தேசீய, சர்வதேச அரசாங்கங்கள் வரை உள்ளிட்ட எல்லா அரசாங்கங்களேயும் குறிக்கிறது.

2. நூலின் பிரிவுகள் :

பொது நிதியியலே நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை யாவன : 1. அரசாங்கச் செலவு ; அதாவது, நிருவாகத்தை நடத்து தற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் செலவு ; 2. அரசாங்க வருவாய் அல்லது வருமானம் ; அதாவது, செலவைச் சமாளிப்பதற்கு அரசாங்கம் பெறும் வருமானம் ; 3. அரசாங்கக் கடன்கள் : செல விற்கு வருமானம் போதவில்லே என்ருல் அரசாங்கம் வாங்கும் கடன் ; 4. நிதி நிருவாகம். இப்பகுதியில் அ. பட்ஜெட்டுகளேத் தயாரித்தல், ஆ. பட்ஜெட்டுகளேத் தணிக்கை செய்தல் ஆகியனவும், சட்டசபையின் நிதி வேலேயும் அடங்கும்.

3. பொது நிதியியலுக்கும், தனியார் நிதியியலுக்கும் உள்ள வேறுபாடு :

1. "துணிக்குத் தக்கவாறு சொக்காயைத் தைக்க வேண் டும்," (Cut your coat according to your cloth) என்று நாம்

தனியாருக்கு உபதேசிக்கிறோம். ஆனால், ஓர் அரசாங்கம் முதலில் தன் சொக்காயின் அளவைத் தீர்மானித்த பின்பே அதற்கு வேண்டிய துணியை வாங்குவதற்கு முனைகிறது. தனியார் தம் வருவாய்க்கேற்பச் செலவைச் சரிக்கட்ட வேண்டும். அரசாங்கம் பொதுவாகத் தன் செலவிற்கு ஏற்ப வருவாயைப் பெருக்கிக்கொள்கிறது. செலவின் மதிப்பீடு அதிகமானால், வருமானத்தைப் பெருக்குதற்குரிய வழி வகைகளை அரசாங்கம் ஆராய்கிறது. ஆனால், இக்கூற்று முற்றும் உண்மையன்று. தனியாரும் சில சமயம் தம் செலவிற்கேற்ப வருவாயைப் பெருக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கமும் சில சமயம் தனியார்களைப் போலவே வரவிற்கேற்பச் செலவைச் சரிக்கட்ட வேண்டியிருக்கிறது. உபரி வருமானம் கிடைக்கும்போது அரசாங்கம் சில இடங்களில் செலவை அதிகரிக்க முற்படலாம். பற்றுக்குறை நேரும்போது சிக்கனத்தின் மூலம் தன் செலவைக் குறைத்துக்கொள்ள அரசாங்கம் முனைகிறது. ஆயினும், பொதுவாகத் தனியாருக்கும் அரசாங்கத்தாருக்கும் இடையே, நிதியைப்பற்றிய கண்ணோட்டத்தில் ஒரு வேறுபாடு காணப்படுகிறது. தனியாருக்குத் தம் வருமானம் இன்னதென்று முன் கூட்டியே தெரியுமாதலால், வருவாய்க்கேற்பத் தம் வரவு செலவுத் திட்டங்களை வகுத்துக்கொள்கிறார்கள். இதற்கு மாறாக ஓர் அரசாங்கம் பல்வேறுபட்ட இலாக்காக்களிலிருந்து செலவு மதிப்பீடுகளைப் பெற்று மொத்தச் செலவுத் தொகையைத் தீர்மானித்து அவற்றிற்கேற்ப வரிகளை விதிக்கிறது.

2. வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதற்கு அரசாங்கங்கள் ஓர் ஆண்டையே அலகாகக் கொள்கின்றன. ஆனால், தனியார் ஓர் ஆண்டுக்குத் தனிப் புனிதத் தன்மை கற்பிப்பதில்லை. அவர்கள் ஒரு குறிப்பிட்ட நாளிலோ அல்லது ஒரு காலத்திலோ தம் வரவு செலவுத் திட்டத்தைச் சமநிலையாக்க வேண்டுவதில்லை.

3. தங்கள் சாதனங்களைப் பொறுத்த வரை ஓர் அரசாங்கத்திற்கும் தனியாருக்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறது. பண முடை ஏற்படும் போது உள் நாட்டிலும், பல வெளி நாடுகளிலும் அரசாங்கம் கடன் வாங்கலாம். ஆனால், தனியார் ஒருவர் பிறரிட மிருந்தே கடன் வாங்க முடியும். தவிர, அயல் நாட்டு அரசாங்கங்களிடமிருந்து கடன் வாங்க முடியாது.

4. அரசாங்கத்திற்கு வேறு ஒரு வருமானமும் இருக்கிறது. அதுதான் வேண்டும் போது பணத்தை அச்சிட்டுக்கொள்வது (பண வீக்கம்). போர்க்காலங்களில் தங்கள் போர்ச் செலவைச் சரிக் கட்ட, பெருவாரியாகச் செலாவணிகளை அரசாங்கங்கள் அச்சிட்டுக்

கொண்டன. நாட்டின் வரி தாங்கு வல்லமை அளவுக்கு மீறி பாதிக்கப்பட்டாலும், பொது மக்களுக்கு அரசாங்கத்திடம் நம்பிக்கை இல்லாமல் போனாலும், அரசாங்கம் இம்மந்திரக்கோலைப் பயன்படுத்திப் பணத்தைப் படைக்கலாம். சிறைக்குச் செல்லத் தயாராய் இருந்தால் ஒழியத் தனியார் அங்ஙனம் காகிதப் பணத்தை அச்சிட முடியாது.

5. சம இறுதி நிலைப் பயன்பாட்டு விதியின்படி (Law of Equimarginal Utility) ஒவ்வொருவரும் தாம் செலவு செய்யும் ஒவ்வொரு அலகு பணத்தினின்றும் ஒரே அளவு இறுதி நிலைப்பயன்பாட்டை அடைய முயல்வர். அதற்காகப் பல்வேறு பண்டங்களின் பயன்பாட்டை அவர் சீர்தூக்கிப் பார்ப்பார். ஆயினும், அரசாங்கம் உருவமற்ற ஒரு பொருளாக (Impersonal entity) இருப்பதால் இப்படிச் சீர்தூக்கிப்பார்க்க இயலாது. ஏனெனில், பயன்பாடு என்பது அகத்தைப் பொறுத்ததாகும்.

6. தனியார் ஒருவருக்குத் தம் வருமானத்தில் அல்லது செலவில் பெருத்த மாறுதல்கள் செய்வது எளிதன்று. எடுத்துக்காட்டாக ஒவ்வொருவரும் தத்தம் வருமானத்தை இரட்டிப்பாக்கவோ மும்மடங்காக்கவோ விரும்பலாம். ஆயினும், எத்தனை பேர் அவ்விதம் செய்ய இயலும்? அரசாங்க வருவாய், அரசாங்கச் செலவு சம்பந்தப்பட்ட மட்டில், பெருத்த மாற்றங்களைச் செய்வதற்கு அரசாங்கங்களுக்குப் பல வாய்ப்புகள் இருக்கின்றன. ஒரு பொதுவுடைமைக் கட்சி அதிகாரத்திற்கு வருமானால், அது அரசாங்க வருவாயிலும் செலவிலும் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்வது திண்ணம். நிதி விவகாரத்தில் இவ்வித நெகிழ்ச்சி தனியாரிடம் காணப்படுவதில்லை.

7. எதிர்காலத்திற்கு வகை செய்ய அரசாங்கம் தாராள புத்தியுடனும், கூர்த்த அறிவுடனும் இயங்க வேண்டும். அரசியல் தந்திரி எதிர்காலத் தலைமுறைகளுக்கும் தரும கர்த்தா பொறுப்பை ஏற்க வேண்டியவனாய் இருக்கிறான். ஆகவே, காடு வளர்ப்பு, பொது மராமத்து வேலைகள், பொதுநலப் பாதுகாப்புத் திட்டங்கள், இவற்றிற்கு அரசாங்கம் ஏராளமான தொகைகளைச் செலவிடுகின்றது. இவற்றிலிருந்து யாதொரு பண வருவாயும் உடனே கிடைக்காமல் இருக்கலாம்; பல தலைமுறைகளுக்குக்கூடக் கிடைக்காமல் இருக்கலாம். இதற்கு மாறாகத் தனியார் விரைவில் பண வரவை எதிர்பார்க்கிறார். மனித வாழ்வு அநித்தியமானது. தவிர, சிலர் எதிர்காலத்தைப் பற்றிக் குறைவாக மதிப்பிடுகிறார்கள். ஆனால், தனியாரைப்போன்று ஒரு சமுதாயம் இறந்துபடுவதில்லை. சமுதாயம் நிலையானது. ஆகவே, அரசாங்கம் சமுதாயத்தின் எதிர்காலத்திற்கு வகை செய்தே தீரவேண்டும்.

8. எதிர்கால நோக்குடைய ஒருவன் தான் ஈட்டிய பொருளை விடக் குறைவாகவே செலவிடுவான். இதனால் அவன் ஓரளவு வருவாயை மிச்சம் பிடிக்க முடிகிறது. இப்படிச் சேமிப்பது தனியாரைப் பொறுத்த வரை சிறந்த குணமாகக் கருதப்படுகிறது. ஆனால், அரசாங்கத்திற்கு இது பொருந்தாது. பற்றுக்குறை வரவு செலவுத் திட்டங்கள் தீமையைப் பயப்பன. அவை அரசாங்க நிதி நிலைமை நிலையற்ற தன்மையாக இருக்கிறதென்பதைக் காட்டுகின்றன. ஆயினும், இதிலிருந்து உபரி வரவு செலவுத் திட்டம் நல்லதெனக் கூற முடியாது. வரவு செலவுத் திட்டம் உபரியாக இருக்க வேண்டி, வரி விதிப்பு மிகவும் கடுமையானதாகவும், அரசாங்கச் செலவு மிகவும் குறைவாகவும் இருக்கலாம். நாட்டு நலனைப் பெருக்கும் சில இலாக்காக்களுக்குப் போதுமான தொகை கொடுக்கப்படாமலிருக்கலாம். எப்பொழுதுமே வரவு செலவுத் திட்டம் உபரியாக இருக்கவேண்டுமென்று நினைப்பது நிதியியலின் நல்ல அமிசம் என்று சொல்ல முடியாது. ஆண்டுதோறும் பெரிய உபரி வரவு செலவுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டால், வரி கொடுப்போருக்கு வரியைக் குறைத்து நிவாரணம் அளிப்பதோ, அல்லது சமூகச் செலவின் அளவை அதிகரிப்பதோ நல்லது.

9. தனியார் நிதியைப் பொறுத்த வரை எல்லாம் மூடு மந்திரமாகவே இருக்கிறது. பணம் படைத்த ஒவ்வொருவரும் பிறருடைய கண்ணோற்றிலிருந்து தப்ப முயல்கின்றனர். ஒருவர் நாணயம் அவருக்கு இருக்கும் ஆஸ்தியைப் பொறுத்தன்றி, அவருக்கு இருப்பதாகக் கருதப்படும் ஆஸ்தியைப் பொறுத்தே இருக்கிறது. தம் வருவாயைப்பற்றியும், நிதி நிலைமையைப் பற்றியும் பிறருக்கு உயர்வான எண்ணம் ஏற்பட வேண்டுமென்று அவர் கருதுகிறார். ஆனால், பொது நிதியியலைப் பொறுத்த வரை விளம்பரமே அதன் முக்கிய அமிசம். வரவு செலவுத் திட்டங்கள் பிரசுரிக்கப்பட்டு மிகப் பெருத்த அளவில் விளம்பரமும் தரப்படுகிறது. இவ்வித விளம்பரத்தால் அரசாங்கத்தின் நாணயம் அதிகரிக்குமே ஒழிய, குறையாது. மேற்கூறியவை பொது நிதியியலுக்கும் தனியார் நிதியியலுக்கும் உள்ள சில வேறுபாடுகளாகும்.

4. **உச்சச்சமூகப் பயன் கொள்கை:** (The Principle of Maximum Social Advantage): பொது நிதியியலைப் பொறுத்த வரை நாம் கடந்த காலத்து மேலெழுந்த வாரியான கருத்துகளாலும், மேற்போக்காகக் கூறிய கூற்றுகளாலும் இப்பொழுதும் தாக்கப்படுகிறோம் என டாக்டர் டால்டன் கூறுகிறார். எடுத்துக்காட்டாகச் சுமார் 150 ஆண்டுகட்கு முன்பு, ஜே. பி. சே (J. B Say), "நிதித் திட்டங்கள் யாவற்றிலும் மிகச் சிறந்தது, மிகக் குறைவான வருவாயைக் கொடுக்கக்

கூடியதே,'' எனக் கூறினுர். இக்காலத்திலுங்கூடப் பலர் அவர் கருத்தை ஒப்புக்கொள்வர். வரியைப்பற்றிய இப்போதைய விவாதம் பெரும்பாலும் ''ஒவ்வொரு வரியும் தீமை பயப்பதாகும்,'' என்ற அடிப்படையிலேயே நடக்கின்றது. இக்கருத்து அறிவுக்கு ஒத்த தன்று. எல்லா அரசாங்கச் செலவும் நன்மை தருவது என்ற கூற்றும் அறிவுக்கு ஒத்ததன்று. ஏனெனில், ஒவ்வொரு வரியும் தீமை பயக் கிறது என்பது உண்மையன்று. எடுத்துக்காட்டாகச் சாராயத்தின் மீது வரி விதிப்பதால் அதன் விலை ஏறி அதன் நுகர்ச்சி குறையு மாறுல், அது நல்லதாகும். அதே போல எல்லா அரசாங்கச் செலவும் நன்மை தருவது என்பதும் உண்மையன்று. உதாரணமாக, அவசிய மற்ற போர்ச்செலவுகள் தீமை பயப்பனவாகும். அரசாங்கச் செலவின் ஆதாயத்தைப் பற்றிப் பேசாது, வரிப்பளுவைப்பற்றிப் பேசுவது மடமையாகும். எந்த நோக்கங்களுக்காகச் செக்குகள் எழுதப்பட்டனவோ, அவற்றை எண்ணுது அறிவுடைய ஒருவரும் செக்குகளை எழுதுவதில் உள்ள கஷ்டத்தைப் பற்றிப் பேசுவதில்லை.

பொது நிதியியலின் அடிப்படைக் கொள்கையைப் பற்றி டாக்டர் டால்டன் பின் வருமாறு கூறுகிருர்: பகட்டான கூற்றுகளின் கோவை யாகக் கருதாது, பொது நிதியியலை, பொருளாதார நூல் அல்லது அரசியல் நூலின் ஒரு பிரிவாகக் கருதவேண்டுமெனில், அதற்கு ஆணி வேராக ஓர் அடிப்படைக் கொள்கை இருக்க வேண்டும். இவ்வடிப் படையை அவர் உச்சச் சமூகப் பயன் கொள்கை எனக் குறிப்பிடு கிருர். பொது நிதியியலைப்பற்றிய வரி விதிப்பு, செலவீட்டு விவகாரங் களில் வாங்கும் சத்தி அரசாங்கத்திடமிருந்து தனியாருக்கு அல்லது தனியாரிடமிருந்து அரசாங்கத்திற்கு மாற்றப்படுகின்றது. இவ்வாங் கும் சத்தி பயன்பாடுகளை வாங்குவதற்குப் பயன்படுகின்றது. இவ் வாங்கும் சத்தியின் மாற்றங்கள், தனியாரிடமிருந்து அரசாங்கத்திற்கு வரி விதிப்பின் மூலமும், அரசாங்கத்தினிடமிருந்து தனியாருக்குச் செலவீட்டின் மூலமும் ஏற்படுகின்றன. இம்மாற்றங்களின் விளை வாகச் சமுதாயம் உற்பத்தி செய்த செல்வத்தின் இயல்பிலும், தொகை யிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. அதே போலத் தனியார்கள், வருக்கங்கள் இவர்களிடையே உள்ள செல்வப் பங்கீட்டிலும் மாறு தல்கள் ஏற்படுகின்றன. இந்தச் செயல்கள் மூலமாகச் சமுதாயம் முழுதுக்கும் அதிக பட்ச ஆதாயத்தைப்பெறும் முறையே சிறந்த பொது நிதியியல் முறையாகும்.

இக்கொள்கையை நடைமுறையில் கடைப்பிடிக்கும்பொழுது, டாக்டர் டால்டன், சமூகப் பயனுக்கான சில சோதனைகளைக் குறிப் பிடுகிருர். பிற நாட்டுத் தாக்குதல்களிலிருந்து நாட்டைப் பாதுகாப் பதும், உள் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துவதும்

முதற்சோதனையாகும். இதற்கு உள் நாட்டில் சிறந்த கொள்கையைப் பின்பற்றுவதும், வெளி நாடுகளுடன் நட்புறவு கொண்டிருப்பதும், போதிய போர்த்தளவாடங்களையும், ஊர்காவலரையும் (Police) வைத்திருப்பதும் இன்றியமையாதனவாகும்.

இரண்டாவது சோதனை பொருளாதாரச் சோதனையாகும். ஒரு சமுதாயத்தின் பொருளாதார நலன் அதிகரிப்பதற்கு இரண்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். முதலாவது, உற்பத்திப் பெருக்கம் ; இரண்டாவது, உற்பத்தி செய்யப்பட்ட பொருளைப் பங்கிடுவதில் மேம்பாடு. மக்கள் சேமிக்கும் மூலதனத்தின் அளவைப் பெருக்கியும், சரியாகக் கண்காணிப்பு இன்மையாலும், வேலை இன்மையாலும் பொருளாதாரச் சாதனங்கள் வீணாக்கப்படுவதை வெகுவாகக் குறைத்து உற்பத்தி அமைப்பைத் திருத்தியும், ஒரு சமுதாயத்தின் உற்பத்தி ஆற்றலைப் பெருக்க முடியும். பல்வேறுபட்ட மக்களிடையேயும், குடும்பங்களிடையேயும் நிலவும் வருவாய் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதன் மூலம் பங்கீட்டை அபிவிருத்தி செய்யலாம். பல்வேறு பட்ட காலங்களில் குறிப்பிட்ட தனியார்கள் அல்லது குடும்பங்கள் இவர்களின் வருவாய்களைக் குறைந்த அளவு மாறுதல்களுக்கு உள்ளாக்குவதன் மூலமும் பங்கீட்டை அபிவிருத்தி செய்யலாம்.

அரசாங்கச் செலவின் மூலம் சமுதாயத்தின் வறிய வருக்கத்தினரின் வாங்கும் சத்தியை அதிகரிக்கலாம். இங்ஙனம் வறிய வருக்கத்தினர்களின் வாங்கும் சத்தியை அதிகரிப்பதன் மூலம் வருவாயில் ஏற்றத்தாழ்வுகளை நேரிடையாகக் குறைக்கலாம். முதியோருக்கு உபகாரச் சம்பளம், வேலையில்லாதோருக்கு நிவாரணம், நோய் வாய்ப்பட்டிருப்போருக்கு ஈட்டுறுதி போன்றவைகளின் மூலம் வறியோர்களின் வாங்கும் சத்தி அதிகரிக்கப்படுகிறது. கடுமையான வரி விதிப்பினாலும் வருவாயில் ஏற்றத்தாழ்வுகள் குறைகின்றன. இவ்வாறு வரி விதிப்பினால் சிலரது செல்வம் குறைகிறது ; செலவீட்டால் பலரது செல்வம் கூடுகிறது. இவ்வாறு பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் குறைக்கப்படுகின்றன.

அரசியல் தந்திரி, நிகழ்காலத்திற்கு மட்டுமன்றி, எதிர்காலத்திற்கும் தருமகர்த்தா ஆவான். தனியார் இறக்கலாம் ; ஆனால், சமுதாயம் இறந்துபடாமல் நிரந்தரமாக வாழ்கிறது. ஆகவே, அரசியல் தந்திரி நிகழ்காலத்தில் ஒரு பெரிய சமூகப்பயனையடைய விரும்ப வேண்டும்.

திறனாய்வு :

டாக்டர் டால்டனின் உச்சச் சமூகப் பயன் கொள்கையில் பேபியன் (Fabian) பொதுவுடைமை வாதிகளின் கருத்துச்சாயல் காணப்

படுகிறது. எல்லாப் பொருட்புலவர்களும் நிதிக்கொள்கையால் நேரிடையாகப் பொருளாதார நலத்தில் சமநிலை கொண்டு வர வேண்டும் என்ற கொள்கையை ஒப்பவில்லை.

சில்வர்மென் இக்கொள்கையைப் பின் வருமாறு திறனாய்வு செய்கிறார் : " சாதாரணமாக இயல்வதைவிட அதிகமான அளவு தன் வளங்களை ஒரு நாடு பயன்படுத்தும்படி போர் அல்லது பிற நெருக்கடியான காலங்கள் கட்டாயப்படுத்தக் கூடும். சந்தர்ப்பங்களினால் ஓர் அரசாங்கம் சில செலவு செய்யும் இலாக்காக்களுக்கு ஒதுக்கும் தொகையை அதிகரிக்கும்படி நேரிடலாம் ; அதே சமயம் வேறு சில இலாக்காக்களின் கோரிக்கைகளைப் புறக்கணிக்கலாம். அக்கோரிக்கைகள் முக்கியமானவையாயும் இருக்கலாம். ஆனால், அவற்றை உடனே செய்து முடிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லாதிருக்கலாம். ஆகவே, உச்சச் சமூகப்பயன் என்ற கருத்து, ஒப்புமையில் அவ்வப்போது நிலவும் சூழ்நிலைகளைப் பொறுத்ததாகும். நமக்குத் தெரிந்த வரையில் இக்கொள்கை ஏட்டளவில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததே தவிர, நடைமுறையில் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததன்று. ஆயினும், சில குறிப்பிட்ட பிரச்சினைகளை வாதிக்கும்போது அவற்றை ஊடுருவி நிற்கும் இப்பொதுக் கொள்கையை மனத்தில் இருத்தக் கூடாது என்பதற்கு அஃதொரு காரணமாகாது.

இரண்டாமதிகாரம்

அரசாங்கச் செலவின் முக்கியத்துவம்

(The Importance of Public Expenditure)

பத்தொன்பதாம் நூற்றுண்டில் அரசாங்கத்தின் அலுவல்கள் ஒரு வரையறைக்கு உட்பட்டனவாய் இருந்ததால், அரசாங்கத்தின் செலவைப்பற்றிய ஒரு கருதுகோளுக்கு அவசியமில்லாமல் இருந்தது. எனவே, அரசாங்கச் செலவின் கொள்கைகளைப்பற்றி ஆங்கிலேயப் பொருள் நூல் வல்லுநர்கள் மிகச் சொற்பமாகவே கூறியிருக்கிருர்கள். பேராசிரியர் ஆடம்ஸ் கூறுவது போன்று, "பழைய ஆங்கிலேய ஆசிரியர்களுக்குச் செலவுகளைப் பற்றிய ஒரு கருதுகோளுக்கு அவசியமில்லாமல் இருந்தது; ஏனெனில், அவர்களுடைய அரசாங்கத்தைப்பற்றிய கருதுகோளில் அரசாங்க அலுவல்கள் ஒரு வரம்புக்கு உட்பட்டனவாய் இருந்தன."

அரசாங்கச் செலவுகளைப்பற்றிய சிந்தனை வரலாறுகளை இரு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒரு சாரார், பொதுவாகப் பாதுகாப்பு, சட்டம், அமைதி, அரசாங்கக்கடன், நிருவாகத்தின் தேவைகள் போன்ற அடிப்படையான அலுவல்கள் மட்டுந்தான் அரசாங்கத்தின் அலுவல்கள் எனக் கருதுகின்றனர். வேருெரு சாரார், அரசாங்கத்தின் அலுவல்களை அதிகரிப்பதில் நாட்டமுள்ளவர்களாகப் பொதுவாகக் காணப்படுகின்றனர். உண்மையில் அவர்கள், "இக்காலத்தில் நாம் எல்லோரும் பொதுவுடைமை வாதிகள்," (Nowadays we are all socialists) என்று அடிக்கடி மேற்கோளாகக் கூறப்படும் கோட்பாட்டில் பற்றுள்ளவர்கள் எனலாம்.

முன்னைய பிரிவினரின் கொள்கைக்குச் சிறந்த விளக்கம் தந்தவர் சர். எச். பார்னல் அல்லது காங்கிள்டன் (Sir. H. Parnell or Congleton) என்பவர். அவர் இயற்றிய 'நிதியைப் பற்றிய சீர்திருத்தம்'

('On Financial Reform' 1830) என்ற நூலில் பின் வருமாறு கூறுகின்றார்: "சமூக அமைதியைப் பாதுகாப்பதற்கும், பிற நாட்டுப் படையெடுப்பினின்றும் தற்காத்துக்கொள்வதற்கும் வேண்டியதற்கு மேற்பட்ட ஒவ்வொரு துளிச்செலவும் பயனற்றதுமட்டுமன்றி, மக்களின்மேல் அநீதியாகவும் கொடுங்கோன்மையாகவும் சுமத்தப்பட்ட வரியுமாகும்." இக்காலத்தில் செல்வாக்குள்ள வட்டாரங்களில் தனியாரின் ஊதாரித்தனமான வாழ்க்கையைக் கண்டிக்காவிட்டாலும் அரசாங்கத்தின் எந்தச் செலவினத்தையும் வெகுவாகக் கண்டிக்கின்றனர். "அரசாங்கச் சிக்கனம், தனியார் ஊதாரித்தனம்" (Public egestas, private opulentia) என்ற கூற்றுப் பழைய காலத்து உரோமாபுரிக்கு மட்டுமல்லாமல், இக்காலத்து நாடுகளுக்கும் பொருந்தும். இக்கூற்றை நம்புகிறவர்கள் தனியார் பணத்தை அரசாங்கத்தைவிட நன்முறையில் செலவிடுகிறார்கள் என்று தவறாகக் கருதுகிறார்கள். இது எக்காலத்தும் உண்மையன்று. மக்கள் கையில் பணத்தை விட்டுவைத்தால், அது நிரம்பவும் பயன் தரும் என்று கிளாட்ஸ்டன் அடிக்கடி கூறினார். இருபதாம் நூற்றாண்டின் நிதி விவகாரங்கள், அரசாங்கம் பணத்தைப் பயனுள்ள முறையில் செலவிடுகின்றது என்றும், தனியார் செலவு பலகாலும் வீணாய்ப் போகின்றது (அதிலும் சிறப்பாக முதல் உலகப் போருக்குப்பின்) என்றும் நடைமுறையில் காட்டுகின்றன. ஹக்ஸ்லி (Huxley) தாம் எழுதிய 'நிருவாக சூரியம்' (Essay on Administrative Nihilism) என்ற கட்டுரையில் பார்னல், ஹெர்பர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer) ஆகியோரின் கூற்றுகளை வன்மையாக மறுக்கிறார். அவர் கூறுவதாவது: "என் அடுத்த வீட்டுக்காரர் அபாயகரமான விஷக்காய்ச்சலும் (typhus) மென்னடைப்பானும் வரக்கூடியவாறு தம் வீட்டுச்சாக்கடையை வைத்திருப்பாராகில், அவர் நான் சுதந்தரமாக வாழும் உரிமையைக் குறைக்கிறார்; இவ்வாறு அவர் வைத்திருப்பது ஒரு கையில் துப்பாக்கியுடன் என் உயிருக்கு உலை வைப்பதற்காகப் பயமுறுத்துவதற்கு ஒப்பாகும். அவர் தம் குழந்தைகளை அம்மை குத்திக் கொள்ளாமல் வைத்திருப்பாராகில், அது நான் வரும் வழியில் எட்டிக் கொட்டையிலிருந்து கிடைக்கும் கடுநச்சுத் துண்டுகளைத் தாராளமாகப் போட்டு வைப்பதற்குச் சமமாகும். அவர் தம் மக்களைக் கல்வி பயிற்றுவிக்காமலும், ஒரு வேலையிலும் பயிற்சியளிக்காமலும் வளர்த்தாராகில், சிறைச்சாலைகளையும், தொழிற்கூடங்களையும் நடத்துவதற்காக நான் கொடுக்கக்கூடிய வரிச்சுமையை ஏற்றி என்னுடைய சுதந்தரத்தைக் குறைப்பதற்குத் தம்மாலான யாவற்றையும் செய்வதற்கு ஒப்பாகும்."

ஜெர்மானிய ஆசிரியர்கள், புதிய சமூக நற்பணிகளுக்கு அரசாங்கம் செலவிடலாம் என்றும், தனியாருக்கு எதிராக அரசாங்கத்

தின் உரிமைகளை மிகைப்படுத்தியும் கூறுகின்றார்கள். இக்காலத்தில் எல்லாவற்றிலும் அரசாங்கம் தலையிடவேண்டும் என்பதே மக்களின் கூக்குரலாய் இருக்கின்றது. அரசாங்கம் எல்லாவற்றையும் செய்ய வேண்டும். இருந்தாலும், அரசாங்கப் பாதுகாப்பு, சட்டம், அமைதி இவற்றின்மீதும், கல்வி, சுகாதாரம் முதலான சமூகப் பணிகள் மீதும் செலவிடலாம் என்பதே பொதுவாகப் பெரும்பான்மையோரின் கருத்து.

அரசாங்கச் செலவில், எதிர்காலத்தைப்பற்றிக் குறைவாக எண்ணுவதை இயன்ற வரையில் தவிர்க்க வேண்டும். ஒரு தனியாளைப் போலச் சமூகம் இறந்துபடுவதில்லை. ஆகவே, நிதியமைச்சர்கள், சட்டசபை உறுப்பினர்கள் இவர்களின் கடமை, இக்காலத்தில் மூல தனத்திலிருந்து செலவிடப்படும் செலவினைச் சிறப்பாகக் குறைத்து, எதிர்காலத்தில் தாராளமாகச் செலவிடுவதற்கு வகை செய்வதே. "நாம் பின் சந்ததியார்களுக்காகப் பெரிதும் பரிந்து செய்வதற்கு, அவர்கள் நமக்கு என்ன செய்தார்கள்?" என்று கேட்பது ஆபத்தில் கொண்டுவிடும். டாசிடஸ் (Tacitus) இயற்றிய **அக்ரிகோலா** (Agri. cola) என்ற நூலில் கூறிய "உங்கள் மூதாதைகளைப் பற்றியும் பின் சந்ததியார்களைப்பற்றியும் சிந்தியுங்கள்," என்ற கூற்று ஈண்டு நினைவு கூரற்பாலது.

மூன்ருமதிகாரம்

நவீன காலத்தில் அரசாங்கச் செலவின் ஏற்றம் : வாக்னரின் விதி

(Increase of Public Expenditure in Modern Times: Wagner's Law)

அரசாங்கச் செலவுகள் விரைவாக, அதிலும் சிறப்பாக 1850 முதல் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. அவை முற்போக்கடைந்த எல்லா நாடுகளிலும் இன்னும் விரைவாகவே வளர்ந்துகொண்டிருக் கின்றன. இவ்வளர்ச்சியைப்பற்றி ஜெர்மானியப் பொருள் நூல்வல்லுநர் அடால்ப் வாக்னர் (Adolf Wagner) ஒரு விதியின் மூலமாக விளக்கம் தந்திருக்கின்ருர். அஃது, "அரசாங்க நடவடிக்கைகளின் வளர்ச் சியைப்பற்றிய விதி" (The Law of Increasing State Activities) என்பதாகும். அவர் கூறுவது வருமாறு: "பல்வேறுபட்ட நாடுகளை யும், பல்வேறுபட்ட காலங்களையும் ஒப்பிடும்போது முற்போக்கடைந்த மக்களிடையில், (நாம் அவர்களிடத்தில் மட்டுமே அக்கறை கொண் டுள்ளோம்) மத்திய, ஸ்தல அரசாங்கங்களின் நடவடிக்கைகளில் ஒரு வளர்ச்சி காலந்தோறும் தென்படுகிறது. இவ்வளர்ச்சி விரிவான தும் தீவிரமானதுமாய் (extensive and intensive) உள்ளது. மத்திய ஸ்தலஅரசாங்கங்கள்எப்பொழுதும் புதிய அலுவல்களை மேற்கொள்ளு கின்றன. அவை பழைய அலுவல்கள், புதிய அலுவல்கள் யாவற் றையும் மிகவும் திறமையாகவும் பூரணமாகவும் செய்கின்றன. இம் மாதிரியாக மக்களின் பொருளியல் தேவைகள் பேரளவிலும், மிகவும் திருத்தியான முறையிலும் மத்திய, ஸ்தல அரசாங்கங்களால் நிறை வேற்றி வைக்கப்படுகின்றன." வாக்னர் கூற்றுப்படி அரசாங்கச் செலவு அதிகரிக்கிறது. ஆனல், இஃது அரசாங்கத்தின் எல்லா அலு வல்களுக்கும் ஒரே அளவில் பொருந்துவதன்று. பாதுகாப்புப் பற்றிய செலவு, அரசாங்கத்தின் தற்காப்புப் படைகளின் சேவையின் வெற் றிக்கு ஏற்றவாறு குறைகின்றது; நாட்டை வளர்க்கும் சேவைகளுக்

கான செலவு எப்பொழுதும் ஏறுகின்றது. இவ்வகையாய் உயர்ந்த அளவில் செலவிடுவது எங்கும் காணப்படுவதொரு நிகழ்ச்சி. இச் செலவு ஏற்றம் ஏழை நாடுகளிலும் செல்வமிகுந்த நாடுகளிலும் ஏற்பட்டிருக்கிறது; சுயேச்சையுடன் கூடிய மக்கள் ஆட்சியிலும், சர்வாதிகார நாடுகளிலும் அரசாங்கத்தின் செலவு அதிகரித்திருக்கிறது. அந்நாடுகளின் அரசாங்கச் செலவைப்பற்றிய புள்ளி விவரங்கள் இவ்வேற்றத்திற்குச் சான்று பகர்வனவாகும். எடுத்துக்காட்டாக, பிரிட்டிஷ் அரசாங்கம் 1691இல் மூன்று மில்லியன் பவுன்கள் செலவழித்தது. 1960இல் சுமார் ஐயாயிரம் மில்லியன் பவுன்களுக்குமேல் செலவழித்தது. 1861இல் இந்திய அரசாங்கம் ரூ. 44 கோடி செலவழித்தது; 1960-61இல் ரூ. 980.35 கோடி செலவழித்தது. 1963-64ல் இந்திய அரசாங்கத்தின் செலவு ரூ. 1,852 கோடியாக இருக்கும் (பட்ஜெட்டு மதிப்பீடு). இக்கால அரசாங்கங்களில் எல்லாம் பொதுவாகக் காணப்படும் அமிசம் இச்செலவேற்றம். குடியாட்சி நாடு அரசாங்கச் செலவைக் குறைக்கிறது என்று சொல்வதற்கில்லை. உண்மையில் குடியாட்சி ஒரு பெருஞ்செலவு பிடிக்கும் போகப்பொருளுக்கு (an expensive luxury) ஒப்பாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன்பு அரசாங்கச் செலவின் ஏற்றம் சொற்பமேயாகும்; ஆனால், அதன் பின்பு அரசாங்கச் செலவில் மிகப் பெரிய ஏற்றம் காணப்படுகிறது.

வாக்னரின் விதி எல்லா நாடுகளுக்கும் பொருந்துவதாகும். உழைப்பின் பகுப்பின் அதிகரிப்பு (increasing division of labour) என்ற அடிப்படையில் இதை விளக்குவது தவறாகும். இதன்படி அரசாங்கத்தின் அலுவல்கள், உழைப்பின் பகுப்பின் வளர்ச்சியினால் செவ்வனே செய்யப்படுகின்றன. ஏற்கெனவே தனியார் செய்து வந்த அலுவல்களை அரசாங்கங்கள் மேலும் மேலும் மேற்கொள்ளுகின்றன. இவை பற்றிய ஒரு விளக்கம் வருந்தத்தக்கது. அது வருமாறு: ''எது பொது நன்மைக்கு உகந்தது என்பதைத் தவறாகப் புரிந்துகொண்டதாலோ, குடியாட்சிகளின் அறியாமையாலோ, அவற்றின் தலைவர்களுக்குத் தைரியம் இன்மையாலோ, அல்லது சர்வாதிகாரிகளின் தன் முனைப்பினாலோ அரசாங்க நடவடிக்கைகளின் வளர்ச்சி ஏற்பட்டதாகும்.'' போர்க்கருவிகள், பிற போர்ச் செலவுகள் ஆகியவற்றிற்கு இவ்விளக்கம் முற்றிலும் பொருந்தும். ஆனால், இக்காலத்துப் பிற அரசாங்க நடவடிக்கைகளுக்கு இக்கூற்றுப் பொருந்தாது. தனிப்பட்ட சங்கங்களின் திறமையோடு ஒப்பிட்டுப்பார்த்தால், இக்காலத்து வளர்ச்சிகளினால் அரசாங்கத்தாரின் திறமை அதிகரித்திருக்கிறது என்பதே உண்மையாகும். டாக்டர் டால்டன் கூறுவது போன்று, ''தனியார் ஏஜன்சிகளை (private agencies) விட அரசாங்க ஏஜன்சிகளைத் தேர்ந்தெடுப்பது இக்காலத்தில் முற்றிலும் அறிவுக்குப்

பொருந்துவதாகும்; அவை கடந்த காலத்தில் அறிவிற்குப் புறம் பானவையாக இருந்திருக்கலாம். அதே போன்று எதிர்காலத்தில் அரசாங்க ஏஜன்சிகளைத் தேர்ந்தெடுப்பது அறிவுடைமையாக இருக் கலாம்; ஆனால், இன்று அவை அறிவுக்கு ஒவ்வாதவையாக இருக்கலாம்.''

இக்காலத்தில் அரசாங்கச் செலவின் பெருக்கத்திற்குக் காரணங்கள்

(Causes for the increase of public expenditure in modern times)

1. பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு :

இக்காலத்தில் அரசாங்கச் செலவு பல்கியதற்கு அடிப்படைக் காரணங்கள் வருமாறு: முதற்கண் இக்காலத்துப் போர்ச்செலவும், போர்க்கருவிகளின் பெருக்கமும் வளர்ந்ததாலேயே இக்காலத்து வரவு செலவுத் திட்டங்கள் பெருகியுள்ளன. சுமார் இருநூறு ஆண்டு களுக்குமுன் மான்டெஸ்கோ (Montesquieu) பின்வருமாறு எழுதினார்: ''ஐரோப்பா முழுவதும் ஒரு புதிய நோய் தோன்றியுள்ளது. அது நம் அரசர்களையும் பிடித்து அவர்கள் 'அளவுக்கு மீறிய துருப்புகளை வைத்திருக்குமாறு செய்துள்ளது. நோய் முற்றித் தொற்றுநோயாக மாறுகிறது. ஏனெனில், ஒருநாடு தன் படைப்பலத்தைப் பெருக்கினால் உடனே பிற நாடுகளும் தம் படைப்பலத்தைப் பெருக்குகின்றன. ஆகையால், இவற்றால் பெற்ற பயன் பெருநாசமன்றி வேறன்று. மன்னர் ஒவ்வொருவரும் தம் மக்கள் அழிந்துபடும் நிலையில் இருக் கிறார்கள் என்று அஞ்சியதே போன்று பல படைகளை ஆயத்தமாக வைத்திருக்கின்றனர். இவ்வகையாக எல்லோருக்கும் எதிராக எல் லோராலும் செய்யப்படும் போராட்டம் சமாதானம் என்று கூறப்படு கிறது! உலகம் கீழ்க்காணும் வரிகளில் பொதிந்திருக்கும் உண் மையை உணர்ந்தால் ஒழிய இப்போர்க்கருவிகள் போட்டியும் பாது காப்பிற்கான செலவின் வளர்ச்சியும் பல்லாண்டுகள் தொடர்ந்து நடைபெறும். ''நாம் எல்லோரும் சகோதரர்கள்; ஒருவரும் தனி வழியே செல்வதில்லை; முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.'' எடுத் துக்காட்டாக இந்திய அரசாங்கம் 1859-60இல் பத்தொன்பது கோடி ரூபாய் பாதுகாப்பிற்காகச் செலவழித்தது. இஃது 1960-61ல் ரூபாய் 272 கோடியாக (நிகரச் செலவு) உயர்ந்திருக்கிறது. 1963-64ல் பாதுகாப்புச் செலவு ரூ. 708 கோடியாக உயர்ந்தது (பட்ஜெட்டு மதிப்பீடு). பாதுகாப்புச் செலவு அதிகரிப்பதற்குக் கார ணங்கள் ஆவன, (அ) விலை வாசிகள் ஏற்றம்; (ஆ) எல்லாப் படை யினருக்கும் அதிக ஊதியம் தந்தது; (இ) துருப்புகளின் வசதிகளைப்

பெருக்கியது; (ஈ) போர்த்தளவாடங்களின் பெருக்கம்; படைப் பயிற்சிக்கான உயர்ந்த திட்டம்; (உ) இந்தியக் கப்பற்படை, இந்திய விமானப்படை ஆகியவற்றைத் தொகுத்ததும் பெருக்கியதும். இவ் வாண்டில் (1963-64ல்) சென்ற ஆண்டைக்காட்டிலும் பாது காப்புச் செலவு 80% உயர்ந்திருப்பதற்குக் காரணம் சீனப் படை யெடுப்பே.

2. மக்கள் தொகைப் பெருக்கம்:

மக்கள் தொகை பெருகுவதனுல் அரசாங்கத்தின் மொத்தச் செலவு இயல்பாகவே அதிகரிக்கிறது; ஏனெனில், தனிப்பட்டவர் களின் தேவைகளைப் பெருவாரியான அளவில் கவனிப்பதற்குப் பல வாய்ப்புகள் இல்லை. அரசாங்க அதிகாரிகளுக்கு அனுப்பப்படும் கடிதத்திற்கும் புகாருக்கும் ஒரு பதில் தேவைப்படுகிறது; அதுவும் இறுதியில் கிடைக்கிறது. மன்றங்களில் வரும் ஒவ்வொரு வழக்கும் அதை விசாரிக்கும் நீதிபதியின் தனிப்பட்ட கவனத்தைக் கோரு கிறது. ஒவ்வொரு வீட்டாரும் தமது வீட்டு வரையில் தளமிடப்பட்ட தெரு அல்லது சாலை, தண்ணீர் வினியோகம், ஜலதாரை வசதிகள், தெரு விளக்கு, தம் குழந்தைகள் சென்று வருவதற்காக அண்மையில் ஒரு பள்ளிக்கூடம் இவற்றை எதிர்பார்க்கின்றனர்.

மக்கள் தொகை பெருகுந்தோறும் மக்களுக்குத் தனித்தனி யாகவும், கூட்டாகவும், அதிகமான சேவைகள் செய்ய வேண்டி இருக்கின்றன. போக்கு வரத்தைக் கண்டிப்பாகக் கண்காணிக்க வேண்டும். தீத்தடுப்பு முறைகளைக் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டும். பூங்கா, விளையாடுமிடம், பிற பொழுது போக்கு வசதிகள் இவற்றிற்காகப் பெருஞ்செலவில் வகை செய்ய வேண்டும். ஊர்தி விரைவாகச் செல்வதற்குச் சாலைகளும், பாலங்களும், குடைபாதை களும் (tunnels), கீழ்ப்பாதைகளும் (sub-ways) இடவேண்டும். ஆயிரம் மக்களைக்கொண்ட ஒரு சிற்றூருக்குக் குடிதண்ணீருக்கு ஒரு கிணறு போதும். ஆனுல், பல லட்ச மக்களைக் கொண்ட ஒரு நகரத் திற்கு ஒரு நீர்த்தேக்கமே தேவைப்படுகிறது. ஒவ்வொரு நபருக்கும் ஆகும் அரசாங்கத்தின் செலவு அதிகரிக்குமானுல், அஃது அரசாங் கத்தின் செலவு அதிகரிக்கிறது என்பதைக் காட்டுகிறது.

3. அரசாங்கக் கடன் வளர்ச்சி:

அரசாங்கச் செலவு ஏறுவதற்குப் பிறிதொரு காரணம், அரசாங் கக்கடன் தொகை ஏறியதும், அதனுல் ஆண்டுதோறும் அரசாங்க வருவாயிலிருந்து கொடுபடவேண்டிய தொகைகளும் அதிகரித்ததுமே யாகும். இந்தியாவைப் பொறுத்த வரை, இந்நாட்டில் ஆங்கிலேயர்

ஆட்சி ஏற்படுமுன் அரசாங்கக் கடன் இல்லை. பேராசிரியர் கே. டி. ஷா (Professor K. T. Shah) கூறுவது போன்று, ''இப்போதிருக்கும் இந்திய அரசாங்கத்தின் கடன் இந்நாட்டின் ஆங்கிலேய ஆட்சியால் தோற்றுவிக்கப்பட்டதாகும்.'' நவீன காலங்களில் இந்திய அரசாங்கத்தின் கடனில் பெரும்பகுதி உற்பத்தியைப் பெருக்குவதற்காக வாங்கப்பட்டது. அதற்கான வட்டி உற்பத்தியிலிருந்து வரும் வருமானத்திலிருந்து கொடுக்கப்படுகிறது. 1851ஆம் ஆண்டுக்கு முன்பு இந்திய அரசாங்கத்தின் கடன், போர் முதலான உற்பத்தியைப் பெருக்காத பணிகளுக்காக வாங்கப்பட்டது. பிரெஞ்சுப் போர்கள், மைசூர்ப் போர்கள், மராட்டியப் போர்கள், பர்மியப் போர், ஆப்கானியர்கள், சீக்கியர்கள் இவர்களுடன் நிகழ்த்திய போர்கள், சிப்பாய் கலகம் இவையெல்லாம் இந்திய அரசாங்கத்தின் கடன் அதிகமானதற்குக் காரணங்களாகும். 1882ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கத்தின் கடன் 167 கோடி ரூபாயாகும். 1961 மார்ச்சு மாதத்தில் இக்கடன் 5,262 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்பட்டது.

4. பரப்பின் பிரிவு (Territorial Expansion) :

அரசியல் பரப்பு விரியுந்தோறும் நிருவாக இயந்திரத்தை ஒவ்வொரு பிராந்தியமாக விஸ்தரிக்கும் பொறுப்பும் அவசியமும் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்றன. நிலங்களை அளப்பதற்காக நிருவாக அதிகாரிகளும், குடியேறியவர்களுக்குப் பட்டா வழங்கும் அதிகாரிகளும், வரி வசூலிக்கும் அதிகாரிகளும், ஆளும் கணத்தைப் பெருக்குகின்றனர். புதிய பிராந்தியங்களில் தபால் நிலையங்கள் நிறுவப்பட வேண்டும்; சாலைகள் இடவேண்டும். இவற்றிற்கெல்லாம் அதிகச் செலவு பிடிக்கும்.

5. விலை வாசி ஏற்றம் :

விலை வாசி ஏறும்போது தனியார்களைப் போன்று அரசாங்கமும், அதே அளவு, தரமுடைய சாமான்களை வாங்குவதற்குக் கூடுதலாகப் பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. நீடித்த அல்லது கடுமையான விலைவாசி ஏற்றங்களினால் பெரும்பாலும் இறுதியில் கூலி விகிதங்கள், சம்பளங்கள், வட்டி விகிதங்கள் ஆகியவை கூடுகின்றன. அரசாங்கச் செலவு, விலை வாசிகளின் இறக்கத்தைக்காட்டிலும் விலை வாசிகளின் ஏற்றத் தாலேயே பாதிக்கப்படுகின்றது. விலை வாசிகளின் இறக்கத்திற்கு ஏற்ப அரசாங்கச் செலவுகள் குறையாததற்கு அரசாங்க அமைப்பின் இறுக்கமே (Inflexibility) காரணமாகும். விலைகள் வீழ்வதற்கேற்பக் கடன் செலவை விரைவாகக் குறைக்க முடியாது. விலை வாசிகளின் இறக்கத்தால் வியாபார மந்தமும் வேலையின்மை

அதிகரிப்பும் ஏற்படுவதால் வேலை யிழந்தோருக்கு நிவாரணம் அளிப்பதற்காக, வியாபார மந்த காலத்தில் அரசாங்கம் அதிகச் செலவு செய்யும்படி நேரிடுகிறது. அரசாங்கத்தின் செலவைக் குறைப்பதைவிட அவற்றை அதிகரிப்பது மிக எளிது. இது, 'ஓர் அட்டையை வெளியில் வாந்தி எடுப்பதைவிட விழுங்குவது சுலபம்,' (It is easier to swallow a leech than to disgorge it.) என்பதற்கு ஒப்பாகும். ஓர் அரசாங்க அலுவல், உத்தியோகம், அல்லது சேவை ஒரே இரவில் ஏற்படுத்தப்பட்டு அதில் ஊன்றிய நலமிகளும் (Vested interests) ஏற்பட்டு விடுகின்றன. இச்சேவை ஏற்படுமுன் பரிபூரண சந்தோஷத்துடன் இருந்த பல பிரிவினர்கள், பின்னல் ஆள் குறைப்பு அல்லது வேலைக் குறைப்பு என்று கூறும்போது கலகம் செய்யத் தயாராக இருக்கின்றார்கள். அரசாங்கச் செலவின் அதிகரிப்பு விலை வாசிகளின் ஏற்றத்தைவிடக் கூடுதலாகவே அதிகரிக்கின்றது என்பது தெளிவு.

6. குடியாட்சியின் முன்னேற்றம் (The Progress of Democracy) :

இக்காரணங்களுடன் ஆருவதாக குடியாட்சியின் முன்னேற்றம் என்பதையும் பலர் சேர்க்கின்றனர். எல்லோருக்கும் வாக்குரிமை தந்ததால் சட்டசபைகளின் தரம் குறைந்துவிட்டதென்றும், பொதுவுடைமை எண்ணங்களால் உந்தப்பட்டு அரசாங்கத்தின் செலவுகள் கூட்டப்படுகின்றன என்றும் வாதிக்கப்படுகிறது. இக்கூற்றில் ஓரளவு உண்மையிருக்கிறது. சுருங்கக்கூறின், மக்களாட்சி மிக்க செலவு பிடிக்கும்போகப் பொருளுக்கு ஒப்பாகும் (Democracy is an expensive luxury).

7. அரசாங்க நடவடிக்கைகளின் பெருக்கம் (Increase in the scope of State Activities) :

பாதுகாப்பு, நிதி இவை இரண்டையும் தவிர, பிற அலுவல்களில் அரசாங்கம் தலையிடுவதும் செலவிடுவதும் மிகக்குறைந்த அளவிலேயே இருக்கவேண்டும் என்றும், இவை இரண்டுமே நெடுநாளாக அரசாங்கத்தின் தலையாய கடமைகளாகக் கருதப்பட்டன என்றும் பத்தொன்பதாம் நூற்ருண்டுப் பொருளியல் வல்லுனர் கருதினர். செல்வத்தைத் தனியார்வசம் விட்டுவைத்தால், அஃது இயல்பாகவே தனியாரின் நலத்திற்கும் சமூகத்தின் நலத்திற்கும் பயன்படுமென்றும், அதனல் அரசின் தலையீட்டால் உற்பத்தி குறைவது உறுதி என்றும் எழுந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது இக்கருதுகோள். 18ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும், 19ஆம் நூற்ருண்டின் முற்பகுதியிலும் நிலவிய பொருளியல் நிலைமைகளாலும், அக்காலங்களில் அர

சாங்கத்தின் தலையீட்டாலும், பணவுதவியாலும் ஏற்பட்ட கையூட்டு (லஞ்சம்), திறமையின்மை ஆகியவற்றையும் கண்டு அவ்வாசிரியர்கள் இக்கொள்கைகளை வகுத்தார்கள். ஒரு வேளை அவர்கள் கொள்கை அவர்கள் எழுதிய காலத்திற்குச் சிறந்தவையாய் இருந்திருக்கக் கூடும்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்திலிருந்து ஓர் இயக்கம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருகிறது. அதன் நோக்கம், அரசாங்கம் மன்பதையின் நேரிடையான வசதிகளைக் கவனிக்க முற்படவேண்டும் என்பதும், அவர்களுடைய சூழ்நிலை அல்லது பொருளியல் சுபிட்சம் இவற்றைக் கவனிப்பது போதாதென்பதும் ஆகும். அரசாங்கத்தின் செலவைப் பற்றிய ஒரு பொதுவான கண்டனம், அரசாங்கம் "மனிதர்களின் நன்மைகளைப் பெருக்குவதைக்காட்டிலும் அதிகமாக நல்ல கன்றுக்குட்டிகளைப் பெறுதற்குச் செலவிடுகிறது என்பதாகும். இதனால் ஏற்பட்ட சட்டங்கள் அரசாங்கத்திற்குப் பல புதிய அலுவல்களைத் தந்துள்ளன. அவற்றில் சில வருமாறு : ஆரோக்கியம், சுகாதாரம், அவற்றிற்கான வழி வகைகள் ; பள்ளிச் சிறுரின் உடல் நன்மைக்கான வழி வகை ; பொழுது போக்கு, விளையாட்டு, உடற்பயிற்சி இவற்றிற்கான வழி வகை ; சமூக, மருத்துவ சேவை; சமூக ஈட்டுறுதித்திட்டம் (Social Insurance). இம்மாறுதல், சமூகக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது தனியாரிடம் செல்வம் இருந்தால் அது வீணாக்கப்படும் என்றும், தனியாரின் நலன் எக்காலத்தும் சமூகத்தின் நலன்களையே பேணுவதாக இராது என்றும் உணர்ந்ததால் ஏற்பட்டது.

தனியாருள்ளும் ஒரு சிலர் அரசாங்கத்தாரின் செலவினங்கள், சமூகத்தின் சிறந்த பொருளியல் நலனைப் பேணுகின்றன என்பதை மறுக்கத் துணியார்.

சமூகத்தின் கூட்டு நலன்களின் பிரதிநிதியாக ஓர் அரசாங்கம் இருக்க வேண்டும். சமூகம் தன் செல்வத்தினின்றும் நிறைந்த பயனைப் பெறவேண்டும் என்று முனைவது நல்லது. தனியாரிடம் செல்வத்தை விட்டு வைப்பதால் சமூகம் நிரம்பப்பயனைப் பெறும் பொழுது அரசாங்கம் தலையிடாது இருப்பது விரும்பத்தக்கது. ஆனால், அரசாங்கம் தன் செலவினால் இச்செல்வத்தை மிகுந்த பயனுடையதாக்க முடியும் என்றால், அரசாங்கம் தன் செலவை அதிகரிப்பதற்குப் பின் வாங்கக் கூடாது. அதாவது, புதிய வரிகளை வசூலிக்கும் செலவும், அரசாங்கம் மேன்மேலும் செலவு செய்வதால் ஏற்படும் இலாபமும் சமமாகும் வரை அரசாங்கம் தன் செலவை உயர்த்திக்கொண்டு போகலாம்.

நான்காமதிகாரம்

செலவீட்டு விதிகள்

(The Canons of Expenditure)

ஆடம் ஸ்மித்து இயற்றிய வரிகளின்விதிகளைப் பின்பற்றிப் பிற்காலத்தில் அரசாங்கச் செலவுகள் பற்றியும் பலர் விதிகளை வகுத்தனர். அவைபின் வருவன :

1. ஆதாய விதி, 2. சிக்கன விதி, 3. அனுமதி விதி, 4. நெகிழ்ச்சி விதி, 5. உபரி விதி.

1. ஆதாய விதி (The Canon of Benefit) :

அரசாங்கச் செலவின் உரைகல்லாவது, சமுதாயத்திற்கு அதனால் விளையும் அனுகூலமே. இதில் சிறந்த முறையாவது, பொது மக்களுக்குப் பெருவாரியான அளவு நன்மையைப் பயப்பது. இஃது பெக்காரியா (Beccaria) என்பவர் தாம் எழுதிய சிறு நூலான **'குற்றங் களும் தண்டனைகளும்'** (Crimes and Punishments—1764) என்பதன் முன்னுரையில் வழங்கிய ஒரு சொற்றொடர் ஆன 'மிகப் பெரும்பான்மையோருக்கு மிகுதியும் மகிழ்ச்சியைக் கொடுப்பது' (The greatest happiness of the greatest number) என்பதை நினைவுபடுத்துகிறது. அரசாங்க நிதியைப்பற்றி எழுதிய ஒவ்வொருவர் மனத்திலும் இச்சொற்றொடர் ஆழமாகப் பதிந்துள்ளது. நிதி அமைச்சரின் அரசாங்கச் செலவின் குறிக்கோள் உச்சச் சமூகப் பயனைப் (Maximum Social Advantage) பயப்பதே. "உலகாயதக் கொள்கையின் (Utilitarian Principle) அடிப்படையில், அரசாங்கச் செலவின் இலட்சியம், ஒவ்வொரு துறையிலும் செலவினால் பொது மக்களுக்கு ஏற்படும் நன்மையைச் சமமாக்குவதே," என்று நிக்கல்சன் கூறுகிறார். "இந்த இலட்சியத்தை அடைவது கடினமே; ஆயினும், இது சிந்தனைக்கு அப்பாற்பட்டதன்று; இதனைக் கடைப்பிடிக்க முயல்வதால் நடைமுறையில் முக்கியமான பயன்கள்

விளையக்க கூடும்.'' பல்வேறு பணிகளின் முக்கியத்துவத்திற்கும் அவசரத்துக்கும் ஏற்ப அரசாங்கச் செலவு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அரசாங்கச் செலவினுல் உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டவும் வெளி நாட்டாரின் படையெடுப்பிலிருந்து நாட்டைப் பாதுகாத்துக்கொள்ளவும் இயலுதல் வேண்டும்; மக்கள் சுபிட்சமும் சமுதாயத்தின் உற்பத்தி ஆற்றலும் அதிகரிக்க வேண்டும்; மேலும் மக்களிடை ஏற்றத்தாழ்வுகளையும் குறைக்கவேண்டும். கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தாலன்றி, தனியாரின் நன்மைக்காகவோ அல்லது சமுதாயத்தின் ஒரு பகுதியினரின் நன்மைக்காகவோ செய்யப்படும் அரசாங்கச் வரிச்செலவையென்று சொல்லமுடியாது. அவ்விதமான செலவு (அ) சிறுதொகையினதாயும், (ஆ) அறிவுக்கு ஒத்ததாயும், (இ) வழக்கமானதாயும் இருத்தல் வேண்டும். பிற்பட்ட சமூகத்தினருக்காகச் சில வேளை அரசாங்கத்தார் செலவு செய்யும்படி நேரிடலாம். உ-ம். பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் களுக்குத் தரப்படும் மானியங்களும் உதவிகளும்.

2. சிக்கன விதி (The Canon of Economy):

வீண் செலவைத் தவிர்ப்பது மட்டும் சிக்கனமாகாது. அறிவுக்கு ஒத்த செலவே சிக்கனமாகும். அதன் பொருள் உரியவிடத்தில் ஆட்குறைப்புச் (judicious retrenchment) செய்து வரி கொடுப்போரின் நலன்களைப் பேணுவதும், வருமானத்தைப் பெருக்குவதும் ஆகும். வேலை யில்லாதார், பிணியாளர், வறிஞர் இவர்கட்கு நிவாரணம் மறுப்பது சிக்கனமாகாது. பிலிப் ஸ்நோடன் (Philip Snowden) கூற்று வருமாறு ''சிக்கனம் என்பது ஒவ்வொரு பவுன் செலவிற்கும் இருபது ஷில்லிங்குக்கு ஈடான மதிப்பைப் பெறுவது.'' அரசாங்கச் செலவைச் சரியான முறையில் கண்காணிக்கவேண்டு மென்பதும், கட்டுப்பாடு செய்யவேண்டும் என்பதும்அதன் பொருளாகும். ஒரு சிறந்த தணிக்கை முறை மூலமும் பாராளுமன்ற ஒதுக்குமுறை (Parliamentary Procedure of Appropriations): மூலமும் அரசியல் நிருவாகம் கண்காணிக்கப்படுகிறது. சுதந்தரத்தைப் போல, ''சுதந்தரத்தின் விலையும் நிரந்தர விழிப்பாகும்'' (The Price of Liberty is Eternal Vigilance) என்ற பார்க்கின் கூற்று இதனுடன் ஒப்புநோக்கற்பாலது.

3. அனுமதி விதி (The Canon of Sanction):

சரியான அதிகாரியின் அனுமதி பெற்றே செலவு செய்யவேண்டும். எவ்வெவ்வினங்களுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டதோ, அவ்வவ்வினங்களுக்கே பணம் செலவழித்தல் வேண்டும். இவ்விரு விஷயங்களும் ஒவ்வொரு சட்டசபையும் நிர்ணயிக்கும் அரசாங்கக் கணக்குக்குழு (Public Accounts Committee) மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

பாராளுமன்ற முறைகளில் எல்லாம், பணத்தை ஒதுக்கவும் அவ்வகையாக ஒதுக்கப்பட்ட இனத்திற்கு நடைமுறையில்பணம் செலவழிக்கப் பட்டதா என்பதைப் பரிசீலனைசெய்யவும் தனிப்பட்ட விதி இருக்கிறது. பொதுவாகக் கூறுமிடத்து, இவ்வனுமதிக் கொள்கை எல்லாக் குடியாட்சி அரசாங்கங்களாலும் நடைமுறையில் ஒப்புக்கொள்ளப் படுகிறது எனக் கூறலாம்.

4. நெகிழ்ச்சி விதி (The Canon of Elasticity) :

வருமானத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப, செலவினங்கள் எளிதில் கூட்டவோ குறைக்கவோ வழி இருக்க வேண்டும். ஆனால், இச்சீரிய விதியைக் கடைப்பிடிப்பது அருமையே; நடைமுறையில் கடைப்பிடிப்பது அதனிலும் அருமை. சில செல வினங்களைக் குறைக்கலாம். ஆனால், இக்காலத்தில் செலவில் பெரும்பகுதியான தற்காப்பு (படைச் செலவு), அரசாங்கக் கடன் முதலானவற்றைக் குறைக்க இயலாது.

5. உபரி விதி (The Canon of Surplus) :

நிதி நிருவாகத்தில் இதுதான் மிக இன்றிமையாத கொள்கை. ஒரு சிறந்த நிதி முறைக்கு இன்றியமையாத முன்னோடி, வரவையும் செலவையும் சரிக்கட்டும் வரவு செலவுத் திட்டமே. பொதுவாகக் கூறுமிடத்து ஒவ்வொரு வரவு செலவுத் திட்டமும் தன்னளவில் சரிக் கட்டக்கூடியதாய் (Every budget must be balanced.) இருத்தல் வேண்டும்; அதாவது, ஓர் ஆண்டின் வருவாய் அவ்வாண்டின் செல விற்குச் சமமாகவோ அல்லது சிறிது மிகையாகவோ இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அரசாங்கத்தில் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையும் நாட்டின் நிதி நிலைமையில் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையும் அசைக்க முடியாதனவாய் இருக்கும். 1920இல் பிரசல்ஸ் நகரில் நடந்தேறிய சர்வதேச நிதி மாநாடு (The International Financial Conference) பின் வருமாறு கூறுகிறது: "பற்றாக் குறை வரவு செலவுத் திட்டங்களைத் தன்னுடைய கொள்கைகளாக ஏற்கும் எந்த ஒரு நாடும், பொது அழிவில் செலுத்தும் சறுக்குப் பாதையில் போய்க் கொண்டிருக்கிறது; அப்பாதையிலிருந்து மீள்வ தற்கு எவ்விதமான தியாகமும் பெரிதானதன்று." "ஊதாரித்தனத் தினால் மட்டுமன்றி, வருவாய்க்கும் செலவுக்குமுள்ள இட்டோட் டத்தைப் புறக்கணித்ததாலும் பல நாடுகளில் நிதிக் குழப்பம் ஏற்பட்டு, அதன் விளைவாகப் புரட்சியும் அழிவும் ஏற்பட்டிருக்கின்றன.......... ....ஆகவே, ஒரு நல்ல நிதி முறைக்கு உரைகல்லும், உண்மையான பாதுகாப்பும், அடிப்படையும் இதுவேயாகும்," என்று கிளாட்ஸ்டன் கூறுகிறார்.

ஐந்தாமதிகாரம்

மானியங்களும் கொள்விலைகளும்

(Grants and Purchase Prices)

அரசாங்க வருவாயை வரிகளும், விற்கும் விலைகளும் என இருகூருகப் பிரிப்பது போல, அரசாங்கச் செலவையும் மானியங்கள், கொள்விலைகள் என இரு கூருகப் பிரிக்கலாம். அரசாங்கத்திடமிருந்து பணத்தையோ, பணத்திற்கு ஈடான ஒரு பொருளையோ பெறும் எவரும், அதற்கு மாற்ருக நேரிடையாக அரசாங்கத்திற்குக் கைம்மாறு (quid pro quo) செய்யலாம் ; செய்யாமலும் இருக்கலாம். முந்தியதில் அரசாங்கம் அவரிடமிருந்து விலைக்கு வாங்குகிறது; பிந்தியதில் அஃது அவருக்கு ஒரு மானியத்தைக் கொடுக்கிறது. இம்மானியம் பணமாகவோ அல்லது படையினர் அல்லது ஊர்காவலர் இவர்களிடமிருந்து பெறுவதாகக் கருதப்படும் பாதுகாப்பு அல்லது கல்வி அல்லது நோய்ப் பராமரிப்பு இவைபோன்ற பணிகளாகவோ இருக்கலாம். இவ்வாறு அரசாங்கத்தால் அதன் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் கூலி முதலானவைகள் கொள்விலைகளாகும். முதியவருக்கு அளிக்கப்படும் உபகாரச் சம்பளம் (old age pension) ஏழ்மை நிவாரணம், சுகாதாரத் திட்டங்களுக்கும் வேலையின்மை ஈட்டுறுதிக்கும் (unemployment insurance) அரசாங்க வருவாயிலிருந்து தரப்படும் கொடைகள் மானியங்களாம்.

வரி வசூலிப்பதற்காகும் செலவு மானியங்களை நிருவகிப்பதற்கு ஏற்படும் செலவிற்கு ஒப்பாகும். இவ்விதக் கொள்விலைகள் மானியங்களுடன் உடனிலையாக நிகழ்வனவாகும். இவ்வாறு ஓர் ஆசிரியரின் சம்பளம், இலவசக் கல்வியின் மானியத்திற்கு ஏதுவான கொள்விலையாகும். அதே போல ஒரு போலீஸ்காரரின் சம்பளம் பாதுகாப்பு மானியத்திற்கு ஏதுவான கொள்விலையாகும்.

கடந்த காலத்தில் எவ்வாறு அரசாங்கக் கடன்கள் தோன்றின என்று ஊன்றிப் பார்த்தால், அவற்றிற்குக் கொடுக்கப்படும் வட்டியை அரசாங்கப் பத்திரங்களில் பணத்தை முதலீடு செய்வதற்கு ஏதுவான கொள்விலையாகக் கருதலாம். ஆனால், நாம் அரசாங்கக் கடன்களின் இப்போதைய தன்மையை நோக்கினால், அவை மானியங்களாகும். அரசாங்க வருமானத்திலிருந்து கொடுக்கப்படும் எல்லாவிதமான உபகாரச் சம்பளங்களையும், மானியங்களாக வகைப்படுத்துவது சிறப்பு. ஆயினும், சிலவற்றில் அவற்றைப் பெறுவோர் செய்த கடந்த கால சேவைகளுக்காகக்காலம் தாழ்த்தித் தரப்படும் சம்பளங்களாகவும் (deferred payments) கருத இடமுண்டு.

விற்பனை விலையில் வரி அமிசமும் அடங்கி இருக்கலாம். அதே போன்று ஒரு கொள்விலையில் மானிய அமிசமும் அடங்கியிருக்கலாம். ஒத்த தனியாரின் வேலைகளைவிட அரசாங்க வேலைகளில் சில சமயம் கூடுதல் சம்பளங்களும் அல்லது கூலிகளும் கொடுக்கப்படுவதற்கு இக்கொள்கை பொருந்தும். கூடுதல் சம்பளத்தினால் கூடுதல் வேலை செய்தால், இம்மானிய அமிசம் மறைந்தொழிய மிகுதிச் சம்பளத்தையும் கொள்விலையாகவே கருதலாம். மேலும், ஓர் அரசாங்கத்தால் நடத்தப்படும் தொழிலின் இழப்பை வரியால் ஈடு கட்டலாம். இதனால் வாடிக்கைக் காரர்களுக்குப் பண்டங்கள் அல்லது பணிகள் சற்றுக் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன. இதன் விளைவாக வாடிக்கைக்காரர்கள் அனைவருக்கும் மானியங்கள் கிடைக்கின்றன. இம்மானியத்தின் அளவு அவர்கள் பண்டங்கள் அல்லது பணிகள் வாங்கும் அளவைப் பொறுத்திருக்கின்றது.

மானியங்களுக்கும் கொள்விலைக்கும் உள்ள வேறுபாடு, மாற்றல் செலவீட்டிற்கும் (transfer expenditure) உண்மையான செலவீட்டிற்கும் (real expenditure) உள்ள வேறுபாட்டைப் போன்றது. பொதுவாகக் கூறுமிடத்து எல்லாப் பணமானியங்களையும் மாற்றல் செலவீடெனலாம்.

வரிகளைப்போன்று மானியங்களையும் நேர்முக மானியங்கள் மறைமுக மானியங்கள் எனப் பிரிக்கலாம். ஒருவருக்குத் தரப்படும் மானியத்தின் ஆதாயம் முற்றும் அவரையே சாருமெனில், அதை நேர்முகமானியம் எனலாம். ஒருவருக்கு அளிக்கப்படும் மானியத்தின் ஆதாயம் முழுதுமோ, அல்லது ஒரு பகுதியோ, வேறொருவருக்கு அளிக்கப்படுமாகில், அதனை மறைமுக மானியம் எனலாம். மறைமுக மானியத்திற்கு எடுத்துக்காட்டு, தனியார் தொழிலுக்கு மானியம் அளித்தல் போன்றவை. தாம் பெறும் ஆதாயத்தின் ஒரு பகுதியைக் குறைந்த விலைகள் மூலம் நுகர்வோருக்கோ அல்லது கூடுதல் கூலி மூலம் தொழிலாளருக்கோ அளிப்பது மறைமுகமானியம் ஆகும்.

மானியங்களின் நிலேப்பாடு (incidence of grants) வரிகளின் நிலேப்பாட்டைப் போன்றது. இவ்விளக்கத்தின்படி நேர்முகமானியத்தின் நிலேப்பாடு அதைப் பெறுவோரையே முற்றிலும் சார்ந்தது. மறைமுக மானியத்தின் நிலேப்பாடு ஒரு பொருளின் வினியோகத்துக்கும் (supply) அதன் தேவைக்கும் உள்ள விகிதாசாரத்தின் நெகிழ்ச்சிப்படி வாங்குவோருக்கும் விற்போருக்கும் இடையே பிரிக்கப்படுகிறது.

கடுமையான வரிகளிலிருந்து புதிதாகக் கட்டப்படும் வீடுகளுக்கு விலக்களிப்பது அரசாங்க நிதியிலிருந்து (புதிதாக வீடுகட்டியவர்களுக்கு) தரப்படும் மானியத்திற்குச் சமமானதாகும்.

வரிப்பளுவின் நேர்மையான பகிர்வு (proper distribution of tax burden) எவ்வாறு விவாதத்திற்கு உரிய பொருளோ, அவ்வாறே மானியங்களின் ஆதாயப் பகிர்வும் விவாதத்திற்கு உரிய பொருளாகும். எடுத்துக்காட்டாக, ‘வரி செலுத்தும் திறன்’ (ability to pay taxes) என்ற சொற்றெடரை எடுத்துக்கொள்வோம். இதற்கு நிகராக மானியங்களின் ‘வாங்கும் திறன்’ என்ற சொற்றெடருக்கு நாம் உருவம் கொடுக்கலாம். ஆனலும், ‘கொடுக்கும் திறன்’ என்பதற்கு **மிகக் குறைந்த அளவு பொருள் இழப்புடன்** கொடுக்கும் திறன் என்று எவ்வாறு விளக்கம் தருகின்றேமோ, அவ்வாறே ‘வாங்கும் திறன்’ என்பதற்கு **மிகக் கூடுதலான பொருள் ஊதியத்துடன்** வாங்கும் திறன் என்று விளக்கம் தருதல் வேண்டும். கொடுக்கும் திறன் கொள்கைக்கு எவ்வாறு ஒன்றுக் கொன்று மாருன குறைந்த அளவு தியாகம், வீதாசாரத் தியாகம் சம அளவு தியாகம் என்று பொருள் கூறுகின்றேமோ அவ்வாறே வாங்கும் திறன் கொள்கைக்கும் அதிகபட்ச ஆதாயத்துடன் வாங்கும் திறன், வீதா சார ஆதாயத்துடன் வாங்கும் திறன், சமஅளவு ஆதாயத்துடன் வாங்கும் திறன் எனப் பொருள் கூறலாம். ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் வருவாய் உடையவருக்கு யாதொரு மானியமும் அளிக்காமலும், அதற்குக் கீழ்ப்பட்ட வருவாய்களே மானியங்கள் மூலம் அந்த அளவுக்கு உயர்த்துவதனுலும் உயர்ந்தபட்ச ஆதாயத்தைத் தோராயமாக நாம் அடையக்கூடும். இத்திட்டம் இவ்வடிவத்தில் நடைமுறைக்கு ஏற்றதாயில்லாமல் இருக்கிறது. ஆனலும், ஒரு சிறிது மாறுபட்ட வடிவத்தில், இது ஒரு சிறந்த கொள்கையைச் செயலில் உருவாக்குகிறது. இக் கொள்கையைத் தேசீயக் குறைந்தபட்சப் பொருள் நலத் திட்டம் எனலாம். இதன்படி ஒரு நாகரிகச் சமுதாயத்தின் எந்த உறுப்பினரும் இக்குறைந்தபட்சத் திட்டத்திற்கும் குறைந்த வாழ்க்கை வசதித்தரங்களே உடையவர்களாக இருக்கக்கூடாது. ஆயினும், மானியப் பகிர்வில், வீதாசார அளவு அல்லது சம அளவு

ஆதாயத்தைத் தரவேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிப் பதற்கு யாதொரு காரணமும் கூறமுடியாது.

ஒரு தனிப்பட்ட வரி, அல்லது ஒரு வரி முறை, முற்றும் எவ்வாறு வீதாசார முறைப்படியோ, வளர்வீத (progressive) முறைப்படியோ, அல்லது தேய்வுவீத (regressive) முறைப்படியோ இருக்கலாமோ, அவ்வாறே தனிப்பட்ட ஒரு மானியமோ அல்லது மானியமுறையோ முற்றும் வீதாசார முறைப்படியோ, வளர்வீத முறைப்படியோ, அல்லது தேய்வு வீத முறைப்படியோ இருக்கலாம். ஒரு வளர்வீத மானியத்திட்டத்தின் கீழ் எவ்வளவுக்கெவ்வளவு அதைப் பெறு வோரின் வருவாய் அதிகரிக்கிறதோ, அவ்வளவுக் கவ்வளவு அவருக்கு அளிக்கப்படும் மானியமும் குறைக்கப்படும். ஒரு தேய்வு வீத மானியத் திட்டத்தின்கீழ், வருவாய் அதிகரிக்குந்தோறும் மானி யங்களாகத் தரப்படும் தொகையும் அதிகமாக்கப்படும்.

ஆருமதிகாரம்

அரசாங்கச் செலவினுல் உற்பத்தியின்மீதும் பங்கீட்டின்மீதும் ஏற்படும் விளைவுகள்

(The Effects of Public Expenditure upon Production and Distribution)

1. அரசாங்கச் செலவினுல் உற்பத்தியின்மீது ஏற்படும் விளைவுகள் :

மற்றவை மாருதிருப்பின், எவ்வாறு வரி விதிப்பினுல் உற்பத்தி மிகக் குறைவான அளவே பாதிக்கப்படலாமோ, அவ்வாறே அரசாங்கச் செலவினுல் உற்பத்தி மிகக் கூடுதலான அளவு அதிகரிக்க வேண்டும்.

இக்காலத்தில் அரசாங்கச் செலவின் பெரும்பகுதியும் நேரிடையாகவோ மறைமுகமாகவோ நாட்டின் உற்பத்தி ஆற்றலைப் பெருக்குதற்குத் துணை செய்கிறது என்று கூற முடியாது. போரில் ஈடுபடும் நாடுகள் பொருளாதார வளங்களை உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அவற்றை அழிப்பதற்குப் பயன்படுத்துகின்றன. சமாதான காலத்தில் பாதுகாப்பு, போர்த்தளவாடங்கள் இவற்றின் மீது தம் செல்வத்தைச் செலவிடுவதன் மூலம் தமது இப்போதைய செல்வத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியுமே தவிர, இப்போதிருக்கும் செல்வத்தைப் படைக்கவோ அல்லது புதிதாகச் செல்வத்தை விருத்தி செய்யவோமுடியாது. உலக அரசாங்கமும் படைக்குறைப்பும் ஏற்பட்டால்தான் அதிகபட்சப் பாதுகாப்பையும் (maximum security) அதிகபட்சப் பொருளாதார நலத்தையும் (maximum economic welfare) உலகம் பெற முடியும்.

போர்ச்செலவு மட்டும் பயனில் செலவு என்று கூற முடியாது. நீதி நிருவாகத்தின் செலவு, பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு

உபகாரச் சம்பளம் அளித்தல் இவற்றை மீள் உற்பத்திக்குத் (reproductive) துணை செய்கிறது என்று சொல்ல முடியாது. போர்ச் செலவை வலியுறுத்துவதன் நோக்கம், அது பிற பயனில்லாச் செலவுகளினின்றும் வேறுபட்டது என்பதாலன்று. போர்ச்செலவும், போர் முஸ்தீப்புக்காகும் செலவும் கடந்த போர்களின் போது வாங்கிய கடன்களின்மீது செலுத்தும் வட்டியும் பல நவீன நாடுகளிலும் பெருஞ் செலவினங்களாகக் காணப்படுவதே போர்ச் செலவை வலியுறுத்துவதற்கான காரணமாகும்.

வரிகளின் மூலமும் கடன்களின் மூலமும் கிடைத்த வருவாயிலிருந்து அரசாங்கச் செலவு செய்யப்படுகிறது. உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும், ஆரோக்கியமான வாழ்வுக்கான வசதிகளையும் பெறுவதற்கும், அரசாங்கச் செலவு துணை செய்கிறது. மனித சக்தி வீணுவதைத் தடுத்தும், கூடுதலான உற்பத்தியும் சேமிப்பும் ஏற்படுவதற்குத் தூண்டியும், ஒரு நாட்டின் செல்வ உற்பத்தித்திறனை அரசாங்கச் செலவு ஓரளவு அதிகரிக்கலாம். சிறப்பாக அரசாங்கச் செலவினுல் உற்பத்திமீது ஏற்படும் விளைவுகளைப் பின் வரும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம் :

1. உழைக்கும் சேமிக்கும் திறன்மீது ஏற்படும் விளைவுகள்.
2. உழைக்கும் சேமிக்கும் விருப்பத்தின்மீது ஏற்படும் விளைவுகள்.
3. பல்வேறுபட்ட தொழில்களிடையேயும், ஸ்தலங்களிடையேயும், பொருளாதார வளங்களைத் திருப்புவதால் உற்பத்தியின்மீது ஏற்படும் விளைவுகள் (effects on the diversion of economic resources between different employments and localities).

அரசாங்கச் செலவினுல் ஒருவனுடைய திறன் அதிகரிக்குமானுல், அவனுடைய உழைக்கும் திறன் அதிகரிக்கும். இக் காரணத்தால் சமுதாயத்திற்கும் நன்மை தரும் பல செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன. பொதுமக்கள் ஆரோக்கியம், வேலையின்மை நிவாரணம், ஈட்டுறுதி ஆதாயம் (insurance benefit), வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்களின் உபகாரச் சம்பளம் ஆகிய சமூக சேவைகளுக்காகச் செலவிடுவதால் தனிப்பட்டோரின் திறன் மிகும் என்பது நம்பப்படுகிறது. இத்திறன் அதிகரிப்பு அரசாங்கச் செலவினுல்நன்மை பெறுவோரிடம்மட்டுமே காணப்படும் என்பதன்று. திறன் அதிகரிப்பு, பொதுச் செலவினுல் நன்மை பெறுவோரின் சந்ததியார்களிடமும் காணப்படுகிறது. விதவைகள் உபகாரச் சம்பளம் (widows' pensions), குடும்பப் படிகள் (family allowances) போன்ற யோசனைகளுக்கு இதுதான் தலையாய காரணம். மேலும், கல்வி, மருத்துவ வசதிகள், வீட்டு வசதி முதலான ரொக்கம் இல்லாத மானியங்களால் திறன் அதிகம் கூடுகிறது. இவற்றை ரொக்க

மானியமாகக் கொடுத்தால், இவை நல்ல வழிகளில் செலவழிக்கப் படாமற்போகலாம். ''வேலையில்லாதோருக்குத் தரப்பட்ட கொடையினுல் (dole) உயிர்வாழ்ந்திருந்த மக்களின் புதல்வர்களே பிரிட்டன் தன் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த காலத்தில் (Battle for Britain) ஆகாய விமானிகளாகப் பணியாற்றி நாட்டைக் காத்தார்கள்,'' என்று எர்னஸ்ட் பெவின் (Ernest Bevin) கூறினுர். முதல் உலகப்போருக்கு முன்பும் போர் முடிந்த பின்பும் சமூக சேவைகளுக்கு வகை செய்ததாலேயே பிரிட்டன் உள் நாட்டுப் புரட்சியிலிருந்தும் (வெளிநாட்டாரிடம்) தோல்வியடைவதிலிருந்தும் தப்ப முடிந்தது.

அரசாங்கச் செலவினுல் ஒருவனுக்கு அதிக வருமானம் கிடைத்தால் அவனுடைய சேமிக்கும் திறன் அதிகரிக்கிறது. 100 ரூபாயை அரசாங்கம் வரியாகப் பெற்று 'ஆ' வுக்கு, சம்பளமாகவோ, போர்க்கடன் வட்டியாகவோ, வேறு எந்தக் காரணத்திற்காகவோ கொடுத்தால், 'ஆ'வின் சேமிக்கும் திறன் அதிகரிக்கிறது என்பது தெளிவு.

நிகழ்காலத்தில் அரசாங்கச் செலவினுல் ஆதாயங்கள் அடைவதைக் காட்டிலும் எதிர்காலத்தில் அரசாங்கத்திடமிருந்து ஆதாயங்கள் அடைவோம் என எதிர்பார்ப்பதனுல் சேமிக்கும் திறன் அதிகரிக்கிறது. போரில் சேவை செய்ததற்கான உபகாரச் சம்பளங்களும் (war pensions), போர்க் கடன்கள் மீது கொடுக்கப்படும் வட்டியும் எதிர்காலத்தில் ஆதாயத்தை எதிர்பார்ப்பதற்கு உதாரணங்களாகும். ஆனுல், இவ்வுபகாரச் சம்பளமும், வட்டியும் நிபந்தனையும் இன்றியும், நிலையானதாயும் இருப்பதனுல் இவற்றுல், உழைக்கும் விருப்பமும் சேமிக்கும் விருப்பமும் அதிகரிக்கமாட்டா. ஆனுல், எல்லா மானியங்களும் இவ்வாறு நிலையானவையாயும் நிபந்தனையற்றவையாயும் இருப்பதில்லை. ஒரு நிபந்தனையின்மேல் கொடுக்கப்படும் மானியங்கள் உழைக்கும் விருப்பத்தை நிகழ்காலத்தில் குறைக்கமாட்டா. உ-ம். வேலையின்மை நிவாரணமும், நோயுற்ற போது கொடுக்கும் ஆதாயமும். சில சமயம் இம்மானியங்களினுல் உழைக்கும் விருப்பத்தைஅதிகரிக்கலாம். மேலும், எதிர்காலத்தில் ஓர் ஆதாயத்தை அடைவோனின் முயற்சிகளுக்கேற்ப மானியத் தொகையும் அதிகரித்தால், உழைக்கும் விருப்பமும் சேமிக்கும் விருப்பமும் அதிகரிக்கும். உ-ம். ஒருவனுடைய வருவாய்க்கு அல்லது சேமிப்புக்கு ஏற்பஅரசாங்கக் கொடை கொடுத்தல். ஆனுல், நடைமுறையில் இவ்விதக் கொடைகள் சாத்தியமானவையல்ல. எதிர்கால முயற்சிக்கேற்ப ஒருவன் பெறும் அரசாங்கக் கொடை குறைக்கப்படுமானுல், அவனுடைய உழைக்கும்

விருப்பமும், சேமிக்கும் விருப்பமும் பாதிக்கப்படும். அதேபோல ஒருவனுடைய கடந்த கால முயற்சிகளுக்கேற்ப அவன் பெறும் அரசாங்கக் கொடை குறையுமானால் அவனுடைய உழைக்கும் விருப்பமும், சேமிக்கும் விருப்பமும் பாதிக்கப்படும். உ-ம். சிறிதளவு சேர்த்து வைத்திருந்தும் இப்போது வேலையின்றி இருக்கும் ஒருவனுக்குக் குறைந்த மானியமும், ஒன்றும் சேர்த்து வைக்காது வேலையின்றி இருக்கும் ஒருவனுக்கு அதிக மானியமும் கொடுத்தால், மக்கள் சேமிப்பது பாதிக்கப் பெறுகிறது. உழைக்கும் விருப்பமும், சேமிக்கும் விருப்பமும் ஒருவனுடைய உள் இயல் காரணியைப் (psychological factor) பொறுத்ததாகும். அரசாங்கக் கொள்கையால் நம்பிக்கை உணர்ச்சியும், பாதுகாப்பு உணர்ச்சியும் மக்களுக்கு ஏற்பட்டால், உழைக்கும் விருப்பமும், சேமிப்பு விருப்பமும் அதிகரிக்கும்.

பல்வேறுபட்ட வேலைகளிடையும், ஸ்தலங்களிடையும், பொருளாதார வளங்களைத் திருப்புவதால் உற்பத்தியின்மீது ஏற்படும் விளைவுகளை இப்போது ஆராய்வோம். பல்வேறுபட்ட தொழில்களிலிருந்து போர்ப் படைகளுக்குப் பொருளாதார வளங்களைத் திருப்புவதால் ஏற்படும் விளைவுகளை முன்னரே பார்த்தோம். அத்தகைய செலவுகளைப்பற்றி நாம் கூறுவதெல்லாம் அவை சிக்கனமாக இருக்க வேண்டும் என்பதே. ஓரளவு அதிகப் பாதுகாப்பு, ஒழுங்கு இவற்றினால் பெறும் அனுகூலங்களைக்காட்டிலும் இவற்றின் மீது அதிகச் செலவு செய்வதனால் சில பண்டங்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படாமல் போவதனால் ஏற்படும் பிரதிகூலங்களையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

ஓர் அரசாங்கத்தின் நிதிக் கொள்கையினால் ஓரிடத்தில் தொழில்களை நிறுவுவதிலும், அபிவிருத்தி செய்வதிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இங்கிலாந்தில் தானியச் சட்டங்களை (Corn Laws) நீக்கிய பின்பு தொழில் அபிவிருத்தி பெருவாரியாக ஏற்பட்டது எனலாம். பெருத்த அரசாங்கக் கொடைகள் மூலமும், காப்பு வரிகள் மூலமும், பல அரசாங்கங்கள் பல தொழில்களை நிறுவி உள்ளன. பிரிட்டிஷ் குடியானவர்களுக்கு அரசாங்கக் கொடைகள் தரப்பட்டதனால், பிரிட்டனில் உணவு உற்பத்தி பெருகியது. நம் நாட்டில் கரும்புக் காப்பு வரியால், கரும்பு பயிராகும் பரப்பும்சர்க்கரையின் உற்பத்தியும் அதிகரித்தன.

தனியார் கையில் விடப்பட்டிருந்தால் உற்பத்தி எவ்வளவு அதிகரித்திருக்குமோ, அதைவிட அதிக உற்பத்தி அரசாங்கச் செலவால் ஏற்படும் என்றால், இச்செலவுகள் உற்பத்திக் கோணத்திலிருந்து வரவேற்கத் தக்கன. இவ்வகையில் கடன் மீட்சி, நீர்ப்பாசன

அபிவிருத்தி, காடு வளர்ப்பது, இருப்புப் பாதைகள் போடுவது, ஆராய்ச்சியை ஊக்குவதனுல் அறிவைப் பெருக்குவது, வேலை தேடித் தரும் நிறுவனங்களைப் பராமரிப்பது, கல்விப் பயிற்சியையும் பொது மக்கள் சுகாதாரத்தையும் பேணுவது, வேலையின்மைக்கு காப்புறுதி (insurance against unemployment) முதலான செலவுகள் அடங்கும்.

2. அரசாங்கச் செலவினுல் பங்கீட்டின்மீது ஏற்படும் விளைவுகள் :

அரசாங்கச் செலவினுல் பல்வேறுபட்ட உறுப்பினர்களிடை செல்வப் பங்கீட்டை மாற்றுவதன் மூலம் ஒரு முக்கிய மாறுதல் ஏற்படுகிறது. ஒரு வருக்கத்தினரின்மீது வரி விதித்து அதனுல் கிடைத்த தொகையை வேருெரு வருக்கத்தினருக்குப் பிரித்துக் கொடுப்பது ஒரு வழியாகும். ஆனுல், இவ்விதம் அரசாங்கம் நேரிடையாக ஒரு வருக்கத்தினரிடமிருந்து இன்னெரு வருக்கத்தினருக்குச் செல்வத்தை மாற்றுவது அபூர்வமே. பண்டங்களையும் சேவைகளையும் இலவசமாக வழங்குவதன் மூலம் செல்வத்தைப் பணக்காரர்களிடமிருந்து ஏழைகளுக்கு மாற்றுவதே சாதாரண மாகக் காணப்படும் முறையாகும். *1906* முதல் பிரிட்டனில் ‘சமூக சேவைகளுக்காக’ (social services) அரசாங்கம் செய்யும் செலவு அதிகரித்துக் கொண்டே வருகிறது. இச்சேவைகளால் நன்மை அடைவோர் ஏழைகளே. இந்தியாவிலும் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து படிப்படியாகச் சமூகச் சேவைகளுக்காகச் செய்யப்படும் செலவுகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. இவற்றில் பின் தங்கிய சமூகத்தினர், ஹரிஜனங்கள் இவர்கள் முன்னேற்றத்திற்காகச் செய்யப்படும் செலவுகளும் அடங்கும்.

செல்வத்தில் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது இன்றியமையாதது. ஒருவனுடைய செல்வம் அதிகரிக்குந்தோறும் அவன் அதிலிருந்து அடையும் பயன் குறைந்துகொண்டே வருகிறது. ஆகவே, செல்வப் பங்கீட்டை ஓரளவு சமனுக்கும் எந்த முயற்சியினுலும் அதே அளவு செல்வத்தினின்றும் கிடைக்கும் பயன் அதிகரிக்கும். ‘‘வருவாய்களில் ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் போக்கை (tendency)யுடைய அரசாங்கச் செலவுதான் மிகவும் விரும்பத் தக்கது,’’ என டாக்டர் டால்டன் வற்புறுத்திக் கூறுகிருர். திருமதி எம். இ. ராபின்சன் அம்மையார் (Mrs. M. E. Robinson) கூறுவது போன்று அதனுல் சமுதாயத்தில் பொருளாதாரச் சுபிட்சம் அதிகரிக்கும்.’’ ஏனெனில், அதனுல் செல்வத்தின் மொத்தத் தொகை அதிகரிக்காவிடினும், பங்கீட்டை மேம்படுத்துவதனுல் கிடைக்கும் மனநிறைவு அதிகரிக்கிறது. இவ்வாறு செல்வத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதால் செல்வ உற்பத்தி தடை

படலாம். வரி விதிப்பினுல் ஒரு வருக்கத்தினரிடமிருந்து செல்வத்தைக் கொள்வதால் அவ்வருக்கத்தினரின் சேமிப்புக் குறையும். சேமிப்புக் குறைந்தால், உற்பத்திக்கு அவசியமான மூலதனம் குறையும். மூலதனம் குறைந்தால் உற்பத்தி குறையும். அரசாங்கமே எல்லாவற்றையும் செய்யமுற்பட்டால் மக்களின் பொறுப்புணர்ச்சி குறைவதோடு அவர்கள் தாங்களே பாடு பட்டுப் பொருளீட்டும் விருப்பமும் குறையும். இக்காரணத்தினுல்தான் அரசாங்கச் செலவினங்கள் பலவும், பண்டங்கள், சேவைகள் மூலம் செய்யப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, இலவசக் கல்வியினுல் நாட்டின் உற்பத்தித் திறனும், அதனுல் நீண்ட காலத்தில் அதிக மீள் உற்பத்தியும் ஏற்படலாம். இலவசக் கல்வியினுல் பலருக்குச் சம வாய்ப்புகள் (Equality of opportunity) கிடைக்கும். இச்சம வாய்ப்புகளினுல் பங்கீட்டில் ஓரளவு சமத்துவநிலை ஏற்படலாம்.

ஏழாமதிகாரம்

அரசாங்கத்தின் வருமான மூலங்கள்

(Sources of Public Income)

அரசாங்கத்தின் வரவினத்திற்கு இரு பொருள்கள் கூறலாம். எல்லாவகை வரத்துகளையும் அடக்கியது முதற்பொருளாகும். சாதாரணமாக வருமானம் என்று எண்ணப்படுவதை மட்டும் கொள்வது மற்றொரு பொருளாகும். இடம் நோக்கி எப்பொருளில் இச்சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறியவேண்டும். இன்றியமையாதவிடத்து, விரிவான பொருளில் 'அரசாங்க வரத்துகள்' (Public receipts) என்ற சொற்றொடரையும், குறுகிய பொருளில் 'அரசாங்க வருமானம்' (Public income) என்ற சொற்றொடரையும் உபயோகிப்பதன் மூலம் குழப்பத்தைத் தவிர்க்கலாம். கடன்கள் மூலமும், போர்த்தளவாடங்கள் போன்ற அரசாங்க ஆஸ்திகளை விற்பதன் மூலமும் கிடைக்கும் வருவாயும், புதிதாக அச்சகத்திலிருந்து வெளிப்போந்த காகிதப் பணமும் அரசாங்க வரத்துகள் என்பதனுள் அடங்கும். இவை யாவும் அரசாங்க வருமானத்தில் இடம் பெறா.

கட்டாயமான கொடைகளும், கட்டாயமல்லாத கொடைகளும் :

பேராசிரியர் பிளன் கூறியவாறு, முதன்முதல் வருமானங்களைக் குறிப்பிட்ட சொற்கள் அவற்றின் கட்டாயமற்ற தன்மையைத் தெளிவாகக் காட்டுகின்றன. அவை இரப்பு, வேண்டுகோள், கட்டாயக் கடன், உபகாரம் என்று பலவாறு வழங்கப்பட்டன.

வரி விதிப்பின் வளர்ச்சி :

வரி விதிப்பின் வளர்ச்சியைப்பற்றிய கருதுகோளில் ஏழு நிலைகள் இருந்ததாகப் பேராசிரியர் செலிக்மன் குறிப்பிடுகிறார். அவர் கூறுவதாவது: ''முதலில் எழுந்த எண்ணம் வரியைக் கொடையாகக்

கருதியதாகும். தனியார் ஒருவர் அரசாங்கத்திற்கு அளித்த அன்பளிப்பே வரியாகும். மக்களைத் தனக்கு ஆதரவு நல்கும்படி அரசாங்கம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டது அல்லது வேண்டிக்கொண்டது இரண்டாவது நிலையாகும். மூன்றாவது நிலையில் தனியார் தாம் அரசாங்கத்திற்கு உதவி அளிப்பதாகக் கருதினர். அரசாங்கத்தின் நலனுக்காகத் தனியார் தியாகம் செய்வது, நான்காம் நிலையாகும். பொது நலனுக்காக அவர் தம் செல்வத்தின் ஒரு பகுதியைத் தியாகம் செய்கிறார். ஐந்தாம் நிலையில் வரி கொடுப்போர், தாம் அரசாங்கத்திற்குக் கடமைப்பட்டிருப்பதாக உணர்கிறார். இது பற்றியேதான் வரிக்குக் கடமை எனப் பெயர் ஏற்பட்டது. ஆறும் நிலையிலேதான் நாம் அரசாங்கத்திற்கு வரி கொடுக்க வேண்டுவதன் கட்டாயம் வலியுறுத்தப்படுகிறது. கடைசி நிலையில் வரி கொடுப்போரின் விருப்பத்தைக் கவனியாது, அரசாங்கத்தாரால் குறிப்பிடப்படும் ஒரு தொகை, வரி அல்லது தீர்வை எனப்படுகிறது. வரி என்றால் வரித்தல் என்பதுதான் பொருள். இடைக்காலங்களில் வரி என்பது நேர்முக வரியையே சுட்டிக்காட்டியது.

வரி விதிப்பின் விளக்கமும் சிறப்பியல்களும் :

"அரசாங்கத்தின் சேவைக்காகத் தனியார் ஒருவராலோ அல்லது ஒரு குழுவினராலோ தம் செல்வத்திலிருந்து கட்டாயமாகத் தரப்படும் கொடைதான் வரி," எனப்பேராசிரியர் பாஸ்டபிள் விளக்குகிறார். பேராசிரியர் டாசிக்குக் கூறுவது போல, "அரசாங்கத்தாரால் வசூலிக்கப்படும் பிறகட்டணங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் வரியின் சாரமாவது, வரி கொடுப்போருக்கும் அரசாங்கத்திற்கும் இடையே நேரிடையான பிரதிப்பயன் இன்மையே," (absence of quid pro quo). இவ்விளக்கங்களிலிருந்து (அ) ஒரு வரி **கட்டாயக்** கொடை என்பதும், (ஆ) ஒருவரின் செல்வத்திலிருந்து அது கட்டாயமாகப் பறிக்கப்படுவதால் ஓரளவு தியாகம் செய்யவேண்டி இருக்கிறது என்பதும், (இ) அரசாங்கத்தாரின் பொதுவான சேவைக்காக வரி தண்டப்படுகிறது என்பதும், (ஈ) ஒரு பிரத்தியேக சேவைக்காக வரி கொடுக்கப்படவில்லை என்பதும், (உ) ஒரு வரியை பணமாகவோ, பண்டமாகவோ, சேவையாகவோ தண்டலாம் என்பதும் அறியக்கிடக்கின்றன. (ஏனெனில், செல்வம் என்ற சொல் பணத்தை மட்டுமன்றிப் பரிவர்த்தனை மதிப்புள்ள எல்லாப் பொருள்களையும் சுட்டுகின்றது.) சிறப்பாக நாம் மனத்தில் இருத்த வேண்டுவது, ஒரு வரியில் நேரிடையான கைம்மாறு இல்லை என்பது ; அஃதாவது, தனியார் ஒருவர் கொடுத்த வரியும், அவர் அரசாங்கத்திடமிருந்து பெற்ற ஆதாயமும், அல்லது அரசாங்கம் அவருக்கு ஆற்றிய சேவையும் சமமானவையல்ல. வரியின் சிறப்பான அமிசம் **அரசாங்கத்**

தாரின் சேவை அல்லது **பொதுமக்களுக்கு ஏற்படும் பயன்.** இவற்றின் பெறுமானத்தைத் தீர்மானிக்கவும் இயலாது ; இவை ஒவ்வொரு குடி மகனுக்கும் ஒரே அளவினவாக இருக்கும் என்று கூறவும் முடியாது.

தீர்வை, அபராதம், கட்டணம், இவற்றினின்றும் மாறுபட்டது வரி. அரசாங்கத்தாரால் பொதுமக்களின் நலனுக்காக ஆற்றப்படும் சேவைக்காகவும், ஆனால், அதேசமயம் அதைச் செலுத்துபவருக்கு ஒரு தனிப்பட்ட அனுகூலத்தையும் அளிப்பதற்குச் செலுத்தப்படும் தொகை **கட்டணம்** எனலாம். உ-ம். பதிவுக் கட்டணம். ''தனிப்பட்ட சேவைக்காகும் செலவைவிட ஒரு கட்டணம் ஒருபொழுதும் கூடுதலாவதில்லை '' எனப் பேராசிரியர் பிளன் கூறுகிறார். அரசாங்கத்திற்கு சில குறிப்பிட்ட பொருள்களுக்காகவோ அல்லது சேவைகளுக்காகவோ செலுத்தப்படும் தொகை அல்லது விலை, **வீதம்** (Rate) எனப்படும். உ-ம். தபால்வீதங்கள், ரயில் வீதங்கள், தந்தியின் வீதங்கள், மின்சார வீதம், தண்ணீர் வீதம் முதலானவை. ஒரு தொழிலை மேற்கொள்ளும் பொழுதும் அல்லது ஒரு பொருள் அல்லது சேவையை வினியோகிக்கும் பொழுதும் அரசாங்கம் தனக்கு ஏகபோகத்தை ஏற்படுத்திக்கொள்கிறது. ஆகவே, இவ்வீதங்கள் அச்சாமான் அல்லது சேவையின் அடக்க விலையை மட்டுமின்றி ஓரளவு இலாபத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. ஓர் ஊராண்மைக் கழகம் அல்லது ஒரு மாவட்டக் கழகம் ஆகியவற்றிற்குக் கொடுக்கப்படும் தொகைகளை வரிகள் என்று சொல்வதைவிட வீதங்கள் என்று சொல்வது மிகப் பொருத்தமாம். அரசாங்கத்திற்குத் (உ-ம். மாநில, மத்திய அரசாங்கம்) தரப்படும் தொகைகள் பெரும்பாலும் வரி என்ற பிரிவின்பாற்படும். இவ்வீதங்கள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. ஆனால், வரிகள் ஒரேவிதமாக இருக்கின்றன. வரியும் அபராதமும் கட்டாயமாகக் கொடுக்கப்படவேண்டியவையே. ஆயினும், அவை போடப்படும் நோக்கம், ஒன்றை ஒன்றிலிருந்து பிரித்துக் காட்டுகிறது. வருமானத்திற்குத் தேவையிருப்பதாலேயே வரி போடப்படுகிறது. இதுதான் வரி போடுவதன் நோக்கம். அபராதம் விதிப்பதன் நோக்கம் குற்றவாளியைத் திருத்துவது. டாக்டர் டால்டன் கூறியாங்கு ''பிரத்தியேகத் தீர்வை '' (Special Assessment) என்பது அமெரிக்கரின் கண்டுபிடிப்பு. இதைப் பேராசிரியர் செலிக்மென், பொது மக்களின் நலனுக்காக அரசாங்கம் மேற்கொள்ளும் செலவுகளினால் தனிப்பட்டவர்களின் உடைமைக்குச் சிறப்பு அபிவிருத்தி ஏற்படுகின்றது என்றும், இச்செலவைச் சரிக்கட்ட அரசாங்கம், தனிப்பட்டவர்கள் அடையும் ஆதாயங்களின் வீதாச்சாரத்திற்கு ஏற்றவாறு வரி விதிக்கின்றது என்றும், இதைத்தான் பிரத்தியேகத் தீர்வை என்று குறிப்பிடுகின்

ரோம் என்றும் கூறுகின்றூர். உதாரணமாக ஒரு அணைக்கட்டைக் கட்டுவதின் மூலம் புதிதாகச் சில நிலங்களுக்குப் பாசன வசதிகிடைக்கின்றது. அதனுல், நிலக் கிழவர்களும் முன்பு இருந்ததைக் காட்டிலும் கூடுதலான விளைச்சலைப் பெறுகின்றூர்கள். ஆகவே, அரசாங்கம் அவர்களின் மீது ஒரு வரியைப் பிரத்தியேகமாக விதித்து அணையைக் கட்டுவதற்கு ஆன செலவின் பெரும்பகுதியை வசூலிப்பது முறையேயாகும். இவ்வரியையே நாம் பிரத்தியேகத் தீர்வை என்கின்றோம்.

அரசாங்க வருமானத்தின் வகைகள் :

(அ) வரிகள் : (ஆ) முக்கியமாகப் போரினுல் தோன்றும் கப்பங்களும் நஷ்ட ஈடு, (இ) கட்டாயக் கடன் (பழைய காலத்தில் யூதர்களிடமிருந்து ஐரோப்பிய அரசர்கள் கட்டாயமாக வசூலித்ததைப் போன்றவை), (ஈ) நீதி மன்றங்களால் விதிக்கப்படும் நீதி ஒறுப்புக்கள், அபராதங்கள், (Penalties and Fines) (உ) அரசாங்க உடைமையான புறம்போக்கு நிலங்கள், அரசின் பங்கு தொகைகள் இவற்றினின்றும் கிடைக்கும் வருவாய். உ-ம். காடுகளிலிருந்து கிடைக்கும் வருவாய்: (ஊ) ஏகபோகம் அல்லாத பொதுத்துறை இவைகளினின்றும் கிடைக்கும் வருவாய். உ-ம். சிந்திரி உரத் தொழிற்சாலையிலிருந்து டெல்லி அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வருவாய் : (எ) பதிவு முதலானவைகளுக்கு வாங்கப்படும் கட்டணங்கள் ; (ஏ) ஏகபோகமாக அரசாங்கத்தினரால் நடத்தப்படும் இருப்புப் பாதைகள், பஸ் போக்குவரத்து முதலான பொதுத்துறைப் பிரிவுகளிலிருந்து கிடைக்கும் வருவாய் ; (ஒ) பிரத்தியேகத் தீர்வைகளிலிருந்து கிடைக்கும் வருவாய் ; (ஓ) மக்களின் நன்கொடை ; (ஔ) உலோகமாக மாற்றமுடியாத காகிதப் பணத்தை அச்சிடுவதால் கிடைக்கும் வருவாய். அரசாங்க வரவினங்கள் பலவற்றிற்கும் உள்ள வேற்றுமை சில சமயம் தெளிவாகப் புலனுவதில்லை. சில சமயம் வரிகளுக்கும், விலைகளுக்கும், சில சமயம் கட்டணங்களுக்கும், வரிகளுக்கும் வேறுபாடு காண்பது மிகவும் சிரமம். அதே போன்று வரிகள், அரசாங்கத்தின் ஏகபோகத் தொழில்களிலிருந்து கிடைக்கும் வருவாய் இவற்றிற்கும் கட்டணங்களுக்கும் இடையே தெளிவான வேறுபாடு இல்லை.

எட்டாமதிகாரம்

நேர்முக வரிகள்

(Direct Taxes)

"யார் யார் வரி கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் எண்ணுகிறதோ அல்லது விரும்புகிறதோ அவரிடமிருந்து வசூலிக் கப்படுவது நேர்முகவரியாகும்" என ஜான் ஸ்டுவர்ட் மில் கூறுகிறார். "பிற்பாடு வேறொருவரிடமிருந்து தன் நஷ்டத்தை ஈடுசெய்து கொள்ளலாம் என்று எதிர்பார்த்தும், எண்ணியும் ஒருவரிடமிருந்து வசூலிக்கப்படும் வரி மறைமுக வரியாகும்" என அவர் மேலும் கூறுகிறார். ஆனாலும் பேராசிரியர் பிண்டிலே ஷிர்ராஸ் கூறுவது போன்று ஈண்டு எண்ணம் என்று குறிக்கப்பெற்றது ஐயத்திற்கு இடமின்றி சட்டமியற்றுவோரின் எண்ணத்தையே குறிப்பிடுகின்றது. ஆயினும் சட்டம் இயற்றுபவர்களின் கருத்துக்கும் நடைமுறை உண்மைக்கும் எப்போதும் பொருத்தம் காணப்படுவதில்லை." எடுத்துக்காட்டாக பிரிட்டிஷ் வருமானவரியின் கீழ் நிலம் அல்லது கட்டிடங்களிலிருந்து கிடைக்கும் வருவாயின்மீது கொடுக்கப்படும் வருமான வரி, சட்டப்படி பண்ணையாரின்மீது போடப்பட்டாலும் அது நிலக் குத்தகைதாரர் அல்லது வீட்டில் குடியிருப்பவர்களிட மிருந்தே வசூலிக்கப்படுகிறது. இவர்கள் தாம் செலுத்தும் வரியைப் பண்ணையாருக்குக் கொடுக்கவேண்டிய குத்தகையிலிருந்தோ அல்லது வீட்டுச் சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டிய வாடகையி லிருந்தோ கழித்துக் கொள்கிறார்கள். மில்லின் விளக்கப்படி இவ்வரி மறைமுக வரியாகும்; ஆனால் உண்மையில் இதை நேர்முக வரி என்று கொள்ளல்வேண்டும். இவ்வாறு மில்லின் விளக்கத்தை நிரா கரித்துவிட்டுப் பேராசிரியர் ஷிர்ராஸ் தம் விளக்கத்தைத் தருகிறார். அவர் கூற்றுப்படி தனியாரின் உடைமை, அல்லது வருமானம் மீதும் விதிக்கப்பட்ட வரியும், அரசாங்கத்திற்கு நேரிடையாக நுகர்வோரால் செலுத்தப்படும் வரியும் **நேர்முக வரிகளாம்:** உ-ம்.

வருமான வரி, வீட்டுவரி, மரணவரி, ஆள்வரி, (Poll tax) நிலவரி. பிறவரிகள் எல்லாம் மறைமுக வரிகளாகும். உ-ம். சுங்கவரி, கலால்வரி, விற்பனைவரி, தமாஷாவரி, சூதாட்டவரி.

நாம் இப்பொழுது நேர்முக, மறைமுக வரிகளின் அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் ஆராய்வோம், (அ) வருமானம்தான் எல்லா வரி களுக்கும் மூலமாகும். நாட்டின் விளைச்சலில் ஒரு பங்கை அரசாங்கம் வரி வாயிலாகப் பெறுகிறது. ஆகவே, வருமானத்தின்மீது நேரிடையாக வரி விதித்து, அரசாங்கம் தனக்குரிய பங்கைப் பெறுவது, பகுத்தறிவுக்கு ஒத்ததும், மிகத் தெளிவானதுமாகும். நீதி அல்லது நேர்மை என்ற அடிச்சுவட்டில், உடைமைமேல் வரியை விதிக்க விரும்பினுல், அதன்மீது நேரிடையாக வரி விதிப்பது மிக எளிதானதும் குறைந்த சிக்கல் உடையதும் ஆகும். (ஆ) நேர்முக வரிகளைத் தண்டுவது எளிதாகும். அவைகளை வசூலிப்பதற்காகும் செலவும் மிகு சொற்பமே. ஒவ்வொருவருக்கும் தான் எவ்வளவு தொகை அரசாங்கத்திற்கு வரியாகக் கொடுக்க வேண்டும் என்பதும், எப்பொழுது கொடுக்க வேண்டும் என்பதும் முன்கூட்டியே தெளிவாகத் தெரியும். (இ) நேர்முக வரியின் இன்னொர் அமிசம், இவ்வரி ஒன்றில்தான் வளர்வீதம் (Progression) என்ற கொள்கையைக் கடைப்பிடிக்க முடியும் என்பது. இக்கொள்கையின்படி மக்கள் தங்கள் வருமானம் அல்லது திறனுக்கேற்ப வரித் தொகைகளைக் கொடுக்கவேண்டும். இவ்வாருகப் பெருஞ்செல்வராய்த் திகழ்பவர்களிடமிருந்து அதிகமாக வரியாகப் பெறவேண்டும் என்ற கருத்துடன் இது முற்றும் ஒத்திருக்கிறது. (ஈ) நேர்முக வரியின் பிறிதொரு சிறப்பு அது நெகிழ்ச்சியுடையதாய் இருக்கிறது என்பதாகும். அதாவது, நாட்டின் மக்கள் தொகை, செல்வம் இவை உயர உயர நேர்முக வரியிலிருந்து கிடைக்கும் வருமானமும் உயர்கிறது. மேலும் நேர்முக வரி மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சியைத் தூண்டுவதுமன்றி அதை நீடித்திருக்கவும் செய்கிறது.

(அ) எல்லா நேர்முக வரிகளிலும் மிகவும் தொல்லை தருவது மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியமேயாகும். வருமானம் அல்லது உடைமை இவற்றின்மீது வரி விதிக்கப்பட்டால் அவ்வுடைமையின் பெறுமானத்தை மதிப்பிடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதுவுமன்றி அது உத்தியோகஸ்தர்களின் எதேச்சையான போக்கிற்கும், வரிகொடாமல் தப்புவதற்கும் பல வாய்ப்புகளை நல்குகிறது. அதனுலேதான் நேர்முகவரி நேர்மையின்மீது விதிக்கப்பட்ட வரி என்று கூறப்படுகிறது. சமூகம் முன்னேற முன்னேற இவ் வாக்ஷேபனைகள் குறையக்கூடும். வரி இயங்கும் முறையைப்பற்றிய பரிச்சயம் அதிகம் ஏற்படுந்தோறும், வரி கொடுப்போர் தாம் வரி

யாகக் கொடுக்க வேண்டிய தொகையைத் துல்லியமாகக் கணக்கிடவும், சாமான்களின் விலை ஏற்றத்தின் மூலம் கொடுக்கப்படும் மறைமுக வரிகளைவிட இவை மோசமானவையல்ல என்று அறியவும் கூடும். நிதி இலாக்காவைத் திருத்தியமைப்பதனால் அளவுக்கு மீறிய உத்தியோகஸ்தரின் தொல்லையைக் குறைக்கவும் கூடும். (ஆ) ஒரு நேர்முக வரி முறையில், சமூகத்தில் வறிஞர்களிடமிருந்து அவர்களுடைய பங்கை வரியாகப் பெறுவது மிகவும் சிரம சாத்தியமாகும். எடுத்துக்காட்டாகத் தொழிலாளர்களின் கூலியின்மீது விதிக்கப்படும் ஒரு வரி தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தின்மீது வெறுப்பை விளைக்கும். (இ) நிர்ப்பந்தம் ஏற்பட்டால் ஒழிய நேர்முக வரியை விதிக்க நிதியமைச்சர்கள் விரும்புவதில்லை. ஏனெனில், மக்களின் பகைமையை அவர்கள் சம்பாதித்துக்கொள்ள விரும்பவில்லை. இக்காலத்தில் வரிகள் வாக்காளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப இருக்கவேண்டும். சர் ராபர்ட்டு ஜிப்பன் (Sir Robert Giffen) என்பவர் மறைமுக வரியினால் விளைவதைப் போன்று மும்மடங்கு அதிகத் துன்பம் நேர்முக வரியால் விளைகின்றதென்று கூறினார். அவர் கருத்தை உண்மையெனக் கொண்டால், 'வரி என்றால் என்ன? அதைச் சிறந்த முறையில் எவ்வாறு வசூலிப்பது அல்லது கொடுப்பது?' என்பன போன்ற விஷயங்களை வரி கொடுப்போருக்குத் தெளிவாகச் சொல்லிக்கொடுக்க வேண்டுவதன் இன்யறிமையாமை புலப்படும். (ஈ) நேர்முக வரியினால் மக்களுக்குப் பெரிதும் அசௌகரியம் ஏற்படுகிறது. ஏனெனில், அவ்வக்காலத்தில் தங்களுக்கு வரி கொடுக்கச் சௌகரியப்படுமா என்பதைக் கருதாது மக்கள் வரிகளைச் செலுத்துமாறு கோரப்படுகிறார்கள். அதுவுமன்றி, நேர்முக வரியால் ஏற்றத்தாழ்வும் ஏற்படுகின்றன. ஏனெனில், செலவை அடிப்படையாகக் கொள்ளாது இவ்வரி வருமானத்தையே அடிப்படையாகக் கொள்கிறது.

ஒன்பதாமதிகாரம்

மறைமுக வரிகள்

(Indirect Taxes)

நேர்முக வரியின் குறைபாடுகள் மறைமுக வரியின் நல்ல அமிசங்களாகும். காடின் (Gaudin) கூறுவதுபோன்று ' "தங்கள் இயல்பைத் திறமையாக மறைக்கும் வடிவங்கள் உள்ளவைதாம் சிறந்த வரிகள்," என்பது உண்மையானல், மறைமுக வரிகளின் உயர்வைப்பற்றி ஐயுற வேண்டுவதில்லை. பிரெஞ்சு அமைச்சரான கோல்பர்ட்டு (Colbert), "வரிக்கலையாவது மிகக் குறைந்த கூப்பாட்டுடன் அதிகமான இறகுகளை வாத்தினிடமிருந்து பிய்க்கும் கலைக்கு ஒப்பாகும்," என்றார். இக்கூற்றை மறைமுக வரிகள் மெய்ப்பிக்கின்றன. வரி கொடுப்போர் நேர்முக வரிகளைப்போல அதே அளவு துன்பத்தை மறைமுக வரிகளால் உணர்வதில்லை. அதனல் அவர்களுக்குத் தொந்தரவும் அதிகமில்லை. மது, தேயிலை, அல்லது புகையிலை இவற்றின் விலையுடன் கூட்டிக் கலந்த ஒரு வரி, வரி கொடுப்போரின் மனத்தில் பளுவாகப் படுவதில்லை. அஃது உற்பத்திச் செலவின் ஒரு பகுதியெனத் தோன்றுகிறது.

நேர்முக வரிகள் அதிகம் அபிவிருத்தியடைந்திருந்தாலும், எல்லா வரி முறைகளிலும் மறைமுக வரிகள் இன்னமும் காணப்படுகின்றன. ஏழை மக்களை அணுகக்கூடிய ஒரே கருவி மறைமுக வரி என்றும், அவர்களின்மீது நேர்முக வரிகள் விதிப்பது மிகு சிரமம் என்றும் வாதிக்கப்படுகிறது. நுகர்ச்சிப்பொருள்களின்மீது விதிக்கப்படும் வரிகள் எல்லா வகுப்பினரையும் பாதிக்கின்றன. ஒரு குடியாட்சி நாட்டில் அரசியல் பாதுகாப்புக்கு எல்லா வகுப்பினரும் வரி கொடுப்பது இன்றியமையாதது என்றும் வாதிக்கப்படுகிறது. ஓர் அரசியல் முகாந்திரமாக இதை நாம் பரிசீலிக்க வேண்டுவதில்லை. ஆயினும் நேர்முக வரிகளுக்கு ஒரு சிறந்த அனுபந்தம் மறைமுக வரிகள் என்பதில் யாதோர் ஐயமும் இல்லை.

(அ) மறைமுக வரிகள் விதிக்கப்படுவதற்குத் தலையாய காரணம் வரியின் அடிப்படை மிகப்பரந்திருத்தல் நல்லது என்பதே. (ஆ) மறைமுக வரிகளால் நல்ல வருமானம் கிடைக்கிறது. (இ) அதனுடன் சுபிட்சகாலங்களில் அதிகச் சிரமம் இல்லாமலே மிகுந்த வருவாயைக் கொடுக்கின்றன. பெருத்த கழிவுகளுக்குப் பின்பும் ஆங்கிலேயத் தீர்வைகள் சுங்க வருமானங்கள் அதிகரித்தது இதற்கோர் எடுத்துக்காட்டு (ஈ), மேலும், சாமான்களின்மீது விதிக்கப்படும் வரிகள் வரிகொடுப்போருக்கு வசதியான காலத்தில் வசூலிக்கப்படுகின்றன. ஏனெனில், ஆடம் ஸ்மித்துக் கூறியாங்கு, "வரி கொடுப்போர் அற்றைச் சிறுகச் சிறுகத் தாங்கள் சாமான்களை வாங்குந்தோறும் கொடுக்கிறார்கள். தங்கள் விருப்பம்போலச் சாமான்களை வாங்கவோ வாங்காமல் இருக்கவோ அவர்கட்கு உரிமை உண்டு." (உ) மறைமுக வரிகள் கொடுக்காமல் தப்புவது மிகவும் நல்லது.

(அ) மறைமுக வரிகளுக்கு மிகக் கடுமையான ஆட்சேபம் அவை தேய்வு வீதமாய் (Regressive) இருக்கின்றனவென்பதே. விளக்கமாகக் கூறினால், அவை "தலைகீழ்ப் படித்தர முறை" யின்மூலம் பெருத்த பிரதி கூலத்தைத் தருகின்றன. அதாவது வரிப்பளுவைத் தாங்க ஆற்றல் சிறிதும் இல்லாதவர்கள்மீது அது ஒரு பெரிய பளுவாக இருக்கிறது. சாதாரணமாக மறைமுக வரி செல்வர்களைக்காட்டிலும் வறியோர்மேல் தான் அதிகம் விழுகிறது. ஏனெனில், நுகர்வோரில் பெரும்பான்மையோர் வறியோரே. (ஆ) நேர்முக வரியைப்போல மறைமுக வரியில் குடும்பப் பொறுப்புக்காக யாதொரு தள்ளுபடியும் செய்யப்படுவதில்லை. திருமணம் ஆகாதவரை விட இல்லறத்தில் இருப்பவர் அதிக வரி கொடுக்கவேண்டும். (இ) அதனுடன் இவ்வரி முறையில்தானே ஈட்டிய வருமானத்துக்கும், தம் முன்னோர்கள் தேடிவைத்த செல்வத்தினின்றும் பெறும் வருமானத்துக்கும் யாதொரு வேறுபாடும் கற்பிக்க முடியாது. ஹார்ட்லி விதர்ஸ் கூறுவது வருமாறு: "வாங்குவோர் தெருக்கூட்டுவோராய் இருந்தாலும் சரி, அல்லது கோடீஸ்வரராய் இருந்தாலும் சரி, ஓர் அவுன்ஸ் புகையிலையை வாங்குவதன் நிமித்தம் கொடுபடும் வரித் தொகை ஒன்றுதான்." கோடீஸ்வரன் தன் வருமானத்தில் செல விடும் பங்கைவிடத் தெருக்கூட்டுபவன் புகையிலை மீது செலவிடும் வருமானத்தின் பங்கு கூடுதலானது. இதன் விளைவாக இவ்வகையான வரிகள் பல நாடுகளில் இடம் பெற்றாலும், பொருளியல் காரணங்களால் மட்டும் இவற்றை நல்லவை என்று கூற முடியாது. (ஈ) வியாபாரச் சுணக்கம் (Trade Depression) ஏற்படும் காலத்து மறைமுக வரிகளினின்று கிடைக்கும் வருவாயை நம்ப முடியாது. சுபிட்ச ஆண்டுகளில் அவை பெருகுவதுபோல வியாபார மந்தக் காலங்களில்

அவற்றினின்று கிடைக்கும் வருவாய் சுருங்குகின்றது. சுருங்கக் கூறின், அவற்றினின்று கிடைக்கும் வருவாய் நிச்சயமற்றது. (உ) அவற்றை விரிவு படுத்துவதும் எளிதன்று. வரிகளைக் கூட்டிஞல் அதனுல் நுகர்ச்சி குறைந்து, ஏற்கெனவே கிடைத்த வருமானத்தையோ, அதைவிடக் குறைவான வருமானத்தையோ தரலாம். (ஊ) மறைமுக வரிகளை மட்டும் நம்பி இருத்தல் அநீதியில் கொண்டுபோய்விடும். (எ) மறைமுக வரிகளின் மற்ருெரு குறைபாடு, அவற்றை வசூலிப்பதற்காகும் செலவு நேர்முக வரிகளுக்கு ஆவதைக்காட்டிலும் கூடுதலாக இருப்பதே.

இங்கிலாந்தில் பீல் (Peel) ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திய காலத்து, 1035 சுங்கத் தீர்வைகள் குறைக்கப்பட்டன ; 605 முற்றும் அகற்றப்பட்டன. ஆயினும், சுங்கத் தீர்வைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் கணிசமான அளவு குறையவில்லை என்று கூறப்படுகிறது. மறைமுக வரிகளிலிருந்து மட்டும் மிகக் கூடுதலான வருமானத்தைப் பெறுவது சிரமம் என்பது அண்மைக் காலத்தும் நிரூபிக்கப்பட்டது. நேர்முக வரிகளை விதிக்க இயலாமையால் 1914-18 போருக்கு முன்பு ஏகாதிபத்திய ஜெர்மனியின் (Imperial Germany) நிதி விவகாரங்கள் முட்டுப்பட்டன. முதல் உலகப் போருக்குப் பின் 1922, 23-ஆம் ஆண்டுகளில் பிரான்சில் நிதிப் பிரச்சினைகள் ஏற்பட்டதற்கு ஒரு காரணம் அது சமீபகாலத்திலேயே நேர்முக வரிகளை அபிவிருத்தி செய்ய ஆரம்பித்தது என்பதே.

மறைமுக வரிகளின் பிற குறைபாடுகளாவன : பணத்திற்கு முடைப்பட்ட ஓர் அரசாங்கம் மறைமுக வரிகளைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடும். ஒரு புதிய வரியை விதிப்பது என்பது அரசாங்கத்திற்கு எளிய காரியமன்று. ஏனெனில், இதனுல் பாதிக்கப்படுபவர்கள் இவ்வரியை எதிர்ப்பார்கள். அதுவுமன்றி, உற்பத்தி நிலையாதாவது ஒன்றில் இவ்வரி விதிக்கப்படுமாஞல், அதனுல் வியாபாரத்திற்குக் குந்தகம் விளையும். அதனுடன் மறைமுகவரிகளின் இறுதி நிலைப்பாட்டைக் கண்டு பிடிப்பதும் மிகவும் கடினம். (1) பொதுவாக நுகரும் சில குறிப்பிட்ட பொருள்களுக்கு மட்டும் மறைமுக வரிகளை விதித்தலாலும், (2) வரியால் அதிக வருமானம் பெறவேண்டும் என்ருல் அதற்காகப் புது வரிகளை விதிக்காமல் இப்போது இருக்கும் வரிகளை உயர்த்தலாலும், (3) முடிந்த பொருளின் (Finished Products) மீதே வரியை விதித்தலாலும் இவ்வாட்சேபங்களை ஒருவாறு சமாளிக்கலாம்.

மறைமுக நேர்முக வரிகளின் பலாபலன்களைச் சீர்தூக்கிப் பார்த்தால் மறைமுக வரிகளைவிட நேர்முக வரிகள்தான் நாம் ஏற்றுக்

கொள்ளக்கூடியன என்பன தெளிவு. இது போழ்து இக்கால நாடுகள் தம் வருமானத்தின் பெரும்பகுதியை நேர்முக வரிகளின் மூலம் பெறுகின்றன என்பது நினைவுறுத்தற்பாலது. இந்திய யூனியன் அரசாங்கத்திற்குச் சுமார் 25% நேர்முக வரிகள் மூலம் வருவாய் கிடைக்கின்றன.

சில தவருன கருத்துகள்

சம அளவில் நிதித் திட்டங்களில் நேர்முக மறைமுக வரிகளை வைப்பது நல்ல நிதி அமிசத்தின் ஓர் அடையாளம் என்று தவருகக் கருதப்படுகிறது. இவ்வெண்ணம் கிளாட்ஸ்டனின் சிறந்த உவமை ஒன்ருல் உரமூட்டப் பெற்றது. அவர் இவ்விருவகை வரிகளையும் "இரு அழகான சகோதரிகளுக்கு" ஒப்பிட்டதுடன் அவர்கள் இருவருக்கும் இடையே தாம் பூர்ணமான நடுவு நிலைமை வகிப்பதாக வும் கூறினுர்.

வரிகளுடைய வளர்ச்சியின் வரலாறு

நேர்முக வரி விதிப்பு அண்மைக் காலத்திலேதான் தோன்றி வளர்ந்தது. போர்க்காலத்தில் சில ஐரோப்பிய நாடுகள் மறைமுக வரியைத்தான் தங்களுக்குச் சிறப்பான ஆதரவாக நம்பியிருந்தன. பேராசிரியர் பிளன் கூறுவது போல எல்லா நாடுகளின் வரி முறை களும் பெரிதளவு தற்செயலாக ஏற்பட்ட பல வரலாற்று வரிகளின் கதம்பமேயாகும். அவற்றை அகற்ருமல் வைத்திருப்பதற்குக் காரணம் அவை தரும் வருவாய்க்காகவேயன்றி அவை நேர்மை யானவை என்ற நம்பிக்கையால் அன்று" நாடுகள் பலவும் சீர் திருத்தத்திற்காகச் சீர்திருத்தத்தை போகப் பொருளாக மேற்கொள் ளும் வசதி படைத்திருக்கவில்லை. பேராசியர் செலிக்மென் இக் கருத்தையே கொண்டிருக்கிருர். அவர் கூறுவதாவது: "வரலாற் றின் அனுபவப்படி பல சீர்திருத்தங்கள், நிதியைப் பொறுத்த அளவிலாவது, சுயநல நோக்குக்காகச் செய்யப்பட்டன என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். பொருளியல் உறவுகளில் ஏற்பட்ட மாறுதல்களின் விளைவே இச்சீர்திருத்தங்கள். சிறியது அல்லது பெரியதாக இருக்கும் ஒவ்வொரு வகுப்பினரும் தமக்கெனச் சில அனுகூலங்களைப் பெறவேண்டும் என்று செய்த முயற்சிகளாலும் இச்சீர்திருத்தங்கள் ஏற்பட்டன."

மறைமுக வரிகளைப் பற்றிய நமது கருத்தைப்பற்றிய சில வார்த்தைகள். இவ்விஷயத்தைப்பற்றிப் பல கோஷங்கள் எழுப்பப் படுகின்றன. பொதுவுடைமை வாதிகள், ஒரு வரிக் கொள்கையினர் (Single taxers) இவர்களுடன் பல சிந்தனைவாதிகளும் சேர்ந்து

மறைமுக வரிகளை அடியோடு எடுத்துவிடவேண்டும் என்று கூச்சல் போடுகின்றனர். இது தவறு. மறைமுக வரி என்பதனாலேயே ஒரு வரி கெட்டதாகாது. நேர்முக வரி என்பதனாலேயே ஒரு வரி நல்லது மாகாது. நல்லது, அல்லது என்பது எவ்விதமான நேர்முகவரி, மறை முகவரி என்பதைப் பொறுத்திருக்கிறது. தொழிலாளியின்மீது விதிக் கப்படும் நேர்முக வரி அது நேர்முக வரி என்பதனாலேயே சிறந்ததாக மாட்டாது. அதுபோலச் செல்வரின் போகப் பொருள்களின்மீது விதிக்கப்படும் வரி மறைமுக வரி என்பதனாலேயே கெட்டதாக மாட்டாது. கடந்த காலத்தில் விதிக்கப்பட்ட மறைமுக வரிகள் பலவும் வலுவுள்ளோரால் வலுவற்றோர்மீது வரிப்பளு விழ வேண்டும் என்ற எண்ணத்துடனேயே தயாரிக்கப்பட்டது என்பது உண்மையே. ஆயினும் பிற வரிகளுக்குத் துணையாக நுகர்ச்சி வரிகள் விதிப்பதும் அதனால் எல்லோருக்கும் பெரும்பாலும் நீதி வழங்குவதும் சாத்தியமே.

பத்தாமதிகாரம்

வரிப்பளுவின் பங்கீடு

(Distribution of Tax Burden)

வரிப் பங்கீட்டில் நீதிக்கூறு

(Ethical Element in the Distribution of Taxation)

இப்பொழுது நாம் ஒரு முக்கியப் பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது ; அதாவது, வரிப்பளுவை எங்ஙனம் வரி கொடுப்போரிடையே பகிர்வது என்பதைத் தீர்மானிக்கவேண்டும். இப்பொழுது வரிப்பளு எவ்விதம் இருக்கிறது என்பதை ஆராயாமல், எவ்விதம் இருக்கவேண்டும் என்பதை ஆராயவேண்டும். பொது வாகச் செல்வத்தை பங்கிடுவதைக்காட்டிலும் வரிப் பளுவைப் பங்கிடுவது மானிட நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று கூறுவது நீதிக்கு ஒத்ததே,'' என்று பாஸ்டபிள் கூறுகிருர். எவ்வெப் பிரச்சினைகளில் விதித்தன செய்தலும் விலக்கியன தவிர்தலும் வருகின்றனவோ, அவையெல்லாம் நீதியைப் பற்றியனவே. ஆயினும் அவற்றிற்குச் சரியான தீர்வு பொருளியல் நிதி விவகாரங்களுடன் பின்னிக் கிடப்பதால், அவை நிதிப் பரிசீலனையின் ஓர் உறுப்பாகவே இருக்கவேண்டும். சூழ்நிலையைப்பற்றிய அறிவு இல்லாமலும், வரி முறைகளின் விளைவுகளைப்பற்றிய அறிவில்லாமலும், வரிகளின் நீதிகளைப்பற்றி ஆராய்ந்து தீர்ப்புக்கூற முற்படுவது பேதைமை. ஒரு வரி முறை பெரும்பகுதியும் நீதிக்கு ஒத்ததாக இருக்கிறது என்பது மட்டும் போதுமானதன்று. அவ்வரி முறை நீதிக்கு ஒத்ததாக இருக்கிறது என்பதைப் பொதுவாக மக்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். பல்வேறு வகுப்பினரிடையேயும் சமூகத்தின் தனிப்பட்ட உறுப்பினர் களிடையேயும் நேர்மையான முறையில் வரிப்பளுவுகள் பங்கீடு செய்யப்படவில்லை என்று காரணமில்லாமல் நம்பினுலும், அது சமூகத் தைக் குலைய வைக்கும் சத்தியாகும். வரிப்பளுவுகளை நியாயமற்ற

முறையில் பகிர்வதால் மக்களுக்கு அதிருத்தி ஏற்படும். அதுவே, ஒரு புரட்சி தோன்றுவதற்கான நிமித்தமாகவும் இருக்கும். நிதி விவகாரங்கள் அரசியல் விவகாரங்களேயும் பாதிக்கும். வரிப் பளுவுகளேச் சரியான முறையில் பகிராத எவ்விதமான நிதி நிருவாக முறையையும் நாம் ஏற்க முடியாது. எவ்வித முகாந்திரங்களின் அடிப்படையில் வரிப் பளுவைப் பிரிக்கவேண்டும் என்று ஆராய்வது மிகச் சிறந்த பயனை அளிக்கும்.

வீதாசார வரி விதிப்பும், வளர்வீத வரி விதிப்பும் (Proportionate taxation and progressive taxation): ஒருவரின் செல்வத்தின் மதிப்பு அல்லது வருமானம் உயர உயர வரி வீதமும் உயர்வது வளர்வீத வரி எனப்படும். (உ-ம்.) இந்திய வருமான வரியை எடுத்துக்கொண்டால் முதல் ரூ. 3,000 மீது வரியில்லை. அடுத்த ரூ. 2,000 மீது 3% வீதமும், அதற்கடுத்த ரூ. 2,500 மீது 7% வீதமும், அதற்கடுத்த ரூ. 2,500 மீது 10% வீதமும், அதற்கடுத்த 2,500 மீது 20% வீதமும் வரி விதிக்கப்படுகிறது. செல்வத்தின் மதிப்பு அல்லது வருமானத்துக்குத் தகுந்தாற்போல மாறும் வரி, வீதாசார வரி எனப்படும். (உ-ம்.) ஏக்கருக்குப் பத்து ரூபாய் என்ற நில வரி. ஒருவருக்கு ஓர் ஏக்கர் நிலம் இருக்குமானுல் பத்து ரூபாய் நில வரியும், பத்து ஏக்கர் இருக்குமானுல் நூறு ரூபாய் நில வரியும் அவர் கொடுக்கவேண்டும்.

குறைந்துசெல் பயன்பாட்டு விதி அடிப்படையில் அமைக்கப் பட்டது வளர்வீத வரி. ஆடம் ஸ்மித்து தமதுமுதல் விதியில், " ஒவ்வொருவரும் " தத்தம் ஆற்றலுக்கு ஏற்றவாறு, அதாவது தாம் துய்க்கும் வருமானத்திற்கு ஏற்றவாறு வரி கொடுக்க வேண்டும் " என்று கூறியதனுல் ஒரு வளர்வீத வரிக்கு யாதொரு முகாந்திரமும் இல்லை எனக் கருதலாம். அவர் ஒரு வீதாசார வரியையே தம் மனத்தில் கொண்டிருந்தார் எனவும் கருதலாம். ஆயினும் அவர் பிறிதோரிடத்தில் வளர்வீத வரிகளை ஆதரிப்பது போலத் தோன்றுகிறது. ஏனெனில், அவர் " செல்வர்கள் அரசாங்கத்தின் செலவிற்கு தம் வருமானத்திற்கு ஏற்ற அளவில் மட்டுமன்று; சற்றுக் கூடுதலாகவே கொடுக்க வேண்டும்," என வலியுறுத்துகிருர்.

இப்பொழுது உலகமெங்கும் வளர்வீத வருமான வரி விதிக்கப் படுகிறது. ஆனுல், இந்நூற்றுண்டின் தொடக்கத்தில் பிரிட்டனில் மிகு முற்போக்கு வாய்ந்த சிந்தனை வாதிகள்கூட அதைச் சந்தேக மனப்பான்மையுடன் நோக்கினர். கிறிஸ்து பிறப்பதற்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஏதன்ஸ் நகரத்தில் ஒரு வளர்வீத வரி

விதிக்கப்பட்டது. அதற்கு ஓராயிரம் ஆண்டுகட்கு முன்னர் எகிப்தில் ஒரு வருமான வரி விதிக்கப்பட்டது. பிரிட்டனில் பதினான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுகளில் வளர்வீத வரி விகிதம் வழக்கில் இருந்தாலும், வருமானத்தைப் பொறுத்தவரை இவ்வெண்ணம் நிலையாக வேரூன்றவில்லை.

ஆயினும், மான்டஸ்கோ காலத்திலிருந்து வளர்வீத வரிக் கொள்கைக்கு விளக்கம் இல்லாமல் இல்லை. 1830இல் பாலி (Paley) என்பவர் முதன் முதல் ஆங்கிலத்தில் அதற்கு விளக்கம் தந்தார். அவர் "எஞ்சியுள்ள யாவற்றின் மீதும் நாம் வரி போடவேண்டும்," எனக் கூறினார். இருப்பினும், இறுதி நிலைக்கருதுகோள் (marginal theory) அதன் அகவுணர்வைக்கொண்டு விளக்கப்படும்வரை, வளர்வீத வரிக்குக் கொள்கையளவில் உறுதியான அடிப்படை உண்மையில் ஏற்படவில்லை. வரி கொடுப்பது ஒரு தியாகம் அல்லது துன்பம் என்பதை இப்பொழுது நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். நூறு ரூபாய் வருமானம் உடையவனிடமிருந்து ஒரு ரூபாயை வரியாகப் பெறுவதுபோல அவ்வளவு துன்பத்தைப் பதினாயிரம் ரூபாய் வருமானம் உடையவனிடமிருந்து ஒரு ரூபாயை வரியாகப் பெறுவது கொடுக்கவில்லை. இக்கொள்கையை பணம் அல்லது செல்வம், அதனை உடையவருக்குத் தரும் பயன் குறைந்து கொண்டே போகிறது என்பதை அடிப்படையாகக்கொண்டது. ஒரு குறிப்பிட்ட பண்டத்தை மேலும் மேலும் நுகர்வோமானால் விரைவிலேயே நாம் அதனால் அடையும் திருத்தி குறைவதுடன், திருத்தியே இல்லாமல் அதிருத்தியும் ஏற்படும். எடுத்துக்காட்டாக ஒரே பாட்டை மீண்டும் மீண்டும் ஒரே மாதிரி பாடக் கேட்டால் நமக்கு வெறுப்பே ஏற்படும். அதனால், பொருள்களின் பொதுவான பயன் விரைவில் பூஜ்யத்தை அடையும். பணம் உடையவனுக்கு அதன் பயன் பணத்தின் தொகை உயர உயரக் குறைந்துகொண்டே வந்தாலும், மிகப் பெரிய தொகை இருந்தால் ஒழியப் பூஜ்யம் ஆகாது. அப்பொழுது கூடப்பூஜ்யமாவதில்லை. ஏனெனில், ஒருவனுக்குப் பணத்தால் கிடைக்கக்கூடிய எல்லாப் பொருள்களும் இருந்தாலும், மேலும் ஒரு தொகை ஒருவனுக்குக் கிடைத்தால் அதனால் அவனுடைய முனைப்பு உணர்ச்சிக்கு (sense of pride) ஒரு நிறைவு ஏற்படுகிறது.

குறைந்துசெல் பயன்பாட்டை வளர்வீதத்திற்கு அடிப்படையாகக் கொள்வதற்கு எதிர்வாதம் (Objection to the "Diminishing Utility" Basis for Progression): தனியாருக்கு ஒரு பொருளிலிருந்து கிடைக்கும் பயன் குறைந்துகொண்டே வருகிறது என்பதை சர் சிட்னி சாப்மென் (Sir Sydney Chapman) மறுக்கிறார். முதலில் வருமானத்தில் ஏற்பட்ட ஏற்றத்தால் மிக இன்றியமையாத தேவைகள்

பூர்த்தி செய்யப்படுகின்றன என்றும், பின்னர் வருமானத்தில் ஏற்பட்ட ஏற்றத்தால் அவ்வளவு அவசியமில்லாத தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன என்றும் கூறுகின்றூர். முந்தியதால் அதிக பயன் விளையலாம், அல்லது விளையாமலும் இருக்கலாம்.

ஆற்றலுக்கேற்றபடி செலுத்துவது (ability to pay) என்ற கொள்கையின் அடிப்படையின்மீதும் வளர்வீத வரிகளை நிலை நாட்டலாம். ஒருவருடைய வரி கொடுக்கும் ஆற்றல், அவருடைய வருமானம் அதிகரிக்கும் அளவைக்காட்டிலும் கூடுதலாகவே அதிகரிக்கிறது. ஏனெனில், செல்வராயினும், வறியோராயினும் மனிதரின் உணவு, உடை, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளில் பெரிதும் ஒருவருக்கு ஒருவர் வேறுபாடு இல்லை. இவ்வகையான அவசியச் செலவுக்குமேல் வரி கொடுக்கும் ஆற்றலும், சேமிக்கும் ஆற்றலும் உள்ளன. திங்கள் ஒன்றுக்கு 300 ரூபாய் சம்பாதிப்பவனை விடத் திங்கள் ஒன்றுக்கு 600 ரூபாய் சம்பாதிப்பவனுக்கு வரி கொடுக்கும் ஆற்றல் இரு மடங்குக்குமேல் இருக்கிறது.

சமூக முன்னேற்றத்தின் ஒரு கருவியாக வளர்வீத வரிக் கொள்கையை நிறுவலாம். இவ்விருபதாம் நூற்றுண்டில் நாம் இருக்கும் இவ்வுலகு எல்லா உலகங்களிலும் மிகச்சிறந்தது என வாதிப்பார் யாருமிலர். வருவாயில் பெரிய ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. அளவுக்கு மீறிச் செல்வம் சிலர் கையில் முடங்குவதைத் தடுப்பதற்கும், செல்வத்தை நேர்மையான முறையில் பகிர்ந்தளிப்பதற்கும் வரிவிதிக்கும் அதிகாரத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது அரசாங்கத்தின் அலுவல் என்பதை நிதியைப்பற்றி எழுதுவோர்களில் பெரும்பாலார் ஏற்றுக்கொள்கின்றனர். இவ்வகையான சீர்திருத்தத்தைக் கொள்வதற்கு வளர்வீத வரி ஒரு சிறந்த கருவி. இதைப் பொதுவுடைமை அல்லது செல்வம் விரவிப்பரவுவதன் கருதுகோள் (diffusion of wealth theory) எனவும் கூறலாம். "பெரும்பான்மையான மக்களின் நலனுக்கு உகந்த வகையில், பொருளியல் சமூக சீர்திருத்தங்களைக் கொணர்வதற்குத் தன் அதிகாரங்களைப் பயன்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும்," என மார்ஷல் (Marshall) கூறுகிறூர். அரசாங்கத்தின் முக்கிய-அதிகாரங்களில் ஒன்று வரி விதிப்பது. தான் விரும்புவதுபோல பொருள் துறையில் மாறுதல்களைக் கொணர்வதற்கு அரசாங்கம் இவ்வதிகாரத்தைப் பயன்படுத்துவது முற்றிலும் பொருத்தமேயாகும்.

குறைந்த வருமானத்தை உடையவர்களைவிடச் செல்வம் கூடுதலாக உள்ளவர்கள் அரசாங்கத்தின் பாதுகாப்பை அதிகம் நம்பியிருக்கின்றனர். ஒழுங்கான நாகரிகமும், அந்நாகரிகத்தால் விளைந்த

அரசாங்கத்தின் நிலையான அமைப்புமே சிலர் பெருவருமானத்தைத் துய்ப்பதற்கு வசதியாய் இருக்கிறது. அரசாங்கம் போதுமான அளவு பாதுகாப்பு அளிக்காவிடில் பெருத்த வருமானத்தை உடையோர் தங்கள் வருமானத்தில் பெரும்பகுதியையும், தங்கள் உடைமையைப் பாதுகாப்பதற்கான படையைத் திரட்டிப் பராமரிப்பதில் செலவிடவேண்டி வரும். குறைந்த வருமானத்தை உடையவர்கள் தங்கள் சொத்து களவாடப்படும் என்று அஞ்ச வேண்டுவதில்லை. ஏனெனில், மடியில் இருந்தால்தானே வழியில்பயம் ?

தங்கள் வருமானத்தைத் துய்ப்பதில் மட்டுமன்றி, பெருஞ் செல்வந்தர் அரசாங்கத்திற்குக் கடன் பட்டிருப்பது, அரசாங்கம் இல்லையானல் அவர் பெருந்தொகையினைச் சம்பாதித்திக்கவே முடியாமையே. ஏனெனில், ஒழுங்கான சமூகம் இல்லாதவிடத்து அவர் தன் திறமையைப் பயன்படுத்திப் பொருள் ஈட்டியிருக்க முடியாது. நல்ல ஓட்டமுள்ள வியாபாரிகள்தாம் ஈட்டிய பெருஞ்செல்வம் அனைத்தும் தம் திறமையாலேயே வந்ததென்று எண்ணுவது இயல்பே. பாலை நிலத்திலோ அல்லது பொருளியல் துறையில் பிற்போக்கான ஒரு நாட்டிலோ தாங்கள் திறமையைப் பெற முடியாது என்பதையும் அவர்கள் சிந்தித்தார்களில்லை. இக்காலத்தில் தொழிலதிபரின் தொழில் முயற்சி, பல ஆயிரக்கணக்கான உற்பத்தியாளர், போக்கு வரவில் ஈடுபட்டிருப்போர், நுகர்வோர், எல்லாவற்றிற்கும் மேலாக அவசியமான ஊர் காவலரை நல்கும் ஒழுங்கான அரசாங்கம் இவையனைத்தையும் சார்ந்திருக்கிறது என்பதையும், இவையின்றேல் அராஜகமும் குழப்பமும் விளையும் என்பதையும், நிரம்பப் பொருளீட்டுவதில் வெற்றி பெற்றவர் அரசாங்கத்திற்கு மிகவும் கடன் பட்டிருப்பதால் அரசாங்கம் தன் வருமானத்தை வசூலிப்பதில் வளர்வீத முறையைக் கடைப்பிடிப்பது சரிதான் என்பதையும் அவர் உணர்வார். எவரெவருக்கு அதிக செல்வம் இருக்கிறதோ, அவரவர் உடைமையினின்றும் அதிகம் வரியாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதே இக்கொள்கை.

உற்பத்தி காரணமாகவும் வளர்வீத வரியைச் சரியென நிலைநாட்டலாம். அதிக வருமானம் உள்ளவருக்கு அதை மேலும் பெருக்குவதற்கு அதிக வாய்ப்பும் ஆற்றலும் இருக்கின்றன. ஆகவே, அவர்களின் வருமானத்தைப் பெருக்கும் ஆற்றலுக்கு ஊறின்றியே வருமானத்தின் கணிசமான பகுதியை வரியாகத் தண்டலாம். எடுத்துக்காட்டாக ஆண்டொன்றுக்கு ஆயிரம் ரூபாய் வருமானம் உடையவனைவிட, ஆண்டொன்றிற்கு நாற்பதினாயிர ரூபாய் வருமானம் உடையவனுக்கு வருமானத்தைப் பெருக்குவதற்கு அதிக வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் அமைந்திருக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

உபரி வரி விதிப்பு (Taxation of Surplas) : ஜே. ஏ. ஹாப்ஸன் (J. A. Hobson) வரி செலுத்தும் திறனைப் பின்வருமாறு விளக்குகிறு : உற்பத்திக் காரணிகள் திறமையாகச் செயற் படவேண்டும். இதற்கு உற்பத்திக் காரணிகளை அவற்றிற்கு உரியவர்கள், திறமையாகப் பயன்படுத்துவது இன்றியமையாததாகும். இது ஆக்கச்செலவில் (Costs Production) அடங்கும். அதனுல் உற்பத்திச் செலவின்மீது வரி விதிக்கப்பட்டால் அதற்கு வரி தாங்கும் திறன் இல்லை. உழைப்பாளிகள் தொடர்ந்து வேலை செய்யுமாறு அவர்களின் திறமையையும் வசதியையும் நன்னிலையில் வைத்திருப்பது தரக்கூலிகளே (Standard Wages). ஆகவே, நியமனக் கூலிகளும் உற்பத்திச் செலவில் அடங்கும். இப்போதிருக்கும் சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைகளில், பயன் தரும் தொழிற்றுணிவை (Productive Enterprise) நிறுவ முனைவு கொண்டு, அதை அமைத்து நிருவகிப்பதற்குப் போதிய தொழில் திறன் (Professional Ability) வேண்டும். ஆகையால், இவ்வகையான மூளை உழைப்புக்குக் கொடுக்கப்படும் சம்பளம், இலாபம் முதலானவையும் ஆக்கச் செலவில் அடங்கும். இதனுடன் தனியார் தொழிற்றுணிவுக்கு இன்றியமையாததாகக் குறைந்த பட்ச வட்டியையும் சேர்க்கவேண்டும். அப்போதுதான் போதிய சேமிப்பு ஏற்பட்டு, உற்பத்தி செய்முறைகளுக்கு (Productive Processes) வேண்டிய எந்திரங்கள், கருவிகள் மூலப் பொருள்கள் அனைத்தையும் புதிய மூலதனத்தை முதலீடு செய்வதன் மூலம் பெற முடியும்.

இச்செலவுகளின்மீது வரி விதித்தால் அவற்றுக்கு அவ்வரியைத் தாங்கும் ஆற்றலில்லை. இதனுல், அவற்றின் மீது வரி விதிக்க இயலாதென்ருே, சிறிது காலத்திற்கு அவற்றின்மீது வரி விதிக்கக் கூடாதென்ருே நாம் கூறவில்லை. இச்செலவுகளின்மீது வரி விதித்தால் 1. உற்பத்தி குறையக் கூடும். 2. இன்றியமையாத உற்பத்திச் சாதனங்களின் வினியோகத்தைக் குறைப்பதனுல் அவற்றின் பேரில் வரி விதிக்க முற்பட்டால், அவ்வுற்பத்திக் காரணிகள் பிறர்மீது வரியைப் புரட்டக் (Shift) கூடும். இவ்வாருக வருமானத்தில் இரு கூறுகள் இருக்கின்றன. அவை : 1. செல்வு, 2. உபரி. அவை மேம்பட்ட பொருளாதார வாய்ப்புகளினுல் ஏற்பட்டு, அவற்றை உற்பத்தியில் பயன்படுத்துவதற்கு இன்றியமையாத தூண்டுகோல்களாக இல்லாதவிடத்து, நாட்டின் பொருளாதார வாரம், வட்டி, லாபம் போன்ற செலுத்தினங்களை (Payments) உபரியாகக் கொள்ளலாம். எல்லா வகை உபரிகளுக்கும் வரி தாங்கும் வல்லமை பூரணமாய் இருக்கிறது. இவ்வித 'உபரி'களுக்கு வரியை நிராகரிக்கவோ அல்லது பிறர் மீது புரட்டவோ முடியாது. தீய வரி விதிப்புக் கொள்கையினுல் 'செலவு'களின் மீது விதிக்கப்படும் வரிகள்

அனைத்தும் யாதாயினும் ஓர் வடிவத்திலுள்ள ‘ உபரி’யின்மீது புரட்டப்படுகிறது.

எதிர் வாதங்கள் :

வளர்வீத முறை இயல்பாகவே எதேச்சாதிகாரத்தில் முடிவதாய் அமைந்திருக்கிறது. வீதாசார முறை என்ற தெளிவான கொள்கையைக் கைவிடுவது கடலில் திசைகாட்டும் கருவியும் துடுப்பும் இல்லாததால் ஒரு கப்பல் அலைக்கழிக்கப்படுவதை ஒக்கும்: மேலும் அதனால் விளையும் அநீதிக்கு ஓர் எல்லை இராது என்று மெக்குல்லாக் (McCullach) அடிக்கடி கூறி வந்தார். வரி கொடுப்பதற்கு முன்பு இருந்த ஒப்புமை நிலையிலேயே வரி கொடுப்போர் வரி கொடுத்த பின்பும் இருக்க வேண்டும் என்பது அவர் கருத்தாகும். இவ்வரியை ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பது எனக் கருதிய வருக்கு, 9 பென்சுக்கு ஒருவர் பெறுவதை வேறு ஒரு செல்வரை ஒரு ஷில்லிங் கொடுக்கும்படி கேட்பதற்கு யாதொரு முகாந்தரமும் இல்லை எனச் சார்ஜென்டு (Sargeant) கருதுகிறார். சார்ஜென்டு, ‘‘எப்பொழுதாவது ஒரு மருத்துவருக்குப் பணம் கொடுத்திருப்பாரா என்று ஒருவர் ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது,’’ என இதைப் பற்றி சர்ஜோசையா ஸ்டாம்பு விளக்கம் தருகிறார்.

மூலதனத் திரட்சி வளர்வீத வரி முறையினால் ஒரு வேளை பாதிக்கப்படலாம் என்பதே இவ்வரி முறைக்கு எதிரான மற்றொரு வாதமாகும். சேமிப்புக்கு ஒரு முக்கிய காரணம் பெருத்த செல்வத்தை ஈட்டலாம் என்பது. ஆனால், இவ்விருப்பம் ஈடேறாமல் ஒரு வரிமுறை தடுக்குமானால், அதனால் மூலதன வளர்ச்சி தடைபடும். முதல் வளர்ச்சி இருவேறு வகைகளில் தடைபடலாம். கடுமையான வரி விதிக்கும் நாட்டினின்று செல்வர் நீங்கிப் பிறநாடுகளில் குடி புகலாம். இப்போது செல்வம் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருக்குமானால், அதன் தொகை அதிகரிக்கலாம். அதனால், பிற நாட்டிலிருந்து நம் நாட்டிற்கு வரும் செல்வமும் தடைபடலாம். மிகவும் முற்போக்கு அடைந்த தொழில்களையுடைய நாடுகளுக்குப் பிறிதோர் விளைவும் ஏற்படலாம். அதாவது, சேமிப்பு செய்வது குறைந்த வருவாயுடனேயே நின்றுவிடலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகள் அல்லது பிரிட்டன் போன்ற நாடுகளிலிருந்து மூலதனம் எளிதாக வெளியேறாமல் இருக்கலாம். இருப்பினும், ஆண்டுதோறும் அதிகரிக்கும் மூலதனத்தின் தொகை தேய்ந்துகொண்டே வந்து, இறுதியில் இல்லாமலே போய்விடலாம். புள்ளி வல்லுனரான வில்லியம் நியூமார்க்கு (William New March) என்பவர் வளர்வீத வரியைப் ‘பறிமுதல்’ என்றும், முன் யோசனையையும் சீரிய பண்பையும் தண்டிப்பது என்றும், ஒருவன் தனக்காகவும் பிறருக்காகவும் நன்மை செய்வதற்காக வரி

விதிப்பதென்றும் குறிக்கிருர். 1861இல் ஜான் ஸ்டுவர்ட்டு மில் (John Stuart Mill), "ஒரு வளர்வீத வருமான வரி ஒரு படித்தரக் கொள்ளைக்கு (Graduated Robbery) ஒப்பாகும்," என்று கூறினர். மேலும் அவர் குறைந்த வருமானங்களைக் காட்டிலும், கூடுதல் வருமானங்கள்மீது கூடுதலான சதவீதத்தில் வரி விதிப்பது உழைப்பு, சிக்கனம் இவற்றின்மீது விதிக்கப்படும் வரிக்குச் சமானமானதாகும்," என உரைத்தார்.

இவ்வெதிர்வாதங்களுக்கு எதிராக நாம் சொல்லக் கூடியது அண்மைக் காலத்தின் அனுபவத்தைப் பார்க்கும்போது இவ்வித அச்சங்களுக்கு யாதொரு காரணமும் இல்லை என்பதே. வளர்வீத வரியினுல் சேமிக்கும் எண்ணம் வலி குன்ருது. அது யார் யார் நிறைய வருமானத்தை உடையவர்களாக இருக்கிருர்களோ, அவர்களையே பாதிக்கும். ஆனுல், அவர்கள் சிந்தித்துச் செயலாற்றுவதன் மூலம் மட்டுமன்றி, பழக்கத்தினுலும் சேமிக்கிருர்கள். மற்றும், செல்வர்களின்மேல் கடுமையான வரி விதிப்பதால் வறியவர்கள் செலவழிக்கக் கூடிய தொகை பெருகும். அங்ஙனம் பெருகிய வருவாயின் ஒரு பகுதியை அவர்கள் சேமிக்கவும் கூடும். அதனுல் செல்வச் சேமிப்பு அதிகரிக்கும்.

வளர்வீத வரிக்கு எதிரான இன்னெரு வாதம் அவ்வரியைப் பலர் கொடாமல் தவிர்ப்பதே. வரி அதிகமாக அதிகமாக அதனைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளும் அதிகரிக்கின்றன. சிறந்த பொருள் வகைகளின்மீது பிரத்தியேக வரிகளை விதித்தால் அதினின்றும் தப்புவதற்குப் பொய்யான வாக்குமூலங்களைக் கொடுக்கிருர்கள். வாரிசு வரிகளை வளர்வீத அடிப்படையில் விதித்தால், சில சொத்துகளை மறைப்பதன் மூலமாகவும், வாய் மொழியாகச் சொத்துகளைப் பிறருக்குப் பரிசாகக் கொடுத்துப் பராதீனம் செய்வதன் மூலமாகவும் சிலர் வரி கொடாமல் தப்புகின்றனர். சொத்து வரிகள், வருமான வரிகள் இவற்றின்மீது வளர்வீத வீதாசாரத்தில் வரி விதித்தால் வரி கொடுப்போர் பொய்யான வாக்குமூலங்களைக் கொடுத்துத் தப்ப முயல்கின்றனர். இவ்வாறு வரியினின்றும் தப்புவதை ஓரளவு நிருவாக நடவடிக்கைகள் மூலம் சமாளிக்கலாம். பொய்யான அறிக்கைகள் தயாரிப்பதற்குத் துணை நின்றவர்களுக்கும், அல்லது தாமே செய்தவர்களுக்கும் கடுமையான தண்டனைகள் கொடுப்பது இன்றியமையாதது. சம்பந்தப்பட்ட எல்லாக் கணக்குப் புத்தகங்களையும், ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு கட்டளை இடுவதற்கு உகந்த வகையில் அதிகாரங்களை அரசாங்கம் வரி வசூலிக்கும் அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டும். வரிப்பளு அதிகமாக, இச்சமூக துரோகிகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனையும் கடுமையானதாக

இருக்கவேண்டும். இவர்கள் பிறர் நலத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் முறையில் (வரியின் இயல்பு யாதாயினும்) தம் செல்வத்தைப் பெருக்கிக்கொள்கின்றனர்.

வளர்வீத வரி துஷ்பிரயோகம் செய்வதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது எனவும், வரி விகிதத்தை உயர்த்துவதன் மூலமே வரி கொடுப்போரின் செல்வத்தைப் பறிமுதல் செய்ய முடியும் எனவும் கூறப்படுகிறது. வீதாசார வரி முறையைப்போல அன்றி, வளர்வீத வரிமுறை எல்லோருக்கும் புரியக்கூடியதாய் இல்லை என்பது உண்மையே.

இவ்வாட்சேபணைகள் எல்லாம் வளர்வீத வரிக்குப் பொருந்து வனவதல்ல; ஆனால், அக்கொள்கையை எவ்வாறு ஒவ்வொரு வரிக்கும் அனுஷ்டிப்பது என்பதற்குப் பொருந்தும். வளர்வீத வரியைப்பற்றிய எல்லாக் கருது கோள்களையும் நடைமுறைகளையும் ஒரு நோட்டம் விட்டுவிட்டுப் பேராசிரியர் செலிக்மென் பின் வருமாறு கூறுகிறார் :

"ஆகையால் நாம் இவ்விவாதத்தின் முடிவைச் சுருக்கமாக எடுத்துரைத்தால் இவ்வளர்வீத வரியைத் தகுந்த முகாந்திரம் கொடுக்கக்கூடிய ஓர் இலட்சியமாகவும், தனியாரின் ஆற்றலுக் கேற்ப வரிகளை வகுக்கவேண்டும் என்ற கோரிக்கையின் வெளி யீடாகவும் கருதலாம். ஆனால், எவ்வளவு தூரம், அல்லதுஎவ்வகையில் இக்கொள்கையை நடைமுறையில் கடைப்பிடிக்கலாம் என்பதைத் தீர்மானிப்பது சிரம சாத்தியமான விஷயம்."

நடைமுறை வரி நிருவாகத்தில் வளர்வீத முறை ஒரு சில வரி களுக்கே பொருந்தும். இம்முறையைச் சில வரிகளுக்கு மட்டும் அனுஷ்டிப்பதால் வரி முறையையே வளர்வீத முறை என்று கூறலாமா என்பதைத் தீர்மானிப்பது கஷ்டம். ஏனென்றால் ஒரு வரி முறையில் பொருள்களின்மீது விதிக்கப்பட்ட வரிகளும், உடைமை, வியாபாரம், தொழில் இவற்றின்மீது விதிக்கப்பட்ட வரிகளும் அடங்கும். சேமிப்பு முதலீடு இவற்றிற்கும் குந்தகம் வாராத முறையில் வளர்வீத வரியை எங்கெங்குச் சாத்தியமோ அங்கங்கு அனுஷ்டிப்பது ஒன்றே ஒரு நிதி அமைச்சர் செய்யக்கூடியதாகும். ஒரு வரி முறையைப் பற்றித் தீர்ப்புக் கூறும்பொழுது இச்சோதனையை (உரைகல்லை) ஒவ்வொரு வரிக்கும் அனுஷ்டிக்க முடியாது. ஆனால், வரி முறை அனைத்திற்கும் இதை அனுஷ்டிக்கலாம்.

குறிப்பு :

ஐரோப்பிய ஆசிரியர்கள் வளர்வீத வரி என்று கூறுவதையே ஆங்கிலேய ஆசிரியர்கள் படித்தர வரி (Graduated tax) முறை என

நவில்கின்றார்கள். இப்பொழுது நாம் தேய்வு வீத வரிக்கும், டிக்ரஸிவ் (degressive) வரி முறைக்கும் வேறுபாடு கற்பிக்கவேண்டும். டிக்ரஸிவ் வரி முறையில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வருமானம் உடைய வர்களுக்கு ஒரே விகித வரி விதிக்கப்படுகிறது. ஆனால், அதற்குக் குறைந்த வருவாய் உடையவர்களுக்கு முற்றிலும் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது ; அல்லது வருமானத்தில் ஒரு பகுதிக்கு மட்டுமே வரி விதிக்கப்படுகிறது. சுவிட்ஸர்லாந்து நாட்டில் வளர்வீத வரிகள் என்று கூறப்படுபவை சில இவ்வகையைச் சார்ந்தனவாகும். இவ்வாறாக, சூரிச்சு மாநிலத்தில் 500 பிராங்கு வருவாய் உடைய வர்களுக்கு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. 500க்கு மேல் 1500 பிராங்கு வரை வருமானம் உள்ளவர்கள் தங்கள் வருமானத்தில் 2/5 பங்கையும், அடுத்த 3000 வரை வருமானம் உடையவர்கள் தங்கள் வருமானத்தில் ஐந்தில் மூன்று பங்கையும் அடுத்த 4000 வரை வருமானம் உடையவர்கள் ஐந்தில் நான்கு பங்கையும், அதற்கு மேலும் வருமானம் உடையவர்கள் முழுத் தொகையையும் வரியாகச் செலுத்த வேண்டும். (உ-ம்.) 12,500 பிராங்கு வருமானம் உடையவர்கள், 8,400 பிராங்கு வரியாகக் கொடுக்க வேண்டும்.

500	வரி விலக்கு	0
1,000	1/5	200
1,500	2/5	600
3,000	3/5	1,800
4,000	4/5	3,200

இம்முறையில் பெறும் வருமானத்தில் பெரும்பகுதிகள் பறிமுதல் செய்யப்படாமல் தப்புகின்றன. ஆனால், இவ்விதமான வரி முறைக்கு ஒரு ஆட்சேபனை கூறலாம். இவற்றால் கிடைக்கும் வருமானம் வளர்வீத வரியால் கிடைக்கும் வருமானத்தைவிடக் குறைவு. அதனுடன் இதை நடப்பில் கடைப்பிடிப்பதும் சிரம சாத்தியமாய் இருக்கிறது.

தேய்வு வீத வரி என்பது ஒருவரின் சொத்து அல்லது வருமானம் குறையுந்தோறும் வரிவீதம் கூடுவதே. வளர்வீத வரிக்கு நேர் எதிரானது தேய்வு வீத வரி. தேய்வு வீத வரி அநீதியானது. தற்செயலாகவோ அல்லது சிறிதும் சிந்தியாமலோ இவ்வரியை ஒருகால் அரசாங்கம் விதிக்கலாம். உ-ம். உப்பு வரி, ஆள் வரி (Poll tax).

பதினொன்றுமதிகாரம்

வரி விதிப்பு விதிகள்

(The Canons of Taxation)

வரி விதிப்பைப் பொறுத்தவரை அதற்கு வழி காட்டியாக ஆடம் ஸ்மித்து இயற்றிய சிறந்த விதிகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. அவை பொதுவாக விதிகள் என்று கூறப்பட்டாலும், ஸ்மித்து அவற்றைக் கூற்றுகள் (Maxims) என்றுதான் கூறினார். பிட்டு, பீல், கிளாட்ஸ்டன் என்பவர்கள் கொணர்ந்த வரிச் சீர்திருத்தங் களுக்கு அவைகளே அடிப்படை. இப்பொழுதுகூட ஒரு சிறந்த வரித் திட்டத்தை வகுப்பதற்கு அவற்றை முன்மாதிரியாகக் கொள்ளலாம், அவற்றுக்குத் துணையாகப் பல சாதாரண விதிகளும் உண்டு. இவ்விதிகள் நான்கு அமிசங்களை வலிவுறுத்துகின்றன,

அவையாவன : சமத்துவம், உறுதிப்பாடு, வசதி, சிக்கனம்.

1. சமத்துவ விதி (The Canon of Equality) :

"கூடுமானவரையில் தங்கள் ஆற்றலுக்கேற்றவாறு அரசாங் கத்தின் ஆதரவிற்காக ஒரு நாட்டின் குடிமக்கள் எல்லோரும் வரி கொடுக்கவேண்டும்; அதாவது, அரசாங்கப் பாதுகாப்பின்கீழ் தாங்கள் துய்க்கும் வருமானத்திற்கு ஏற்றவாறு வரி கொடுக்க வேண்டும்."

2. உறுதிப்பாட்டு விதி (The Canon of Certainty) :

எவ்வொரு நபரும் கொடுக்கவேண்டிய வரித்தொகை தெளி வாகவும், எதேச்சாதிகாரமின்றியும் இருக்கவேண்டும். வரித்தொகை கட்டவேண்டிய காலம் கொடுக்கவேண்டிய முறை, கொடுக்க வேண்டிய தொகை இவையனைத்தும் வரி கொடுப்போருக்கும், பிறருக்கும் தெளிவாகவும்ஐயத்திற்கு இடமின்றியும் இருக்க வேண்டும்.

3. வசதி விதி (The Canon of Convenience) :

ஒவ்வொரு வரியும் அது செலுத்தப்படவேண்டிய காலம், அல்லது செலுத்தப்படவேண்டிய விதம் இவை, வரிசெலுத்து வோருக்குச் சௌகரியமான முறையில் விதிக்கப்பட வேண்டும்.

4. சிக்கன விதி (The Canon of Economy) :

"அரசாங்கத்தின் கருவூலத்திற்குக் கொணரும் தொகையைக் காட்டிலும் குறைவாகவே மக்களிடமிருக்குமாறு ஒவ்வொரு வரியும் அமைக்கப்படவேண்டும்." வரி வசூலிப்பதற்கு அதிகம் செலவு பிடிக்கக்கூடாது. இவ்வரியால் தொழிலுக்கோ சேமிப்புக்கோ ஊறு ஏற்படக்கூடாது ; வரி செலுத்துவோருக்குத் தண்டனையோ, தொல்லையோ, எரிச்சலோ ஏற்படாதவாறும் இருக்க வேண்டும்.

இவ்விதிகளில் தலையாயது முதலாவது விதி; அதாவது, சமத்துவ விதி. இவ்விதி நீதியைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்விதிதான் அடிப்படையானது; இவ்விதி வரித்திட்டம் அனைத்திற்கும் பொருந்தும். "கொடுக்கவேண்டும்" என்ற சொற்றொடரால் வரி விதிப்பதற்கான அரசியல் காரணமும், 'அரசாங்கப் பாதுகாப்பு' என்ற சொற் றொடரால் அரசாங்கம் மக்களுக்கு ஆற்றும் சேவைகளும் புலனு கின்றன. மேலும், ஆற்றலுக்கேற்றபடி கொடுப்பது என்பதால் வரி எவ்வகையில் நேர்மையாகப் பகிரப்படவேண்டும் என்பதும் தெளி வாகிறது. ஏனைய மூன்றும் போதுமான வருமானத்தைப் பெறுவ தற்காக ஒவ்வொரு வரிக்கும் தனித்தனியே அனுஷ்டிக்கப்பட வேண்டிய பொருளியல் விதிகள். அவற்றை நிருவாகக் கட்டளைகள் எனலாம்.

கொள்கை மோதல் (Conflict of Principles) :

சில வேளைகளில் நடப்பில் இந்நான்கு கொள்கைகளையும் தமக்குள் முரணில்லாது ஒன்று படுத்துவது கடினமாக இருக்கிறது. எடுத்துக்காட்டாகச் சுங்கவரி வசதியான வரிதான். இருந்தாலும், அது நேர்மையானது என்றோ, அல்லது சிக்கனமானது என்றோ கூற இயலாது. வருமான வரி சமத்துவ விதிக்கு ஒத்திருக்கிறது. ஆனால், வசதி விதிக்கு முரணாய் இருக்கிறது. இக்கொள்கைகளிடை முரண்பாடு காணப்பட்டால் சிறந்தன அல்லாதவற்றை ஒதுக்கி, மிகச் சிறந்த விதியை ஏற்றுக்கொள்வது வழக்கமாகும். வரி விதிக்க வேண்டிய எல்லாப் பொருள்களும் தீர்ந்து, அரசாங்க நெருக்கடி காரணமாகப் புதிய வரிகளுக்குத் தேவை ஏற்பட்டால், பொருத்த மல்லாத பொருள் மீதும் வரி விதிக்கத்தான் வேண்டும். சிக்கனமாக

இருந்தும், தன்னுடைய சுதந்தரத்தைப் பாதுகாத்துக்கொள்ளப் போரில் இறங்க வேண்டுவதற்காகப் பெரிதும் கடன் வாங்க நேரிட்டால், அதனுல் வாழ்வுக்கு இன்றியமையாத பொருள்களின் மீதும் வரி போட்டால், அக்குடியரசின் விவேகத்தைக் குறை கூறக்கூடாது. தங்கள் நாடுகளில் கடல் புகாது இருக்கவும், தாங்கள் தொடர்ந்து வாழ்வதற்கும் அதிகமான செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ள ஹாலந்து, (Holland) ஸீலந்து (Zealand) போன்ற நாடுகள் உள்ளன. வரிப்பளுவை இச்செலவுகளே அவற்றின் வரிப்பளுவை அதிகரிக்கக் காரணங்களாகும்.''—(ஆடம் ஸ்மித்து). பெருகிக்கொண்டு போகுல் செவைச் சமாளிப் பதற்குப் புதிய வரித் துறைகளை கண்டுபிடுக்க வேண்டிய அவசியம் ஒரு நிதியமைச்சருக்கு உண்டு. அரசியல் செல்வாக்குள்ள வரி கொடுப்போரிடமிருந்து எதிர்ப்பின்றி அதிக வருவாயை ஒரு வரியின் மூலம் பெற முடியும் என்றுல், அவ்வரிக்கு ஒரு சிறந்த வரிக்கு இருக்கவேண்டிய எல்லாப் பண்புகளும் இருக்கின்றன எனலாம். மறைமுக வரிகளெல்லாம் இதையே அடிப்படையாகக் கொண்டிருக் கின்றன. மறைமுக வரிக்குச் சிறிது எதிர்ப்புத்தான் இருக்கும். மனு தம் நீதி நூலில் ''அட்டை, கன்றுக்குட்டி, தேனீ முதலியவை தங்கள் ஆகாரத்தைச் சிறிது சிறிதாகச் சேமிப்பது போல, அரசனும் வரியைச் சிறிது சிறிதாக வாங்கவேண்டும்'' என்று கூறுகின்றுர். நெருக்கடியான காலங்களில் தன்னுடைய குடி மக்களைத் தன் சக்திக்கேற்றவாறு சிறந்த முறையில் பாதுகாத்தால் வருமானத்தில் அல்லது சொத்தில் நாலில் ஒரு பங்கைஅவன் வரியாகப் பெறலாம். இருந்தாலும், மிகுந்த பேராசையினுல் தனக்கு ஆணிவேராக உள்ளதையோ அவன் அறுக்கக்கூடாது.'' என்று கூறியிருக்கிருர். அதாவது அளவுக்கு மீறிய வரிகளை விதித்து அரசன் குடிமக்களின் அதிருத்திக்கு ஆளாகக்கூடாது.

திறனுய்வு :

இக்கூற்றுகளைச் சிலர் அளவுக்கு மீறிப் புகழ்கிருர்கள். சிலர் கடுமையாகத் தாக்குகிருர்கள். பேராசிரியர் பிண்டிலே விர்ராஸ், ''வரி விதிப்புப் பற்றிய இக்கூற்றுக்கள் அரசாங்க நிதி பற்றிய எவ்வகையான விளக்கத்திற்கும் ஓர் இன்றியமையாத உறுப்பாகும்'' என்று கூறுகிருர். கோன் (Cohn), என்பாரும் வாக்கர் (Walker) என் பாரும் நேர்மையற்ற முறையில் அழிவு பயக்கத்தக்க திறனுய்வுகளைக் கூறினுலும், ஸ்மித்தின் விதிகளைச் சிறந்தவை என்று பாராட்டுவது பொருத்தமேயாகும். இக்கால ஆசிரியர்கள், சிறப்பாகக் கார்னியர் (Garnier), ரோஷர் (Rosher), ரிக்கா சாலர்னே, (Ricca Salerno), வாக்னர் (Wagner) போன்றவர்கள், ஒரு சிறந்த வரி

முறையின் சிப்பியல்புகளைப் பற்றிய விதிகள் அல்லது கட்டளைகளை அறுதியிடுவதற்கு முனைந்தனர். இருப்பினும் இக்கொள்கைகளை ஆடம் ஸ்மித்துத் தெளிவான எளிய விதிகளில் சுருக்கிக் கூறியது போல எந்த ஒரு மேதையும் கூறியதில்லை. அவருடைய பரந்த உள்ளம் முந்திய ஆராய்ச்சிகளுக்கு முற்றும் ஒரு புதிய திருப்பத்தைக் கொடுத்தது. அவருக்குப் பின் வந்தவர்கள், இக்கொள்கைகளைத் திருத்துவதிலோ அல்லது அவை நிதி விஞ்ஞானத்தில் வகிக்கும் உயரிய இடத்திலிருந்து அகற்றுவதிலோ கணிசமான அளவு வெற்றி பெறவில்லை.''

வாக்கர் கூறுவதாவது, ''ஆங்கிலேயப் பொருளியல் அறிஞர்கள் இக்கூற்றுகளுக்கு அதிக முக்கியத்துவம் தந்திருக்கின்றனர். அவை மிக முக்கிய உண்மைகளைத் தம்முள் கொண்டிருப்பதாகக் கருதி அவற்றை, மீண்டும் மீண்டும் மேற்கோளாகக் காட்டியிருக்கின்றனர். இருப்பினும் அவற்றை ஒருவர் ஆராய்வாராகில், அவை மிகச் சாமானியமானவை (Trivial) என்பதைக் காண்பார். மிக்க புகழ் வாய்ந்த முதலாவது விதியை தூளாகப் போகாவண்ணம் சிறிய சோதனைக்கு உட்படுத்துவதும் முடியாது'' ''ஸ்மித்தின் விதிகள் சாதாரணமானவை என்பது உண்மையே. ஆனால், பொது விதிகள் வேறு எவ்வகையிலும் இருக்க முடியாது,'' என்பது பாஸ்டபிள் கூற்று.

''இவ்விதிகள் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேலாகவே பொருளியல் சிந்தனைக்கும், போதனைக்கும் உண்மையில் பாராட்டத்தக்க சேவைகள் செய்திருக்கின்றன. தற்காலத்திய மிக விரிவான போதனைகளின் சாரம் ஆடம்ஸ்மித்தின் தெளிவான சொற்றொடர்களில் உண்மையில் காணக்கிடக்கின்றது என்று அடிக்கடி பேசப்படுகிறது. ஆனாலும் தற்காலத்திய நம் சிக்கல்களிடை அரசாங்கம், மனிதன், இவர்களுடைய கடமைகள் யாவும் நான்கு வாக்கியங்களுள் அடங்கியுள்ளன என்று வலியுறுத்த முடியாது. அமெரிக்கா செல்ல ''மேற்கே திரும்பி நேராகச் செல்லுங்கள்'' என்ற சிறந்த அறிவுரையைக் கொலம்பஸ் சொல்லலாம். ஆனால், அது நியூயார்க்கைக் கண்டுபிடிக்க முனையும் மாரிடானியாவுக்குத் தெளிவான வழி சொல்லியதாகாது.''

(குறிப்பு : மாரிடானியா ஆப்பிரிக்காக் கண்டத்தில் உள்ள ஒரு நாடு)

''இந்நாளில் சொல் ஒற்றுமை மட்டும் நமக்குத் தேவைப்படவில்லை ; நமக்குத் தேவைப்படுவது நிதானமாகப் பரந்த பரிசீலனையே யாகும். கொள்கைகளின் தொகையைக் குறைப்பதைவிட,

அவற்றின் தொகைகளைப் தற்காலத்திய நடைமுறைக்குப் பிரயோகிப்பதற்கு ஏற்ற வகையில் பெருக்குவதே சாலும். இவ்விதிகளில் விவாதத்திற்கு உரியது ஒன்று மில்லாவிடினும் நம்முள் நிற்கும் பல கடினப் பிரச்னைகளுக்குத் தீர்ப்புக்காணும் முயற்சிக்கு இவை போதுமானவை ஆகா (சர் ஜோஸையா ஸ்டாம்பு) இருந்தாலும் நமக்கு நம் சிற்றறிவுக்குப் பொருள் புலப்படுகின்ற வகையில் தெளிவாக உண்மைகளைக் கூறியதொன்றே இவ்விதிகளிடத்துக் காணப்படும் நல்ல அமிசங்களாகும்.''

குறிப்பு :

இவ்விதிகளை முற்றும் மேற்கோளாகக் கொடுக்கவில்லை. முழு விவரமும் ''நாடுகளின் செல்வம்'' (Wealth of Nations) என்னும் நூலின் ஐந்தாம் பகுதியில், இரண்டாம் அதிகாரத்தில் இரண்டாவது பிரிவில் பரக்கக் காணலாம்.

பிற விதிகள் :

ஆடம் ஸ்மித்துக்குப் பின்னர் வந்த ஆசிரியர்கள் கீழ்க்காணும் விதிகளையும் ஒரு நல்ல வரி முறைக்கு வேண்டுமென்று இணைத்துள்ளார்கள்.

5. உற்பத்தித்திறன் விதி (The Canon of Productivity) :

புதிதாக வரி ஒன்று விதிக்க வேண்டுமெனில், அது போதுமான வருவாயைக் கொடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும். ஆகையால், அதிக காலமும் செலவும் பிடிக்கும் பல சிறு வரிகளை வசூலிப்பதை விட ஒரு பெருவரியை விதித்து அதிகமான வருவாயைப் பெறுவது நல்லது. இக்கொள்கையை ஆடம் ஸ்மித்தும் ஒப்புக்கொண்டு பிரிட்டிஷ் சுங்கத் தீர்வைகளைத் திருத்துவதற்கு யோசனைகள் கூறினர். பிறகு அது ஒப்புக்கொள்ளப்பட்டு, ஏராளமான சுங்கத்தீர்வைகள் குறைக்கப்பட்டுத் திருத்தப்பட்டன.

6. நெகிழ்ச்சி விதி (The Canon of Elasticity) :

வரி வசூலுக்கு அல்லது நிருவாகத்திற்கு ஆகும் செலவைக் கூட்டாமல், நெருக்கடியான காலக்களில் வருமான அதிகரிப்புக்கு அவசியம் ஏற்படுவதைச் சமாளிப்பதற்குச் சில வரிகளாவது தங்கள் வீதத்தைக் கூட்டிய அளவில் கூடுதலான வருவாயைக் கொடுக்கும் முறையில் இருக்க வேண்டும். இவ்வகை வரிகள் ஒவ்வொரு வரி முறையிலும் இடம் பெற வேண்டும். செல்வம் அல்லது மக்கள் தொகை அதிகரிக்குந்தோறும் இயல்பாகவே வரியின் தொகையும்

அதிகரிக்குமானுல், அதையும் இத்தலைப்பிலேயே சேர்க்கலாம். நெகிழ்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டு வருமான வரி. நெகிழ்ச்சி யற்ற (Inelastic) வரிக்கு உதாரணம் நிலவரி.

7. எளிமை விதி (The Canon of Simplicity) :

சாதாரண அறிவுடையோருக்கும் தெளிவாக விளங்கக்கூடிய விதத்தில் வரி முறை எளிமையாக இருக்க வேண்டும். வேறு வகை யாகச் சொன்னுல், வரி செலுத்துவோருக்கும், வரி நிருவாகஸ்தருக் கும் வரி விதிப்பினுல் ஏற்படும் அசெளகரியம் மிகக் குறைவாக இருக்க வேண்டும். வருமான வரிக்கு எதிரான திறனுய்வுகளில் தலையாயது அதன் சிக்கலே. விற்பனை வரியின் சிறந்த அமிசம் அதன் எளி மையே. வரி முறையில் இவ்வெளிமையைப் புகுத்துவது எளிதன்று. ஆயினும், சிறிது உன்னிப்பாகச் சட்டங்களை வகுப்பதால் வரிக் குழப்பத்தைச் சிறிது குறைக்கலாம்.

8. பல் வகைமை விதி (The Canon of Diversity) :

ஒரு வரி முறை பல்வேறுபட்ட வரிகளைக் கொண்டதாய் அமைய வேண்டும். வரிகளின் தொகையை அளவுக்கு மீறி அதிகரிப்பதை யும், ஒரே வரியை நம்பியிருப்பதையும் தவிர்க்க வேண்டும். முக்கிய மான வரிகளில் சிலவற்றைத் தேர்ந்தெடுப்பது எளிய காரியமே. எடுத்துக்காட்டாக, ஒரு வரி முறையில் சில நேர்முக, மறைமுக, வளர்வீத வரிகளும் இருக்க வேண்டும். அதே சமயம் அவற்றினின்று கிடைக்கும் வருவாயும் போதுமானதாய் இருக்க வேண்டும்; டாக்டர் டால்டன் கூற்றுப்படி "வரி வருமானத்தின் பெரும்பகுதிக்குச் சில திரண்ட வரிகளையே நம்யிருப்பதிலேதான்" விவேகம் இருக்கிறது.

9. நெகிழ்வு விதி (The Canon of Flexibility) :

அரசியல் சட்டத்தின்கீழ், வரி முறையில், மாறுதல்கள் எளிதில் செய்யக்கூடியனவாய் இருக்க வேண்டும். அரசியல் அமைப்பில் விரிவான மாறுதல்களின்றி, காலத்துக்கேற்ப, நிதி மாறுதல்களைக் கொணரக்கூடியதாய் அரசியல் சடடம் இருக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, இங்கிலாந்தில் மரண வரிகள் பாராளுமன்றத்தில் ஒரு சாதாரண மசோதா இயற்றப்படுதல் போன்றே புகுத்தி நடைமுறை யில் கொண்டு வரப்பட்டது. ஆனுல், பல ஆண்டுகள் மத்திய அர சாங்கம் நேர்முக வரிகளை விதிக்க முடியாதவாறு அமெரிக்க அரசிய லமைப்பு இருந்தது. இதற்காக அரசியல் அமைப்பைத் திருத்துவது இன்றியமையாததாயிற்று. புது வரிகளை விதிக்க வேண்டுவதன் நிமித்தம் பல அமெரிக்க நாடுகள் தங்கள் அரசியல் சட்டங்களைத் திருத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றன. அரசியல் சட்டத்

தைத் திருத்தாது வரி முறையைத் திருத்த முடியாமல் இருக்குமானல், வரிகளில் மாறுதல்களைச் சட்டசபைகள் கொணர முடியாது. இதனுல், வரி கொடுப்போரின் நலன்கள் பாதுகாக்கப்படாமல் போகின்றன. அதனுல் வரிப்பளுவைப் பகிர்ந்து அளிப்பதில் நீதியும் இல்லாமல் போகின்றது. இறுக்கமான வரி முறையால் அநீதியும் ஏற்றத் தாழ்வுமே விளைகின்றன.

மனுவின் வளர்வீத வரி பற்றிய கூற்று :

ஆடம் ஸ்மித்துக் காலத்திற்குச் சுமார் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்த்த இந்திய ஞானியாரும் அறநூல் ஆசிரியருமான மனுவின் விதியையும் இவ்விடம் தருதும். "வரிப்பளுவைச் சமமாகப் பகிர்வதால் விளையும் துன்பத்தைவிட அவற்றின் பளுவை ஏற்றத்தாழ்வான முறையில் பகிர்வது பெருந்தீங்கை விளைவிப்பதாகும். ஏனெனில், அதிக வரி செலுத்துவோர் அடையும் துன்பம், மிகக் குறைந்த அளவு வரி செலுத்துவோர் பெறும் சந்தோஷத்தைவிட அதிகமானது. வரிப்பளுவைச் சமமாக்குவதற்கு அது ஒவ்வொரு நபர் மீதும் சம அளவு துன்பத்தைத் தரும் வகையில் வகுக்க வேண்டும். இதனை எண்களுக்கு உரிய வீதாசாரத்தாலேயே (Numerical Proportion) கொணர்தல் முடியாது. ஆண்டொன்றிற்கு 100 ரூபாய் வருமானம் உடைய ஒருவரின் வருமானத்தில் ஐந்தில் ஒரு கூற்றையோ அல்லது பாதியையோ வரித்தொகையாகப் பெறுவதால் அவரடையும் துன்பம், ஆண்டொன்றிற்கு 1000 ரூபாய் வருமானம் உடையவரிடமிருந்து அதேயளவு வரியைப் பெறுவதைக்காட்டிலும் பெருந்துன்பத்தைத் தருவது. ஆண்டு ஒன்றிற்குப் பதினுயிர ரூபாய் வருமானம் உடைய வரிடமிருந்து அதேயளவு (1/5 அல்லது 1/2) வரியைப் பெறுவதைக் காட்டிலும், ஆண்டொன்றிற்கு 100 ரூபாய் வருமானம் உடைய ஒருவரின் வருமானத்திலிருந்து $\frac{1}{5}$ அல்லது $\frac{1}{2}$ பங்கை வரியாகப் பெறுவது இன்னும் பெருந்துன்பத்தைத் தரும்."

பன்னிரண்டாமதிகாரம்

வரி விதிப்பதன் நோக்கம்

வரி விதிப்பைச் சரியெனக் காட்டுதல்

(The Purpose of Taxation—Justification of Taxation)

அரசாங்க அலுவல்கள் சமுதாயத்தில் உள்ள எல்லோரின் நலனுக்காகவும் நடத்தப்படுவதால், இவற்றை மேற்கொள்வதால் அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவைச் சரிக்கட்டுவதற்கு, ஒவ்வொருவரும் ஒரு தொகையை வரியாகக் கொடுக்கவேண்டுமென்பது பகுத்தறிவுக்கு ஒத்தது. எல்லோருடைய வருமானமும் சமமாய் இருந்து. அவர்களுடைய சூழ்நிலைகளும் சமமாய் இருக்குமானல், ஒரு நேர்மையான வரி முறையில் ஒவ்வொருவரிடமிருந்தும் சமமான பணத்தை வரியாக வசூலிக்கலாம் என்பது பொருந்தும். ஆனல், இக்காலச் சமுதாய அமைப்பில் வருமானத்தைப் பொறுத்த மட்டிலன்றி, சூழ்நிலைகளிலும் பெரிய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இதன் விளைவாகப் பெருத்த இடர்ப்பாடும், வாத எதிர்வாதங்களும் தோன்றி இருக்கின்றன. இவற்றை விளக்கப் பல கருதுகோள்களும் எழுந்துள்ளன. இவற்றுள் சில, பல நாடுகளிலும் யாதாகிலும் ஒரு வடிவில் ஏதாவது ஒரு காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன.

1. வரி விதிப்புப் பற்றிய நிதிக்கருதுகோள் (The Financial Theory of Taxation) **:**

இக்கருதுகோளைப் புரிந்துகொள்வது மிகவும் எளிது; ஏனெனில், இக்கொள்கை வரி விதிப்புக்கு எந்த ஒரு இறுதி நோக்கத்தையும் கற்பிக்கவில்லை. இக்கருதுகோளை விளக்குபவர்கள் கருத்துப்படி, அரசாங்கத்திற்குத் தேவைப்படும் நிதியைத் திரட்டுவதற்கு வரி ஒரு கருவியேயன்றி வேறன்று. இக்கருதுகோளில் அரசாங்கச் செலவின்

நோக்கங்களுக்கு இடமில்லை. அரசாங்கச் செலவின் நோக்கங்களை ஆட்சியாளர்கள் முடிவு செய்கின்றனர்கள். வேண்டிய பணத்தைத் விரைவாகவும் எளிதாகவும் பெறுவதே நிதி அமைச்சரின் வேலை. அரசாங்கம் 80 கோடி ரூபாயைப் போர்க்கப்பல்கள் கட்டுவதற்கோ, கல்விக்கோ அல்லது வயது முதிர்ந்தோர் உபகாரச் சம்பளங்களுக்கோ செலவிடலாம். இந்நோக்கங்கள் பொருளாதார ரீதியில் விரும்பத் தக்கனவாகவும் இருக்கலாம், விரும்பத்தகாதனவாகவும் இருக்கலாம், எவ்வாறுயினும், வரியின் தன்மை மாறுவதில்லை. வரியெனப்படுவது கூடிய வரை, வரி கொடுப்போரிடமிருந்து குறைந்த அசௌகரியத் துடன் பணத்தைப் பெறுவதற்காக உபயோகிக்கப்படும் ஒரு கருவியே. இக்கொள்கை சில சமயம் வரி முறையில் எரிச்சல் கருதுகோள் (Cynical Theory of Taxation) எனக் கூறப்படுகிறது. இதற்கு அடிப்படை பிரெஞ்சு அமைச்சர் கோல்பர்ட்டின் கூற்று. அவர், ''மிகக் குறைந்த கூப்பாட்டுடன் வாத்தின் இறகுகளைப் பிய்க்க வேண்டும்,'' என்று கூறினர்.

திறனாய்வு :

கூச்சல் இடுவோரின் வலிவைக்கொண்டே நிதியமைச்சர் ஒரு வரியால் ஏற்படும் அசௌகரியத்தின் அளவைக் கணக்கிடக்கூடும். ஆனல், பெருங்கூச்சல் இடுகிறவர்கள் வரியால் மிகத் துன்புறுவோர் அல்லர். வரியைப்பற்றிய அறிவு விளக்கத்தோடு கூடிய கருத்து இல்லாதவிடத்து, வரி விதிக்கும் இலாக்காவின் மனப்பான்மை எங் கெங்கு எதிர்க்கும் ஆற்றல் மிகக் குறைவாய் உள்ளதோ, அங்கங்கே மிக அதிகமான வரி விதிப்பதாய் இருக்கலாம். இது நேர்மையைப் புறக்கணிப்பதாக முடியும், இவ்விதமான சூழ்நிலையிலிருந்து எல்லா விதமான கெடுதல்களும் தோன்றக்கூடும். வரி விதிப்பும் அதன் நோக்கங்களும் சரியானபடி ஆராயப்படாத நாள்களில் இவ்வகைக் கேடுகள் தோன்றின.

2. வரி விதிப்பைப் பற்றிய ஆதாயக்கருதுகோள் (The Benefit or Quid pro quo Theory of Taxation)

இக்கருதுகோளின்படி அரசாங்கம் அல்லது ஒரு ஸ்தல ஸ்தாபனம் ஒரு தனிப்பட்ட வரி செலுத்துவோருக்குச் செய்யும் சேவைகளின் அளவுக்கு ஏற்றவாறு செலுத்தப்படும் தொகையே வரியெனப்படுவ தாகும். பிரபுவுக்குச் செய்ய வேண்டிய நிலமானியச் சேவைகளுக்குப் (feudal services) பதிலாகப் பணமாகச் செலுத்தும் பழக்கம் ஏற்பட்ட காலத்தில் இக்கருத்துத் தோன்றியிருக்கக்கூடும். மேலும், வரி விதிப்பதனல் சமூகத்திற்கு என்னென்ன பலன்கள் விளைகின்றன என் பதையும், வரி விதிப்பு நீதி முறைக்கு ஒத்ததாய் உள்ளதா என்பதை

யும் இக்கருதுகோள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாததில் நிதிக் கருதுகோளை ஒத்திருக்கிறது. மேலும், இக்கருதுகோள் எவ்விதச் சீர்திருத்த அமிசமும் இல்லாதது. ஆனால், இக்கருதுகோளிற்கும் முந்திய கருதுகோளிற்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், இக் கருதுகோள் வருமானத்தை முற்றும் பரிசீலனை செய்வதோடு அமை யாது, தனிப்பட்டவர்கள் செலுத்தும் வரித்தொகைக்கும், அதற்குக் கைம்மாருக அவர்கள் அடையும் ஆதாயத்திற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்த முயல்வதேயாகும்.

திறனாய்வு :

இக்காலச் சூழ்நிலைக்கு இவ்வாதாயக் கருதுகோள் முற்றிலும் பொருந்தாது. இக்கருதுகோளை ஒப்புக்கொண்டால், இது விபரீத மான சில முடிவுகளில் கொண்டுபோய் விடும். எடுத்துக்காட்டாக, 50,000 ரூபாய் ஓர் ஆண்டின் வருமானமாக உடையவர் தம் வருமா னத்தில் 50 சத வீதத்திற்கு மேல் நேர்முகமாகவும், மறைமுகமாக வும் வரி செலுத்தினால், ஆண்டொன்றிற்கு 1,000 ரூபாய் வருமானம் உடையவர் தம் வருமானத்தில் 15 சத வீதத்திற்கும் குறைவாக வரி செலுத்துகிறார். இதிலிருந்து பெருந்தொகையை வரியாகச் செலுத்துபவர் அரசாங்கத்திடமிருந்து அதற்கு ஒப்பாக அதிகமான சேவைகளைப் பெறுகின்றார் என்றோ, அல்லது ஆண்டொன்றிற்கு 1,000 ரூபாய் வருமானமாக உடையவர், தாம் வரி செலுத்துதற்குத் தக்க சேவைகளைப் பெறுகின்றார் என்றோ கூற முடியாது. ஆனால், நாம் மிகக் குறைந்த வருமானம் உடையவர்களை எடுத்துக்கொண் டால், (உதாரணமாக, 100க்கும் 500க்கும் இடைப்பட்ட வருமான முடையோர்) அவர்கள் செலுத்தும் வரித்தொகைக்கும் அதற்குக் கைம்மாருக அடையும் ஆதாயத்திற்கும் இடையே அத்துணை வேறு பாடு இல்லையென்பதை அறிகிறோம். மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்கள் அடையும் அரசாங்கச் சேவைகளின் மதிப்பு, பொது வாக, அவர்கள் செலுத்தும் வரித்தொகையைவிடக் கூடுதலாகவே இருக்கிறது.

ஆதாயக் கொள்கை நடைமுறைக்கு ஒவ்வாதது.

ஆதாயக்கொள்கை இயல்பானதாய் இருந்தாலும், நடைமுறைக்கு ஒவ்வாதது. "முதலில் ஒருவர் விரும்பினால் அவர் அடையக்கூடிய ஆதாயத்தின்பேரில் வரி விதிப்பதா வேண்டாவா என்பதையும், அல்லது பயன்படுத்திக்கொண்ட ஆதாயத்தின்பேரில் மட்டும் வரி விதிப்பதா என்பதையும் தீர்மானிக்க வேண்டும். ஏனெனில், இலவச நூல் நிலையத்தை உபயோகிக்காதவர் வரி கொடுக்க வேண்டுவதில்லை என்றால், அதை வரி முறை என்று கூறுவதைவிட, 'கூட்டுறவுப்

படிப்பு ' என்று கூறுவது பொருந்தும். (சர் ஜோசையா ஸ்டாம்பு). வசதியாக இருப்பவர்களைப் போன்று, ஏழைகள் தாங்கள் பெறும் ஆதாயங்களுக்காக வரி செலுத்தக்கூடிய நிலையில் இல்லை ; அவர்களை வரி கொடுக்கும்படி கட்டாயப்படுத்தினால் அவர்கள் அவ்வாதாயங்களை இழக்கத் துணிவார்களேயல்லாது, வரி செலுத்தச் சம்மதிக்க மாட்டார்கள். உ-ம். கட்டாய ஆரம்பக் கல்வி. ஏழைக் குழந்தைகளைப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டும்படி நிர்ப்பந்தித்தால், அவர்களுள் பலர் (சில சமயம் எல்லோருமே), கல்வியை விட்டுவிடத் தயாராய் இருப்பார்கள். ஏனெனில், அவர்கள் சம்பளம் கட்டக்கூடிய நிலையில் இல்லை. ஆனால், இதனால் செல்வச் சீமான்களுக்கு எவ்வித முட்டுப்பாடுகளும் இல்லை. மேலும், பாஸ்டபிள் கூறுவது போல, " உயிர், உடைமைப் பாதுகாப்பு என்பன போன்ற குறிப்பிட்ட குறுமச் (Minimum) செயல்களை மட்டும் அரசாங்கம் மேற்கொண்டால், உயிர் பாதுகாப்புக்காக எல்லோருமே சமமான அளவு வரியைக் கொடுக்கவேண்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. செல்வரின் உயிரைப் பாதுகாப்பதற்கு ஆகும் செலவே எளியவரின் உயிரைப் பாதுகாக்கவும் ஆகும். உடைமையைப் பொறுத்த வரை, அதனைக் காக்கும் செலவு, அதன் பெறுமானத்திற்குத் தக்கவாறு மாறும் என நம்புவதற்கு யாதோர் ஆதாரமும் இல்லை. அதே போல, பெருஞ்செல்வம் படைத்தவர்களிடமிருந்து குறைவாகவே வரி வசூலிக்க வேண்டும். வணிகக் கொள்கைகளின்படி, சாமான் அதிகம் வாங்குவோருக்குச் சிறிது கழிவு (Allowance) கொடுக்கவேண்டும்."

ஸ்தல ஸ்தாபன முறையில் ' ஆதாயம் '

ஒரு ஸ்தல ஸ்தாபனத்தின் நிருவாக எல்லை குறுகியதாக இருக்கும் பொழுதும், வரி செலுத்துவோர் நெருக்கமாக இருக்கும் பொழுதும், ஆதாயக் கொள்கை முக்கியமாகக் காணப்படுவது தடுக்கவொண்ணாதது. ஒரு நகரத்தின் குடிமக்கள் என்ற முறையில் தாம் செலுத்தும் ஸ்தல வரிகளைப் பொழுது போக்கிற்கான இடம், பூங்கா, அல்லது நகராண்மைக் கழக மண்டபம் என்பவற்றோடு இணைத்துப் பார்ப்பது, தாங்கள் அரசாங்கத்திற்கு இராணுவச் சேவைக்காகவோ, பிற நாட்டில் நம் தூதர் செய்யும் சேவைக்காகவோ வருமான வரி செலுத்துவதோடு இணைப்பதைக்காட்டிலும், மிகவும் எளிது. ஆனால், இக்கருத்து மேலெழுந்த வாரியானது. தனிப்பட்டவர் கொடுக்கும் வரித் தொகைகளைத் தனிப்பட்டவர்கள் அடையும் ஆதாயங்களுடன் இணைக்க முயல்வது சாத்தியமானதன்று. வசதி படைத்தவர்கள் ஒரு நகரத்தின் விளையாடும் இடங்களை உபயோகிப்பதில்லை. ஆயினும், அவற்றைப் பராமரிக்க ஆகும் செலவில் அவர்களும் பங்கு கொள்கின்றார்கள். மேலும், அவர்கள் ஏழைகளின் துன்ப நிவாரணத்திற்

G—5

காக வரி கொடுக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதினின்றும் யாதொரு பயனையும் அடையவில்லை. இவ்வாறு "ஆதாயங்கள் இடிச்செறிவு பெற்றிருப்பதாலேயே தனிப்பட்டவர்களுள் ஒவ்வொருவரும் செலுத்தவேண்டிய அடிப்படையில் இவ்வாதாயங்கள் மதிப்பீடு செய்யப்படவேண்டும் என்ற அவசியம் இல்லை. நிலைமையைக் கூர்ந்து கவனிக்குந்தோறும், இதற்கும், தேசிய நிதிக்கும் யாதொரு வேறுபாடும் இல்லை என்பதை உணர்கிறார்கள்."—(சில்வர்மென்)

வரி பற்றிய ஆதாயக்கோட்பாட்டில் எவையேனும் நல்ல அமிசங்கள் இருக்குமானால், அவை பின் கூறப்படும் சில காரணங்களால் வலுவிழக்கின்றன. முதலாவது, ஓர் ஊரில் செய்யப்படும் சேவைகளின் அனுகூலங்கள் எல்லாம் அவ்வூராருக்கு மட்டும் பயன்படவில்லை. எடுத்துக்காட்டாக, சுகாதாரம், ஆரோக்கியம் இவற்றிற்காக ஸ்தல ஸ்தாபனத்தார் செய்யும் செலவு, அத்தலத்திற்கு மட்டுமன்றி, நாட்டிற்கே நன்மை பயப்பதாகும். இரண்டாவது, ஸ்தல ஸ்தாபனத்தின் எல்லையும் மக்கள் தொகையும் வரவரப் பெருகிக் கொண்டே வருகின்றன. ஒரு சிறிய பட்டணத்தில் குறிப்பிட்ட வரிகளையும் ஆதாயங்களையும் இணைப்பதே அசாத்தியமாக இருக்கையில், அவற்றின் எல்லைகள் விரியுந்தோறும், அவற்றின் நடவடிக்கைகள் அதிகரிக்குந்தோறும், வரிகளையும் ஆதாயங்களையும் இணைப்பது இன்னும் மிக்க கடினமாகிறது.

முடிவு :

ஆதிகாலத்தில் அரசாங்க வரி விதிப்பில் ஆதாயக் கொள்கை பற்றிய கருதுகோளுக்கு வழி இருந்தது. ஆனால், இக்கருதுகோளை இக்காலத்தில் நடைமுறையில் பிரயோகிப்பது மிகவும் கடினம். அரசியல் அறிஞர்களும், பொருளியல் அறிஞர்களும் வரியின் நோக்கம், உண்மையான சிறப்பியல்பு இவை பற்றித் தம்முள் மாறுபட்டாலும், இக்காலத்து நிதி முறைகளுக்கு ஆதாயக் கருதுகோள்மட்டும் போதாது என்ற முடிவை ஒப்புக்கொள்கின்றார்கள்.

சமூக அரசியல் கருதுகோள்கள்

(The Socio-Political Theories)

சமூக அரசியல் கருதுகோள் பூரணமாக ஜெர்மன் அறிஞர்களால், சிறப்பாக அடால்ப் வாக்னர் என்பவரால், வகுத்துரைக்கப்பட்டது. சமூகத் துறையிலோ, பொருட்டுறையிலோ அல்லது அரசியல் துறையிலோ ஏதாவது ஒரு சீர்திருத்தத்தைச் செய்ய விரும்பும் அரசியல் வாதி, வரியை அதற்கு ஏற்ற ஒரு கருவியாகக் கருதுகிறார் என்பது

தான் இக்கோட்பாடு. ஆகையால், எடுத்துக்காட்டாக, பிற நாடு களால் வேண்டப்படும் ஒரு பொருளின்மீது தனக்கு ஏகபோக உரிமை இருப்பதை அரசியல் துறையில் பயன்படுத்தி அனுகூலம் அடைய விரும்பும் ஒரு நாடு, தன் நோக்கை ஈடேற்ற ஏற்றுமதி வரி ஒன்றை விதிக்கத் தீர்மானிக்கலாம். இன்றியமையாத அல்லது **குழவிப் பிராயத்திலிருக்கும்** ஒரு தொழிலை வளர்க்க விரும்பும் ஒரு சட்டசபை இக்கோட்பாட்டின்படி, வெளி நாடுகளிலிருந்து தன் நாட்டுச் சரக்குகளுக்குப் போட்டியாக வரும் இறக்குமதிகளின்மீது தீர்வை விதிப்பது நியாயமானது. மக்களின் வருவாய் ஓரளவு சமமாகப் பகிர்ந்தளிக்கப் படவேண்டும் என அரசாங்கம் விரும்பினால், செல்வர்களின்மீது அதிகப்பளுவான ஒரு வளர்வீத வரி முறையை அமுல் நடத்தலாம்.

இக்கோட்பாடு, இவ்வாருக, சமூக அரசியற்கொள்கை எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இது, நிதிக்கோட்பாட்டிற்கு எதிரானதாய் இருந்தபோதிலும் பொதுவுடைமைக் கருத்துடன் இதை ஒன்ருகக் கருத முடியாது. தொழிலாளர் வருக்கத்தினருக்குப் பெரும்பங்கை அளிப்பதற்காக வரியை ஒரு கருவியாகப் பயன்படுத்த வேண்டும் என்ற அளவில் இக்கருதுகோளை ஆதரிப்பவர்களும் பொதுவுடைமை வாதிகளும் ஒன்றுபட்ட கருத்தினராய் இருக்கிருர்கள். ஆயினும், இந்த நோக்கம் அவர்கள் திட்டத்தின் இன்றியமையாத அமிசம் அன்று. உண்மையில் அவர்களுக்குத் தெளிவான திட்டமே இல்லை. வரி பற்றிய சமூக அரசியற்கோட்பாட்டை நம்புகிறவர்கள், குறிப்பிட்ட ஒரு சீர்திருத்தத்தையோ, அல்லது குறிப்பிட்ட ஒரு கட்சியையோ ஆதரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அரசாங்கம் சரி என்று கருதும் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு, வரியை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம் என்று அவர்கள் கருதுகின்ருர்கள். நோக்கம் பொதுவுடைமையாக இருந்தாலும் இருக்கலாம் ; அல்லது அதற்கு நேர் எதிரானதாய் இருந்தாலும் இருக்கலாம். ஆகையால், இக்கோட்பாட்டிற்கு எல்லா அரசியற்கட்சிகளிலும் ஆதரவாளர்கள் காணப்படுகிருர்கள்.

திறனாய்வு

சமூக அரசியல் கருதுகோள் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டு இருப்பது ஒன்றே அதனைக் குறை கூறுவதற்குச் சிறந்த முகாந்திரமாகும். வருமானத்தைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்கும் வரியைப் பயன்படுத்தக்கூடாது என்ற கொள்கைக்கு இது ஒரு திருத்தத்தைத் தருகிறது. நிதிக் கருதுகோளை ஒரு கணமாவது சிந்தித்த பின்பு, அதன் அடிப்படைக் கொள்கையை ஆதரிப்பவர் சிலரே இருப்பர். இச்சேவையைத் தவிர்த்து, சமூக அரசியல் கருது

கோள் தெளிவற்றதாய்க் காணப்படுகின்றது. ஏனெனில், இக் கருத்தின்படி வரி விதிப்பதற்கான நோக்கங்கள், தம்முள் ஒன்றுக்கொன்று முரணய் இருக்கின்றன. வரி விதிப்புப்பற்றிய பொது வான அமிசம் பற்றிய ஒரு கூற்றை மட்டும் நாம் கண்டறிய முயல வில்லை. குறிப்பிட்ட எவ்வெந்நோக்கங்களுக்காக வரி விதிக்கலாம் என்பதையும் நாம் ஆராய வேண்டும். இதைப் பொறுத்த வரை இக் கருதுகோளின் ஆதரவாளர்கள் தம்மிடை ஒன்றுபட்ட கருத்தின்றிப் பல சிறு குழுக்களாகச் சிதறிப் போகின்றனர்கள்.

வரி விதிப்பு உற்பத்தியையும் நுகர்ச்சியையும் கட்டுப்படுத்துவதற்கான ஒரு கருவி (Taxation is a means of regulating production and consumption) : வரி விதிப்பின் மூலம் நம் உற்பத்திச் சாதனங்களை மிகச் சிக்கனமான முறையில் திருத்தியமைப்பதே சிலரின் நோக்கமாக இருக்கலாம். அவர்கள் இதற்காக வேற்றுமைப் படுத்திய (differential) வரி முறையைக் கடைப்பிடிக்கலாம். சில தொழில்களுக்குச் சலுகை தந்தால், அவை விரும்பிய அளவு வளர்ச்சியடையும் என்றும் எதிர் பார்க்கலாம்; அல்லது, அவர்கள் வரியால் கிடைத்த வருமானத்திலிருந்து எவ்வெத்தொழில்களை அபி விருத்தி செய்யவேண்டும் என்று கருதுகிறர்களோ, அவ்வத்தொழில் களுக்கு மானியங்கள் கொடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கலாம்.

போகப் பொருள்கள், மது வகைகள், போதை தரும் பொருள்கள் இவற்றின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், வரையறைக்குட் படுத்தவும் வேண்டிச் சிலர் வரியை ஒரு கருவியாகப் பயன்படுத்த லாம். பின்னை நோக்கம் பொருளியல், நிதி பற்றியதன்று ; நன்னெறி பற்றியது. ஆயினும், நடைமுறையில், கருவூலத்தைப் பொறுத்தவரை இவ்வகையான வரிகளே அதிகமான வருவாயைத் தருகின்றன. போகப் பொருள்களைப் பொறுத்த வரை, சமூக, அரசியல் கோணத்தி லிருந்து பார்க்கும் பொழுது இது ஊதாரிச் செலவைக் குறைக்கிறது.

அடக்க விலைக்குக் குறைவாகச் சில சாமான்களை விற்றும், அந்நஷ்டத்தைப் பொது வருவாயிலிருந்து ஈடு கட்டியும், சில சாமான் களின் நுகர்ச்சியை அதிகப்படுத்துவதற்கு வரி முறையைப் பயன் படுத்தலாம். சாமானைக் குறைந்த விலைக்கு விற்பதற்காகவோ, அல்லது சாமானை மக்களுக்கு நேரிடையாகக் கிடைக்கும்படி அரசாங்கம் அல்லது ஸ்தல ஸ்தாபனம் வினியோகம் செய்யும் பொழுதோ, இதை நிறைவேற்றலாம். உதாரணமாக, ஒரு நகராண்மைக்கழகம் பொதுமக்களின் ஆரோக்கியத்திற்காகப் பட்டணத்தின் அருகில் உள்ள சேரிகளில் பால் பருகுவதை அதிகமாக்கும்படி செய்யலாம். அப்பொழுது நிலவரத்தில் இருக்கும்

விலையைவிடக் குறைவான விலைக்கு ஏழை எளிய மக்களுக்குப் பால் விற்கலாம் ; அல்லது ஏழைக் குழந்தைகளுக்கு நேரிடையாகவே பாலை இலவசமாக வழங்கலாம். இத்திட்டங்களை ஆதரிப்பவர்கள் இதனால் உடனடியாக ஏற்படும் செலவைவிட இறுதியில் மக்களின் உடல் நலம் அபிவிருத்தி அடைவதாலும், மக்களின் திறமை கூடுவதாலும் அதிக நன்மையே ஏற்படுகிறது என நம்புகின்றனர்கள்.

இழப்பீட்டுக் கருதுகோள் (The 'Compensatory' View) :

இக்கருத்தின்படி சிலர் செல்வத்தில் அல்லது பணத்தில் அதிகமாகப் புரளுவதற்கும், சிலர் வறுமையில் உழல்வதற்கும் ஓரளவு நாட்டின் அரசியல் சட்ட அமைப்பே காரணமாகும். ஒரு வருக்கத்தினர் செல்வராய் இருப்பதற்கும், மற்றொரு வருக்கத்தினர் வறிஞராய் இருப்பதற்கும் அரசாங்கங்களே நேரிடையாகப் பொறுப்பாளிகள் என்று நாம் கூறவில்லை. அரசாங்கம் தலையிட்டிருந்தும், அரசாங்கத்தினர் சம்பந்தமின்றியே இவ்வேற்றத் தாழ்வுகள் தோன்றியிருக்கக்கூடும். இவ்வேற்றத்தாழ்வை ஆணி வேரோடு அகற்றுவதற்கு மத்திய அரசாங்கத்திற்கு இயலாமல் போன போதிலும், இவ்வேற்றத் தாழ்வுகளால் ஏற்படும் விளைவுகளைத் தக்க வரி முறைகள் மூலம் அரசாங்கம் குறைக்காமல் இருப்பதற்கு யாதொரு காரணமும் இல்லை என்று இக்கோட்பாட்டை நம்புகிறவர்கள் வாதிக்கின்றனர்கள்.

எடுத்துக்காட்டாக, முற்றுரிமைக் கம்பெனி ஒன்று மக்களின் தேவைகளைப் பயன்படுத்திக்கொண்டு ஏராளமான இலாபத்தை அடையலாம். ஆயினும், அரசாங்கம் கொடுக்கும் பாதுகாப்பின்றி, அக்கம்பெனி செல்வம் கொழிக்க முடியாது. அரசாங்கம் அக்கம்பெனிக்குப் பிரத்தியேகச் சட்டபூர்வமான சலுகைகள் அளித்திருந்தால், இவ்வேற்றத்தாழ்வுகளைக் குறைக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு அதிகமாகிறது. இக்கருதுகோளின் ஆதரவாளர்கள் ஏகபோகத்தினால் அடையும் இலாபத்தின்மீது ஒரு சிறப்பு வரியை விதித்து, இலாபத்தின் ஒரு பங்கை நுகர்வோருக்குக் கொடுக்க விழைகின்றனர்கள். ஒரு சொத்தின் மதிப்பு அதற்கு உரியவர் மேற்கொள்ளும் முயற்சியின்றியே, மக்கள் பெருக்கத்தாலோ அல்லது அவ்வுடைமை இருக்கும் இடத்திற்கு அண்மையில் தனிப்பட்ட அபிவிருத்திகளை அரசாங்கம் மேற்கொள்வதாலோ, உயரலாம். இவ்விதச் சூழ்நிலையில் "உழைப்பிலா ஏற்றத்தின்" (unearned increment) மீது ஒரு பிரத்தியேக வரி விதிப்பது முறையானதே.

இவ்விழப்பை ஈடு செய்கின்ற கருதுகோள் பொதுவுடைமைக் கொள்கை என்று ஒருகாலும் சொல்ல முடியாது. பொதுவுடைமைத் திட்டத்தை எதிர்ப்பவர்களும், வருமான வரி, நிலப் பெறுமானத்தின்

மீது விதிக்கும் வரி, அபிவிருத்தி வரி என்ற வரிகள் வளர்வீத அடிப் படையில் இருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளுகிருர்கள். வருமானத்திலும், உடைமையிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பது ஒரு முறையாகும். தீவிரமான ஒரு திட்டத்தின்கீழ்ப் பிரித்துக் கொடுப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சியினின்றும் தங்கள் திட்டம் வேறுபட்டது என்று அவர்கள் கூறுகிருர்கள். ஆயினும், அவர் கள் நிலைமை தெளிவாக இல்லை. பொதுவுடைமைப் பிரச்சினைகளைப் பொறுத்த வரை இரு சாராருக்கும் மிகுந்த கருத்து வேற்றுமை இருந்த போதிலும், வரி, சுபிட்சம் இவைகளைப் பொறுத்த மட்டில் இவ்விரு சாராரின் கருத்துகளுக்கும் தெளிவான வேறுபாடு காணப்படவில்லை.

வருமானத்தை மீள் பங்கீடு செய்வதற்கு வரி விதிப்பு ஒரு கருவியே என்பது பொதுவுடைமை வாதிகளின் கருத்து (Taxation is a Means of Redistributing-Income); வரி பற்றிய பொதுவுடைமைக் கருதுகோள், பல்வேறுபட்ட வருக்கத்தினரிடைக் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் வகையில் அரசாங்க நிதி அமைக்கப் படவேண்டும் எனக் கூறுகிறது. செல்வர்களுக்குக் கடுமையான வரி விதிக்க வேண்டும் என்றும், வறியவர்களுக்கு வரியே விதிக்கக் கூடாது என்றும், விதித்தாலும் வரிப்பளு இலேசாக இருக்க வேண்டும் என்றும், அதனுல் இறுதியில் வருமானங்களில் பங்கீடு இப்போ துள்ளதைவிடக் குறைந்த ஏற்றத்தாழ்வுகளை உடையதாக இருக்கும் என்றும் பொதுவுடைமைக் கருதுகோள் கூறுகிறது.

தங்களுடைய வாதத்திற்கு உரமூட்ட, பொதுவுடைமைவாதிகள், குறைந்து செல் பயன்பாட்டு விதி (The Law of Diminishing Utility) என்ற பொருளியல் வாதத்தைத் துணையாகக் கொள் கிருர்கள். வளர்வீத வரிக்கான காரணங்களைக் கொடுக்கும்பொழுது இக்குறைந்து செல் பயன்பாட்டு விதியைப்பற்றி ஓரளவு வாதித்தோம். பொதுவுடைமைவாதிகளின் நோக்கம் செல்வத்தைப் பணக்காரர்களிட மிருந்து ஏழைகளுக்கு மாற்றுவதே. ஏழை மக்களுக்குச் செய்யப்படும் உபகாரம் ரொக்கமாகவே இருக்க வேண்டும் என்பதில்லை. பொதுச் சேவைகளுக்காகச் செலவு செய்வதன் மூலம் நுகர்ச்சியைச் சமு தாயத்திற்குரியதாக்குவதோடு அதனுல் சமுதாயம் பெறும் மொத்தப் பயனையும் அதிகரிக்கலாம்.

எவ்வளவு கூடுதலாக வளர்வீத வரி விதித்தாலும், பொது வுடைமைவாதிகள் இம்முறையை (வரி முறையை) இரண்டாம் பட்ச மாகத்தான் கருதுகிருர்கள் என்பதை நினைவில் இருத்த வேண்டும். உற்பத்திச் சாதனங்களைக் கட்டுப்படுத்துவதற்குத் துணை செய்யும் அரசாங்கப் பீடத்தில் தாங்கள் அமரும் வரையில், அவர்கள் வரியை

ஒரு கருவியாக எவ்வளவு பயன்படுத்த முடியுமோ, அவ்வளவு பயன்படுத்த முனைகிறார்கள். ஆனால், தீவிரப் பொதுவுடைமை வாதிகள், மக்களுக்குப் பங்கீடு செய்வதற்கு முன்பு தகுந்த முறையில் உற்பத்திச் சாதனங்களைக் கட்டுப்பாடு செய்து, அரசாங்கத்திற்கு வேண்டிய நிதிகளைப் பெற முனைகிறார்கள். அவ்விதமான சூழ்நிலையில் வரி முறை அடியோடு மாற்றப்படும்.

நாம் பொதுவுடைமைக் கோட்பாடு என்று குறிப்பிடும் போது, இவ்வளவு முன்னேற்றமடைந்த ஒரு நிலையைச் சுட்டவில்லை. இப்பொழுது செல்வத்திலும் வருவாயிலும் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை வரியைக் கருவியாகக் கொண்டு சரிக்கட்ட வேண்டும் என்ற கொள்கையையே நாம் பொதுவுடைமைக் கோட்பாடு என்று குறிப்பிடுகிறோம். வேறு பொருத்தமான பெயரின்மையாலேதான் இக்கருதுகோள் பொதுவுடைமைக் கருதுகோள் என விவரிக்கப்படுகிறது. வேறு பெயரால் வழங்கப்பட்டால், இன்னும் பலரும் இக்கருத்தை ஒத்துக்கொள்ளக்கூடும். நாம் எந்தப் பெயரைச் சூட்டினாலும், இக்கொள்கையை அடிப்படையாகக் கொண்ட நிதி முறைதான் இப்பொழுது இயங்கி வருகிறது.

பதின்மூன்றுமதிகாரம்

வரி விதிப்புப் பற்றிய திறன் கோட்பாடு

(The Faculty or Ability Theory of Taxation)

கிரேட் பிரிட்டனில் முதன்முதல் முதலாம் எலிசபெத்து இயற்றிய வறியவர் சட்டங்களிலேதான் (Poor Laws) 'ஆற்றல்' (Faculty) என்ற பதம் காணப்படுகிறது. சட்டத்தின்கீழ் ஒவ்வொரு கிராமமும் தன் திறனுக்கேற்றவாறு வரி கொடுக்கவேண்டுமென விதிக்கப்பட்டது. முதன்முதலில் திறன் என்றால் செல்வம் என்றே பொருள் கொண்டனர்; பின்னர் வருவாயைக் குறித்தனர். ஆடம் ஸ்மித்து இப்பதத்திற்கு வருமானங்கள் என்றே பொருள் கொண்டார்.

வரி விதிப்பில் நீதியும் சிக்கனமும்

(Equity and Economy in Taxation)

ஒருவர் அடையும் ஆதாயத்தை அளவிடுவது கடினமாக இருப்பதால், அதை வரி விதிப்பிற்கு ஏற்றதோர் அடிப்படையாகக் கொள்வது கைவிடப்பட்டது. இவ்வாசிரியர்கள், ஒவ்வொரு குடிமகனும் அரசாங்கத்தின் **ஓர் உறுப்பு** என்று கொண்டார்கள்; இயற்கையின் எல்லா அமைப்புகளிலும் ஒவ்வோர் உறுப்பு அல்லது செல் (Cell) உடல் முழுமைக்கும் தத்தம் சக்தி அல்லது திறனுக்கேற்றவாறு துணை செய்வது போல, ஒவ்வொரு குடிமகனும் தன்தன் திறனுக்கேற்றவாறு வரி கொடுக்க வேண்டுமென்று கூறினார்கள். இக்கோட்பாடு திறன் கோட்பாடு என்று கூறப்படுகிறது. போதான் (Bodan) என்ற பிரெஞ்சு ஆசிரியர் முதன்முதல் இதை விவரித்தார். இது ஆடம் ஸ்மித்து யாத்த சிறந்த கூற்றுகளில் முதலாவதாகக் காணக் கிடக்கிறது. "ஒவ்வொரு நாட்டின் குடிகளும் அரசாங்கத்தின் ஆதரவிற்காகக் கூடுமானவரையில் தத்தம் திறனுக்கு ஏற்றவாறு

வரி கொடுக்க வேண்டும்,'' என்பதே அக்கூற்று. இப்போது **வரிப்பளுவைப் பகிர்வதற்கு மிகவும் திருத்திகரமான ஒரே கொள்கையாக இக்கோட்பாடு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.**

திறனுக்கேற்றபடி வரி கொடுப்பது-அக விளக்கம்

(Ability to Pay—The Subjective Interpretation)

'திறனுக்கேற்றபடி கொடுப்பது' என்ற சொற்ெருடர், கவர்ச்சியாக இருந்தாலும் நடைமுறைக்கு வழிகாட்டியாகக் கருத முடியாது. இக்கொள்கையை ஒரு நடைமுறை வரித்திட்டத்தில் உருப்படுத்த ஒருவர் முயலுங்கால் பல இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. முதலாவது திறன் என்பதற்குச் சரியான பொருள் என்ன? சிலர் திறனுக்கு அக விளக்கத்தை மேற்கொண்டு, நபர் ஒருவர் எவ்வளவு **தியாகம்** செய்யவேண்டும் என்று விளக்கம் தருகின்றனர். பிறர், புற விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, திறன் அல்லது சத்தியை வருவாய் அல்லது பிற புறச்சின்னங்கள் மூலம் அளக்க முற்படுகின்றனர். தோற்றத்தில் இவ்விரு கருத்துகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டின் உண்மையான முக்கியத்துவம் புலனுகாமல் போகலாம். ஆயினும், நடைமுறையில் திறன் பற்றிய விதியைச் செயற்படுத்த ஒருவர் முனையுங்கால் இவ்வேறுபாடு தெளிவாகத் தெரிகிறது.

மூன்று வேறுபட்ட விளக்கங்கள்

(Three Different Interpretations)

திறனுக்கேற்றபடி செலுத்துவது என்பது அவர்கள் (வரி கொடுப்போர்) செய்யும் தியாகத்தின் அளவைப் பொறுத்தது என்ற வாதம் தெளிவற்றது. இதனுல் ஒவ்வொருவரும் பெறும் 'இன்பத்தின்' அளவை நிர்ணயிப்பதற்குப் பல்வேறுபட்ட வழி முறைகள் மேற்கொள்ளப்பட்டன. சம அளவு தியாகம் (Equal Sacrifice) என்பது ஒரு விளக்கம்; வீதாசார அளவு தியாகம் (Proportional Sacrifice) என்பது இன்னென்று; குறைந்த அளவு தியாகம் (Minimum Sacrifice) செய்வது என்பது பிறிதொரு விளக்கம். நாம் இப்பொழுது இம்மூன்று கொள்கைகளையும் சற்று விரிவாக ஆராய்வோம்.

சம அளவு தியாகக் கொள்கை

(The Principle of Equal Sacrifice)

இக்கொள்கையின்படி நேரிடையான உண்மையான வரிப்பளு (direct real burden of taxation) வரி செலுத்துவோர் அனைவர்

பேரிலும் சமமாக ஒறுக்கக்கூடிய நிலையில் இருக்கவேண்டும். இதற்கு ஏற்றாற்போல வரி விதிப்பின் நேரிடையான பணப்பளு (direct money burden of taxation) பங்கீடு செய்யப்பட வேண்டும். மில்லின் கூற்றுப்படி, "அரசியலின் ஒரு கூருக வரியில் சமத்துவத்தைக் கொண்டால் அதன் பொருள் அரசாங்கத்தின் செலவுக்காக ஒவ்வொருவரும் கொடுக்கும் வரித் தொகையால் ஏற்படும் அசௌகரியம் பிறர் அடையும் அசௌகரியத்தைவிடக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருக்கக்கூடாது என்பதே." ஆனால், அவர் இதை நடைமுறையில் கொணர்வதற்காகச் சொன்ன யோசனை ஒரு குறு வருமானத்திற்கு வரியிலிருந்து விலக்களிக்கப்படவேண்டும் என்பதும், இதற்கு மேற்பட்ட வருமானங்கள் அனைத்தும் வீதாசார அளவில் வரி கொடுக்க வேண்டும் என்பதும் சமத்துவத்தை எய்துவதற்குப் போதியனவாக இல்லை. ஆயினும், வருமானம் ஏறுங்கால் கொடுக்கவேண்டிய வரித் தொகையும் ஏறியதால், ஓரளவு வளர்வீத விகிதத்தை இக்கோட்பாடு தன்னகத்தே கொண்டதாய் உள்ளது.

வரிக்கோட்பாட்டிற்கு மில்லின் சேவை தலையாயது ; ஏனெனில், நடைமுறையில் இவ்வெண்ணத்தைக் கடைப்பிடிப்பது கடினமாய் இருந்த போது அவர் தியாகத்தில் சமத்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தினர்.

வீதாசார அளவு தியாகக் கொள்கை

(The Principle of Proportional Sacrifice)

இக்கொள்கையின்படி ஒவ்வொருவரும் தம்முடைய வருமானத்திலிருந்து அடையும் பொருளாதார நலவசதிக்கு ஏற்ற அளவில் வரியின் நேரிடையான பணப்பளு பிரிக்கப்பட வேண்டும். வருமானத்திற்கும் அதிலிருந்து கிடைக்கும் பொருளாதார நல வசதிக்கும் உள்ள உறவு, வரி செலுத்துவோர் எல்லோருக்கும் ஒரே மாதிரியானது என்று வைத்துக்கொண்டால், வருமானம் அதிகரிக்குந்தோறும் அதிலிருந்து கிடைக்கும் இறுதிநிலைப் பயன்பாடு பெரிதும் விரைவில் குறைகிறது. ஆகவே, இக்கொள்கையின்படி வரி கடுமையான வளர்வீதமாய் இருக்கவேண்டும் என்பது தெளிவு.

குறுமத் தியாகக்கொள்கை அல்லது குறைந்த அளவு கூடுதல் தியாகக்கொள்கை

(The Principle of Minimum Sacrifice or the Least Aggregate Sacrifice)

குறுமத் தியாகக் கொள்கையையும் மில் விளக்குகிறார். ஓர் அரசாங்கம் தனியார்களிடமிருந்தோ அல்லது வருக்கத்தினரிட

மிருந்தோ எவ்விதமான தியாகத்தை எதிர்பார்த்தாலும், வரி கொடுக்கும் எல்லோர்மீதும் கிட்டத்தட்ட ஒரே அளவு கஷ்டம் ஒறுக்கும்படி செய்யவேண்டும் என்றும், இதனால் சமுதாயம் முழுதுக்கும் குறைந்த அளவு தியாகமே ஏற்படுகிறது என்றும் மில் கூறினர். பேராசிரியர் கார்வர் (Professor Carver) இக்கொள்கையைச் சூட்சுமமாகக் கூறினர். பேராசிரியர் கார்வர், ''சமுதாயத்தின் எல்லா உறுப்பினர் பேரிலும் சமமான அளவு தியாகத்தைச் சுமத்துவதால் செல்வத்தின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுகிறது ; ஆனல், செல்வத்தால் மிகக் குறைந்த அளவு பயன் நுகர்வோரிடமிருந்து மட்டுமே வரி முழுமையையும் வசூல் செய்வதன் மூலம் குறைந்த அளவு தியாகமே சமூகம் முழுதுக்கும் ஏற்படுகிறது,'' என்று கூறினர்.

பேராசிரியர் எட்ஜ்வொர்த்தின் (Professor Edgeworth) கூற்றுப்படி, ''வரி கொடுப்போர் எல்லாரும் குறைவான அளவு தியாகம் செய்யும்படி வரிகளை அமைப்பதே நல்லதாகும். பயன்பாட்டுத் தரத்தை (Utilitarian Standard) உண்மையானதென்று கொண்டு, வரியைச் சரியானபடி பங்கீடு செய்வது என்பது சம அளவு தியாகத்தைச் சுமத்துவதன்று என வாதிக்கப்படுகிறது. முழுச் சமுதாயத்தின்மீதும் குறுந்தியாகத்தைச் சுமத்துவதற்கு ஏற்றவாறு வரிப்பளுவைப் பங்கீடு செய்வதால் சமுதாயம் அதிக அளவு நன்மை அடையக்கூடும் என்றும், ஆகையால் சாதாரண நிலைக்கு மேற்பட்ட நிலையில் உள்ளவர்கள்மீது, அதிகமான வரிப்பளுவை ஏற்றவேண்டும் என்றும், இந்நிலைக்குக் கீழ் உள்ளவர்களுக்கு வரி விதிப்பினின்று முற்றும் விலக்களிக்க வேண்டுமென்றும் கூறப்படுகிறது.''—(பாஸ்டபிள்)

சமுதாயம் முழுமைக்கும் மிகக்குறைந்த அளவு தியாகத்துடன் வரி விதிப்பதற்கு, மிகக் குறைந்த அளவு பயனைத்தரும் செல்வத்தின் பகுதிகளை அரசாங்கம் வரியாக எடுத்துக்கொள்ள வேண்டும். மிகப் பெரிய வருமானங்கள் மிகக் குறைந்த அளவு பயனை நல்குமாயின், வரிப்பளு முழுவதையும் பெருஞ்செல்வர்கள்மீதே சுமத்த வேண்டும். இதனால், அவர்களுடைய வருமானம் தமக்கு அடுத்த கீழ்ப்படியில் உள்ளவர்களின் வருமானத்திற்குச் சமமாகக் குறையக்கூடும். இவ்வாறு சமுதாயத்தின் வரிப்பளு முழுமையும் எவரெவர் அப்பளுவை ஏற்கத்தகுந்த சத்தியுள்ளவர்களோ, அவரவர்மீது திணிக்கப்படும். குறிப்பிட்ட ஓரளவுக்குக் கீழ்ப்பட்ட வருமானங்கள் அனைத்திற்கும் வரியிலிருந்து விலக்களிக்கப்படும். மிக உயர்ந்த வருமானங்கள் முழுமையும் வரிமூலம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை எட்ஜ்வொர்த்தே ஒப்புக்கொண்டார்.

திறனாய்வு (Criticism) :

சமமான அளவு, வீதாசார அளவு தியாகம் இரண்டுமே சரியானபடி கடைப்பிடிக்கப்பட்டால், சமுதாயத்தின் ஏழைகள் உள்ளிட்ட எல்லா உறுப்பினர்களும் வரியாக **யாதாயினும்** கொடுக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது. ஆனால், குறுந்தியாகத்தின்படி ஏழைகள் வரி கொடுக்கவேண்டுவதில்லை. இச்சோதனை கோட்பாட்டு அளவாக இருப்பது ஒன்றே இக்கொள்கையின் குறைபாடாகும். திறன் என்பது புறவயத்தரமாகும். தியாகம் என்பது அகவயச் சோதனையாகும். இதுதான் எட்ஜ்வொர்த்தே இதனை நடைமுறையில் சாத்தியமான கொள்கையாகப் பிரேரேபிக்காததற்குக் காரணமாகும். மிக உயர்ந்த வருமானங்கள் முழுமையும் (100 சதவிகிதம்) வரியாக வாங்கப்பட்டால், அவ்வாறான வருமானங்கள் **மறைந்தொழியும்.** அவ்வாறான வருமானங்கள் மறைந்தொழியுந்தோறும் வரி அடுத்த நிலையில் உள்ள வருமானங்கள் மீது விழும். அதனால், அவ்வருமானங்களும் மறைந்தொழியும், இவ்வரி முறையில் மிகக் குறைந்த பட்சத் தியாகமே ஏற்படுகிறது என்பதில் ஐயமில்லை. ஆனால், இது முதலாண்டிலேதான் ஏற்படுகிறது. குறிப்பிட்ட ஒரு நிலைக்குமேல் உள்ள வருவாய்களை மீண்டும் மீண்டும் ஒழிப்பது தேசீயப் பொருளாதாரத்திற்கு உலை வைப்பதாகும் ;— அதனுடன் எதிர்காலத்தில் செல்வம் சேகரிப்பதற்கும், சேமிப்புச் செய்வதற்கும், முதலீடு செய்வதற்கும் ஊறு விளைவிப்பதுமாகும். ஆகையால், குறைந்த பட்ச அளவு தியாகம் என்பது ஏட்டிலே பாராட்டத்தக்கதாயினும், நடைமுறையில் பல்வேறு இடர்ப்பாடுகளை விளைவிக்கிறது.

அக வய விளக்கத்திற்கு எதிர் வாதங்கள்

(Objections to the Subjective Interpretation)

" திறன் என்பது வரி கொடுக்கும் ஒருவரின் சத்தியை **உடன்பாட்டு நேர் நிலையாகக்** குறிப்பிடுகிறது ; தியாகம் என்பது வரி கொடுப்பதால் ஒருவர் அடையும் இழப்பை **எதிர்மறையாகக்** குறிப்பிடுகிறது. முன்னையது புற வயத்தரத்தால் இயல்பாகவே அளவிடப்படுகிறது ; பின்னையது வரி கொடுப்போரின் உணர்ச்சிகளைக் குறிப்பிடுவதால் அகவயத்ததாய் இருக்கிறது. வரி செலுத்துவோர் மேற்கொள்ளும் தியாகத்தை அளவுகோலாகப் பயன்படுத்துவது சரியன்று. இங்ஙனம் அளவிடுவதற்குக் காரணம், வரி செலுத்துவதனால் அவர்கள் அடையும் இழப்பிற்கு முக்கியத்துவம் தருவதே ஆகும். இங்ஙனம் அன்றி வரி செலுத்துவோர்களின் புறச் சின்னங்களைக்கொண்டே அவர்களின் வரி செலுத்தும் திறனை அளவிடுவதே முறையாகும்.''—(பாஸ்டபிள்)

"தியாகக் கோட்பாடு முழுமையும் (சம அளவு தியாகமாயினும், அல்லது குறைந்தபட்சத் தியாகமாயினும்) பிரச்சினையை நுகர்ச்சிக் கோணத்திலிருந்தே ஆராய்வதால், பிரச்சினையின் ஒரு பகுதியையே பரிசீலனை செய்கிறது. வரி கொடுப்பதால் ஒரு தனியாருக்கு எவ்வளவு பளு ஏற்படுகிறது என்பதையும் அது ஆராய்கிறது. செல்வத்தில் அல்லது வருமானத்தில் எத்தனைப் பாகம் அவருடைய சொந்த நுகர்ச்சிக்காக இருக்கிறது என்பதையும் ஆராய்கிறது. இது பெரும்பான்மையும் நிதியைப்பற்றிய நுகர்ச்சிக் கோட்பாடாகும். இக்கொள்கையை மிக நுணுகி ஆய்ந்தால், நடைமுறை உண்மைகளுக்கிணங்க இக்கோட்பாட்டின் நுகர்ச்சிப் பகுதியை உற்பத்திப் பகுதியுடன் இணைத்து வலியூட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வருவோம்; ஒருவரது வரி கொடுக்கும் திறனை நிருணயிக்கும்பொழுது, அவர் செல்வத்தை அல்லது வருமானத்தை துறப்பதால் ஏற்படும் பளுவை மட்டும் நாம் சிந்தியாது, அவர் செல்வத்தையோ, வருமானத்தையோ ஈட்டுவதற்கு வாய்ப்புகள் நல்கியதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தியாகம் என்பது உள்ளத்தை அல்லது அகத்தைச் சார்ந்ததாகும். ஒரு வரியால் பருப்பொருள்களான சில பொருள்கள் வசூலிக்கப்படுகின்றன. அகத்தைச் சார்ந்ததற்கும், பருத்தன்மையதற்கும் இடையில் உள்ள சரியான உறவுகளை நிருணயிப்பது அசாத்தியம். சிலர் வரி கொடுப்பதால் பெறும் துன்பங்களையோ அல்லது இன்பங்களையோ கணக்கிடுவதில் பயனில்லை; ஏனெனில், பல்வேறுபட்ட தன்மையனவாய் இருப்பனவற்றை ஒரே தன்மையனவாக மாற்றும் எந்த முயற்சியும் வெற்றி பெறாது."—(செலிக்மென், Professor Seligman)

டாக்டர் டால்டன் கருத்துப்படி வரி விதிப்பு முறையில் நிதியைப் பற்றிய எல்லாக் கொள்கைகளும் அவரவர் அபிப்பிராயமேயாகும். இது வரை வெளி வந்ததைவிட எல்லோராலும் பெரிதும் ஏற்றுக்கொள்ளப்படும் நீதியைப் பற்றிய மிகத் தெளிவான விளக்கம் வரும் வரையில், அக்கொள்கைகள் உண்மையில் நேர்மையானவை என்று நிரூபிக்க முடியாது. ஆனால், **சிலர் சில காலங்களில் அவற்றை நேர்மையானவையாகக் கருதுகின்றனர்** என்றுதான் கூறலாம். இவ்விதமான பிரச்சினைகளில் மக்கள் கருத்து அடிக்கடி மாறுவது கண்கூடு.

நீதியைப்பற்றி இப்பொழுது உலவிவரும் எண்ணங்கள் சிக்கனத்தைப் பழைமைப் பற்றைக் கொண்டு பக்குவப்படுத்துவதற்கு ஒப்பாகுமே தவிர, வேறன்று. நீதி பன்முறையும் 'இல்லை' என்று விடை கூறுகிறதே தவிர ஒரு போதும் 'ஆம்' என்று விடை கூறுவதில்லை. நீதியை நம் கைக்கு எட்டாத ஒரு கன்னிகைக்கு ஒப்பிடலாம்.

அதைப்பின் தொடர்வது மெய்ஞ்ஞானிகளுக்கே இயலும். அரசியல் வாதிகள் அதை உன்னிப்பாகக் கவனிப்பதற்கும் கடமைப்பட்டுள்ளார்கள். சுருங்கக்கூறின், நாம் எல்லோரும் நீதி அல்லது நேர்மையை விரும்புகிறோமேயல்லாது, எது நீதி, அல்லது நேர்மை என்பதில் நாம் கருத்து வேறுபாடு கொண்டுள்ளோம்.

புறவய விளக்கம்

(The Objective Interpretation)

ஒருவரின் வரி தாங்கும் வல்லமையை வருமானம் போன்ற புறச் சின்னங்களைக் கொண்டுதான் முடிவு கட்டவேண்டும் என்ற நிலைக்கு நாம் மீண்டும் வரவேண்டுவதாகின்றது. திறன் பற்றிய கருதுகோளின் புறப்பகுதிக்கு இரு வேறுபட்ட விளக்கங்கள் தரப்பட்டுள்ளன; அவை, வீதாசார வரி விதிப்பும் வளர்வீத வரி விதிப்புமாம். நாம் முன்னமே வளர்வீத வரியின் அனுகூல பிரதிகூலங்களை ஆராய்ந்துவிட்டோம்.

"நீதி பற்றிய ஆராய்ச்சியாளர்களின் கருத்துகளைப் பிளவுபடச் செய்யும் எந்தவிதப் போட்டிக் கொள்கைகளையும்விட, திறன் அல்லது வினைத்திறக் கொள்கை மிக மேலானது. திறன் கொள்கைக்கு எதிராகக் கூறப்படும் வாதங்களை அலசிப்பார்த்தால், அவை என்னுடைய கருத்தின்படி, திறன் கொள்கை சரியானதன்று என நிரூபிப்பதற்குப் போதுமானவை அல்ல," என்றும் பேராசிரியர் செலிக்மென் கூறுகிறார்.

திறன் அளவை

(Measurement of Ability)

பல்வேறுபட்ட வரி முறைகளின் விவாதங்களில், பொதுவாக ஏன் வரி கொடுக்க வேண்டும் என்பதற்கும், எந்த அடிப்படையில் ஒவ்வொரு குடி மகனும் கொடுக்க வேண்டிய வரித்தொகையைத் தீர்மானிக்க வேண்டும் என்பதற்கும் வேறுபாடு கற்பிக்கத் தவறுவதால் பெருங்குழப்பம் ஏற்படுகிறது. வரியின் நோக்கம் அல்லது அதன் அடிப்படைக் காரணம் என்ன என்பது பற்றிப் பொருளியற் புலவர்களிடையே கருத்தொற்றுமை காணப்படவில்லை. வெவ்வேறு ஆசிரியர்கள் திறனைச் சோதிப்பதற்கு (தீர்மானிப்பதற்கு) வெவ்வேறு சோதனைகளைக் கூறியிருக்கிறார்கள். நாம் இப்போது அவற்றை விரிவாக ஆராய்வோம்.

செலவை ஒப்பளவு முதலாகக் கொள்ளுதல்

(Expenditure as a Criterion)

"திறனுக்கேற்றபடி வரி செலுத்துவது என்பது எல்லாக் குடி மக்களிடமிருந்தும் சமமான அளவு தியாகத்தை வேண்டுவது; நிதி விவகாரங்களுக்குச் சம அளவு தியாகத்தைச் செலவு வீதாசாரத் திற்கு ஏற்றவாறு வரி கொடுப்பது என விளக்கலாம்," என்று ஒரு சமயம் வில்லியம் நியூ மார்ச்சு (William New-March) கூறினர். நுகர்ச்சியின்மீது விதிக்கப்படும் ஒரு வரி எல்லோர்மீதும் சமமாக விழுகிறது என்பது உண்மை. ஆயினும், எல்லோரிடமிருந்தும் அது சமமான அளவு தியாகத்தைக் கோருகிறதா என்பது கேள்வி. இதற்கு விடையாக ஒவ்வொருவருக்கும் தாம் மேற்கொள்ளும் தியா கத்தின் அளவைத் தீர்மானிப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது எனச் சொல்லப்படுகிறது. இக்கருத்தின்படி ஒருவர் தம் செலவைக் குறைப்பதால், தாம் கொடுக்கும் வரிகளின் தொகையைக் குறைத்துக் கொள்ளலாம். இதே ரீதியில், ஒருவர் குறைவாகப் பொருள் ஈட்டி, அரசாங்கத்திற்குக் கொடுக்கும் வருமான வரியின் தொகையை குறைத்துக்கொள்ளலாம் என்று நாம் வாதிக்கலாம். அவர் ஒன்றுமே சம்பாதிக்காவிடில் வருமான வரியாக அவர் யாதொன்றும் கொடுக்க வேண்டுவதில்லை. இவ்வித ரீதியில் வாதிடுவதால் கேலிக்கு இடமான முடிவுகளுக்கே வரவேண்டியிருக்கும்.

திறனாய்வு :

செலவை மட்டும் அடிப்படையாகக் கொண்டு வரி விதிப்பது அநீதியானது. இப்போது உள்ள சிக்கல் நிறைந்த நாகரிகத்தில் அது சாத்தியமுமன்று. இதனால், பல வகை நுகர்ச்சிப் பொருள்கள்மீது வரிகள் விதிக்க வேண்டி வரும். அதனால், அதை வசூல் செய்வதற் கான எந்திரம் மிக விரிவானதாகவும் செல்வு பிடிக்கக்கூடியதாகவும் இருக்கும்; மேலும், நுகர்ச்சி என்பது என்ன என்பதைத் தெளிவாக விளக்க வேண்டும். தொழிலை அபிவிருத்தி செய்வதற்காகச் செல விடப்படும் செல்வத்தின் பேரிலும் வரி விதிக்கலாமா அல்லது தனி யார் செலவின் பேரில் மட்டும் வரி விதிக்க வேண்டுமா என்பதை முடிவு செய்ய வேண்டும். இவ்விரண்டுக்கும் வேறுபாடு கற்பிப்பதில் உள்ள சிரமம் பெரிது. பலர் வரியிலிருந்து தப்பித்துக்கொள்வர். செலவழிக்கப்படாத செல்வம் வரி கொடாமல் தப்பித்துக்கொள்ளும். இதனால், நுகர்ச்சி குறையும்; குறையவே, அதனால் உற்பத்தியும் குறையும். இவ்வகையான வரி, தேய்வு வீதமாக இருக்கும்; ஏனெ னில், வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களின் பேரில் அதிகப் பளு ஏற்றப்படும். ஒருவர், தம் ஊதியம் அனைத்தையும் பிழைப்புக்கா

கவே செலவிட்டால், அவர் தம் முழுவருமானத்தின்மீதும் வரி செலுத்த வேண்டும். இவ்வகையாக வரி செலுத்துவதற்கு மிகவும் குறைந்த திறன் உள்ளவர்கள்மீது மிகக் கடுமையானதாக வரிப்பளு அமையும். சர் ஜோசையா ஸ்டாம்பு கூறுவது போல, ''பணத்தைச் செலவழிப் பதை மிகக் கடின வேலையாகக் கருதும் அளவுக்கு ஒருவர் செல்வந்த ராய் இருந்து, அவருடைய முயற்சியின்றியே செல்வம் மேலும் மேலும் கூடுமாயின், இதை அவர் பேரில் விதிக்கும் வரியைக் குறைப்பதற் கான காரணமாகக் கொள்ளலாமா? திறன் கொள்கையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு சேமிப்புகளுக்கு வரியினின்றும் விலக் களிப்பதை நேர்மையானதென்று கூற முடியாது.''

வருமானத்தை ஒப்பளவு முதலாகக் கொள்ளுதல்

(Income as a Criterion)

ஒருவருடைய வரி கொடுக்கும் திறனை அவர் வருமானத்தைக் கொண்டும் தீர்மானிக்கலாம். சர் ஜோசையா ஸ்டாம்பு வரிக்கு அடிப்படையாக வருமானத்தைக் கொள்வதற்கு வெவ்வேறு பட்ட ஆறு சோதனைகளைக் கூறுகிறார். முதல் சோதனை, அதன் அளவைப் பற்றியதாகும்; அதாவது, ஒரு தனியாளின் வருமானத்தின் அளவு. ஒருவரின் வருமானத்தைக் கணிப்பதற்கு நாம் ஓர் ஆண்டையே அடிப்படையாகக் கொள்கிறோம். இதைத்தான் கணியக்கூறு (quantitative aspect) என்கிறோம். திங்கள் ஒன்றுக்கு 500 ரூபாய் வருமானமுடையவர், ஆண்டொன்றிற்கு 4000 ரூபாய் வருமானமாக உடையவரைவிட அதிகப்பளுவை ஏற்கக்கூடும். வேறு வகையாகச் சொன்னால், ஒரே வருவாயைக் குறுகிய காலத்தில் பெறுவதற்குப் பதிலாக நீண்ட காலத்தில் ஒருவர் பெறுவாராகில், அவரது வரி கொடுக்கும் திறன் குறைகிறது. அவருடைய வருமானம் **மொத்த வருமானமா** (Gross Income) அல்லது **நிகர வருமானமா** (Net Income) என்பதையும் பரிசீலனை செய்ய வேண்டும். இப்பிரச்சினை யின் மற்றோர் அமிசம் வருமானத்தை அவர் எவ்வகையில் பெறுகிறார் என்பது. அதாவது, அவர் அடையும் வருமானம் அவர் ஈட்டிய வரு மானமா அல்லவா என்பது. தொழிலாளர் தொடர்ந்து வேலை செய்தால் தான் தொடர்ந்து வருமானம் பெறக்கூடுமென்றால், அது அவர் ஈட்டிய வருமானம். எடுத்துக்காட்டாக ஒரு பாட்டாளியின் கூலியை ஈட்டிய வருமானம் அல்லது (இன்னொருவர் தயவைப் பொறுத்த வருமானம்) எனலாம். ஏனெனில், அவன் வேலையினின்றும் விலகினால் அக் கணமே அவனுக்கு ஊதியமும் இல்லாமல் போகும். முதலீட்டி லிருந்து வரும் வட்டி, நிலம் அல்லது வேறு உடைமையிலிருந்து வரும் வருமானம் இவையனைத்தும் உழைப்பிலா வருமானம் (unearned income) எனக்கருதப்படுகின்றன. இவ்வேறுபாடு இப்போது ஈட்டிய

வருமானம் (Earned Income) என்றும், உழைப்பிலா வருமானம் என்றும் பொதுவாக வழங்கப்படுகிறது. வரி செலுத்துவோரின் குடும்ப நிலைகளைக் குறிப்பது அடுத்த சோதனையாகும். ஒருவருக்குக் குடும்ப பாரம் அதிகமாக இருக்குமாயின், அல்லது அண்டினோரின் தொகை அதிகமாக இருக்குமாயின், குறைந்த குடும்ப பாரம் உடையவரைவிட அவரது வரி செலுத்துந் திறன் குறைவாய் இருக்கும். ஆனால், இருவரும் ஒரே வருமானம் உள்ளவர்களாய் இருக்கலாம். புதிதாக வரி கொடுக்கும் இயல்பு வருமானத்தின் இயல்பைப் பொறுத்திருக்கிறது. வருமானம் ஓர் உபரித் தொகை அல்லதுவேறுபாட்டுக்குரிய இலாபமாக(Differential Gain) இருக்கக்கூடும். இதைப் **பொருட்டுறை மிகை வேறுபாடு** (Economic Surplus Distribution) எனலாம். சில வருமானங்கள் அவற்றை ஈட்டித் துய்ப்பதற்காக எடுத்துக்கொண்ட செலவைவிட அதிகமாய் இருக்கலாம். இந்த ஆறு சோதனைகளையும் ஒரு சேர எடுத்துக்கொண்டால் திறனைச் சோதிப்பதற்கு மிகத் திருத்தியான முறையாகக் காணப்படுகிறது.

உடைமையை ஒப்பளவு முதலாகக் கொள்ளுதல் (Property as a Criterion)

முதலாம் எலிசபெத்துக் காலத்தவர்களுக்கு வரி கொடுக்கும் திறனின் ஒப்பளவு முதல் உடைமையைப்பெற்றிருப்பது அல்லது தம் அனுபோகத்தில் வைத்திருப்பது ஆகும்.இவ்வித வரி மிகப் பழமையானது. எல்லா ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் இது மிகப் பொருத்தமான வரி. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பல ஊர்களிலும் பொதுச்சொத்து வரி சிறந்த அமிசமாய் இருந்தது; இன்னும் இருக்கிறது. அமெரிக்க நாட்டில் பல மாநிலங்களிலும், சுவிட்ஸர்லாந்தில் பல கான்டன்களிலும் (Cantons) உடைமை வரி முக்கியமான வருமானம் மூலமாகப் பயன்படுத்தப்படுகிறது. பிற வரிகளுக்குத் துணையாகப் பிரஷ்யா, ஹாலந்து (Halland), இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளிலும் இவ்வரி பயன்படுத்தப்படுகிறது.

திறனாய்வு

இரண்டு காரணங்களை முன்னிட்டுப் பொதுச்சொத்து வரி மிகக் கடுமையாகத் தாக்கப்படுகிறது. (1) வரிகொடுக்கும் திறனை அறிய ஏற்ற உரைகல் சொத்து அன்று என்றும், அதனால் இவ்வரி அநீயானதென்றும் வாதிக்கப்படுகிறது. (2) பொதுச்சொத்து வரி ஏற்றதன்று என்றும், திறமைச் சொத்துகளைக் (Personal Property) கண்டுபிடிப்பதிலும் அவற்றை மதிப்பீடு செய்வதிலும் நீதியான முறையில் நிருவாகம் செய்வது மிகக் கடினமாய் இருக்கிறது என்றும், இவ்வரியினால் மூலதனத்தின் இயக்கங்களுக்கும், முதலீட்டின் உருவங்களுக்கும் குந்தகம் ஏற்படுகிறது என்றும் வாதிக்கப்படுகிறது.

மூலதன வருமானத்தை ஒப்பளவு முதலாகக் கொள்ளுதல்

(Capital as a Criterion)

வருமான வரி நிலையாக நாட்டப்பெற்ற நாடுகளில், மூலதனத்தின் மீது இன்னொரு வரியும் விதிக்க வேண்டும் என்று சில சமயம் யோசனை கூறப்படுகிறது. வரி விதிப்பதால் விளையும் சாத்தியமான பயன்களைப்பற்றிப் பொருளியற்புலவர்களுள் கருத்து வேற்றுமை காணப்படுகிறது. ரிக்கார்டோவும் (Ricardo), டாக்டர் டால்டனும், இன்னும் சிலரும் இவ்வரியை ஆதரிக்கிறார்கள். பேராசிரியர் பிகு என்பவரும் பழமைப் பற்றுள்ள பொருளியற்புலவர் சிலரும் இக்கொள்கையை மூர்க்கமாக எதிர்க்கின்றனர். ஏனெனில், அவர்களுடைய கருத்துப்படி இது வேறுபாடு கற்பிக்கும் ஒரு வருக்கச் சட்டமாகும் (Discriminatory and Class Legislation). பின்னர் ஓர் அதிகாரத்தில் மூலதனத்தைப் பற்றிய வரி பற்றிச் சற்று விரிவாக ஆராய்வோம்.

எதிர் பாராத வருமானத்தை ஒப்பளவு முதலாகக் கொள்ளுதல்

(Windfall as a Criterion)

சாதாரணமாக ஒருவருடைய நிரந்தர வருமானத்தைக் கொண்டு அவருடைய வரி கொடுக்கும் திறனை நிர்ணயிப்பது வழக்கமாகும். ஆயினும், அவர் சாதாரணமாக எதிர்பார்த்ததற்கு மேலாகவே வருமானம் வந்தால், இக்கூடுதல் வருமானத்தை அவருடைய வழக்கமான வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்த வரை உபரி என்றே கூற வேண்டும். (வருமானம் எதிர் பாராத முறையில் கிடைத்ததுமன்றி அதை அடைவதற்கேற்ற தகுதியும் இல்லாமற்போனால்) இவ்வகையான வருமானத்திற்கு வரி செலுத்தும் திறன் மிக அதிகமான அளவு இருப்பதாக எண்ணப்படுகிறது. எதிர் பாராத வருமான இனங்களின் மீது வரி விதிப்பதற்குச் சொத்தின் பெறுமான உயர்வின்மீது விதிக்கும் வரிகளும் (Increment Value Duties), ரிவர்ஷன் வரிகளும் (Reversion Duties), மிகையிலாபவரியும் (Excess Profit Tax) உதாரணங்களாகும். நீதி, வரி கொடுக்கும் திறன் இவை இரண்டின் அடிப்படையிலும் எதிர் பாராத வருமானத்தின்மீது வரிகள் விதிப்பதை நீதியானதெனலாம்.

பதினுன்காமதிகாரம்

ஒரு நல்ல வரி விதிப்பு முறையின் சில தனிச் சிறப்புகள்

(Some Features of a Good Tax System)

"இப்பொழுது இருக்கும் வரி முறையை அறவே அகற்றிவிட்டு முற்றிலும் ஒரு புதிய வரி முறையை நிருமாணிப்பது எந்த ஒரு நாட்டிற்கும் சாத்தியமானதன்று. இப்பொழுது இருக்கும் வரி முறையைத் திருத்த வேண்டுவது இன்றியமையாததும், பயன்தரக் கூடியதுமாகும். தீய வரிகளை நீக்கிவிட வேண்டும். புதிய அரசுக்குப் பல தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும். அவை அனைத்தையும் பூர்த்தி செய்யும்படி ஒப்புமையில் நல்ல வரிகளைத் திருத்தி அமைக்க வேண்டும். 'உபரியின்' (Surplus) பெரும்பங்கையும் கொள்ள வேண்டும்"—(ஹாப்ஸன்)

ஒரு பரிபூரண வரி முறையை நிறுவக் கூடுமானல், அது நல்லது தான். ஆனல், குறைபாடில்லாத ஒரு வரியை விதிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் ஒரு போதும் இருந்திராத, இப்பொழுது இல்லாத, ஒருபொழுதும் இருக்க முடியாத வரி முறையைப்பற்றிக் கனவு காண்கிருர்கள். குறைபாடில்லாத ஒரு பரிபூரண வரி முறையை அமைப்பது சாத்தியமாயிராவிட்டாலும், ஒப்புமையில் கூடிய வரை ஒரு சிறந்த வரி முறையை அமைக்கக்கூடும்.

ஒரு நல்ல வரி முறை ஆடம் ஸ்மித்து இயற்றிய வரி பற்றிய விதிகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். தவிரவும், அது பல வரிகளைத் தன்னகத்தே கொண்டதாகவும் இருக்க வேண்டும். அரசாங்கத்திற்கு வேண்டிய வருமானத்திற்கு ஒரே வரியை மட்டும் நம்பி இருப்பதில் பயனில்லை. எவ்வளவு ஏழைகளாய் இருந்தாலும், ஏதாவது ஒரு வருமானத்தைப் பெறும் வரையில் அவர்களும் அரசாங்

கத்தின் ஆதரவிற்கு ஏதாயினும் வரியாகக் கொடுக்க வேண்டும் என்பதும் ஒப்ப முடிந்ததே. நுகர்ச்சிப் பொருள்களின்மீது வரிகள் விதிப்பதற்குத் தலையாய காரணம் இதுவேயாகும். ஒரு நல்ல வரி முறையில் சில நேர்முக வரிகளும் இருக்க வேண்டும். அவ்வகையான வரித்திட்டத்தில் வரி வருமானத்தின் பெரும்பகுதியை ஒரு சில வரிகளிலிருந்தே பெறக்கூடியதாக இருக்க வேண்டும். சமுதாயத்தின் நலனுக்காகப் போதைநீர் போன்ற சில பொருள்களின் நுகர்ச்சியைக் குறைப்பதற்கு வரிகளைப் பயன்படுத்துவது விரும்பத்தக்கது. போகப் பொருள்களின்மீது வரிகள் விதிப்பதற்கும் இத்திட்டத்தில் இடமுண்டு. பிற பொருள்களின்மீதும் வரி தண்டலாம். ஆயினும், வரிகளின் தொகையைக் குறிப்பிட்ட வரையறைக்குள் கட்டுப்படுத்துவது விரும்பத்தக்கது. இவை ஒரு நல்ல வரி முறையின் சில அமிசங்களாகும்.

பதினைந்தாமதிகாரம்

வரி விதிப்புப்பற்றிய நிதிக்குப் புறனுய நோக்கங்கள்

(The Non-fiscal Purposes of Taxation)

வரி பற்றிய இரண்டாம்படி நோக்கங்கள்

(The Secondary Objects of Taxation)

வருமானத்தைப் பெறுவதற்கு மட்டுமன்றி, வேறு நோக்கங்களுக்கும் வரி தண்டும் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம். உதாரணமாக, வரிப்பளுவைச் சரியாகப் பங்கிடுவதற்காகவும் வரிகளைப் பயன்படுத்தலாம். அண்மைக்காலத்தில் வரி பற்றிய நோக்கங்களைப் பற்றிய கருத்துகள் விரிவு அடைந்துள்ளன. இக்கருத்து, பிட்டு என்பவர் காலத்திலிருந்து கிளாட்ஸ்டன் காலம் வரை பிரிட்டனில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிதிக் கொள்கையிலிருந்து பிறந்ததாகும். முற்காலத்தில் வருமானத்திற்காக மட்டுமே வரி விதிக்க வேண்டும் என எண்ணினர். இத்தூய நிதிக் கோட்பாட்டிற்கு மாறுக ஜெர்மானியப் பொருள் வல்லுநரான அடால்ப் வாக்னர் என்பவர், வரி பற்றிய சமூக அரசியற்கோட்பாட்டை விளக்கினர். வாக்னரின் கருத்துப்படி வருமானத்தில் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு வரியை ஒரு கருவியாக அரசாங்கம் பயன்படுத்தலாம். இவ்வகையாக வரி விதிப்புச் செல்வப் பங்கீட்டை ஒழுங்குபடுத்துவதாகக் கருதப்படுகிறது.

வரியின் இரண்டாம்படி நோக்கங்களாவன, செல்வப் பங்கீட்டில் அபிவிருத்தி, தேசியத் தொழில் பாதுகாப்பு, நுகர்ச்சியை ஒழுங்கு படுத்துதல் (the regulation of consumption), பொதுமக்கள் சுகாதார மேம்பாடு, ஒழுக்க உணர்ச்சி, இன்ன பிற. பொருளியற்புலவர் பலர் இப்பொழுது இருக்கும் நெறியினின்றும் வேறு நெறிக்குத் திரும்பி நாட்டை முன்னேறச் செய்வது அரசாங்கத்தின் கடமை என இக் காலத்தில் கருதுகின்றுர்கள். மார்ஷல் (Marshall) கருத்துப்படி,

"பெருவாரியான மக்களின் நலவசதியைப் பெருக்கும் வகையில், பொருட்டுறையிலும் சமூகத் துறையிலும் சீர்திருத்தங்களைச் செய்வதற்கு அரசாங்கம் தன் அதிகாரங்களைப் பயன்படுத்தலாம்." இக் கருத்துப்படி வரிப் பிரச்சினை ஆக்கச் சார்பான (constructive ethics) நெறியைச் சேர்ந்ததாகும். அதைச் செயல்முறையில் கொள்ளும் பொழுது அதனால் பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் ஏற்படும் விளைவுகளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தவறான ஒரு கருத்து

வருமானத்திற்காக மட்டும் வரி விதித்தல் என்பது தவறான கருத்தாகும். டால்டன் கூறுவது போல, "வருமானத்தைத் திரட்டுவதன்றி வேறு பல விளைவுகளும் எல்லா வரிகளாலும் ஏற்படுகின்றன. வேண்டிய வருமானத்தைத் திரட்டுவதோடு பொதுவாகச் சிறந்த விளைவுகளைத் தரும் வரிகளே சிறந்தனவாகும்." ஆயினும், வருமானத்திற்காக மட்டும் வரி விதித்தல் என்ற எண்ணம் பிரிட்டிஷ் நிதிக் கொள்கை வரன்முறையில் ஆழமாகப் பதிந்திருப்பதால், 1894இல் இறப்பு-வரிகளைத் திருத்திய பொழுது ஹார்கோர்ட்டு (Harcourt) வேறு நோக்கங்கள் தமக்கு இல்லையென்று கூறினார். ஆயினும், அவருடைய கொள்கையால் பிறக்கும் இறுதி விளைவுகள் அறிவுடைய அனைவருக்கும் தெரிந்தது. அதாவது, பெரிய பண்ணைகளைச் சிறிது சிறிதாகத் துண்டாடுவதே.

எதிர் வாதங்கள்

(Objections)

" ஒரு முக்கியமான நோக்குடன் (அதாவது வருமானத்திற்காக மட்டுமே வரி விதித்தல் என்பது) அதினின்றும் வேறுபட்ட ஒரு நோக்கை (அதாவது செல்வத்தின் ஏற்றத்தாழ்வுகளைப் பரிகரிப்பதற்காக வரி விதித்தல்) விரவுவது இரண்டிலுமே தோல்வி வரக்கூடிய நிலையை உண்டாக்குவதாகும். பொதுவுடைமை ஆட்சியை நிறுவுவதே (நம்) குறிக்கோளானால், வரியைத் திருத்துவதைவிட நேரிடையாகவும், மிகத் திறமையாகவும் பொதுவுடைமை ஆட்சியை நிறுவக் கூடிய வழிகள் இருக்கின்றன." - (பாஸ்டபிள்)

பேராசிரியர் டாசிக் (Professor Taussig) வரியின் இறுதி நோக்கங்களைக் (ulterior purposes-taxation) பின்குறிக்கும் காரணத்தால் மறுக்கிறார். "சரியென்று சொல்ல முடியாத ஏற்றத்தாழ்வுகளைத் திருத்துவதே வளர்வீத வரியின் நோக்கமானால், அது **விளைவுகளைப்** பற்றி ஆராய்கிறதே தவிர, **காரணங்களைப்** பற்றி ஆராயவில்லை

என்பது தெளிவு. விஷயத்தின் அடிப்படைக்கே சென்று அதற்கான காரணங்களை ஆராய்வது சிறந்ததாகும். பகுத்தறிவுக்கு ஒத்த கல்விக்குப் பரவலாக வசதிகள் அளிப்பதன் மூலம் எல்லோருக்கும் சம வாய்ப்பை வழங்கலும், முற்றுரிமைத் தொழில்களைக் (monopoly industries) கட்டுப்பாடு செய்வதன் மூலமும், அநியாய முறையில் இலாபத்தைச் சம்பாதிப்பதற்கான வாய்ப்புகளை அகற்றுவதன் மூலமும், ஏற்றத்தாழ்வுகளைப் பல வகையிலும் குறைக்கக்கூடும். இம்முறைகளெல்லாம் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு வரி முறையைப் பயன்படுத்துவதைவிட மிகச் சிறந்த முறைகளாகும்.''

முடிவு :

'வருமானத்திற்காக வரி விதித்தல்' என்பது விக்டோரியா இராணியார் காலத்துக் கோஷமாகும். நாம் எல்லோரும் பணத்திற்காகத் திருமணம் செய்துகொள்வது தவறு எனவும், ஆனல் அதே சமயம் பணம் இருக்கிறவிடத்தில் திருமணம் செய்வது பாராட்டத்தக்கதென வும் கேட்டிருக்கிருேம். அதேபோல, வருமானத்திற்காக மட்டுமல்லாது தண்டிப்பது, அல்லது பொருள் நுகர்ச்சியைக் குறைப்பது என்பன போன்ற நோக்கங்களுக்காக வரி விதிப்பது சில வேளைகளில் தவருனதாக இருக்கலாம். அவற்றை அபராதம் அல்லது தண்டனை என்று தான் வழங்கவேண்டுமே தவிர, வரி என்று வழங்க முடியாது. ஆயினும், ஒரு வரி முறையின் மூலம் சிறந்தனவாகக் கருதப்படுவனவற்றிற்கு அதைரியம் ஊட்டாமலும், தீய போக்கை விளைப்பனவற்றிற்கு நாட்டில் தைரியமூட்டாமலும் வருமானத்தைத் திரட்டுவது என்று முடிவு செய்தால் நம்முடைய தெளிந்த பகுத்தறிவே இவ்வகை வரி முறைக்கான முகாந்திரமாகும்.''—(சர் ஜோசையா ஸ்டாம்பு)

பதினைருமதிகாரம்

வரி விதிப்பின் நிலைப்பாடு

வரி நிலைப்பாட்டின் பொதுவான கொள்கைகள்

(The Incidence of Taxation)

வரி நிலைப்பாட்டின் பிரச்சினையாவது, யார் வரியைக் கொடுக்கிருர் என்பதைத் தீர்மானிப்பது. யார்மீது வரிப்பளு விழுகிறது அல்லது நிலையாகத் தங்குகிறது ? நாம் இதனை இறுதி வரி நிலைப்பாடு எனலாம் (final incidence). இதன் பொருளாவது, இறுதியில் வரி எவ்விடத்தில் தங்குகிறது என்பது. வரியை இறுதியாகக் கொடுப்பவர் வேறு யாருக்கும் அதைப் புரட்டக்கூடியதாக இருக்கக்கூடாது. வரி நிலைப்பாட்டிற்கும் வரியின் தாக்குக்கும் (impact of taxation) எடுத்துக்காட்டு வருமாறு. சிகரெட்டுகளின்மீது விதிக்கப்படும் வரி, முதன் முதலில் அதை இறக்குமதி செய்வோரால் கொடுக்கப்படுகிறது ; இறுதியில் அதைக் கொடுப்பவர் அதை நுகர்வோரே. தொழில் நுட்ப மொழியில் கூறவேண்டுமானல், இறக்குமதி செய்வோரின்மீது **வரித் தாக்குதலும்**, நுகர்வோரின்மீது வரி **நிலைப்பாடும்** ஒறுக்கின்றன. ஆகவே, வரியின் தாக்குதல் என்பது யாரிடமிருந்து வரி வசூலிக்கப்படுகிறதோ, அவரையே சாரும். யார் இறுதியாக அதைக் கொடுக்கிருரோ, அவர் தலையில் நிலைப்பாடு விழும்.

வரிப்பளு ஒருவரிடமிருந்து இன்னெருவருக்கு மாற்றப்படும் முறைதான் **வரி புரட்டுகை** (shifting of tax) என்று கூறப்படுகிறது (இங்குக் கூறப்பட்ட உதாரணத்தில் இறக்குமதி செய்வோரிடமிருந்து நுகர்வோருக்குப் புரட்டப்பட்டது போல).

வரிகள் பல வகைகளிலும் புரட்டப்படுகின்றன. வரி நிலைப்பாட்டைப் பின் தொடர்வது குழப்பத்தைத் தருவதாய் இருக்கிறது. சூழ்நிலைகளின் சிக்கலால் இவ்வரியின் தெள்ளிய நிலைப்பாட்டைத்

தொடர்ந்து செல்வது கடினமாக இருக்கிறது. இதனால் டாக்டர் கானன் (Dr. Cannan) 'நிலைப்பாடு' என்ற சொல்லை முற்றும் அகற்றிவிடலாம் என யோசனை கூறுகிறார். ஆயினும், "இச்சொல் நிலையாக, நன்றாக, வழக்கில் வந்துவிட்டதாலும், வசதியாக இருப்பதனாலும் இவ்வகையாக இச்சொல்லைத் துறந்துவிடுவதற்கில்லை," என பாஸ்டபிள் கூறுகிறார்.

ஒவ்வொரு வரியினாலும் பல பொருளாதார விளைவுகள் ஏற்படுகின்றன. பொதுப் பிரச்சினையான வரி விளைவுகளினின்றும் சிறப்பான பிரச்சினையான நிலைப்பாட்டைத் தனியாகப் பிரிக்க இயலுமா என்று வினவப்படுகிறது. பேராசிரியர் பிளன் கூறுவது போல, "இப் பிரச்சினையைப் பரிசீலனை செய்த ஆசிரியர்களைப் போன்றே நாமும் இதில் (வரியின் விளைவுகளினின்றும் வரி நிலைப்பாட்டைப் பிரிப்பது) வெற்றி பெறாமல் போகலாம். இதிலுள்ள சங்கடம் விளைவுகள் நிலைப்பாட்டுடன் விரவுவதும், நிலைப்பாடு விளைவுகளுடன் விரவுவதுமாம்.

"நாம் வரி விதிப்பின் பணப்பளுப்பங்கீட்டைப்பற்றி ஏதாவது சொல்ல விரும்பினால், அது வரியினால் ஏற்படும் விளைவுகளினின்றும் வரி நிலைப்பாட்டைப் பிரிக்க முயற்சி செய்ய வேண்டும் என்பதேயாகும். பல கோட்பாட்டு வாதிகளும் பாமர மக்களும் இவ்விஷயத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றார்கள்."—(டாக்டர் டால்டன்)

வரி புரட்டுகை, வரி நிலைப்பாடு, வரி விளைவுகள் இம்மூன்றினையும் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள்வதற்கு ஒரு விளக்கம் தரலாம். இங்கிலாந்திலிருந்து புத்தகங்களை இந்தியப் புத்தக வியாபாரி ஒருவர் தருவிக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்புத்தகங்களின்மீது இறக்குமதி வரி விதிக்கப்படுகிறதென்றும், அப்புத்தகங்கள் மாணவர்களுக்கு விற்கப்படுகின்றனவென்றும் வைத்துக்கொள்வோம். புத்தக விற்பனையாளர் இறக்குமதி வரியைச் சுங்கச் சாவடியிலேயே கொடுத்துவிடுகிறார். அவர் மாணவர்களுக்குப் புத்தகங்களை விற்கும்பொழுது இறக்குமதி வரியையும் கூட்டி விற்கிறார். அதாவது, வரியைப் **புரட்டுகிறார்.** புத்தகங்களை வாங்கும் மாணவர்கள் வரியைத் தவிர்க்க முடியாது ; வேறு யார்மீதும் புரட்டவும் முடியாது. ஆகவே, நாம் **வரி நிலைப்பாடு** மாணவர்களையே ஒறுக்கிறது என்று சொல்லலாம். வரி விதிக்கப்பட்டதன் விளைவாகப் புத்தகங்கள் குறைவாகவே விற்பனையாகின்றன. வெளியிடுவோரின் இலாபம் புத்தக விற்பனையாளரின் இலாபம் எல்லாம் குறைகின்றன. புத்தக விற்பனையாளரின் குமாஸ்தாக்களுக்கும், அச்சிடுவோருக்கும் தேவை குறைவாக இருப்பதால், அவர்களின் ஊதியமும் குறைகிறது. மேலும்,

சில மாணவர்களால் புத்தகங்களை வாங்க முடியவில்லை. வரி இல்லையானல், அவர்கள் புத்தகங்களை வாங்கியிருக்கக்கூடும். இவையனைத்தும் வரியால் ஏற்பட்ட விளைவுகள். இவ்விளைவுகளினல் அரசாங்கத்தின் வருமானம் கூடுவதில்லை. வரி அதிகமாக இருந்தால், இவற்ருல் ஏற்படும் விளைவுகள் கடுமையாக இருக்கக்கூடும்.

வரி நிலைப்பாட்டைக் கட்டுப்படுத்தும் சில பொதுக் கொள்கைகள் உள. டாக்டர் டால்டன் அவற்றைப் பின் வருமாறு கூறுகிருர்:

1. மற்றவை மாருதிருப்பின் (other things remaining equal) எவ்வளவுக்கெவ்வளவு ஒரு பொருளுக்குள்ள தேவைக்கு அதிக நெகிழ்ச்சி இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு வரி நிலைப்பாடு விற்பனையாளர் மீதே இருக்கும். தேவை அதிக நெகிழ்ச்சியுடையதாய் இருந்தால், விலை ஏற்றம் காரணமாக அப்பொருளுக்குள்ள தேவை மிகவும் குறையும். ஆகையால், வரித்தொகையை விலையுடன் கூட்டுவதற்கு விற்பனையாளர் தயங்குவர். அவரே வரியைக் கொடுத்துவிடுவர்.

2. மற்றவை மாருதிருப்பின் எவ்வளவுக்கெவ்வளவு ஒரு பொருளின் சப்ளை அதிக நெகிழ்ச்சியுடையதாய் இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு வரி நிலைப்பாடு வாங்குவோரின் மீதிருக்கும். சப்ளை அதிக நெகிழ்ச்சியுடையதாய் இருந்தால், வரி காரணமாக அடக்க விலை ஏறுதலால் சப்ளை மிகவும் குறையும். குறைந்த சப்ளையால் விலை ஏறும். அதாவது, விற்பனையாளர் வரியை வாங்குவோரின்மீது புரட்டுவர்.

3. ஒரு பிரிவைச் சார்ந்த ஒரே ஒரு பொருளின்மீது மட்டும் விதிக்கப்பட்ட வரியைக்காட்டிலும், அப்பிரிவைச் சேர்ந்த எல்லாப் பொருள்களின்மீதும் விதிக்கப்பட்ட ஒரு வரி புரட்டப்படுவது சாத்தியம். எடுத்துக்காட்டாக, பான வகைகளான காப்பி, கொக்கோ, ஓவல்டின், தேயிலை இவற்றில் தேயிலைமீது மட்டும் ஒரு வரி விதிக்கப்பட்டால், விற்பனையாளர் வாங்குவோரின்மீது அவ்வரியைப் புரட்டத் தயங்குவர். ஏனெனில், வாங்குவோர் காப்பி, கொக்கோ, ஓவல்டின் முதலான பிற பான வகைகளை வாங்கக்கூடும். ஆனல், இப்பிரிவைச் சேர்ந்த எல்லாப் பான வகைகளின்மீதும் வரி விதிக்கப்பட்டால், அதை வாங்குவோரின்மீது புரட்டுவது மிக எளிது.

4. வரித்தொகை மிகக் குறைந்ததாக இருப்பின், அது அநேகமாய்ப் புரட்டப்படாது. மார்க்கட்டை விலை ஏற்றத்தால் குழப்புவதை விற்பனையாளர் விரும்பார். ஆகவே, அவர்கள் ஒரு சிறிய தொகையை வரியாகக் கொடுப்பதைப் பொருட்படுத்த மாட்டார்கள்.

5. அழுகும் பொருள்களின்மீது ஒரு வரி விதிக்கப்பட்டால், அது விற்பனையாளரிடமே ஒட்டிக்கொள்கின்றது. ஆனால், நீடித்த நுகர்ச்சிப் பொருள்களின்மீது ஒரு வரி விதிக்கப்பட்டால், அது வாங்குவோரின்மீது புரட்டப்படுகிறது. முன்னையதில் தேவையும் பின்னையதில் சப்ளையும் முக்கியமான அமிசமாகும்.

6. வரி நிலைப்பாட்டை நிர்ணயிப்பதில் மூலதனத்தின் புடை பெயர்ச்சியும் (migration of capital) ஓர் இன்றியமையாத அங்கம் வகிக்கிறது. தமது மூலதனத்தைப் பிற நோக்கங்களுக்காகத் திருப்ப முடியாதபோதும், தம் சரக்குகளுக்கு மாற்றுச் சந்தை இல்லாத போதும் உற்பத்தியாளர் ஒருவர் வரியைப் புரட்டக்கூடிய நிலையில் இல்லை.

7. முடிந்த பண்டங்களின்மீது விதிக்கப்படும் வரியைக்காட்டிலும் மூலப் பொருள்கள்மீது விதிக்கப்படும் வரி எளிதாகப் புரட்டப்படும். மூலப் பொருள்களைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட நபருக்கு, தாம் விலை கொடுத்து வாங்கும் மூலப் பொருள்களின் கிரயத்திலிருந்து வரித்தொகையைக் குறைப்பதற்கும், அம்மூலப் பொருளைப் பயன்படுத்திச் செய்யப்படும் பொருளின் விலையை வரித் தொகைகளோடு கூட்டுதற்குமாக இரண்டு வகையிலும் அனுகூலம் பெறக்கூடிய வசதி இருக்கிறது. முந்தியது **பிற்பட்ட புரட்டுகை** (backward shifting) என்றும், பிந்தியது **முற்பட்ட புரட்டுகை** (forward shifting) என்றும் கூறப்படும்.

8. வரி விதிக்கப்படும் ஒரு பொருள், **மாறாது** (constant) வளர்ந்து செல்லும் (increasing) அல்லது குறைந்து செல்லும் (diminishing) செலவுகளை உடையதாய் இருந்தால், புரட்டுகையின் போக்கும் பல்வேறுபட்ட பொருள்களுக்குப் பல்வேறு விதமாய் இருக்கும். ஒரு பொருள் மாறாச் செலவுடன் உற்பத்தி செய்யப்பட்டால், அதன் வரி நிலைப்பாட்டைப்பற்றி யாதும் தெளிவாகக் கூற முடியாது. வரி நிலைப்பாட்டைப் பற்றிய பொதுவான விதிகள், வரி யாரால் கொடுக்கப்படுகிறது என்பதை நிர்ணயிக்கும். வளர்ந்து செல்லும் செலவில் ஒரு பொருள் உற்பத்தி செய்யப்பட்டால், வரியைப் பெரும்பாலும் புரட்டக்கூடும். தேய்ந்து செல்லும் செலவில் ஒரு பொருள் உற்பத்தி செய்யப்பட்டால், பொதுவாக வரி புரட்டப்படமாட்டாது. ஏனெனில், தேய்ந்து செல்லும் உற்பத்திச் செலவிற்கு மேலாகக் கிடைக்கும் உபரியின்மீதுதான் வரி விதிக்கப்படுகிறது.

9. முற்றுரிமை நிலைகளில் (monopolistic conditions) ஒரு பொருள் உற்பத்தி செய்யப்படுமாயின், வரியைப் புரட்டுவது எளிது. ஏனெனில், முற்றுரிமை உடையவர் தமக்குப் பெரிய இலாபம் வரக்கூடிய வகையில் விலையை நிர்ணயிக்கலாம். ஆனால் இதற்கு,

மாருகப் போட்டி நிலையின்கீழ் உற்பத்தி செய்யப்படும் பொருளின்மீது வரி விதிக்கப்பட்டால், அது விற்பனையாளரையே பற்றிக்கொள்கிறது.

10. ஒரு வளர்வீத வரியைக் காட்டிலும் ஒரு வீதாசார வரியைப் புரட்டுவது எளிது. வளர்வீத வரி உபரி வருமானத்தின் மீது விழுகிறது. வீதாசார வரி எல்லா வருமானங்களின்மீதும் சமமல்லாத வகையில் விழுகிறது. உபரியில்லாத எந்த நபரும், வரியைக் கொடுக்க முடியாமையால், பிறர்மேல் வரியைப் புரட்ட முயல்கின்றனர்.

11. ஒரு பெறுமான வீத வரியைக் (advalorem duty) ஒரு தனிப்பயன் வரியைப் (specific duty) புரட்டுவது எளிது. எல்லாப் பொருள்களின்மீதும் அவற்றின் எடை, பருமன் இவற்றிற்குத் தக்கவாறு ஒரு தனிப்பயன் வரி விதிக்கப்படுகிறது. ஆனல், கீழ் நிலையில் உள்ள உற்பத்தியாளர்கள் வரியைச் செலுத்த இயலாது பிறர்மேல் வரியைப் புரட்ட விழைகிருர்கள். பெறுமான வரி பொருள்களின் மதிப்பின்பேரில் விழுவதால், மேல் நிலையில் உள்ள உற்பத்தியாளர்களையே கடுமையாக ஒறுக்கும். அவர்களுக்கு வரியைப் புரட்ட வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை.

12. பொருளாதார வாரத்தின்மீது (economic rent) விதிக்கப்படும் ஒரு வரி புரட்டப்படுவதில்லை. ஏனெனில், வாரம் விலையால் நிர்ணயிக்கப்படுகிறது. மேலும், வாரம் ஓர் உபரியாகும்.

பதினேழாமதிகாரம்

குறிப்பிட்ட சில வரிகளைப்பற்றிய நிலைப்பாடு

(Incidence of Particular Taxes)

வருமான வரியின் நிலைப்பாடு–வருமான வரி விலைகளைப்பற்றிய முரண்பட்ட கருத்துகள் :

தாம் விற்கும் பொருளின் விலையை ஏற்றுவதன் மூலம் ஒரு வியாபாரி வருமான வரியின் எத்துணைப் பங்கை வாங்குவோரின்மீது புரட்டமுடியும் என்பது விவாதத்திற்குரிய பொருளாகும். வியாபாரிகள் வருமான வரியைக் குறைக்க வேண்டுமென விரும்புகின்றனர். அதனால், தாம் எதிர்பார்த்த இலாபத்தைப் பெறுவதற்காக, உற்பத்தியாளர்கள், வருமான வரியை விலையேற்றத்தின் மூலம் நுகர்வோருக்குப் புரட்டுகிறார்கள் எனக் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதனால், பொருள்களின் தேவை குறைகிறது; குறையவே, வியாபாரத் தொழிலில் குந்தகம் ஏற்படுகிறது. இவ்வாறு வருமான வரி நாட்டிற்கே ஒரு பெரிய பளுவாய் இருக்கிறது. பொருட்புலவர்கள் இக்கருத்தை மறுக்கின்றனர். ஒரு பொருளின் விலை இறுதி நிலை உற்பத்தியாளரின் (marginal producer) ஆக்கச் செலவால் நிர்ணயிக்கப்படுகிறது. இறுதி நிலை உற்பத்தியாளர் இலாபம் அடைவதில்லை. ஆகவே, அவர் வருமான வரியும் கொடுப்பதில்லை. ஆகையால், வருமான வரி விலையில் நுழைவதில்லை. பிரிட்டனில் வரி விதிப்பு, தேசியக் கடன் இவற்றைப்பற்றி விரிவாக ஆராய்ந்த கோல்வின் குழுவினர் (Colwyn Committee) **விலையை நிர்ணயிப்பதில்** வருமான வரி இடம் பெறவில்லை என்பதற்குத் தக்க சான்றுகள் இருக்கின்றன என்ற முடிவுக்கு வந்தனர்.

தனியாரின் வருமானத்தின்மீது விதிக்கப்படும் வருமான வரி அவற்றைப் பெறுவோர் பிழைப்பு மட்டத்தை (subsistence level) அடைந்

தால் ஒழியப் புரட்டப்படுவதில்லை. உபரியான நிகர வருமானத்தின் மீது வரி விதிப்புப் புரட்டுவதில்லை.

போட்டியின்கீழ்க் கிடைக்கும் இலாபத்தின்மீது வருமான வரியின் நிலைப்பாடு

போட்டி நிலையில் ஒரு வியாபாரி மட்டும் விலையை ஏற்றுவது சாத்தியமன்று. ஏனெனில், அவருடைய சகாக்களே விலையைக் குறைத்து விற்கக்கூடும். இதனால், ஒரு வியாபாரி தம் சகாக்களின் நடவடிக்கைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதனுடன் தம் வாடிக்கைக்காரர்கள் எவ்விதமாகச் செயற்படுவர் என்பதையும் யோசிக்க வேண்டும். அவர் விற்கும் பொருளிற்கான தேவை மிகவும் நெகிழ்ச்சி உடையதாக இருக்கலாம். விலையேற்றத்தினால் தேவை மிகக் குறைவதால் ஏற்கெனவே இருந்ததைவிட நிகர இலாபம் குறையலாம். ஒரு வேளை மார்க்கட்டில் பதிலிகள் (substitutes) இருக்கலாம். ஒரு வியாபாரி விலைகளைக் கூட்டினால், நுகர்வோர் பதிலிகளை வாங்கக்கூடும். இவ்வகையான சூழ்நிலையில் விலைகள் குறைவாகவும் கட்டுக்கடங்கியும் இருக்கும். சப்ளையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் விலையை ஏற்ற முயல்வதும் வெற்றியைத் தாராது. ஏனெனில், போட்டி மார்க்கட்டில் ஒரு உற்பத்தியாளரின் உற்பத்தி மட்டும் விலையைப் பாதிப்பதற்குப் போதியதாகாது. இவ்வாறு போட்டி நிலைகளில் வருமானவரி உற்பத்தியாளரால் நுகர்வோர் மீது புரட்டப்படுவதில்லை ; வரி உற்பத்தியாளர்களையே ஒறுக்கிறது.

முற்றுரிமையின்கீழ் ஏற்பட்ட இலாபத்தின்மீது விதிக்கப்பட்ட வருமான வரியின் நிலைப்பாடு

முற்றுரிமை உடைய உற்பத்தியாளர் சாதாரணமான விலையைக் கூட்டி வரியைப் புரட்ட முடியாது. ஏனெனில், பூரண முற்றுரிமைகள் மிக அருமை. அது மட்டுமன்றி, ஒரு மிதமான விலையை விதிக்கும் போது மட்டுமே ஒரு கம்பெனிக்கு மார்க்கட்டின்மீது ஓரளவு ஆதிக்கம் இருக்கிறது. விலையைக் கூட்டுதல் மீண்டும் போட்டிக்கு உயிரூட்டக்கூடும் ; அல்லது பதிலிகளைப் பயன்படுத்துவதற்கு ஆக்கம் தருவதாகவும் அமையும். இவ்வகையான ஒரு கம்பெனியின் மீது விதிக்கப்படும் வருமான வரியைப் புரட்டுவது மிகக் கடினம். தாம் விற்கும் பொருள்களின்மீது பூரண முற்றுரிமை கொண்டிருப்பதாயும், தாம் விரும்பிய எந்த விலையையும் விதிக்க ஒரு கம்பெனிக்கு இயலும் என்றும் வைத்துக்கொள்வோம். அந்நிலையில் விலையின் வரம்பு முக்கியமாகத் தேவையின் இயல்பைப் பொறுத்தது. அப்பொருள் மிக இன்றியமையாதது என்றாலும், அதற்கான நெகிழ்ச்சி

இல்லாமல் இருந்தாலும், அதன் விலையை மிக உச்ச நிலையில் நிர்ணயிக்கக்கூடும். நெகிழ்ச்சி உடையதாய் இருந்தால், விலை மிகவும் குறையக்கூடும். முற்றுரிமை உடையவர் பெரிய முற்றுரிமை வருவாயை (maximum monopoly revenue) விரும்புகிறார். அவர் இலாபம் அவருடைய அடக்க விலைக்கும் பொருளின் விலைக்கும் இடையே உள்ள தாரதம்மியத்தையும், விற்பனையின் அளவையும் பொறுத்திருக்கிறது. இவையெல்லாம் வருமான வரி விதிப்பால் மட்டும் பாதிக்கப்படுவதில்லை. இதன் விளைவாக இவ்வரியும் விலையைப் பாதிப்பதில்லை. இவ்வகையான சூழ்நிலையில் முற்றுரிமை உடையவர் வரியைப் புரட்ட முடியாது.

புறனடை (Exception)

ஒரே ஒரு நிலையிலேதான் வருமான வரியைப் புரட்ட முடியும். அந்நிலை 'விற்பனையாளர்கள் கடைத்தெரு' (Sellers' Market) எனக் கூறப்படும். சப்ளைக் கட்டுப்பாட்டினாலோ, திடீர் என்று உயர்வினாலோ விலைகள் மேனோக்கிச் செல்லலாம். அவ்வித நிலை ஒரு நீடித்த போருக்குப்பின் உடனடியாக ஏற்படக்கூடும். அப்பொழுது விற்பனையாளர்கள் தங்கள் பண்டங்களுக்கானதேவை குறையும் என்ற அச்சமின்றியே விலைகளை உயர்த்தலாம். இரண்டாவதாக, ஒரு பண்டம் முற்றுரிமையாக இருக்கும் ஒரு பொது வசதியால் (Public Utility) உற்பத்தி செய்யப்பட்டதாய் இருக்கும் பொழுது, வருமான வரியைப் புரட்டக்கூடும். ஒரு பொது வசதியின் நிகர வருமானத்தின்மீது விதிக்கப்படும் வரி புரட்டப்படலாம். ஏனெனில், குறிப்பிட்ட ஒரு நிகர வருமானத்தை அடையத்தக்க விதத்தில் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கலாம்.

முடிவு

வருமான வரியின் நிலைப்பாட்டைப் பற்றிப் பின் வருமாறு டாக்டர் டால்டன் (Dr. Dalton) கூறுகிறார்: "ஒரு வியாபாரிக்குக் கிடைக்கும் விலை அவர் கொடுக்கும் எந்த வருமான வரியின் தொகையையும் பொறுத்ததன்று. நிறைவுப் போட்டியில் ஒரு விற்பனையாளருக்குக் மார்க்கட்டின் விலையை மாற்றுவதற்கு யாதோர் அதிகாரமும் இல்லை. ஒரு நிறைவு முற்றுரிமையில் அவருக்கு மார்க்கட்டு விலையைக் கூட்டுவதற்கு வரம்பில் அதிகாரம் உள்ளது. நிறை குறைந்த ஒரு முற்றுரிமையின்கீழ் அவருக்கு மார்க்கட்டு விலையை மாற்ற ஓரளவு அதிகாரம் உள்ளது. ஆனால், இம்மூவகையிடத்தும், அவருக்கு அளிக்கப்பட்ட வாய்ப்புகளையும் நீக்கிவிட்டுப் பார்ப்போமானால், அதிக இலாபத்தைத் தரக்கூடிய விலை அவர் வருமான வரி

கொடுக்கிருரா இல்லையா? அல்லது எவ்வளவு கொடுக்கிருர் என்பதைச் சார்ந்ததன்று.''

இறப்பு வரியின் நிலைப்பாடு (The Incidence of the Death Duties)

இறப்பு வரியின் நிலைப்பாட்டை அறுதியிடுவது எளிது. யார் சொத்தை வாரிசாகப் பெற்று அதன் பெறுமானத்தின்மீது வரியைச் செலுத்துகிருரோ, அவர்மீதுதான் வரிச்சுமை விழுகிறது. இறப்பு வரியின் நிலைப்பாடு பின் சந்ததியார் மீதே விழுகிறது என்று டாக்டர் டால்டன் திட்டவட்டமாகக் கருத்தைத் தெரிவிக்கிருர். ஏனெனில், ''வரி விதிக்கப்படுவதற்கு முன்பே முன்ஞேர் இறந்துபட்டிருக்க வேண்டும். இறந்தவர்கள் பிற உயிரற்ற பொருள்களைப் போலவே யாதொரு வரியும் செலுத்துவதில்லை.'' இவ்விதமான வரி யாதொன்றும் இல்லாவிடில், பின் சந்ததியார் வரித் தொகையின் அளவுக்கு ஆதாயமடைவார். ''முன்பே முன்ஞேர் வரி கொடுக்கிறதற்காகக் காப்புறுதி செய்திருக்கலாம் என்பது நிலைப்பாட்டுப் பிரச்சினைக்குத் தொடர்பற்றது; ஆனல், விளைவுகள் பிரச்சினையோடு தொடர்புள்ளது.''

''உண்மையில் நிலைமை இவ்வளவு தெளிவாகவோ அல்லது நேரானதாகவோ இல்லை. ஏனெனில், உயில் எழுதியவர் தம் வாழ்நாளிலேயே இறப்பு வரி செலுத்துவதற்கான வகை செய்வது பொதுவான வழக்கம்,'' என்று சில்வர்மென் (Silverman) கூறுகிருர். ''உயில் எழுதியவர் (Testator) இப்பூவுலக வரி வசூல் செய்வோரின் பிடியினுக்கு அப்பால் போகும் வரையில் இவ்வரிகள் கட்டப்படுவதில்லை என்பதும் உண்மையே. ஆயினும், இவ்வரிகள் இல்லாதிருந்தால் உயில் எழுதியவர் ஒரு தகுந்த அளவு தொகையைச் சேர்த்துத் தனியே வைப்பதற்கான இன்றியமையாத நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கமாட்டார் என்பதும் உண்மை.'' இவ்வகையான வரி விதிப்பில், தனியாள் **காரணி** (personal factor), அதாவது அவரது தனிப்பட்ட இயல்பும், உயில் எழுதியவருக்கும் வாரிசுதாரருக்கும் உள்ள உறவின் நெருக்கமும், கருத்தில் கொள்ளப்பட வேண்டும். உயில் எழுதியவருக்கு நேரிடையான வாரிசு இல்லாது, தூர உறவினர் ஒருவருக்குச் சொத்துப் போய்ச் சேருமாயின், உயில் எழுதியவர் வரியாகக் கொடுக்க வேண்டிய தொகையைச் சேமித்து வைப்பதற்காகத் தம்மைக் கஷ்டப்படுத்திக்கொண்டிராது அசட்டையாய் இருந்திருப்பார். இவ்வித நிலையில் இவ்வரியின் நிலைப்பாடு வாரிசுதாரரின் பேரிலேயே நிலைக்கிறது.

வரித்தொகையின் அளவும் உயில் எழுதியவரின் கொள்கை பாதிப்பதற்கு ஏற்ற ஒரு காரணி (factor). மரண வரிகள் மிகக் குறை

வாய் இருந்தால், முன்னோர் அதனைக் கொடுப்பதற்கான வகையைச் செய்திருக்க மாட்டார். ஆனால், வரித்தொகை கூடுதலாய் இருந்தால், அதைக் கொடுப்பதற்கான வகையை அவரே செய்திருப்பார். முன்னோரின் நோக்கு, சொத்தின் இயல்பாலும் பாதிக்கப்படும். சொத்து நிலமாகவோ அல்லது ஒரு வியாபாரமாகவோ இருந்தால், உயில் எழுதியவர் அதைச் சிதறுண்டு போகச் சகியாது, தமது சொத்தின் மூலதனத்திற்கு யாதோர் ஊறும் ஏற்படாத வகையில் ஒரு நிதியைச் சேர்ப்பதற்கும், அதிலிருந்து வரியைச் செலுத்துவதற்கும் பிரத்தியேக முயற்சிகளை மேற்கொண்டிருப்பார். பங்குகளாகவோ, அல்லது இலகுவில் விற்கக்கூடியனவும் பிரிக்கப்படக்கூடியனவுமான பொருள்களாகவோ செல்வம் இருக்குமாயின், சொத்துச் சிதறுண்டு போகாமல் நிலை நாட்டுதற்கான நோக்கம் அவ்வளவு வலுவாய் இராது. இறுதியாகச் சட்டசபையின் நோக்கம் இவ்வரியை இப்போதைய உடைமைக்காரரிடமிருந்து வசூலிப்பதே. வரியின் விகிதமும் சொத்தின் மொத்தப் பெறுமானத்திற்கு ஏற்றவாறு படித்தரமாக (graduated) அமைக்கப்பட்டிருக்கிறது.

3. நிலவரியின் நிலைப்பாடு : நிலவரி அதன் சொந்தக்காரரின் மீதே பொதுவாக விழுகிறது. நிலம் குத்தகைக்கு விடப்பட்டிருந்தால், நிலச் சொந்தக்காரர் வாரத்தை உயர்த்துவதன் மூலம் குத்தகைதாரர்மீது வரியைப் புரட்ட விரும்பலாம். ஆனால்,ஏற்கெனவே குத்தகைதாரர் கொடுக்கும் தொகை முழுப் பொருளாதார வாரத்தின் (Full Economic Rent) அளவு இருந்தால், வரியைக் குத்தகைதாரர்மீது புரட்ட முடியாது. ஏனெனில், வரியின் சம்பந்தமின்றியே நிலத்தின் வாரம் நிர்ணயிக்கப்படுகிறது. நிலவரி விதிப்பு, வார வரி விதிப்பே எனலாம். (நில விளைவின்) விலைக்கும் வாரத்திற்கும் யாதொரு தொடர்புமில்லை. அறியாமையினாலோ, மெதவலினாலோ அல்லது இரக்கத்தினாலோ நிலச் சொந்தக்காரருக்குக் கொடுக்கப்படும் வாரத்தின் அளவு முழுப் **பொருளியல்** வாரத்தைவிடக் குறைவாயிருந்தால் அப்பொழுதுதான் நிலச் சொந்தக்காரரால் வாரத்தை உயர்த்த இயலும். இவ்வகையான திருத்தங்களுக்குப்பின் வரிப்பளு இறுதியில் நிலச்சொந்தக்காரர்மீதே விழுகிறது.

4. கட்டடங்களின்மீது விதிக்கும் வரியின் நிலைப்பாடு : கட்டடங்களின்மீது விதிக்கப்படும் வரியின் நிலைப்பாட்டில் பல சிக்கல்கள் உள. உறைவிடத்திற்கான தேவை நெகிழ்ச்சியுடையதாக இராவிடில் கட்டடங்களின்மீது விதிக்கப்படும் வரி குடித்தனக்காரர் மீதே விழும். ஆனால், அவ்வுறைவிடத்தின் தேவை நெகிழ்ச்சியுடையதாயிருப்பின், அவ்வரி சொந்தக்காரர்மீது புரட்டப்படும். மேலும், கட்டடத்தில் உறைபவர் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தால் அவர் நிலைப்பாட்டின் ஒரு

பகுதியைத் தம்மிடமிருந்து தம் விற்பனைப் பொருள்களை வாங்குவோரின்மீது புரட்டக்கூடும். இவ்விற்பனைப் பண்டங்கள் நுகர்ச்சிப் பண்டங்களாய் இராமல், எந்திரங்களாய் இருக்குமானால், எந்திரங்களை வாங்குவோர், மீண்டும், தங்கள்மீது விழும் நிலைப்பாட்டின் ஒரு பகுதியைத் தங்கள் விற்பனைப் பண்டங்களை வாங்குவோர்மீது புரட்டலாம். பொதுவாக வீடுகளுக்கான தேவை, அவற்றின் சப்ளையைவிடக் கூடுதலாய் இருப்பதால், கட்டட வரி விதிப்புக் குடித்தனக்காரர்களின்மீது புரட்டப்படுகிறது.

5. சுங்க வரியின் நிலைப்பாடு : சுங்கத் தீர்வைகளின் நிலைப்பாடு சிக்கல் நிறைந்தது. இதன் நிலைப்பாட்டைத் தெரிந்துகொள்வதற்குச் சர்வதேசச் சூழ்நிலைகளையும் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. இறக்குமதி செய்யும் பொருள்களின்மீது விதிக்கப்படும் சுங்க வரி, வருமான நோக்கத்திற்காகவோ, அல்லது நாட்டுத் தொழில்களைக் காப்பதற்காகவோ விதிக்கப்படுகிறது. சுங்கத் தீர்வைகளின் நிலைப்பாட்டைப் பற்றி டாக்டர் டால்டன் கூறுவது வருமாறு : ''சுங்கத் தீர்வைகளின் நிலைப்பாடு பிற நாட்டுப் பண்டங்களை நுகர்வோரைத்தான் ஒறுக்கிறது என்பது பொதுவான விதி. ஆகவே, இவ்வகை வரிகளைப் 'பிற நாட்டார் கொடுக்கும்படி செய்வது' (to make the foreigners pay) ஒரு போதும் வெற்றியடைய முடியாது.'' இதை ஒரு பொது விதியாக ஏற்றுக்கொண்டு இவ்விதிக்குச் சில புறனடைகளை ஆராய்வோம். பிற நாட்டு உற்பத்தியாளர் ஒருவர் இறக்குமதி வரிகளை முழுமையுமோ அல்லது ஒரு பகுதியையோ கொடுப்பது சாத்தியமே. ஆனால், அதற்கு அப்பொருளை இறக்குமதி செய்யும் நாடு **மட்டுமே** மார்க்கெட்டாக இருத்தல் வேண்டும். இவ்விதச் சூழ்நிலைகள் காணப்படுவதில்லை ; அல்லது காணப்பட்டாலும் அருகியே இருக்கும். பொதுவாகக் கூறுமிடத்து, தங்கள் விளைபொருள்களின் (Products) மீது வரியைச் சுமத்தியதன் மூலம் ஒரு நாட்டில் தங்கள் பொருள்களுக்கான மார்க்கெட்டுக் குறைந்த இலாபம் தரத்தக்கதாக மாறினால், பிற நாட்டு உற்பத்தியாளர்கள் தங்கள் பொருள்களுக்கு வேறு புதிய மார்க்கெட்டுகளைத் தேடும் முயற்சியில் இறங்குவார்கள். இதன் விளைவாக துய்ப்போர்களுக்கு இப்பொருள்கள் அவசியம் வேண்டுமென்றால், அவர்கள் தங்கள் அரசாங்கம் விதித்த வரிகளையும் கொடுக்க வேண்டுவது இன்றியமையாததாகிறது. இறக்குமதி செய்யும் நாடு **வாங்குவோரின் முற்றுரிமையைப்** (Buyers' monopoly) பெற்றிருந்தாலோ அல்லது ஏற்றுமதி செய்யும் நாடு **விற்கும் முற்றுரிமையைப்** (Sellers' monopoly) பெற்றிருந்தாலோதான் இவ்வரித் தொகையின் ஒரு பங்கையோ அல்லது முழுமையையோ உள்நாட்டு நுகர்வோரிடமிருந்து வெளிநாட்டு உற்பத்தியாளருக்குப் புரட்ட முடியும். இடைக்காலத்தில் பிளான்டர்ஸுக்கு ஆட்டு உரோமத்தை சப்ளை செய்து வந்த ஒரே நாடு

பிரிட்டன். 19ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் எந்திரங்களால் செய்யப்பட்ட பொருள்களை ஐரோப்பாக் கண்டத்திற்கும், நீராவி நிலக்கரியை (steam coal) உலகெங்கணும் கப்பல்களுக்கும் சப்ளை செய்து வந்த ஒரே நாடு பிரிட்டன்தான். இக்காலத்தில் எண்ணெய் உற்பத்தி செய்யும் பிரதேசங்கள் இதைப் போன்ற ஒரு நிலையில் இருக்கின்றன. இந்தியா, பாக்கிஸ்தானின் சணல் சப்ளைகளும் இவ்வகையான அனுகூலத்தைப் பெற்றிருக்கின்றன. சணல் மீது விதிக்கப்படும் ஏற்றுமதி வரி வெளி நாட்டுச் சணல் ஆலைச் சொந்தக்காரர்களால் கொடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்போதைய சர்வதேச வியாபாரச் சூழ்நிலையில், தங்கள் ஏற்றுமதியின் பெரும்பகுதி முடிந்த பண்டங்களாகவும், இறக்குமதியின் பெரும்பகுதி உணவு, மூலப் பொருள்களாவும் இருக்கும் நாடுகள் சுங்கத் தீர்வைகளை விதித்தால், அவை பிறநாட்டாரால் கொடுக்கப்படுவது மிக அருமையே. ஏனெனில், பிற நாட்டு உணவு, மூலப் பொருள் இவற்றிற்கு அவர்கள் தேவைப்படும் அளவைவிட அவர்களுடைய முடிந்த பண்டங்களுக்குப் பிறநாடுகளில் உள்ள தேவை பெரும்பாலும் குறைவாகவும் அல்லது மிக நெகிழ்ச்சியுடையதாகவும் இருக்கிறது. எடுத்துக்காட்டாக பிரிட்டிஷ் மக்கள் பிரிட்டிஷ் சுங்கத் தீர்வைகளைச் சில அருமையான சந்தர்ப்பங்களைத் தவிர்த்துப் பிற நாட்டினர் கொடுக்கும்படி செய்யும் நிலையில் இப்பொழுது இல்லை.

6. விற்பனை வரியின் நிலைப்பாடு :

பேரங்களின் ஒவ்வொரு நிலையிலும் விற்பனையாளரிடமிருந்து வசூலிக்கப்படும் ஒரு வரி விற்பனை வரி. பொதுவாக விற்பனை வரி நுகர்வோர்மீது புரட்டப்படுகிறது ; பெரும்பாலும் இப்புரட்டுகை ரொக்க ரசீதில் வெளிப்படையாகவே செய்யப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் சிலவற்றில் வரித் தொகை தெளிவாக ரசீதில் குறிக்கப்பட வேண்டுமென்று சட்டம் கோருகிறது. இந்நிபந்தனையால் வரி காரணமாகப் பண்டத்தின் விலை அளவுக்கு மீது உயர்த்தப்படுவது குறைக்கப்படுகிறது. விற்பனை வரி விதிப்பு, பண்டங்களின் விலையில் சில மாறுதல்களைக் கொணர்வது இயல்பே. இதனுல் நுகர்வோரும் தாங்கள் வாங்கக்கூடிய அளவைக் குறைத்துக் கொள்ளுகிருர்கள். வாடிக்கைக்காரர்களை விரோதித்துக்கொள்ள விரும்பாத வியாபாரிகள் பழைய விலைக்கே பண்டங்களை விற்பார்கள். அப்பொழுது, வரி நுகர்வோர்மீது புரட்டப்படுவதில்லை. வியாபாரிகளின் நடவடிக்கை பண்டத்தின் இயல்பைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு பேரத்திலும் விற்பனை வரி நுகர்வோர்மீது புரட்டப்படுவதாகக் கருதக் கூடாது.

பதினெட்டாமதிகாரம்

வரி விதிப்பால் உற்பத்தியின்மீது ஏற்படும் விளைவுகள்

(Effects of Taxation on Production)

வரி விதிப்பால் உற்பத்தியின்மீது ஏற்படும் விளைவுகளை மூன்று தலைப்புகளில் குறிக்கலாம். அவையாவன: (1) வேலை செய்யக் கூடிய, அல்லது சேமிக்கக்கூடிய திறன்மீது ஏற்படும் விளைவுகள், (2) வேலை செய்யக்கூடிய விருப்பத்தின்மீது ஏற்படும் விளைவுகள், (3) பல்வேறுபட்ட தொழில்கள், இடங்கள் இவற்றினிடையே பொருளியல் வகை வளங்களைப் பங்கீடு செய்வதன்மேல் ஏற்படும் விளைவுகள்.

உழைப்பும் சேமிப்பும் :

பல்வேறுபட்ட பொருளியல் நிறுவனங்கள் இருக்கின்றன. எவ்வகை நிறுவனங்களின் கீழும், உழைப்புப் பெரும்பாலும் தனியார் அலுவலாகவே இருக்கின்றது. பெரும்பாலும் இவ்வுழைப்பு, தாமாக உவந்து செய்யப்படுவது. **இதற்குப் புறனடை** (exception) **அடிமைத் தொழில்.** சேமிப்பின் விவகாரம் அவ்வளவு எளியதன்று. சில நிறுவனத் திட்டங்களின்கீழ்ச் சேமிப்பின் பெரும்பகுதி தனியார்களால் தாமாகவே உவந்து செய்யப்படுகிறது. ஆனால், வேறு விதச் சேமிப்புகளும் இதனுடன் இணைந்து காணப்படலாம். அவை கூட்டுச் சேமிப்பாகவோ அல்லது கட்டாயச் சேமிப்பாகவோ அல்லது இரண்டுமாகவோ இருக்கலாம். இவ்விதச் சேமிப்புகள் மூவகைப்படும். அவையாவன: (1) தனியார் தொழிற்றுணிவின் பங்கீடு செய்யாத இலாபத்தை மீண்டும் முதலீடு செய்தல், (2) அரசாங்கத் தொழிற்றுணிவின் பங்கீடு செய்யப்படாத இலாபத்தை மீண்டும் முதலீடு

செய்தல், (3) வரியால் கிடைக்கும் வருமானத்திலிருந்து நேரடியாக மூலதனச் செலவு செய்தல்.

1. உழைப்பு, சேமிப்பு, திறன்மீது வரி விதிப்பால் ஏற்படும் விளைவுகள் (Effects on Ability to Work and Save)

வரி விதிப்பால் ஒருவருடைய திறமை குறையுமானால், அந்த அளவுக்கு அவர் உழைக்கும் திறனும் குறையும். ஆகையால், ஒரு சமுதாயத்தில் ஏழைகள்மீது யாதொரு வரியும் விதிக்காமல் இருப்ப தற்குத் தக்க காரணங்கள் உள்ளன. ஏனெனில், அவர்கள் மிகவும் வறிஞராய் இருப்பதால், அவர்கள் வருமானத்தை வரியின் மூலம் மேலும் குறைத்தால், இப்போதுள்ள வயது வந்தோரின் திறன் குறைவதோடு எதிர்காலத்தில் அவர்கள் குழந்தைகளின் திறமையும் குறையும். ஆகவே, சிறிய வருமானங்கள்மீது வரி விதிப்பது விரும்பத் தக்கதன்று. அதே போன்று நம்முடைய திறமைக்கு இன்றியமையா தனவற்றின் (necessaries for efficiency) மீதும், வழக்கத்தால் இன்றி யமையாதனவற்றின் (conventional necessaries) மீதும் வரி விதிப்பதும் தகுந்ததன்று.

எந்த வருமான மட்டத்திற்குக் கீழ் வரி விதித்தால் திறமைக்குக் குந்தகம் ஏற்படும் என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. ஆயி னும், மிக்க செல்வம் படைத்த இக்காலத்துச் சமுதாயங்களிலுங் கூடப் பலரின் வருமானங்கள் அந்த மட்டத்திற்குக் குறைவாகவே இருக்கின்றன என்பது தெளிவு.

உபரிகளின்மீது வரி விதிப்பதால் சேமிக்கும் திறன் குறைகிறது. சேமிக்கும் திறனைக் குறைக்காத வரிகள் ஏழை மக்களின்மீது மட்டும் விதிக்கப்படும் வரிகளே. ஏனெனில், அவர்களுக்கு உபரி வருமானம் இல்லை. பிற காரணங்களால் செல்வர்களின்மீது கடுமையான வரி விதிப்பதை வரவேற்றாலும், அவ்வாறு வரி விதிப்பதால் அவர் களின் சேமிக்கும் திறன் மிகவும் குறைக்கப்படுகிறது.

2. வரி விதிப்பால் உழைப்பதற்கும் சேமிப்பதற்கும் உள்ள விருப்பத்தின்மீது ஏற்படும் விளைவுகள் (Effects on Desire to Work and Save)

வரி கொடுப்போரின் உழைக்கும் விருப்பத்தையும், சேமிக்கும் விருப்பத்தையும் மிகையான வரி விதிப்பு மிகவும் பாதிக்கக்கூடும். ஆயினும், இவ்வுளப்பாங்கைப் பற்றிய பிரச்சினையின்மீது ஒரு மன மான அபிப்பிராயம் காணப்படவில்லை. வரி விதிப்பு, சிலரை உற்பத்தி செய்வதினின்று தடுக்கலாம். அதே சமயம் வேறு சிலரை முன்னை

விடக் கடினமாக உழைக்கும்படியும் தூண்டலாம். போதுமான அளவு செல்வத்தைத் தேடி வைத்துள்ள ஒருவர் உழைப்பின்றியே பிழைப்பு நடத்தக்கூடும். அவர்தம் வருமானத்தை மிகையான வரி விதிப்புக் குறைப்பதால், அஃது மேன்மேலும் செல்வத்தைத் தேடும் முயற்சிகளின்மீது விதிக்கப்பட்ட வரியாகும் என வாதிடுகிறார். வேறு வருமான இனங்களே இல்லாத ஒருவர் தமக்குப் பழக்கமான வாழ்க்கைத்தரத்தைக் குறைத்துக்கொள்ள விரும்பாவிடில், மேலும் கடினமாக உழைப்பதற்கு இவ்வரியால் உந்தப்படலாம். வாய்ப்பு இருந்தால் வரியைக் கொடுப்பதற்கான கூடுதலான வருமானத்தையும் ஈட்டலாம். தனியாள்களின் சூழ் நிலைகளிலும் இயல்புகளிலும் வேறுபாடுகள் காணப்படுவதால் இதைப்பற்றி உலகப் பொதுவான ஒரு விதியை விதிப்பது கூடாதது.

தனியார் வருமானத்திலிருந்து சேமிப்பதைப்பற்றி இது வரை சொல்லியதே போதும். கார்ப்பொரேட்டு வருமானங்களிலிருந்து (corporate incomes) சேமிக்கும் பொறுப்புள்ளவர்கள், இச்சேமிப்புகளை இலாபத்தைப் பங்கிடாமலோ அல்லது இன்ஷூரன்ஸ் (காப்புறுதி) கம்பெனிகள், கட்டடச் சங்கங்கள், அல்லது பொது நிலையங்களின் மூலமாகவோ திரட்டலாம். கார்ப்பரேட்டு வருமானத்திலிருந்து சேமிக்கும் பொறுப்புள்ளவர்கள் வேறு வகையில் முதலீடு செய்வதைவிட, தொடர்ந்து புதிய முதலீடு செய்வதற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். முக்கியத்துவம் அதிகரித்துக்கொண்டு வரும் ஒரு துறையில் வரி விதிப்பால் சேமிக்கும் விருப்பமும் உந்தப்படுமேயல்லாது மட்டுப்படுத்தப்படமாட்டாது.

பல்வேறு வரிகளின் விளைவுகள்

உழைக்கும் விருப்பத்திற்கும், சேமிக்கும் விருப்பத்திற்கும், வரி விதிப்புக்கும் உள்ள பொதுவான உறவைப்பற்றி இதுகாறும் கூறினோம். இப்பொழுது பல்வேறு வரிகளின் விளைவுகளை வேறுபடுத்திக் காட்டுவது இன்றியமையாதது.

எதிர்பாராத வருமானங்களின்மீது விதிக்கப்படும் வரிகள் உழைக்கும் விருப்பத்தையும் சேமிக்கும் விருப்பத்தையும் பாதிக்கமாட்டா. எதிர்பாராத செல்வத்தின் சிறந்த அமிசம் அதனை எதிர்பாராததேயாகும். செல்வத்தையே எதிர்பாராத பொழுது, அதன்மீது விதிக்கப்படும் ஒரு வரியை எதிர்பாராததும் இயல்பே. ஒரு மனையின் பெறுமானத்தின் மீது விதிக்கப்படும் ஒரு வரியும், மனைக்கட்டின் பெறுமானம் கூடுதலின்மீது விதிக்கப்பட்ட வரியும் சில வேளைகளில் எதிர்பாராத வருமானத்தின்மீது விதிக்கப்படும் வரியை ஒக்கும். சில சமயம் அவற்றை ஒத்ததாகாது; ஏனெனில், எதிர்காலத்தில் நிலத்தின் பெறுமானம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முற்றுரிமை உடையவர்

மீது விதிக்கப்படும் ஒரு வரியால் அவர்தம் உற்பத்தியையோ அல்லது விற்பனை விலையையோ மாற்றும்படி உந்தவில்லையெனில், அதனால் அவருடைய உழைக்கும் விருப்பமும், சேமிக்கும் விருப்பமும் பாதிக்கப்படுவதில்லை.

குறிப்பிட்ட சில பண்டங்களின்மீது விதிக்கப்படும் வரிகள் ஒருவருடைய சேமிக்கும் விருப்பத்தை மிகக் குறைவாகவே குறைக்கும். பண்டங்களின்மீது விதிக்கப்படும் வரிகளால் ஏற்படுவதைக்காட்டிலும், சேமித்த வருமானம் உள்ளிட்ட எல்லா வருமானங்களின்மீதும் பொதுவான ஒரு வரியை விதித்தால், அதனால் சேமிக்கும் விருப்பம் அதிகமாய்க் குறையும். ஏனெனில், பண்டங்களின்மீது விதிக்கப்பட்ட வரிகள் செலவின்மீது விதிக்கப்பட்ட வரிகளேயல்லாது, சேமிப்பின்மீது விதிக்கப்பட்டவைகள் அல்ல.

பொதுவாக உழைப்பில்லா வருமானங்கள் (உடைமையிலிருந்து கிடைக்கும் வருமானங்கள்) உழைப்பிலிருந்து வரும் வருமானங்களை விட மிகையான வீதத்திலேயே (higher rates) வரி விதிக்கப்படுகின்றது. இவ்வேறுபாட்டினால் உழைக்கும் விருப்பம் குறைவாகவும், சேமிக்கும் விருப்பம் அதிகமாகவும் குறையக்கூடும் என வாதிக்கிறார்கள். ஆனால், எல்லா வருமானங்களின்மீதும் (அவை எவ்வாறு பெறப்பட்டாலும்) ஒரே விகிதத்தில் வரி விதிக்கப்பட்டால், சேமிக்கும் விருப்பத்திற்குத் தடையேதும் இராது. ஆனால், டார்டர் டால்டன் கூறுவது போலச் சொத்திலிருந்து அதேயளவு வருமானம் பெறுவோரிடம் காணப்படுவதைக்காட்டிலும் கைப்பாடு பட்டு வருமானம் பெறுவோரிடம் சேமிக்கும் விருப்பம் வலுவாகவும் தொடர்ந்தும் காணப்படுகிறது. பிந்தியவர் எதிர் காலத்திற்கு ஏதாவது வகை செய்யவேண்டும் என்பதில் அதிக ஆர்வத்தால் உந்தப்படுகின்றனர். ஆகவே, ஓரளவு உழைப்பு வருமானத்திற்கும் உழைப்பில்லாத வருமானத்திற்கும் வேறுபாடு கற்பிப்பது நியாயமே. ஆயினும், மிகவும் படித்தரமாக விதிக்கப்பட்ட ஒரு வருமான வரியால் உழைக்கும் விருப்பமும் சேமிக்கும் விருப்பமும் பெருவருமானம் பெறுவோர்களிடையே மிகக் குறையக்கூடும். இக்குறைவின் விரைவு, வரியின் விகிதம் உயர்வதைவிட விரைவாகவே அதிகரிக்கும்.

உற்பத்தியின்மீது ஏற்படும் விளைவுகளைப் பார்க்கும்போது வாரிசாகப் பெற்ற செல்வத்தின்மீது விதிக்கப்படும் ஒரு வரிக்கு, ஒரு வருமான வரிக்கு இல்லாத சில அனுகூலங்கள் உள்ளன. உயில் எழுதியவர் வாரிசு வரி கொடுப்பதற்கு யாதொரு வகையும் செய்யாமல் இறந்துபட்டிருப்பாராயின், ஒரே அளவு வருமானத்தைத் தரும் வருமான வரியும் வாரிசு வரியும் ஒரேயளவு சேமிப்பைக் குறைக்கக்கூடும். ஆனால், உயில் எழுதியவர் தாம் இறந்த பின்பு வாரிசுதாரர்

வரியைக் கொடுப்பதற்கு வேண்டிய வகை செய்திருந்தால், ஒரே யளவு வருமானத்தைத் தரும் வருமான வரியைவிட, வாரிசு வரியால் சேமிப்புக்குக் குந்தகம் ஏற்படுவது குறைவாகவே இருக்கும்.

3. பல்வேறு தொழில்களுக்கும் தலங்களுக்கும் இடையே பொருளியல் வகை வளங்களைப் பங்கிடுவதால் ஏற்படும் விளைவுகள் (Effects on the Distribution of Economic Resources between different Employments and Localities)

தங்கள் இயல்பான வழியினின்று வாணிபம் அல்லது பொருளியல் வகை வளங்களை வேறு வழிகளுக்குத் திருப்புவதனுல், பொதுவாக உற்பத்திக்குத் தடை ஏற்படுகிறதென்று பொருட்டுறையினர் பலர் வாதிடுகின்றனர். ஆனுல், இது முற்றும் உண்மையன்று. குறைந்த அளவு பொருளாதார வகை வளங்களைப் பாதிக்கும் வரிகளை ஆதரிப்பதற்குப் பல வலுவான காரணங்கள் உள்ளன. முதலில் நாம் மிகக் குறைந்த அளவு பொருளாதார வகைவளங்களைத் திருப்பும் வரிகளைக் காண்போம்.

பல்வேறு தொழில்களுக்கு இடையே பொருளியல் வகை வளங்களைத் திருப்பாத, அல்லது குறைந்த அளவு திருப்பும் வரிகள் வருமாறு :

எதிர்பாராத வருமானம் அல்லது செல்வங்களின்மீது விதிக்கப்படும் வரிகள், மணைக்கட்டின் பெறுமானத்தின்மீது வீதிக்கப்படும் வரிகள், உற்பத்தியின் அளவை மாற்றுமலும் விற்பனை விலையை மாற்றுமலும் முற்றுரிமையுடையோரின்மீது விதிக்கப்படும் வரிகள், செல்வத்துய்ப்பின் எல்லா வகைகளின்மீதும் சம அளவு வரிகளை விதித்தல், இன்ன பிற. (ஒரு வரி விதிக்கப்பட்ட) குறிப்பிட்ட தொழிலில் முதலீடு செய்திருக்கும் ஒருவர், வேறு தொழிலில் தம் மூலதனத்தைத் திருப்புவதன் மூலம் வரியினின்று தப்புவதற்கு முயல்கிறுர். தாம் ஈடுபட்டிருக்கும் தொழிலைவிட வேறு தொழிலில் குறைவான வரி விதிக்கப்பட்டிருக்கலாம். குறைந்த அளவு வரி விதிப்பினுல் ஏற்பட்ட இலாபத்தைவிட இத்தொழிலில் மாற்றத்தால் ஏற்பட்ட வருமான இழப்பு குறைவாக இருந்தால்தான் இவ்வாருன திருப்பம் இலாபம் தரத்தக்கதாய் இருக்க முடியும். குறிப்பிட்ட தொழில்களில் மூலதனமும் உழைப்பும் சிறப்புத்தேர்ச்சி (specialised in particular employments) பெற்றிருந்தால், பொருளியல் வகை வளங்களை வேறு தொழில்களுக்குத் திருப்புவது கடினம். ஆனுல், சிறப்புத் தேர்ச்சி பெருத புதிய பொருளியல் வகைவளங்களை, வரிகள் இல்லாத புதிய தொழில்களில் திருப்புவதில் யாதொரு சிரமமும் இல்லை. இவ்வாறு மூலதனமும் உழைப்பும் சுரண்டுவதற்கு விரிவான பிரதேசங்களைத் தேடும் முயற்சியில் தொழிலதிபர்கள் ஈடுபட்டிருப்பார்கள். இப்போதிருக்கும் வகை வளங்களை

விடப் புதிய வகை வளங்களைத் திருப்புவது மிக முக்கியமானது. எடுத்துக்காட்டாக, வீடுகள் பிற கட்டடங்கள் இவற்றின்மீது கடுமையான வரிகள் விதிக்கப்படும்பொழுது முதலீடு செய்பவர்கள் வீடு கட்டும் தொழில்களில் முதலீடு செய்யாது பிற தொழில்களில் முதலீடு செய்ய முனைகிறார்கள்.

எதிர்பாராத செல்வம் அல்லது வருமானத்தின்மீது விதிக்கப்படும் ஒரு வரி, எதிர் பாராத விதமாக உறைப்பதால், திருப்பத்திற்கு இடமளிப்பதில்லை. ஏனெனில், அச்செல்வம் எதிர் பாராது கிடைத்ததாயிற்றே. ஒரு மனைக்கட்டின் பெறுமானத்தின்மீது விதிக்கப்படும் ஒரு வரியால் பொருளாதார வகை வளங்கள் திருப்பப்படுவதில்லை. ஏனெனில், அதன் நிலைப்பாடு நிலச் சொந்தக்காரர்மீதே உறைக்கிறது. மேலும், நிலத்தின் சப்ளையும் இயற்கையால் வரையறுக்கப்பட்டிருக்கிறது. தம் உற்பத்தியையோ அல்லது விற்பனை விலையையோ மாற்றக்கூடிய எவ்வித முகாந்திரத்தையும் தாராத முற்றுரிமையுடையோரின்மீது விதிக்கப்படும் ஒரு வரி, பொருளியல் வகை வளங்களைத் திருப்புவதில்லை, காரணம், வெளிப்படையான போட்டியில் (open competition) முதலீடு செய்வதைக்காட்டிலும் முற்றுரிமை அதிக இலாபம் தரத்தக்கதாய் இருப்பதே.

மிகக் குறைந்த அளவு பொருளியல் வகை வளங்களில் திருப்பம் ஏற்படுத்தும் வரிகள் விரும்பத்தக்கன. ஆயினும், இப்பொது விதிக்குச் சில புறனடைகளும் உண்டு. சாராயத்தின்மீது விதிக்கப்படும் ஒரு வரி, அதன் நுகர்ச்சியைக் குறைத்து, ஆரோக்கியத்தையும் திறமையையும் பெருக்குவதால், உற்பத்தி பெருகும். குறிப்பிட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் நிலத்தின்மீது விதிக்கப்பட்ட வரியால், வேறு நோக்கங்களுக்கு இந்நிலம் பயன்படுத்தப்படலாம். அதனால், உற்பத்தி பெருகலாம்; அல்லது சமூகத்திற்கு அதிக அனுகூலம் ஏற்படலாம். மேலும், ஒரு முற்றுரிமையுடையோரின்மீது விதிக்கப்படும் ஒரு வரியால் அவர் அதிக உற்பத்தி செய்யுமாறு உந்தப்பட்டாலும், அல்லது விற்பனை விலையைக் குறைக்குமாறு உந்தப்பட்டாலும், அது சமுதாயத்தின் நலனுக்கு உகந்தது. ஏனெனில், கூடுதலாக அவர் பயன்படுத்தும்பொருளியல் வகை வளங்கள் (வேறு போட்டித் தொழிலில் இருப்பதைவிட) அதிக உற்பத்தி தரத்தக்கதாக இருக்கும்.

ஊறு விளைக்கும் திருப்பங்களுக்கு (harmful diversions) உதாரணங்கள், பிரிட்டிஷ் வரி விதிப்பு முறையில் வீடுகள் மீது வரி விதிப்பும், வியாபார இலாபத்தின்மீது விதிக்கப்பட்ட பிரத்தியேக வரியுமாகும். இவ்வகையான வரி ஆபத்து ஏற்பின் (risk taking) மீது விதிக்கப்பட்ட வரியாகும். ஏனெனில், இதனால் கூட்டுப்பங்கு கம்பெனிகளில் சாதாரணப் பங்குதாரர்கள்மீது அதிகமான வரிப்பளு

ஏற்படுகிறது. டிபெஞ்சர்களை (debentures) வைத்திருப்பவர்களும், அரசாங்கக் கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்களும் குறைவான வரிப்பளுவை ஏற்கிருர்கள். புதிய தொழிலில் ஆபத்து ஏற்பு இன்றி யமையாதது. அவற்றின்மீது வரி விதிக்கப்பட்டால், முதலீடு செய் பவர் பலர் ஆபத்துகளை ஏற்க விரும்பார். அதனுல், இவ்வரி ஊறு படுத்தும் ஒரு திருப்பமாகும்.

இறுதியாக, நாம் காப்புச் சுங்கங்களை (Protective Tariff) எடுத் துக்கொள்வோம். காப்புச் சுங்கங்கள் நன்முறையில் தயாரிக்கப்பட் டிருந்தால், அதனுல் உற்பத்தி சில காலம் குறைந்தாலும், நெடுங் காலத்தில் இவ்வரி உற்பத்திச் சத்தியின் மூலங்களை (sources of productive power) வளர்க்கலாம். உற்பத்திப் பெருக்கும் விரை வாகவே வளரலாம். இவ்வரி விதிக்கப்படாதிருந்தால் ஏற்படும் உற் பத்திப் பெருக்கத்தைக்காட்டிலும், இவ்வரி விதிக்கப்பட்டதால் அந்த நிலையிற்கூடக் காப்புரிமை வரி, ஊன்றிய நலமிகளுள் (Vested Interests) சிலருக்கு ஆக்கம் தருகின்றது. ஊன்றிய நலமிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கவே கூடாது. ஊன்றிய நலமிகளுக்கு எதிராகச் சமுதாய நலன்களைக் காக்கும் வகையில் காப்புச் சுங்கவரியைத் தயாரிப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் அருமையே. அவ்வகையான பாதுகாப்பு, தாற்காலிகமானதாக மட்டுமே இருக்க வேண்டும். ஆயி னும், ஒரு முறை காப்புச் சுங்கத்தை ஏற்படுத்திய பிறகு அதனை அகற்றுவது மிகவும் சிரமம். அவ்விதச் சுங்கம் முதன்முதலில் நியாய மானதாக இருக்கலாம். ஆனுல், நெடுங்காலம் நீடித்திருக்குமானுல், அஃதின்றேல் உற்பத்திச் சத்தி எவ்வளவு குறையுமோ அதைவிட அதிகமாகவே உற்பத்திச் சத்தி இழப்பு நேரிடும். இக்கால உலகில் உயர்ந்த காப்புச் சுங்க வரிச் சுவர்களை எழுப்புவதற்குக் காரணம், ஊன்றிய நலமிகளின் சத்தியும் பொருட்டுறையில் தன்னிறைவாய் (self sufficiency) இருக்க வேண்டுமென்ற தேசியப் பற்றுமேயாகும். குறிப்பிட்ட சில தொழில்களுக்கு ஆக்கம் அளிக்க வேண்டுமென்று ஓர் அரசாங்கம் விரும்பினுல், இறக்குமதியாகும் பொருள்களின்மீது வரி விதிப்பதைக்காட்டிலும் அத்தொழில்களுக்கு உதவிக் கொடை (subsidies) அளிப்பது சிறந்ததாகும் என டாக்டர் டால்டன் கருதுகிருர்.

ஒரு தொழிலிலிருந்து இன்னொரு தொழிலுக்குப் பொருளியல் வகை வளங்களைத்திருப்புவதை இதுகாறும் ஆராய்ந்தோம். ஒரு தலத்தி லிருந்து இன்னொரு தலத்திற்குப் பொருளியல்வகை வளங்கள் வரிமூலம் திருப்பப்படலாம். இவ்வாறு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பல்வேறு வரிவிகிதங்களினுல் பொருளியல்வகைவளங்கள் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குப் பெரிய அளவில் திருப்பப்பட்டிருக்கின்றன.

வரி விதிப்புக் கடுமையாய் இருக்கும் தலங்களை முதலீடு செய்பவர்கள் தவிர்ப்பது இயல்பேயாகும். ஆனால், மூலதனத்தின் புடைபெயர்ச்சியைப் பொறுத்த வரை, கடுமையான வரி விதிப்பால் ஒரு நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கு மூலதனம் பெருத்த அளவில் எப்பொழுதுமே வெளியேறுவதாகக் கூற முடியாது. இருப்புப்பாதைகளிலும், ஆலைகளிலும் இப்போது முடங்கிக் கிடக்கும் மூலதனத்தை (fixed capital) கடுமையான வருமான வரி, இறப்பு வரிகள் மூலம் பிற நாடுகளுக்கு விரட்ட முடியாது. இது எதிர்காலத்து மூலதனப் பண்டங்களுக்கு (capital goods) மட்டுமே பொருந்தும். ஏனெனில், அவற்றின் இடச் செறிவு (location) இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

"வரி விதிப்பினால் கிடைக்கும் வருமானம் அனைத்தும் வீணாகச் செலவழிக்கப்பட்டால், அதனால் பொருளியல் சுபிட்சம் அதிகரிக்காது. அந்த நிலையில் வரி விதிப்பின் விளைவால் உற்பத்திக்குத் தடை ஏற்படுவது தெளிவான பொருளியல் இழப்பாகும். ஆனால், வரி விதிப்பினால் கிடைக்கும் வருமானம் அறிவுக்கு ஒத்த முறையில் செலவிடப்பட்டால், வரி விதிப்பினால் உற்பத்திக்குக் குந்தகம் ஏற்படுவதைவிட, இச்செலவினால் உற்பத்தி பெறும் ஆக்கம் மிக வலுவானதாக இருக்கும். பொது நிதி இயலை முழுமையும் ஆராயுமிடத்து அது உற்பத்திப் பெருக்கத்திற்கான பொறுப்பை ஏற்றிருப்பதாகக் காணலாம்."
—(டாக்டர் டால்டன்)

பத்தொன்பதாம் அதிகாரம்

வரி விதிப்பினுல் பங்கீட்டின்மீது ஏற்படும் விளைவுகள்

(The Effects of Taxation on Distribution)

வரி விதிப்பினுல் பங்கீட்டின்மீது ஏற்படும் விளைவுகளையும் ஆராய வேண்டுவது அவசியம் என்பதைப் பொதுவாக யாரும் மறுப்பதில்லை. ஆயினும், மற்றவை மாருதிருப்பின், ஏற்றத்தாழ்வை மிகவும் குறைப்பதற்கான ஒரு தோரணையை வலுவாகக் கொண்டிருக்கும் ஒரு வரி முறை, ஏற்றத்தாழ்வை மிகக் குறைக்காத ஒரு தோரணையைக் கொண்டிருக்கும் ஒரு வரி முறையைக்காட்டிலும் விரும்பத்தக்கது என்பது பொதுவாக யாவராலும் ஏற்கப்படுவதில்லை. செல்வத்தின் ஏற்றத்தாழ்வுகளைச் சமன் செய்வதற்கு ஏற்ற ஒரு கருவியாக வரி விதிப்பைக் கொள்ள வேண்டுமென்று ஜெர்மானியப் பொருட்புலவர் வாக்னர் கூறினுர். அவர் தம் கொள்கைகளைப் பூரணத் திறமையுடனும் மேதாவிலாசத்துடனும் வளர்த்திருக்கிருர். அவருடைய 'சமூக அரசியல்' கருதுகோள் கொள்கையளவில் சிறந்தது; நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுகிறது.

தேய்வு வீத வரி முறை, வருமானத்தில் ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கிறது. அதே போல, வீதாசார வரி முறையும் மெதுவான வளர்வீத வரி முறையும் வருமானத்தில் ஏற்றத் தாழ்வுகளை அதிகரிக்கின்றன. ஆனுல், மிக விரைவான வளர்வீத வரி முறை ஏற்றத் தாழ்வைக் குறைக்கிறது. ஆகவே, பங்கீட்டுக் கண்ணேட்டத்தின்படி மிகக் கடுமையான வளர்வீத வரி முறை விரும்பத்தக்கது. ஆனுல், மிகக் கடுமையான வளர்வீத வரி முறை உற்பத்திக்குத் தடையாய் இருக்கலாம். ஆகவே, குறிப்பிட்ட ஓர் அளவு வளர்வீதம் ஒரு வரி முறையில் இருப்பது விரும்பத்தக்கது. மிகக் கடுமையான வளர்வீத வரி

யால் விளையும் மூலதன வெளியேற்றத்தையும் (emigration of capital) அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எல்லோர் வருமானமும் சமமானால், ஒரு வீதாசார வரியை விதிப்பது மிக எளிதானதாகும். ஆனால், பெருத்த ஏற்றத் தாழ்வுகள் கண்கூடாகக் காணப்படும் இவ்வுலகில் கடுமையான வளர்வீத வரி முறை விரும்பத்தக்கது. உணவு, உடை, புகையிலை முதலான பரந்து பட்ட நுகர்ச்சிப் பொருள்களின்மீது விதிக்கப்படும் வரிகளும், தனிப் பயன் வரிகளும் பொதுவாகத் தேய்வு வீதமாய் இருக்கின்றன. ஏனெனில், ஒரு நபரின் வருமானம் ஏற ஏற, அவர் ஒரு பொருளின்மீது செலவழிக்கும் தொகையின் அளவு குறைகிறது. ஆனால், போகப் பொருள்களின்மீது விதிக்கப்படும் வரிகள் வளர்வீதமாய் இருக்கலாம். பிற வளர்வீத வரிகளாவன, வருமான வரி, வாரிசு வரி, இன்ன பிற. உழைப்பிலிருந்து கிடைக்கும் வருமானங்களைவிடச் சொத்திலிருந்து கிடைக்கும் அதேயளவு வருமானங்கள்மீது கூடுதலான வரி விதிக்கப் படுகின்றது என்பதை முன்னரே கண்டோம். நிலப் பெறுமானத்தின் மீது வரி, கார்ப்பொரேஷன் இலாபத்தின்மீது வரி (Tax on Corporation Profit) முதலான இவ்வரிகளிலும் வளர்வீதக் கொள்கையைப் புகுத்தலாம்.

காப்புச் சுங்க வரி உற்பத்தியைப் பெருக்குவதோடு வருமானத்தில் ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்துப் பங்கீட்டையும் மேம்பாடடையச் செய்யலாம் எனச் சிலர் வாதிடுகின்றனர். இதை இரு வகைகளில் நிறைவேற்றலாம். ஒப்ப நோக்கின், கூலி உயர்வாக இருக்கும் நாட்டுத் தொழில்களின் விளையுள்களுடன் போட்டியிடும் இறக்குமதிச் சாமான்களின்மீது வரி விதிப்பது மூலமாக இதை நிறைவேற்றலாம். இக்கொள்கையால் கூலி விகிதம் குறைவாய் இருக்கும் தொழில்களிலிருந்து கூலி விகிதம் அதிகமாய் இருக்கும் தொழில்களுக்கு உழைப்பும் உற்பத்தியும் திருப்பப்படலாம்; அல்லது, சிறப்பாகச் செல்வந்தரால் துய்க்கப்படும் இறக்குமதிப் பொருள்களின்மீது மட்டும் அரசாங்கம் வரி விதிக்கலாம். இதனால், அரசாங்கம் செல்வரிடமிருந்து ஓரளவு வருமானம் பெறுவதோடு, இப்பொருள்களுக்குப் பதிலாகச் சமுதாயத்தின் பெரும்பான்மையோருக்கு மிகப் பயனளிக்கும் பொருள்களை இறக்குமதி செய்யுமாறும் தூண்டுகிறது. இவ்விளைவுகள் எல்லாம் ஏட்டளவில் சாத்தியமாயினும், நடை முறையில் ஒத்து வாரா.

19-ஆம் நூற்றாண்டில் அரசாங்கங்கள் தங்கள் வருமானத்தின் பெரும்பகுதியையும் மறைமுக வரிகள் மூலமே பெற்றன. இவ்விருப

தாம் நூற்றுண்டில் அரசாங்கங்கள் தங்கள் வருமானத்தின் பெரும் பகுதியை நேர்முக வரிகளின் மூலம் பெறுகின்றன. நேர்முக வரிகள் வளர்வீத தோரணையில் இயங்குகின்றன. ஆனல், மறைமுக வரிகளோ, தேய்வு வீதத் தோரணையில் இயங்குகின்றன. ஆகவே, நிதி, சிக்கனக் கண்ணேட்டத்தோடு பார்த்தால், சென்ற நூற்றுண்டில் வருமானத்தில் ஏற்றத் தாழ்வுகளை வரிகள் குறைத்ததைவிட, இக்காலத்து வரி முறைகள் அதிகமாகவே ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கின்றன எனலாம்.

இருபதாமதிகாரம்

வரி தாங்கு வல்லமை

(Taxable Capacity)

'வரி தாங்கு வல்லமை' என்ற சொற்றொடர் ஒரு புரியாத புதிரென எண்ணப்படுகிறது. ஆனால், இது துரதிருஷ்டவசமானது. ஏனெனில், அதிக வருவாய், சமனிலை வரவு செலவுத்திட்டங்களைத் தயாரித்தல், போர்க்கடன்களைத் திருப்பிக்கொடுத்தல், அதிகரித்துக் கொண்டே செல்லும் சமூகச்செலவைச் சமாளித்தல், ஒரு நவீனப் போருக்கு நிதி திரட்டல் ஆகியவற்றிற்கெல்லாம் இதுதான் அடிப்படை. இது ஒரு முக்கியப் பிரச்சினையாகும். டாக்டர் டால்டன் கூறுவதுபோலத் தெளிவற்ற குழம்பிய சிந்தனையாக (dim and confused conception) இதனைக் கருதுவதற்கில்லை.

திரு. பிண்டிலே ஷிர்ராஸ், "வாழ்க்கைத் தரம் மாறாது, குறிப்பிட்ட அளவு உற்பத்தி செய்வதற்கான குறைந்த பட்ச நுகர்ச்சியைவிட, உபரியாய் இருக்கும் மொத்த உற்பத்தியே வரி தாங்கு வல்லமை," எனக் கூறுகிறார். சர் ஜோசையா ஸ்டாம்பு, "மக்களின் பிழைப்பு மட்டத்திற்கும் மொத்த உற்பத்திக்கும் உள்ள இட்டோட்டமே வரி தாங்கு வல்லமை," என விளக்குகிறார். சுருங்கக்கூறின், வரி தாங்கு வல்லமை என்பது, அரசாங்கங்களின் செலவுக்கு ஒரு நாட்டின் குடிமக்கள் (பொறுக்க முடியாத அளவு துன்பமின்றி) செலுத்தக்கூடிய பெருமத்தொகை எனலாம். அல்லது, சர் ஜோசையா ஸ்டாம்பு கூறுவது போல, "மகிழ்ச்சியில்லாத மிகவும் சீரழிக்கப்பட்ட வாழ்க்கையை நடத்தாமலும், பொருளியல் அமைப்பை மிகவும் குலைக்காமலும்" எவ்வளவு தொகை அரசாங்கத்துக்கு மக்கள் செலுத்த முடியுமோ, அதை வரிதாங்கு வல்லமை எனலாம். தனியார் ஒவ்வொருவரும் வேலை செய்து சேமிக்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும். இவ்விதம் சேமிக்கும் உபரி அந்நபரின் வரி தாங்கு வல்லமையைக் காட்டுகிறது. அதே சமயம், நாட்டின் உற்பத்திச்

சத்தியும் இப்போது இருக்கும் நிலையில் இருப்பதைக்காட்டிலும் மேன் மேலும் ஆண்டுதோறும் உயருவதற்கு வகை செய்ய வேண்டும். மொத்த உற்பத்திக்கும் குறைந்த அளவு நுகர்ச்சிக்கும் இடைப்பட்ட வேறுபாடு (அல்லது உபரி) ஒரு குறிப்பிட்ட நிலையான தொகையன்று; ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியும், குடி மக்களின் குறைந்த அளவு நுகர்ச்சியும் மாறும் தன்மையனவாகும். எடுத்துக்காட்டாக, மற்றவை மாருதிருப்பின் (other things remaining equal) (உ-ம். ஒருவரை அண்டியிருப்போரின் தொகை மாருமல் இருக்குமாஞல்), ஒருவரின் வருமானம் அதிகரிக்குந்தோறும், அவர் தம்மைவிடக் குறைந்த வருமானத்தை உடையவரைக்காட்டிலும் கூடுதலான வரித்தொகையைக் கட்ட முடியும். வேறு வகையாகச் சொன்ஞல், கொடுக்கும் திறனும் (ability to pay) வரி தாங்கு வல்லமையும் ஒரு பொருட்சொற்ருெடர்களேயாம்.

முழுமையான வரி தாங்கு வல்லமையும் ஒப்புமையில் வரி தாங்கு வல்லமையும் (Absolute Taxable Capacity and Relative Taxable Capacity)

முழு வரி தாங்கு வல்லமைக்கும், ஒப்புமையில் வரி தாங்கு வல்லமைக்கும் வேறுபாடு கற்பிக்க வேண்டும். பின்னையது ஒரு பொது நிதிக்கு, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சமுதாயங்கள் கொடுக்கும் வரி தாங்கும் வல்லமையைக் குறிப்பிடுகிறது. முழு வரி தாங்கு வல்லமையைவிட ஒப்புமையில் வரி தாங்கு வல்லமையை இலகுவில் நிர்ணயிக்கலாம்; மிகத் துல்லியமாக அளந்தும் விடலாம். இவ்விதமான பிரச்சினையில் தீர்மானிக்க வேண்டுவது பல்வேறுபட்ட நாடுகளும் எத்துணை வீதாசாரப்படி அளிப்புகளைக்கொடுக்கவேண்டுமென்பதே. எடுத்துக்காட்டாக இணைப்புச் சட்டத்தின்கீழ் (Act of Union) பிரிட்டிஷ் கருவூலத்திற்கு அயர்லாந்து கொடுத்த அளிப்பும் சர்வதேச சங்கத்திற்குச் சில உறுப்பு நாடுகள் கொடுத்த அளிப்பும், இந்தியாவில் மெஸ்டன் தீர்ப்பின் (Meston Award) கீழ்ப் பல மாகாணங்களும் மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்த அளிப்பும் இக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டவை.

வரி தாங்கு வல்லமையின் எல்லை (Limits of Taxable Capacity)

வரி தாங்கு வல்லமையின் எல்லைகள் யாவை? இவ்விஞவிற்குப் பலதரப்பட்ட விடைகள் தரப்பட்டுள்ளன. " உற்பத்திக்கான ஊக்கம் குறையுமாறு வரி செலுத்துவோரிடமிருந்து அதிகம் வரியாக வசூலிக்கும்பொழுது (கைவசமுள்ள **மூலதனத் தேய்மானத்தைச் சரிக்கட்டுதற்குப் போதாமலும், மக்கட்டொகை** பெருகுவதஞல் புதிய

தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க முடியாமலும்''), வரிதாங்கு வல்லமையின் எல்லை அடையப்பட்டதென்று திரு எல்லிஞ்சர் (Ellinger) கருதினார். '' அளவுக்கு மீறி உற்பத்தியைப் பாதித்தால், வரி தாங்கு வல்லமையின் எல்லை அடையப்பட்டது,'' எனத் திரு. மேசன் கருதினார். '' தாம் கொடுக்கவேண்டிய வரிக்காக பாங்குகளிலிருந்து வரி செலுத்துவோர் கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்படின், ஒரு நாட்டின் வரி தாங்கு வல்லமையின் உச்சம் எய்தப்படும்,'' என்று சர் டிரம்மண்டு பிரேசர் (Sir Drummond Fraser) கூறுகிறார். வரியினால் கிடைக்கும் மொத்த வருமானம் குறையும் போது இவ்வெல்லை அடையப்பட்டது என்று வேறோர் ஆசிரியர் கூறுகிறார். '' சாதாரண ஆண்டுகளில் எதுதான் எல்லை என்று உலகத்தாரால் ஒப்புக்கொள்ளக்கூடிய திட்ட வட்டமான யாதொரு விளக்கமும் தர முடியாது. முக்கியச்சோதனை, நாட்டின் பொருளியல் அமைப்பின் மீது ஏற்பட்ட விளைவாகும். வரி கொடுப்போரின் உற்பத்திச் சக்தி குறைக்கப்பட்டால், வரி தாங்கு வல்லமையின் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டதாகக் கூறலாம்.''—(சில்வர்மென்)

வரிதாங்கு வல்லமையின் தீர்மானிகள்
(Determinants of Taxable Capacity)

1. வரி விதிப்பின் இயல்பும், முறைகளும்
(The Nature and Methods of Taxation)

மேற்கூறியாங்கு வரி தாங்கு வல்லமை ஒரு முழுமையான இலக்க எண் (absolute figure) அன்று. வரி தாங்கு வல்லமையைத் தீர்மானிப்பதில் வரி விதிப்பின் இயல்புக்கும் முறைகளுக்கும் முக்கியப் பங்குண்டு. அறிவுக்கு ஒவ்வாத முறையில் வருவாயைத் திரட்டுவதால் குறைந்த பயன் கிடைக்கும்; பொது மக்களுக்கு ஆத்திரத்தையும் மூட்டும். நன்றாகத் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்ட வரி முறையால் அதிகப் பயன் கிடைக்கும். ஒரே ஒரு வரி விதிப்பை மட்டும் நம்பாமல், பல வரிகளைக்கொண்ட கலவை வரி விதிப்பு முறையால் அதிக வருவாய் கிடைக்கும். எடுத்துக்காட்டாக எவ்வளவு விரிவாக வரி வலையை வீசினாலும், பண்டங்களின்மீது வரி விதிப்பால் மட்டும் இக்காலத்து அரசாங்கத்திற்குத் தேவைப்படும் அவ்வளவு பெரிய தொகையைத் திரட்ட முடியாது. முன்னாளில் வருமானத்தின் பெரும்பகுதியும் மறைமுக வரிகளால் பெறப்பட்டது. ஆனால், இப்பொழுது நேர்முக வரிகளால் கிடைக்கும் வருவாயை மறைமுக வரிகள் தாரா. நேர் முக வரி விதிப்பில் உள்ளதுபோல மறைமுக வரி விதிப்பில் வளர்வீத முறைக்கு இடமில்லை. சுருங்கக் கூறின், இடையூறுது எதிர்ப்பையும் சேதத்தையும் விளைக்கும் வரிகளைவிடக் குறைந்த

அளவு எதிர்ப்பை மூட்டும் அல்லது பொருளாதாரத் தொழிற்றுணிவை மிகக் குறைந்த அளவில் பாதிக்கும் வரிகளினுல் கூடுதலான வரி தாங்கு வல்லமை ஏற்படுகிறது.

2. மக்கள் தொகையின் அளவு (Size of the Population)

வரி தாங்கு வல்லமை ஒரு நாட்டு மக்களின் எண்ணிக்கையையும் பொறுத்துள்ளது. நாட்டின் வருமானத்தைவிட மக்கள் தொகை கூடுதலான வேகத்தில் பெருகுமாயின், மக்களின் வரி தாங்கு வல்லமை குறையும் என்பது தெளிவு : முற்போக்கடைந்த நாடுகளில் உள்ளது போல, மக்கள் தொகையைவிடத் தேசிய வருமானம் அதிக விரைவாக அதிகரிக்குமாஞல், வரி தாங்கு வல்லமை அதிகரிக்கும். மக்கள் தொகை மட்டுமன்றி, அவர்கள் உற்பத்தி செய்யும் பண்டங்கள், சேவைகள் இவையும் வரி தாங்கு வல்லமையின் எல்லையைத் தீர்மானிக்கின்றன. எவ்வளவுக்கெவ்வளவு வருமானத்தின் பெரும் பகுதி அவசியமல்லாத நுகர்ச்சிக்குச் செலவழிக்கப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு வரிதாங்கு வல்லமையும் கூடுகிறது. அதிக அளவு மூலதனப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாட்டின் வரி தாங்கு வல்லமையைவிட, அதிக அளவு நுகர்ச்சிப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாட்டின் வரி தாங்கு வல்லமை குறைவாகும்.

3. தேசிய வருமானத்தின் பங்கீடு
(Distribution of National Income)

எவ்வளவுக்கெவ்வளவு வருமானத்தின் பங்கீட்டில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு மக்களின் வரி தாங்கு வல்லமையும் கூடுகிறது. எடுத்துக்காட்டாக ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு ஈராயிரம் ரூபாய் வருமானமாகக் கிடைக்கிறதென்றும், ஆண்டொன்றுக்கு ஒருவருக்கு நூறு ரூபாய் வீதம் இருபது பேருக்கு வருமானம் கிடைக்கிறது என்றும் வைத்துக்கொண்டால், தனி நபரின் வரி தாங்கு வல்லமை மற்ற இருபது பேரின் வரி தாங்கு வல்லமையை விடப் பொதுவாக அதிகமாய் இருக்கும். இந்நாலாயிர ரூபாயையும் இவ்விருபத்தொரு பெயர்களிடையே சமமாகப் பிரித்துக்கொடுத்தால், மொத்த வரி தாங்கு வல்லமை குறையும். ஏற்றத்தாழ்வுகளினுல் வரி தாங்கு வல்லமை அதிகரிக்கிறது என்பதனுலேயே செல்வத்தின் ஏற்றத் தாழ்வான பங்கீட்டை நாம் ஆதரிக்கிரேம் என்று கொள்ளக் கூடாது. அதிக வரி தாங்கு வல்லமை ஒரு நாட்டுக்கு இருக்கிறது என்பதாலேயே அந்நாட்டுக்குச் சிறப்பொன்றுமில்லை. பெரிய அளவு வருவாயை ஓர் அரசாங்கம் திரட்டவேண்டிய நிர்ப்பந்தமுமில்லை. இக்கோணத்திலிருந்து பார்த்தால், பிரான்சைவிட

பிரிட்டனுக்கு அதிக வரி தாங்கு வல்லமை இருக்கிறது. பிரிட்டனில் உள்ளதைப்போலப் பிரான்சில் ஏற்றத்தாழ்வுகள் அவ்வளவு உறுத்து பவையாய் இல்லை.

4. அரசாங்கச் செலவின் இயல்பு

(The Nature of Public Expenditure)

வரிதாங்கு வல்லமை, வரி விதிப்பால் கிடைத்த வருமானம் எங்ஙனம் செலவழிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து இருக்கிறது. சர் பேசில் பிளாக்கெட்டு (Sir Basil Blackett) ஒரு முறை கூறியதுபோல, ''வரி விதிப்பைக்காட்டிலும், செலவுடன் வரி தாங்கு வல்லமை மிக நெருங்கிய தொடர்புடையது.'' தான் வரி விதிப்பால் திரட்டிய தொகையை எவ்வாறு அரசாங்கம் பயன்படுத்துகிறது என்பது வரி தாங்கு வல்லமையின் இலக்க எண்ணை உருவாக்குவதில் பெரும் பங்கு பெறுகிறது. வரி விதிப்பால் கிடைத்த பணத்தைச் சாலைகள், கல்வி, சுகாதாரம், தொழில்கள், வேளாண்மை போன்ற நாட்டை வளர்க்கும் இலாக்காக்களுக்குச் செலவழித்தால், மக்களின் வரி தாங்கு வல்லமை மிகவும் உயரக் கூடும். உள் நாட்டுக் கடனைத் திருப்பித் தருவதற்கு வரி விதிப்புப் பயன்படுத்தப்பட்டால், அது நாட்டின் வரி தாங்கு வல்லமையைப் பாதிப்பதில்லை. ஏனெனில், வட்டியைக் கொடுப்பதும், முதலைத் திருப்பிக்கொடுப்பதும் ஒரு நாட்டின் எந்த வகை வளங்களையும் குன்றச்செய்வதில்லை. ஆனால், பிற நாட்டாருக்கு இத்தொகைகள் (வட்டியும் முதலும்) கொடுக்கப்படுமானால், ஒரு நாட்டின் வரி தாங்கு வல்லமை குறையும். வருவாயின் பெரும் பகுதி, படைக்கும், பிற பயனிலா நோக்கங்களுக்கும் செலவிடப்பட்டாலும், வரி தாங்கு வல்லமை குறையும். இக்கோணத்திலிருந்து பார்க்கும் பொழுது பல நாடுகளிலும் இப்போது படைக்காகச் செலவிடப்படும் தொகை கடுமையான கண்டனத்திற்கு உள்ளாகிறது.

5. அரசியல் உளவியல் காரணிகள்

(Political and Psychological Factors)

ஒரு நாட்டின் வரி தாங்கு வல்லமை அரசியல், உளவியல் காரணங்களாலும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. அரசியல், அகவியல் காரணிகளைப் பொருளியல் ரீதியில் அளவிட முடியாது. சமாதான காலத்தில் இருப்பதைவிட, ஒரு நாடு போரில் ஈடுபட்டிருக்கும் பொழுது அதன் வரி தாங்கு வல்லமை அதிகமாய் இருக்கிறது. ஏனெனில், தாங்கள் சாதாரணமாக வற்புறுத்தும் குறும வாழ்க்கைத்தரத்தைக் குறைத்துக்கொள்ளவும், பெருந்தியாகங்களைச் செய்யவும் போர்க்காலத்தில் மக்கள் ஆயத்தமாய் இருக்கிறார்

கள். இரண்டாவது உலகப்போரின்போது பிரிட்டனில் தொழிலாளரின் கூலியில் ஒரு பகுதி பிடிக்கப்பட்டு அரசாங்கத்திற்குக் கடனாகக் கொடுக்கப்பட்டது. இத்தொகைகள் ஒத்திவைக்கப்பட்ட சேமிப்புகள் (deferred savings) என்ற கீன்ஸ் பிரபுவின் (Lord Keynes) திட்டத்தின்கீழ்த் திரட்டப்பட்டன. சாதாரணக் காலங்களிற்கூட, சில நாட்டினரைவிட (உ-ம். பிரெஞ்சுக்காரர்) சில நாட்டார் (உ-ம். ஆங்கிலேயர்) வரியை விருப்பத்தோடு ஏற்கின்றனர். இந்தியாவில் குடிமகன் கடமை வளர்ச்சியடையாததால், சமூகத்தின் அவசியமான நோக்கங்களுக்காகக்கூட வரி கொடுப்பதற்கு மக்கள் தயங்குகின்றார்கள். இவ்வாறு அரசியலைப்போல வரி விதிப்பிலும் உணர்ச்சி முக்கிய அங்கம் வகிக்கிறது. கொடுங்கோன்மை (tyranny) சிலரை வீரர்களாக உயர்த்தலாம்; அல்லது அடிமைகள் ஆக்கலாம். கடுமையான வரியினால் சிலர் அதிகம் உழைப்பவர்களாகவும், தொழில் துணிவு உள்ளவர்களாகவும், செல்வர்களாகவும் மாறுகிறார்கள் ; பிறர் சோம்பேறிகளாகவும், ஊக்கமில்லாதவர்களாகவும், வறிஞர்களாகவும் மாறுகின்றனர்.

இயக்க நிலைப்பிரச்சினை (Dynamic Problem)

வரி தாங்கு வல்லமையைச் தேக்கப் பிரச்சினையாகக் (static problem) கருதாது இயக்கநிலைப் பிரச்சினையாகக் கருதவேண்டும். வரி விதிப்பால் பல திறப்பட்ட மக்களின் வருமானத்தில் உடனடியாக என்னென்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை மட்டும் பரிசீலனை செய்தல் போதாது. பொதுவாகச் செல்வத்தை உற்பத்தி செய்யும் சத்திகள், வரி கொடுப்போரின் பொருளியல் தூண்டுதல் (economic incentive) இவற்றின்மீது வரி விதிப்பால் என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பதைப் பரிசீலனை செய்வதே அரசியல் அறிஞரின் கருத்துப்படி தலையாயதாகும். இங்ஙனம் நோக்கும் போது ஒரு நாட்டின் வரி தாங்கு வல்லமையை அளவிடுவது என்பது மிகக் கடினமாகும். ஆயினும், வரி தாங்கு வல்லமையையும், நாட்டின் வருமானத்தையும் அளப்பதால் ஏற்படும் முக்கியத்துவத்தைக் குறைவாக மதிப்பிட முடியாது.

வரி தாங்கு வல்லமையை அளத்தல்

(Measurement of Taxable Capaeity)

எங்ஙனம் வரி தாங்கு வல்லமையை அளக்கவேண்டும் ? புள்ளியியல் முறைப்படி வரி தாங்கு வல்லமையைத் தீர்மானிப்பது மிகக் கடினம். வரி தாங்கு வல்லமையை மதிப்பிடுவதற்குச் சிறந்த வழி கீழ்க்காணும் இரு முறைகளில் ஒன்றைப் பயன்படுத்துவது : (அ)

தனியாள் அல்லது மொத்த வருமான முறை (The Personal or Aggregate Income Method) : இம்முறை பிரிட்டனில் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் அனுப்பும் வருமான அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தயாரித்த தனியாரின் வருமானங்களைப் பற்றிய புள்ளி விவரங்கள், இறப்பு வரிகளைப் பற்றிய புள்ளி விவரங்கள், பிற நேர்முக வரிகளைப்பற்றிய புள்ளி விவரங்கள் இவைகள் உள்துறை வருவாய் இலாக்காவினர் (Inland Revenue Department) வைத்திருக்கின்றனர். இப்புள்ளியியல் விவரங்கள் பிரிட்டனின் தேசிய வருமானத்தை மதிப்பிடுவதற்குப் பெரிதும் துணை செய்கின்றன. (ஆ) இன்னொரு முறை உற்பத்தியின் கணக்கு முறை (Census of Production Method) என்பது. இம்முறை நாட்டின் மொத்தச் செல்வ உற்பத்தியின் சாதனங்களைப் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்கின்றது. பிரிட்டிஷ் இந்தியாவின் வருமானத்தைக் கணக்கிடுவதற்கு இம்முறையை டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் (Dr. V. K. R. V, Rao) பயன்படுத்தினர்.

இருபத்தொன்றுமதிகாரம்

சில முக்கிய வரிகள்

1. வருமான வரி (income tax)

முதன்முதல் இந்தியாவில் வருமான வரி1860ல் விதிக்கப்பட்டது. இவ்வருமான வரி விவசாய வருமானங்கள்மீதும் விதிக்கப்பட்டது. 1886ல் விவசாய வருமானம் வருமான வரியிலிருந்து விலக்கப்பட்டது. வருமான வரியின் அமைப்பிலும் விகிதத்திலும் காலக்கிரமத்தில் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. 1903ல் வரி விலக்குக்கு உட்பட்ட வருமானம் 500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. 1916ல் வளர்வீத வரி முறை புகுத்தப்பட்டது. இதனுல், வருமான வரி வீதங்கள் எட்டு வகையாகப் பிரிக்கப்பட்டன. 1917-18 வருமான வரியைத் தவிர ஒரு மேல் வரியும் (super tax) விதிக்கப்பட்டது. 1921-31க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் பன்முறை வருமான வரியின் வளர்வீதமும் மேல் வரியின் வளர்வீதமும் திருத்தப்பட்டு உயர்த்தப்பட்டன. வரி விலக்கு அளிக்கப்பட்ட வருமானம் 1000 ரூபாய்க்குக் குறைக்கப்பட்டது. 1933-36ல் மீண்டும் வரியினின்று விலக்களிக்கப்பட்ட வருமானம் ஈராயிரமாக உயர்த்தப்பட்டது. சிறிய வருமானங்களின்மீது வரி வீதம் குறைக்கப்பட்டது. 1936ல் பாகப் பிரிவினை ஆகாத இந்துக் குடும்பங்களும் வருமான வரிக்கு உட்படுத்தப்பட்டன. 1939ல் படிப்படியான முறைக்குப் (step system) பதிலாக அடுக்கு முறை (slab system) புகுத்தப்பட்டது. அடுக்கு முறையில் அடுத்தடுத்த வருமானப் பகுதிகளுக்கு வளர்வீத வரி முறை கடைப்பிடிக்கப்படுகிறது. படிப்படியான முறையில் முழு வருமானத்திற்கும் ஒரே வரி வீதம் வசூலிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக ரூ. 2,000க்கும் 5.000க்கும் இடைப்பட்ட வருமானங்களில் ரூபாயில் 12 பைசா வீதமும்,

5,000க்கும் 10,000க்கும் இடைப்பட்ட வருமானத்தில் ரூபாயில் 15 பைசா வீதமும் வருமான வரி கொடுக்க வேண்டும். இவ்வரி முறைப்படி ஆண்டொன்றிற்கு 9,000 ரூபாய் வருமானம் உடையவர் ரூபாய்க்கு 15 பைசா வீதம் முழு வருமானத்திற்கும் வரி செலுத்த வேண்டும். ஆனால், அடுக்கு முறையில் முதல் அடுக்கு வருவாய்க்கு அதாவது ரூபாய் 2,000க்கு வரி செலுத்த வேண்டுவதில்லை. அடுத்த அடுக்கு அதாவது 2,000லிருந்து 5000 வரையில் ரூபாயில் 12 பைசா வீதமும், அடுத்த 4,000 ரூபாயின்மீது (5000-9000) 15 பைசா வீதமும் வருமான வரி செலுத்த வேண்டும். 1944ல் வருமான வரியை முன்னதாகக் கொடுப்பதற்கு (advance payment) வகை செய்யப்பட்டது. 1943ல் மிகை இலாப வரியில் (Excess Profits Tax) $\frac{1}{5}$ல் பங்கை அரசாங்கத்தினிடம் டிபாசிட்டாகக் கட்ட வேண்டுமென்று கட்டளையிடப்பட்டது. இந்நடவடிக்கைகள் எல்லாம் பண வீக்கத்தைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டன. 1945-46ல் உழைப்பு வருமானத்திற்கும் (earned income) உழைப்பிலா வருமானத்திற்கும் (unearned income) வேறுபாடு கற்பிக்கப்பட்டது. இரண்டாவது உலகப் போர்க்காலத்தில் வரி வீதங்கள் உயர்த்தப்பட்டன.

1946-47ல் தொழிலுக்கு ஊக்கம் தருவதற்காகப் பல சலுகைகள் வழங்கப்பட்டன. 1950-51ல் வருமான வரியில் மிகக் கூடுதலான வீதம் ரூபாய்க்கு 5 அணுவிலிருந்து 4 அணுவாகக் குறைக்கப்பட்டது. பாகப் பிரிவினை ஆகாத (இந்து) குடும்பத்திற்கு வரி வரம்பு ரூபாய் 5,000 ஆக உயர்த்தப்பட்டது. மேல் வரியைப் பொறுத்த மட்டில் உழைப்பு வருமானத்திற்கும் உழைப்பிலா வருமானத்திற்கும் யாதொரு வேறுபாடும் கற்பிக்கப்படவில்லை.

1963-64 பட்ஜெட்டில் வருமான வரியையும், மேல் வரியையும் செலுத்திய பின்பும் ஒரு கம்பெனியின் இலாபம் 6% மேலிருந்தால், அது ஒரு மேல் இலாப வரியைச் (Super Profit Tax) செலுத்த வேண்டும். 6%-லிருந்து 10%வரையிலும் இவ்விலாபத்தின்மீது 50%ம் 10% மேற்பட்ட இவ்விலாபத்தின்மீது 60%ம் வரி செலுத்த வேண்டும். இவ் வரியிலிருந்து இவ்வாண்டு (63-64) சுமார் 25 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பொழுது தனியார்களுக்கும், இந்து பாகப்பிரிவினை ஆகாத குடும்பங்களுக்கும், பதிவாகாத கம்பெனிகளுக்கும், பிற சங்கங்களுக்கும் கீழ்க்காணும் வருமான வரி வீதங்கள் வசூலிக்கப்படுகின்றன. திருமணம் ஆன நபர்கள், இந்துப் பாகப்பிரிவினை ஆகாத (அவிபத்த) குடும்பங்கள், ஆண்டின் மொத்த வருமானத்தில் முதல் 3000ரூபாய்க்கு வரி இல்லை; அடுத்த 2,000 ரூபாய்க்கு 3% வீதமும், அடுத்த 2,500க்கு 12% வீதமும் வருமான வரி விதிக்கப்படுகிறது. 1963-64ல் வரு

மான வரியிலிருந்து ரூ. 120 கோடி வருமானம் எதிர்பார்க்கப் படுகிறது (பட்ஜெட்டு மதிப்பீடு).

கம்பெனிகள்

கம்பெனிகளைப் பொறுத்த மட்டில் ரூபாயில் 4 அணு வருமான வரியாகவும், அதனுடன் மொத்த வருவாயில் 1/20 நான்கணுக்கள் (1/20th of four annas in the rupee) மேல் கட்டணமாகவும் (surcharge) வாங்கப்படுகின்றன. மொத்த வருமானம் ரூபாய் 20,000க்கு மேற்பட்டால், மேல் வரியும் (super tax) மேல் வரியின் மேல் கட்டணமும் (surcharge on super tax) குறிப்பிட்ட வீதங் களில் வசூலிக்கப்படுகின்றன.

வருமான வரிகள்

1. கார்ப்பொரேஷன் வரி எனவும், (2) கார்ப்பொரேஷன் அல்லாத பிற வருமானங்கள்மீது விதிக்கப்படும் வருமான வரி எனவும் வரிகள் பிரிக்கப்படுகின்றன. இவ்வேறுபாடு முக்கியமானது. ஏனெ னில், கார்ப்பொரேஷன் வரியினின்று கிடைக்கும் தொகை அனைத்தும் மத்திய அரசாங்கத்தைச் சேரும். தனியார் வருமான வரியினின்று கிடைக்கும் வருமானம் மத்திய மாநில அரசாங்கங்களுக்கிடையில் பிரிக்கப்படுகின்றன. திரு. நிக்கோலஸ் கால்டர் இப்போதைய பெருவருமான வரி விகிதம் (92%) மிகக்கடுமையானதெனவும், பெருவருமான வரி விகிதம் 45%க்குமேல் போகக் கூடாதெனவும் சிபாரிசு செய்தார். 1963-64ல் கார்ப்பொரேஷன் (கம்பெனி) வரியி லிருந்து இந்திய யூனியனுக்கு ரூ. 227 கோடி வருமானமாகக் கிடைக்கும் (பட்ஜெட்டு மதிப்பீடு).

பிற வரிகள்

அபினி, நாணயச்சாலை, தபால், தந்தி இவையெல்லாம் மத்திய அரசாங்கத்திற்கு வருமான இனங்களாகும். இவற்றில் சில வரிகள் வியாபார இலாபத்தைப் போன்றனவாகும். அபினியிலிருந்து கிடைக் கும் வருமானத்தை முற்றுரிமை இலாபமாகக் (Monopoly Profit) கொள்ளலாம். ஏனெனில், மத்திய அரசாங்கத்திற்கு இவற்றை உற்பத்தி செய்யவும் சப்ளை செய்யவும் முற்றுரிமை உள்ளது. அபினி, அரசாங்க ஆலைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த பல ஆண்டுகளாக மத்திய அரசாங்கத்திற்கு அபினியில் சிறிது இழப்பு ஏற்பட்டுள்ளது. மாநில அரசாங்கங்களுக்கும் வெளி நாடு களுக்கும் மருந்து வகைகளுக்கான அபினி விற்கப்படுகிறது. இருப் புப் பாதையிலிருந்து மத்திய அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக் கிறது. தபால், தந்தி இலாக்காவிலிருந்து ஆண்டொன்றிற்கு மத்திய அரசாங்கத்திற்குச் சுமார் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

2. மிகை இலாப வரி

1919ல் முதல் உலகப்போர் முடிந்த போது இந்தியாவில் இவ் வரி விதிக்கப்பட்டது. அடுத்த ஆண்டிலே (1920) இவ்வரி நீக்கப் பட்டது. போர்க்காலத்தில் நுகர்ச்சிப் பொருள்கள் மிகவும் குறை வாக உற்பத்தி செய்யப்பட்டதால், பண்டங்களுக்கு மிகுந்த கிராக்கி ஏற்பட்டு, வர்த்தக சமூகத்தினர் கொள்ளை இலாபம் அடித்தனர். இவ்விலாபம் சாதாரணக் காலங்களில் அவர்கள் அடையும் இலா பத்தைவிட அதிகமாய் இருந்தது. இந்தியாவில் ரூ. 30,000க்கு மேற்பட்ட அமித இலாபத்தின்மீதுதான் வரி விதிக்கப்பட்டது. முத லில் வரி விகிதம் 50% ஆக இருந்தது. பிறகு $66\frac{2}{3}$% ஆக உயர்த்தப் பட்டது. போர் முடிந்ததும் $6\frac{2}{3}$% திருப்பிக் கொடுக்கப்பட்டது. இன் சூரன்ஸ் கம்பெனிகளின் இலாபம், உத்தியோகஸ்தரின் வருமானம் இவற்றைத் தவிர, பிற எல்லாத் தொழில்களின்மீதும் இவ்வரி விதிக்கப் பட்டது. இரண்டாவது உலகப் போர் ஆரம்பித்த பின் மீண்டும் இவ் வரி விதிக்கப்பட்டது. 1940ல் அப்போதைய நிதி உறுப்பினராய் (Finance Member) இருந்த சர் ஜெரமி ரெய்ஸ்மனால் (Sir Jeremy Raisman) இவ்வரி விதிக்கப்பட்டது. 1935க்கும் 1940க்கும் இடைப் பட்ட எந்த இரண்டாண்டுகளிலேனும் கிடைத்த இலாபத்தைவிடக் கூடுதல் இலாபம் கிடைத்தால், இவ்வரி விதிக்கப்பட்டது. 1940-41ல் இவ்வரியினால் ரூ. 3 கோடியும், 41-42ல் ரூ. 8 கோடியும், 42-43ல் ரூ. 22 கோடியும், 43-44ல் 40 கோடியும், 44-45ல் ரூ. $67\frac{1}{2}$ கோடி யும், 45-46ல் 68 கோடியும், கிடைத்தன. போர் முடிந்ததும் 1946ல் அப்போதைய நிதி உறுப்பினராய் இருந்த சர் ஆர்ச்சிபால்டு ரௌலண்டால் (Sir Archibald Rowland) இவ்வரி அகற்றப்பட்டது.

3. மூலதன ஆதாய வரி (Capital Gains Tax)

காமன்வெல்து நாடுகளில் முதன்முதல் இவ்வரியை விதித்த பெருமை இந்தியாவையே சாரும். முதன்முதல் 1947-48ல் இவ்வரி அப்பொழுது நிதியமைச்சராய் இருந்த லியாகத் அலிகானால் விதிக்கப் பட்டது. ஆனால், இவ்வரி 1949-50ல் கைவிடப்பட்டது. கால்டரின் சிபாரிசுக்கிணங்க 1956 நவம்பரில் திரு. டி. டி. கிருஷ்ணமாசாரியா ரால் இவ்வரி மீண்டும் விதிக்கப்பட்டது. ஓர் ஆண்டில் ரூபாய் 5,000க்குக் குறைவாக ஆதாயம் இருந்தால், இவ்வரி கொடுக்க வேண்டுவதில்லை, வரி விதிப்பு விசாரணைக்குழு இவ்வரியை மீண்டும் விதித்ததை எதிர்த்தது.

4. எஸ்டேட்டு வரி (Estate Duty)

1953-ஆம் ஆண்டில் எஸ்டேட்டு வரிச்சட்டம் இயற்றப்பட்டு, அக்டோபர் 15-ஆம் தேதியில் அமுலுக்கு வந்தது. இறக்கும்

பொழுது ஒருவர் விட்டு வைத்துப்போன சொத்தின் மதிப்பின்மீது இவ் வரி விதிக்கப்படுகிறது. பாகப் பிரிவினை ஆகாத இந்து, குடும்பத்தைப் பொறுத்த வரை ரூ. 50,000க்குக் குறைந்த மதிப்புள்ள சொத்துகளுக்கு இவ்வரியினின்று விலக்களிக்கப்பட்டலு. பிற உடைமைகளைப் பொறுத்த வரை வரி விலக்கு வரம்பு இலட்சம் ரூபாய் ஆகும். இறப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன் தருமத்திற்காக ஒரு நன்கொடை கொடுத்திருந்தால், அதற்கு வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. பிற கொடைகளைப் பொறுத்த வரையில் அவை ஈராண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். நன்கொடையாகப் பெற்றவர் உடனே அச்சொத்தைத் தம் வசம் எடுத்துக்கொள்ள வேண்டும். நன்கொடையாளர் நன்கொடை மூலம் எந்த ஒரு விதமான நன்கொடையும் அடையக்கூடாது. இவ்வரியிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம் மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். விவசாய நிலங்களைப் பொறுத்த வரையில் எஸ்டேட்டு வரியும், வாரிசு வரியும் மாநில சட்டசபை அதிகாரங்களுக்குட்பட்டவை. இவ் வரியின் விகிதம் 5% முதல் 40% வரை உயர்ந்து செல்கிறது. குடும்பத்தில் அடிக்கடி மரணங்கள் ஏற்பட்டால், அதற்கு ஓரளவு இவ்வரியிலிருந்து நிவாரணம் அளிக்கப்படுகிறது. ஒரு குடும்பத்தில் இரண்டாவது மரணம் 1, 2, 3, 4, 5 ஆண்டுகளில் ஏற்பட்டால், அதற்கேற்ப வரியின் விகிதம் 50% 40%, 30%, 20%, 10% குறைக்கப்படும். உடைமையை மதிப்பிடுமுன் கீழ்க்காணும் கழிவுகள் செய்யப்படும் : 1. 1,000 ரூபாய்க்கு மேற்படாத ஈமக்கிரியைச் செலவுகள், 2. உண்மையான கடன்கள், பிற வில்லங்கங்கள் (encumbrances), 3. ரூ. 5,000க்கு மேற்படாத விதவையின் கடன் (dower debts), 4. வெளி நாடுகளில் இருக்கும் உடைமையை நிருவகிப்பதற்காகவோ அல்லது விற்று முதல் செய்வதற்காகவோ சொத்தின் பெறுமானத்தில் 5%க்கு மேற்போகாமல் செலவிடல்.

வரி விதிப்பு விசாரணைக் குழு இப்போதுள்ள வரி விலக்கு வரம்பைக் குறைக்க வேண்டுமென்றும், இறப்பதற்கு முன்பு வாய்மொழியாக உடைமைகளைப் பரிசாகக் கொடுத்தால், அவற்றிற்கு ஈராண்டு காலம் வரை வரி இல்லையென்று இருப்பதை ஐந்தாண்டாக உயர்த்த வேண்டும் என்றும் சிபாரிசு செய்தது. 1963ல் எஸ்டேட்டு வரியிலிருந்து இந்திய யூனியனுக்கு ரூ. 12 இலட்சம் வருவாயாகக் கிடைக்கும் (பட்ஜெட்டு மதிப்பீடு).

5. கொடை வரி (Gift Tax)

திரு. நிக்கோலஸ் கால்டர் சிபாரிசு செய்தபடி இந்திய அரசாங்கம் 1958ல் இவ்வரியை விதித்தது. 10,000 ரூபாய்க்கு மேற்பட்ட கொடைகள் மேல் 4% முதல் 40% வரை வரி விதிக்கப்படுகிறது.

20 இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட கொடைகள்மேல் 40% வரி விதிக்கப்படுகிறது. 1963ல் கொடை வரியிலிருந்து இந்திய அரசாங்கத்திற்கு ரூ. 95 இலட்சம் வருவாயாகக் கிடைக்கும் (பட்ஜெட்டு மதிப்பீடு).

6. **செல்வ வரி** (Wealth Tax)

இதுவும் பிரிட்டிஷ்பொருளாதாரப் புலவர் நிக்கோலஸ் கால்டரின் சிபாரிசுப்படி திரு. டி. டி. கிருஷ்ணமாசாரியாரால் 1957ல் விதிக்கப்பட்டது. செல்வ வரியை விதிப்பது சாத்தியமே என வரி விதிப்பு விசாரணைக் குழு கருதியது. இந்தியாவைத் தவிர, நார்வே, ஸ்வீடன், டென்மார்க்கு, மேற்கு ஜெர்மனி, ஆஸ்திரியா, சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளிலும் இவ்வரி வதிக்கப்படுகிறது. இந்தியாவில் தனியார்களுக்கு ரூ.2 இலட்சம் வரையிலும், பாகப் பிரிவினை ஆகாத குடும்பங்களுக்கு ரூ. 4 இலட்சம் வரையிலும், கம்பெனிகளுக்கு ரூ. 5 இலட்சம் வரையிலும் விலக்களிக்கப்பட்டுள்ளது. தனியார்களுக்கும், பாகப் பிரிவினை ஆகாத குடும்பங்களுக்கும் வரி வீதம் $\frac{1}{2}$% முதல் $1\frac{1}{2}$% வரை செல்கிறது. கம்பெனிகளுக்கு ஒரே வரிவீதமாக $\frac{1}{2}$%விதிக்கப்படுகிறது. செல்வ வரி வீதமாக $\frac{1}{2}$% விதிக்கப்படுகிறது. செல்வ வரி விதிக்கும் பொழுது விவசாயச்சொத்துகள், பிற நாட்டு ஆஸ்திகள், அறச் சொத்து அல்லது சமயச்சொத்துகள், பிராவிடன்டு நிதிகள் (Provident Funds), இன்சூரன்ஸ் பாலிசிகள் ஆகிய இவற்றிற்கெல்லாம் விலக்களிக்கப்படுகிறது. மேஜை, நாற்காலி, கார், நகைகள் இவற்றின் மதிப்பு ரூபாய் 25,000க்கு மேற்படாதிருந்தாலும், உத்தியோகத்திற்கு வேண்டிய உபகரணங்களின் (Professional Instruments) மதிப்பு ரூ. 25,000க்கு மேற்படாதிருந்தாலும், இவற்றிற்கு இவ்வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இவ்வரியை 36,000 பேர் செலுத்த வேண்டியிருக்கும் எனவும், இவ்வரியிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 10 கோடி ரூபாய் கிடைக்கும் எனவும் மதிப்பிடப்படுகிறது. 1963-64ல் இவ்வரியிலிருந்து ரூ. 9 கோடி வருவாயாகக் கிடைக்கலாம் (பட்ஜெட்டு மதிப்பீடு). கம்பெனிகளின்மீது விதிக்கப்பட்ட செல்வ வரி 1960-ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம், 1-ஆம் நாள் அகற்றப்பட்டது.

7. **செலவு வரி** (Expenditure Tax)

இவ்வரியும் திரு. கால்டரின் சிபாரிசின்படி 1957ல் டி. டி. கிருஷ்ணமாசாரியாரால் விதிக்கப்பட்டது. உலகில் இவ்வரி இந்தியாவில் மட்டுமே விதிக்கப்பட்டுள்ளது என்பது கவனித்தற்குரியதாகும். ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 60,000க்குக் குறையாத வருமானமுடைய பாகப்பிரிவினையாகாத இந்து குடும்பங்களும் தனியார்களும் இவ்வரியைக் கொடுக்க வேண்டும். வரி விதிக்கப்பட்டவருக்கும் அவருடைய மனைவியாருக்குமாக ரூ.24,000மும், அவர்களுடைய குழந்தைகளுள் ஒவ்வொருவருக்கும் ரூபாய்5,000மும் கழிக்கப்படுகின்றன. மீதமுள்ள

செலவின்மீது இவ்வரி விதிக்கப்படுகிறது. வரி விலக்குக்கு மேற்பட்ட முதல் 10,000ன் மீது 10%ம், அடுத்த 10,000ன் மீது 20%ம், அதற்கடுத்த 10,000ன் மீது 40%ம், அதற்கடுத்த 10,000ன் மீது 60%ம், அதற்கடுத்த 10,000ன் மீது 80%ம், மீதமுள்ளவற்றின்மீது 100%ம் வரியாக விதிக்கப்படுகின்றன. அதாவது, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50,000க்கு மேல் செலவழித்தால் முழுத்தொகையும் வரியாக வசூலிக்கப்படும். இவ்வரி 1958-1959ல் தான் அமுலுக்கு வந்தது. இவ்வரியை 6,000 பேர் செலுத்தவேண்டியிருக்கும் என மதிப்பிடப் பட்டிருக்கிறது. 1958-59ல் இவ்வரியின் மூலம் ஒரு கோடி ரூபாய் அரசாங்கத்திற்குக் கிடைத்தது. இவ்வரி சென்ற ஆண்டில் (1962-63), 1962-ஆம் ஆண்டு நிதிச் சட்டத்தின்படி நீக்கப்பட்டது. இவ் வரியிலிருந்து 1963-64ல் ரூ. 16 கோடி வருவாயாகக் கிடைக்கலாம் (பட்ஜெட்டு மதிப்பீடு).

3. நிலவரி (Land Tax or Land Revenue)

இந்தியாவில் நிலவரி மிக முக்கியமானதொரு வருவாய் இனமாகும். ஆயினும், கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது அதன் முக்கியத்துவம் குறைந்து வருகிறது. நம் நாட்டில் நிலத்தின் நிகர வருமானம் அல்லது குத்தகை அல்லது குத்தகையின் மதிப்பு இவற்றின்மீது இவ்வரி விதிக்கப்படுகிறது. உத்தரப்பிரதேசம், கிழக்குப் பஞ்சாபு, மத்தியப் பிரதேசம் இவற்றில் நிலத்தின் குத்தகையின் பேரிலும், சென்னையில் நிகர வருமானத்தின் பேரிலும், பம்பாயில் குத்தகையாகக் கொடுக்கப்பட்ட தொகைகளின் பேரிலும், நில வரி விதிக்கப்படுகிறது. வரி மதிப்பு விசாரணைக்குழு நில வரியைப் (கிஸ்தியைப்) பற்றிச் சில சிபாரிசுகளைச் செய்தது. நில வரிக்குப் பதிலாக விவசாய வருமான வரி விதிக்கவேண்டுமென்ற யோசனையை இக்குழு ஆதரிக்கவில்லை. மொத்த நிலங்களில் ஐந்து ஏக்கருக்கு உட்பட்ட நிலங்கள் 50%க்கு மேலும், பத்து ஏக்கருக்கு உட்பட்ட நிலங்கள் 75%ம் இருப்பதால், நிலவரிக்குப் பதிலாக விவசாய வருமான வரியை மாநிலங்கள் விதித்தால், அதனால் அதிக வருவாயை அடைய முடியாது என்பதைக் குழுச்சுட்டிக் காட்டுகிறது. இப்பொழுது பல மாநிலங்களிலும் காங்கிரஸ் அரசாங்கம் நில உடைமைக்குஓர் உச்சவரம்பு கட்ட முனைந்திருப்பதால், விவசாய வருமானம் பெரிதும் குறையும். ஆகையால், நிலவரிக்குப் பதிலாக விவசாய வருமான வரி விதிப்பது உசிதமன்று.

பிரிட்டிஷார் ஆட்சி தொடங்கிய நாளிலிருந்து உணவுத் தானியங்களின் விலை ஏறிக்கொண்டே வருவதால், நிலவரியின் சுமை குறைந்துகொண்டே வருகிறது. ஸ்தல ஸ்தாபனங்கள் நிலவரியின்

மீது ஒரு மேல் கட்டணத்தை (surcharge) வசூலித்தல் கண்டிக்கத் தக்கதன்று. விலை வாசிகள் 25%க்கு மேற்போகாமல் ஏறினாலோ, அல்லது இறங்கினாலோ, நிலவரியில் யாதொரு மாறுதலும் செய்ய வேண்டுவதில்லை. நில வரி வசூலில் 15%க்குக் குறையாமல் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வினியோகிக்க வேண்டும். திறமையான கூட்டுறவுச் சங்கங்கள் இருக்குமானால், அவற்றின் மூலம் நிலவரியை வசூல் செய்யலாம். நில வரி வசூலைக் கிராமப் பஞ்சாயத்துகளிடம் கமிஷன் அடிப்படையில் ஒப்படைக்கலாம் என்பது நல்ல யோசனையே. பரம்பரைக் கிராம உத்தியோகஸ்தர்களுக்குப் பதிலாகக் கல்வி, அந்தஸ்தைப் பொறுத்து அவ்வரியை வசூலிப்பதற்குக் கிராமத்தில் பட்டா நிலத்துடன் கூடியவர்களைச் சம்பளத்திற்குக் (கிராம உத்தி யோகஸ்தர்களாக) நியமிக்கலாம். இறுதியில் விவசாய வருமான வரியையும் விவசாயமல்லாத வருமான வரியையும் ஒன்றாக இணைத்து, ஒரே வருமான வரி ஆக்கவேண்டுமென்பது வரி விதிப்பு விசாரணைக் குழுவின் சிபாரிசு. இவ்வரியை மத்திய அரசாங்கம் விதிக்க வேண்டும் என்றும், இப்பொழுது வருமான வரியிலிருந்து வரும் வருவாயைப் பிரித்துக் கொடுப்பது போல, இவ்விணைக்கப்பட்ட வருமான வரியிலிருந்து கிடைக்கும் வருவாயையும் மாநிலங்களுக்குக் குறிப்பிட்ட ஓர் அடிப்படையில் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்பதும் இக்குழுவின் யோசனை.

9. விவசாய வருமான வரி (Agricultural Income Tax)

சமீப காலத்திலேதான் இவ்வரி பல மாநிலங்களில் விதிக்கப் பட்டது. முதன்முதல் பீகாரில் இவ்வரி விதிக்கப்பட்டது. இப்பொழுது அஸ்ஸாம், வங்காளம், ஒரிஸ்ஸா, உத்தரப்பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், கேரளம், தமிழ் நாடு, ராஜஸ்தானம் ஆகிய மாநிலங்களில் இவ்வரி விதிக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 3,000க்கு மேற்பட்ட விவசாய வருமானம் உடையவர்கள் மீது இவ்வரி விதிக்கப்படுகிறது.

மறைமுக வரிகள்

1. ஆயத் தீர்வைகள் (Excise Duties)

உள் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டு உள் நாட்டிலேயே துய்க்கப்படும் பொருளின்மீது விதிக்கப்படும் வரிகள் 'ஆயத் தீர்வைகள்' எனப்படும். பிரிட்டிஷார் இந்தியாவிற்கு வருமுன்பே உப்பு வரி விதிக்கப்பட்டது. பொது மக்கள் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது இவ்வரி 1882 முதல் தொடர்ந்து நீடிக்கப் பட்டது. இவ்வரியிலிருந்து ஆண்டுதோறும் 8 கோடி முதல் 11 கோடி

ரூபாய் வரை வருமானம் கிடைத்தது. அரசியல் காரணங்களுக்காக இவ்வரி 1947ல் அகற்றப்பட்டது. வரி விதிப்பு விசாரணைக்குழு உப்பு வரியை மீண்டும் விதித்தலை விரும்பவில்லையாயினும், அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற உப்பு வரியை மீண்டும் விதிக்கலாமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் எனக் கூறியது. உப்பு வரியைத் தவிர்த்து முதன்முதல் மத்திய அரசாங்கத்தால் 1894ல் இருபது இராத்தலுக்கு மேலுள்ள பருத்தி நூல்மீது ஆயத்தீர்வை விதிக்கப்பட்டது: 1896ல் ஆலைத் துணியின்மீது ஒரு ஆயத்தீர்வை விதிக்கப்பட்டதால், இவ்வரி கைவிடப்பட்டது. இந்நடவடிக்கைகள் எல்லாம் லங்காஷயர் செல்வாக்கினால் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவில் மார்க்கெட்டு நிலைக்க வேண்டும் என்ற எண்ணத்துடனே ஆங்கிலேயர் இவ்வாறு செய்தனர். ஆயினும், இந்தியாவில் பொது மக்களின் கருத்து இவ்வரிக்கு எதிராகவே இருந்தது. இறுதியில் 1926ல் இவ்வரி கைவிடப்பட்டது. இப்பொழுது இருக்கும் ஆயத் தீர்வைகளில் முதன்முதல் விதிக்கப்பட்ட வரி மோட்டார் ஸ்பிரிட்டின்மீது 1917ல் விதிக்கப்பட்ட வரியாகும். இதைத் தொடர்ந்து 1922ல் மண்ணெண்ணெய் மீது ஒரு வரி விதிக்கப்பட்டது. 1924ல் சர்க்கரை, தீப்பெட்டி, எஃகுத் துண்டுகள் இவற்றின்மீது வரி விதிக்கப்பட்டது. 1941ல் டயர்கள் (Tyres) மீதும், 1943ல் தாவர விளைபொருள்களின் (vegetable products) மீதும் இவ்வரி விதிக்கப்பட்டது. ஆனால், இவற்றையெல்லாம்விட 1944ல் புகையிலைமீது வரி விதிக்கப்பட்டதுதான் மிக முக்கியமானதாகும். ஏனெனில், இதுகாறும் பெருந்தொழில்களின் விளைபொருள்களின்மீதே வரி விதிக்கப்பட்டதிலிருந்து இது ஒரு புதிய திருப்பமாகும். பிற்காலத்தில் புகையிலை வரி வீதங்களில் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. இதனால் அதினின்று கிடைக்கும் வருமானம் பெருகியது. 1944-45ல் பாக்கு, காப்பி, தேயிலை இவற்றின்மீது ஆயத் தீர்வை விதிக்கப்பட்டது. 1949ல் ஆயத் தீர்வை மேலும் விஸ்தரிக்கப்பட்டது. 1954ல் செயற்கைப்பட்டு (art silk), சிமென்டு, சவர்க்காரம் (soap), காலணி இவற்றின்மீது வரிகள் விதிக்கப்பட்டன. இறக்குமதி ஏற்றுமதி வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானம் நிலையானதன்று. அது வியாபாரக் கொள்கைகளில் மாறுதல்களையும் அன்னியச் செலாவணி கிடைப்பதையும் பொறுத்திருக்கிறது. ஆகவே, இனிமேல் எதிர் காலத்தில் நுகர்ச்சிப் பொருள்களை உற்பத்தி செய்யும் இந்தியத் தொழில்களின்மீது அதிகமாக ஆயத்தீர்வைகளை விதிப்பது இன்றியமையாததாகும். மேலும், 1954-55ல் நிதியமைச்சர் தம்முடைய வரவு செலவுத் திட்டச் சொற்பொழிவில் குறிப்பிட்டவாறு, “இறந்த காலத்தில் இத்தொழில்கள் எல்லாம் காப்புக் கொள்கையின் உதவியால் வளர்ச்சி

யடைந்ததாலும், இவ்வரிகளை நுகர்வோரே கொடுத்ததாலும் இத் தொழில்கள் பூரண வளர்ச்சியடைந்த பொழுது நாட்டின் கருவூலத் திற்குப் போதிய தொகையைக் கொடுப்பது பொருத்தமேயாகும். மத்திய ஆயத்தீர்வைகளிலிருந்து கிடைக்கும் வருமானம் படிப்படியாக ரூ. 8·66 கோடியிலிருந்து (1938-39) 35·1 கோடியாக உயர்ந் திருக்கிறது. 1960-61ல் ஆயத்தீர்வைகளிலிருந்து ரூபாய் 380 கோடி கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. உள் நாட்டிலேயே நுகர்ச்சி வரிகள் (consumption taxes) நிதி முறையில் கேந்திர ஸ்தானத்தை வகிக்கின்றன. 1963-64ல் மொத்த வருமானத்தில் 27% இவ்வரிகளினின்றும் கிடைக்கும். மண்ணெண்ணெய், டீசல் எண்ணெய், சிகரெட்டுகள் இவற்றின்மீதுள்ள ஆயத்தீர்வைகள் 1963-64ல் உயர்த்தப்பட்டன.

2. இறக்குமதி வரி

சாதாரணமாக இறக்குமதி வரிகளின் வீதம் 25 சதவீதம் ஆகும். ஆனால், போகப் பொருள்களின்மீது 100% வரை வரிகள் விதிக்கப்படுகின்றன. உலோக எண்ணெய்கள் (mineral oils) (மோட்டார் ஸ்பிரிட்டைத் தவிர்த்து), நெசவு எந்திரங்கள், கச்சாப் பிலிம்கள் (raw films) இவற்றின் பேரில் குறைந்த வரி விதிக்கப்படுகிறது. ஏற்றுமதி இறக்குமதி வரிகள் மத்திய அரசாங் கத்தின் முக்கியமான வருமானஇனங்களில் ஒன்றாகும். மொத்தச் சுங் கத் தீர்வைகளில் ⅔ பகுதி இறக்குமதி வரியிலிருந்து கிடைக்கிறது. மத்திய அரசாங்கத்தின் மொத்த வரி வருமானத்தில் பத்தில் ஒரு பகுதி (11%) இறக்குமதி வரியிலிருந்து கிடைக்கிறது. இதில் பெரும் பகுதி வருவாய்க்காக விதிக்கப்படும் வரிகளாலும், சிறு பகுதி உள் நாட்டுத் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு விதிக்கப்படும் வரிகளாலும் கிடைக்கின்றன. 1959-60ல் இறக்குமதி வரியிலிருந்து ரூ. 110·62 கோடி கிடைத்தது.

1914 வரை இந்திய இறக்குமதி வரிகள் தடையிலா வாணிபத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், இறக்குமதிகளின்மீது சொற்ப வரிகளே விதிக்கப்பட்டன. ஆயினும், முதல் உலகப்போரினால் ஏற்பட்ட நிதி நெருக்கடியால் இறக்குமதி வரிகளில் பெருத்த மாறுதல் கள் செய்யப்பட்டன. பல எந்திரச் சாமான்களும், உலோகப் பொருள்களும், முதல் முதலாக வரிக்கு உள்ளாயின. பல பொருள்களின்மீதும் வரிகள் உயர்த்தப்பட்டன. 1930 முதல் பெருத்த பொருளியல் மந்தம் (Great Economic Depression) ஏற்பட்ட தால், வரவு செலவுத் திட்டத்தில் பெரும்பற்றுக்குறை ஏற்பட்டது. இதனால், இறக்குமதி வரிகள் மேலும் உயர்த்தப்பட்டன. 1932-ஆம்

ஆண்டின் ஒட்டாவா ஒப்பந்தமும் (Ottawa Agreement) 1939-ஆம் ஆண்டின் இந்திய பிரிட்டிஷ் வியாபார ஒப்பந்தமும், ஏகாதிபத்தியச் சலுகை (Imperial Preferencc) என்ற புதிய கொள்கையைப் புகுத்தின. இதனால், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து தருவிக்கும் இறக்குமதிகளுக்குச் சலுகையளிக்கப்பட்டது. இதனால், பெரிய நன்மையடைந்த நாடு பிரிட்டன். இரண்டாம் உலகப் போரின் போது ஏற்கெனவே இருந்த இறக்குமதி வரிகளின்மீது மேலும் 20% மேல் கட்டணம் விதிக்கப்பட்டது. 1948-49லும் மோட்டார் ஊர்திகள் (motor vehicles) அவற்றிற்கு வேண்டிய துணைக் கருவிகள் (accessories) இவற்றின்மீது இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டன. ஆனால், பிரிட்டனிலிருந்து வரும் இச்சாமான்களுக்கு 7½% சலுகை அளிக்கப்பட்டது. இச்சலுகை 1954-55ல் நிறுத்தப்பட்டது. 1946-47ல் பாக்கின்மீது விதிக்கப்பட்ட இறக்குமதி வரி இராத்தலுக்கு 5½ அணுவாக உயர்த்தப்பட்டது. காமன்வெல்த்து நாடுகளிலிருந்து வரும் பாக்கிற்கு இராத்தல் ஒன்றிற்கு 6 பைசா சலுகை அளிக்கப்பட்டது. 1954-55ல் இவ்வரி இராத்தலுக்கு 6 அணுவாக உயர்த்தப்பட்டது. இதனால், உபரியாக 3 கோடி ரூபாய் வருமானம் கிடைத்தது. 1954-55ல் பிளாஸ்டிக்குச் சாமான்கள், இரப்பர், பிரிக்கப்பட்ட கேபிள்கள் (insulated cables), மின் விசிறி, மின் குழாய் இவற்றின்மீது வரிகள் உயர்த்தப்பட்டன. பஞ்சு சிலரக எஃகு இவற்றின் மீதிருந்த இறக்குமதி வரி அகற்றப்பட்டது. 1963-64ஆம் ஆண்டின் பட்ஜெட்டில் உலோக எண்ணெய்கள், எந்திர வகைகள், இரும்பு, உருக்குப்பொருள்கள், பஞ்சு, ரப்பர், சினிமா பிலிம்கள், புகையிலை, சாயங்கள் ஆகியவற்றின்மீது இறக்குமதி வரி உயர்த்தப்பட்டது.

இறக்குமதி வரிகள் பலதரப்பட்ட சரக்குகளைத் தம்முள் அடக்கின. இவ்வரிகளின் வீதமும், இறுதியான நிலைப்பாடும் (final incidence) அடிக்கடி பரிசீலனை செய்யப்படுகின்றன. ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்குக் காத்திராமலே இவ்வரியில் அடிக்கடி மாறுதல்கள் செய்யப்படுகின்றன.

3. ஏற்றுமதி வரிகள்

ஏற்றுமதி வரிகளினின்று கிடைக்கும் வருமானம் சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது. 1952-53ல் இதினின்று கிடைத்த வருமானம் ரூ. 55.97 கோடி ; 1959-60இல் இதிலிருந்து கிடைத்த வருமானம் ரூ. 21.28 கோடி. ஏற்றுமதி வரிகளில் மிக முக்கியமானவை சணலின்மீதும் தேயிலையின்மீதும் விதிக்கப்பட்டவையே. 1860ஆம் ஆண்டு வரை எல்லா ஏற்றுமதிகளின்மீதும் அவற்றின் மதிப்பில் 3% வரியாக

விதிக்கப்பட்டது. 1860 முதல் 1880 வரை ஏற்றுமதி வரிகளை அகற்றுவதே நோக்கமாகக் கொள்ளப்பட்டது. அதனால், 1880ல் அரிசி ஒன்றின்மீதுதான் ஏற்றுமதி வரி இருந்தது. 1903ல் தேயிலை யின்மீதும் ஏற்றுமதி வரிகள் விதிக்கப்பட்டன. இரண்டாவது உலகப் போருக்கு முன்பு பொதுவாக உயர்ந்த ஒரு வரியும், பல்வகைப்பட்ட பொருள்களின்மீது பல்வேறுபட்ட வரி விகிதமும், புதிய ஏற்றுமதித் தீர்வையும் முக்கிய அமிசங்களாகும். அண்மைக்காலத்தில் பணவீக் கத்தைச் சமாளிப்பதற்கும் முக்கிய ஏற்றுமதிகளில் உள்நாட்டு விலை வாசிகளுக்கும் வெளிநாட்டு விலைவாசிகளுக்கும் உள்ள இட்டோட் டத்தைக் குறைத்துக் கருவூலத்திற்கு வருமானம் பெறுவதற்கும் இவ் வரிகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வரிகளால் நாட்டின் ஏற்றுமதி வாணிபத்தின்மீது ஏற்படும் விளைவுகளை இந்திய அரசாங்கம் அடிக்கடி பரிசீலனை செய்து வருகிறது. உலக மார்க்கெட்டில் இந்தியா போட்டியிடுவதற்குச் சாதகமாக, இன்றியமையாத மாறுதல்கள் இவ் வரி வீதங்களில் காலந்தோறும் செய்யப்படுகின்றன. இறக்குமதி ஏற்றுமதி வரிகளிலிருந்து கிடைக்கும் வருமானம் மத்திய அரசாங்க வருமானத்தில் $16\frac{2}{3}\%$ ஆகும். 1963-64ஆம் ஆண்டு பட்ஜெட்டில் தேயிலைமீதிருந்த ஏற்றுமதி வரி நீக்கப்பட்டது.

4. விற்பனை வரி

விற்பனை வரி மிகப் பழைய வரிகளுள் ஒன்றாகும். பழைய காலத் தில் ஏதென்ஸிலும், எகிப்தில் டாலமிக்கள் காலத்திலும், ரோமில் அகஸ்டஸ் ஸீஸரின் பின் தோன்றல்களான சக்கரவர்த்திகள் காலத்தி லும் இவ்வரி விதிக்கப்பட்டது. நம்முடைய நாட்டில் மௌரியர்கள் காலத்தில் விற்பனை வரி வசூலிக்கப்பட்டது என்பதற்குக் கௌடில்லிய ரின் பொருள் நூல் (அர்த்த சாஸ்திரம்) சான்று பகரும். சுக்கிர நீதி சாரத்தில் விற்பனை வரியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அண்மைக்காலத்தில் இவ்வரியை விதித்த பெருமை சென்னையைச் சாரும்; 1939-40இல் இவ்வரி சென்னையில் விதிக்கப்பட்டது. பிற மாநிலங்கள் சென்னையைப் பின் பற்றின. முதலில் வரி வீதம் $\frac{1}{2}\%$ ஆய் இருந்தது. உணவு தானியங்கள், வாழ்க்கைக்கு இன்றியமையாத பிற பொருள்கள், தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்கள், பொன், வெள்ளி, ஒரு மாநிலத்தை விட்டு இன்னொரு மாநிலத்திற்குச் செல்லும் பொருள்கள் இவற்றிற்கு இவ்வரி யிலிருந்து விலக்களிக்கப்பட்டது. அண்மையில் இவ்விலக்குகள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டன. பொதுவான விற்பனை வரிக்கும் (General Sales Tax) குறிப்பிட்ட விற்பனை வரிக்கும் (Selective Sales Tax) வேறுபாடுகள் உள. இன்றியமையாத பொருள்களின்மீது குறைவான வரியும் போகப் பொருள்களின்மீது கூடுதலான வரியும் வசூலிக்கப்படுகின்றன. ஆலைப் பொருள்களுக்கும், கைத்தொழிற்

பொருள்களுக்கும் வரி வீதத்தில் வேறுபாடுகள் கற்பிக்கப்படு கின்றன. எடுத்துக்காட்டாக, கதருக்கு விற்பனை வரியிலிருந்து விலக் களிக்கப்பட்டிருக்கிறது ; ஆலைத்துணிக்கு விலக்களிக்கப்படவில்லை. பிற பொருள்களைவிட இரும்பு, எஃகு போன்றவற்றின்மேல் கூடுதலான வரி வசூலிக்கப்படுகிறது. எல்லா மாநிலங்களின் மொத்த வருமானம் ரூபாய் 500 கோடி. இதில் விற்பனை வரியினின்று கிடைக்கும் வருமானம் ரூ. 75 கோடி. பம்பாய், சென்னை, மேற்கு வங்காளம் இவற்றில் நிலவரியைவிட விற்பனை வரி மூலம் அதிக வருமானம் கிடைக்கிறது. வரி விதிப்பு விசாரணைக்குழு, விற்பனை வரி மாநில வரியாகவே தொடர்ந்து இருக்கவேண்டும் என்றும், ஆனால், மாநிலங் களிடையே ஏற்படும் விற்பனைகள் (Inter-State Sales) மீது யூனியன் அரசாங்கமே விற்பனை வரி விதிக்க வேண்டும் என்றும் சிபாரிசு செய்தது. ஒரு மாநிலத்திலிருந்து மற்றொன்றிற்குச் செல்லும் சரக்கு களின்மீது மத்திய அரசாங்கம் விதிக்கும் விற்பனை வரி மிகக்குறைவான வரி வீதமாய் இருக்கவேண்டுமென்றும், அக்குழுச் சிபாரிசு செய்தது ; இதிலிருந்து கிடைக்கும் வருமானம் வசூலைப்பொறுத்ததுஎன்றும், இதை மாநிலங்களிடையே பிரித்துக் கொடுக்கவேண்டும் என்றும் கூறியது. மாநிலங்களுக்கிடையே ஏற்படும் வியாபாரத்தில் நிலக்கரி, எஃகு, இரும்பு, பருத்தி, எண்ணெய் வித்துகள், சணல் ஆகிய இவ்வாறும் குறிக்கப்பட்டுள்ளன. மாநில வரி விதிப்புக் குழுவைக் கலக்காமல் இப்பட்டியலைக் கூட்டக்கூடாது. விற்பனை வரியின் விகிதங்கள் மாநிலந்தோறும் மாறுபடுகின்றன. அண்மையில் விற்பனை வரிக்குப் பதிலாக மத்திய அரசாங்கம் பொருள்களின்மீது ஆயத்தீர்வையை விதிக்கவேண்டும் என்றும், அவற்றினின்று கிடைக்கும் வருமானத்தை மாநிலங்களிடையே பிரித்துக் கொடுக்கவேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டது. ஆனால், பல மாநில அரசாங்கங்கள் இதனை எதிர்த்த தால், இவ்யோசனை கைவிடப்பட்டது.

1956ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், 5ஆம் நாள் மத்திய விற்பனை வரிச் சட்டம் இயற்றப்பட்டது. ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்கு வியாபாரத்திற்காகப் போகும் சரக்குகளின் மீது விற்பனை வரி விதிக்கவும், வசூல் செய்யவும், வசூலான தொகையை மாநிலங்களிடையே பிரித்துக் கொடுக்கவும் இச்சட்டம் வகை செய்கிறது. ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு வியாபாரத்திற்காகப் போகும் சில அடிப்படை மூலப்பொருள்கள் (basic raw materials) தனி முக்கியத்துவம் வாய்ந்தன எனவும், அவற்றின்மீது மத்திய அரசாங்கம் விதிக்கும் கட்டுப்பாடுகள், நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மாநில அரசாங்கங்கள் அவற்றின் மீது விற்பனை வரி அல்லது வாங்கும் வரியை விதிக்க வேண்டு மென்றும் இச்சட்டம் கூறுகிறது.

இருபத்திரண்டாமதிகாரம்

அரசாங்கக் கடன்களின் பொதுவியல்புகள்

(General Characteristics of Public Debts)

அரசாங்கக் கடன்களின் முக்கியத்துவம்

ஓர் அரசாங்கத்தின் வரவும் செலவும் முற்றிலும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கும் என்று எதிர் பார்க்க இயலாது. அங்ஙனம் சமனுக இருப்பினும், அது தற்செயலாக நிகழ்ந்ததாகவே இருக்க வேண்டும் என எதிர் பார்க்கலாம். வருவாயும் செலவும் சமனுய் இராமல், வருவாய் கூடுதலாய் இருப்பின் சேமிப்பும், செலவு கூடுதலாய் இருப்பின் கடனும் ஏற்படுகின்றன.

அரசாங்கக் கருவூலங்கள் (Public Treasuries)

பண்டைய நாளில் ஒவ்வோர் அரசாங்கமும் ஒவ்வோர் நிதிப் பேழையை வைத்திருந்தது. இவ்வாறு அதீனியர்கள் பிலப் போனீஷியன் போருக்கு முன்பு சுமார் 9,700 டாலென்டுகளைச் (talents) சேமித்து வைத்திருந்தார்கள். அதற்கு முன்பு பாரசீக அரசர்கள் தங்கள் மாகாணங்களிலிருந்து கப்பத் தொகையைப் பொன், வெள்ளி உலோகங்களாக வசூலித்தார்கள். இத்துணைத் திறைப் பொருளும் அலெக்ஸாந்தர் பாரசீகத்தை அடிப்படுத்திய போது அவர் கையில் சிக்கியது. உரோமானியர்களும் இச்சேமிப்பு முறையையே கடைப்பிடித்தார்கள். தோற்கடிக்கப்பட்ட அரசர் களின் நிதிக் குவியல்கள் திரட்டப்பட்டன; அதே போல, அடிமை களை அடிமைத்தளையினின்றும் விடுவிப்பதற்காக விதிக்கப்பட்ட பிரத்தியேக வரியும் பெரும்பொருளாகத் திரட்டப்பட்டது. இடைக் காலத்திலும் நிதிப்பேழை முறை நீடித்தது. ஓர் அரசர் பட்ட மெய்தியவுடன் மேற்கொண்ட நடவடிக்கை இறந்த அரசரின் நிதிக் குவியலைக் கைப்பற்றுவதே இங்கிலாந்திலும் பிரான்சிலும் இதற்குப்

பல எடுத்துக்காட்டுகள் உள. கருவூலமும், நாடும் அரசரைச் சேர்ந்த உடைமையாகக் கருதப்பட்டன. இவ்வழக்கம் இங்கிலாந்தில் எட்டாம் ஹென்ரி காலம் வரை நீடித்தது. பிரான்சில் நிதியைச் சேமித்து வைத்த கடைசி அரசர் நான்காம் ஹென்ரி.

ஆடம் ஸ்மித்துக் காலத்தில் இப்பழக்கம் மறைந்தது. அவர் காலத்தில் சுவிட்சர்லாந்தில் பெர்ன் என்ற கான்டனும் (Canton) பிரஷ்யாவுமே நிதிப் பேழையை வைத்திருந்தன. கார்லைல் கூறுவது போல, முதலாம் பிரெடரிக்கு வில்லியம் (1713-40) ஆண்டுதோறும் ஏராளமான நாணயங்களை மிச்சம் பிடித்து அவற்றைப் பீப்பாய்களில் அடைத்து வைத்திருந்தார். அவரையடுத்துப் பட்டத்திற்கு வந்த பிரெடரிக்குப் பெரியாரும் (1740-86) இம்முறையைத் தொடர்ந்து கடைப்பிடித்தார்.

அரசாங்கம் நிதியைத் திரட்டி வைப்பதற்கான காரணங்கள் (Reasons for State Hoarding)

பல நாடுகள் பொன்னையும் வெள்ளியையும் சேர்த்து வைத்ததற்குக் காரணம், அக்காலத்துச் சமுதாயத்தின் நிலைமையே. நாகரிகமடையாத சமுதாயத்திற்குப் பணச் சேமிப்பு அவசியமில்லை. அவற்றுக்குப் போர்க்கருவிகளும், உணவும், பொன் வெள்ளியைவிடப் பயனுடையனவாய் இருக்கும். பணத்தைச் சேமித்து வைத்தல் அரசரின் கடமையாகக் கருதப்படுவதற்கு முன்பே பணமுறை வழக்கில் வந்திருக்க வேண்டும். பழக்கத்தின் வலிமை காரணமாகவும், பொன்னுக்கும் வெள்ளிக்கும் அளவுக்கு மீறிய மதிப்பு இருந்தமையாலும் பண்டைய நாடுகள் பொன்னையும் வெள்ளியையும் சேர்த்து வைத்திருந்தன. ஆனாலும், இம்முறை தொடர்ந்து நீடித்ததற்கு இந்நாடுகளின் பணத் தேவையே (முடையே) காரணமாகும். கடன் முறை அபிவிருந்தி அடையாததனாலும், வரிகள் ஒரோ வழி போடப்பட்டதாலும், பொன் வெள்ளி சேமிப்பு இல்லாத ஒரு நாடு பிற நாடுகளை ஆக்கிரமிக்கவோ அல்லது பிற நாடுகளின் தாக்குதலிலிருந்து தன்னைக் காத்துக்கொள்வதற்கோ வழியின்றி, அபாயநிலையில் இருந்தது. முன்னாள்களில் அரசருக்கு ஏராளமாகச் சொத்து இருந்தமையும் இதற்கொரு காரணமாகும். நிலம், காடு, சுரங்கம் ஆகிய இவை போன்ற வருமானம் தரக்கூடிய இலாபகரமான தொழில்கள் பலவும் அரசருக்கே உடைமையாய் இருந்தன. இச் சொத்தின் பிரிவாகவே பொன், வெள்ளி சேமிப்பு முறை கருதப்பட்டது. இக்காலப் பொருளியல் அமைப்பு முறையினால் பொன்னையும் வெள்ளியையும் சேமிக்கும் முறை கைவிடப்பட்டது. அரசாங்கங்கள் வரியின் மூலம் அதிக வருவாயைப் பெற்றன; மக்களிடமிருந்து கடனாகவும் தொகைகளைப் பெற்றன. இதனால், நெருக்கடியான காலங்களுக்காக, தங்கம் வெள்ளியை

இருப்பில் வைத்திருப்பதற்கு அவசியமில்லாது போயிற்று. அரசாங்கம் தனக்குத்தானே பாங்கராய் இருக்கும் பழக்கம் இவ்வாறு நின்றது.

அரசாங்கம் பொன் வெள்ளியைச் சேகரித்து வைப்பதற்கு எதிர் வாதங்கள்

(Objections to the System of Keeping a Reserve)

போர்த் தேவைகளுக்காக இம்முறை அவசியம் வேண்டும் என ஜெர்மானியப் பொருட்டுறையினர் வாதிடுகின்றனர். கோட்டை கொத்தளங்கள், போர்க்கருவிகள், விரைவாகப் படையைத் திரட்டல் ஆகிய சாதனங்களுடன், கருவூலம் அல்லது போர்ப் பேழையும் (war chest) ஒன்ருகக் கருதப்பட்டது. அரசாங்கத்தின் சேமிப்புக்கு எதிரான வாதமும் வன்மையானது. பொன் வெள்ளியைச் சேமித்து வைப்பதால் அரசாங்கம் வட்டியை இழக்கிறது. திறமையான பாங்கு முறை இருக்கும் நாடுகளில் இதற்கான அவசியமும் இல்லை. சோதனை ஏற்பட்ட காலத்துப் போதுமான உலோக இருப்பு இருத்தல் போதுமானது. எவ்வளவு தொகை இருப்பாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று நிர்ணயிப்பது கடினம். வாணிகம், விலை வாசிகள் இவையும் அரசாங்கத்தின் சேமிப்பு முறையினுல் பாதிக்கப்படுகின்றன. ஏராளமான நாணயங்களைச் செலாவணியிலிருந்து குறைப்பதால் விலைவாசிகள் குறைகின்றன. அதனுல், வியாபார வளர்ச்சிக்குத் தடை ஏற்படுகின்றது. திடீரென்று எதிர் பாராத வகையில் இப்பணத்தைப் பயன்படுத்துவதால், தீமைகள் விளையும். ஆகவே, பொதுப்படையாக, இக்காலக் கடன் வசதிகள் இருக்கும் எந்த ஒரு நாட்டிலும் பொன், வெள்ளிகளைச் சேமித்து வைப்பது தவருன நடவடிக்கையாகும்.

அரசாங்கக் கடன்கள்—இக்காலத்தில் அவற்றின் முக்கியத்துவம்

சில பிரத்தியேகக் காலங்களில் அரசாங்கம் பொன், வெள்ளியை இருப்பாக வைத்துக்கொள்வதற்குக் காரணங்கள் இருக்கலாமாயினும், பொதுக்கொள்கையாக இம்முறையை இக்காலத்தில் அரசாங்கங்கள் கடைப்பிடிப்பதில்லை. அதன் அழிவுச் சின்னங்கள்மீதே நவீன அரசாங்கக் கடன்கள் தோன்றியுள்ளன. அரசாங்கக் கடன் பிரச்சினை ஆண்டுதோறும் அதிக முக்கியத்துவம் அடைந்துகொண்டு வருகிறது. அதனுல், பல கடுமையான பிரச்சினைகளும் தோன்றுகின்றன.

அரசாங்கக் கடனின் தோற்றம்

பண்டைக்காலத்தில் அரசாங்கம் கடன் வாங்கவில்லை. பழைய காலத்தில் அரசாங்கங்கள் கடன் வாங்கிய அறிகுறி ஒன்றுமில்லை.

இதற்குக் காரணம், கிரேக்க, ரோமானிய சமுதாயத்தின் பண்புகளே யாகும். செல்வந்தனை குடி மகனிடமிருந்து கடன் வாங்குவதற்கு மாருக, அரசாங்கம் அவன் மேலே ஒரு பிரத்தியேக வரியை விதித்தது. நிலையாக்காத கடன்களின் (Floating Debts) தொகை மிகக் குறைவாய் இருந்ததும் கடன் வாங்காததற்கு மற்ருெரு காரண மாகும். அரசாங்கத்திற்குச் சொந்தமாகப் பொன், வெள்ளி நிதிகள் இல்லாது போயின், கட்டாயக் கடன்களையோ அல்லது வரி வசூலிக்கும் அதிகாரத்தை ஏலத்திற்கு விட்டோ, போதிய வருமானத்தைப் பெற் றது. சில வேளைகளில் அரசரின் உடைமைகளும் அடகு வைக்கப்பட் டன. சிறிது காலத்திற்குப் பின்பு ஒப்பந்தக்காரரிடமிருந்து தாற் காலிகக் கடன் பெறும் வழக்கம் தோன்றியது.

இடைக்காலத்தில்

ரோமானியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர் இடைக்காலத்தில் இத்துறையில் யாதொரு முன்னேற்றமும் காணப்படவில்லை. வட்டிக்கு இருந்த கடுமையான எதிர்ப்பாலும், ஓர் அரசர் தம் குடிகளிடமிருந்து கடன் வாங்குவது தம் கவுரவத்திற்கு இழுக்கு என்று எண்ணிய தாலும் அரசர்கள் கடன் வாங்குவதைத் தவிர்த்தார்கள். அரசர் சிலர் தமது சொந்தப் பொறுப்பின்பேரிலும் தங்கன் ராஜ்யத்தின்பேரி லும் கடன் வாங்கினர். இவ்வகையான கடன்கள் கோயிலாரிட மிருந்தோ (Church), பிற நாட்டு பாங்கர்களிடமிருந்தோ பெறப்பட் டன. முதன்முதல் அரசாங்கம் கடன் வாங்கியது பிளாரன்ஸ் நாட்டில் (1344). பிளாரன்ஸ் அரசாங்கம் அப்பொழுது அப்பாங் கிற்கு ஆறு மில்லியன் பவுன் கடன் பட்டிருந்தது. முதலைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் அத்தொகையைத் திரண்ட தொகையாக மாற்றியதுமன்றி, அதன்பங்குகளைப் பிற பங்குகள் போல வேருெருவர் பேரில் மாற்றலாம் என்றும், அவற்றிற்கும் 5% வட்டி தரப்படும் என்றும் அரசாங்கம் கூறியது. 1345ல் இத்தாலியில் பெரிய கம்பெனி யான பார்டியர்ட் பிளாரன்ஸ் என்பது திவாலாயிற்று. மூன்ரும் எட்வர்டு முதலும் வட்டியும் சேர்த்து 9 லக்ஷம் தங்க நாணயங்கள் (Florins) கடன் கொடுக்கவேண்டி இருந்தது. இன்னொரு பேங்கான பெருஸ்ஸி யும் வீழ்ச்சி அடைந்திருந்தது. அது மூன்ரும் எட்வர்டுக்கு 6 லக்ஷம் பிளாரென்ஸ் கடன் கொடுத்திருந்தது. சிசிலி அரசர் ஒவ்வொரு பேங்கருக்கும் ஓர் இலட்சம் பிளாரின்ஸ் கொடுக்க வேண்டியிருந்தது. இங்கிலாந்திலும் பிரான்ஸிலும் அரசாங்கத்தின் செல்வமும் நிருவாகச் செலவும் அதிகரிக்க அதிகரிக்க, இந்தக் கடன்களும் பரவலாயின. முதலாம் பிரான்ஸிஸ் பாரிஸ் நகரத்தின் மூல மாகப் பல வேறுபட்ட தொகைகளைக் கடனுகப் பெற்ருர். பாரிஸ் பட்டி னம் கடன் கொடுத்தவர்களின் பட்டியல் ஒன்றும் வைத்திருந்தது. அப்பட்டியலைக்கொண்டே கடன் கொடுத்தோருக்கு வட்டியைப் பங்கிட்டுக் கொடுத்தது. முதன்முதல் இரண்டாம் எட்வர்டு காலத்திலே தான் கடன்கள் சம்பந்தமாக அரசர் பார்லிமென்டிற்கு விண்ணப்பம் செய்துகொண்டார். 16ஆம் நூற்ருண்டில் 4ஆம் எட்வர்டும் மற்ற

டியூடர் அரசர்களும் கட்டாயக் கடன் முறைகளைப் பின்பற்றினர்கள். வரிகளை இக்கடனுக்கு ஈடாக அடகு வைப்பது என்பது பழைய கடன் வாங்கு முறைகளில் இறுதிப்படியாகும்.

ஜினேவா, வெனிஸ் போன்ற இத்தாலிய நகரங்களில் பாங்குகள் மூலமாகக் கடன் வாங்கும் வழக்கம் ஏற்பட்டது. இத்தாலியின் வியாபார வளர்ச்சியே, அரசாங்கமும் தனிப்பட்டவர்களும் அதிகமாகக் கடன்களை வாங்குவதற்கு வகை செய்தது. இம்முறையில் வெனிஸில் இருந்த செயின்டு ஜார்ஜ் பாங்கு மிக முக்கியமானது.

பதினைந்தாம், பதினரும் நூற்ருண்டுகளில் ஏற்பட்ட வாணிபப் புரட்சியால் கடல் மட்டத்திற்குக் கீழ் உள்ள நாடுகள் முக்கியத்துவம் அடைந்தன. பிற நாடுகளுக்குக் கடன் கொடுப்பதும், அரசாங்கம் கடன் வாங்கும் முறையும், டச்சுக்காரர்களால் கையாளப்பட்டன. வட்டி வீதங்கள் மிகக் குறைவாய் இருந்ததால், அவர்கள் தங்கள் தொழிலைப் பெருக்க முயன்ருர்கள். ஹாலந்தின் உதாரணத்தைப் பிரிட்டன் பின் பற்றியதுமல்லாமல், பிற நாடுகளுக்கும் பிரிட்டன் வழி காட்டியாய் இருந்தது. 1694ல் வில்லியம் பாட்டர்சன் என்ற ஸ்காட்லாந்தியரால் இங்கிலாந்து பாங்கு தோற்றுவிக்கப்பட்டது. அது அரசாங்கத்திற்குக் கொடுத்த கடனே, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மிக மிகப் பழைய கடனுகும். ''சமுதாயத்தின் வாணிப நிலையே மக்களிடையே கடன் கொடுக்கும் ஆற்றலையும் விருப்பத்தையும் தோற்றுவிக்கின்றது,'' என ஆடம் ஸ்மித்துக் கூறுகிருர். பிரதிநிதித்துவ அரசாங்கத்தைத் தங்களுக்கென அமைத்துக்கொண்டவர்களும், உழைப்பில் மிகுந்த உயர்தரத் திறமையைப் பெற்றவர்களுமான மக்களிடையேதான் அரசாங்கம் கடன் வாங்கும் முறை எளிதில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று ஆடம் ஸ்மித்துக் கருதுவது பொருந்தாது. இந்தியா சுதந்தரம் அடைதற்கு முன்பே, இந்திய அரசாங்கம் ஒரு நூற்ருண்டுக்கு மேலாகக் கடன் வாங்கியிருந்தது இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

அரசாங்க நிதியில் கடன்களுக்குரிய இடம்

சாதாரணமாக ஆண்டுதோறும் ஏற்படும் செலவுகள் வரி விதிப்பிலிருந்தே சரிக்கட்டப்படவேண்டும். கடன்களிலிருந்து அவற்றைச் சரிக்கட்டினுமானல், நாட்டின் நாணயத்திற்குக் (National credit) குறைவு ஏற்படுவதோடு ஆண்டுதோறும் கடனுகத் திருப்பித்தர வேண்டிய தொகை, வரி வருமானத்தால் பெறும் தொகையைவிடக் கூடுதலாகிவிடும். ஆகையால், செலவினங்கள் ஓரளவு மாறுமானல், ஓர் ஆண்டு பற்ருக்குறை வரவு செலவுத் திட்டத்துடன் இன்னேர்

ஆண்டின் உபரி வரவு செலவுத் திட்டத்தை இணைத்து, மொத்தத்தில் வருவாயும் செலவும் சரிக்கட்டுமாறு செய்வதே ஏற்புடைத்து.

மின்சார எந்திரம், அல்லது இருப்புப்பாதை போன்ற மூலதனச் சாதனங்கள் உற்பத்திக்கு (production of capital equipment) ஆகும் செலவுக்கு அரசாங்கம் கடன்கள் வாங்கலாம். ஏனெனில், இவை பயன் தரப் பல்லாண்டுகள் ஆகும். பஞ்ச நிவாரணம், வெள்ளம், பருவமழையின்மை, புயல், மண் மாரி, பயிர்ச்சேதம், ஆறுகளின் போக்கில் மாறுதல் ஆகிய இவற்றால் ஏற்படும் இழப்புகளைச் சமாளிப்பதற்குக் கடன்களைப் பயன்படுத்தலாம். ஏனெனில், இவை போன்றவை எதிர் பாராது நிகழ்பவையாகும். ஆனால், இவற்றைத் திருப்பிக் கொடுப்பதற்குப் புதிய வரிகளை விதிக்க அரசாங்கம் தயாராய் இருக்க வேண்டும்.

ஒரு தொழில் துணிவுக்கு வரிகள் மூலம் நிதி திரட்டப்படும் பொழுது, அச்செலவு இப்போது வரி கொடுப்போரால் சுமக்கப்படுகிறதென்பதும், கடன்கள் மூலம் நிதி திரட்டப்பட்டால், இப்போதைய தலைமுறை யாதொரு பளுவையும் ஏற்க வேண்டுவதில்லை என்பதும் எல்லோரும் அறிந்தனவே. இப்பொழுது கடன் கொடுப்போர் அதற்குப் பிரதியாக வட்டியைப் பெறுகின்றனர். எதிர் காலத்தில் இக்கடனைத் திருப்பிக் கொடுக்கும் பொழுது இதற்கு வேண்டிய முதலையும் வட்டியையும் வரிகள் மூலந்தான் தரவேண்டும்.

ஒரு தொழில் துணிவுக்குக் கடன்கள் மூலம் நிதி திரட்டப்படுகிறது என்றும், அதைத் திருப்பிக் கொடுப்பதற்கு இப்போதிருக்கும் வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டுப் புதிய வரிகள் விதிக்கப்படுகின்றன என்றும் கொண்டால், சமுதாயத்தின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு வருமானம் மாற்றப்படுகிறது எனலாம். வரி கொடுப்போரும் கடன் கொடுப்போரும் ஒருவராகவே இருந்தால், பணம் சொக்காயின் (Coat) ஒரு பையிலிருந்து இன்னொரு பைக்கு மாற்றப்படுவதற்கு ஒப்பாகும். உள் நாட்டில் கடன் வாங்கினால், அதன் விளைவாகப் பிற்காலச் சந்ததியார் அதிகமாக உழைத்துக் கடனை அடைக்க வேண்டி வரும். ஆயினும், பிற்சந்ததியார் எல்லோர்மீதும், உள் நாட்டுக் கடனைத் திருப்பிக் கொடுப்பதால் **நேர்முகச் சார்பற்ற பொருட் பளு** (objective economic burden) ஏற்படுவதில்லை. வட்டியையும் முதலையும் திருப்பிக் கொடுத்தல் செலவாகாது; ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பணத்தை மாற்றுவதே ஆகும். சிலர் கூடுதலான வரிகள் செலுத்துவதன் மூலமாக நட்டம் அடைந்தாலும், அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்தவர்கள் அதற்கு ஈடான இலாபத்தைப் பெறுகின்றார்கள்.

ஓர் அரசாங்கம், கடன்களை இப்பொழுது பெறுவதன் மூலம் எதிர் காலத்தில் நிதி முறையில் என்ன மாற்றம் ஏற்படும் என்பதையும் அரசாங்கம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். வரி விதிப்பினுல் செலவுகள் ஏற்படுகின்றன. வரிகளால் ஏற்படும் விளைவுகள் மறைமுக விபரீத விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன.

இப்பொழுது செலவு, வரி வருமானத்திலிருந்தோ, அல்லது உள் நாட்டுக் கடனிலிருந்தோ செய்யப்படுமானுல், சில வேளைகளில் அஃது எதிர்காலச் சந்ததியார்களைப் பாதிப்பதில்லை. ஆனுல், எவ்வினங் களிலிருந்து இச்செலவிற்கு நிதி திரட்டப்படுகின்றதோ, அவ்வினங்கள் வரிகள் அல்லது கடன்கள் மூலம் பாதிக்கப்படாமலிருந்தால்தான் இக்கூற்று மெய்ப்பிக்கப்படும். எந்த வடிவில் தனியார் கொடுக் கிருர்கள் என்பதைவிட, எவ்வளவு தொகை ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டும் என்பதே இதில் கவனிக்க வேண்டிய முக்கிய அமிசமாகும். வரித் திட்டத்தைவிடக் கடன் திட்டத்தின்கீழ்ச் சமுதாயத்தின் மூலதனம் மிகவும் கரைந்து போகும். அதற்கு ஏற்ருற் போல நாட்டின் எதிர் கால உற்பத்தியும் குறையும்.

பெருத்த அளவில் கடன் கொடுப்பவர்கள் தாங்கள் வட்டியாகப் பெறும் வருமானம், அதைச் சரிக்கட்ட அரசாங்கத்தாருக்கு அதிக வரியைக் கொடுப்பதைவிடக் கூடுதலாக இருக்கும் என்று எண்ணப் போதிய காரணம் இருக்கிறது. கடன் கொடுக்கும் அளவிற்கு ஏற்ப வரி முறையை மாற்றிப் படித்தரமாக அமைக்க இதுவரை யாதொரு வழியையும் நாம் அனுபவத்தில் கண்டதில்லை. கடன்கள் மூலம் நிதி யைத் திரட்டுவதால், மூலதனம் அதிகம் பாதிக்கப்படுகிறது. இத ஞல், எதிர்காலச் சந்ததியாரின் பொருளியல் நிலைமையும் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

ஒரு தொழிற்றுணிவின் ஆதாயம், எதிர் காலத்தில் எவ்வளவு காலம் அத்துணிவு நீடித்திருக்கும் என்பதைப் பொறுத்துதான் அதற்கு வேண்டிய நிதியை வரி மூலமாகவோ அல்லது கடன் மூலமாகவோ பெறவேண்டும் என்பதை முடிவு செய்யலாம். உ-ம். சேரிகளை ஒழிப்பதற்காகவோ, ஒரு புதிய நகரத்தை நிருமாணிப்பதற்காகவோ, அல்லது போர் நடத்துவதற்காகவோ கடன் வாங்கலாம். இங்ஙனம் கடன் வாங்குவதால், வரிகள் மூலம் செலுத்துவதைக்காட்டிலும் கூடுதலான வீதாசாரத் தொகையை ஏழைகள் கொடுக்கவேண்டி இருக்கும்.

1. எதிர்பாராத செலவு ஏற்படும்போது, அதைக் கொடுப்பதற் கான திறன் அவ்வாண்டில் மட்டும் அதிகரிக்கும் வருமானத்தைப்

பொறுத்ததன்று; ஆனால், வரி கொடுக்கும் திறன் வருமானத்தை ஈட்டும் சத்தி அல்லது வருமானத்தைத் தரும் மூலதனம் எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்பதைப் பொறுத்ததே. ஈண்டு வியாபாரத்தில் உபயோகிக்காத வீடுகள், படங்கள் போன்றவையும் மனிதனின் அக, உடல் சத்திகளும், வருமானத்தை ஈட்டும் சத்தி அல்லது வருமானத்தைத் தரும் மூலதனத்தில் (income-getting power of capital) அடங்கும். நாட்டிற்கு நெருக்கடியான நேரத்தில் ஒவ்வொருவருடைய பங்கையும் கேளாது அவரவர் எவ்வளவு மிகுதியாகச் (maximum) செலுத்த முடியும் என்பதைத்தான் பார்க்க வேண்டும். ஒரு பெரிய போருக்கு வேண்டிய தொகைகளைப் பிரதானமாகக் கடன்கள் மூலமே பெறக்கூடாது. ஏனெனில், அவற்றைத் திருப்பிக்கொடுப்பதற்கும், வட்டி கொடுப்பதற்கும் வரியை உயர்த்தியே தீரவேண்டும். அதிக வரிப்பளு எல்லோர்மேலும் விழுந்தாலும், சிறப்பாக எளியோர்மீதே விழும்.

2. கடன்களினால் அதிக பாங்கு செலாவணி (bank credit) ஏற்படுகிறது. இஃதொன்றே கடன்கள் மூலம் நிதி திரட்டக்கூடாது என்பதற்குப் போதிய காரணமாகும்.

" பொருளியல் தொடர்பற்ற (அதாவது, ஊதியம் தாராத) செலவை (non-economic, i. e., non remunerative expenditure) வருமானத்திலிருந்தே சரிக்கட்ட வேண்டும். அங்ஙனம் சரிக்கட்ட முடியவில்லை என்றால், அச்செலவைச் செய்திருக்கக்கூடாது. தேசியப் பண்பாடு, கல்வி, சமுதாய முன்னேற்ற அபிவிருத்தி இவையெல்லாம் மிக இன்றியமையாது வேண்டப்படுவன. ஆயினும், அரசாங்கத்தாரால் கடன் வாங்குமளவுக்கு இவற்றின் அபிவிருத்தி அவசியமானதன்று. அரசாங்கத்தின் செலவின் பெரும்பகுதியும் உற்பத்தியை மறைமுகமாகப் பெருக்குகிறதென்றும், அதனால் எதிர்காலத்தில் நாட்டின் வருமானம் பெருகலாம் என்றும் கூறுவது உண்மையே. கல்வியைப் பரப்புவதற்கோ, அல்லது தொழிலாளர்களின் வீட்டு வசதிகளைப் பெருக்குவதற்கோ வாங்கும் கடன், வட்டியைத் திருப்பித் தருவதற்கான வருமானத்தை நேரிடையாக நல்காவிடினும், சமுதாயத்தின் வருமானத்தை உயர்த்துவதால், வரி வசூலில் கடுமை இல்லாமலும், வரி வீதங்களை உயர்த்தாமலும், வரி வரவைப் பெருக்கலாம். இவ்வாறு எண்ணும்பொழுது இங்ஙனம் கடன் வாங்குவது சரியெனப் படுகிறது. அவற்றை நடைமுறையில் கடைப்பிடிப்பதில் உள்ள கஷ்டங்களாலேதான் இதற்கு எதிர்வாதங்கள் ஏற்படுகின்றன. மேற்கூறிய செலவினங்களின் விளைவுகளைத் துருவவோ அல்லது அளவிடவோ முடியாது. ஆகவே, அவற்றைப்பற்றிய எவ்விதக் கூற்றும் நம் நம்பிக்கையைப் பொறுத்ததே. கடன் செலவு திட்டவட்டமானது;

தெளிவானது. கடன் செலவு சமுதாயத்தின் உற்பத்திச் சாதனங்களின்மீது பெரும்பளுவாய் இருக்கிறது. ஆகவே, பொருளியல் செலவிற்காகவன்றி வேறு எக்காரணத்திற்கும் கடன் வாங்கக் கூடாதென எண்ணுவது விவேகம். அரசாங்கத்தின் அதிகார வரையறையைப் பெருக்குவது நன்மையைப் பயப்பதாய் இருந்தால்தான் பொருளியல் செலவிற்காகவும் கடன் வாங்கவேண்டும்.''—(பாஸ்டபிள்)

அரசாங்கக் கடனின் நன்மைகளும் தீமைகளும்

''முதலீடு செய்வதற்குத் தக்கதொரு வழி அரசாங்கக் கடன் ஆகும். உள் நாட்டுக் கடனின் வட்டி சமுதாயத்தின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குத் தரப்படுகிறது. நாட்டு வரிகளின் ஒரு பகுதியே அரசாங்கக் கடன்காரரின் உடைமை (property of the public creditor) ஆகும். ஆகவே, அரசாங்கக் கடன்காரன் எவ்வளவு செல்வந்தனுகிருனே, அவ்வளவு வரியைக் கொடுக்கும் நாடு ஏழ்மையாகிறது.''—(பிளாக்ஸ்டோன்). ஆயினும், வட்டியைப் பெறும் வகுப்பினரே பெரும்பாலும் வட்டியைக் கொடுக்கும் வகுப்பினராயும் இருக்கின்றனர். அயல் நாட்டுக் கடனின்மீது வட்டி கொடுக்கும் பொழுது, வருமானத்தின் ஒரு பகுதியை அயல் நாடுகளுக்குக் கொடுப்பதால் கடன்பட்டிருக்கும் நாட்டின் நிகர வருமானம் குறைகிறது. ஆனால், உள் நாட்டுக் கடன்மீது வட்டி கொடுக்கும்போது இவ்வித விளைவு ஏற்படுவதில்லை.

தற்காப்புக்காகவும், போருக்காகவும் கடன் மூலம் நிதி திரட்டுவது பல வகையிலும் நன்மை பயப்பதன்று. ஆயினும், அரசாங்கத்தின் தலையாய கடமை, தன் நாட்டையும் குறிக்கோள்களையும் பாதுகாப்பதே. ஆதலால், இதற்கு வேண்டிய நிதிகளைத் திரட்டுவதற்கு அரசாங்கக் கடன் ஏற்ற கருவியாய் இருப்பதால், இம்முறை நன்மை பயவாவிடினும், இன்றியமையாதது எனக் கொள்ள வேண்டும்; பயனற்றது எனக் கொள்ள வேண்டும். பயனில்லாத சுமைக்கடனால் (deadweight debt) செல்வம் படைக்கப்படுவதில்லை. ஆயினும், மெக்குல்லாக்குக் கூறுவது போல, ''நம் ராஜ்யங்களைக் குலையாமல் காப்பதும் வளர்ப்பதும், நம் உரிமைகளையும் பாத்தியதைகளையும் காப்பதும், நாம் நிலத்திலும் நீரிலும் வெற்றிகள் பெறுவதும் அரசாங்கக் கடனுக்குச் சமமான மதிப்புள்ளவை. ஒரு போரில் சிந்திய குருதியும், செலவழித்த பணமும் மக்கள் பெருக்கத்திற்காகவும் செல்வப் பெருக்கத்திற்காகவும் செலவழித்ததைப் போன்றே முக்கியத்துவம் உள்ளன. சுதந்தரத்தையும், நாட்டின் பாதுகாப்பையும் போற்றிப் பேணுதற்கு எந்தத் தியாகமும் பெரியதாகாது. இந் நோக்கத்தை ஈடேற்றுவதற்காக தரைப்படைகள், கடற்படைகளின்

மேல் கடன் வாங்கிச் செலவழிப்பது, வேளாண்மை, வாணிகம் அல்லது தொழில் அபிவிருத்தி இவற்றிற்காகச் செலவு செய்யப்படுவதற்கு ஒப்பானதாகும்.''

அரசாங்கக் கடனுல் அன்றிச் சமூகத்திற்குத் தேவையான அபிவிருத்தி செய்யப்பட்ட சாலைகள், குடிதண்ணீர் இவற்றிற்கு வகை செய்வது சாத்தியமாகாது. இவற்றிற்கு ஏராளமாகச் செலவாவதால் நடப்பு வருமானத்திலிருந்து இவற்றிற்கு வகை செய்ய முடியாது. இதனுல், புதிய நாடுகள் தங்கள் சாலைகள், இருப்புப் பாதைகள், வாய்க்கால்கள், நீர்ப்பாசன வசதிகள், துறைமுகங்கள் இவற்றின் அபிவிருத்திக்கு ஆகும் செலவிற்காகச் செல்வம் கொழிக்கும் சமுதாயங்களில் நிதி திரட்டத் துணை செய்கிறது. இவ்வாறு அந்நாடுகளின் பொருளியல் அபிவிருத்தி பேணப்படுகிறது. அதே சமயம், சர்வதேச வாணிபத்திற்கான வசதிகள் பெருகுவதாலும், கூடுதல் சாதனங்கள் கிடைப்பதாலும், உலகம் பொதுவாகப் பயனடைகிறது. மேலும், போர் அல்லது இயற்கை நிகழ்ச்சிகளால் கடுஞ்சேதமடைந்த நாடுகள் தங்கள் சீர் குலைந்த, அழிந்த பிரதேசங்களைச் சீரமைப்புச் செய்வதற்கும் நிதி திரட்டக் கடன்முறை ஏதுவாகிறது.

கடன்களால் பெறும் பிற அனுகூலங்களாவன: பெரிய வருமானம் உடனடியாக வேண்டுமென்றுல், அதை வரிகளின் மூலம் திரட்டுவதைவிடக் கடன் மூலம் திரட்டுவது எளிது. மேலும், உடனடியாகப் பொருளியல் சீர்குலைவு ஏற்படாது. ஏனெனில், யார் யாருக்கு வசதி இருக்கிறதோ, அவர்களே அரசாங்கத்திற்குக் கடன் கொடுக்கிறுர்கள். வசதி இல்லாதவர்களுக்கு அவற்றைத் திரட்டி வைத்துக்கொள்வதற்குப் போதுமான ஓய்வும் கிட்டுகிறது. பிரிட்டன் போன்ற முன்னேற்ற நாடுகளைப் பொறுத்த வரை, அரசாங்கக் கடன்களால் பல பிரத்தியேக அனுகூலங்கள் உள்ளன. முதற்கண் மக்களின் உபரிச் சேமிப்புக்குப் பாதுகாப்பான இலாபம் தரக்கூடிய ஒரு வழியைக் காட்டுகிறது; அதே சமயம் முதலீடு செய்வோர்க்குப் பிற நாடுகளின் விவகாரங்களிலும், சிறப்பாக அவற்றின் பொருளியல் முன்னேற்றத்திலும் நாட்டம் ஏற்படுமாறு செய்கிறது. இதனுல், கடன் வாங்கும் நாடுகளுடன் வாணிக உறவு வளர்கிறது. கடன் வாங்கும் நாடுகளும், கடன் கொடுக்கும் நாடுகளுடன் வியாபார உறவை ஏற்படுத்திக்கொள்ள விரும்பும்.

இரண்டாவதாக, கடன் கொடுக்கும் நாட்டிலுள்ள தொழில்களும் அந்நாட்டின் கடல் கடந்த வியாபாரமும் வெளி நாட்டுக் கடன்களால் நன்மை பெறுகின்றன. ஏனெனில், கடனுல் கிடைக்கும் தொகை

கடன் கொடுக்கும் நாட்டிலேயே பொதுவாகச் செலவழிக்கப்படுகிறது. சில சமயம் கடன் கொடுப்பதற்கு இஃது ஒரு நிபந்தனையாகவும் கொள்ளப்படுகிறது.

மூன்ருவதாக, கடல் கடந்து கடன் கொடுப்பதால் கடன் சமநிலையைப் பற்றிய நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன. எவ்வாறெனில், தவணையாக மூலதனத்தையும் வட்டியையும் பெறுவதால் அனுகூலமான அயல் நாட்டுப் பரிவர்த்தனைகள் (favourable foreign exchanges) ஏற்படுவதற்கு ஏதுவாகிறது.

அரசாங்கக் கடனால் ஏற்படும் தீமைகள்

அரசாங்கத்தின் ஊதாரித்தனத்தை அரசாங்கக் கடன் வளர்ப்பது முதல் தீமையாகும். தனியார் தமது சொந்த மூலதனத்தையும் வருமானத்தையும் பேணுவதுபோல அரசாங்க இலாக்காக்களும் உத்தியோகஸ்தர்களும் அரசாங்க நிதியை உன்னிப்பாகப் பேணுவார்கள் என்று எதிர் பார்க்க இயலாது. சில சமயம் ஊதாரிச் செலவு செய்வதோடன்றி, பணத்தை வீண் விரயமும் செய்கிருர்கள். இக்காலத்தில் அரசாங்கம் கடன்களைப் பெறுவது மிகவும் எளிதாக இருப்பதால், இப்போக்கு வலுவடைந்து வருகிறது. நடைமுறை வருமானத்திலிருந்து மட்டுமே செலவழிக்க வேண்டுமெனில், பல செலவு பிடிக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்படா. கடன் எளிதில் கிடைப்பதால் இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதிய நாடுகளில், சிறப்பாக, அரசாங்கக் கடன் முறை துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இதனுல், நாட்டிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படுகிறது. சிறிய காலனிகளும், புதிய குடியரசுகளும் தாங்கள் விரைவில் முன்னேற வேண்டும் என்றும், தங்கள் வளப்பொருள்களை மிக விரைவில் விருத்தி செய்யவேண்டும் என்றும் எண்ணுவது இயல்பே. ஆயினும், இப்பேராசையால் வீண் செலவும், ஊதாரிச் செலவும் ஏற்படுவதுமன்றி, ஏராளமாகக் கடன் வாங்குவதற்கும் அவற்றைத் திருப்பிக் கொடுக்க வரிப்பளுவை அதிகரிப்பதற்கும், வரிப்பளு அதிகமாவதால் பொருளியல் அபிவிருத்தி தடைபடுவதற்கும் காரணங்களாகின்றன. இங்ஙனம் முன்னேற்றம் ஏற்படுவதற்குப் பதிலாக முன்னேற்றம் தடைபடுகிறது. தங்களுடைய சத்தியை எண்ணுது பெருத்த அளவில் கடன் வாங்கிய சில நாடுகளையும் நாம் கண்டிருக்கிருேம். ஆனுல், இதனுல் தாங்கள் கொடுக்க வேண்டிய கடன்களைக் கொடாது ஏமாற்றியதும் (Repudiation), அதனுல் அவற்றின் நாணயம் பிற நாடுகளில் பாதிக்கப்பட்டதுமே இலாபம்.

பிற நாடுகளில் மிதமாகவும் விவேகத்துடனும் கடன் வாங்க வேண்டும் என்பது தெளிவு. பொருளியற்சுதந்தரத்தைத் தத்தம் செய்து விரைவாக முன்னேற்றம் அடைவதைவிட, மெதுவாகவும் உறுதியாகவும் முன்னேறிச் செல்வது ஒரு நாட்டிற்கு அதிக நன்மை பயக்கும், அளவுக்குட்பட்டிருந்தால், பிற நாடுகளில் கடன் வாங்கு வதால் பெருத்த நன்மை ஏற்படுவதோடு இறுதியில் உலகம் முழுவதும் செல்வமும் உற்பத்திச் சத்தியும் அதிகரிப்பதற்கும் ஏது வாகிறது. ஆனால், ஒவ்வோர் ஆண்டும் பிற நாட்டிற்கு வட்டி கொடுக்க வேண்டி யிருக்கும். அதனால், நாட்டின் வருமானத்தின் ஒரு கூறு பிற நாட்டிற்குச் செல்கிறது. இறுதி விளைவு (Ultimate effect) செலவைவிட அதிகமாய் இருந்தால், கடன் வாங்குவது நல்லதே. ஆனால், நடைமுறையில் அளவுக்கு மீறிக் கடன் வாங்குவது கண்கூடு. இவ்வகையான சூழ்நிலையில், மேலும் வரி விதிப்பதாலும், அல்லது மேலும் கடன் வாங்குவதாலும், அல்லது பணவீக்கத்தாலுமே பிற நாட்டுக் கடனுக்கு வகை செய்ய முடியும். இதனால், உற்பத்திக்குக் குந்தகம் ஏற்படுவதோடு, கடன் சுமை ஏற ஏற நாட்டிற்கேற்படும் தீங்கும் கூடுகிறது.

ஆகவே, கூடுமான வரையில் வரிகளை உயர்த்துவதன் மூலமே செலவைச் சரிக்கட்ட வேண்டும். கடன் வாங்குவதால் இறுதியில் நன்மை நிச்சயம் விளையும் என்றாலும், அல்லது கடன் வாங்குவது இன்றியமையாதது என்றாலுமே கடன் வாங்க வேண்டும். ஒரு கடனால் நிரந்தரப் பளு ஏற்படுகிறது. வரி விதிப்பினால் ஒரே ஒரு முறை பளு ஏற்படுகிறது. முன்னையதால் ஆண்டுதோறும் வட்டி கொடுப்பதற்கும், மூலதனத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கும் வழி வகை செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், பிரத்தியேக வரி விதிப்பால் ஒரே ஒரு முறைதான் மக்கள் துன்பத்திற்குள்ளாக நேரிடும். இறுதியாக விலை வாசிகள் குறையக்குறைய வரிப்பளுவும் அரசாங்கக் கடன் பளுவும் ஏறுகின்றன என்பதையும் நினைவிலிருத்த வேண்டும். இவ்விதமான நிலை பிரத்தியேக வரிக்கு ஏற்படுவதில்லை. ஆனால், நெடுங்காலத்திற்கு விதிக்கப்படும் வரிக்கு இது பொருந்தும்.

வரிப் பளுவைக் குறிப்பிட்ட அளவுக்குமேல் ஏற்றுவது நல்லதன்று என்பது போல, கடன் தொகையைக் குறிப்பிட்ட அளவுக்கு மேல் ஏற்றுவதும் நல்லதன்று. உற்பத்தி அமைப்பைப் பெருக்குவதற்கும், பேணுவதற்கும் (Extension and maintenance of productive organisation) புதிய மூலதனம் இடையறாது தேவைப்படுகிறது. இந்நோக்கத்திற்காக வேண்டப்படும் மூலதனத் தொகையைத் தேசியக் கடன் பாதிக்குமானால், சமுதாயத்தின் எதிர்கால வளர்ச்

சிக்கு ஊறு ஏற்படும். இவ்வாறு ஒரு தேசத்தின் கடன் வாங்கும் எல்லை சாதாரணமாக அதன் வர்த்தகத்திற்கு முடைப்படும் பணத்தின் தொகையைப் பொறுத்தது. நாட்டிற்கு நெருக்கடியான காலத்தில் இந்த வரம்பையும் குறைக்கலாம். அப்பொழுது உற்பத்தியமைப்பைத் திருத்துவதால் திறனுக வேலை செய்வதற்கு 'வழி செய்யலாமே தவிர, முன்னேற்றத்திற்கான வழி வகுக்க முடியாது. இதன் மேல் வரம்பு தேசிய உணர்ச்சியால் உந்தப்பட்டு அரசாங்கத்திற்கு முடைப்படும் பணத்திற்காக மக்கள் எவ்வளவு மிச்சம் பிடிக்கிருர்கள் என்பதைப் பொறுத்தது. மக்கள் மிச்சம் பிடிக்கும் தொகை அனைத்தையும் அரசாங்கம் கடனுகப் பெறலாம். இதற்கும் மேலாகக் கடனுகப் பெற்ருல், தொழில் வளர்ச்சி தடைபடும்; மக்களின் பொது நலனும் பாதிக்கப்படும். மக்கள் மிச்சம் பிடிக்கும் தொகை அனைத்தையும் அரசாங்கம் கடனுகப் பெற்ற பின்பும் பணம் தேவைப்பட்டால், அரசாங்கம் வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்கலாம்; அல்லது உலோகமாக மாற்ற முடியாத காகிதப் பணத்தை (Paper money) பிற நாடுகளில் எவ்வளவு கடனுகப் பெறலாம் என்பது பல காரணங்களைப் பொறுத்தது. இவற்றில் சில, 'வெளி நாட்டில் நம் நாட்டு நாணயம் (Credit) எவ்வளவு உள்ளது? பிற நாடுகள் நமக்குக் கடன் தர விருப்பமும் ஆற்றலும் கொண்டுள்ளனவா?' என்பன போன்றவை. எவ்வளவு காகிதத்தைப் பணமாக அச்சிட்டு வழங்கலாம் என்பது வரையறுக்க இயலாவிடினும், அளவுக்கு மீறிக் காகிதப் பணத்தை அச்சடித்தல் நாட்டிற்கு அழிவையே தரும். விலை வாசிகள் இடைவிடாது ஏறுவதால், மக்களின் சேமிப்புச் சத்தி குறையும். அதனல், அரசாங்கம் மக்களிடமிருந்து கடனுகப் பெறக்கூடிய தொகையும், அவ்வாறு கடனுகப் பெற்ற தொகையின் வாங்கும் சத்தியும் (Purchasing power) குறையும்.

இருபத்து மூன்ருமதிகாரம்

அரசாங்கக் கடன்களின் வகைகள்

(Forms of Public Debts)

தேசியக் கடனின் வரம்பு (Limits to national borrowing)

அரசாங்கக் கடன்களின் வகை ஒரே படியாய் இல்லை. தேசியக் கடன், கட்டாயமில்லாத கடன், கட்டாயக் கடன், உள் நாட்டுக் கடன், வெளி நாட்டுக் கடன், உற்பத்திக் கடன் (productive debt) அல்லது மீள் உற்பத்திக் கடன் (reproductive debts), பயனில் கடன் (unproductive debt) ஈடுள்ள கடன் (secured debt), வெண்ணிலைக் கடன் (floating debt), ஆண்டுக்கடன் எனப் பல சொற்ருெடர்கள் நிதி நூல்களில் காணப்படுகின்றன. முற்காலத்தில் அரசர்கள் கட்டாயக் கடன் முறையைக் கடைப்பிடித்தார்கள். இங்கிலாந்தில் முதலாம் சார்லஸ் காலம் வரையிலும், பிரான்சில் மேசரின் (Mazarin) காலம் வரையிலும் இம்முறை கையாளப்பட்டது. ஸ்பெயின், ஆஸ்திரியாவைப் போன்ற நாடுகள்கூட இம்முறையைக் கையாண்டன. ஆயினும், நன்ருக நிருவகிக்கப்படும் நாட்டிற்குக் கட்டாயக் கடன் முறை இழுக்கைத் தரும். "கட்டாயக் கடன் ஒரு வரியே அன்றிக் கடனன்று." வரி வருமானத்திற்கு அச்சாரமாக (advance of tax revenue) இதைக் கொள்ளலாம். இக்காலத்தில் கட்டாயக் கடன் மிக அருகியே வழங்குகிறது. இம்முறையால் அநீதியும் அசௌகரியமும் ஏற்படுகின்றன. இக்காலத்தில் கட்டாயக் கடனுக்கு ஒப்பாக உலோகமாக மாற்ற முடியாத காகிதப் பணத்தைக் (Inconvertible paper money) குறிப்பிடலாம்.

தேசியக் கடன் என்பதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. சுயநலத்தைவிட நாட்டுப்பற்றுக் குறைந்த சத்தி உள்ளது என்பது அனுபவத்தில் புலனுகிறது. 1796ல் பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்ட 'விசுவாசக் கடன்' பத்திரங்களை மக்கள் வாங்கினுலும், அதன் விளைவுகள் திருத்திகரமாய் இல்லை. பிரான்ஸ் 1848லும், ஜெர்மனி 1870லும், இத்தாலி 1866லும் இவ்வகைக் கடன் முறை

களைக் கையாண்டன. இத்தேசியக் கடன்களின் மூலம் போதிய கடன் பணம் திரட்ட இயலவில்லை. ஆகவே, நாட்டுப் பற்றை அடிப் படையாகக் கொண்டு கடன் வாங்குவது பயன் தாராது.

கட்டாயமில்லாத கடன்கள் வரவேற்கப்பட வேண்டுபவை. இவை வியாபாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. இம்முறையில் பலரும் தத்தம் சத்திக்கும் விருப்பத்திற்குமேற்பக் கூடுதலாகவோ, குறைவாகவோ கடன் பத்திரங்களை வாங்கலாம் என்பது இம்முறையின் முக்கிய அனுகூலம். இவ்வனுகூலம் வரி முறையில் இல்லை. எந்த நாடும் போதுமான ஈடு கொடுத்தால் வேண்டிய அளவு தொகையைக் கடனாகப் பெற இயலும்.

உள் நாட்டுக் கடனும் வெளி நாட்டுக் கடனும்

கடன் பத்திரங்கள் அனைத்தையும் உள்நாட்டுக்காரர்களே வாங்கி இருந்தால், அவை உள்நாட்டுக் கடன்கள் என்றும், கடன் பத்திரங்கள் அனைத்தையும் வெளி நாட்டுக்காரர்களே வாங்கி இருந்தால், வெளி நாட்டுக் கடன்கள் என்றும் கூறப்படும். சில கடன் பத்திரங்கள், வெளி நாட்டில் வாங்கப்படவும் கூடும். உள் நாட்டுக் கடன் கட்டாயமாகவோ, கட்டாயமில்லாமலோ இருக்கலாம். படையை அனுப்பி ஆக்கிரமித்துக்கொண்டால் ஒழிய, அல்லது வேறு வன்முறையைக் கையாண்டால் ஒழிய, வெளி நாட்டுக் கடன் கட்டாயமானதாக இருக்க இயலாது. கடன் வாங்கும் சமுதாயத்தி னிடையே ஒரு பகுதியினரிடமிருந்து இன்னொருபகுதிக்குச்செல்வத்தை உள் நாட்டுக் கடன் மாற்றுகிறது. உள் நாட்டுக் கடனைப் பொறுத்த மட்டில் கடன் கொடுக்கும் சமுதாயமும் கடன் வாங்கும் சமுதாயமும் ஒன்றேயாகும். வெளி நாட்டிலிருந்து கடனை வாங்கும் பொழுது, கடன் கொடுப்போர், கடன் கொள்வோருக்குச் செல்வத்தை மாற்ற வேண்டியிருக்கிறது. கடனைத் திருப்பிக் கொடுக்கும்பொழுது கடன் கொண்டார் கடன் கொடுத்தாருக்குச் செல்வத்தை மாற்ற வேண்டி யிருக்கிறது. வெளி நாட்டார்கள் வைத்திருக்கும் கடன் பத்திரங்களை வாங்குவதன் மூலம் வெளி நாட்டுக் கடனைப் படிப்படியாக உள் நாட்டுக் கடனாக மாற்றிவிடலாம். அதே போல உள் நாட்டார்கள் வைத்திருக்கும் கடன் பத்திரங்களை வெளி நாட்டார்கள் வாங்குவதன் மூலம், உள் நாட்டுக் கடனை வெளி நாட்டுக் கடனாக மாற்றிவிடலாம்.

பயன் தரும் கடன்களும் பயனிலாக் கடன்களும்

(Productive and Unproductive loans)

உற்பத்திக்கான, அல்லது மீள் உற்பத்திக்கான கடன்களுக்குச் சமமாகவோ அல்லது மேலாகவோ ஆஸ்திகள் (assets) இருக்க

வேண்டும். அக்கடன்களுக்கு ஈடாக ஆஸ்திகள் இல்லையெனில், அவை பயனிலாக் கடன்களாகும். அரசாங்கத்தின் கடனுக்கு ஈடாக அரசாங்க ஆஸ்திகள் இருக்குமானால், அவை ஒரு கம்பெனியின் மூலதனத்துக்கு ஒப்பாகும். – அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்தவர்கள் டிபெஞ்சர் வைத்திருப்பவர்களுக்கு ஒப்பாவார்கள். அரசாங்கத்திற்கு உடைமையாய் இருக்கும் சொத்துகள் அல்லது தொழிற்றுணிவுகளிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து மீள் உற்பத்திக் கடன்கள் மீது செலுத்த வேண்டிய வட்டித் தொகை கட்டப்படும். பயனில் கடன் வட்டியை வரி விதிப்பிலிருந்து கொடுக்க வேண்டும். பயனில் கடனுக்குத் தலையாய காரணம் போர். பயனில் கடனுக்குப் பிறிதொரு காரணம் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுவதேயாகும்.

நிலையாக்கிய கடனும் நிலையாக்காத கடனும்

(Funded and Floating debts)

நிலையாக்கிய அல்லது திரட்டிய (Consolidated) கடன்களுக்கும், நிலையாக்காத அல்லது திரட்டாத கடன்களுக்கும் தெளிவான வேறுபாடு கற்பிப்பது கடினம். ஆதியில் இவற்றிற்கு இடையே தெளிவாய் வேறுபாடு இருந்தது. தனியார்களைப் போல அரசாங்கங்களும் தங்கள் சொந்த நாணயத்தின் பேரிலேயே கடன் வாங்குவது நிலையாக்காத கடன் என்றும், கடனைத் திருப்பித்தருவதற்காகக் குறிப்பிட்ட வருமானங்களை ஒதுக்குவது, அல்லது பெந்தகமாக வைப்பது நிலையாக்கிய கடன்கள் என்றும் கூறப்படுகின்றன. ஆனால், இப்பொழுது இச்சொற்றொடர்கள் அப்பொருளில் வழங்கப்படவில்லை. நிலையாக்கிய கடன்களுக்கும், நிலையாக்காத கடன்களுக்கும் பின்வருமாறு வேறுபாடு கற்பிக்கலாம்:

1. கடன் நோக்கம் (The purpose of the loan)

நிலையாக்காத கடன்கள் சாதாரணமாக அப்போதைய தேவைகளுக்காக வாங்கப்படுகின்றன; நிலையாக்கிய கடன்கள் அரசாங்கத்தின் நிரந்தரத் தேவைகளுக்காக வாங்கப்படுகின்றன.

2. கடனின் தொடர்ச்சி

நிலையாக்காத கடன்கள் தாற்காலிகமானவையாகும். நிலையாக்கிய கடன்கள் நீடித்திருப்பவையாகும்.

3. கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டிய சட்ட நிபந்தனை

(Legal conditions of repayment)

நிலையாக்காத கடன்களைப் பொறுத்த வரையில் கடன்காரர்கள் கேட்ட மாத்திரத்திலோ, அல்லது மிகக் குறுகிய காலத்திலோ, கட

னைத் திருப்பித் தர வேண்டும். நிலையாக்கிய கடன்களைப் பற்றிய வரை கடன்காரனுக்கு அசலின்மீது ஓரளவு கட்டுப்பாடு இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு திட்டத்தின்படி கடனை வாங்கிய அரசாங்கம், கடனைத் திருப்பித் தரவேண்டும்; அல்லது அசலை எப்பொழுது திருப்பித் தருவது என்பதைப் பற்றி யாதோர் உடன்பாடும் செய்திருக்கக் கூடாது. இதுதான் நிலையாக்கிய கடனின் முக்கிய அமிசமாகும்.

இவ்விரு கடன்களுக்கும் வேறுபாடு கற்பிப்பது கடினமாய் இருப்பதற்குக் காரணம், இவ்வேற்றுமை எதேச்சையாகச் செய்யப்பட்டிருப்பதுதான். நிலையாக்கிய கடனுக்கும் நிலையாக்காத கடனுக்கும் உள்ள வேறுபாடு நாட்டிற்கு நாடு மாறுபடுகிறது; ஒரே நாட்டிலேயே இவ் வேறுபாடு காலம் செல்லச் செல்ல மாறுபடுகிறது. இவ்வாறு மாறுபடுவதற்குக் காரணம், அரசாங்க உத்தியோகஸ்தர் அல்லது புள்ளி விவரம் சேகரிப்போரின் நிலையாக்கிய கடன், நிலையாக்காத கடன் பற்றிய கருத்து மாறுபடுவதேயாகும். நிலையாக்காத கடன் என்றால், அது தாற்காலிகமானதென்று ஒருவன் கருதுகிறான். மூன்று, ஐந்து, அல்லது பத்தாண்டுகளுக்குள் கடனைத் திருப்பித்தர வேண்டுமாயின், அதை ஓர் உத்தியோகஸ்தர் தாற்காலிகமானதென்று கூறலாம். இன்னோர் உத்தியோகஸ்தர் 6 திங்களுக்குக் குறைந்த தவணையுடைய கடனையே நிலையாக்காத கடன் எனலாம். எந்த நிதியாண்டில் கடன் வாங்கப்பட்டதோ, அதற்கு அடுத்த ஆண்டிலும் தொடர்ந்து கடன் இருக்குமானால், அதை நிலையாக்காத கடன் என்று கூறுவது பொருந்தாது. எனினும், இது பற்றிய யாதொரு மரபும் வழக்கில் இல்லை.

நிலையாக்காத கடன் மிகவும் குறைவாக இருக்க வேண்டும் என்பதும், அக்கடன் தாற்காலிகமாக இராது, நிலையாக்கிய கடனாக மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அவற்றை நிலையாக்கிய கடன்களாக மாற்ற வேண்டுவதும் அவசியம்.

நிரந்தரக்கடன்கள்

(Perpetual Debts)

ஐரோப்பிய அரசாங்கங்கள் வரையறை இல்லாத அல்லது நிரந்தரக் கடன்கள் என்ற ஒரு வகைக் கடனைப் பல முறை பயன்படுத்தியுள்ளன. இதுகாறும் இக்கடன் முறை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கையாளப்படவில்லை. பிரான்சிலும் இங்கிலாந்திலும் இம்முறை வழக்கில் உள்ளது. ஒரு நிரந்தரக் கடனை அரசாங்கம் மேற்கொள்ளும் போது அரசாங்கம் ஆண்டுதோறும் வட்டி தருவதாக ஓர் உறுதி கூறுகிறதே தவிர, எப்பொழுது கடனைத் திருப்பித்தரும் என்று திட்டவட்ட

மாகக் கூறுவதில்லை. கடன் கொடுத்தவருக்குப் பணமுடை ஏற்படின், அவர் கடன் பத்திரத்தைப் பங்கு மார்க்கெட்டில் அவ்வப்போது கிடைக்கும் தொகைக்கு விற்றுவிடலாம். அரசாங்க நிதி நிலைமை நன்றாக இருக்கும் பொழுது கடன் பத்திரத்தைச் சமன் வீதத்திற்கே மீட்கலாம் (redeem at par) அல்லது திறந்த மார்க்கெட்டில் கடன் பத்திரங்களை வாங்குவதன் மூலம் நிரந்தரக் கடன்களை ஒழிக்கலாம். நிரந்தரக் கடன்களுக்குத் திட்டமான கெடு நாள் (definite maturity date) இல்லை.

நிரந்தரக் கடனுக்குச் சிறந்த உதாரணங்கள், பிரிட்டிஷ் திரட்டிய கடனும் (British Consols), பிரெஞ்சு ரென்டெஸும் (Rentes) ஆகும். 18, 19ஆம் நூற்றாண்டுகளில் பிரிட்டனும் பிரான்சும் ஒன்றோடொன்று போராடின; அது போது பெருங்கடன்களை வாங்கின. வரிகளை உயர்த்துவதன் மூலம் திருப்பித்தர முடியாமையால் இக்கடன்கள் நிரந்தரமாயின. முதல் உலகப்போர் மூண்ட காலை பிரிட்டனும் பிரான்சும் தங்கள் பழைய கடன்களில் பெரும்பகுதியைக் கொடுக்கவில்லை. ஐரோப்பாவில் நிரந்தரக் கடன்கள் ஒரு வசைச் சொல்லாக (byword) வழங்குகின்றது. போருக்காக வாங்கிய கடன்கள் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து நீடிக்கின்றன.

நிரந்தரக் கடன்களுக்கான வாதங்கள்

'கம்பெனிகள் தாங்கள் எப்பொழுது திருப்பிக் கொடுப்பது என்று நாள் குறிப்பிடாது பங்குகளை வெளியிடுவது போன்று, அரசாங்கமும் ஏன் வெளியிடக்கூடாது?' எனப்பலர் வினவுகின்றனர். அரசாங்கம் ஏட்டளவிலாயினும் நிரந்தரமானதல்லவா ? வருமானம் வரக்கூடிய அரசாங்கத் தொழிற்றுணிவில் நிரந்தர முதலீடு செய்தால் நிரந்தரக் கடன்கள் வரவேற்கக் கூடியனவே. ஆனால், போர் அல்லது நிரந்தரமாக நேரிடையான வருமானத்தைத் தாராத சேவைகளுக்காகப் பணத்தை வாரிச் செலவிடுதற்காக நிரந்தரக் கடன் வாங்குவதை ஏற்க இயலாது. மேலும், தேய்மானத்திற்காகக் (depreciation) கம்பெனிகள் பொதுவாக ஓரளவு நிதிகளை ஒதுக்குகின்றன. தேய்மான நிதி சேரச்சேர, பெருந்தொகை திரண்டு, பழைய முதலீட்டுக்குப் பதிலாகப் புதிய முதலீட்டில் இடும்படி நேரிடுகிறது. வட்டி மட்டுமே தரவேண்டும் என்ற காரணத்தாலும் நிரந்தரக் கடன்கள் ஆதரிக்கப்படுகின்றன. மேலும், மக்கள் தொகையும், செல்வமும், விலை வாசியும் ஏறுந்தோறும், ஆண்டுதோறும் கொடுக்கவேண்டிய வட்டித் தொகையின் பளுவும் குறையும் என்று கூறப்படுகிறது. நிரந்தரக் கடனைத் திருப்பித் தரவேண்டிய அவசியமின்மையால், அரசாங்கம் கடனைத் திருப்பித் தரத் தவறிவிட்டது என்ற பழிச்சொல்

லுக்கு இலக்காவதில்லே. வசதியிருந்தால், அரசாங்கம் கடனைத் திருப்பித்தரலாம். கடன்களுக்குக் காலவரையறை இல்லாதிருந்தால் பத்திரங்களின் விலே குறையும்போது அவற்றைக் குறைந்த வட்டி வீதங்களேயுடைய கடன் பத்திரங்களாக மாற்றலாம். பணத்தைச் செலவழியாது வீட்டிலேயே சேர்த்து வைக்கும் (பதுக்கி அல்லது முடக்கி வைக்கும்) குடியானவர்கள் முதலானோருக்கு நிரந்தரக் கடன் ஒரு முதலீட்டு வழியைக் காட்டுகிறது என பிரெஞ்சுக்காரர்கள் வாதிடுகிருர்கள்.

நிரந்தரக் கடன்களுக்கு எதிர் வாதங்கள்

மேலே கூறிய காரணங்கள் அனைத்தும் நிரந்தரக் கடன்களுக் காகப் பரிந்து சொன்ன நொண்டிச்சாக்குகள் (excuses) அல்லாது உண்மைக் காரணங்களாகா. கடன் பளுவைக் குறைக்க அரசாங் கம் விரும்பினுல், அதற்கான சிறந்த முறை கடன் வாங்குவதைத் தவிர்ப்பதேயல்லாது, நிரந்தரமாகக் கடனில் அழுந்துவதன்று. கடன் கள் நீடிக்குந்தோறும் வட்டியும் நீடிக்கும். (வட்டிக்குத் தூக்கமில்லே என்பது பழமொழி). அதனுல் அசலேத் திருப்பிக் கொடுப்பது மிகக் கடினமாகும். ஒரு நூற்ருண்டுக் காலத்திற்கு மேற்பட்ட கடனைத் திருப்பித் தருவதற்கு வரி கொடுப்பவர்கள் மிக உற்சாகம் காட்டு வார்கள் என எதிர்பார்க்க முடியாது. நெடுங்காலத்திற்குக் கடனைத் திருப்பித்தாராது ஒத்தி வைக்குந்தோறும் அரசாங்கங்கள் மேலும் மேலும் கடனில் அழுந்துகின்றன. அதனுல், தங்கள் தங்கள் கடன் களே ஏமாற்றுவதற்கான (நிராகரிப்பதற்கான) தூண்டுகோலும் உதய மாகிறது.

முதலீடு செய்வதற்கு வழி செய்யும் வகையில் அரசாங்கங்கள் நிரந்தரக் கடன் என்ற தளேயைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்னும் வாதம் பொருத்தமானதாய் இல்லே. பிரான்சின் நிரந்தரக் கடன் அந்நாட்டில் தனியார் தொழிற்றுணிவையும் பாங்கு வளர்ச்சி யையும் தடை செய்தது. இங்கிலாந்தில் கால வரையறை இல்லாத கடன்கள் இங்கிலாந்து பாங்கு தோன்றிய பொழுது உடனிலேயாகத் தோன்றினுலும், பாங்கு வளர்ச்சிக்கு அடி கோலியதென்ருலும், 19ஆம் நூற்ருண்டில் கடனைத் திருப்பித் தந்திருந்தால் பாங்கு முறைக் குச் சாவு மணி அடித்திருக்கும் என்று கூறுவதற்கில்லே. தனியார் தொழிற்றுணிவு வளர்ச்சிக்குப் பாங்குகளிடம் மேலும் மேலும் கடன் வாங்கியிருப்பார்கள். தொழிற்புரட்சிக்கு வேண்டிய நிதியைத் திரட்டுவதற்கு நிதி மார்க்கெட்டுகளும் (Financial markets) தோன்றி யிருக்கக்கூடும்.

பொருட்டுறையினர் ஒரு நாட்டின் தேசிய வருமானத்தின் வளர்ச்சிக்காகச் சில யோசனைகளைக் கூறுகிருர்கள். இவ்யோசனைகள் ஆண்டுகள் ஏற ஏறக் கடன் பளுவை அதிகரிக்க வேண்டுமேயல்லாது குறைக்கக்கூடாது என்ற அவர்களின் அச்சத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன. வட்டிக் கட்டணங்களைவிட நாட்டின் வருமானம் விரைவாக ஏறினல், கடன் பளு குறைக்கப்படலாம் என்றும், கடன் ஏறினலும் பாதகம் இல்லை என்றும் வாதம் செய்யப்படுகிறது. இவ் வாதம் கிளப்பும் பிரச்சினைகளை விரிவாகப் பரிசீலனை செய்வதற்கு இந்நூல் இடந்தாராது. ஆயினும், எல்லையில்லாது வட்டித் தொகைகளைக் கொடுப்பதற்கு வரி கொடுப்போரிடமிருந்து நிரந்தரமாக வரியாயாகப் பணத்தைப் பறிக்க வேண்டுமென்பது நல்லதெனத் தோன்றவில்லை.

டிபென்சர் வைத்திருப்பவர்கள் கடன் பத்திரங்களிலிருந்து வரும் வருமானத்தைக்கொண்டே வாழ்க்கை நடத்தும் ஒரு வருக்கத்தினராய் இருப்பதால், நடைமுறைத் தொழில்களில் அவர்கட்குப்போதிய அக்கறை இல்லை. உழைப்பின்றி வாழ அவர்களுக்கு உறுதி கொடுக்கப்படுகிறது. இவ்வருக்கத்தினர் சோம்பலின்றி இருப்பதற்கு ஒரே ஒரு வழிதான் அரசாங்கத்திற்கு உள்ளது. அவ்வழி இவர்களுக்குக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதேயாகும். வேறு ஒரு காரணத்திற்காகவும் கடனைத் திருப்பித் தருவது நன்மை பயக்கும். கடந்த காலம் நிகழ் காலத்தின்மீது அதிக உரிமை கொண்டால் தொழில்களை மேல்மேலும் உற்சாகமாக நடத்துதற்கு வேண்டிய திராணியும் நம்பிக்கையும் மக்களுக்கு நீடித்திரா. கொடுக்கவேண்டிய தொகையைப் பற்றிக் கூட நாம் அவ்வளவாகக் கவலைப்பட வேண்டுவதில்லை. மற்றும் நிரந்தரமாகக் கொடுக்கவேண்டுமென்பதொன்றே உழைப்பை மெதுவாக்குவதற்குப் போதுமானதாகும். மன நிறைவும் நம்பிக்கையும் வருவதற்கு முதற்படி இக்கடனைத் திருப்பிக்கொடுப்பதேயாகும்.

எவ்வளவு விரைவில் இக்கடன்கள் திருப்பித் தரப்படுகின்றனவோ, அவ்வளவு விரைவில் வரிகளைக் குறைக்கக்கூடும். மேலும் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும், கடனில்லாத ஓர் அரசாங்கம், அல்லது மிகக் குறைவாகக் கடனுள்ள அரசாங்கம், கடன் தொகைகளை மிக அனுகூலமான நிபந்தனைகளின் பேரில் பெறுவது சாத்தியமாகும். கடந்த காலத்துக் கடன் தொல்லைகள் குறைவாய் இருப்பதால் அவ்வரசாங்கம் எதிர் காலத்தில் கடன் பிரச்சினைகளைச் சுலபமாகச் சமாளிக்கக்கூடும்.

ஆண்டுத் தொகைகள்
(Annuities)

ஐரோப்பாவில் மிகவும் பரவலாய் இருந்த ஒரு நீண்ட காலக் கடன் வகையே ஆண்டுத் தொகை என்பது. இதன்படி குறிப்பிட்ட

ஒரு காலத்திற்குக் குறிப்பிட்ட வருமானத்தை அரசாங்கம் ஆண்டு தோறும் அளிக்க ஒப்புக்கொள்ளுகிறது. குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு ஒருதொகை கொடுக்கப்பட்டால், இது குறிப்பிட்ட கால ஆண்டுத் தொகை (term annuity) எனவும், கால வரையறை இல்லாது கொடுக்கப் படுமாயின் நிரந்தரக் கடன் எனவும் பெயர் பெறும். இவ்வாண்டுத் தொகை ஆயுட்காலம் முழுதுக்கும் கொடுக்கப்படலாம். ஒத்தி வைக்கப்பட்ட ஆண்டுத் தொகை (deferred or reversional annuity) என்பது குறிப்பிட்ட ஆண்டுகள் கழித்தோ, அல்லது ஒருவரின் இறப்புக்குப் பின்போதான் கொடுக்க ஆரம்பிக்கப்படும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஆயுள் காப்புறுதிக் கம்பெனிகள் (life insurance companies), ஆண்டுத் தொகைகளை முதலீடுகளாக விற்பதன் மூலம் இம்முறையை மக்களிடையே பரப்பியிருக்கின்றன.

நீண்ட காலக் கடன்களின் பயன்கள்

போர்ச் செலவையோ அல்லது பொது மக்களுக்கான பணிகளின் செலவையோ நெடுங்காலத்திற்கு அரசாங்கங்கள் நீடிப்பது நீண்ட காலக் கடன்களினால் ஏற்படும் பயனாகும். நீண்ட காலக் கடன்கள் இல்லையாயின், பெருஞ்செலவு முழுமையும் கடுமையான வரி விதிப்பினாலேயே சமாளிக்கவேண்டியிருக்கும். இக்கடன்களினால் அரசாங்கங்களுக்கு உடனடியாகப் பணம் கிட்டுகின்றது. வரி விதிப்பு முறையைப் பின்பற்றினால் வரிகளிலிருந்து கிட்டும் பணம் நிரம்பச் செலவு பிடிக்கும் ஒரு திட்டத்தை முடிக்குமளவுக்குச் சேரும் வரையில் வரிகளை நீட்டிக்க வேண்டி வரும். அரசாங்கத்தின் வருமானம் போதிய அளவு அதிகரிக்குமானால், நீண்ட காலக் கடன்களை அவற்றின் கெடு முடிவதற்குள் கொடுத்துவிடலாம். விரைவில் நீண்ட காலக் கடன்களைத் திருப்பிக்கொடுக்க முடியாவிடில், அவற்றைக் கெடு முடிவு வரை கொடுக்கவேண்டுவதில்லை. போர், வியாபார மந்தம், இயற்கை விபத்துகள் நேரிடும் பொழுது அரசாங்கம் குறுங்காலக் கடன் அல்லது இடைக்காலக் கடன் மூலமாக வேண்டும் தொகைகளைக் கடனாகப் பெறலாம். இதனால், வரி முறைகளை உடனே திருத்தி அமைக்கவேண்டிய அவசியம் இல்லாது போகிறது. குறுங்கால, இடைக்காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக மாற்றும்பொழுது அரசாங்கம் வரிகளைத் திருத்தி அமைத்துக்கொள்ளலாம்.

இக்கடன் முறையின் ஒரு பெரிய தீமை, வட்டி விகிதம் நெடுங் காலத்திற்குக் கொடுக்கப்படுவதே. கெடு நீடிக்க நீடிக்க, வட்டியாகக் கொடுக்கவேண்டிய தொகையின் காலமும் நீடிக்கிறது. 4 சத வீதம் வட்டியானால், 25 ஆண்டுகளில் வட்டி முதலுக்கு நிகராகிவிடுகிறது. ஆகையால், 25 ஆண்டுக் காலத்திற்கு 4 சத வீதத்தில்

கடன் வாங்கினால், முதலில் கடன் வாங்கிய ஒவ்வொரு ரூபாய்க்கும் மாற்றாக இரண்டு ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டிய கெடு மிக எட்டியிருந்தால், அரசாங்கமும் வரி கொடுப்போரும், அவற்றைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாது, மேன்மேலும் கடன் வாங்கலாம். நீண்ட காலக் கடன்களை வாங்க வாய்ப்பிருப்பதால், அரசாங்கம் அவசியமான காலத்திற்கு மேலும் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதை ஒத்தி வைக்கிறது. இதனால், வரி கொடுப்போருக்கு நிரந்தரமான வட்டித்தொகையைக் கொடுக்கும் சுமை ஏற்படுகிறது. கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டிய தவணை வந்ததும் கடன் எதற்காக வாங்கப்பட்டது என்பதே மறந்து போகலாம். இதனால், கடன் நிரந்தரமாகலாம்; அல்லது சில வேளைகளில் **நிராகரிக்கப்படலாம்** (repudiated). எவ்வளவு விரைவில் உபரி நிதி சேருகிறதோ, அவ்வளவு விரைவில் கடன்களைத் திருப்பிக்கொடுப்பதுதான் எல்லோருக்கும் நல்லது.

கடன் பத்திரங்களைக் குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு மேல் திருப்பி வாங்கலாம் (மீட்கலாம், redeemed) என்பதன் மூலம் நீண்ட காலத் தவணைகளுக்குள்ள எதிர் வாதங்களை ஓரளவு சமாளிக்கலாம்.

குறுகிய காலக் கடன் வகைகள்

(The Forms of Short Term Debts)

குறுகிய காலக் கடன்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன:

(அ) கருவூலக் கட்டளை (தாக்கீது) (the treasury warrant) (ஆ) டிமாண்டு நோட்டு (the demand note), (இ) பல்வேறு கருவூலக் கடன்கள் (various treasury obligatious) (உ-ம்) உண்டியல் bills) நோட்டு, கடன் நற்சான்றிதழ் (ceritificate of indebtedness) இவை பற்றிச் சுருக்கமாகக் கூறுவோம்.

(அ) கருவூலக் கட்டளை அல்லது தாக்கீது

கேட்ட போது, அல்லது குறிப்பிட்ட ஒரு தேதியில், வட்டியுடனோ வட்டியின்றியோ, ஒரு குறிப்பிட்ட தொகையைத் திருப்பித் தருவதாக ஒரு குறிப்பிட்ட அரசாங்கத்தின் பேரில் பிறப்பிக்கப்படும் உத்தரவு, கருவூலக் கட்டளை அல்லது தாக்கீது எனப்படும். எல்லாச் செலவினங்களும் இக்கருவியின் மூலமே செய்யப்படுகின்றன. கருவூலத்திலிருக்கும் நிதிக்கு மேலாகவே தாக்கீதுகள் பிறப்பிக்கப்படுமாயின், அரசாங்கத்திற்குச் சேவைகள்

செய்ததற்காகவோ அல்லது பண்டங்களை விற்றதற்காகவோ ஒருவர் குறுகிய காலத்திற்கு அரசாங்கத்திற்குக் கொடுத்த கட்டாயக் கடன் எனலாம். ஏனெனில், கருவூலத் தாக்கீதை வைத்திருப்பவர் வரிகள் அல்லது கருவூலத்தின் வரவுகள் அதிகரிக்கும் வரை காத்திருக்க வேண்டும். முதலில் இக்கட்டளையைப் பெற்றவர் காத்திருக்க இயலாவிடில், ஒரு பாங்கிலோ அல்லது வீட்டுக்காரரிடமோ அல்லது பல சரக்குக் கடைக்காரரிடமோ இக்கட்டளையைக் கொஞ்சம் கழிவிற்கு விற்கவேண்டும். எப்பொழுது இத்தொகைகள் திருப்பிக் கொடுக்கப் படும் என்ற உறுதி இல்லாததால் ஏராளமாகக் கழிவுகள் (discounts) கொடுக்கவேண்டியிருக்கும். இதனால், அரசாங்க அலுவலாளர்கள் அரசாங்கத்திற்கு அதிக வட்டி விகிதத்தில் கடன் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

கருவூலத்தில் நிதி இருக்கும்பொழுது இக்கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டால், இவற்றுக்கும் செக்குக்கும் (cheque) அல்லது பற்றுச் சீட்டிற்கும் (draft) யாதொரு வேறுபாடுமில்லை. இதன் மூலம் கடன் வாங்குவது அரசாங்கத்தின் நிதியின் பலவீனத்தையோ அல்லது தவறான நிருவாகத்தையோ காட்டுவதாகும். நிரந்தரப் பற்றுக்குறை வரவு செலவுத் திட்டத்திற்கு இஃதோர் அறிகுறி. மேலும், இக்கட்டளையை உபயோகித்து அறியாத பலர், இதை ஏற்க மறுக்கின்றனர். திறந்த மார்க்கெட்டில் வாங்கும்போது ரொக்கம் கொடுத்தால் ஒழியத் தம் பண்டங்களை விற்கப் பலர் முன் வாரார். நாம் கொடுக்கவேண்டிய தொகைகளைக் கட்டளைகள் மூலம் கொடுக்க இயலாது. நாம் பணம் கொடுக்கவேண்டிய கடன்காரர் விரும்பினாலோ, அல்லது கட்டாயப்படுத்தப்பட்டாலோ, இக்கட்டளைகளை ஏற்றுக்கொள்ளலாம். அரசாங்கத்தில் அலுவல் பார்க்கும் ஒருவருக்குத் தாம் உத்தியோகம் ஏற்றபின் கட்டளைகளை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. கருவூலத்தில் இருக்கும் இருப்புக்குமேல் (treasury assets) இக்கருவூலக் கட்டளைகளைப் பிறப்பிப்பது மிகச் செலவு பிடிக்கும் கடன் வாங்கும் முறையாகும். அதனுடன் அதைக் கட்டுப்படுத்துவதும் கடினம்.

(ஆ) டிமாண்டு நோட்டுகள் (Demand Notes)

வேண்டும்பொழுது குறிப்பிட்ட ஒரு பணத் தொகையைக் கொடுப்பதாக அரசாங்கம் வாக்குறுதியளிப்பது டிமாண்டு நோட்டு எனப்படும். பொதுவாகப் பொதுமக்களிடைச் செலாவணி ஆவதற்குத் தகுந்த முறையில் பல எண்களில் இது அச்சடிக்கப்படுகிறது. தேசிய அரசாங்கம் இதை வெளியிடுமாயின், இதற்குச் சட்ட முறைப் பணம் (legal tender) என்ற அதிகாரம் கொடுக்கப்படலாம். அதனால்

இதை ஏற்பதும் செய்வதும் கட்டாயமாகின்றன. இந்த டிமாண்டு நோட்டிற்கு ஈடாகப் போதுமான ஸ்டாண்டர்டு பணக்காப்பு நிதி (standard money reserve) இருந்து, அதிலிருந்து வேண்டும்பொழுது இந்நோட்டுகள் மீட்கப்பட்டால் இது ஒரு வகைக் காகிதச் செலாவணியாகிறது. இம்முறைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதோ அல்லது வரவேற்பளிப்பதோ அவ்வப்போதுள்ள சந்தர்ப்பங்களைப் பொறுத்துள்ளது. இவ்வித நோட்டுகள் ஏராளமாக அச்சிடப்படின், செலவுகளை வேறு வழியில் சமாளிக்க வழி இல்லை என்பது தெளிவாகிறது. அதனால், இவற்றைத் திரும்ப நியமனப்பணம் (standard money) மூலமாக வாங்குவதும் இயலாது. பணமாகப் பயன்படும்பொழுது இக்கட்டளைகளின் வாங்கும் சக்தி, அல்லது மதிப்பு அது வெளியிடப்படும் தொகையை பொறுத்தது. உலோகமாக மாற்றமுடியாத டிமாண்டு நோட்டுகளை அச்சிட்டு வழங்குவதுதான் செலாவணியின் வீக்கத்திற்கு ஆரம்பம். இதை மேற்கொள்வதால் பண வீக்கத்தினால் விளையும் எல்லாத் தீமைகளும் விளைகின்றன.

(இ) குறுகிய காலக் கருவூலக் கடன் (The short term treasury obligations)

கருவூல உண்டியல் (Treasury bills)

வரித்தொகைகள் எப்பொழுதும் தொடர்ந்து கருவூலத்திற்கு வருவதில்லை. குறிப்பிட்ட காலங்களிலோ, அல்லது ஆண்டில் ஒரு முறை அல்லது இரு முறையோதான் வரி வருமானம் கிடைக்கிறது. அரசாங்கத்திற்கு ரொக்க இருப்பு (Cash Balance) இல்லையாயின், இவ்விடைக்காலங்களைக் கடப்பதற்குத் தாற்காலிகமாக அரசாங்கம் கடன் வாங்க நேரிடுகிறது. போர்க்காலத்திலும், பிற பணமுடைக் காலத்திலும், வரி வருமானத்துக்கும், கடன் பத்திரங்களை விற்பதன் மூலம் கிடைக்கும் தொகைக்கும் இடைப்பட்ட காலத்தில், செலவுகளைச் சரிக்கட்டப் பணம் வேண்டியிருக்கிறது. இந்நிலையைச் சமாளிப்பதற்குப் பயன்படும் சாதனமே கருவூல உண்டியல். இப்பெயரிலிருந்தே இது ஒரு பிராமிசரி நோட்டு (புரோநோட்டு) அல்லது கருவூல இலாக்காவின் கடன் என்றும், பெயரளவில் அரசாங்கத்திற்கும் கருவூல உண்டியல்களுக்கும் நேரிடையான தொடர்பு இல்லை என்றும் ஊகிக்கலாம். ஆயினும், பின் நிலையில் நிற்பது அரசாங்கமே. கருவூல இலாக்காவின் உறுதி மொழியை ஆதரிப்பதும் அரசாங்கமே. சமாதான காலத்தில் இவ்வுண்டியல்கள் மிகக் குறுகிய காலத்திற்கே வெளியிடப்படுகின்றன. இவற்றின் வட்டி விகிதமும் மிகக் குறைவு. பொதுவாக இவ்வுண்டியல்களின் தவணை 91 நாள்களில் முடிவுறுகின்றது. இவ்வுண்டியல்கள் ஒருநாள்-நோட்டுகளாகவோ (One-day notes) அல்லது வேண்டும் பொழுது திருப்பிக் கொடுக்கப்படுவன

வாகவோ இருக்கலாம். கருவூலம் அடிக்கடி புதிய உண்டியல்களை விற்று, அவற்றின் மூலம் கிடைக்கும் தொகைகளைக் கொண்டு பழைய உண்டியல்களை வாங்குகிறது. சாதாரணமாகக் கருவூல உண்டியல்கள் ஒவ்வொரு வாரமும் கடன் மார்க்கெட்டுகளில் (Loan Markets) விற்கப்படுகின்றன. நடைமுறை வட்டி வீதத்திற்கேற்பக் கழிவும் தரப்படுகிறது. இந்நோட்டுகளைத் தொடர் முறையில் (in series) கழிவு செய்வதும் ஒரு முறை. இதனால், ஒரு நாளைக்குக் குறிப்பிட்ட தொகையையே திருப்பித் தரும்படி நேரும். அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பாங்கு ஒன்றோ அல்லது பலவோ இருக்கும் நாட்டில் இவ்வுண்டியல்கள் கையாளப்படுவது எளிது. சாதாரணக் காலங்களில் இவை எளிதாகக் கையாளப்படுவதன் இரகசியம், ஏராளமாகத் தனியாரிடம் நிதி இருப்பதும், அல்லது சிறு தொகைகள் தாற்காலிக முதலீட்டுக்காக இடம் தேடுவதுந்தான். ஒரு கம்பெனி அல்லது வியாபாரியிடம் மீண்டும் முதலீடுகள் செய்வதற்காகவோ அல்லது குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவோ ரொக்கம் சேர்ந்திருக்கலாம். ஆனால், அது அவருக்கு உடனடியாகப் பணம் தேவையில்லாத பொழுது இந்நிதியைக் கொண்டு கருவூல உண்டியல்களை வாங்குவது வாய்ப்பானது. ஏனெனில், கொடுக்கும் வட்டி மிகக் குறைவாக இருப்பினும், இவ்வுண்டியல்களை மார்க்கெட்டில் மிக எளிதில் விற்று ரொக்கமாக்கலாம்.

கடன் நற்சான்றிதழ்கள்

(Certificates of Indebtedness)

குறிப்பிட்ட வட்டி வீதத்துடன் கூடிய அரசாங்கப் புரோநோட்டுகளை விற்பதன் மூலம் தாற்காலிகக் கடன்களைப் பெறுவது வேறு ஒரு முறை. இவை கடன் நற்சான்றிதழ்கள் எனப்படும். இவை பல்வேறு நோக்கங்களுக்காக வெளியிடப்படலாம். வரி வரவுகளையும், நீண்ட காலக் கடன்களுக்குச் சந்தாக்களையும் (subscriptions) எதிர்பார்த்து இவை வெளியிடப்படுகின்றன. இவற்றை வருமானத்தை எதிர்பார்க்கும் நோட்டுகள் (revenue anticipation notes) எனவோ, வரி நோட்டுகள் (tax notes) எனவோ, வரி நற்சான்றிதழ்கள் (tax certificates) எனவோ, கடன் நற்சான்றிதழ்கள் (loan certificates) எனவோ கூறலாம். கடன் சந்தாக்களைக் கொடுப்பதற்கோ, வரிகளைக் கொடுப்பதற்கோ பதிலாக, இந்நற்சான்றிதழ்களையும் கொடுக்கலாம். உண்டியல்களுக்கும் நற்சான்றிதழ்களுக்கும் கெடு ஓர் ஆண்டிற்கு மேல் இல்லை; சாதாரணமாகக் கெடு இரண்டு முதல் ஆறு திங்கள் வரைதான்.

கருவூல நோட்டு (treasury note) என்பது, ஒரு நேரிடையான வட்டி தாங்கும் கடன் பத்திரம் (interest-bearing obligation). இதன்

கெடு 3 அல்லது 4ஆண்டுகள். இதற்கும் கடன் பத்திரத்திற்கும் உள்ள ஒரே வேறுபாடு, இதன் கெடு முடிவு குறுகிய காலமாக இருப்பதே யாகும்.

அரசாங்கங்கள் குறுகிய நிதிகளைப் பெறுவதற்குப் பாங்குகளே தலையாய சாதனம். ஆனால், பாங்குக் கடன் (Bank loan) சாதாரண மாக மேலே கூறிய ஏதாவதொரு கடன் வகையின் மூலம் பெறப் படுகிறது.

குறுகிய காலக் கடன்களின் சரியான பயன்கள்
(The proper uses of short term loans)

இரண்டு விதச் சூழ்நிலைகளில் குறுகிய காலக் கடன்களைச் சரி எனலாம். ஒன்று, நிதிக்காலத்தில் (fiscal period) வருமானத்தையும் செலவையும் சரிக்கட்டுவது. இன்னொன்று, நீண்ட கால நிதி முறைக் கான ஒரு திட்டத்தை நிறைவேற்றுதற்கான முதற்படியாகக் குறுங் காலக் கடன்களைக் கொள்வதாகும். இவ்விரு வகையிலும் குறுகிய காலத்திற்குக் கடன் வாங்குவதன் மூலமாக நிரந்தரக் கடனில் நிகர ஏற்றம் இருத்தலாகாது. பாங்குகள் போன்ற முதலீடு செய்வோர் வலுவான அரசாங்கங்களின் குறுகியகாலக் கடன்களை மகிழ்ச்சி யுடன் வாங்குகின்றனர். ஏனெனில், இவை இன்றேல், பாங்குகள் நிதியை வீணாக வைத்திருக்க வேண்டும். அதுவுமன்றி, இப்பத் திரங்களை விற்பதன் மூலம் உடனடியாக ரொக்கமாக மாற்ற முடியும். வரிகளை இவற்றின் மூலம் கொடுக்கலாம் என்றால், பொதுமக்களும் இவற்றை வரவேற்பார்கள்.

பல வகைக் கடன்கள்
(Multiplicity of Forms of Debts)

'அரசாங்கம் வாங்கும் கடன்களில் இவ்விதமாகப் பல்வகை இருப்பது விரும்பத்தக்கதா ?' என்னும் கேள்வி எழுகிறது. வட்டி வீதங்கள், வரி விலக்குச் சலுகைகள், கடனைக் குறைந்த வட்டி யுள்ளதாக மாற்றும் சலுகைகள், பிற அமிசங்கள் இன்னோரன்ன வற்றில் கடன் வகைகள் எத்துணை மாறுபடுகின்றன ! போர்க் காலத்தில் போன்று நீண்ட காலமாகக் கடன் வாங்குந் திட்டம் ஒன்று உள்ளது என்பதும், கடனின் அளவும் சுமாராக இருக்கிறதென்பதும் இக்கேள்வியின் அடிப்படை. கடன்களில் சில வகை இருப்பது நலம்; ஆனால், பல வகை இருப்பது நல்லதன்று. கடன்களில் பல வகை இருப்பதற்குக் காரணம், அரசாங்கம் ஒரு வியாபாரி என்பதும், கூடுமான வரை தான் விற்கும் சாமான்கள் வாங்குவோரின் விருப்பத் திற்கு உகந்த வகையில் இருக்க வேண்டும் என்பதுமேயாகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளைக்காட்டிலும் ஐரோப்பிய நாடுகள் அதிகமாகப் பல வகைக் கடன்களை மேற்கொண்டுள்ளன. ஆயினும், இதனால் விளையும் சிக்கல் இம்முறையில் உள்ள ஒரு பெருந்தவறு அல்லவா என்பது சிந்திக்கத்தக்கதொன்று. இரண்டு அல்லது மூன்று கடன் வகையே போதுமானவை.

இருபத்து நான்காமதிகாரம்

மாற்ற முடியாத காகிதப்பணம்

(Inconvertible Paper Money)

காகிதச் சட்ட முறைப்பணத்தை (legal tender paper money) வெளியிடுவதற்கு அச்சகத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அரசாங்கம் பெருவருமானத்தைப் பெறலாம். வருமானத்தைப் பெறுவதற்காக, நேரடியாகவோ, மறைமுகமாகவோ அரசாங்கம் அச்சகத்தைப் பயன் படுத்தலாம். குறிப்பிட்ட நோக்கத்திற்காக அச்சிடப்பட்ட புதிய காகிதப்பணத்தைக் கொண்டு ஓர் அரசாங்கம் தன் கடன்காரர் களுக்குக் கடனைத் திருப்பிக் கொடுப்பது நேரிடையான முறையாகும், ஒரு மத்திய பாங்கிலிருந்து கடன்களை வாங்கி அவற்றிற்கு ஈடாகப் புதிய காகிதப் பணத்தைப் பாங்குக்குக் கொடுப்பது மறைமுகமான முறையாகும். இதனால், பாங்கு, வட்டி வீதங்களை மிக அதிகம் உயர்த்துவதும் அல்லது தன் ஒதுக்கு நிதிகளைக் (Reserves) கரைப்பதும் தவிர்க்கப்படுகின்றன. இவ்விரு வகைகளாலும் ஏற்படும் பொருளியல் விளைவுகளில் பெருவேறுபாடு ஒன்றுமில்லை. ஆனால், மறைமுகமான வழியினால் வெள்ளறிவுடைய மக்கள் மனம் குழம்புவதன்றி, பாங்கி லிருந்து வாங்கும் கடனுக்கு வட்டி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது. "ஆகவே, இவ்விருமுறைகளில் ஏதாவதொன்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றால், சிக்கனமாக இருப்பது பற்றியும், பொதுமக்களுக்குத் தெளிவாகப் புரிவது பற்றியும் நேர்முக வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்," என டாக்டர் டால்டன் கூறுகிறார்.

குறிப்பிட்ட தொகைக்குப் புதிய காகிதப் பணத்தை அரசாங்கம் அச்சடித்து வெளியிடுவது அத்தொகையை வட்டியின்றிக் கட்டாயக் கடனாக வாங்குவதற்கு நிகராகும் எனக் கூறப்படுகிறது. அதை வரி விதிப்புக்குச் சமமாகும் என்று சொல்வதே மிகவும் பொருத்தமாகும்.

மாற்ற முடியாத காகிதப் பணத்தை வெளியிடுவதால் ஏற்படும் பொருளியல் விளைவுகள் (Ecnomic Effects of Issues of Inconvertible Paper Money)

சட்டமுறைக் காகிதப்பணத்திற்கு ஆதரவாகக் கூறப்படுவது பணமுடை. ஆனால், இவ்வனுகூலம் தோற்ற அளவிலேதான் ஏற்படு கிறது. இதற்கு நோட்டுகள் சட்ட முறைப்பணம் (legal tender) என்ற அமிசத்தைப் பெற்றிருக்க வேண்டுவதில்லை. இதனால், பண வீக்கமே ஏற்படுகிறது. பணவீக்கத்தின் மூலம் விலை வாசிகளின் ஏற்றம் ஏற்படுகிறது. காகிதப்பண வெளியீட்டின் ஒரே நோக்கம் பண்டங்கள் அல்லது சேவைகளை அரசாங்கம் வாங்குவதற்குத் துணை செய்வதே. வட்டித் தொகையாக மிச்சப்படுத்தும் தொகைக்கு மேலாகவே, தான் வாங்கும் பண்டங்களுக்குக் கூடுதல் விலையாக அரசாங்கம் கொடுக்கிறது.

பணவீக்கமும் உற்பத்தியும்

பணவீக்கத்தினால் உற்பத்தி அதிகரிக்கிறது எனச் சிலர் எண்ணு கின்றனர். எதிர் பாராத இலாபத்தால் ஊக்குவிக்கப்பட்டுச் சிலர் புதிய தொழில் துணிவுகளை மேற்கொள்ளுகின்றனர். ஆயினும், அண்மைக் காலத்துப் பொருளியல் வரலாறு சுட்டுவதுபோல இது தாற்காலிக மானதே. இந்த நிலையற்ற பொருளாதார விருத்தி தன்னகத்தே பின்னர் ஏற்படும் பொருளாதாரச் சரிவிற்கான வித்துகளைக்கொண் டிருக்கிறது. எனவே, தெளிவாக எதிர்காலத்தைக் கணிக்கும் அறிஞர்கள் அடங்கிய உலகில் அவசரப்பட்டுச் செய்யும் இவ்விதத் தவறுகளைத் தவிர்க்கலாம். ஆனால், நாம் கண்கூடாகப் பார்க்கும் பெரும்பாலான தொழில் அதிபர்கள் இவ்வகையைச் சேர்ந்தவர்கள் அல்லர். செயற்கையான சுபிட்சத்தில் மயங்கி அவர்கள் முதலில் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தியாது தவறாகக் கணிக்கின்றார்கள். அதனால், பொருளியல் துறையில் விவேகமற்ற தொழிற்றுணிவுகளையும் ஆரம்பிக்கிறார்கள். இப்பண வீக்கம் நின்று போனாலோ, அல்லது பணவீக்க வீதம் மந்தமாகச் சென்றாலோ, இம்மாயை அல்லது திரை அகற்றப்படும். பணவாட்டம் இன்றியே இம்மாயையை நீக்கிவிட லாம். இதனால், வியாபாரிகளின் நம்பிக்கை குலையும். எதிர் பார்த்த தேவை (demand) இல்லாததால், இத்தொழில் தலைவர்கள் கண்காணிப்பில் இருக்கும் உற்பத்திச் சத்தி, நீடித்த காலத்திற்கு வேலை இன்றி முடங்கிக் கிடக்கும். இதற்கு எதிராகப் பணவீக்கம் தொடர்ந்து இருப்பதோ, இன்னும் அதிகரிப்பதோ, வியாபாரிகளின் நம்பிக்கையை மட்டுமன்றி, பொது மக்களின் செலாவணியின் எதிர் கால மதிப்பைப்பற்றிய நம்பிக்கையையும் சீர் குலைக்கிறது. அதன்

பின்பு பத்திரிகையாளர் அழைக்கும் செலாவணியிலிருந்து 'ஓட்டம்' (the flight from the currency) என்று கூறும் நிலை ஏற்படுகிறது. பணத்தைக் கூடுமான வரை பயன்படுத்தாமலே ஒவ்வொருவரும் பேரங்களை நடத்த முற்படுவதுமன்றி, பணத்தைத் தம் கையிலிருந்து விரைவில் நீக்கவும் முற்படுகின்றனர். இவ்வகைக் கொந்தளிப்பான காலங்கள் (hectic conditions), பல ஐரோப்பிய நாடுகளிலும் முதல் உலகப் போருக்குப் பின் நிலவின. இதனால் ஒழுங்கான உற்பத்தி சாத்தியமில்லாது போயிற்று. பண்டமாற்றின்மூலம் நடைபெறாத (பொருளியல்) பேரங்கள் எல்லாம் சூதாட்டம் ஆயின. பின்னர்ப் பொருளாதாரக் (பொருளியல்) குழப்பம், அரசியல் கொந்தளிப்பு எல்லாவற்றிற்கும் மேலாகப் புரட்சி முதலியனவற்றிற்கும் பணவீக்கமே காரணம்.

பணவீக்கமும் பங்கீடும் (Inflation and Distribution)

பணத்தின் மதிப்பில் அல்லது விலை வாசிகளில் மாறுதல் ஏற்படுவது சமூகத்தைப் பெரிதும் பாதிக்கிறது. ஏனெனில், அவற்றின் விளைவுகளைத் தாங்கும் வல்லமை எல்லோரிடத்தும் சமமாக இல்லை. கடந்த காலத்தில் அவ்வகையான மாறுதல்கள் மிகப் பெரிய சமூக மாறுதல்களை விளைவித்தன; இப்பொழுதும் விளைவிக்கின்றன. ஏனெனில், பணத்தின் மதிப்பு மாறும் போது அது எல்லோருக்கும் அல்லது எல்லா வித நோக்கங்களுக்கும் ஒரே விதமாக மாறுவதில்லை. உதாரணமாக, ஒரு தனி மனிதன் வரவும் செலவும் ஒரே வீதத்தில் மாறுபாடு அடைவதில்லை. கீன்ஸ் பிரபு (Lord Keynes) கூறுவது போல, "விலைகளின் மாறுதல்களையும் வெகுமதியின் மாறுதல்களையும் (changes in rewards) அளந்தால் பொதுவாக இவை பல்வேறுபட்ட வகுப்பினரை ஒரே அளவில் பாதிப்பதில்லை. மற்றும், இவை ஒரு வகுப்பினரிடமிருந்து மற்றொரு வகுப்பினருக்குச் செல்வத்தை மாற்றுகிறது. மேலும், சில வருக்கத்தினருக்குப் பெருஞ்செல்வத்தையும், சிலருக்குப் பணமுடையையும் நல்குகிறது. இவ்வகையாக நற்பேற்றின் சலுகைகள் (fortune's favours) பல்வேறு வகையில் பங்கீடு செய்யப்பட்டு, நம் திட்டமும், நாம் எதிர்பார்த்ததும் அழியும்படி செய்கிறது." அதிகமான பணவீக்கத்தினால் ஒரு சமுதாயத்தில் பெருந்துன்பம் விளைகிறது. விலை வாசி ஏற்றம் செல்வர்களைவிட ஏழைகளையே அதிகம் பாதிக்கிறது. எனவே, இதன் விளைவு ஏழை மக்களிடமிருந்து அதிகமான வரியைப் பறிப்பதற்கு ஒப்பாகும். இதனால் இவ்வாறு ஏற்படும் பொது விளைவு வீதாசார வரியின் விளைவுடன் ஒப்பு நோக்கத் தக்கதாம். ஏற்கெனவே நாம் குறிப்பிட்டாங்கு, வீதாசார வரி நேர்மை அல்லது நியாய விதியை (Canon of Equity)

மீறுகிறது. மேலும், கொள்ளை இலாபம் சம்பாதிப்பவருக்கும் ஊக வாணிகருக்கும் (Speculators) விலை வாசிகள் ஏறும் காலம் நல்ல காலமாகும். இவர்சள் தங்கள் சொந்த முயற்சியால் செல்வர்களாவதில்லை. தொழிலாளிகள், நிலைத்த பண வருமானத்தை உடையவர்கள், இவர்களுக்கு ஊறு விளைவித்தே, ஊக வாணிகர்களும், கொள்ளை இலாபம் சம்பாதிப்பவர்களும் முன்னேறுகிருர்கள். ஏனெனில், விலை வாசிகள் ஏறுவதைப் போன்று தொழிலாளர்களின் கூலிகள் விரைவாக ஏறுவதில்லை. (இதை விசை இயக்கத்திஞல் உடனே மேலே செல்லும் 'உயர்த்திக்கும்' (Lift) சாதாரணமாகப் படிப்படியாக உயரச் செல்லும் படிக்கட்டிற்கும் ஒப்பிடலாம்.)

பணவீக்கமும் முதலாளித்துவமும்

''முதலாளித்துவ முறையை ஒழிப்பதற்குச் சிறந்த வழி செலாவணியைச் சீர்குலைப்பதே,'' என லெனின் கூறிஞர். லெனின் கூறியது முற்றும் சரியே. இரகசியமாகப் பணவீக்கத்தைத் தொடர்வதன் மூலம் குடிமக்களின் செல்வத்தின் பெரும்பகுதியை அவர்கள் உணராமலே அரசாங்கம் பறிமுதல் செய்ய முடியும். இல்முறையின் மூலம் பலர் ஓட்டாண்டிகள் ஆவதோடு, சிலர் செல்வரும் ஆகின்றனர். பணவீக்கம் தொடர்ந்து நீடித்தால், செலாவணியின் உண்மை மதிப்புத் திங்கள்தோறும் மாறுகிறது. கீன்ஸ் பிரபுவின் கூற்றுப்படி முதலாளித்துவத்தின் இறுதி அடிப்படையான (கடன் கொடுப்பவர்கள், கடன் வாங்குபவர்கள்) இவர்களுக்கிடையே நிலவும் நிரந்தர உறவுகள் (permanent relations) சீர் குலைக்கப்படுகின்றன. செல்வத்தைப் பெறுவது ஒரு சூதாட்டமாகிறது.

பணவீக்கமும் புரட்சியும்

19ஆம் நூற்ருண்டில் செல்வர் பலர் தோன்றினர். அவர்கள் அதிகாரம் படைத்தவர்களாயும் பிறரால் மதிக்கப்பெற்றவர்களாயும் இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் சொந்தமாகக் கட்டடங்களோ, நிலமோ, வாணிபமோ, அல்லது பொன்னே, வெள்ளியோ இல்லை. அவர்களுடைய செல்வமெல்லாம் ஆண்டுக்கு இத்துணையெனப் பணத்தை வருமானமாகப் பெறுவதே. சிறப்பாக 19ஆம் நூற்ருண்டில் இடைநிலை வருக்கத்தினரின் (middle class) சேமிப்புகள் எல்லாம் இம்முறையிலேயே நடைபெற்றன. 1914-18ஆம் ஆண்டு போருக்கு முன் விலை வாசி ஏற்றத்திஞலும், வட்டி வீதம் கூடியதஞலும் இவர்கள் வருமானம் சிறிது குறைந்தது. ஆயினும், ''போரைத் தொடர்ந்து ஏற்பட்ட பணமுடைச் சம்பவங்களால் இங்கிலாந்தில் இடைநிலை வருக்கத்தினரிடமிருந்து சரிபாதியையும், பிரான்சில் $\frac{7}{8}$ பங்கையும்,

இத்தாலியில் $\frac{11}{12}$ பங்கையும், ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி நாடுகளிலும் ரஷ்யாவிலும் வருமானம் முழுமையும் பறிக்கப்பட்டன. ஜெர்மனியில் பல இலட்சக்கணக்கானகுடும்பங்கள் பணவீக்கத்தால் அழிந்தன. பணவீக்கம் ஜெர்மானிய இடைநிலை வருக்கத்தினரை அழித்து ஒழித்ததே நாஜிப் புரட்சி (Nazi Revolution) ஏற்படுவதற்கு வழி கோலியவற்றுள் முக்கியமானது. பல்லாண்டுகட்கு முன்பு யூரிபிடிஸ் (Euripides)என்ற கிரேக்கநாடக ஆசிரியர், ''நாட்டைக் காப்பவர் இடைநிலை வருக்கத்தினரே,'' என உரைத்தார். சீனுவில் சியாங் கேஷேக்கின் தேசிய அரசாங்கம் கவிழ்ந்ததற்கும் பணவீக்கந்தான் உடனடியான காரணம்.

பணத்தின் மதிப்பு வரலாற்றில் படிப்படியாகக் குறைந்து வந்தது தற்செயலாக நேர்ந்ததன்று. அதற்குக் காரணம் இரண்டு; ஒன்று, அரசாங்கத்திற்கு வருவாய் இல்லாதது; மற்றது, கடனுளிகளுக்கு அரசாங்கத்தில் அதிகச் செல்வாக்கு இருந்தது. ரோம் முதன் முதலில் செலாவணியின் தேய்மானத்தைக் (currency depreciation) கண்டுபிடித்தது. அக்காலத்திலிருந்து செலாவணியின் மதிப்பை இறக்குவதென்பது தொடர்ந்து நடைபெற்றது. அரசாங்கம் இறுதியாகப் பயன்படுத்தும் கருவி சட்டமுறைச் செலாவணிப்படைப்பு. இக் கருவி உபயோகப்படுத்தாமல் இருக்கும் வரையில் எந்த அரசாங்கமும் தன்னுடைய ஓட்டாண்டித்தனத்தை (bankruptcy) அல்லது வீழ்ச்சியைத் தானே ஏற்படுத்திக்கொள்ளாது.

கி.மு. 6ஆம் நூற்றுண்டில் பணம் கண்டுபிடிக்கப்பட்ட நாளிலிருந்து, அரசாங்கத்தின் பணமுடை, கடனுளி வருக்கத்தினரின் அரசியல் செல்வாக்கு என்னும் இவ்விரண்டு சத்திகளின் செல்வாக்கினுல், பணவீக்கம் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. சில சமயம் பணத்தின் மதிப்பு இறங்கியிருக்கிறது; சில சமயம் பணத்தின் மதிப்பு இறக்கப்பட்டிருக்கிறது.

முடிவுரை

போர் ஏற்படின் பணவீக்கம் ஏற்படும் என்று எல்லோரும் கருதுகிருர்கள். ஆயினும், இம்முறை அவசியமற்றதும் அழிவைத் தருவதுமாகும் என்று நாம் கருதுகிரேம். இக்காலத்தில் எவ்வளவு கடன் வேண்டுமானுலும் சருவதேசக் கடன்கள் மூலம் பெறலாம். வரி விதிப்பினுல் கிடைக்கும் தொகைகளைவிடக் கடன் மூலம் பெறும் தொகைகள் மிகவும் வேறுபட்டிருக்க வேண்டுவதில்லை.

இருபத்தைந்தாமதிகாரம்

அரசாங்கக் கடனின் பளு

(The burden of Public Debts)

ஒரு விவிலிய ஆசிரியர் (Biblical writer) செல்வத்தைப்பற்றிப் பின் வருமாறு எழுதினர்: ''ஆபிராமுக்கு மாடும், வெள்ளியும், பொன்னும் மிகுதியாய் இருந்தன.'' ஆபிராமின் செல்வம் சொத்தில் இருந்ததே தவிரக் கடனில் இல்லை. தனியார்களைப்பற்றிப் பேசும் போது மட்டும் ஆபிராமைக் கருதுவது போலவே அவர்களையும் செல்வர்களாகக் கருதுகிறோம். ஆயினும், வரவெஞ்சிய செலவுக் கருது கோளைப் பின்பற்றிஞல் அரசாங்கக் கடனைச் செல்வமாகக் கருதலாம்.

தேசியக் கடனின் பளு

வளர்ந்து வரும் கடனுல் அபாயம் ஒன்றுமில்லை என்றும், உண்மையில் அது ஒரு பளுவே அன்றென்றும், கடன் வாங்கிய பணத்தைக் கொண்டு வாங்கிய ஆஸ்திகளைக் கடன் குறிக்கிற தென்றும், கடனும் ஆஸ்திகளும் சம அளவில் ஏறும் வரை நிகரப் பளு (net burden) இல்லை என்றும் வாதிக்கப்படுகிறது. ஆசிரியர் சிலர் ஒரு தேசத்தின் மொத்தக் கடன் பளுவே முக்கியமானதென்றும், தேசிய அரசாங்கத்தின் கடன் பளு முக்கியமானதன்று என்றும் வாதிக்கின்றனர். ஆகையால், தனியார்களின் கடன் குறையுமள விற்கு அரசாங்கத்தின் கடன் ஏறுமாஞல், கடன் பளுவில் நிகர ஏற்ற மில்லை. அரசாங்கச் செலவுக்கான வாதங்கள் பலவும் சில வேளை களில் மெய்ப்பிக்கப்பட்டாலும், அவற்றிஞல் ஏற்படும் கடன் பளு வைப் புறக்கணிப்பது தவருனது. இவ்வாதம் தவருன ஒப்புமைகளை அடிப்படையாகக் கொண்டது. இவற்றிற்குச் சரியான ஆதாரம் இல்லை.

அரசாங்கத்தின் கடனும் வியாபாரக் கடனும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவை என்று கூறப்படுகிறது. அரசாங்கத்தின் வளர்ந்து வரும் முதலீட்டுக்குச் சமனாக அரசாங்கக் கடனைக் கருதினால் இக் கருத்து ஏற்புடையதே. உற்பத்தியைப் பெருக்கக்கூடிய முதலீடு (Productive Investment) என்ற சொற்றொடருக்கு ஒரு குறுகிய பொருள் கொண்டு ஓரளவு வியாபார முயற்சிகளையே குறிப்பிட்டால் இவ்வொப்புமை பொருந்தும். ஆனால், அரசாங்கம் அதிகம் செலவழிக்க வேண்டுமென வாதிடுபவர்கள், உற்பத்தியைப் பெருக்கும் முதலீடு கள் என்ற தலைப்பில், வீடு கட்டுதற்கு உதவிக்கொடை கொடுத்திருப் பதையும், நாட்டின் வளம் குன்றாதவாறு பாதுகாக்கும் திட்டங்களை யும், கல்வி, சுகாதாரத் திட்டங்களையும் சேர்க்கின்றனர். இவை சரியாக நிருவகிக்கப்படுமானால், சிலர் அல்லது எல்லா மக்களின் நன் மையையும் உயர்த்திப் பயன் விளைவிக்கலாம். திருத்தியை அக அலகில் அளவிட்டால் (measured in psychological units of satisfaction) இவை தேசிய வருமானத்தை அதிகரிக்கின்றன எனவும் கூற லாம். சில வேளைகளில் இவை ரூபாய் கணக்கிற்கூடத் தேசிய வருமானத்தைஉயர்த்தலாம். ஆயினும், அவற்றிலிருந்து நேரிடையாக வரும் வருமானத்தை அதிகரிப்பதில்லை. **அவற்றுக்காக வாங்கிய கடன்களின்மீது செலுத்தப்படும் வட்டியைப் பொதுவாக வரிகளைக் கொண்டே சரிக்கட்ட வேண்டும்.** இங்கேதான் கடன் பளுப் புலனா கிறது. இப்பொழுதுதான் சாதாரண வியாபாரக் கடனுக்கும் அரசாங் கக் கடனுக்கும் உள்ள ஒப்புமை காணப்படுவதில்லை. இதிலிருந்து தனியார் கடன் ஏறினால் அதனால் இன்றியமையாத நன்மை விளையு மென்றோ அல்லது விரும்பத்தக்கதென்றோ கூறுகின்றோமில்லை. ஏனெனில், தனியார் கடன்கள் பொருளாதார முறையில் ஒரு நெகிழ் வின்மையை ஏற்படுத்தலாம். பொதுவாகக் கூறுமிடத்து, தனியார் கடன், உற்பத்திக்கான மூலதனத்தை முன் பணமாக இடுவதற்கு வாங்கியதாகும். முதற்கண் கடனைச் சரியான காரணத்திற்காக வாங்கியிருப்பின் உற்பத்தித்திறன் பெருகியதன் மூலம் வட்டி போன்ற கடன் செலவுகளைச் சுளுவில் சரிக்கட்டலாம். இதற்கு மாறாக அர சாங்கக் கடன், உற்பத்தியைப் பெருக்குவதில்லை. அவற்றை 'முத லீடு' செய்வதனால் பெரும்பாலும் ஆன்ம வருமானமும், அக வரு மானமுமே (spiritual and psychic income) கிடைக்கின்றன. ஆத லால் பண வருமானத்தின்மீது வரி விதித்து, கூடுதலான ஆன்ம வரு மானத்தைப் பெறவேண்டி இருக்கிறது. இதனை ஒரு சமூக போகப் பொருளாகக் கருதலாம். பண வருமானத்தைப் பற்றிக் கவலையின்றி ஆன்ம வருமானத்தைக் கொண்டே நாம் வாழ்க்கை நடத்தும் காலத்தை எதிர்பார்த்தாலன்றி, பண வருமானத்திற்குப் பதிலாக ஆன்ம வருமானத்திற்காக அரசாங்கக் கடன் மூலம் நிதி திரட்டினால், அஃது எதிர்காலத்தில் வரிகள் தேவைப்படும் என்பதையும், அவ்வரி

கள் எதிர்கால உற்பத்தியின் மீது ஒரு பளுவாக இருக்கும் என்பதையும் சுட்டுகின்றது.

வெளி நாட்டுக் கடனின் பளு

வெளி நாட்டுக் கடன்களைப் பொறுத்த வரை, முதலைத் திருப்பிக் கொடுப்பதற்காகவும், வட்டி கொடுப்பதற்கும் ஆகும் பணச் செல்லுகளே (money payments) வெளி நாட்டுக் கடன்களின் நேரிடையான பணப் பளுவைக் (direct money burden) குறிப்பனவாம். இத் தொகைகளைக் கொடுப்பதனால் கடனாளி நாடு பொருளாதார நலவசதியில் அடையும் நிகர இழப்பே வெளி நாட்டுக் கடன்களின் நேரிடையான உண்மைப் பளுவாகும் (direct real burden). வரி செலுத்துவோர் பெரும்பாலும் பணம் படைத்தவர்கள் என்றால், நேரிடையான உண்மையான பளுக் குறைவாகவும், அவர்கள் வறியோரானால் பளுக் கூடுதலாகவும் இருக்கும். ஆயினும், பயனில் சுமைக் (dead weight) கடனுக்கும் பயன் தரும் (productive) கடனுக்கும் உள்ள வேற்றுமையை நாம் மறத்தல் கூடாது.

வெளி நாட்டுக் கடனின் மறைமுகமான பளு (பணப் பளுவாயினும், உண்மையான பளுவாயினும்) உற்பத்திக்குத் தடை ஏற்படுவதால் நேரிடுகிறது. இக்கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்கு வரி விதிக்க வேண்டும். கடன்களைத் திருப்பிக் கொடுப்பதற்காக உற்பத்தியைப் பெருக்கும் சில அரசாங்கச் செலவினங்களில் சிக்கனம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். வெளி நாட்டுக் கடன்களில் போர் நஷ்டஈடுகள் (war indemnities) ஒரு வகையாகும். வெளி நாடுகளுக்குக் கடன்களைச் செலுத்த வேண்டியிருப்பதால் உற்பத்தியும் வேலையும் கடனாளி சமுதாயத்தில் அதிகரிக்கின்றனவென்று சிலர் வாதிடுவது விந்தையே. இது உண்மையானால், வெளி நாட்டுக் கடனால் யாதொரு மறைமுகமான பளுவும் ஏற்படாததுமன்றி ஒரு மறைமுகமான ஆதாயமும் ஏற்படுகிறது. இவ்வாதாயம் நேரிடையான கடன் பளுவைவிடக் கூடுதலாக இருக்கலாம். ஆனால், இவ்வெண்ணம் முற்றிலும் தவறானது. பெருவாரியாக வெளி நாடுகளுக்குக் கடன் கொடுக்க வேண்டியிருந்தால், அதனால் ஏற்றுமதித் தொழில்களில் வேலையும் உற்பத்தியும் அதிகரிக்கலாம். ஆயினும், டாக்டர் டால்டன் குறிப்பிடுகின்றவாறு "கடனாளி சமுதாயத்தில் உற்பத்திக்கும் வேலைக்கும் இதை ஒரு நிகரத் தூண்டுகோல் என்று கொள்ள முடியாது. இதனால் ஒருவகைத் தொழில்களுக்கு ஆக்கமும் வேறு வகைத் தொழில்களுக்கு ஊறும் ஏற்படுவதன்றி, வகைவளங்களைச் சில தொழில்களிலிருந்து வேறு சில தொழில்களுக்குத் திருப்புவதால் பொதுவாகத் தீமையே விளைகிறது."

உள் நாட்டுக் கடனின் பளு

பெரிதளவுக்கு உள் நாட்டுக் கடன் இருப்பதால் ஒரு நாட்டின் நிதி வகை வளங்கள் பாதிக்கப்படுவதில்லை எனச் சிலர் நினைக் கிறார்கள். ஓர் அரசாங்கம் உள் நாட்டிலேயே கடன் பெற்று அதற் கான வட்டியையும் செலுத்தினால், அதனால் நாட்டுக்கு இழப்பு ஒன்று மில்லை என்றும், அது பணத்தின் கைம்மாற்றமே என்றும் கூறப்படு கிறது. இக்கருத்தை ஜான் ஸ்டூவர்ட்டு மில் ஒப்புக்கொள்கிறார். ஆயினும், மாற்றம் கட்டாயமாக இருப்பதால் பெருந்தீங்கு விளைவிப்ப தாகும் எனக் கூறுகிறார். கூடுதல் வருமானத்தை வரி விதிப்பின் மூலம் பெறுவதால், அதை வசூலிக்கும் செலவும், அதனால் மக்களுக்கு ஏற்படும் தொந்தரவும், தொழிற்றுறைக்கு ஏற்படும் சீர்குலைவும், அவ் வரிப் பணத்தை அரசாங்கம் அடைவதைவிட அதிகத் தீமை பயப் பனவாகும். ஆகவே, இக்கூடுதல் வரி விதிப்பை விரைவில் ஒழித்துக் கட்டுதற்கு எல்லா முயற்சியையும் செய்ய வேண்டும். மேற்கூறிய தீங்குகளைத் தவிர உள் நாட்டுக் கடனால் சமுதாயத்தின்மீது கூடுத லான பளு ஒன்றும் ஏற்படவில்லை என்பது உண்மையா? பிலிப்பு ஸ்நோடன், ''சமுதாயத்தின் ஒவ்வோர் உறுப்பினரும் ஒரே அளவு அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்திருந்து, தாம் வரி கொடுக்கும் தொகையையே வட்டியாகவும் பெற்றால், இவ்வாதம் சரி யானதாகும். ஆனால் இவ்விதம் நடைமுறையில் இல்லை. உள் நாட்டுக் கடன்மீது செலுத்தப்படும் வரி, சமுதாயம் சமுதாயத்தின்மீதே வாங்கும் பெரிய கப்பமன்று; ஆனால், சமுதாயத்தின் உறுப்பினர்சிலர் மற்ற உறுப்பினரிடமிருந்து வாங்கும் கப்பமாகும்,'' எனக் கூறுகிறார்.

ஹான்சனது (Hansen) கருத்துப்படி ஓர் அரசாங்கம் உள் நாட்டில் மட்டுமே கடன் வாங்கியிருந்தால் அதைக் கடன் என்றே கருதலாகாது. ஹான்சனது இக்கூற்றுக்கு ஆதாரம் பணம் மீண்டும் நேரிடையாகக் கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்களிடமே போய்ச் சேருகிறது என்பதே. அரசாங்கம் உள் நாட்டிலேயே கடன் வாங்குவது ஒரு கணக்கு எழுதும் முறையே தவிர வேறன்று. ஏனெனில், ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பொறுத்த வரை அரசாங்கத்தின் கடனுக்கு ஈடாகக் கடன் பத்திரங்கள் வைத்திருப்ப வர்களின் பாத்தியதைகள் இருக்கின்றன. ஜெர்மானியப் பணவீக்கத் தின்போது வாழ்ந்தவருக்கு இவ்வாதம் வலிய, ஆனால் விரும்பத் தகாத நினைவுகளை ஏற்படுத்துகிறது. ஏனெனில், இக்கூற்று முதல் உலகப் போரின் போது ஜெர்மெனியில் எழுந்த ''பணம் நாட்டிலேயே இருக்கிறது,'' என்ற கூற்றுடன் ஒத்திருக்கிறது. ஜெர்மானிய அதி காரிகளின் மனச்சாட்சிக்கு இக்கூற்று ஆறுதல் அளித்தது. அவர்கள் பின்பற்றிய கட்டுப்பாடில்லாத நிதிக் கொள்கைகளால் (fiscal policies)

பணவீக்கமும் அதனல் துன்பமும் விளைந்தன. ஆனல், இக்கூற்று உண்மையானதா ? இக்கூற்று உண்மையானதே. பத்திலிருந்து பத்தைக் கழித்தால் பூஜ்யம் என்று சொல்வதற்கு இக்கூற்று ஒத்த தாகும். ஆனல், இவ்வாதத்தை அரசாங்கம் எவ்வளவு கடன் வாங்கினலும் கூறலாம். அரசாங்கம் ஒரு ரூபாய் கடன் வாங்கின லும் கோடிக்கணக்கான ரூபாய் கடன் வாங்கினலும் இவ்வாதம் பொருந்தும்.

உள் நாட்டுக் கடனும் வருமானத்தின் படைப்பும்

(Internal Debt and Creation of Income)

உள் நாட்டுக் கடன் ஒரு சாராரிடமிருந்து பணத்தை வாங்கி மற்ருெரு சாராரிடம் பணத்தைக் கொடுத்தாலும், அது ஒரு நிகரப் பளுவை ஏற்படுத்துகிறது. வருமானத்தின் படைப்புக்குக் குந்தகம் ஏற்படுத்துவதால் அதை ஒரு பளு எனல் தகும். இலாபத்தின் மீதும் சொத்தினின்றும் கிடைக்கும் வருமானத்தின் மீதும் வளர்வீத வரி விதிக்கப்படுகிறது. பெருவருமானங்களில் பலவும் சொத்திலிருந்தே பெறப்படுகின்றன. இவ்வளர்வீத முறையால் வருமானம் என்ற வாய்க்காலின் கேந்திரம் அல்லது வருமானத்தைப் பிறப்பிக்கும் ஸ்தா னங்களிலிருந்து வருமானம் எடுத்துக்கொள்ளப்பட்டு வாய்க்காலின் கேந்திரமல்லாத பிற இடங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இதன் விளைவு முதலீடு நிதிக்கான தேவை குறைவதுமன்றி, மூலதனம், வருமானம் இவற்றின் விரிவுக்கும் தடை ஏற்படுகிறது. மேலும், வட் டித் தொகைகள் தேசிய வருமானத்தின் ஒரு சிறு கூருய் இருக்கு மளவும் தேசியக் கடனைப்பற்றிக் கவலைப்படவேண்டுவதில்லை என்ற வாதத்திற்கு இது விடையளிக்கிறது. ''ஒரு மோட்டார்காரின் பளு வில் பொறி அடைப்பான்கள் (spark plugs) மிகச் சிறிய கனம் உடையவை என்ருலும் அவைகளின்றிக் கார் இயங்காது. அதேபோல, வட்டித் தொகைகள் தேசிய வருமானத்தில் மிகச் சிறிய கூருக இருப் பினும் அவை வியாபார இலாபத்தின் பெரும்பகுதிக்கு ஈடாக இருக்க லாம். பெரும்பகுதியை வரியின் மூலம் வியாபாரிகளிடமிருந்து வசூ லித்தால் எல்லாப் புதிய முதலீடுகளுக்கும் முத்தாய்ப்பு வைக்கப்படும். எடுத்துக்காட்டாக, தேசிய வருமானத்தில் காற்கூற்றுக்கு (25 சத வீதத்திற்கு) வட்டித் தொகைகள் சமானமாக இருந்தால், உற்பத்தி யாளர்கள் தங்களுடைய இலாபத்தில் 25 சத வீதத்தை விட்டுக் கொடுக்கவேண்டும். ஆனல், கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் உற்பத்திக்கு யாதொரு கொடையும் செலுத்தாமலே இந்த 25 சத வீதத்திற்கு உரிமை கொண்டாடுகின்றனர். பொருளாதார உற்பத் திக்கு ஆக்கம் தருவதற்கோ, அல்லது சமூக ஓர்மையை வளர்ப்ப

தற்கோ இது வழி அன்று என்பது தெளிவு.''—(எர்னஸ்ட் டபிள்யூ ஸ்வான்சன், எமெர்சன், டி. ஸ்மிட்) (Ernest W. Swanson and Emerson D. Schmidt).

வரி விதிப்பும் செலவு முறையும்

வரி விதிப்பும் செலவு முறையும் தேசிய வருமானத்தின் பங்கீட்டை மாற்றுகின்றன. சிலர் குறைவாகவும், சிலர் கூடுதலாகவும் சேமிக்கின்றனர். தேசிய வருமானத்தின் பங்கீட்டில் எந்த மாறுதலும் அதன் தொகையை இம்மாறுதலின் இயல்புக்கும், இருக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்பக் கூட்டலாம் அல்லது குறைக்கலாம். வரி விதிப்பால் பங்கீட்டில் விளையும் ஒரு மாறுதல் தேசிய வருமானத்தைக் குறைக்கலாம். மூலதனத்தைப் பயன்படுத்துவதும், தொழிற்றுணிவைத் தடைபடுத்துவதுமான வரிகளாய் இருந்தால் தேசிய வருமானம் குறையக்கூடும். இவ்வித வரி நாட்டிற்குப் பெரும்பளு என்பது தெளிவு.

கடன் செலவுகளும் (debt charges) வரிகளும் தேசிய வருமானத்தின் பங்கீட்டைப் பாதிக்காமலும் இருக்கலாம். வட்டியைப் பெறும் ஒவ்வொருவரும் தாம் பெறும் வட்டிக்குச் சமமாகவே பணத்தை வரிகளாகக் கொடுப்பாராகில், கடன் செலவுகளைச் சமாளிப்பதற்காக விதிக்கப்படும் வரிகளால் தேசிய வருமானத்தின் பங்கீட்டில் மாறுதல் இராது. சிலரிடமிருந்து நடப்பு வருமானத்தின் ஒரு பகுதியை வரியாக அரசாங்கம் கொண்டு பிறருக்கு வட்டியை அரசாங்கம் செலுத்தவேண்டியும் இராது. சில வரி கொடுப்போரிடமிருந்து நிதிகளை வரி மூலம் பெற்று, அதே தொகைகள் மீண்டும் வரி கொடுப்போருக்கே (அவர்கள் கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்களாய் இருப்பதால்) கொடுக்கப்படுகிறது. ஆனால், இவ்வசாதாரண நிலையில் ஒரு நபரின் சொக்காயின் (Coat) ஒரு பையிலிருந்து இன்னொரு பைக்குப் பணத்தை மாற்றுவதால் நாட்டின் பொருளாதாரத்திற்குத் தீங்குகள் ஏற்படக்கூடும். ஒருவரின் வருமானத்தில் எவ்வளவு பகுதி வரி மூலம் பெறப்படுகிறது என்பது முதலீடு செய்வதற்கும், தொழிற்றுறைகளில் இறங்குவதற்கும் அன்னாருக்கு உள்ள விருப்பத்தைப் பாதிக்கிறது. நாம் இருவரை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம். ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு வருமானம் 20,000 ரூபாய். அதில் அவர் வரியாகக் கொடுப்பது 2,000 ரூபாய். இன்னொருவருக்கு ஆண்டு வருமானம் 30,000 ரூபாய். இதில் 10,000 ரூபாய் அவர் அரசாங்கத்திற்குக் கடன் பத்திரங்கள் வாங்கியதற்காகப் பெறும் வட்டித் தொகையாகும். அவர் வரியாகக் கொடுப்பது 12,000 ரூபாய். இரண்டாமவர் தமது வருமானத்தில் 40 சத வீதத்

தையும், முதலாமவர் தமது வருமானத்தில் 10 சத வீதத்தையும் வரியாகக் கொடுப்பதால் இருவருக்கும் நிகர வருமானம் ஒரே தொகைதான் (18,000 ரூபாய்). புற வய அளவில் (in the objective sense) கூடுதலான வரியினுல் பளு ஒன்றுமில்லை. ஆயினும், வரி செலுத்துவோர் தம் வருமானத்தில் பெரும்பகுதியை வரியாகக் கொடுப்பதனுல், தம்மீது ஒரு பாரம் அழுத்துவதாக உணர்கிருர். இதனுல் பொருளாதாரத் துறை முழுமையும் ஏற்கெனவே இருந்ததை விட மோசமான நிலைக்குப் போகலாம். தாம் இலாபமாக அடைவதில் பெரும்பகுதியை வரியாகக் கொடுக்கவேண்டும் என்ற அச்சத்தினுல் புதிதாகத் தொழில் துணிவுகளில் இறங்கப் பலர் துணிய மாட்டார்கள்.

மக்களுக்குப் பொதுவான பணப்பை இல்லை என்பது

(People do not have a Common Pocket)

ஏட்டளவில், ஒரே அரசாங்கத்தின் அதிகார வரம்பில் இருக்கும் ஒருவரிடமிருந்து வரி மூலம் பணம்பெற்று இன்னொருவருக்கு அதைக் கொடுப்பது மிக எளிதானது. மொத்தத்தில் நாடு அதனுல் செல்வமுள்ள நாடாகவோ அல்லது வறிய நாடாகவோ மாறுவதில்லை. ஏட்டளவில், அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்திருக்கும் ஒவ்வொரு கடன்காரரும் தாம் கடன் பத்திரங்களாக வைத்திருப்பனவற்றிற்கு உள்ள வட்டியையும் அல்லது அதற்கான அசலையும் தாமே திருப்பித் தந்துகொள்ள வேண்டுமென்று கட்டளை பிறப்பித்துவிடலாம். ஆயினும், நடைமுறையில், கம்யூனிஸ்டு நாடாக ஆனுல் ஒழிய, நாடு முழுமையும் ஒரு பொருளாதார அலகாகக் (Single Economic Unit) கருத முடியாது. மேலும், ஒரு நாட்டின் மக்கள் எல்லோருக்கும் பொதுவான பணப்பை இல்லை. ஒரு தனியாளின் வலப் பையினின்று இடப்பைக்கு மாற்றுவதைவிட, ஒருவர் பையிலிருந்து இன்னொருவர் பைக்குப் பணத்தை மாற்றுவது கடினமானது.

உள்நாட்டுக் கடனைப் பொறுத்த எல்லா விவகாரங்களும் முடிவில் சமுதாயத்தின் உள்ளேயே செல்வத்தை மாற்றும் இனங்களாக முடிகின்றன. ஆகவே, உள் நாட்டுக் கடனுல் நேரிடையான பணப் பளுவோ அல்லது பண ஆதாயமோ இருக்க முடியாது. உள் நாட்டுக் கடனின் நேரிடையாக மெய்யான பளுவைத் தீர்மானிப்பதற்கு அதனுல் வருமானங்களின் மீது ஏற்படும் விளைவுகளை எண்ணிப் பார்க்க வேண்டும். இதனுல் வருமானத்தில் ஏற்றத்தாழ்வு அதிகம் விளையுமானுல் கடனின் நேரிடையான மெய்ப்பளு அதிகரிக்கின்றது என்றும், வருமானத்தில் ஏற்றத்தாழ்வு குறையுமானுல் நேரிடையான மெய்ப்பளு குறைகிறது என்றும் கூறலாம். உள் நாட்டுக் கடனின் மெய்ப்பளுவைத் தீர்மானிப்பதற்குச் சமுதாயத்தின் பல்வேறுபட்ட

வருக்கத்தினரிடை வரி விதிப்பின் பங்கீட்டையும், கடன் பத்திரங் களின் பங்கீட்டையும் பரிசீலனை செய்ய வேண்டும், தாங்கள் வைத் துள்ள கடன் பத்திரங்களின் அளவைவிட, வீதாசாரத்தில் குறை வாகப் பணம் படைத்தோர் வரியாகச் செலுத்தினால், கடனால் நேரிடையான மெய்ப்பளு ஏற்படுகிறது எனலாம். டாக்டர் டால்டன் இந்நிலையைச் சுருக்கமாகப் பின் வருமாறு எடுத்துரைக்கிறார் :

"வரி கொடுப்போரிடமிருந்து அரசாங்கத்தின்கடன்காரர்களுக்கு (Public Creditors) பணத்தை மாற்றுவதால் வருமானத்தில் ஏற்றத் தாழ்வுகள் அதிகரிக்கும் அல்லது குறையும் அளவுக்கு ஏற்ப உள் நாட்டுக் கடனால் நேரிடையான மெய்ப்பளுவோ, அல்லது ஆதாயமோ ஏற்படுகிறது எனலாம். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கடன் முற்றும் தொழிலாளர் வைத்திருக்கும் சேமிப்புப் பத்திரங் களாகவும், பிரிட்டிஷ் வரி வதிப்பு முற்றும் செல்வரிடமிருந்து மட்டும் வாங்கும் வருமான, இறப்பு வரிகளாகவும் இருந்தால், பிரிட்டிஷ் கடன் பேரங்களினால் சமுதாயத்திற்குப் பெரிய அளவில் நேரிடை யான ஆதாயம் ஏற்படும். ஆனால், நடைமுறையில் இந்நாட்டில் மட்டுமன்றி, பிற நாடுகளிலும் உண்மை வேறு விதமாய் உள்ளது." உள்நாட்டுக்கடனால் நேரிடையான மெய்ப்பளு ஏற்படுகிறது என்பது அவர் முடிவு. ஏனெனில், அரசாங்கக் கடன் பத்திரங்களைப் பெரும் பாலும் வைத்திருப்பவர்கள் செல்வர்கள். கடன் பத்திரங்களிட மிருந்து வருமானம் பெறுவதைவிட, அதிகமாகச் செல்வர்கள் வரி யாகக் கொடுக்குமாறு வளர்வீத வரி விதிப்பு முறை அமைக்கப்பட வில்லை.

அரசாங்கக் கடன்களின் பளுவை மதிப்பிடும் முறைகள்
(Methods of Estimating the Burden of Public Debts)

அரசாங்கக் கடன்களின் தொகை, அவற்றினால் கடன் வாங்கும் நாடுகளுக்கோ அல்லது பிற குழுக்களுக்கோ ஏற்படும் பளு, இப்பளுவை அளவிடும் சிறந்த கருவி ஆகிய இவற்றைப் பற்றிய சில முக்கியப் பிரச்சினைகள் எழுகின்றன. கடன் பளுவை அளவிடுதற்குப் பல்வேறுபட்ட முறைகள் கையாளப்படுகின்றன. சாதாரணமாகப் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் ஒருமுறை பல்வேறு நாடுகளின்கடன் தொகையை ஒப்பிடுவதாகும். இத்துறையில் உள்ள ஒரு குறைபாடு, கடன் வாங்கிய தொகைமீது செலுத்தப்படும் வட்டியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாததே. இன்னொரு முறை, தலா எவ்வளவு கடன் இருக்கிறது என்பது. தலா எவ்வளவு வட்டிச் செலவு ஏற்படுகிற தென்று பார்ப்பதில்லை. ஏனெனில், வட்டிச் செலவு மிகக் குறைவு. ஒரு நாட்டின் பரப்போ, அல்லது மக்கள் தொகையோ, அந்நாட்டின் செல்வத்தையோ அல்லது நிதி நிலைமையையோ மதிப்பிடுதற்கு ஏற்ற

அளவுகோல் அன்று. ஏனெனில், ஒரு நாட்டின் செல்வம் பல்வேறு பட்ட காரணங்களைப் பொறுத்துள்ளது. தேசிய வருமானத்திற்கும் கடன் செலவுகளுக்கும் உள்ள தொடர்பை ஒப்பிடுவது பிறிதொரு முறையாகும். அரசாங்கம் ஆண்டுதோறும் கடனுக்காகச் செலவழிக்கும் தொகையும் கடன் பளுவைக் காட்டவல்லதொரு சின்னமாகும். கடனின் தோற்ற மூலதன மதிப்பை (nominal capital value) எடுத்துக்கொள்வது ஐந்தாவது முறையாகும். கடனின் பளுவை அளப்பதற்குக் கடன் பத்திரங்களின் விலையே எடுத்துக்கொள்ளப் படும். இதன்கண் உள்ள குறைபாடு, கடன் பத்திரங்களின் மதிப்பு அடிக்கடி மாறிக்கொண்டிருக்கும் என்பதே. இம்முறையில் உள்ள இன்னொரு குறை ஒரு குறிப்பிட்ட காலத்தில் விலைக்கு வரும் கடன் பத்திரங்களின் மதிப்பையே சுட்டிக் காட்டுமேயல்லாது, இம்முறையினால் கடன் பத்திரங்கள் எல்லாவற்றின் மதிப்பையும் தெரிந்து கொள்ள முடியாது. இதைவிடச் சிறந்த முறை நாட்டின் வருமானத்துக்கும் கடனுக்கும் உள்ள உறவை நிர்ணயிப்பது அல்லது கடனுக்கும் சமுதாயத்தின் மொத்தச் செல்வத்திற்கும் உள்ள உறவை நிர்ணயிப்பது. ஆயினும், இங்ஙனம் பல நாடுகளை ஒப்பிடுவது எளிதன்று. ஆண்டு வருமானம் சிறப்பாக மார்க்கெட்டில் விற்பதற்கு வரும் பகுதி—எப்பொழுதும் ஐயத்திற்கு இடமானதாகும். எம்முறையைக் கையாண்டாலும், நாட்டின் செல்வத்தைப் பற்றிய மதிப்பீடுகள் உண்மையான நிலையை ஏதோ ஒரு சமயம் தப்பித்தவறி எடுத்துக் காட்டலாம். ஆயினும், இவ்வகையான ஆராய்ச்சிகளால் ஒரு நல்ல பயன் விளைகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு நாம் ஓர் ஆண்டின் கடன் செலவையும், நாட்டின் வருமானத்தையும் ஒப்பிடலாம். அதே போலக் கடன் பத்திரங்களின் மதிப்பையும் நாட்டின் செல்வத்தின் தொகையையும் ஒப்பிடலாம்.

அரசாங்கக் கடன் பளுவை அளவிடுவதால் அதைத் தீர்க்க உதவியாய் இருக்கும் அரசாங்கத்தின் ஆஸ்திகளைக் கணக்கில் கொள்வது இன்றியமையாதது. பல தரப்பட்ட அரசாங்கப் பணிகளைச் செய்வதற்குப் பயன்படும் உடைமையை இக்கோணத்திலிருந்து பார்க்க முடியாது. ஓர் அரசாங்கத்தின் கட்டடங்கள், பிற வருமானம் அளிக்காத உடைமைகள் (non-revenue yielding possessions) இவற்றை விற்க முடியாது. விற்றால், சாதாரணமான நிருவாகக் கடமைகளை நிறைவேற்ற முடியாது. அரசாங்க நடப்பிற்கு அடிப்படை இவ்வகை உடைமையே. ஆனால், வருவாயை அளிக்கும் அரசாங்கத்தின் உடைமை இதினின்றும் வேறுபட்டது. நிலம், காடுகள், சுரங்கங்கள், இருப்புப்பாதைகள், பிற தொழிற்றுணிவுகள் அனைத்திற்கும் மார்க்கெட்டு மதிப்பு உண்டு. அவற்றை விற்பதன் மூலம் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கான போதிய பணத்தைப் பெறலாம்.

கடனின் மதிப்பை நிர்ணயிப்பதற்கு முன்பு, கடன் தொகையிலிருந்து மேற்கூறிய வகையான அரசாங்க உடைமையின் மதிப்பைக் கழிக்க வேண்டும். அதே போல அவற்றினின்று கிடைக்கும் ஆண்டு வருமானத்தை வட்டிச் செலவுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எடுத்துக் காட்டாக இந்திய அரசாங்கம் வாங்கிய கடனின் பெரும்பகுதியும் பொதுமக்கள் நன்மைக்காகவே செலவிடப்பட்டது. இத்தொகை பேரளவினதாம்.

இத்தொகை தனியாரிடமோ அல்லது கம்பெனிகளிடமோ இருந்தால், நாட்டின் செல்வத்தின் கூறுகளாக எண்ணப் படும். இந்தியக் கடனின் மெய்ப்பளு தோற்ற அளவினைவிடக் குறைவானதாகும். ஏனெனில், இதில் 68 சதவீதம் உற்பத்தியைப் பெருக்குவதற்காக வாங்கப்பட்டதாகும்.

எல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது ஒரு முறையை மட்டும் கடைப்பிடிப்பது சரியன்று என்றும் பல்வேறு முறைகளைக் கூட்டாகப் பயன்படுத்துவது சரியானதென்றும் முடிவுக்கு வரலாம். இம்முறைகளில் பெரும்பயன் தரத்தக்கவை (1) தேசியச் செல்வம், வருமானம் இவற்றுக்கும், தேசியக் கடனுக்கும் உள்ள வீதம் (Ratio), (2) மொத்தச் செலவில் எவ்வளவு சதவீதம் கடனுக்காக (வட்டிக்காக) செலவழிக்கப்படுகிறது என்பன.

இருபத்தாருமதிகாரம்

அரசாங்கக் கடன்களைத் திருப்பித் தருதல்
(The Repayment of Public Debts)

கடன் நிராகரிப்பு அல்லது ஏமாற்றுதல்
(Repudiation)

அரசாங்கக் கடன்களின் பளுவினின்றும் விடுபடுவதற்கான ஒரு வழி, அவற்றைத் திருப்பித் தருவதாகும். விரும்பத்தகாத வேறொரு முறை அவற்றை நிராகரிப்பதாகும். சாதாரணமாக ஏமாற்றுவதற்கு முன்பு அரசாங்கம் ஊதாரித்தனமாகச் செலவழிப்பதும், புரட்சி அல்லது போர் ஏற்படுவதும் வழக்கமாகும். ''ஏமாற்றுவது நடைமுறை அரசியலுக்கு (practical politics) ஏற்றதுமன்று; சமூக நீதியுமன்று. ஒரு குடியாட்சிச் சமுதாயம் தான் தேர்ந்தெடுத்த அரசாங்கத்தின் பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டும். சிறிது காலம் தாற்காலிகமான புத்தி சுவாதீனமில்லாமலும், புத்தி தெளிவு ஏற்பட்ட பின் கடந்த மடமைகளின் தீமை விளைவுகளைச் சரிக்கட்டுவதற்குப் பெரும்பான்மையோர் செய்த பாவங்களை நிரபராதிகளான சிறுபான்மையோர்மீது செலுத்துவதன் மூலமும், பொதுமக்களுக்கு அரசாங்கத்தின்மீதுள்ள நம்பிக்கை அழியும். தேசியக் கடன் பத்திரங்கள் சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களாலும் சமமான அளவில் வைத்திருக்கப்படுமாகில், ஏமாற்றுவது அநீதியாகாது. ஆனால், அவ்விதம் நடைமுறையில் இல்லை,'' எனப் பிலிப் ஸ்நோடன் கூறினர்.

அரசாங்கம் ஏமாற்றினல் அதற்குப் பரிகாரம் இல்லை. ஒரே பரிகாரம் வன்முறையைப் (force) பயன்படுத்துவது அல்லது அந்த நாட்டை ஆக்கிரமித்துக்கொள்வது. ஏமாற்றுவது ஒழுக்கக் கேட்டைக் காட்டுவதுமன்றி, ஒரு நாட்டின் நல்ல நடத்தை

யும் செல்வமும் தீர்ந்துவிட்டன என்பதற்கான அறிகுறியுமாகும். அதனால், வாணிபமும், அபிவிருத்தியும் தடைபடும். எதிர்காலத்தில் நாட்டின் நாணயம் அழிக்கப்படும். ஏமாற்றுவது நேர்மையற்றது என்பதோடுகூடப் பொருத்தமும் இல்லாதது.

அரசாங்கத்துக்கும் அதன் கடன்காரர்களுக்கும் உள்ள ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்பட்டு வேறு ஒப்பந்தங்கள் அமுலில் இருக்குமானால், உடைமைக்காரர்களுள் ஒரு பகுதியினர் மட்டும் ஒறுக்கப்படுகிறார்கள். மற்றவர் பாதிக்கப்படுவதில்லை. சில சமயம் அவர்கள் பிற்காலத்தில் வரிக்குறைப்பினால் ஆதாயமும் பெறக்கூடும். ஆகவே, ஏமாற்றுவது நீதிக்குப் புறம்பானது. ஆனால் உடைமைக்காரர்களுக்குப் பணம் கொடுக்கவேண்டிய எல்லா ஒப்பந்தங்களும் ஒரே சமயம் நிராகரிக்கப்படுமானால், அஃது குறிப்பிட்ட ஒரு கும்பலுக்கு மட்டும் எதிரிடையாக வேறுபாடு (discrimination) காட்டுவது ஆகாது. எல்லா உடைமைக்காரர்களும் ஒரே மாதிரி நடத்தப்படுவதால் இதை நீதிக்குப் புறம்பானது என்று கூறவும் முடியாது. இவ்வகையில் எல்லா ஒப்பந்தங்களையும் கிழித்தெறிய வேண்டுமானால் ஒரு சமூகப் புரட்சிக்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். இப்புரட்சியின் விளைவுகள் உடைமைக்காரர்கள் அனைவருக்குமே அநீதி பயப்பதாக முடியும். ஆயினும், சிலர் தனியாருடைமை ஆட்சியே தகாததென்றும், அதுவும் அதனால் அதிக ஏற்றத்தாழ்வு ஏற்படுமானால், அம்முறையே அநீதியானதென்றும் கூறுகிறார்கள்.

கடன்களை நிராகரிக்கும் எந்த ஓர் அரசாங்கமும் புதியனவாகக் கடன்களை வாங்குவதில் சில காலத்திற்கேனும் சிரமப்படவேண்டி வரும். இவ்வாதம் ஏமாற்றுவதற்கு எதிரிடையான வலுவான வாதமாகும். எதிர்காலத்தில் கடனாகப்பெறும் தொகை, ஏமாற்றும் கடன் தொகையைவிடக் குறைவாய் இருந்தால் இவ்வாதம் பொருந்தாது. ஆயினும், காலம் செல்லச் செல்ல மக்கள் பழைமையை மறந்துவிடுகிறார்கள். புதிதாகக் கடன் கொடுக்கச் சிலர் முன் வரலாம். பல்லாண்டுகளுக்கு முன்பு கடன்களை நிராகரித்த அரசாங்கம் புதிய கடன்களைக் காலாகாலத்தில் திருப்பித் தருமானால் அயல் நாடுகளின் மதிப்பை மீண்டும் பெறலாம். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு சோவியத்து அரசாங்கம் தன்னுடைய கடன்களுக்காக ஏமாற்றியது அறிவுடைமையாகாதென்று நாம் இப்பொழுது சொல்ல இயலாது.

''முதல் உலகப்போருக்குப் பின்பு, அதுவும் சிறப்பாக 1929ஆம் ஆண்டு தொடங்கிய பெரிய வியாபார மந்தத்திற்குப் பின்பு, ஏமாற்றும் முறையிலும் அதைக் குறிப்பிடும் சொற்றொடர்களிலும் சுவை

யான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. பணம் செலுத்தத் தவறுதல் (default) என்றும், 'தாற்காலிகமாகத் திருப்பித் தருவது' நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது (suspension of payment) என்றும், 'பணத்தை மாற்றுவது ஒத்திப்போடப்பட்டிருக்கிறது (transfer moratorium) என்றும் பலவாறு கூறப்படுகிறது. 'ஏமாற்றுதல்' என்ற சொல் பிறரைப் புண்படுத்துகின்றது; அவசியமில்லாவிடினும், வேண்டுமென்றே செய்யப்பட்டதாகவும் தோன்றுகின்றது. ஆனால், இச்சொல் ஏமாற்றுவது இன்றியமையாதது என்றும், இப்பொழுது தங்களால் கடனைத் திருப்பித் தர உண்மையில் இயலவில்லை என்றும், விரைவிலேயே கொடுத்துவிடுவதாகவும், ஆனால் உடனடியாக அல்லவென்றும் விளம்புகின்றன. 'பணமாற்றை ஒத்திப்போடுதல்' (transfer moratorium) என்னும் சொற்றொடர் மனத்திற்குக் குளிர்ச்சியாய் இருக்கிறது. இதன்படி கடன்காரர்களின் பணம் மிகச் பத்திரமாக இருக்கிறது. கடன் தொகை கடனாளி அரசாங்கத்தால் வசூலிக்கப்பட்டு ஒரு பாங்கில் பத்திரமாக வைக்கப் பட்டிருக்கிறது. துரதிருஷ்டவசமாக இப்போது அன்னியச் செலாவணி களைப் பற்றிய கஷ்டங்கள் இருப்பதால் உடனே திருப்பித்தர முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.''—(டாக்டர் டால்டன்)

ஜெர்மெனியிலும், ரஷ்யாவிலும் கடன் தொகையில் ஒரு பகுதி ஏமாற்றப்பட்டது. அச்சகத்தைக் கருவியாகக் கொண்டு ஏற் பட்ட மிகைப் பணவீக்கத்தினால் கடன் பளுக் குறைக்கப்பட்டது. (அரசாங்கக் கருத்தின்படி). ஆனால் உண்மையில் பலருடைய கடன்கள் ஏமாற்றப்பட்டன. ஆயினும், அரசாங்கக் கடன்காரர் களுக்கு மட்டும் எதிரிடையாகத் தனிப்பட்ட வேறுபாடு காட்டப்பட வில்லை. நிலைத்த வருமானத்தை உடைய எல்லோரும் சம அளவில் பாதிக்கப்பட்டனர். முன்னையதைப் போலன்றிக் கடன் ஒப்பந்த வடி வில் யாதொரு மாறுதலும் இல்லை. அதன் பொருளிலேயே மாறுதல் ஏற்பட்டது.

கடன் மீட்சி

(Debt Redemption)

திருப்பிக் கொடுக்கும் கொள்கை பொதுவாக அறிவுக்கு ஒத்த தாகும். மிகக் கடுமையான அல்லது விரும்பத்தகாத வரிகளை விதித்தே கடனைத் திருப்பிக் கொடுக்க முடியுமானால், இவ்விரண்டுக் கும் உள்ள வேற்றுமை புலனாகிறது. இந்நிலைமைகள் ஒப்பு நோக்கத் தக்கனவாகும். வரிகளும், கடன்களும் விரும்பத்தகாதனவாயினும் எவை மிகவும் விரும்பத்தகாதன என்று எண்ணிப்பார்க்க வேண்டும். விரைவில் கடனைத் திருப்பித் தருவதற்காகத் தீய விளைவுகளைத்

தோற்றுவிக்கும் வரியை விதிப்பது வெறுக்கத்தக்கதாகும். இதற்கான வரிகள் ஒரு கூடுதலான பளுவே என்பது தக்க காரணமாகாது. வரிகளால் எப்பொழுதும் பளுதான். ஆகவே, கடனைத் திருப்பித் தருவதற்காக அவற்றை விதிப்பது துன்பமில்லாத நடவடிக்கையாக முடியாது. அரசாங்கத்தின் நாணயம் வரம்பில்லாமல் விரியக் கூடியதன்று. மீண்டும் திருப்பிக் கொடுக்காமலே வேண்டுந்தோறும் எடுத்துக்கொள்ளக் கூடிய எல்லையில்லாத நீர்த்தேக்கத்தைப் போன்றதன்று அரசாங்க நாணயம். நாணயத்தை (credit) அதிகரிப்பதற்கான சிறந்த வழி கடன் மீட்சி. ஒரு சிறந்த நிதி முறையின் அடிப்படை அமிசம் கடன் மீட்சியை நிறைவேற்றுவதாய் இருக்க வேண்டும். சூழ்நிலைக்குத் தக்கவாறு அரசாங்கக் கடனை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் திருப்பித் தருதல் வேண்டும். விரைவிலேயே திருப்பித்தந்தால் வட்டிச் செலவிற்காகவும், பிற செலவுகளுக்காகவும் விதிக்கப்படும் வரிப் பளுக்களிலிருந்து உற்பத்திச் சத்திகள் விடுதலையடைய முடியும். ஒரு நிரந்தரக் கடனால் நன்மை பெறுவது என்பது கானல் நீரைப் போன்றதாகும். ஏனெனில், சிறிது சிறிதாக (படிப்படியாக) அசல் ஏறி, இறுதியில் அதனை மீட்க முடியாத தொகையாகிறது. இதனால் நிரந்தரப்பளு ஏற்படுகிறது.

கடன் பத்திரங்களை வாங்குவதன் மூலம் கடனைத் தீர்ப்பது
(Retirement by Purchase)

கடன் பத்திரங்கள் குறைவான விலைக்கு விற்கும் போது (அரசாங்கம்) அவற்றைத் திறந்த மார்க்கெட்டில் வாங்குவது அனுகூலமளிக்கும். கடன் பத்திரங்களைப் பங்கு மார்க்கெட்டில் வாங்கலாம்; அல்லது பத்திரங்களை வைத்திருப்பவர்கள் எந்த விலைக்கு விற்க இணங்குவார்கள் என்பதை அனுப்பிசைவு விவரங்கள் (Tenders) மூலம் அறியலாம். இலாபகரமானது என்று நினைக்கும் பொழுது கடன் பத்திரங்களை, கருவூல அலுவலாளர்கள் மார்க்கெட்டில் வாங்கலாம். குறைந்த வட்டி வீதத்தில் கடன் வாங்கிக் கூடுதலான வட்டித் தொகையுடன் கூடிய பத்திரங்களை மீட்கலாம்; அல்லது உபரி வருமானம்இருப்பின், அதனைக் கடன் பத்திரங்களை மீட்பதற்குப் பயன்படுத்தலாம். இவ்வாறு கடனின் நிகரப் பளுவைக் குறைக்கலாம். இவ்வகையான நடவடிக்கைகளை மிகவும் நிதானத்துடன் மேற்கொள்ள வேண்டும். இன்றேல், கடன் பத்திரங்களின் விலை அதிகமாக ஏறி, எதிர்பார்த்த இலாபம் முற்றிலும் கிட்டாது போகும்.

இம்முறைகள் எல்லாம் சிறந்த நிதிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. திருப்பித் தரும் கடன் தொகை உடனே முதலீட்டு மார்க்கெட்டுக்குச் (Investment market) சென்று தொழில்,

வியாபார நோக்கங்களுக்காகப் பயன்படுகிறது. இம்முறையில் கடனைத் தீர்ப்பதின் வெற்றி மார்க்கெட்டு நிலவரத்தைப் பொறுத்தது. கடனை வாங்கிய நெருக்கடி தீர்ந்துபோய் அரசாங்க நாணயமும் அபிவிருத்தி அடையும் பொழுது கடன் பத்திரங்களின் விலை ஏறுகின்றது. அப்பொழுது திறந்த மார்க்கெட்டில் கடன் பத்திரங்களை வாங்குதற்கான கவர்ச்சியும் போய்விடுகிறது.

கடன் கழிவு நிதி

(Sinking Fund)

கடனைத் தீர்ப்பதற்காக ஒரு நிதியைத் திரட்ட வகை செய்வது கடன் கழிவு நிதி எனப்படும், அரசாங்க வருமானத்தின் ஒரு கூறு கடனின் மீட்சிக்காகச் செலவழிக்கப்படுகிறது என்பது கடன் கழிவு நிதித் தோற்றத்திலிருந்தும், கண்காணிப்பிலிருந்தும் புலப்படும். செலவைவிட வருமானம் கூடுதலாய் இருந்தால்தான் உண்மையான கடன் கழிவு நிதி ஏற்பட முடியுமென்றும், அதிலிருந்து அரசாங்கக் கடனைத் திருப்பித் தரமுடியும் என்றும் ஹாமில்டன் (Hamilton) கருதுகிறார். தனியார் கடன் வாங்கினாலும் சரி, அரசாங்கம் கடன் வாங்கினாலும் சரி, அவற்றைக் கொடுப்பதற்கான ஒரேவழி, செலவைவிட வருமானம் கூடுதலாக இருப்பதே. செலவைவிட வருமானத்தை உயர்த்துவதன் மூலமே தனியாரும் அரசாங்கமும் கடன் பொறுப்புகளை ஒழித்துக் கட்ட முடியும்.

கடனைத் திருப்பித் தரும் காலம் வரை நிதி திரட்டப்பட்டும். அவ்வாறு திரட்டப்படும் நிதி கெடு நாளன்று முதலைத் திருப்பித் தந்து கடனைக் கழிவு செய்வதற்குச் சமானமானதாக இருக்க வேண்டும் என்பது, கடன் கழிவு நிதி என்ற சொற்றொடரின் மூலப்பொருள். ஆனால், விரைவிலேயே நிதி எந்திரத்தின் ஒரு கூறாக இருப்பதற்குப் பதிலாகத் தனியாகவே கடன் கழிவு நிதி இயங்க ஆரம்பித்தது. இந் நிதியை ஈடாகவைத்துப் புதிய கடன்கள் வாங்கப்பட்டன. இவ்வாறு ஒரு கையால் கடன் வாங்கப்பட்டும், மற்றொருகையால் கடன் திருப்பிக் கொடுக்கப்பட்டும் வந்தது, கேலிக்கு இருப்பிடமாயிற்று. இம் முறையால் கடனைத் திருப்பித் தருதல் என்பது மிகப் பழைய முறையாகும். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் டாக்டர் பிரைஸ் என்பார் (Dr. Price) எழுதிய நூல்களில் கடன் கழிவு முறைக்கு ஏற்றம் அளிக்கப்பட்டது. வட்டிக்கு வட்டி வாங்கும் முறையால் கடனை எளிதாகத் திருப்பித் தரலாம் என்று இவர் எழுதினார். பெருக்கல் விருத்தியால் (geometric progression) ஏராளமாக ஒரு தொகை அதிகரிக்கும் என்று அவர் சொன்ன வாதம் கணக்கு முறைப்படி சரியே. ஆனால், நிதி முறையினின்று மாற்றி நடைமுறையில் அரசியல்

வாதிகளால் கையாளப்பட்ட பொழுது அதன் சிறந்த அமிசங்கள் கொள்ளிவாய்ப் பிசாசுகள் ஆயின. இதனால் இம்முறையைப் பின்பற்றிய வர்கள் மீளாத நிதிச் சேற்றில் அழுந்தினார்கள். இங்கிலாந்தில் பிட்டு என்பவர், பிரைஸ் திட்டத்தை அமுல் நடத்தினர். ஆனால், விரைவி லேயே கருவூலம் புதிய கடன்களைப் படைத்தது. கடன் கழிவு நிதி, வட்டிக்கு வட்டி முறையில் வளர்வதைக்காட்டிலும் விரைவாகவே இப் புதிய கடன்கள் படைக்கப்பட்டன. அமெரிக்காவில் அலெக்ஸாண்டர் ஹாமில்டன், பிரைஸின் வாதங்களாலும், பிட்டின் எடுத்துக்காட்டா லும் பாதிக்கப்பட்டார். அவர் ஆதி நாளில் அமெரிக்க ஐக்கியக் குடியரசின் கடனைத் தீர்க்கச் செய்த ஏற்பாடுகள் இச்செல்வாக்கைப் புலப்படுத்துகின்றன. 1817ல் அவர் ஏற்படுத்திய சிக்கல் நிறைந்த கடன் கழிவு நிதி முறை சட்டங்களிலிருந்து அகற்றப்பட்டது. அதன் பின்பு உபரி வருமானங்களைக் கொண்டே கடன் திருப்பித் தரப்பட் டது. 1835ல் அமெரிக்க ஐக்கிய நாடு கடன் முழுமையும் திருப்பித் தந்துவிட்டது. 19ஆம் நூற்றாண்டில் வேறு எந்த முக்கியமான அரசாங்கத்திற்கும் இல்லாத பெருமை அமெரிக்காவிற்கு இருந்தது. அதுதான் அமெரிக்க ஐக்கிய அரசாங்கத்திற்குக் கடனே இல்லை என்பது.

ஒரு நூற்றாண்டிற்கு முன்பு இருந்ததைவிட இப்பொழுது கடன் கழிவு முறைக்கு வேறான பொருள் கற்பிக்கப்படுகிறது. கடனைத் தீர்ப்பதற்காகத் திட்டவட்டமாக நிதியை ஒதுக்கும் முறைக்கே 'கடன் கழிவு முறை' என்பது இப்பொழுது பெயர். இந்நிதியைக் கெடு நாள் வரையிலும் சேர்த்து வைக்கும் முயற்சி கைவிடப்பட்டுவிட்டது. கடன் கழிவு நிதிக்கென ஒதுக்கப்பட்ட தொகை, ஆண்டுதோறும் அல்லது குறிப்பிட்ட காலந்தோறும் கடனை மீட்பதற்காகவோ அல்லது கடன் பத்திரங்களை வாங்குவதற்காகவோ பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒன்றன்பின் ஒன்றாக வரிசைக் கிரமமாகக் கடன் பத்திரங்கள் கெடு நாளை நெருங்கின், ஒவ்வோர் ஆண்டும் கடன் கழிவு நிதிக்கென ஒதுக்கப்படும் தொகை, அந்நிதியில் வரி வசூலிக்கப்பட்ட நாளிலிருந்து கடன் பத்திரத் தவணை நாள் வரை இருக்கிறது. ஆண்டுதோறும் தனக்குக் கிடைத்த நிதியிலிருந்து பத்திரங்களை வாங்குவதற்குக் கருவூலம் அனுப்பிசைவு விவரங்களைத் தருவிக்கிறது. இவற்றில் எவை மிக அனுகூலமாக உள்ளனவோ, அவற்றைக் கருவூலம் வாங்குகிறது.

முற்கூறிய உண்மைகளிலிருந்து செலவைவிட வருமானம் உபரி யாய் இருந்தால்தான், கடன் கழிவு நிதியால் பயன் ஏற்படும் என்பதும், இம்முறையின் சிறப்பில் உள்ள நம்பிக்கை ஒரு கற்பனையை (fiction) அடிப்படையாகக் கொண்டது என்பதும் விளங்கும். நிதி

யமைச்சர் போதுமான தொகைகளைக் கடன் கழிவு நிதிக்குச் சப்ளை செய்யுமாறு அவரை வற்புறுத்துவது ஒன்றே இம்முறையில் உள்ள அனுகூலமாகும். வரி விதிப்பினுல் கொதித்தெழும் மக்களுக்குச் சில வேளைகளில் கடன் கழிவு நிதியின் நடவடிக்கைகள் பெரும்பாலும் புலனுவதில்லை. நடைமுறையில் இவ்வுபரி மிக அதிகமாகவே வைக்கப்பட்டது. பின்னுல் வரியைக் குறைப்பதும் தவிர்க்கப்பட வேண்டும். ஆனுல், இவ்வாதாயம் மிகக் கூடுதலான செலவின் பேரில் பெறப்பட்டதாகும். புதிய கடன்களால் இந்நிதி முற்றும் தீர்ந்து போகலாம் என்ற அச்சமும் உள்ளது.

வரியிலிருந்து தொகை பெருது, புதிய கடன்களிலிருந்து தொகையைப் பெறும் ஒரு கடன் கழிவு நிதியை உண்மையான கடன் கழிவு நிதி என்று கூறமுடியாது. ஏனெனில், கடனில் நிகரக் குறைப்பு இம்முறையால் ஏற்படுவதில்லை. பழைய கடனுக்குப் பதில் புதிய கடன் ஏற்படுகிறது. குறிப்பிட்ட ஓர் ஆண்டு வரை நீடிக்கும் முறையில் வகுக்கப்பட்ட எல்லாக் கடன் கழிவு நிதிகளுக்கும் ஆபத்து ஏற்படும். இக்கட்டில் இருக்கும் அரசியல் வாதிகளுக்குக் கடன் கழிவு நிதிகள் நிரந்தரக் கவர்ச்சியைத் தருபவை. கடன் கழிவு நிதிகள் இலகுவில் கொள்ளை அடிப்பதற்கு ஏற்றனவாகும். இக்கட்டிலுள்ள நிதியமைச்சர் மேலும் வரி விதிப்பின் மூலம் மக்களின் வெறுப்பை ஈட்டுதற்குப் பதிலாக, கடன் மீட்சிக்காக வைக்கப்பட்டிருக்கும் இக்கடன் கழிவு நிதியைத் திருப்பி வேறு பல நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது இயல்பானதே. ஏற்கெனவே வரி விதிப்பு மிகப் பளுவானதாக, எல்லாச் சாத்தியமான வரி விதிப்பு முறைகளும் கையாளப்பட்டுவிட்டால் கணிசமான அளவு உபரித் தொகையை வரிகளின் மூலம் பெறுவது கடினம். பெருவரிப்பளுவை ஏற்றிருக்கும் ஒரு நாடு இம்முறையால் அசலைத் திருப்பித் தந்து கடனை ஒழிக்க முனைவது படிப்படியாகத்தான் நிறைவேறும்.

கடன் நீட்டிப்பு

(Refunding)

கடன் தவணை நாள் வந்த போது, அல்லது குறுகிய போது கடனைத் திருப்பித் தருவதற்கான காலத்தை நீட்டிப்பது கடன் நீட்டிப்பு எனப்படும். தவணை நாள் நெருங்கிய கடன் பத்திரங்களுக்குப் பதிலாக, புதிய வேறுபட்ட கடன் பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன. ஏற்கெனவே தவணை நாள் நேர்ந்துவிட்ட கடன் பத்திரங்களின் வட்டிக் கூப்பன்கள் அகற்றப்படுகின்றன. புதிய கடன்கள் ஒரு குறிப்பிட்ட தேதியில் திருப்பிக் கொடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. ஏட்டளவில் கடன்காரர்கள் கடன் நீட்டிப்புக்கு இணங்குகின்ருர்கள். நடைமுறையில் கடன் பத்திரங்களை வைத்திருப்பவருள்

யார் யார் இம்முதலீட்டைத் தொடர்ந்து நடத்த விரும்புகிறார்களோ, அவர்கள் மட்டுமே பழைய கடன் பத்திரங்களுக்குப் பதிலாகப் புதிய கடன் பத்திரங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். அசலைத் திரும்ப வேண்டுபவருக்கு, மீதம் உள்ள கால நீட்டிப்புக்கடன் தொகை வெளியீட்டை விற்பதன் மூலம் கிடைக்கும் தொகையைக் கொடுத்துக் கடன் பத்திரங்கள் மீட்கப்படுகின்றன. கால நீட்டிப்பு அடிக்கடி தனிப் பட்ட கம்பெனிகளால் செய்யப்படுகிறது. அக்கம்பெனிகள் தங்கள் கடன் பத்திரங்களைத் தாங்கள் நிரந்தரமாகத் தொழிலில் போட்டிருக்கும் மூலதனத்தின் ஒரு பகுதியாகக் கருதுகின்றன. பழைய கடன் பத்திரங்களுக்குப் பதிலாகப் புதிய கடன் பத்திரங்கள் தரப்படுகின்றன; அல்லது பிற முதலீடு செய்வோருக்குப் புதிய கடன் பத்திரங்கள் விற்கப்பட்டு அதனால், கிடைக்கும் தொகையால் தவணை நெருங்கும் பத்திரங்கள் வாங்கப்படுகின்றன. இங்ஙனம் காலந் தோறும் கடன்காரர்களின் கடன் தீர்க்கப்படுகின்றது. தோற்றத்தில் கடன்கள் தீர்க்கப்படுகின்றன. வியாபாரத் தொழிற்றுணிவுகளில் அரசாங்கம் முதலீடு செய்திருந்து அவற்றுக்கான மூலதனத்தைக் கடனாக வாங்கியிருந்தால், அக்கடனைத் திருப்பித் தருவதற்கான கெடுவைச் சில சமயம் நீட்டிக்கலாம்.

அரசாங்கம் வெளியிட்ட உற்பத்திக்கு அல்லாத கடன் பத்திரங்களைப் பெரும்பாலும் காலம் நீட்டிப்பது கண்டிக்கத்தக்கதாகும். கால நீட்டிப்புக்கான பூரண உரிமையும், அவ்வதிகாரத்தைப் பொதுவாகப் பயன்படுத்துவதும் நிரந்தரக் கடனில் கொண்டுபோய் விடும். தவணை நாள்களைக் குறிப்பிட்டாலுங்கூட, கால நீட்டிப்பு நிரந்தரக் கடனில் முடியும். சாலைகள், பள்ளிகள், சாக்கடைகள் போன்ற அபிவிருத்தித் திட்டங்களுக்காக வாங்கிய கடன்களை அவ்வபிவிருத்தித் திட்டங்களின் ஆயுள் நாளிலேயே திருப்பித் தருதல் வேண்டும். இல்லையேல் அவற்றைப் புதுப்பிப்பதற்காகப் (replacement) புதிய கடனை வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்துடன் ஏற்கெனவே வாங்கிய கடனும் திருப்பித் தரப்படாமலே இருக்கும். விரிவான முறையில் கால நீட்டிப்புச் செய்வதால் கடன் தொகை தலைகீழ்க் கூர்நிதிக் கோபுரம் போல ஏறும். கடன் கழிவு நிதி நிருவாகத்தில் போதிய கண்டிப்பு இன்மையையோ, அல்லது ஒரு நெருக்கடி ஏற்பட்டதையோ கால நீட்டிப்புக்கான முடை சுட்டுகிறது.

கடன் இனமாற்றுகை

(Conversion)

அரசாங்கக் கடனை வெளியிட்ட பொழுது ஒத்துக்கொண்ட நிபந்தனைகளில் யாதாவது ஒன்றை மாற்றுவது கடன் இனமாற்றுகை எனப்

படும், இதன் மூலம் வட்டிச் சுமையைக் குறைக்கலாம். எப்பொழு தாயினும் கடனைத் திருப்பிக்கொடுக்கலாம் என்றால், அரசாங்கம் வட்டி விகிதத்தைக் குறைப்பது சாத்தியம். ஒரு நிரந்தரக் கடனின் நிபந்தனைகளை மாற்றுவதைக் கடன் இனமாற்றுகை எனக் கூறுவது மிகப் பொருத்தமாகும். நிரந்தரக் கடனுக்குத் தவணையே இல்லாத தால் காலத்தை நீட்டிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஓர் அனு கூலமான மார்க்கெட்டுச் சூழ்நிலையைக் கண்டு அதற்கேற்பக் கடன் பத்திரங்களை வைத்திருப்போரிடம், வேறு புதிய கடன் பத்திரங்களைக் குறைந்த வட்டி விகிதத்தில் ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதே கடன் இனமாற்றுகையில் உள்ள பிரச்சினையாகும். பெயரளவில் அரசாங்கம் பழைய கடன் பத்திரங்களை வாங்கிக்கொண்டு அவற்றிற்கு ஈடாகக் குறைந்த வட்டி விகிதத்தில் புதிய கடன் பத்திரங்களை வெளியிடு கிறது. ஏற்கெனவே வாங்கிய கடனில் ஒரு குறிப்பிட்ட கால வரை யறைக்கு முன்பு திருப்பித் தரக்கூடாது என்ற நிபந்தனை இருந்தால் ஒழிய அரசாங்கம் எப்பொழுது வேண்டுமாயினும் அக்கடனைத் திருப் பித் தரலாம். ஆனாலும், புதிய கடன் பத்திரங்களை எளிதில் விற்க முடியும் என்ற உறுதி இருந்தால் ஒழிய, இம்முறையால் ஏமாற்றமே ஏற்படும்.

கடன் இனமாற்றுகைக்குரிய காலம்

நிதி விவகாரத்தில் நன்னிலையில் உள்ள எல்லா நாடுகளும் கூடு தல் வட்டியிலிருந்து குறைந்த வட்டி விகிதத்திற்கு அரசாங்கக் கடன் களை இனமாற்றுகை சாத்தியமா என்பதையும், எந்த அளவுக்கு வட்டி வீதத்தைக் குறைத்துக் கடன் செலவுகளைக் குறைக்கலாம் என்ப தையும் பரிசீலனை செய்யவேண்டும். இதற்காக மீட்க வேண்டும் என்ற நிபந்தனை இல்லாத அரசாங்கக் கடன் பத்திரங்கள், பிற நாட்டு அர சாங்கங்களின் கடன் பத்திரங்கள், பெரிய நகராண்மைக் கழகங் களின் பத்திரங்கள் முதலானவற்றின் விலை வாசிகளை அவ்வப் பொழுது ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

வட்டி வீதத்தின் குறைவினால் அரசாங்கம் இலாபம் அடைய ஒரு வாய்ப்பு இருந்தால், கடன் இனமாற்றுகை மேற்கொள்ளப்படு கிறது. ஒரு நிரந்தரக் கடனைப் பொறுத்தவரை, அக்கடன் பத்திரத்தை வாங்கிய விலைக்குத் திருப்பித் தரும் வரையில் ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத்தைக் கொடுத்து வர அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால், அசலை எந்தக் குறிப்பிட்ட தேதியிலும் திருப்பித் தரவேண்டுவ தில்லை. நடப்பு வட்டி விகிதம் குறைவதால், அரசாங்கக் கடன் பத்திரங்களைப் போல வேறு புதிய முதலீடுகளுக்கு அனுகூலமான சூழ்நிலையில்லாததால், அரசாங்கக் கடன் பத்திரங்களின் விலை ஏறு கின்றது. எடுத்துக்காட்டாக, வட்டி வீதம் 5 சதவீதத்திலிருந்து

4 சத வீதமாகக் குறையுமாயின், பெயரளவில் நூறு ரூபாய் பெறுமானமுள்ள கடன் பத்திரத்தின் மார்க்கெட்டு விலை குறைந்தது ரூபாய் 125 ஆகவாவது உயரும். இவ்விதச் சூழ்நிலையில் அரசாங்கம் வட்டி வீதத்தை 4 வீதமாகக் குறைப்பதன் மூலம் தன் கடனை இனமாற்றுகை செய்துகொள்ளலாம். கடன் பத்திரங்களுக்குப் பதிலாக ரொக்கமாகப் பெற இடமளிப்பதால் இம்முறை அநீதியாகாது. வட்டி வீதம் $\frac{1}{5}$ பங்குக்குக் குறைவதனுல், அரசாங்கமும் ஓரளவு தன் செலவைக் குறைத்துக்கொள்ள முடியும். புதிய முதலீடுகளுக்கு மார்க்கெட்டு வட்டி வீதத்தைவிட, 4 சதவீத வட்டி கூடுதலாக இருப்பதால், ஏராளமான கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் அரசாங்கத்தைத் தங்கள் கடன்களைத் திருப்பித் தருமாறு கேட்பார்கள் என்று எண்ண இடமில்லை.

விருப்பத்தின் பேரில் கடன் இனமாற்றுகையும் கட்டாயமாகக் கடன் இனமாற்றுகையும்

(Optional and Compulsory Conversion)

கடன் இனமாற்றுகை, விருப்பத்திற்கு ஒத்ததாகவோ அல்லது கட்டாயமாகவோ இருக்கலாம். தன் கடன்காரர்களுக்குக் கடனைத் திருப்பித் தரவேண்டிய தவணை நாளுக்கு முன்பாகவோ, அல்லது தவணை நாளன்ருே, தானுக வலிந்து அரசாங்கம் குறைந்த வட்டிக்குத் தரும் புதிய கடன் வெளியீடுகளை அரசாங்கக் கடன்காரர்கள் ஒப்புக்கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, 1923ல் போர்க் கடன் பத்திரங்களை (வட்டி 5%) வைத்திருப்பவர்களுக்குக் குறைந்த வட்டி வீதத்தில் நீண்ட தவணைக்கு அரசாங்கத்திற்குக் கடனைக் கொடுக்கும் ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது. எப்பொழுதாவது திருப்பித்தரக்கூடிய கடன்களைப் பொறுத்தவரை குறைந்தவட்டி வீதம் தருவதாகவோ, அல்லது கடன் முழுவதையும் திருப்பித் தருவதாகவோ அரசாங்கம் ஒரு கடன் இனமாற்றுகைத் திட்டம் தீட்டின் அது கட்டாயக்கடன் இனமாற்றுகையாகும். பிரிட்டனில் இம்முறை கான்சல்களைப் (Consols) பொறுத்த வரை 1888லும், போர்க் கடனைப் பொறுத்த வரையில் 1932லும் கடைப்பிடிக்கப்பட்டது. 1932ல் போர்க் கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்களுக்கு மீண்டும் கடன் தொகையைப் பெற்றுக்கொள்ளவோ, அல்லது 5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் கடன் பத்திரங்களை மாற்றிக்கொள்ளவோ வாய்ப்பளிக்கப்பட்டது.

கடன் இனமாற்றுகையைப் பற்றிய பொது விதிகள்

பாஸ்டபிள், அல்லிக்ஸ் (Allix) என்ற இருவரும் திருத்திகரமாய்க் கடன் இனமாற்றுகை செய்வதற்குக் கீழ்க்காணும் கொள்கைகளை உரு

வாக்கியுள்ளனர். 1. கடன் பத்திரத்தின் விலை பொதுவாகப் பெய ரளவு விலையைவிடக் கூடுதலாக (above par) இருக்க வேண்டும். அப்பொழுது தான் புதிய குறைந்த வட்டிக்கும், கடன் பத்திரங்களி லிருந்து நடை முறையில் கிடைக்கும் வருமானத்துக்கும் ஒத்திருக்கும்.

2. முதலில் வட்டி வீதம் எவ்வளவு கூடுதலாக இருக்கிறதோ, அவ்வளவிற்குக் கடன் இனமாற்றுகைக்கு நல்ல வாய்ப்பிருக்கிறது. முதலில் கடன் பத்திரங்களைக் குறைந்த வட்டி வீதத்திலும், கழிவுத் தொகைக்கும் வெளியிடுவது கண்டித்தற்குரியது.

3. கடன் பத்திரங்களின் மூலதனத்தை (capital of the debt) அதிகரிக்கக் கூடாது. இன்னும் குறிப்பிட்ட சில ஆண்டு களுக்காவது கடனில் இனமாற்றுகை இராது என்ற உறுதி இருக்க வேண்டும்.

4. வட்டி வீதங்கள் குறைவாகவும், முதலீடு நிதிகள் ஏராள மாகவும் இருக்கும் சுபிட்சக் காலத்தின் தோற்றுவாயே கடன் இன மாற்றுகைக்கு வாய்ப்பான காலமாகும்.

5. கடன் இனமாற்றுகை செய்யவேண்டுமா அல்லது வேண் டாவா என்பதை எண்ணும்பொழுது, வட்டி வீதங்கள், வரி விதிப்பு, விலைவாசிகள் இவற்றின் போக்கு எங்ஙனம் இருக்கும் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். பல்வேறு வட்டி வீதங்களில் வெளி யிடப்பட்ட பல வகைக் கடன்களையும் ஒரே வட்டி வீதத்துடன் கூடிய ஒரே கடனுக மாற்றி அமைப்பது நல்லது. நிலையாக்காத கடனை நிலையாக்கிய கடனுக மாற்றுவதால் ஏற்படும் நன்மையையும், ஏராள மாக நிலையாக்காத கடன்கள் இருப்பதன் தீமையையும் முன்னரே கண்டோம். பாங்கர்கள், பங்குதாரர்கள், வழக்கறிஞர்கள், இவர் களின் கட்சிக்காரர்கள் இப்பேரங்களில் எல்லாம் முக்கியமான பங்கு வகிப்பதால், கடன் இன மாற்றுகைகளை மேற்கொள்ளும்போது அர சாங்கங்கள் ஒரு சிறிய கமிஷனை அவர்களுக்குக் கொடுத்தல் நல்லது.

வெற்றிகரமான கடன் இன மாற்றுகைக்கான நிபந்தனைகள் (Conditions of Succesful Conversion)

அரசாங்கத்தின் நாணயம் மிக உயர்ந்த நிலையில் இருக்க வேண்டும். கடன் இனமாற்றுகை செய்தற்கு இஃது இன்றியமை யாதது. காலாகாலத்தில் வட்டியைச் செலுத்துவதும், கடன் மீட்சிக்குப் போதிய வகை செய்வதும், சிறந்த நிருவாகமும் கடன் இனமாற்றுகைக்குப் பெரிதும் துணை செய்யும்.

கடன் இனமாற்றுகையும் அரசாங்கக் கடன் பளுவும்

கடன் இனமாற்றுகை என்ருல் கடனைத் திருப்பிக் கொடுப்பது என்பதன்று. பழைய கடன்களைப் புதிய கடன்களுக்குப் பரிவர்த்தனை

செய்வதே கடன் இனமாற்றுகை ஆகும். புதிய கடன்களின்மீது கொடுக்க வேண்டிய வட்டி பழைய கடன்களின்பேரில் உள்ள வட்டியைவிடக் குறைவாய் இருந்தால், கடனின் உடனடியான பளு குறையும். கடந்த காலத்தில் அரசாங்கக் கடன் பளுவைக் குறைப்பதற்குக் கடன் இனமாற்றுகைகள் பெருந்துணை செய்தன என்று பலரும் எழுதுவது பிழையாகும். நீண்ட காலங்களில் வட்டி வீதத்தில் மிகக் குறைவான மாறுதல்கள் ஏற்படுவதால், கடன் இனமாற்றுகைகள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தனவாக இல்லை. பிரிட்டனில் 19ஆம் நூற்றுண்டில் கடன் இனமாற்றுகையால் சிறு நிவாரணமே கிடைத்தது. அரசாங்க முயற்சிக்கு ஈடான சேமிப்பு 1988-89ல் கடன் கால நீட்டிப்பால் ஏற்பட்டது. அதே போல, கடந்த முதல் உலகப் போருக்குப் பின்பு 1932 வரையிலும் கடன் இனமாற்றுகையால் வட்டிச் செலவு குறைந்தது மிகவும் குறைவு. பொதுவாகக் கூறுமிடத்து இம்முறையைக் கையாளுவதன் மூலம் அரசாங்கக் கடன்களின் பளுவை மிகவும் விரைவாகக் குறைக்கலாம் என்று எதிர்பார்ப்பதில் பயனில்லை.

கடன் இனமாற்றுகையும் வருவாயும்

ஆண்டுதோறும் கடன் இனமாற்றுகையின் மூலம் வட்டிச் செலவு குறைவதால் நிகரச் சேமிப்பு ஒன்றும் ஏற்படாது. அதனால், மொத்தத்தில் சேமிப்பு ஏற்படுகிறது எனலாம். மொத்தச் சேமிப்பிலிருந்து வருவாயில் ஏற்படும் இழப்பைக் கழிக்க வேண்டும். ஏனெனில், அரசாங்கக் கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் ‘ வட்டியாகக் ’ குறைவான வருமானத்தைப் பெற்றால், அவர்கள் வருமான வரி, மேல் வரி (super tax), இன்னும் பிற வரிகளின் மூலமாகக் கொடுக்கும் வருவாய் குறையும். மேலும், மரண வரிகளின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம் கூடுவதற்குக் காரணம் வட்டி வீதம் குறைவதேயொழிய இனமாற்றுகையன்று.

கடன் இனமாற்றுகையும் கடன்களைத் திருப்பிக் கொடுத்தலும்

இறுதியாகக் கடனைத் திருப்பித் தருவதையும், கடன் இனமாற்றுகையையும் நினைத்துப் பார்க்குங்கால் அரசாங்கக் கடனை இனமாற்றுகையில் உள்ள நிதிச் சிக்கல் புலனாகிறது. கடனைத் திருப்பித் தருவதற்குப் பதிலி (substitute) அன்று கடன் இனமாற்றுகை. கடன் இனமாற்றுகையைக் கடனைத் திருப்பித் தருதற்கு ஒரு சிறு துணையாகக் கருதலாம். அதன் வலிமை, கடன் இனமாற்றுகை செய்யும் அதே காலத்தில் கடனைத் திருப்பித் தருதற்கு முழுமூச்சுடன் அரசாங்கம் முயல்வதை ஓரளவு பொறுத்திருக்கிறது. ஆயினும், பேராசிரியர் பாஸ்டபிள் கூறியாங்கு, ‘‘எங்கெங்குக் கடன்

இனமாற்றுகை சாத்தியமோ, அங்கங்கெல்லாம் நிதியமைச்சருக்கு ஒரு கடமை இருக்கிறது. நிதியமைச்சர் வரி கொடுப்போரின் காரியக்காரர் ஆனதால், அவர்களுடைய நன்மையை எண்ணிப் பார்த்து, சிறந்த முறையில் கடன் இனமாற்றுகைக்கான திட்டத்தைச் செயற்படுத்தவேண்டும். இக்கருத்து, கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்களுக்குப் பிடிக்காது. அவர்கள் எண்ணிக்கையில் ஏராளமானவர்களாய் இருந்தால், கடன் இனமாற்றுகைக்கான எந்தத் திட்டத்தையும் பலமாக எதிர்க்கக்கூடும் என்று எதிர்பார்க்கலாம்.

கடன் இனமாற்றுகையும் கால நீட்டிப்பும்

கடன் இனமாற்றுகையும் கால நீட்டிப்பும் ஒன்றை ஒன்று ஒத்துள்ளன. இரண்டு முறைகளிலும், பழைய கடன் பத்திரங்களுக்குப் பதில் புதிய பத்திரங்கள் கொடுக்கப்படுவதுடன், வட்டி விகிதத்திலும் மாறுதல்கள் செய்யப்படலாம். சில சமயம் கடனைப்பற்றிய வேறு சில நிபந்தனை களிலும் மாறுதல்கள் இருக்கலாம். மிகவும் அனுகூலமான சூழ்நிலை யில் "கால நீட்டிப்பு வெளியீட்டால்" பழைய கடன் பத்திரங்களைக் காட்டிலும், புதிய கடன் பத்திரங்கள் குறைந்த வட்டி வீதம் உடையனவாய் இருக்கலாம். ஆயினும், பெரும்பாலும் கூடுதலான வட்டி வீதம் கொடுப்பதே காணப்படுகிறது. ஏனெனில், கடனாளியான அரசாங்கம் பணத்திற்கு மிகவும் முடைப்பட்ட சூழ்நிலையிலேயே கால நீட்டிப்புச் செய்யவேண்டி இருப்பதால், பண மார்க்கெட்டில் நல்ல பேரம் செய்ய முடிவதில்லை.

மூலதன வரி (The Capital Levy)

அடிப்படைப் பிரச்சினை

சுமார் 30 ஆண்டுகட்கு முன்னர்ப் பேராசிரியர் பிகு (Professor Pigou) பின் வருமாறு எழுதினர்: "ஆண்டுதோறும் கடனில்-அசல் தொகையில் ஒரு சிறு பகுதியைக் கொடுத்து 50 அல்லது 100 ஆண்டுகளில் கடன் முழுவதையும் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று வைதிக முறை விரும்பியது. பிரத்தியேகமான வரி விதித்து அசலில் பெரும்பகுதியையும், கூடுமானல் அசல் முழுவதையுமே ஒரு தனி முயற்சியால் கொடுத்துவிடவேண்டும் என்று சிலர்விரும்புகின்றனர். இதுதான் அடிப்படைப் பிரச்சினை. பிரத்தியேக வரியின் வடிவம், முறை இவற்றைப்பற்றிய பிரச்சினைகள் எல்லாம் அவ்வளவு முக்கியமானவை அல்ல. கடனில் பெரும்பகுதியை ஒரு பிரத்தியேக வரி விதித்து ஒரே மூச்சில் கொடுத்துவிடுவதும் எதிர்காலத்தில் வட்டி கொடுக்கவேண்டியதைத் தவிர்ப்பதும், தேசிய நலனுக்கு உகந்தனவா? அல்லது படிப்படியாகக் கடனைத் திருப்பிக்கொடுத்து பல ஆண்டுகட்கு ஏராளமான வட்டித் தொகைகளைக் கொடுப்பது

தேசிய நலனுக்கு உகந்ததா ? ரிக்கார்டோ (Ricordo), மில் என்னும் இருவரும் அரசாங்கங்களைக் கடனினின்றும் விடுவிக்கும் கருவியாக மூலதன வரியைக் கருதினர். முன்னவரின் கருத்து இம்முறையை வரவேற்றது. பின்னவர் இம்முறையைச் சாத்தியமானால் ஏற்றுக்கொள்ள உடன்பட்டார். முதல் உலகப் போரின் போதும், அதன் பின்பும், பல நாடுகளில் இந்த யோசனை மீண்டும் வெளியிடப்பட்டது. சில நாடுகளில் இதற்கான சட்டமும் இயற்றப்பட்டது. ஏறக்குறைய இதே மாதிரி ஒரு யோசனை ஸ்விட்ஸர்லாந்தின் சட்டசபையால் பொது மக்களின் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது பெரும்பான்மையோரின் வாக்குகளால் நிராகரிக்கப்பட்டது.

பெருவாரியான அளவில் மூலதனத்தின்மேல் ஒரு நாடும் இதுகாறும் வரி விதித்ததில்லை ; ஒரு வேளை விதிக்கப்படாமலே இருக்கலாம். இதுதான் பகுத்தறிவுக்கு ஒத்த வேண்டுமென்றே விதிக்கப்பட்டமுறை. மனிதனுடைய ஆழ்ந்த உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு அவனுடைய பண ஆசையின்மீது மோதுதலால் பலரும் இவ்வரியை வெறுக்கிறார்கள். கீன்ஸ் பிரபு எழுதியவாறு, ''நோயாளி அறுவை மருத்துவத்திற்கான அவசியத்தை உணர்ந்து ஏற்றுக்கொண்டால் ஒழிய, அவன் அறுவை மருத்துவத்திற்கு உடன்படமாட்டான்.''

மூலதன வரிக்கான காரணங்கள்

மதிப்பிற்குரிய பலர் இவ்விரு வகை உபாயங்களையும் நிராகரிக்கின்றனர் ; செலாவணியின் மதிப்பிறக்கத்தையும், மூலதன வரியையும் கண்டிக்கின்றனர். அதற்குக் காரணமாக அவர்கள் கூறுவது, இவை ஒப்பந்தத்தின் புனிதத் தன்மையை மீறுகின்றன என்பதேயாகும். இதனால், ஊன்றிய நலமிகளின் நலன்களும் பாதிக்கப்படுகின்றன. ஏனெனில், சட்ட முறைப் பணத்தின் மதிப்பில் மாறுதலைச் செய்வதோ, உடைமைமீது வரி விதிப்புச் செய்வதோ, சட்டத்திற்குப் புறம்பானவை என்றோ, அல்லது அவற்றுக்கு முன் மாதிரியே இல்லை என்றோ கூற முடியாது. ஆயினும், அவர்கள் சமூகக் கொள்கைகளில் மிகப் பெரிதான ஒன்றைப் புறக்கணிப்பதன் மூலம், அதாவது, தனியாரின் ஒப்பந்தத்தை நிராகரிக்கும் உரிமைக்கும் அரசாங்கம் ஊன்றிய நலமிகளைப் கட்டுப்பாடு செய்யும் உரிமைக்கும் இடையில் வேற்றுமை கற்பிக்காததால், தாங்கள் பேணிப் பாதுகாக்க முயலும் தனியுடைமைக்குப் பரம விரோதிகள் ஆகின்றனர். இடையீடின்றி வட்டி வாங்குதலின் அதிகார எல்லைகள் மிகப் பெரியன. பல தலைமுறைகளுக்கு ஊன்றிய நலமிகள் யாதொரு குறைபாடுமின்றி வளர்ந்து வருவார்களானால், மக்களில் பாதிப்பேர் மற்றொரு பாதிப்பேருக்கு அடிமையாய் இருக்க வேண்டிய நிலை ஏற்படும். போர்க்காலத்தில் வரி விதிப்பதைவிடக் கடன் வாங்குவது அரசாங்

கத்திற்கு எளிது என்பதனுலேயே, கடன் பத்திரம் வைத்திருப்பவருக்கு வரி கொடுப்போரை நிரந்தர அடிமை ஆக்கக்கூடாது. இது போன்ற விஷயங்களில் அரசாங்கத்திற்கும் தனியாருக்கும் யாதொரு வேறுபாடும் இல்லை என வற்புறுத்துவோரின் கூற்றை ஒப்புக்கொண்டால், தனியார் சமுதாயம் (individualist society) தொடர்ந்து நீடிக்க முடியாது. ஏனெனில், தனியார் சமுதாயம் தொடர்ந்து நீடிப்பது அதன் மிதப் போக்கைப் பொறுத்ததாகும்.

''வாணிகத் துறையில் உறுதியையும் பாதுகாப்பையும் வளர்க்கும் விதத்தில் சாதாரண விவகாரங்களில் அரசாங்கம் நடத்தவேண்டுவதன் அவசியத்தை ஒதுக்கித் தள்ள முடியாது. அரசாங்க நடவடிக்கையைப் பொறுத்த வரை, அது செய்யும் **ஒவ்வொரு காரியத்தையும்** அதனுல் ஏற்படும் பலாபலன்களைப் பொறுத்துச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். இறப்பு வரிகள், வருமான வரி, நிலவுரிமை முறை (land tenure), உரிமம் வழங்குதல், வேட்டையைப் பற்றிய சட்டங்கள், படைமானிய உரிமைகள் (feudal rights), மத அமைப்புகள் (church establishment) அடிமைத்தனம் ஆகிய இவற்றில் எல்லாம் மாறுதல் செய்ய முயன்ற போது ஒப்பந்தத்தின் முழுத் தன்மையை விரும்புபவர்கள் இவற்றிற்குக் கண்டனம் தெரிவித்திருந்தார்கள். ஆகவே, ஒப்பந்தங்களின் பூரணத் தன்மையை விரும்புவோர்களே (absolutists of contract) புரட்சியின் பெற்றோர்கள் ஆவார்கள். —(கீன்ஸ் பிரபு).

''இப்பிரத்தியேக வரி அநீதியானதா? செல்வர்களைக் கொள்ளையடிக்கும் முறையில் போர்க்கடன் பத்திரங்களை வாங்கியோருக்குக் கொடுத்த வாக்குறுதியை இவ்வரி விதிப்பதால் மீறுகின்ருேமா? இதனுல் வாங்கிய கடனை ஏமாற்றுகின்ருேமா?'' என்ருல், இக் குற்றச்சாட்டுகள் அனைத்திற்கும் ஆதாரம் இல்லை. மூலதன வரி விதிக்கு முகத்தான் செல்வத்தின்மீது வரி விதிப்பது, மூலதனத்திலிருந்து கிடைக்கும்வருமானத்தின்மேல் வரி விதிப்பதைக்காட்டிலும் எவ்வகையிலும்கொள்ளையடிப்பதாகாது. ஆயினும், போர்க்கடன் பத்திரங்கள் வைத்திருப்போர்மீது மட்டும் இவ்வரி விதிக்கப்பட்டால் அரசாங்கத்திற்கு எந்த நம்பிக்கைமீது பணம் கடனுகக் கொடுக்கப்பட்டதோ அதை அரசாங்கம் மீறுவதாகும்; அந்த அளவிற்குக் கடனை ஏமாற்றியதுமாகும். ஆனுல், ஈட்டப்பட்ட எல்லாச் செல்வத்தின் பேரிலும் வரி விதிக்கப்பட்டால் அது இக்குற்றச்சாட்டுக்கு ஆளாகாது.

வரி கொடுக்கும் திறன் என்ற கொள்கையின் ஒரு நெருக்கடியான காலத்திற்கு நடைமுறையில் கடைப்பிடிப்பதேபிரத்தியேக வரிவிதிப்பு எனலாம். சிறு மூலதனங்களுக்கு வரியிலிருந்து விலக்களிக்கப்படும். மொத்தத் தொகைக்கு ஏற்றவாறு வரி வீதம் படித்தரமாக இருக்கும்.

ஆகவே, சொத்தின் பெறுமானம் அதிகமாக இருப்பின், கூடுதலான அளவு வரியாகத் தண்டப்படும். வருமான வரி விதிப்பில் அடங்கிய கொள்கையான செலவும் திறனும் மூலதன வரியிலும் காணக்கிடக்கிறது. மூலதனத்தின்மீது வரி விதிக்கும் கொள்கையும், அதன் நீதியும் கட்டாய இராணுவச் சேவையைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. நாட்டிற்கு அபாயம் நேரிட்டபொழுது சிலர் (எல்லோருமல்லர் என்பதைக் கவனிக்க) தங்கள் மூலதனத்தை மட்டுமன்றி, உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் கட்டாய இராணுவச் சேவை நியாயமானதென வாதிடப்படுகிறது. ஆகவே, போர்க்காலத்தில் தங்கள் வீட்டில் பத்திரமாக இருந்துகொண்டு, தங்கள் வருவாயையும் அனுபவித்துக்கொண்டிருந்தவர்களை இப்பொழுது நாட்டை நிதி அழிவிலிருந்து காப்பாற்றுதற்காக ஓரளவு தியாகத்தைச் செய்யும்படி கோருவது ஒப்பு நோக்கில், மிக அற்பமானது. பிலிப் ஸ்நோடன் கூறியாங்கு, ''போர்க்களத்திற்குச் சென்று காயமடைந்து தங்கள் உயிரையும் இழந்தவர்களின் தியாகத்தின் மூலமே தாங்கள் இப்பொழுது செல்வத்தைத் துய்க்க முடிகிறது என்பதைச் செல்வம், உடைமை இவற்றிற்கு உரியவர் மறுக்கமாட்டார்கள். பிறர் துன்பங்கள் தியாகங்கள் இவற்றின் விளைவால், போருக்குப் போகாமல் வீட்டிலிருந்த பலர் செல்வராயினர்.''

இவ்வுவமை பொருத்தமற்றதெனச் சிலர் மறுக்கிறார்கள். ஏனெனில், இராணுவச் சேவைக்கு வலுக்கட்டாயமாகக் கொண்டு செல்லப்பட்டவர்களின் உடைமைக்கு இப்பிரத்தியேக வரியிலிருந்து விலக்கில்லை. இக்குற்றச்சாட்டுக்கு ஜெ. ஏ. ஹாப்ஸன் (J. A. Hobson) பின் வருமாறு பதில் அளிக்கிறார்: ''இஃது உண்மைப் பிரச்சினையிலிருந்து தப்ப முயலும் தந்திரமாகும். பெரிய தேசிய நெருக்கடிக் காலத்தில் (போர்க்களத்தில்) அரசாங்கம் தன் குடிமக்களை அவர்களால் எவ்வெத்துறையில் முடியுமோ அவ்வத்துறையில் இயன்றதை நாட்டுக்காகக் கொடுத்து நாட்டைப் பாதுகாக்குமாறு கோருகிறது. போரிடவும், நிதி கொடுத்து உதவவும் ஆற்றலுள்ளவர்கள் இரு துறைகளிலும் காணிக்கை செலுத்தவேண்டும். போரிடுதற்கு மட்டும் ஆற்றல் உள்ளவர்கள், வரி கொடாமல் போர் மட்டும் செய்தல் போதுமானது. நிதி கொடுக்க மட்டும் ஆற்றல் உள்ளவர்கள் போரில் கலந்துகொள்ளாமலே நிதி கொடுத்து உதவ வேண்டும். பெரும்பாலும் நேரிடையாகச் சேவை செய்து தேசிய நலனைப் பேணுபவர்கள் இளைஞர்களே. அவர்கள் எல்லோரும் யாதொரு சொத்தையும் சேர்த்து வைக்க முடிவதில்லை. அல்லது சேர்த்தாலும், சிறிதளவு சொத்தைத்தான் சேர்த்து வைக்க முடிகிறது. வயதானவர்கள் உடைமைக்காரர்களாய் இருந்து நேரிடையாகச் சேவை செய்யும் ஆற்றலையும் பெற்றிருந்தால், அரசாங்கத்திற்கு அவர்கள் உடலின்

மீது மட்டுமன்றி, பணத்தின்மீதும் பாத்தியதை உண்டு.''யாதாயினும் ஒரு பெரிய கடுமையான வரியைவிட மூலதனத்தின்மேல் விதிக்கப் படும் வரி அநீதியானதெனக் கூற முடியாது. சுமார் 150 ஆண்டு களுக்கு வரியைக் கொடுத்து, இப்போதைய கடன் கழிவு நிதி முறை கள் மூலம் கடனைத் தீர்ப்பதைவிட, ஒரே ஓர் ஆண்டு மூலதன வரியின் மூலம் கடனைத் தீர்த்துவிடுதல் எவ்வளவோ மேலானது. அடுத்துவரும் ஆண்டுகளில் வரி கொடுக்கவேண்டி இராது. ஆதலால், வேலையின்மை குறையும் ; பாமர மக்களின் நிலை உயரும். இவ்வரி யால் ஏற்படும் இழப்பைக்காட்டிலும் செல்வத்திலும் உற்பத்தி யிலும் ஏற்படும் அதிகரிப்புக் கூடுதலானது. மேலும், வளர்வீத வரி முறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் வரி கொடுப்போர் சம அளவு தியாகம் செய்யும்படி நேரிடும். இப்பொழுது, இறப்பு வரி, உபரி வரி இவற்றின் விஸ்தரிப்பாக மூலதனத்தின்மேல் விதிக்கப்படும் வரியைக் கொள்ளலாம். இவ்வரிகளை மக்கள் பொறுத்துக்கொள்வதன் காரணம் செல்வர்களுக்கு இவ்வரியைக் கொடுக்கும் திறன் இருக்கிறது என் பதே. நடைமுறையில் மூலதன வரி விதித்தல் சாத்தியம். இதே அளவு வருவாய் தரும் வேறு எந்தப் புதிய வரியைக்காட்டிலும் இவ் வரிக்கு **தனியாக** ஓர் ஆட்சேபமும் செய்வதற்கில்லை. நாட்டு மக்களின் தீர்ப்பில் இப்போதைய முயற்சிகளுக்குக் குந்தகம் ஏற்படும் பொழுது கடந்த காலச் சேமிப்புகளுக்கும், இக்காலத்து உழைப்பின் பயன்களுக்கும் இடையே வரிப்பளுவை இவ்வரி விதிப்பினாலேயே சமப்படுத்த முடியும்.

மூலதனத்தின்மேல் விதிக்கப்படும் வரியைத் தீர்மானிக்கும் பொழுது வேறு எந்த வரி முறைக்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்றும் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டும். தேசியக் கடனைக் குறைப்பதற்காக மூலதனத்தின்மேல் விதிக்கப்படும் வரியை எதிர்ப்பவர்கள்வேறுமாற்று யோசனை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளவர்கள். இது வரை அவர் கள் அவ்விதமான மாற்று யோசனையைத் தெரிவிக்கத்தான் அவ்வித மாற்றுத் திட்டம் இல்லாததே. நீண்டகாலம் ஊன்றிய நலமிகளுக்குச் சமுதாயத்தில் நிச்சயம் சுறுசுறுப்பாக வேலை செய்பவர் அடிபணிய மறுப்பார்கள் என்பதை அனுபவம் காட்டுகிறது. மூலதனத்தின்மேல் வரி விதித்துக் கடனைத் தீர்க்க வகை செய்யாவிடில், அது பிறிதொரு வகையில் செலாவணியின் மதிப்பை இறக்குவதன் மூலம் நேரிடும்.

சில எதிரிடை வாதங்களின் பரிசீலனை

முதலின்மேல் விதிக்கப்படும் வரி, சேகரிப்பதற்கான அக்கறையை அழிக்கும் எனச் சிலர் கருதுகின்றனர். இதன் மூலமாக வாணிகத் திற்கும் தொழிலுக்கும் கிடைக்கக்கூடிய முதலின் ஊற்றுக் கண்கள்

அடைபடும். மூலதனத்தின் மேல் வரி ஒரே ஒரு தடவை விதிக்கப் பட்டால், அதுவும் சேமித்து வைக்கப்பட்ட மூலதனத்தின்மேல் வரி விதித்தால், அஃது எதிர்காலத்தில் சேமிப்பதற்கான உற்சாகத்தைக் குறைக்காது என்பது இவ்வாதத்திற்கு விடையாகும். மேலும், மூலதனத்தின்மேல் வரி விதிப்பதைக்காட்டிலும், பணத்தின் மதிப்பை மிகவும் இறக்கிக் கடன் பத்திரங்களின் மதிப்பைப் பெரிய அளவுக்குக் குறைத்துக் கடன்களை நிராகரிப்பதன் மூலம் பல தீய விளைவுகள் ஏற்படுகின்றன. மூலதனத்தின்மேல் வரி விதிப்பதன் நோக்கம், வாணிபத்திற்கும் தொழிலுக்கும் தாங்க முடியாத வருமான வரிப்பளு வினால் கஷ்டப்படுவோருக்கும் நிவாரணம் அளிப்பதே.

சேமித்து வைத்த செல்வத்திற்கு மட்டும் வரிவிதிப்பதும், அதே சமயம்உத்தியோகஸ்தர்களால் ஈட்டப்படும் பெரு வருமானங்களுக்கும் இப்பிரத்தியேக வரியினின்று விலக்களிப்பதும் நீதியாகாது. பேரா சிரியர் பிகு இவ்வநீதியை உணர்ந்து பருப்பொருளாகிய மூலதனத் தின்மேலும் (material capital) சூட்சுமப் பொருளான மூலதனத்தை (immaterial capital) ஈட்டும் திறத்தின் பேரிலும் வரி விதிக்க வேண் டும் எனக் கூறுகிறார். ஆயினும், ‘‘வரி வசூலிக்கும் உத்தியோகஸ் தர்களை இச்சூட்சும மூலதனத்தின் பேரில் மட்டும் வரி விதிக்கும்படி கூறுதல் அறிவுடைமையாகாது. இப்பொழுது ஒருவன் அவ்வளவு வரு மானத்தை ஈட்டும் திறமை பெற்றிருக்கிறான் என்பதன் மதிப்பு அவனு டைய ஜீவிய காலத்தைப் பொறுத்திருப்பதால், ஒரே துறையில் வேலை பார்க்கும் (ஆனால் பல்வேறுபட்ட வயதையுடைய) பலருக்கும் அது பல்வேறு விதமாக இருக்கும். உத்தியோகத்தின் உயர்வுக்குச் சாத் தியக் கூறு உண்டா என்பதையும் நினைவில் இருத்த வேண்டும். இப் பொழுது வருமானம் ஈட்டும் திறத்தோடு, எதிர்காலத்தில் வருமானம் ஈட்டும் திறத்தைப் பெறுவதையும் பொறுத்திருக்கிறதாதலால், இது நடைமுறைக்கு ஒத்து வாராது. இப்பிரச்சினைக்கு இன்னொரு தீர்வு மூலதனத்தின்மேல் ஒரு வரியுடன், ஒருவர் ஈட்டிய வருமானத்தின்மீது ஒரு வரியை விதிப்பதாகும். ஆனால், இம்முறையை ஒரு ஜனநாயக நாடு ஏற்றுக்கொள்ளாது. ஏனெனில், அதன் நோக்கம் முதலீட்டி லிருந்து வரும் வருமானத்தைக்காட்டிலும் தானே ஈட்டிய வருமானத் துக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதாகும். ஆகையால், தொடர்ந்து பல ஆண்டுகளுக்கு வரி விதிப்பதைக்காட்டிலும் ஒரு பிரத்தியேக வரியை விதிப்பது நெறியாக மாட்டாது. நடைமுறை யில் அநீதி பயப்பதாக முடியும்.’’

உத்தியோகஸ்தர்களின்மீது பிரத்தியேக வரி விதிப்பதற்கு இன் னோர் ஆட்சேபமும் உள்ளது. பல வாணிபங்களின் மூலதன மதிப் பீடு அதன் உடைமைக்காரர்களின் தனிப்பட்ட தன்மையைப் பொறுத்

திருந்தாலும், அவ்வாணிபங்களின் பெரும்பகுதி மதிப்பும் பருப்பொருள் வடிவங்களில் அடங்கியுள்ளது. அவ்வாணிபத்தை நிருவாகம் செய்யும் அதிகாரிகளிடமிருந்து வேருக அவ்வாணிபத்திற்கு நல்ல மதிப்பு (goodwill) மக்களிடை இருப்பின், அதுவே ஓர் ஆஸ்தியாகும். ஒரே அளவு வியாபாரத்திலிருந்து வரும் வருமானத்தைக் காட்டிலும், உத்தியோகஸ்தன் ஈட்டும் வருமானத்தின் மதிப்பு மிகக் குறைவாய்இருப்பதற்குக் காரணம், பின்னையது ஒரு தனிப்பட்டவரின் திறமை, ஆரோக்கியம், தனிப்பட்ட சிரத்தை என்னும் பல நிபந்தனைகளைப் பொறுத்ததாக இருப்பதே. ஆகவே, சூட்சும மூலதனத்திலிருந்து பருப்பொருள் மூலதனத்துக்கு ஈடாகக் கூடுதலான வருமான வரிவிதிப்பதன் மூலம் வருமானத்தைப் பெற நினைப்பது அறிவுக்கு ஒவ்வாது.

இத்திட்டத்தை நடைமுறையில் நிறைவேற்றுவதிலும் இன்னல்கள் உள. இவ்வரி மூலம் கிடைக்கும் தொகை, எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு ஈடாக இருக்குமா என்பதும் ஒரு கேள்வி. எந்த விதமான வரி விதிப்பு முறையும் எக்காலமும் நேர்மையாக இருக்க முடியாது எனவும், மூலதனத்தின்மேல் விதிக்கப்படும் வரி ஒரு பிரத்தியேக நெருக்கடியான காலத்தில் விதிக்கப்படும் வரி எனவும், இவ்வித வரி முறைக்கு மூலதனந்தான் செல்வத்தில் சரியான வகை எனவும் ஹாப்ஸன் வாதிடுகிருர்.

சிக்கனம் செய்துசேமித்து முதலீடும் செய்தவர்களின்வருமானத்தின் மீது வரிவிதிக்கப்படுவதைக் கண்டு சிலர் அதிர்ச்சி அடைகின்றனர். இவர்கள் சேமித்ததாலேயே போருக்குக் கடனுகக் கொடுக்க முடிந்ததென்றும், இவர்கள் முதலீடு செய்ததாலேயே எதிர்காலத்தில் தேசியத் தொழில்களின் உற்பத்திக்கு ஆக்கம் தேடினர் என்றும், ஊதாரியாகச் செலவழித்தவர்கள் இவ்வரி கொடாது தப்பித்துக்கொள்கிருர்கள் என்றும் கூறப்படுகிறது. இவ்வரியால் சிக்கனத்திற்கும் கடின உழைப்பிற்கும் ஊறு ஏற்படுகிறது என்பது உண்மையே. ஆனல், இதே ஆட்சேபத்தை வருமான வரிக்கு எதிராகவும் கூறலாம். கடின உழைப்பு, திறமை, இவற்றினல் ஒருவன் தன் வருமானத்தையும், சேமிப்பையும் பெருக்கினல், அவன் வருமான வரியாகக் கொடுக்கும் தொகையும் பெருகுகிறது. சோம்பேறிகளாகவும் தம் வேலையில் அக்கறையில்லாதும் இருப்போருக்கும் வருமானம் குறைவதோடு அவர்கள் வருமான வரியினின்றும் தப்பித்துக்கொள்ளவும் செய்கின்றனர். ஆகவே, கடின உழைப்பு இதனல் ஒறுக்கப்படுகிறதெனவும் சோம்பேறித்தனத்திற்கு ஆதரவு அளிக்கப்படுகிறதெனவும் கூறப்படுகிறது. ஆனல், இந்நிலையில் நாம் யாது செய்ய முடியும்? இல்லாத வருமானத்தின்மீது வரி விதிக்க முடியாது. நாம் வரி விதிப்பதற்காக நாகரிகமடைந்த மனிதனைக் கட்டாயப்படுத்தி வருமானத்தைத்

தேடும்படி செய்யவும் முடியாது. ஆனால், சிலர் கருநிறத்தவர்களுக்கு உழைப்பைக் கற்பிப்பதற்காக இக்கட்டாயக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தயாராய் இருக்கின்றனர். ஊக்கம் நிறைந்தோர்க் கும், சிக்கனமாக இருப்போருக்கும், ஊதாரிகளுக்கும், வேலையில் அக்கறை இல்லாதிருப்போருக்கும் வரி விதிப்பிலிருந்து தப்புவது வருத்தம் தருமாயினும், எந்த வரி முறையிலும் இஃது இன்றியமை யாததே.

பளுவான வரி விதிப்பினால் உற்பத்தி குறையும் என்பதையும், அதனால் கடின உழைப்பிற்கும் சிக்கனத்திற்கும் பாதகம் ஏற்படும் என்பதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆயினும், பிரத்தியேக மாக மூலதனத்தின்மேல் விதிக்கப்பட்ட வளர்வீத வரியினால் இம்மாதிரி யான கேடொன்றும் ஏற்படாது. இதற்குக் காரணங்கள் இரண்டு : முதலாவது, இவ்வளர்வீத வரி முறை பாதிக்கும் செல்வத்தின் பெரும் பகுதியும் வேண்டுமென்றே சிக்கனத்தால் சேமித்து வைக்கப்பட்ட தன்று. உடைமைக்காரர்கள் தங்களுக்குத் தகுதியானதென நினைக் கும் செலவு வரம்பிற்கு வருமானம் மேற்பட்டிருப்பதாலேயே இச் சேமிப்பு ஏற்படுகிறது.

தானே ஈட்டிய செல்வத்திற்கு வரி விதிப்பில் சலுகை அளிப்பது அநீதியானதெனப் பேராசிரியர் ஸ்காட்டு (Professor Scott) கருது கிறார். மூலதனத்தின்மேல் வரியில்லையாயின், போர்ச்செலவின் ஒரு பகுதியும் தானே ஈட்டிய வருமானங்களின்மீது கூடுதலான வருமான வரி விதிப்பதன் மூலம் ஈடு செய்ய வேண்டியிருக்கும். இதுவும் முறை யாகாது. போர்க்காலத்தில் போருக்கான செலவு அனைத்தும் வரி மூலமாகவே பெறப்பட்டிருந்தால், இவ்வருமானங்களை ஈட்டிய அனை வரும் வரியாகக் கொடுத்த தொகையைக்காட்டிலும் அதிகமான வரியையும் உபரி வரியையும் கொடுத்திருப்பார்கள். மூலதனத்தின்மேல் வரி விதிப்பது காரணமாக இவர்கள் இவ்வரிகள் மூலம் தாங்கள் செலுத்த வேண்டிய பங்கிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். தாம் திரட்டிய செல்வத்திற்கு அல்லது உழைப்பிலா வருமானத்திற்கு (unearned income) வரி கொடுக்கும் திறன் அதிகமாய் இருக்கிறது என்பது அநீதியானதா? இப்பொழுது உள்ள வருமான வரி குறைந்த வருமானங்களுக்கு இவ்வேற்றுமையை ஒப்புக்கொள்கிறது. பின்னர்ச் சொத்திலிருந்துகிடைக்கும் வருமானங்களின்மீதுகூடுதலான வரி விதிப்பது அநீதியானதா? நடப்பு வரி விதிப்பினாலேயே போர்ச் செலவு முழுதையும் சரிக்கட்டியிருந்தால் உழைப்பிலிருந்து கிடைக்கும் வருமானத்தின்மீது விதிக்கப்படும் வருமான வரி வீதத்திற்கும் சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தின்மீது விதிக்கப்படும் வருமான வரி வீதத்திற்கும் அநீதியான வேறுபாடுகள் கற்பிக்கப்படும். இதற்குக் காரணங்கள் இரண்டு: முதலாவது, தானே உழைத்துத்

தேடிய வருமானத்திற்குப் பக்கத்துணையாக உழைப்பிலா வருமானம் இருப்பதால் அதன்பேரில் கூடுதல் வரி விதித்தல் தகும். இரண்டாவது, உழைப்பிலா வருமானத்தின்மீது கூடுதல் வரி விதிப்பதால் சேமிப்புக்கும் முதலீட்டிற்கும் ஊறு ஏற்படுவதைக்காட்டிலும் அதிகமாகவே, தானே உழைத்துத் தேடிய வருமானத்தின்மீது கூடுதல் வரி விதித்தால் ஊறு ஏற்படும். வேறு விதமாகக் கூறின், உழைத்துத் தேடிய செல்வத்தைக்காட்டிலும் உழைப்பிலாச் செல்வம் அதிகமாக வரி கொடுக்கும் திறனைப் பெற்றிருக்கிறது என்பதே. வரி கொடுப்போருக்கும், எதிர்கால உற்பத்திக்கும், வருமானத்துக்கும், குறைந்த அளவு ஊறு ஏற்படும் வகையில் வருமானங்களைத் தேடுவதற்காக இவ்வேறுபாட்டைக் கற்பிப்பது நியாயமானதே. சமமல்லாத பொருள்களைச் சமமாக நடத்த முனைவது சமத்துவமன்று என்பதைப் பேராசிரியர் ஸ்காட்டு உணரவில்லை.

"உடனடியாகக் கடனைத் தீர்ப்பதைவிட மெதுவாகக் கடனைத் தீர்ப்பது நல்லது," என்பதற்கு ஸ்காட்டுக் கூறும் ஒரு முகாந்திரம் நம் பரிசீலனைக்கு உரியது. குறைவான கடன் கழிவு நிதி மூலம் நீண்ட காலத்திற்கு வட்டியைக் கொடுத்து வந்தோமாயின், வரிப்பளு இரண்டு வழிகளில் படிப்படியாகக் குறையும். முதலாவது, அதிக வட்டி வீதத்தில் வாங்கிய கடனைக் குறைந்த வட்டி வீதக் கடன் இனமாக மாற்றுகை; இரண்டாவது, வரி கொடுப்போரின் எண்ணிக்கையும், பொதுவாக வருமானங்களில் உயர்வும் ஏற்படும் பொழுது வருமான வரியால் கிடைக்கும் தொகையும் கூடும் என்பது. அடுத்த பத்தாண்டுகளில் நம் நிதி நிலைமை நன்றாக இருக்குமாயின், இவ்விரு வழிகளையும் கையாண்டு நாம் கடன் பளுவைக் குறைத்துக்கொள்ளலாம் என்பதை மறுக்கவில்லை. ஆனால், பிரத்தியேக வரிக்கான முக்கிய காரணம் போருக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட நிதி நெருக்கடியே. ஹாப்ஸன் கூறியாங்கு, "மிகக் கடுமையான நோயினால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் ஒருவனிடம் அவன் உயிர் வாழ்ந்தால் அடுத்த ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று அவன் சந்தோஷமாக இருக்கலாம் என்று கூறுவதனால் அவனுக்கு யாதொரு நம்பிக்கையும் ஏற்படாது."

நிருவாகக் கஷ்டங்கள்

(Administrative Difficulties)

நடைமுறையில்மூலதனத்தின்மேல் வரியை விதித்தல் சாத்தியமா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். வரி விதிக்கப்பட வேண்டிய செல்வத்தின் விளக்கத்தில் நாற்காலி, மேஜை முதலிய

மரச்சாமான்கள் திறமைச்செல்வம் (personal wealth). இரண்டு மூன்று நாடுகளில் மூலதனத்தை வைத்திருப்பவர்கள் இவற்றையெல்லாம் சேர்க்க வேண்டுமா என்பது ஒரு கேள்வி. விளக்கம் கொடுத்துவிட்ட பின்பும் சொத்து மதிப்பிடும் இவ்வரி கொடாமல் பலர் தப்புவதைத் தடுப்பதும், இதை நிருவகிப்பதில் உள்ள கஷ்டங்களைத் தெளிவாகக் காட்டுகின்றன.

மூன்று மாற்று வழிகள்

(Three Alternative Ways)

இக்கஷ்டங்கள் எல்லாம் சமாளிக்க முடியாதவையல்ல. இவை களைச் சமாளிப்பதற்கு மூன்று மாற்று வழிகளைப் பேராசிரியர் கூறு கிறார். யார் யார் இவ்வரியைக் கொடுக்க வேண்டுமோ, அவர்கள் எல்லாம் தங்கள் உடைமைகளின் மதிப்பீட்டைக் குறிப்பிட்ட தேதிக் குள் அரசாங்கத்திற்கு அனுப்பிவிட வேண்டும் என்று கூறலாம். இம்மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு முதற்கண் வரி விதிக்க லாம். பின்பு அரசாங்கத்தின் மதிப்பிடுபவர்கள் (government appraisers) தங்கள் வேலையைத் தொடங்கலாம். படிப்படியாகப் பல ஆண்டுகளில் தனியாரின் மதிப்பீடுகளைப் பரிசீலனை செய்து, வேண்டிய விடத்து அவற்றைத் திருத்தலாம். இறுதியாக மதிப்பீட்டைத் தீர்மானித்த பிறகு கருவூலத்திலிருந்து வரி கொடுப்போருக்கோ அல்லது கருவூலத்திற்கோ கொடுக்கும்படி செய்யலாம். இரண்டாவ தாக முதற்கண் இவ்வரியை மதிப்பிடுவதில் சிக்கலில்லாத உடைமை கள் பேரில் மட்டுமே வரி விதிக்கலாம். மேஜை, நாற்காலி போன்ற சாமான்கள், நகைகள், கலைப்பொருள்கள் இவற்றையெல்லாம் மதிப்பிடுவதை இவற்றுக்குரியவர் இறக்கும் வரை ஒத்திப்போட வேண்டும். அவர் இறந்த பிறகு மரண வரிக்காகச் சொத்து மதிப்பிடப் படும். அதனுடன் மேலே கூறிய பொருள்களின்மீது ஒத்திப்போட்ட பிரத்தியேக வரிக்காகவும் தீர்வை விதிக்கலாம். இம்முறையில் உள்ள ஒரு கஷ்டம், இவ்வரிமுறையைத் தக்க வளர்வீத முறைப்படி அமைப்பதில் உள்ள சிரமமே. வரி வீதம் பல திறப்பட்ட சொத்து களின் மொத்த மதிப்பிற்கேற்றபடி மாற வேண்டும். பிரதான வரி விதிக்கப்பட்ட போது இவ்வுடைமைகளில் ஒரு பகுதியையே பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டால், சொத்துகள் அனைத்தின் மொத்த மதிப்பின்மேல் வரி விதிப்பது இயலாது. ஆயினும், இம்முறையில் காணப்படும் குற்றங்களைப் பின்பு விதிக்கும் வரி விகிதத்தை உயர்த்துவதன் மூலம் அல்லது தாழ்த்துவதன் முலம் திருத்தலாம்.

மூன்றுவதாக மதிப்பீடு செய்வதற்கு மிகவும் கடினமாக இருக்கும் உடைமை வகைகளை மதிப்பீடு செய்வதையே விட்டுவிடலாம். இது அநீதியாக இருக்கலாம். இருப்பினும், எல்லா வரி முறைகளிலும் ஓரளவு அநீதி இருக்கத்தான் செய்யும். ஆகவே, நிருவாகச் சிக்கலைத் தவிர்ப்பதற்காக அநீதியைப் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். மேற்கூறிய வழிகளுள் ஒன்றும் முற்றும் திருத்திகரமாய் இல்லை. இது முதலின் மேல் பிரத்தியேகமாக வரி விதிப்பதற்கு எதிரிடையான முகாந்திரமாகும். இக்காரணங்களால் மூலதனத்தின்மேல் மட்டும் வரி இதுகாறும் ஒரு நாட்டிலும் விதிக்கப்படவில்லை.

இருபத்தோழமதிகாரம்

இந்திய அரசாங்கக் கடன்

(The Public Debt of India)

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு இந்திய அரசாங்கத்திற்கு யாதொரு கடனும் இல்லை. 1792ல் இந்தியா வின் கடன் 7 மில்லியன் பவுனுய் (pound sterling) இருந்தது. கிழக் கிந்தியக் கம்பெனியார் செய்த போர்களினுல் இந்தக் கடன் உயர்ந் தது. சிப்பாய் கலகத்திற்கு முன்பு இக்கடன் 60 மில்லியன் பவுனுய் இருந்தது. அக்கலகத்தை அடக்குவதற்கு ஏற்பட்ட செலவினுல் இது 1860ல் 100 மில்லியன் பவுனுய் உயர்ந்தது. கிழக்கிந்தியக் கம்பெனி கடனுக்கு வாரிசாக இந்திய அரசாங்கம் இக்கடனை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. மேலும், கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்குதாரர் களுக்கு ஆண்டுதோறும் இலாப ஈவு (dividends) கொடுக்கவேண்டி இருந்தது. கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்குகள் யாவும் மீட்கப்பட்டு விட்டதால், 1874ல் இத்தொகை நிறுத்தப்பட்டது. இவ்வாறு இந்திய அரசாங்கக் கடனில் பெரும்பகுதியும் உற்பத்திக்காக வாங்கப் பட்டது அன்று. ஆனுல், 1867லிருந்து நீர்ப்பாசனத் திட்டங்கள், இருப்புப்பாதைகள் இவைகளை அமைப்பதற்காகக் கடன்கள் வாங்கப் பட்டன. 1878லிருந்து அரசாக்கத்தின் உபரி வருமானத்தைக் கொண்டு இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனுல், உபரித் தொகையைக்கொண்டு முதலில் அரசாங்கத்தின் கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்களுக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்டு அவர்களிட மிருந்து மீண்டும் உற்பத்தித் திட்டங்களுக்காகக் கடன் வாங்கப் பட்டது. இவ்வாறு 'சாதாரணக் கடன்' (பயனில் கடன்) குறைந்துகொண்டே வந்தது; பயன்தரும் கடன் (productive debt) மேன்மேலும் ஏறிக்கொண்டே வந்தது. 1916ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சாதாரணக் கடன் ரூபாய் 8·1 கோடியாய் இருந்தது. முதல் உலகப் போர் குறுக்கிடவில்லையாயின் கடன் முழுதுமே சில

ஆண்டுகளில் அடைக்கப்பட்டிருக்கும். போருக்காக வாங்கிய கடன்கள் இந்தியா பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குப் போர்க்கொடையாக அளித்த 100 மில்லியன் பவுன், புது டில்லியைக் கட்டுவதற்கான செலவு, போர்ப்பிற்கால நிருமாணத்திட்டங்கள்சாதாரணஆண்டுகளில் வரவு செலவு திட்டத்தில் துண்டு, இவைகளினால் சாதாரணக் கடன் 257·7 கோடியாக 1924ல் உயர்ந்தது. ஆனால், அதே காலத்தில் உற்பத்திக்காக வாங்கிய கடன் ரூபாய் 400 கோடியிலிருந்து 700 கோடியாக மட்டுமே உயர்ந்தது. சாதாரணக்கடனைக் குறைப்பதற்காக இந்திய அரசு மேற்கொண்ட கொள்கையை வன்மையாகக் கண்டித்தார். ஏனெனில், சாதாரணக் கடன் தொகை மிகக்குறைவு. வரியைக் குறைப்பதற்காகவோ, வரி கொடுப்போருக்கு நிவாரணம் அளிப்பதற்காகவோ அல்லது மக்களுக்கு நன்மை பயக்கும் கல்வி, சுகாதாரம் போன்ற பணிகளை விஸ்தரிப்பதற்காகவோ உபரி வருமானத்தைச் செலவு செய்ய வேண்டும் என்பது அவர் கருத்து. 1929-30ல் கருவூலப்பத்திரங்கள் முதல் முதலாக இந்தியாவில் வெளிப்பட்டன. அதிலிருந்து இதுவரை இப்பத்திரங்கள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வருகின்றன.

இரண்டாம் உலகப் போரின்போது, (1940க்கும் 43க்கும் இடைப்பட்ட காலத்தில்) அரசாங்கம் பாதுகாப்புக் கடன் பத்திரங்கள் (defence bonds), பாதுகாப்புச் சேமிப்புப் பத்திரங்கள் (defence savings certificates), வட்டியில்லாக் கடன் பத்திரங்கள் (interest-free bonds) மூலம் ரூபாய் 547 கோடியைக் கடனாகப் பெற்றது. 1942-43 முதல் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுந்ததாலும் போர்ச் செலவு ஏறிக்கொண்டே வந்ததாலும் அரசாங்கத்தின் கடன் விரைவாக ஏறியது. 1942-43 முதல் 1951 வரை (அதாவது முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் வெளியிடப்பட்ட காலம் வரை) அரசாங்கத்தின் கடன் ரூ. 1,389.13 கோடியிலிருந்து ரூபாய் 2,561.50 கோடியாய் உயர்ந்தது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து 2ஆம் ஐந்தாண்டுத் திட்டம் 1955-56ல் ஆரம்பித்தபொழுது அது மேலும் 3,508.79 கோடியாய் உயர்ந்தது. 1957ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் இந்திய அரசாங்கத்தின் கடன் ரூ.3,676.13 கோடியாகவும் இதில் உள்நாட்டிலேயே வாங்கிய கடன் ரூ.3,514.10 கோடியாகவும் வெளி நாடுகளினின்றும் வாங்கிய கடன் ரூ. 162.03 கோடியாகவும் இருந்து வந்தன.

இந்திய அரசாங்கக் கடனின் சில அமிசங்கள்

அரசாங்கக் கடனைப் பொறுத்த வரை இந்தியா பாராட்டப்படும் நிலையில் உள்ளது. ஏனெனில், இந்தியக் கடனில் பெரும்பகுதி உற்

பத்தியைப் பெருக்குவதற்காக முதலீடு செய்யப்பட்டிருப்பதால் ஆண்டுதோறும் அது கணிசமான வருவாயை அரசாங்கத்திற்கு நல்குகிறது. அரசாங்கக் கடனின் பெரும்பகுதி வருமானம் வரக் கூடிய இருப்புப்பாதைகள் முதலானவற்றில் இடப்பட்டும் அல்லது மாநில அரசாங்கங்களுக்குக் கடனாகத் தரப்பட்டும் இருக்கிறது. இந்திய அரசாங்கத்தின் கடன் பற்றிய நிலை வருமாறு :—

இந்திய அரசாங்கக் கடன் கொடுக்கவேண்டிய பொறுப்பு	ரூ. லட்சத்தில் 1951-52 திருத்தப்பட்ட மதிப்பீடு (revised estimate)	1956-57 திருத்தப்பட்ட மதிப்பு	1957-58 வரவு செலவு திட்ட மதிப்பு
1. கடன்கள்	1,402,10	1,588,45	1,654,38
2. கருவூலக் கடன் பத்திரங்கள் கருவூல டிபாசிட்டு வரவுகள்	335,01	865,25	1,140,25
3. சிறு சேமிப்பு	372,57	638,20	717,50
4. தேய்மானம் (சேதாரம்) இருப்பு நிதிகள்	171,74	216,41	216,26
5. பிற	193,02	206,79	240,42
6. மொத்தம்	2,474,17	3,514,10	3,968,81
இங்கிலாந்தில் :			
7. கடன்கள்	124	56	53
8. பிற	3,224	21,09	21,10
9. மொத்தம்	33,48	22,25	21,63
10. டாலர் கடன்கள்	112,04	132,95	204,18
11. சோவியத்து யூனியனிலிருந்து கடன்கள்	...	6,83	39,26
12. மொத்தம் வட்டி செலுத்த வேண்டிய கடன் பொறுப்புகள்	2,619,60	3,676,13	4,233,38

இந்திய அரசாங்கக் கடன் கொடுக்கவேண்டிய பொறுப்பு	ரூ. லட்சத்தில் 1951-1952 திருத்தப்பட்ட மதிப்பீடு (revised estimate)	1956-57 திருத்தப்பட்ட மதிப்பு	1957-58 வரவு செலவு திட்ட மதிப்பு
வட்டி வரக்கூடிய சொத்து இனங்கள் :			
13. இருப்புப் பாதைகளுக்காகக் கடனாகக் கொடுத்தது.	833,63	1,072,79	1,196,96
14. பிற வர்த்தக இலாக்காக்களுக்குக் கடனளித்தது	112,95	150,19	172,28
15. வர்த்தக நிலையங்களில் முதலீடு	...	136,04	121,56
16. மாநில அரசாங்கங்களுக்கு அளித்த கடன்களும் பிற இனங்களும்	284.32	1,187,30	1,431,95
17. இருப்புப்பாதை ஆண்டுக் கடன் பத்திரங்களை மீட்பதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் வைத்த டிபாசிட்டுகள்	853	1,07	48
18. பர்மாவிலிருந்தும் பாக்கிஸ்தானிலிருந்தும் வரவேண்டிய சலுகை	348,15	3,00,00	3,00,00
19. ஸ்டர்லிங் உபகாரச் சம்பளங்களைக் கொடுப்பதற்கான ஆண்டுப் பத்திரங்களை வாங்கியது	193,58	159,50	153,57
20. வட்டி வரக்கூடிய மொத்த சொத்து இனங்கள்	1,781,16	2,906,89	3,476,80
21. கருவூலக் கணக்கில் இருக்கும் ரொக்கமும் கடன் பத்திரங்களும்	198,70	50,41	50,48
22. உடைமைகள் ஈடு இல்லாத வட்டி கொடுக்கக்கூடிய கடன் பொறுப்புகள்	639,83	718,83	706,60

1957ஆம் ஆண்டு மார்ச்சு இறுதியில் இந்திய அரசாங்கத்தின் கடன்கள் ரூ. 3676.13 கோடி. இதில் ரூ. 718.83 கோடிக்குதான் ஈடாகச் சொத்துகள் இல்லை. இதுகூட முற்றும் பயனில் கடன் என்று கூற முடியாது. ஏனெனில், பாதுகாப்புக்காகச் செலவழிக்கப் படும் செலவால் பயன் ஒன்றுமே இல்லை என்று சொல்ல முடியாது.

இந்தியாவின் வெளி நாட்டுக் கடன்கள்

மிக நீண்ட காலமாக இந்திய அரசாங்கத்தின் கடனின் பெரும் பகுதியும் வெளிநாடுகளில், அதுவும் சிறப்பாக இங்கிலாந்தில், வாங்கப் பட்டன. 1908ல் இந்திய அரசாங்கத்தின் வெளி நாட்டுக் கடன் தொகை 356 மில்லியன் பவுன் எனக் கீன்ஸ் பிரபுவால் மதிப்பிடப் பட்டது, 1930ல் 600 மில்லியன் பவுன் என டாக்டர் டுபேயினுலும் (Dr. Dubey), 1934ல் 612 மில்லியன் பவுன் என பி. இராமசந்திர னுலும் மதிப்பிடப்பட்டது. ஸ்டர்லிங் கடனில் பெரும்பகுதி பிற நாட் டார்களால் கொடுக்கப்பட்டதே. பிற நாட்டார்கள் இந்தியாவுக்கு ரூபாய்க் கடனுகவும் ஓரளவு கொடுத்திருக்கிறுர்கள். ரூபாய்க் கடன் இந்தியாவில் மட்டுமே வெளியிடப்பட்டாலும், அக்கடன்கள் யாவும் இந்தியர்களாலேயே கொடுக்கப்பட வேண்டுமென்பதில்லை. இதில் ஓரளவு பிற நாட்டார்களாலும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் உலகப்போருக்கு முன்பு, அதாவது 1939ஆம்ஆண்டு மார்ச்சு மாதம் இறுதியில் இந்திய அரசாங்கத்தின் வெளி நாட்டுக் கடன் ரூ. 464.94 கோடியாய் உயர்ந்திருந்தது. ஆயினும், இரண் டாவது உலகப்போரின் போது இக்கடன் தொகை படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. இதற்குக் காரணங்கள் இரண்டு: முதலாவது, இந்திய அரசாங்கம் இந்திய பணமார்க்கெட்டையே முழுதும் பயன் படுத்திக் கடன் வாங்க ஆரம்பித்தது. இரண்டாவது, இக்கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு இந்திய அரசாங்கம் ஒரு திட்டம் வகுத்தது. 1939ஆம் ஆண்டு பிரிட்டனிலிருந்து சில வரவுகள் வந்தாலும், வெள்ளி யை விற்றதன் மூலமும் ஏராளமான ஸ்டர்லிங் தொகை இந்திய அர சாங்கத்திற்குக் கிடைத்தது. இம்மூலதனங்களைப் பயன்படுத்தி இந்திய அரசாங்கம் ஸ்டர்லிங் கடனைச் சிறிது சிறிதாகக் கொடுத்தது. 1956ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் இந்திய அரசாங்கத்தின் ஸ்டர்லிங் கடன் ரூபாய் 22.25 கோடியாய்க் குறைந்தது. ஸ்டர்லிங் கடன்மிகவும் குறைந்தது. இதனுல், இந்தியாவின் நிதி நிலைமை உரம் பெற்றது. இனி இந்தியா பிற நாட்டில் உள்ள ஆஸ்திகளில் பெருவாரி யாகத் தன் பணத்தை முடக்கி வைக்கவேண்டிய அவசியம் இல்லை. உள் நாட்டிலேயே அரசாங்கக் கடன் பத்திரங்களுக்கான மார்க் கெட்டை விரிவுபடுத்தவும் இயலும்.

போருக்குப் பின்னர் முதன்முதல் அமெரிக்காவில் இந்திய அரசாங்கம் டாலர் கடன் வாங்கியது. டாலர் கடன் படிப்படியாக உயர்ந்து, 1957ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் ரூபாய் 132.95 கோடியாய் இருந்தது. 1958ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் இது ரூபாய் 204.18 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அண்மைக் காலத்தில் இந்தியா, சோவியத்து யூனியன், மேற்கு ஜெர்மனி உள்ளிட்ட பல நாடுகளிலிருந்தும் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றக் கடன் வாங்கி இருக்கிறது. 1957ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் இக்கடன் தொகை ரூ. 6·83 கோடியாய் இருந்தது. 1958ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் இத்தொகை 39·76 கோடியாய் ஏறுமென்று எதிர்பார்க்கப்பட்டது. மொத்தத்தில் பிற நாட்டுக் கடன்கள் எல்லாம் சேர்ந்து 1957 இறுதியில் ரூ. 161·03 கோடியாகவும், 1958 இறுதியில் ரூ. 206·07 கோடியாகவும் உயர்ந்தன.

நிலையாக்கிய கடனும் நிலையாக்காத கடனும்

(Funded and Floating Debt)

இந்திய அரசாங்கத்தின் கடனில் 60 சதவிதம் நிலையாக்கிய கடன். முதல் உலகப் போரின் போது முதன்முதல் கருவூலப் பத்திரங்கள் வெளியிடப்பட்டன. இக்கடன்களை மூன்று திங்களில் திருப்பிக் கொடுக்க வேண்டும். புதிய பத்திரங்களை வெளியிட்டுப் பழைய கடன்கள் அடைக்கப்படுகின்றன. இந்திய நிதியின் முக்கியமான அமிசமாய் இப்போது கருவூலப் பத்திரங்கள் உள்ளன. மொத்த அரசாங்கக் கடனில் 40 சதவீதம் கருவூலப் பத்திரங்கள். இவை தவிர சிறு சேமிப்பு டெபாசிட்டுத் தொகைகள் இவையெல்லாம் நிலையாக்காத கடன்களாகும்.

கடன் மீட்சி

1789ல் வெல்லெஸ்லி பிரபு ஒரு கடன் கழிவு நிதியை ஏற்படுத்தினார். இத்திட்டம் 10 ஆண்டுகள் வரை தொடர்ந்து நடந்தது. முதல்உலகப் போருக்கு முன்பு அரசாங்கத்தின் உபரிவருமானத்தைக் கொண்டு இருப்புப் பாதைகளின் முதலீட்டுச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. 1917ல் இருப்புப்பாதைக் கடன் கழிவு நிதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாண்டிலிருந்து இருப்புப்பாதை ஆண்டுக் கடன் பத்திரங்களும் வழங்கப்பட்டன. ஆயினும், 1924 வரை இந்திய அரசாங்கத்திற்குக் கடன் மீட்சிக்கான யாதொரு திட்டமும் இல்லை. 1924ல் நிதி உறுப்பினராய் இருந்த சர் பேசில் பிளாக்கெட்டு என்பவர் பயனில் கடனைக் குறைப்பதற்காக ஒரு திட்

டத்தை உருவாக்கினர். ஆண்டுதோறும் 4 கோடி ரூபாயும் 1921 ஆம் ஆண்டு மார்ச்சு 31ஆம் தேதி இருந்த கடன் தொகையைக் காட்டிலும் ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் உபரி நிலுவையாக இருந்த கடன் தொகைகளில் $\frac{1}{18}$ தொகையும் கொடுக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்தார். 1933-34ல் இத்தொகை 4 கோடியிலிருந்து 3 கோடியாகக் குறைக்கப்பட்டது. இப்போது ஆண்டுதோறும் 5 கோடி ரூபாய் இதற்கென ஒதுக்கப்படுகிறது.

தபால் சேமிப்பு, தபால் ரொக்கக் கடன் பத்திரங்கள் ஆகியஇவையும் இந்திய அரசாங்கத்தின் கடன் பொறுப்புகள் ஆகும். முன்பெல்லாம் அவை மேன்மேலும் வருகின்ற சேமிப்புகளிலிருந்தும் ரொக்கக் கடன்களிலிருந்தும் திருப்பித் தரவேண்டும் என்பது கருதப்பட்டது. அவற்றைத் தருவதற்கான வேறெந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. 1930லிருந்து தபால் ரொக்கக் கடன் பத்திரங்களை மீட்பதற்காக ஆண்டுதோறும் வகை செய்யப்படுகிறது.

நம்முடைய கடன் மீட்சி ஏற்பாடுகள், விஞ்ஞான ரீதியில் செய்யப்படவில்லை. பிற நாடுகளில் அரசாங்கக் கடனுக்கெனத் தனி அதிகாரிகள் (கமிஷனர்கள்) இருக்கிறார்கள். அவர்கள் அவ்வப்பொழுது பண மார்க்கெட்டின் நிலவரத்தை அறிவதுடன், புதுப்புதுக் கடன்களாக மாற்றுதற்கான காலத்தையும் தேர்ந்தெடுக்கிறார்கள். எல்லா வகையான கடன்களையும் ஒன்றுபடுத்தி இணைத்து, அவற்றை மீட்பதற்கான வகைகளையும் செய்கிறார்கள். நாமும் அவ்வகையான ஓர் அமைப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

இரண்டாவது உலகப்போரும் அரசாங்கக்கடனும்

இரண்டாவது உலகப்போர் நம் நாட்டின் நிலையை மிகவும் பாதித்தது. போரை வெற்றியாக நடத்துதற்கு இந்திய அரசு கடன் வாங்க வேண்டியதாயிற்று. அரசாங்கக் கடன்களின் வெளியீடு போர்த் தொடக்கத்திலிருந்து 1946ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய ரூபாய் 1,173 கோடியாகும். அரசாங்கக் கடன்களில் முதலீடு செய்ததனால் மக்களிடமிருந்து உபரி வாங்கும் சக்தி குறைக்கப்பட்டது. இதனால் நுகர்ச்சிப் பொருள்களின் விலைகள் மிகவும் ஏறாமல் தடுக்கப்பட்டதுடன் இது அபிவிருத்தித் திட்டங்களுக்காக அரசாங்கம் நிதியைத் திரட்டவும் ஏதுவாயிற்று.

ஸ்டர்லிங் நிலுவைகள்

(Sterling Balances)

1939ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் 52 மில்லியன் பவுனிலிருந்து ஸ்டர்லிங் நிலுவைகள் 1947ஆம் ஆண்டு ஆகஷ்டு மாதத்தில்

1137 மில்லியன் பவுனுகை உயர்ந்தது. ஸ்டர்லிங் நிலுவைகள் ஏறிய தற்குக் காரணம், போருக்காக பிரிட்டிஷ் அரசாங்கம் தனக்காக வும் நேச நாடுகளுக்காகவும் ஸ்டோர்களையும் (Stores) பிற பொருள் களையும் இந்தியாவில் வாங்கியதேயாகும். இலண்டனில் ஸ்டர்லிங் காகத் தரப்பட்ட தொகைகளுக்கு ஈடாக இந்தியாவில் ரிசர்வ்பாங்கு நோட்டுகளை அச்சடித்து வழங்கியது. இதனுல் விளைந்த செலாவணி வீக்கத்தினுல் மக்கள் பெரிய அவதிக்கு உள்ளானுர்கள்.

1947ஆகஸ்டில் இலண்டனில் ஸ்டர்லிங் நிலுவைகள் சம்பந்த மாக ஒரு தாற்காலிக உடன்பாடு செய்யப்பட்டது. இதன் விளைவாக இந்திய அரசாங்கத்தின் பேரில் இரண்டு கணக்குகள் தொடங்கப் பட்டன. முதல் கணக்கு 165 மில்லியன் பவுனுடன் தொடங்கியது. இத்தொகையை எந்நாட்டுச் செலாவணியாகவும் மாற்றிக்கொள்ள லாம். நடைமுறை வியாபாரங்களிலிருந்து கிடைக்கும் தொகையும் இக்கணக்கிலேயே வரவு வைக்கப்பட்டது. 1948 ஜூலையில் இப் புதிய உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. இவ்வுடன்பாட்டின்படி (1) இந்தியாதான் 1947 ஏப்பிரல் 1 முதல் எடுத்துக்கொண்ட எல்லா ஸ்டோர்களுக்காகவும் பாதுகாப்பு நிலையங்களுக்காகவும் (installations) மொத்தமாக 100 மில்லியன் பவுன் (ரூ. 133 கோடி கொடுக்க வேண்டியது); (2) ஸ்டர்லிங் உபசாரச் சம்பளத்திற்காகவும் (sterling pensions), ஆண்டுத் தொகைகளை வாங்குவதற்காகவும் இந்தியா பிரிட்டனுக்கு 147½ மில்லியன் பவுன் கொடுக்கவேண்டும். இவ்வாண்டுத் தொகைகள் படிப்படியாகக் குறைந்து அறுபது ஆண்டு களில் முற்றும் மறைந்தொழியும்; (3) இந்தியா மேற்கொண்ட பாது காப்புச் செலவிற்காக வரவேண்டிய இனங்கள் 65 மில்லியன் பவுன் என அறுதியிடப்பட்டது; (4) 1948 ஜூலையிலிருந்து மூன்று ஆண்டு களில் பிரிட்டன் 80 மில்லியன் பவுனை வெளியிட ஒப்புக்கொண்டது. இதனுடன் செலவழிக்காமல் இருந்த 80 மில்லியன் பவுனையும் சேர்த்தால், மொத்தம் 160 மில்லியன் பவுன் முதற்கணக்கிலிருந்து கிடைக்கும்; (5) முதல் ஆண்டில், அதாவது 1948ல், பிரிட்டன் 15 மில்லியன் பவுனை வெளியிட்டு அதை எந்த நாட்டுச் செலாவணி யாகவும் மாற்றிக்கொள்ள ஒப்புக்கொண்டது.

இவ்வுடன்பாடு கையெழுத்தான நாளன்று நாம் கொடுக்கவேண் டிய மொத்தத் தொகைகளைக் கழித்தால் ஸ்டர்லிங் நிலுவைகளில் நிகரத்தொகை 800 மில்லியன் பவுனுய் இருந்தது. இந்நிலுவைகள் படிப்படியாகக் குறைந்துகொண்டே வருகின்றன. இதற்குக் காரணம், ஆண்டுதோறும் உணவு தானியங்களையும் நுகர்ச்சிப் பொருள்களையும் பெரிதளவில் பிற நாடுகளினின்றும் தருவிப்பதேயாகும்.

இருபத்தெட்டாமதிகாரம்

போர் நிதி

(War Finance)

கடன்களும் வரிகளும்

போருக்கு எங்ஙனம் நிதி திரட்டவேண்டும்? இக்கேள்விக்கு நேரடியாக விடையளிக்க முடியாது. போரின் மொத்தச் செலவு, போர் நடக்கும் காலம், பணமார்க்கெட்டின் நிலவரம், எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல், அகச் சூழ்நிலைகள் இவற்றைப் பொறுத்து தான் போருக்கு நிதி திரட்டவேண்டும்.

போருக்கு வரி மூலம் நிதி திரட்ட வேண்டுமா, அல்லது கடன் மூலம் நிதி திரட்டவேண்டுமா? இதில் பொருட்புலவர் சிலர் வரி ஒன்றையே போருக்குப் பணம் திரட்ட வழியாகக் கொள்ளவேண்டுமெனவும், வேறொரு சாரார் கடன் மூலமே எல்லாப் பணத்தையும் திரட்ட வேண்டுமெனவும் கூறுகின்றனர். ரிக்கார்டோ, வரி மூலம் எல்லாப் பணத்தையும் பெறவேண்டும் என்ற முறையை ஆதரித்தார். போருக்காகக் கடன் வாங்குவதை அவர் எதிர்த்தார். ஏனெனில், இதனால் வரவு செலவு திட்டத்தில் நிரந்தரப் பற்றுக்குறை விழுவதுடன் அது மூலதனஆக்கத்தையும் (Capital formation) பாதிக்கிறது. வரி ஒன்றின் மூலமே பணத்தைப் பெற்றால்இப்பொழுதுள்ள தலைமுறை 'போர் என்றால் என்ன? அவற்றின் விளைவுகள் என்ன?' என்றும் அறியும் என்றும், அதனால் போரிடுவதற்கான திமிர் அடக்கப்படுமென்றும் வாதிக்கப்படுகிறது. ''பல நாடுகளில் இயற்கையாகவே காணப்படும் நாடு பிடிக்கும் வெறி பேராசை இவற்றைத் தடுப்பதற்காக உள்ள சாதனங்களாக எல்லாம் வல்ல கடவுள் கருணையுடன் ஏற்படுத்தியது தான் போர்ச்செலவு,'' எனக் கிளாட்ஸ்டன் கூறுகிறார்.

வரி ஒன்றையே போருக்குச் சாதனமாகக் கொண்டால் போர்ச் செலவு மிகக் குறைந்த அளவே இருக்குமென்று வாதிக்கின்றனர்.

அதுவுமன்றி, போர் நடக்கும் காலத்தின் அளவும் மிகவும் குறைக்கப் படும். இதனுல், பண வீக்கம் தவிர்க்கப்படும். இக்காலத்து எல் லாப் போர்களிலும் பண வீக்கம் இன்றியமையாததாகக் காணப்படு கிறது. இதனுல், பல பிரச்சினைகள் ஏற்படுவதுடன் போருக்குப் பின் னர் அரசாங்கங்களுக்குத் தலை வேதனையையும் அளிக்கிறது. இம் முறையால் தனியார் ஆட்சியில் மிகுந்த சிக்கனம் ஏற்படுவது வர வேற்கத் தகுந்தது. இப்போதைய தலைமுறை செய்த தவறுகளுக்கு இப்போதைய தலைமுறைதான் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்பது இதனுல் ஏற்படுகிறது.

இக்கருத்துக்கு மாருக நவீனப் போருக்காகும் ஏராளமான தொகையையும் ஒரு வரி முறையாலும் பெற முடியாது எனச் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். கடுமையான வரி விதிப்பால் முதல் குறை வதுடன் உற்பத்தியும் பாதிக்கப்படும். செல்வாக்கு மிக்க மேனிலை வர்க்கத்தினரின் அரசாங்க விசுவாசத்தையும் இது சோதனை செய்வ தாக அமையும். இதனுல், ஐந்தாம் படை பாதிக்கப்படும். இது ஒற்று வேலை செய்வோருக்கு ஆக்கமளிப்பதாகும். ஆகையால், உள் நாட் டுப் போர்முனை சிதையும். எப்பாடு பட்டாவது இதனை எல்லா அர சியல் அறிஞர்களும் தவிர்க்க வேண்டும்.

கடன்களைப் பொதுவாகப் பெரும்பாலார் விரும்புகிருர்கள். கடன்களை வாங்குவதன் மூலம் அரசாங்கம் மக்களின் வெறுப்புக்குப் பாத்திரமாவதைத் தவிர்க்கிறது. ஒரு வரித்திட்டத்தை வெறுப்பது போலக் கடனை ஒருவரும் வெறுப்பதில்லை. அரசாங்கத்திற்குக் கடன் கொடுப்போன் தான் அதற்கு வட்டியாகப் பெறும் தொகை, இவ்வட் டித் தொகையைக் கொடுப்பதற்காகத் தான் வரி விதிப்பின் மூலம் கூடுதலாகக் கொடுக்கும் வரியைவிட அதிகமாக இருக்கும் என் பதைத் தெரிந்திருக்கிருன். தன் வாழ்விற்கு வேண்டிய இன்றியமை யாத பொருள்களைக் குறைத்தும் மிகக் கடினமாக உழைத்தும் பொருள் ஈட்டி அவன் போர்ப் பத்திரங்களை (War bonds) வாங்க லாம். இதனுல், போர் முயற்சி ஆக்கம் பெறும். கடுமையான வரி விதிப் பால் வாணிகம், தொழில் இவற்றிற்காகத் தேவைப்படும் முதல் பறிக் கப்படுவதால் உற்பத்தி தடைபடும். ஆனுல், கடன் கொடுப்போர் தங்கள் தேவைக்குப் போக எஞ்சியதையே கடனுகக் கொடுக்கிருர் கள். இவ்வாறு கடின உழைப்புப் பாதிக்கப்படுவதில்லை. கடனுகக் கிடைக்கும் தொகையை அரசாங்கம் பண்டங்களையும், சேவைகளை யும் வாங்குவதற்குப் பயன்படுத்துகிறது. இதனுல் வாணிபமும் தொழிலும் மேலும் உரம் பெறும்.

இவ்வாறு, போர் நிதிபற்றி இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. இவ்விரு கருத்துகளும் தவருனவை. இவ்விரு முறைகளையும்

(அதாவது கடன்களையும் வரிகளையும்) போருக்கு நிதி திரட்டுதற்காகப் பயன்படுத்துவதே சரியான கருத்தாகும். ஆடம் ஸ்மித்துக் கூறியது போல, ''சமாதானக் காலத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்காததால் போர்க்காலத்தில் கடன் வாங்க வேண்டிய முடை ஏற்படுகிறது.'' சமாதானக் காலத்தில் எவ்வளவு சிக்கனமாக இருப்பினும், இக்காலப் போரை நடத்துதற்கான பொருளைத் தேடமுடியும் என்று நாம் கருதவில்லை. போரை நடத்தக் கடனை வாங்கியே தீரவேண்டும். வேறொரு முறையிலும் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. போர்ப்பறை கொட்டியதும் அரசாங்கத்திற்கு உடனடியாக நிதி தேவைப்படுகிறது. ஆனால், வரியின்மூலம் வருமானம் வரச் சிறிது காலம் பிடிக்கும். இவ்விடைக்காலத்தில் பணத்தைக் கடன் வாங்கியே தீரவேண்டும். ஆகவே, போர் நிதியைப் பொறுத்த வரை சிறந்த கொள்கை ''இயன்ற அளவான வரி விதித்தலும் எஞ்சியதற்கும் கடன் வாங்குதலும்'' ஆகும்.

போர் நிதியைச் சேகரிப்பதற்கு மூன்றாவது வழி ஒன்றுமுளது. அதுதான் பணத்தைப் படைப்பது அல்லது காகிதப் பணத்தை வெளியிடுவது. இது ஓர் அபாயகரமான வழி. எனினும், போரில் ஈடுபட்டுள்ள எல்லா நாடுகளும் இக்காலத்தில் இம்முறையைக் கையாளுகின்றன. ஆயினும், இக்கருவியை அருமையாகவும் மிகவும் கவனத்தோடும் கையாள வேண்டும். இவ்வாறு போருக்கு மூன்று வழிகள் மூலம் பணம் திரட்டலாம். அவையாவன: 1. வரி விதித்தல், 2. கடன் வாங்குதல், 3. காகிதப் பணம் வெளியிடுதல்.

போர்ச் செலவு

போர்ச்செலவு என்ற சொற்றொடர் பணச் செலவையோ அல்லது உண்மைச் செலவையோ குறிக்கலாம். போருக்காகச் செலவழித்த மொத்தத் தொகையே பணச்செலவு எனப்படும். இப்பளுவைப் போர்ச் செலவுக்காகத் தொகை கொடுக்கும் எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

(உ-ம்.) வரி கொடுப்போர் (இத்தலைமுறை) போருக்குக் கடன் கொடுப்போர் (இத்தலைமுறையைச் சேர்ந்தவராகவும்) அசலையும் வட்டியையும் தருபவர் அடுத்த தலைமுறையைச் சேர்ந்த வரி கொடுப்போராகவும் இருக்கிறார்கள். போரின் மெய்யான செலவு என்பது அதனால் ஏற்படும் கலக்கம், கவலை, பட்டினி, உயிரிழப்பு, வெறுப்பு, ஒழுக்கக்கேடு இவற்றைக் குறிப்பதாகும். இக்கேடுகள் அனைத்தும் இத்தலைமுறையின்மீதே விழுகின்றன.

போரின் பணப்பளு இத்தலைமுறைமீது விழுகின்றதா அல்லது எதிர்காலத்தின் தலைமுறை மீது விழுகின்றதா என்பது போருக்கு நிதி திரட்டும் முறையையும் அதனால் ஏற்படும் பொருளியல் விளைவுகளையும் பொறுத்திருக்கிறது, காகிதப் பணவெளியீட்டால் நிதி திரட்டப்பட்டால் சுமை முற்றும் இத்தலைமுறையின்மீதே விழுகின்றன. பண வீக்கத்தினால் ஏற்படும் தீய விளைவுகள் ஒரு தலைமுறை பூராவும் காணப்படும். ஆனால், எதிர்காலத்தில் தீமை விளைவதற்கான விதைகளை அவை விட்டுச் செல்வதில்லை. வரி விதிப்பினால் போரின் பளு இப்போதைய தலைமுறையின்மீதும் கடன்கள் வாங்குவதால் எதிர்காலத்துப் தலைமுறையின்மீதும் விழுகின்றது எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. எப்பொழுதுமே இவ்வாறு இருக்க வேண்டும் என்பதில்லை.

வரி விதிப்பினால் இத்தலைமுறையே அதிகம் பாதிக்கப்படுகிறது என நம்புவதற்கு இடமிருக்கிறது. வரி கொடுப்போர் அவர்கள் நுகர்ச்சியைக் குறைத்துக்கொள்கிறார்கள். கடுமையான வரி விதிப்பால் தொழில் விஸ்தரிப்புத் தடைபடுவதுடன், சாமான்களுக்குத் தேவையும் ஏற்படும். உற்பத்தி இப்போது பாதிக்கப்படுவதனால் எதிர்காலச் சந்ததியார் பாதிக்கப்படமாட்டார்கள் என உறுதியாகச் சொல்வதற்கில்லை. தொழிலின் உற்பத்திச் சத்தி பெருவாரியான அளவு குறைவதால் எதிர்காலத்தில் உற்பத்தி மிகவும் குறையலாம். தொழிற்கருவிகளைப் புதுப்பிப்பதற்கும், பழையனவற்றிற்குப் பதில் புதியனவற்றைப் போடுதற்கான காப்பு நிதியை (reserve fund) ஒதுக்குவதற்கும் கடுமையான வரியால் இடமில்லாமல் போகலாம். அதனால் எதிர்காலச் சந்ததியார் வழக்கற்றுப்போன திறமை குறைவான எந்திரங்களையே கட்டியழும்படி நேரும். இப்போதைய தலைமுறையின் முதலாக்கமும் சேமிப்பும் கடுமையான வரியால் தடைபடுவதால் எதிர்காலத்தில் உற்பத்தி நிச்சயம் பாதிக்கப்படும். இவ்வாறு போருக்கு வரிகள் மூலம் மட்டுமே நிதி திரட்டுவதால் இப்போதைய தலைமுறை மட்டுமே பாதிக்கப்படும் என்று கூறுவோரின் வாதத்தில் முற்றும் உண்மையில்லை. (இதில் ஓரளவு உண்மையுள்ளது).

இதேமாதிரியாகக் கடன் வாங்குவதால் போர்ப்பளு எதிர்காலத்திற்கு முற்றும் புரட்டப்பட வேண்டுமென்பதில்லை. இப்போதைய தலைமுறையில் உள்ளவர்கள் போருக்குக் கடன் கொடுத்தால், அவர்கள் தங்கள் நிகழ்கால நுகர்ச்சியைக் குறைத்துக்கொண்டு கடனால் தூண்டப்படவேண்டியிருக்கும். வாணிபத்திலிருந்தும் தொழிலிலிருந்தும் முதல் பிரிக்கப்படுவதால் ஓரளவுக்கு அதனால் நிகழ்கால உற்பத்திச் சத்தி குறையும். அந்த அளவுக்குக் கடன்கள் இத்தலைமுறைக்குச்

சுமையாகும். ஆயினும், கடன்களை வெளியிடுவதால் இத்தலை முறைக்கு ஓரளவு நிவாரணம் கிடைக்கிறது என்பதிலும், இத்தலை முறையே எல்லா வரி முறையையும் ஏற்கவேண்டிவரும் என்பதிலும் ஐயமில்லை.

கடனால், எவ்வளவு சுமை எதிர்காலத்திற்குப் புரட்டப்படுகிறது என்பதைப் பரிசீலனை செய்ய, கடன் குறுகிய காலக்கடனா அல்லது நீண்டகாலக் கடனா என்பதையும், உள் நாட்டுக் கடனா அல்லது வெளி நாட்டுக் கடனா என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். கடன் 20 முதல் 30 ஆண்டுவரை நீடித்தால், இந்தத் தலைமுறைக் காலத்தி லேயே கடனைத் தீர்த்துவிடலாம். எதிர்காலத்தின் தலைமுறை அனு வளவும் இதனால் பாதிக்கப்படமாட்டாது. ஆனால், மிக நீடித்த காலத் திற்குக் கடனை வெளியிட்டால் எதிர்காலத் தலைமுறை பாதிக்கப்படும்.

உள் நாட்டுக் கடனைப் பொறுத்த வரை நமது சுமை முற்றும் எதிர்காலத்தின் தலைமுறையின்மீது விழுவதாக எண்ண முடியாது. எதிர்காலத்திலும் வட்டியும் அசலும் கொடுக்கவேண்டுமென்பதால் எதிர்காலத்திலும் அவர்கள் பேரில் வரி விதித்தே ஆகவேண்டும். ஆகவே, எதிர்காலத்தில் வரி கொடுப்போர்கள் இச்சுமையை ஏற்கும் படி இருக்கும். ஆனால், வட்டித் தொகையைப் பெறுபவர் யார் ? இப் போது கடன் பத்திரங்களை வைத்திருப்பவரின் மக்களே. ஆகையால், எதிர்காலத்தில் மக்களுள் சில பகுதியினரிடமிருந்து (வரி கொடுப் போர்) வேறு சில பகுதியினருக்கு (கடன் பத்திரங்களை வைத்திருப் போர்) செல்வம் மாற்றப்படுகிறது. ஆகவே, எதிர்காலச் சந்ததி யார் வரி கொடுத்தால், எதிர்காலச் சந்ததியார் வட்டியையும் அசலை யும் பெறுகிறார்கள். இதனால் கடன் பளுவை எதிர்காலச் சந்ததி யாரே ஏற்கிறார்கள் என்று நாம் எவ்வாறு சொல்ல முடியும் ? உள் நாட்டுக் கடனைப் பொறுத்த வரை இஃது உண்மையன்று.

வெளி நாட்டினின்று கடன் பாக்கி இருப்பின் எதிர்காலச் சந்ததி யார் வட்டியைத் தருவதற்காகவும் அசலைத் திருப்பித் தருவதற்காக வும் ஏற்படும் சுமையை ஏற்றுக்கொள்ள வேண்டும். கடனாளி நாட்டி லிருந்து கடன்கார நாட்டிற்குச் செல்வம் மாற்றப்படுகிறது. இதனால் எதிர்காலச் சந்ததியாருக்கு எதிரிடையாகச் செல்வம் பிற நாட்டுக்கு ஏற்றுமதியாகிறது. போர்க்காலத்திலும் போர் முடிந்து உடனடியா கப் போருக்குப் பிற்பட்ட சில ஆண்டுகளிலும் வியாபாரம் விரைவாக வும், விலை வாசிகள் ஏற்றமாகவும் இருப்பதனாலும், வேலையின்மை இல்லாததாலும் இப்பளு இலகுவாக இருக்கலாம். ஆனால், வியா பார மந்தம் ஏற்படும் போது இச்சுமை பன்மடங்கு கூடுகிறது.

இருபத்தொன்பதாமதிகாரம்

வரவு செலவு திட்டத் தயாரிப்பு

நிதி நிருவாகம்

(Financial Administration)

அரசாங்க நிதியின் ஒரு முக்கியப் பிரவு நிதி நிருவாகம். அண்மைக்காலம் வரை இதைப்பற்றி ஆசிரியர் பலர் போதிய நாட்டம் செலுத்தவில்லை. இப்பகுதியை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, 1. வரவு செலவுத்திட்டத்தைத் தயாரித்தல், 2. அதைச் சட்டமாக்குதல், அல்லது வரவு செலவுத் திட்டத்தின் மீது வாக்கெடுப்பு, 3. சட்டசபை இயற்றியதை நடைமுறையில் நிறைவேற்றுவது, அல்லது அமுல் நடத்துவது என்பவை.

பட்ஜெட்டு என்ற சொல் பல்கா (bulga) என்ற இலத்தீன் வார்த்தையினின்று உருவாகி, வாலி (பழைய பிரெஞ்சு) மொழி வார்த்தையாக மாறியது. இதன் பொருள் தோற்பை, சட்டைப்பை, அல்லது பர்ஸ் (purse) என்பதாகும். ஆகவே, இச்சொல் இலத்தீன் பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளுக்கும் பொதுவானது. இங்கிலாந்தின் பார்லிமென்டில் நாட்டின் தேவைகள், சாதனங்கள் இவைகளை விளக்கும் பத்திரங்களைக் கொண்ட பெரிய தோற்பையை பட்ஜெட்டு என்ற சொல் குறித்தது. முதன்முதல் பட்ஜெட்டு என்ற வார்த்தை வரவு செலவு திட்டம் என்ற பொருளில் வால்போல் என்பவர் காலத்தில் அரசாங்கத்தின் வரவுகள், செலவுகள் இவற்றைப் பற்றிய மதிப்பீட்டைக் குறிக்கிறது.

" அரசாங்க வருவாய்கள், சொத்துகள் இவற்றைப் பற்றிய அங்கீகரிக்கப்பட்ட முதற்படியான (preliminary) திட்டத்தைத் தன்னுள் அடக்கிய பத்திரமே பட்ஜெட்டு," என ரெனே ஸ்டோர்ம் (Rene Stourm) கூறுகிறுர். அரசாங்கத்தின் வரவுகள் செலவுகள்

எல்லாவற்றையும் பற்றிய முன்னறிவிப்பாகவும், மதிப்பீடாகவும், இக் கால நாடுகளுள் பலவற்றில் பட்ஜெட்டு விளங்குகிறது எனவும், குறிப் பிட்ட சில செலவுகளைச் செய்வதற்கும், குறிப்பிட்ட சில வரவுகளை வசூல் செய்வதற்குமான அதிகாரத்தை அளிக்கிறது எனவும் காஸ் டன் ஜேஸ் (Goston Jeze) கருதுகிருர். பால் லிராய் பூலோ (Paul Leroy Beauliew)வின் விளக்கம் மிக விஸ்தாரமானது. குறிப்பிட்ட ஒரு காலத்தைப்பற்றிய வரவு செலவுகளைப் பற்றிய மதிப்பீட்டைக் கொண்ட அறிக்கை எனவும், எவ்வளவு வரவு தேறும் என்பதையும், எவ்வளவு செலவுகள் மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்பதையும் காட்டும் பட்டியல் எனவும், வருமானங்களை வசூலிப்பதற்கும் செலவு களை மேற்கொள்வதற்கும் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் கொடுக்கப் பட்ட தாக்கீது அல்லது கட்டளை பட்ஜெட்டு எனவும் அவர் கூறுகிருர். "பட்ஜெட்டு என்பது குறிப்பிட்ட ஒரு காலத்தைப் பற்றிய நிதி ஏற்பாடுகளையும், அவை சட்ட சபையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டவை என்பதையும் குறிப்பிடுகிறது," எனப் பாஸ்டபிள் கூறுகிருர்.

"பட்ஜெட்டு என்பது ஒரு திட்டம் மட்டுமன்று. அது ஒரே சமயத்தில் ஓர் அறிக்கையாகவும், மதிப்பீடாகவும், யோசனையாகவும் இருக்கிறது ; நிதி நிருவாகத்தைப் பற்றிய எல்லா முறைகளையும் ஒப்பு நோக்கி ஒரு முழு வடிவமாக இணைக்கும் கருவி," என வில்லோபி (Willoughby) கூறுகிருர். கடந்த ஆண்டைப்பற்றிய வரவு செலவு களைப்பற்றிய மதிப்பீட்டையும், உபரி ஏற்படுமாயின் அதை எப்படிச் சரிக்கட்டுவது என்பதற்கான வழிகள் அடங்கிய யோசனைகளையும் தன்னுள் கொண்டிருப்பது ஒரு பட்ஜெட்டு.

வரவு செலவு திட்டத்தின் இன்றியமையாத அமிசங்கள்

வரவு செலவு திட்டத்தில் இன்றியமையாது இருக்க வேண்டிய அமிசங்கள் நான்கு. அவை, (அ) யாவற்றையும் தன்னுள் அடக்கி இருப்பதும் முரண்பாடு இல்லாமையும், (ஆ) சமநிலை, (இ) சிக்கன மும் துள்ளுவமும், (ஈ) ஒவ்வோர் ஆண்டும் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்பவை. வரவு செலவு திட்டத்தைப் பற்றிய மற்றைய பண்புகளை யெல்லாம் இந்நான்கினுள் நேர்மையாகவோ, மறைமுகமாகவோ அடக்கலாம். இதினின்று வரவு செலவு திட்டத்தின் பயன்கள் மூன்றென்பது விளங்கும். முதலாவது, அது கடந்த காலத்தைப் பற்றிய செய்திகளையும் எதிர்காலத்திற்கான யோசனைகளையும் தெரிவிக்கின்றது, இரண்டாவது, அது எவ்வினங்களில் எவ்வளவு வருமானம் எதிர்பார்க்கலாம் என்பதைத் தெரிவிக்கிறது. இவ்விதத் துறைகளில் எவ்வளவு தொகைகளைச் செலவழிக்க வேண்டும்

என்பதையும் உபரி அல்லது துண்டு விழுந்தால் அதை எவ்வாறு சரிக்கட்டலாம் என்பதையும் தெரிவிக்கும் திட்டமாகவும் இருக்கிறது. மூன்ருவது, அது நிதி நிருவாகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான கருவியாகவும் விளங்குகிறது.

பல வகை வரவு செலவு திட்டங்கள்

வரவு செலவு திட்டங்கள் ஓர் ஆண்டுக்கு மட்டுமோ, அல்லது ஓர் ஆண்டுக்கு மேற்பட்ட நீடித்த காலத்திற்கோ வகுக்கப்படலாம். எல்லா அரசாங்கங்களும் பெரும்பாலும் ஆண்டு வரவு செலவு திட்ட முறையையே பின்பற்றுகின்றன. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. நம்முடைய பழைய பழக்க வழக்கங்கள், ஆண்டு என்ற இயற்கை நியதியையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ஓர் ஆண்டுக்கு மேல் நீண்ட காலத்திற்கு வரவு செலவு திட்டத்தைத் தயாரித்தால், நம் மதிப்பீடுகள் சரியாக இருக்க மாட்டா. ஓர் ஆண்டைவிடக் குறைவான காலத்திற்கு வரவு செலவு திட்டத்தைத் தயாரிப்பின், அது சட்டசபையின் காலத்திற் பெரும்பகுதியை எடுத்துக்கொள்ளும். அதுவுமன்றி, வேருெரு கட்சியினர் பெரும்பான்மையினராக ஆட்சிக்கு வரலாமாதலாலும், ஒவ்வொரு கட்சிக்கும் தனிப்பட்ட கொள்கை இருப்பதாலும், சட்ட சபையில் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பொறுத்திருக்கும் **ஆள் மாகாணம்** உள்ள நாடுகளில் நீண்ட காலத்து வரவு செலவு திட்டங்கள் பயனளிக்கமாட்டா. ஏனெனில், நீண்ட காலத்துத் திட்டத்தைவிட ஆண்டு வரவு செலவு திட்டத்தில் குற்றங்குறைகளை விரைவில் திருத்த முடியும். வியாபாரச் சகடங்களுக்கு (trade cycles) ஏற்ப, வரவு செலவு திட்டத்தை வகுக்க வேண்டும் எனக் கூறுவதற்குப் பலபொருளாதாரக் காரணங்கள் உள்ளன. பொருளாதார வாழ்க்கையில் வீக்கமும் (boom), மந்தமும் (depression) மாறி மாறி வருவதால், வாணிகச்சுழல் காலம் முழுதையும் அரசாங்கம் ஓர் அலகாகக் (unit) கொள்ள வேண்டுமெனச் சிலர் கூறுகின்றனர். வியாபார மந்தக் காலத்தில் வரவு செலவு திட்டத்தில் ஏற்படும் பற்ருக்குறை, சுபிட்சக் காலத்தில் ஏற்படும் உபரியால் சரிக்கட்டப்படும். ஆனுல், இதிலுள்ள இன்னல், வியாபாரச் சட்டத்தின் நீடிப்பைச் சரியாக முற்கூட்டி அறுதியிட முடியாது என்பதே. மேலும், ஓர் ஆண்டுக்குச் சரியாக மதிப்பிடுவதே சிரமமானுல், மூன்று அல்லது நான்கு ஆண்டுகள், அல்லது அதற்கும் மேற்பட்ட காலத்திற்கு உத்தேசமாகக்கூட மதிப்பிட முடியாது என்பது பெறப்படும். இறுதியாக, அரசாங்க நிதி நிலைமையில் பொது மக்களுக்குள்ள நம்பிக்கையும் சிதைந்து போகும்.

கடன் வாங்கிச் செலவு செய்யும் திட்டங்களைப் பெறுத்த வரை நீண்ட காலத்திற்கே வரவு செலவு திட்டங்களை வகுக்க வேண்டும்

என்பது கூறப்படுகிறது. இதற்காக வரவு செலவு திட்டத்தை இரு கூருகப் பிரிக்க வேண்டும். ஒரு பகுதி நடப்புச் செலவையும் அதை ஈடு செய்யும் வரவினங்களையும் குறிக்கும்; இன்னெரு பகுதி மூலதனச் செலவுகளையும் அவற்றைச் சரிக்கட்டக் கடன் வாங்குவதையும் குறிக்கும். இவ்வாறு வரவு செலவு திட்டத்தை இரு கூருகப் பிரித்தாலும், அவை சேர்த்தே சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏனெனில், அப்பொழுதுதான் நாட்டின் நடைமுதலைப் பற்றிய தெளிவான வடிவை நாட்டினர் பெற முடியும்.

வரவு செலவு திட்டங்களைச் சார்பற்ற திட்டமெனவும் (independent budgets), துணை அல்லது உப திட்டமெனவும் (anxiliary or annexe budgets) பிரிக்கலாம். துணை அல்லது உப திட்டங்கள் தனித்திட்டங்களுடன் இணைக்கப்படும். வர்த்தக திட்டங்களுக்கும், சேவைகளுக்கும் துணை வரவு செலவு திட்டங்கள் பயன்படும். ஆனுலும், இம்முறையை விழிப்புடன் கையாள வேண்டும். முதலில் தனியான ஒரு துணைத்திட்டத்தைச் சமர்ப்பிக்கும் அளவுக்கு, வர்த்தக நிலையம் பெரிதளவில் இருக்க வேண்டும். இரண்டாவதாக, இந்நிறுவனத்தில் புது வரவு செலவு திட்டம் பாதிக்கப்படக் கூடுமாயின், தனியாகத் துணைத் திட்டம் வேண்டுவது இன்றியமையாதது. இந்தியாவின் இருப்புப்பாதை வரவு செலவு திட்டம் ஒரு துணைத் திட்டமாகும். இத்திட்டத்திஞல் ஏற்படும் மற்றெரு நன்மை என்னவெனில், இத்திட்டத்தைச் சட்டசபை சரியாகப் பரிசீலனை செய்வதற்குத் துணை செய்வது. ஜெர்மனி, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து போன்ற நாடுகளின் இருப்புப் பாதைக்குத் துணைத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

நெருக்கடியான காலங்களில் பயன்படுத்தப்படும் கருவி அசாதாரண வரவு செலவு திட்டம் (extraordinary budgets), சாதாரண அல்லது வழக்கமான வரவு செலவு திட்டத்திலிருந்து (ordinary or normal budgets) இத்தகைய திட்டத்தில் வரவும் செலவும் பிரிக்கப்படுகின்றன. ஆனுல், பெரும்பாலும் சாதாரணத் திட்டத்திலிருந்து அசாதாரணத் திட்டத்திற்குச் செலவினங்களை மாற்றுவது மரபாகி வருகிறது. இதனுல், அசாதாரண வரவு செலவு திட்டத்தின் வரவும் செலவும் சமனுக்கப்படுகின்றன. ஆயினும், இச்சமநிலை (balance) கற்பனையானதே. சாதாரணத் திட்டத்தில் ஏற்படும் பற்ருக்குறையை நிதியமைச்சர் சமாளிப்பதற்கான ஒரு கருவி இது. அசாதாரண பட்ஜெட்டு மந்திரவாதியின் குல்லாவைப் போன்றது. அதன் வரவையும் செலவையும் கடன் வாங்குவதன் மூலமே சமனுக்க முடியும். வரவு செலவு திட்டத்தில் உள்ள இனங்களைச் சுட்டுவது அல்லது குறைப்பதன் மூலமாகப் பல தவருன வழிகளுக்குப் பயன்

படுத்துவதை எளிமையாக்குவது இக்கருவியில் உள்ள ஒரு பெரிய குறைபாடு.

திருத்தும் வரவு செலவு திட்டங்கள்
(Corrective and Supplementary Budgets)

திருத்தும் வரவு செலவு திட்டம் என்பது, முதல் வரவு செலவு திட்டத்தைப் புறக்கணித்து ஒதுக்கும் இரண்டாவது திட்டமாகும். முதல் திட்டம் நடைமுறை நிலையால் பாதிக்கப்பட்டாலே திருத்தும் வரவு செலவு திட்டம் கொண்டு வரப்படும். இம்முறை ஆண்டு தோறும் மேற்கொள்ளப்படுமாயின், சட்டசபை முதல் வரவு செலவு திட்டத்தைத் தாற்காலிகமானதாகக் கருதுவதற்கும் அதனால் கவன மின்றித் திட்டம் தயாரிப்பதற்கும் ஏதுவாகும். மேலும், ஆண்டுச் செலவின் ஒரு பகுதியையே இது கட்டுப்படுத்துகிறது. துணை வரவு செலவு திட்டம் என்பது, முதல் திட்டத்திற்கு ஒரு பிற்சேர்க்கை யாகும். முதல் வரவு செலவு திட்டத்தில் கண்டுள்ள மதிப்பீடுகளை இது கூட்டவோ அல்லது குறைக்கவோ செய்கிறது. ஆகவே, திருத்தும் பட்ஜெட்டைவிட, துணை பட்ஜெட்டு முறை நல்லது. பொது வாக முதல் திட்டத்தில் ஆண்டுள்ளதைவிடக் கூடுதலாகச் செல வழிக்க வேண்டுமாயின், துணை பட்ஜெட்டு முறை மேற்கொள்ளப் படுகிறது.

மொத்த வரவு செலவு திட்டமும் நிகர வரவு செலவு திட்டமும்
(Gross and Net Budgets)

'வரவு செலவுகளைப் பற்றிய மொத்தப் புள்ளி விவரங்களை வரவு செலவு திட்டத்தில் தர வேண்டுமா, அல்லது இவை இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை மட்டும் காண்பித்தல் போதுமா?' என்பது கேள்வி. மொத்தத் தொகைகளையே தெரிவிக்க வேண்டும். ஏனெ னில், அப்பொழுதுதான் சட்டசபை ஒரே சமயம் எல்லா வரவு செல வினங்களையும் கவனத்தில் கொள்ள இயலும். ஆனால், இதன் மூலம் மொத்தத் தொகைகள் கூடுகின்றன என்று கூறப்படுகிறது. வர்த்த கத் தேவைகளுக்குத் தனி உப பட்ஜெட்டுகள் சமர்ப்பிப்பதன் மூலம் இவ்வெதிர்ப்பைச் சமாளிக்கலாம். நிகரப் புள்ளி விவரங்களையே கொடுத்தால் சட்டசபை உறுப்பினருக்கு ஒன்றும் விளங்காது. வரு மானம் தரக்கூடிய வர்த்தகங்களைப் பொறுத்த மட்டுமே மொத்தம் அல் லது நிகர எண்களைப் பயன்படுத்துவது முக்கியத்துவம் பெறுகிறது.

வரவு செலவு திட்டத்தின் வடிவமும் உள்ளடக்கமும்
(Form and Contents of the Budget)

வரவு செலவு திட்டம் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண் டுள்ளதாகவும், விளக்கமானதாகவும் இருக்க வேண்டும். வரவினங்

களின் தலைப்புகளும், செலவினங்களின் தலைப்புகளும் வகுக்கப்பட்ட முறை அரசாங்க மக்கள் நலன்களைப் பற்றிய எல்லா விவாதங்களையும் சட்டசபை திறம்பட நடத்துதற்கு ஏற்ற வகையில் அமைய வேண்டும். அப்பொழுதுதான் சட்டசபை தெளிவாக வாக்குக் கொடுக்க முடியும். வரவு செலவு இனங்களின் வகை முறை நிலையானதாக இருக்க வேண்டும். இதில் மாறுதல் செய்ய வேண்டின், தக்க முன்னறிவிப்புடன் செய்ய வேண்டும். தக்க முன்னறிவிப்புடன் மாறுதல் செய்யவில்லை எனில், வரவு செலவு பற்றிய உண்மையான நிலையை மக்கள் தெரிந்துகொள்ள இயலாது.

நிதியாண்டு

வரவு செலவு திட்டத்தைத் தயாரிப்பதில் இரண்டு மூன்று முக்கிய விஷயங்களை மேலும் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. முதற்கண் நாம் பரிசீலனை செய்ய வேண்டுவது, 'எக்காலத்து எடுகோளைக் (data) குறிப்பிடுவதாக வரவு செலவு திட்டம் இருக்க வேண்டும்?' என்பது. பன்னிரண்டு திங்களையா, அல்லது நாள் அட்டவணை ஆண்டைக் குறிப்பதாகவா? 1914-18 பெரும் போருக்கு முன்பு சில ஜெர்மன் நாடுகள் இரண்டாண்டுகட்கு ஒரு முறை வரவு செலவு திட்டத்தைச் சமர்ப்பித்தன. ஹெஸ்ஸி (Hesse) நாட்டில் மூன்றாண்டுக்கு ஒரு முறை வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கும் முறை இருந்தது. ரஷ்யாவின் படைச் செலவு ஏழாண்டுகட்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டது.

நிதியாண்டின் ஆரம்பம் நாடுதோறும் வேறுபடுகிறது. இங்கிலாந்தில் 1508 முதல் 1799 வரை நிதியாண்டு அக்டோபர் 10ஆந் தேதி முடிந்தது. 1800 முதல் 1832 வரை ஜனவரி 5ம், 1833 முதல் 1854 வரை ஜனவரி 5ம், மார்ச்சு 31ம், ஏப்பிரல் 5ம் முடிந்தன. 1855ஆம் ஆண்டு, மார்ச்சு 31ஆம் நாளுடன் நிதியாண்டு முடிய வேண்டுமென்னும் வழக்கம் முதன்முதல் மேற்கொள்ளப்பட்டது- இந்தியாவில் நிதியாண்டு ஏப்பிரல் 1ல் தொடங்கி, அடுத்து மார்ச்சு 31ல் முடியும் வழக்கம் 1866ஆம் ஆண்டு முதன்முதல் நடைமுறைக்கு வந்தது. மார்ச்சு 31ல் நிதியாண்டு முடியும் வழக்கத்தை இந்தியா, பிரிட்டன், கனடா, தென்னாப்பிரிக்கா, நியூசிலாந்து, டென்மார்க்கு, ஜெர்மனி, கிரீஸ், ருமேனியா, துருக்கி, ஜப்பான் போன்ற நாடுகள் மேற்கொண்டுள்ளன. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இத்தாலி, மெக்ஸிக்கோ, நார்வே, சுவீடன் நாடுகளில் நிதியாண்டு ஜூன் 30ஆந் தேதியுடன் முடிகிறது. ஜமெய்க்கா, டிரினிடாடு, அர்ஜென்டைனா, பெல்ஜியம், பிரேசில், சில்லி, பின்லாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து, போலந்து, சுவிட்சர்லாந்து நாடுகளில் நிதி

யாண்டு டிசம்பர் 31ல் முடிகிறது. நிதியாண்டைத் தேர்ந்தெடுப்பதும், வரவு செலவு திட்டத்தைச் சட்டசபையில் சமர்ப்பிப்பதற்கான நாளைக் குறிப்பிடுவதும் நிருவாகச் சௌகரியங்களைப் பொறுத்தவை.

வரவு செலவு திட்ட முனைப்பு

(Budgetary Initiative)

எல்லா நாடுகளிலும் ஆளும் கணந்தான் (executive) வரவு செலவு திட்டத்தைத் தயாரிக்கிறது. ஏனெனில், அரசாங்கமே ஒரு நாட்டின் நிதிக் கொள்கைக்குப் பொறுப்பாளியாய் இருப்பதால், அக் கொள்கையை வகுக்கும் அதிகாரமும் அதற்கே இருக்க வேண்டும். மேலும், வேறெந்தச் சாராரையும்விட, நிருவாகத்தில் உள்ளவர்களுக்கே நிதிப் பிரச்சினைகளைப் பற்றிய விவரங்கள் அதிகமாகத் தெரியும். ஆதலால், அவர்கள் தயாரித்தால் வரவு செலவு திட்டம் சரியானபடி அமைந்திருக்கும் என நாம் எதிர்பார்க்கலாம். இத்தகைய சூழ்நிலையில் தயாரிக்கப்படும் வரவு செலவு திட்டம் ஓர்மை குலையாதவாறு (harmonious) இருக்கும் என்பதற்குத் தக்க காரணங்கள் இருப்பதால், வரவு செலவு திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு நிருவாகத்தினருக்கு விடப்பட்டிருக்கிறது.

வரவு செலவு திட்டத் தயாரிப்பு

சட்டசபையில் சமர்ப்பிப்பதற்கான வரவு செலவு திட்டத்தை நிருவாகம் அல்லது ஆளும் கணம் தயாரிக்கிறது. பல வேறுபட்ட நாடுகளிலும் மேற்கொள்ளப்படும் முறையை ஈண்டு விரிவாகவும் கூற வேண்டுவதில்லை. பல நாடுகளுக்கிடையேயும் பெருத்த ஒற்றுமை வரவு செலவு திட்டத் தயாரிப்பு முறையில் காணக்கிடக்கிறது. ஆகவே, ஒரு நாட்டில் இது தயாரிக்கப்படும் முறையைக் கூறுதல் போதும். இங்கிலாந்தை எடுத்துக்காட்டாகக் கொள்வோம். நிதியாண்டு ஏப்பிரல் 1ல் தொடங்கி, மார்ச்சு 31ல் முடிகிறது. நிருவாகத்தில் ஒவ்வோர் இலாக்காவும் வரும் ஆண்டிற்கு மதிப்பீடுகளைத் தயாரிக்கிறது. இம்மதிப்பீடுகளுள் ஒவ்வொன்றும் ஒரு பெரிய குவார்ட்டோ (quarto) தொகுதி அளவு உள்ளது. வரும் ஆண்டுக்கு ஒவ்வோர் இனத்திற்கும் எவ்வளவு தேவைப்படும் என்பதை மிகவும் திட்டவட்டமாகவும் துல்லியமாகவும் இம்மதிப்பீடுகள் கூறுகின்றன. இவை தரைப்படை மதிப்பீடுகள், கடற்படை மதிப்பீடுகள், சிவில் சர்விஸ் மதிப்பீடுகள் அனைத்தையும் கூறும். நிதி அமைச்சர் இம் மதிப்பீடுகளை அடிப்படையாகக்கொண்டு வரும் ஆண்டிற்கு எவ்வளவு நிதி தேவைப்படும் என்பதையும், கடந்த ஆண்டை அடிப்படையாகக்

கொண்டு ஒவ்வோர் இனத்திலிருந்தும் எவ்வளவு வருமானம் வரக் கூடும் என்பதையும் கணக்கிடுகிருர். பின்பு எல்லா ஏடுகளையும் அவர் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கிருர். அது போல வரும் ஆண்டில் எவ்வளவு செலவு ஆகும் என்பதையும், வரவினங்கள் மூலம் எவ் வளவு எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும், புதிய வரிகளுக்கு அவசியமா என்பதையும், அவ்வாறு அவசியமாயின் எவ்வெவ்வரி கள் விதிக்கப்படவேண்டும் என்பதையும், வரிகளுக்கு அவசியமில்லை யெனில், எவ்வெவ்வரிகளை வருமானத்தையும் செலவையும் சரிக்கட்டு வதற்காக ரத்துச் செய்யலாம் அல்லது மாறுதல்கள் செய்யலாம் என் பதையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் அவர் தெரிவிக்கிருர். இவ் வகைதான் வரவு செலவு திட்டம் எனப்படுகிறது.

முப்பதாமதிகாரம்

வரவு செலவு திட்டத்தைச் சட்டமாக்குவது

(The Legalisation or Authorization of the Budget)

வரவு செலவு திட்டத்தின் இரண்டாவது நிலை, அதைச் சட்ட சபைக்குச் சமர்ப்பிப்பதும், அதன்மீது சபை எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையும் ஆகும். வரவு செலவு திட்டத்தைப் பரிசீலனை செய்யுமுறை எல்லா நாடுகளிலும் ஒரே விதமாக அமையவில்லை. பிரிட்டிஷ் உதாரணத்தைப் பல நாடுகளும் இந்தியாவும் பின்பற்று கின்றன.

பிரிட்டனில் கடைப்பிடிக்கும் முறை

(Procedure in Britain)

இங்கிலாந்தில் எல்லா அரசாங்கக் காரியமும், அரசியார் நிகழ்த்தும் உரையையும் அதற்குப் பதில் கூறுமுகத்தான் நிகழும் விவாதத்தையும் முதற்படியாகக்கொண்டவை. அரசியாரின் உரையில் அரசாங்கத்தின் நிதித் தேவைகளின் மதிப்பீடு அடங்கியிருக்கிறது. அதற்கான சப்ளையைக் கொடுக்குமாறு முதல் வாக்கு (First vote) எடுக்கப்படுகிறது. குறிப்பிட்ட தேதியிலன்றி இதைத் திருத்துவதோ, இதைப் பற்றி விவாதம் நடத்துவதோ முடியாது. சப்ளையின்மீது ஓட்டெடுப்பு முடிந்ததும் பொது மக்கள் சபை இரண்டாவது ஓட்டின் மூலம் ஒரு நாளைக் குறிப்பிடுகிறது ; அன்று தன்னைப் பொதுச் சபையின் குழுவாக மாற்றிக்கொண்டு பொது மக்கள் சபையைப் (House of Commons) பரிசீலனை செய்கிறது. இதுதான் சப்ளைக் குழு (Committee of Supply) என்பது. இக்குழுவிலேதான் வரவு செலவுத் திட்டத்தின் சட்ட பூர்வமான பரிசீலனை நடைபெறுகிறது. மொத்தச் செலவுகளைத் தோராயமாகவாவது (in a general way or approximately) நிருணயித்த பின்பு சபை இதற்கான வழி வகைகளை (ways and

means) ஆராயும் குழுவாக மாறுகிறது. வேண்டும் பணத்தை எவ்வெவ்வழி வகைகளில் திரட்டலாம் என்பது பற்றி யோசனை கூறுவதே இக்குழுவின் அலுவல். இக்குழுவிலேதான் நிதியமைச்சர் தம்முடைய வரவு செலவு திட்ட உரையை நிகழ்த்துகிறார். தலைவர் இருக்கையில் சட்ட சபைத் தலைவர் இல்லாது நடத்தப்படும் முழுச் சபையின் குழுவில் (Committee of the whole House) கட்டுப்பாடின்றியும் எளிதாகவும் உறுப்பினர்கள் சந்தித்து விவாதம் நடத்த வகை செய்யப்படுகிறது. தலைவர் இருக்கையில் இருப்பாராயின், சில நெறி முறைகளைக் கண்டிப்பாகப் பின் பற்றியாக வேண்டும். வரவு செலவு திட்டம் பொது மக்கள் சபையில் விவாதிக்கப்பட வேண்டும். சுமார் இருபது நாள்களுக்கு விவாதம் தொடர்ந்து சபைக் குழுவில் நடைபெறுகிறது. இது வரை பரிசீலனை செய்யப்படாத இனங்கள் அனைத்திற்கும் ஓர் இறுதி நேரம் (guillotine) நிர்ணயிக்கப்படுகிறது. விவாதிக்கப்படாத இனங்கள் எல்லாவற்றின்மீதும் அப்பொழுது வாக்குகள் எடுக்கப்படுகின்றன. ஆளும் கணப் பிரதிநிதிகள் அல்லது இலாக்காக்களின் தலைவர்கள் (பெரும்பாலும் அமைச்சர்கள்) இருப்பார்கள். நிதி விவகாரங்களைப்பற்றிய எல்லா விஷயங்களிலும் பொதுமக்கள் சபையின் தீர்ப்பே முடிவானது. இங்கிலாந்தில் வரவு செலவு திட்ட வேண்டுகோள்கள் (budget requests) அதிகபட்சமாகக் கருதப்படுவதால் பாராளுமன்றத்திற்கு அவற்றை ஒப்புக்கொள்ளவோ அல்லது குறைக்கவோ தான் அதிகாரம் உண்டு; கூட்டுதற்கு அதிகாரமில்லை. அரசாங்க உறுப்பினரைத் தவிர்த்து, சபையின் வேறெந்த உறுப்பினருக்கும் புதிய செலவினங்களைப்பற்றிய யோசனைகளைக் கூறுவதற்கு முடியாது. அவர் தீர்மானத்தில் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அரசாங்கத்தின் பணத்தைச் செலவழிக்கலாம் என ஒரு தீர்மானத்தைக் கொணரலாம். சபை அத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்வது அத்தீர்மானத்தில் அடங்கிய செலவினத்திற்கு அங்கீகாரம் அளித்ததாகும். ஆயினும், தனி உறுப்பினர் (private member) நடுவர் குறிப்பிட்ட தொகையை குறிப்பிட்ட ஒரு காரியத்திற்குச் செலவழிக்க வேண்டுமென்று தீர்மானம் கொணர முடியாது. ஏனெனில், இவ்விதத்தில் உள்ள தீர்மானம் கொண்டு வரும் அதிகாரம் அமைச்சருக்கே உண்டு. இதனால், வரி கொடுப்போரின் நலம் பெரிதும் பாதுகாக்கப்படுகிறது. எவ்வாறெனில், ஒரு தனி உறுப்பினர் வாக்கு வன்மையால் உந்தப்பட்டுச் சபை குறிப்பிட்ட ஒரு காரியத்திற்கு அதிகம் செலவழிக்கலாம் எனப் பெருந்தன்மையுடன் அனுமதிக்குமாயின், மனச்சாட்சி இல்லாத பல அரசியல் தலைவர்களும் மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக ஒருவரோடொருவர் போட்டியிடுவர். இவ்விதி சட்டத்தின்பாற்பட்டதன்று. இரு சபைகளின் பிற நிரந்தரக் கட்டளைகள் (standing orders) அல்லது தீர்மானங்களைக் கொண்டு

இதுவும் தன்னுடைய நடப்பு முறைக்கு (procedure) வழி காட்டியாக ஒரு பொது ஸ்தாபனம் தானே வகுத்துக்கோண்ட விதியாகும். —(ஹான்சன்)

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நடப்பு முறை

(Procedure in the United States)

*1912*ல் வரவு செலவு திட்டக் கணக்குச் சட்டம் (The Budget and Accounting Act) இயற்றப்பட்ட பின்பு கீழ்க்காணும் முறை ஓரளவு செலவு திட்டத்தைப்பற்றிய அளவில் கையாளப்படுகிறது. ஜனுதிபதியும், அவர் அமைச்சர்களும் சமஷ்டி நிருவாகத்தைப்பற்றிய முழு வரவு செலவு திட்டத்தையும் தயாரிக்கிருர்கள். அதற்கான முழுப்பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக்கொள்கிருர்கள். பிரதிநிதி சபையும் (கீழ்ச்சபை), செனட்டும் (மேற்சபை) வரவு செலவு திட்டத்தைப் பரிசீலனை செய்கின்றன. காங்கிரஸ் (சட்டசபை) இம் மதிப்பீடுகளைக் குறைக்கலாம் அல்லது மாற்றலாம். பிரதிநிதிகள் சபையைச் சார்ந்த ஒதுக்கீடுகள் குழுவும் (The Committee of Appropriations) செனட்டைச் சார்ந்த நிதிக் குழுவும் (The Finance Committee) எந்த நிருவாகத் தலைவரையும் அழைத்துத் தகவல் கேட்கலாம். *1921*ஆம் ஆண்டிற்கு முன்பு கருவூலம் காங்கிரசுக் கான எல்லா மதிப்பீடுகளையும் தொகுத்தது. அதன் பின் காங்கிரஸின் பல்வேறு குழுக்களும் மேற்கொண்டு காரியங்கள் செய்தன. அதனுல், நிருவாகத்தினருக்கும் மிகவும் சிரமம் ஏற்பட்டது. ஏனெனில், அமைச்சின் உறுப்பினருள் ஒருவரும் கீழ்ச்சபையிலோ அல்லது மேற்சபையிலோ உறுப்பினராய் இல்லாததால், சட்டசபையில் நேரில் வந்து தங்கள் கொள்கையை விளக்க முடியாது போயிற்று. இப்போதுங்கூடப் பிரதிநிதிகள் குழுவைச் சார்ந்த ஒதுக்கீட்டுக் குழுவும் வழிவகைகளை ஆராயும் குழுவும் தனித்தனியாகவே வேலை செய்கின்றன. ஆயினும், *1923*க்கு முன்பு இருந்ததைவிட அதிகக் கூட்டுறவுடன் இவ்விரு குழுக்களும் பணியாற்றுகின்றன. இது நிதி நிலை செம்மைப்பட உதவுகிறது. ஏனெனில், நிருவாகமும் சட்ட சபையும் இணைந்து வேலை செய்ய வேண்டியிருக்கிறது. வரவு செலவு பற்றிய வரை இரு சபைக்கும் சம அதிகாரம் உள்ளது. செனட்டுச் சபைப் பிரதிநிதிகள் சபையுடன் முரண்பட்டால், இரு சபைகளின் பிரதிநிதிகளும் ஒன்றுகூடிப் பேசி விஷயத்தை முடிவு செய்கின்றுர்கள். நடைமுறையில் இரு சபைகளும் ஓரளவு விட்டுக்கொடுக்க வேண்டுவ தாகிறது. ஆயினும், பெரும்பாலும் செனட்டின் கருத்து ஏற்றுக் கொள்ளப்படுகிறது. பண விஷயங்களைப்பற்றிய மசோதாக்கள் முதன்முதல் கீழ்ச்சபையிலே தாக்கல் செய்யப்பட வேண்டும் (அரசியற்சட்டத்தின் பிரிவு *7*, விதி *1*). ஒதுக்கீட்டு மசோதாக்கள்

கீழ்ச் சபையிலேயே முதன்முதல் தாக்கல் செய்யப்படுவதும் சம்பிர தாயமாகும். இதன் விளைவும் கீழ்ச்சபை செயல் ஆற்றிய பின்பே செனட்டு வரவு செலவு திட்டத்தைப் பற்றிய விவகாரங்களைக் கவனிக்கத் தொடங்குகிறது.

ஒதுக்கீட்டுக் குழு வரவு செலவு திட்டத்தில் உள்ள செலவு மசோதாக்களைப் பரிசீலனை செய்கிறது. வரவினங்களைப்பற்றிய மசோதாக்களை வழி வகைகளை ஆராயும் குழுப் பரிசீலனை செய்கிறது. ஒவ்வொரு குழுவும் பல துணைக் குழுக்களாய்ப் பிரிக்கப்பட்டிருக் கிறது. கீழ்ச்சபை ஒதுக்கீட்டுக் குழு 11 பிரிவுகளாய்ப் பிரிந்துள்ளது. 10 பெரிய ஒதுக்கீட்டு மசோதாக்களுக்கு 10 துணைக் குழுவும் நிரந்தர ஒதுக்கீட்டுக்கு ஒரு துணைக் குழுவும் எனச் செயற்படுகின்றன. செனட்டு ஒதுக்கீட்டுக் குழுவும் இவ்வாறே துணைக் குழுக்களாய்ப் பிரிந்துள்ளது. ஆனால், செனட்டின் நிரந்தர ஒதுக்கீட்டுக்கெனக் குழு இல்லை,

சட்டசபை வரவு செலவு திட்டம் (legislative budget) என்று கூறப்படும் வரவினங்களையும் செலவினங்களையும் பற்றிய அறிக்கை யைத்தயாரிப்பதற்கான ஓர் இணைப்புக் குழுவைச் (joint committee) சட்டம் ஏற்படுத்தியது (அரசாங்கச் சட்டம் 601, 79 ஆம் காங்கிரஸ், இரண்டாவது செக்ஷன்). இவ்வறிக்கை ஒவ்வோர் ஆண்டும் பிப்பிரவரி மாதம், 15ஆம் தேதி சமர்ப்பிக்கப்பட வேண்டும். சபை வாக்களித்த ஒதுக்கீடுகளில் உள்ள செலவினங்களைக் குறைப்பதற்கு ஜனாதிபதிக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை. கடனைக் கூட்டுவதற்கும் இதில் வகை செய்யப்பட்டுள்ளது. எதிர்பார்க்கும் வரவினங்களைவிடச் செலவினங்கள் அதிகரிக்குமாயின், இவ்விணைப்புக் குழுவின் தீர் மானம் மூலம் அரசாங்கக் கடனை அதிகரிக்க முடியும். ஆனால், இத் தீர்மானத்தின்மீது எங்ஙனம் ஓட்டு எடுப்பது என்பது பற்றி விளக்கம் தரப்படவில்லை. இச்சட்டத்தினால் ஒவ்வொரு சபையின் குழு அமைப்பு முழுவதும் பெரிய அளவில் மாற்றி அமைக்கப்பட்டது. முன் பிறந்த குழுக்களின் அலுவல்கள் இணைத்து ஒன்று சேர்க்கப்பட் டதுமன்றிக் குழுக்களின் தொகையும் குறைக்கப்பட்டது. இதனால், காங்கிரஸ் தன் வேலையைச் செய்வது எளிதாக்கப்படுவதுடன், அர சாங்க நிதிக் கட்டுப்பாடும் சிறந்த முறையிற் செய்யப்படும்.

இந்தியாவில் நடப்பு முறை

(Procedure in India)

இந்திய அரசாங்கச் சட்டத்தின் 112ஆம் விதி, ''இப்பகுதியில் ஆண்டு வரவு செலவு அறிக்கை என்று கூறப்பட்ட இந்திய அரசாங்

கந்தின் வரவு செலவுகள் இவற்றின் மதிப்பீட்டைப் பற்றிய **அவ்வாண்டின் நிதி அறிக்கையை** ஒவ்வொரு நிதி ஆண்டும் பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் சமர்ப்பிக்குமாறு ஜனுதிபதி செய்ய வேண்டும்,'' என்று கூறுகிறது. ஜனுதிபதியின் சிபாரிசு இன்றி மானியத்திற்கான எந்தக் கோரிக்கையும் செய்யப்படக்கூடாது. அரசாங்கத்தின் செலவு வாக்கெடுப்புக்கு உட்பட்டது, வாக்கெடுப்பிற்கு உட்படாதது என இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வாக்கடுப்பிற்கு உட்படாத இனங்களைப் பாராளுமன்றம் **விவாதிக்கலாம்.** ஆனுல், அவற்றின்மீது வாக்களிக்க முடியாது. வாக்கெடுப்பிற்குப் புறம்பான இனங்கள் வருமாறு: 1. ஜனுதிபதி சம்பளமும் படியும், 2. ராஜாங்கச் சபையின் தலைவர் துணைத் தலைவர் இவர்களின் சம்பளங்களும் படியும், 3. இந்திய அரசாங்கத்தின் கடன் கட்டணங்கள், 4. சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளின் சம்பளங்கள், படி, உபகாரச் சம்பளங்கள், சமஷ்டி உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகளின் உபகாரச் சம்பளங்கள், உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகளின் உபகாரச் சம்பளங்கள், 5. இந்தியாவின் கணக்குத் தணிக்கை அதிகாரியின் (Comptroller and Auditor General) சம்பளம், படி, உபகாரச் சம்பளம், 6. ஒரு நீதி மன்றம் அல்லது டிரிபியூனலின் தீர்ப்பு அல்லது கட்டளையை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் தொகைகள், 7. அரசியல் சட்டம் அல்லது பாராளுமன்றத்தால் அறிவிக்கப்பட்ட பிற செலவினங்கள்.

வாக்கெடுப்பிற்கு உட்பட்ட இனங்கள் எல்லாம் மக்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மக்கள் சபை அவற்றிற்குத் தன் சம்மதத்தை அளிக்கலாம்; மறுக்கலாம்; அல்லது தொகையைக் குறைக்கலாம்.

யூனியன் பட்ஜெட்டு, பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் நிதியமைச்சராலும், மாநிலங்களில் வரவு செலவு திட்டம் இரு சபைகளிலும் மாநில நிதி அமைச்சராலும் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்தியாவில் வரவு செலவு திட்டங்கள் பொதுவாகப் பிப்பிரவரியில் சட்ட சபையில் தாக்கல் செய்யப்படுகின்றன. பொது வரவு செலவு திட்டத்திற்குச் சிறிது முன்பு இருப்புப்பாதை வரவு செலவு திட்டம் பிப்பிரவரியில் இருப்புப்பாதை அமைச்சரால் சமர்ப்பிக்கப்படுகிறது.

மானியங்களின்மீது விவாதங்களும் வாக்கெடுப்பும்

(Discussions and Voting of Grants)

ராஜ்யங்களிலும் மத்திய அரசாங்கத்திலும் மானியக் கோரிக்கை மீது நடைபெறும் விவாதத்திற்கும் வாக்கெடுப்பிற்கும் வேறுபாடு

இல்லை. வரவு செலவு திட்டத்தைச் சமர்ப்பித்த அன்று ஒரு விவாதமும் நடைபெறுவதில்லை. ஒரு வாரம் கழித்து, சட்டசபையில் வரவு செலவு திட்டத்தில் உள்ள மதிப்பீடுகள் பற்றிய பொது விவாதம் தொடங்குகிறது. இவ்விவாதம் சுமார் நான்கு நாள்கள் வரை நடைபெறுகிறது. இதற்கு நிதி அமைச்சர் பதில் கூறுவார்.

பொது விவாதம் முடிந்த பிறகு மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இக்கோரிக்கைகள் வாக்கெடுப்பிற்கு உட்பட்ட இனங்களுக்கே பொருந்தும். மத்திய அரசாங்கத்திலும் மாநில அரசாங்கங்களிலும் இணைக்கப்பட்ட நிதியின்மீது சுமத்தப்பட்ட இனங்கள் பேரில் (items charged on the consolidated fund) விவாதம் மட்டும் நடக்கலாமே ஒழிய, வாக்கெடுப்பது இல்லை.

ஒவ்வொரு மானியக் கோரிக்கையும் அதனதன் பொறுப்பை வகிக்கும் அமைச்சரால் பின் வரும் வார்த்தைகளால் பிரேரிக்கப்படுகிறது. ''..................ரூபாய்க்கு மேற்படாமல் (ஜனாதிபதி அல்லது கவர்னருக்கு) மார்ச்சு 1962 உடன் முடியும் ஆண்டிற்குக் கொடுக்கப்படும் தொகைலயப் பட்டுவாடா செய்வதற்காக அளிக்கப்பட வேண்டும்.'' இக்கோரிக்கையைச் சமர்ப்பிக்கும்போது அமைச்சர் அந்த ஆண்டில் தம் இலாக்காவின் சாதனைகளையும் வரப்போகும் ஆண்டிற்குத் தாம் மேற்கொள்ளப்போகும் கொள்கையையும் விவரிக்கிறார். இப்பேச்சுப் பொதுவாகப் பெரும்பாலும் அரசியல் சம்பந்தமாக இருக்குமே தவிர, நிதி சம்பந்தமாக இராது.

எல்லாக் கோரிக்கைகளையும் விவாதிப்பதற்குச் சட்டசபைக்கு வாய்ப்பில்லை. ஏனெனில், மிகக்குறுகிய காலமே—சுமார் 12 நாள்கள்—விவாதத்திற்காக (மானியக் கோரிக்கைகளுக்காக) ஒதுக்கப்படுகின்றன. இறுதி நாளன்று இது வரை விவாதிக்காது முடிவு செய்யப்படாத கோரிக்கைகளெல்லாம் வாக்கெடுப்பிற்கு விடப்படுகின்றன. ஆகவே, ஒவ்வோர் ஆண்டும் கோரிக்கைகளில் பெரும்பகுதி விவாதிக்கப்படாமலே போய்விடுகிறது.

அமெரிக்காவைப் போன்று இந்தியாவிலும் யூனியன் அரசாங்கம் பண மசோதாக்களை இந்திய அரசியல் சட்டத்தின்படி கீழ்ச்சபை (மக்கள் சபை)யிலேயே முதன்முதல் தாக்கல் செய்ய வேண்டும். மக்கள் சபை இவற்றை நிறைவேற்றியவுடன் ராஜாங்க சபைக்கு இவை அனுப்பப்படும். ராஜாங்க சபை இவற்றின் பேரில் சிபாரிசுகள் செய்யலாம். ஆனால், திருத்தங்கள் கொணர்வதற்கு அச்சபைக்கு அதிகாரம் இல்லை. மக்கள் சபை ராஜாங்க சபை செய்த

சிபாரிசுகளைக் கொள்ளவோ, தள்ளவோ செய்யலாம். ராஜாங்க சபை செய்த சிபாரிசுகளை மக்கள் சபை ஏற்க மறுத்தாலும், வரவு செலவு திட்டம் இரு சபைகளாலும் நிறைவேற்றியதாகக் கொள்ளப் படும். மக்கள் சபை நிறைவேற்றிய பண மசோதா ஒன்றை ராஜாங்க சபை அம்மசோதாவைத் தனக்குக் கிடைத்த நாளிலிருந்து 14 நாள் களுக்குள் மக்கள் சபைக்குத் திருப்பி அனுப்பாவிடில், அம்மசோதா இரு சபைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளப்படும். இவ் விதமாக நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா, அதிபரின் (President) இணக்கம் பெற்றுப் பாராளுமன்றச் சட்டமாகிறது. இதே நடை முறைதான் பெரும்பாலும் மாநிலங்களிலும் கையாளப்படுகிறது.

ஒதுக்கீட்டு மசோதாக்கள்

(Appropriation Bills)

மக்கள் சபை மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றிய பின்பு மிகு விரைவிலேயே நிதி அமைச்சர் ஒதுக்கீட்டு மசோதாவைக் கொணர வேண்டுமென்று இந்திய அரசியல் சட்டத்தின் 114 (1) விதி கூறுகிறது. ஒதுக்கீட்டு மசோதாவில் கீழ்க்காண்பவை அடங்கி யிருக்கும் :

(அ) மக்கள் சபை அங்கீகரித்த மானியக் கோரிக்கைகள்

(ஆ) பாராளுமன்றத்தில் முன்னரே சமர்ப்பிக்கப்பட்ட அறிக் கையில் கண்ட தொகைக்கு மேற்போகாமல் இந்திய இணைப்பின்கீழ் நிதியின்மீது சுமத்தப்பட்ட செலவுகள் ஆகிய இவ்விதமான மசோதா வுக்குப் பாராளுமன்றத்தின் இரு சபைகளும் திருத்தம் கொணர முடியாது.

முப்பத்தொன்றுமதிகாரம்

வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றல்

(The Execution of the Budget)

வரவு செலவு திட்டத்தின்மீது வாக்கெடுத்த பின்னர்ச் சட்டசபை யின் விருப்பங்களை நடைமுறையில் நிறைவேற்றுவதற்குத் தகுந்த நிருவாக இயந்திரம் தேவைப்படுகிறது. நிதி நிருவாகத்தில் இப் பகுதி வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றுதல் எனப்படும். இதில் வருவாயை வசூலித்தல் நிதி இலாக்கா அல்லது கருவூலம் செய்யும் பணிகள், ஒதுக்கீடுகட்கு ஏற்றாற்போலச் செலவழிக்கும் முறை இவையெல்லாம் அடங்கும். கட்டுப்பாடு, தணிக்கை முதலிய முக்கிய விஷயங்களும் நிதி நிருவாகத்தின் இப்பிரிவில் அடங்கும்.

வருமானம் வசூலித்தல் (Collection of Revenue)

செலவழிப்பதற்கு முன்பு பணத்தைத் தேட வேண்டும். ஆகவே, சிறந்த முறையில் வருமானத்தை வசூல் செய்வதன் முக் கியத்துவம் பெறப்படும். பண்டைய நாள்களில் வரிகளை வசூல் செய்வது அவ்வளவு சிக்கலானதாய் இல்லை. அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தில் குவியக்குவிய, வரி வசூல் பலரிடையே பிரித்து ஏலத்திற்கு விடப்பட்டது. இதனால், பெருந்தீமை விளைந்தது. இந் நாளில் பல நாடுகளும் வரி வசூல் செய்வதற்குத் திறமையான உத்தி யோகஸ்தர்களைக் கொண்ட சிறந்த அமைப்பை வகுத்துக்கொண் டிருக்கிறது.

பல நாடுகளிலும் வரியை வசூல் செய்யும் பொறுப்பு நிதி இலாக்கா விற்குத் தரப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், வரி வசூல் செய்வதி லுள்ள சிரமங்களை உணர்ந்த ஓர் இலாக்காதான் பிற இலாக்காக் களில் சிக்கனத்தை வற்புறுத்தத் தகுதியானது என்று எண்ணிய தாகும். இந்தியாவில் மத்திய அரசாங்கத்தின் வசூல் முறை மாநில அரசாங்கங்களின் வரி வசூல் முறைகளினின்றும் வேறுபட்டுள்ளது.

மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரை பல்வேறுபட்ட வரி வசூல் செய்யும் இலாக்காக்களும் நிதி இலாக்காவின் நேரடியான மேற்பார்வையில் நிதி இலாக்காவுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருக்கின்றன. மாநிலங்களில் தனிப்பட்ட வருமான இலாக்காக்களுக்குப் பல வருமான அலுவல்கள் தரப்பட்டுள்ளன. நிதி இலாக்கா இவற்றை ஓரளவு கண்காணிக்கிறது என்பது உண்மையே. ஆயினும், வருமான இலாக்கா (Revenue Department) நேரடியாக நிதி இலாக்காவின்கீழ் இல்லை.

மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரை வரி வசூல் செய்யும் அலுவல்கள் மத்திய வருமானக் கழகத்தைச் (Central Board of Revenue) சார்ந்தவை. இங்கிலாந்தில் நேர்முக வரிகளை வசூல் செய்யும் பொறுப்பு உள் துறை வருமானக் கழகத்தையும் (Board of Inland Revenue) மறைமுக வரிகளை வசூலிக்கும் பொறுப்பு இறக்குமதி வரி, ஆயத் துறைக்கழகத்தையும் (Board of Customs and Excise) சார்ந்தவை. நிதி இலாக்காவின் ஒரு கூறே, மத்திய வருமானக் கழகம். வரி வசூலைப் பொறுத்த எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கும் பொறுப்பும் கண்காணிக்கும் வேலையும் கொண்டது இக்கழகம். இதை நிதி இலாக்காவின் ஓர் உட்பிரிவாகவே கொள்ளலாம்.

கருவூலம்
(The Treasury)

வரிகளைத் தண்டிய பின்பு அவற்றை எவ்வாறு அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும்? சில அலுவலகங்கள் அல்லது கருவூலகங்களிலிருந்து வேறு அலுவலகங்கள் அல்லது கருவூலங்களுக்குக் குறுக்கும் நெடுக்குமாக நாடு முழுவதும் ரொக்கமாகப் பணத்தை அனுப்புவதே பழைய முறையாகும். இந்தியாவைப் போன்ற சில நாடுகளில் இம்முறை இன்றும் நிலவுகிறது. இந்தியாவின் சுமார் 300 மாவட்டக் கருவூலங்களும் (District treasuries) 1,200 கிளைக் கருவூலங்களும் (Sub treasuries) இருக்கின்றன. அரசாசாங்க பாங்கிற்கு (State Bank of India) எங்கெங்குக் கிளைகள் இருக்கின்றனவோ, அங்கங்கெல்லாம் அரசாங்க பாங்கியே கஜானு வேலையை மேற்கொள்ளுகிறது. பிரிட்டனில் அரசாங்க வரவுகளும் செலவுகளும் இலண்டனில் உள்ள இங்கிலாந்து பாங்கியில் (Bank of England) குவிக்கப்பட்டுள்ளன. பிற இடங்களில் அரசாங்கக் கஜானுக்கள் இல்லை. பிரான்சில் அரசாங்கத்தைச் சார்ந்த எல்லா வேலையையும் பிரான்சு பாங்கியே (Bank of France) செய்கிறது. இந்தியாவைப் போன்று அமெரிக்க ஐக்கிய நாடுகளும் மிகப்பரந்த நிலப்பகுதியை அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் கொண்டிருப்பதால் ஓரளவு கஜானு முறை

இருக்கிறது. இருப்பினும், பெரும்பாலும் நாட்டின் பாங்கு முறையைச் சார்ந்தே அரசாங்கத்தின் அலுவல் உள்ளது.

செலவு செய்யும் முறை

(The Method of Spending)

தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான நிதிகளை அரசாங்க இலாக்காக்களுக்கு ஓராண்டில் குறிப்பிட்ட பகுதிக்குக் கொடுப்பது இன்றியமையாதது. பிரான்சில் இறுதியாக வரவு செலவு திட்டம் நிறைவேறுவதற்கு முன்பு ஒவ்வொரு மாதத்திற்கும் கடன் கொடுக்க வாக்குகள் (Votes of credit) அளிக்கப்படுகின்றன. இவை 'தாற்காலிகமான $\frac{1}{12}$ பகுதி' (Provisional twelfths) என்று கூறப்படும். போர்க்காலத்தில் கடன் கொடுக்க வாக்குகள் (Votes of credit) பிற காலங்களைவிடப் பெரிதளவில் பயன்படுத்தப்படுகின்றன. நிதிச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னதாகவே வரி வசூல் செய்யும் அதிகாரத்தை 1913ஆம் ஆண்டில் பிரிட்டனிலும், 1918ஆம் ஆண்டில் இந்தியாவிலும் இயற்றப்பட்ட தாற்காலிகமாக வரிகளை வசூலிக்கும் சட்டம் (The Provisional Collection of Taxes Act) அளிக்கிறது. இந்தியாவைப் பொறுத்த வரை நிதி மசோதாக்களை ஒரு திங்கள் முன்னதாக நடைமுறைக்குக் (retrospective effect) கொணரலாம். மேற்கொள்ளப்படும் செலவினம் அங்கீகரிக்கப்பட்ட செலவினந்தானு என்பதில் போதிய கவனம் செலுத்தப்படுகிறது. இவ்வாறு பிரிட்டனில் செலவினங்கள் ஒதுக்கீட்டுச் சட்டத்தைப் பெரும்பாலும் ஒட்டியே உள்ளன. கம்ப்ட்ரோலர் ஜெனரலுக்குக் (Comtroller Ceneral) கருவூலம் தாக்கீது (requisition) அனுப்புகிறது. இதற்கு அடிப்படையாகப் பாராளுமன்றச் சட்டக் கம்ப்ட்ரோலர் ஜெனரல் கிரெடிட்டுக் கொடைகளைத் தருகிருர். ஒதுக்கீட்டுச் சட்டத்தில் பாராளுமன்றத்தினல் அனுமதிக்கப்பட்ட தொகை வேண்டியிருக்கிறதா என்பதைச் சரிபார்ப்பது அவருடைய கடமையாகும். உடனே குறிப்பிட்ட தொகையைப் பே மாஸ்டர் ஜெனரலின் (Pay master General) கணக்கிற்கு மாற்றுமாறு கருவூலம் இங்கிலாந்து பாங்கிற்குக் கட்டளை பிறப்பிக்கிறது. சில இனங்களில் வேறுபட்டாலும், பிற நாடுகளிலும் இதே நடைமுறைதான் இயங்குகிறது.

கணக்குகள்

(Accounts)

கணக்கை வைத்துக்கொள்வது நிருவாகத்தின் பொறுப்பாகும். அதாவது, பணத்தைப் பெறும் அல்லது செலவழிக்கும் ஏஜென்சி

களின் கணக்கை வைத்துக்கொள்வதாகும். இந்தியாவில் கணக்கு முறையும் தணிக்கை முறையும் அலாதியானவை, அதற்கு இரு காரணங்கள் உள. கணக்கு முறையும் தணிக்கை முறையும் ஆகிய இரு அலுவல்களும் பெரும்பாலும் கன்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் (Controller and Auditor General) என்பவரின்கீழ் அமைக்கப்பட்டிருக்கின்றன (முந்திய ஆடிட்டர் ஜெனரல்). இந்திய அரசாங்கத்திடம் அதிகாரம் குவிக்கப்பட்டு, பல மாகாணங்களும் தங்கள் அலுவல்களுக்கும் அதிகாரங்களுக்கும் கவர்னர் ஜெனரலை முற்றும் சார்ந்திருந்தன. இப்போது கூட இக்குவியல் முறை (centralisation) தொடர்ந்து நீடிக்கிறது. மாநிலங்கள் தங்களுக்கெனத் தனியே தணிக்கை, கணக்கு அதிகாரிகளை வைத்துக்கொள்ளலாம் என்றாலும், நிதி காரணமாக இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை.

பிற நாடுகளுக்கும் நம் நாட்டுக்கும் உள்ள பெரிய வேற்றுமை, கணக்குத் தணிக்கை அலுவல்கள் ஒரே அதிகாரியிடம் குவிக்கப்பட்டிருப்பது. இத்தகைய ஏற்பாடு தணிக்கை முறையின் ஆணிவேரையே அறுப்பதாய் இருக்கிறது. இம்முறை கண்டிக்கத்தக்கதொன்றாகும்.

கன்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரலும் கணக்குகளும்

யூனியன் மாநில அரசாங்கங்களின் கணக்குகளை வைத்துக்கொள்ளும் பொறுப்பு, கன்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரலைச் சார்ந்தது. ஆனால், முதன்முதல் கணக்குகளை எழுதும் வேலை அவருக்கு இல்லை. மத்திய, மாநில அரசாங்கங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகளையும் (finance accounts) தயாரிப்பது அவர் பொறுப்பாகும். இந்தியா முழுமைக்கும் நிதி, வருமானம் உள்ளிட்ட இணைக்கப்பட்ட கணக்குகளைத் (combined finance and revenue accounts) தயாரிப்பதும் அவர் பொறுப்பாகும். பாதுகாப்புப் படைகள், இருப்புப் பாதைகள், இந்தியா ஆபீஸ், இந்தியத் தூதரின் அலுவலகம் (Office of the High Commissioner for India) ஆகிய இவை அனைத்தும் தங்கள் கணக்குகளைத் தாங்களே தயாரிக்கின்றன. யூனியன் மாநில நிறைவேற்றுத் துறைகளுக்குத் (executives) தேவைப்படும் தகவல்களை அவர்கள் கணக்குகளினின்று சேகரித்துக் கொடுப்பதும் அவை ஆண்டு வரவு செலவு திட்டங்களைத் தயாரிப்பதற்குத் துணை செய்வதும் கன்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் செய்யும் வேலையாகும். கன்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் தம் கணக்குகளையும் அறிக்கைகளையும் தயாரிப்பதற்காக வேண்டும் எந்தத் தகவல்களையும் கொடுத்து உதவுவது மத்திய மாநில நிறைவேற்றுத் துறைகளின் கடமையாகும்.

கணக்குகளின் வகையும் தொகுப்பும்

(Classification and Compilation of Accounts)

கணக்குகளின் வடிவமும் (form) வகையும் எந்தக் கணக்கு முறையிலும் மிக முக்கியமானவை. இவ்வடிவமும் வகையும் எவ்வளவு விஞ்ஞான ரீதியாக இருக்கின்றனவோ, அவ்வளவுக்கு அதிகமாகக் கணக்குகளிலிருந்து தகவலைச் சேகரிக்க முடியும். கணக்குகளின் வடிவத்தைத் தீர்மானிப்பது கன்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரலின் கடமையாகும். திட்டமிடப்பட்ட (planned) வரவு செலவு திட்டத்தையும், நிறைவேற்றப்பட்ட (executed) வரவு செலவு திட்டத்தையும் ஒப்பு நோக்க வேண்டுமாயின், கணக்குகளின் வடிவமும், மதிப்பீடுகளின் வடிவமும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். நடைமுறையில் கணக்குகளின் வடிவமே மதிப்பீடுகளின் வடிவத்தைத் தீர்மானிக்கிறதே ஒழிய, பின்னையது முன்னையதைத் தீர்மானிப்பதில்லை.

அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி செலவு சுமத்தப்பட்ட (charged) இனம் வாக்களித்த (voted) இனம் என்றும், 'வருமான' இனம் மூலதன இனம் என்றும் முதற்கண் வகைப்படுத்தப்படுகின்றன. அடுத்து, அரசாங்கக் கணக்குகள் (அ) வருமானம், (ஆ) மூலதனம், (இ) கடன், (ஈ) செலுத்துகை (remittance) என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. இந்நான்கு பகுதிகளும் பல பிரிவுகளாகப் (sections) பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவும் பல பெருந்தலைப்புகளாகப் (major heads) பிரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பெருந்தலைப்பும் பல சிறு தலைப்புகளாகவும் (minor heads) ஒவ்வொரு சிறிய தலைப்பும் உள்ளிட்ட தலைப்புகள் (subordinate heads) அல்லது விரிவான தலைப்புகள் (detailed heads) எனவும் பிரிக்கப்படுகின்றன. சில சமயம் சிறுதலைப்புத் துணைத் தலைப்புகளாகவும் (sub-heads) ஒவ்வொரு துணைத்தலைப்பும் விரிவான தலைப்புகளாகவும் பிரிக்கப்படுகின்றன.

கணக்கு வகையின் மூன்ருவதாக நாம் மனத்தில் இருத்த வேண்டுவது நிருவாகத்தின் வசதி. எக்காரணங்களுக்காகச் செலவினம் மேற்கொள்ளப்பட்டது அல்லது எக்காரணங்களுக்காக இச் செலவினம் அனுமதிக்கப்பட்டது என்பதை அடிப்படையாகக் கொள்ளாது, எந்தெந்த இலாக்காக்கள் பணத்தைச் செலவு செய்கின்றன என்ற அடிப்படையிலேயே நம் கணக்கு முறை பிரிக்கப்பட்டிருக்கிறது. இது, திறமையான நிருவாகமும் நிதிக் கண்காணிப்பும் (financial control) ஏற்பட ஏதுவாயினும், குறிப்பிட்ட ஒரு

நோக்கத்திற்கு எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது என்பதைத் திட்டவட்டமாகக் கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்படுகிறது.

கணக்குகளின் வகை முறை பற்றிய பொதுவான ஆணைகளையும் (general orders) விரிவான கட்டுப்பாடுகளையும் கன்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் வெளியிடுகிருர்.

கணக்குகள் நான்கு தொகுப்புகளில் (compilations) அடங்கும். முதலாந்தொகுப்பு, மாவட்டக் கருவூலங்களும் சில குறிப்பிட்ட இலாக்கா அலுவலர்களும் திங்கள்தோறும் கொடுக்கும் கணக்குகள்; இரண்டாம் தொகுப்பு, இந்தியாவில் கணக்கு அலுவலர்கள் திங்கள் தோறும் தொகுக்கும் கணக்குகள்; மூன்றுந்தொகுப்பு, இந்தியா முழுமைக்கும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் கணக்குகளின் தலைப்புப் பிரகாரம் திங்கள்தோறும் தொகுக்கும் கணக்குகள்; இறுதித் தொகுப்பு, இந்தியா முழுமைக்கும் இணைக்கப்பட்ட கணக்கை (consolidated account) ஆண்டுதோறும் கன்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் தொகுக்கும் கணக்காகும்.

கண்காணிப்பு அல்லது கட்டுப்பாடு

(Control)

நிதிக் கண்காணிப்பிற்குப் பொதுவாக நான்கு திறம்பட்ட அதிகாரிகள் இருக்கிருர்கள்: (அ) நிருவாக உயர்நுதிக் கோபுரத்தின் உச்சியில் (apex of the administrative pyramid) அமர்ந்திருக்கும் அலுவலாளர்களும் நிருவாக அலுவலாளர்களும், (ஆ) நிதி இலாக்கா, (இ) தணிக்கை, (ஈ) சட்டசபை.

ஒவ்வோர் அலுவலகம் அல்லது இலாக்காவின் தலைமை அதிகாரியே அவ்வலுவலகம் அல்லது இலாக்காவின் செலவுகள் மதிப்பிடுபவரும் பட்டுவாடா செய்பவரும் (disbursing officer) ஆவர். சிக்கனமும் திறமையும் ஏற்படுவதற்கு முதன்முதல் கட்டுப்பாடுகளைச் செலுத்த வேண்டிய பொறுப்பு இலாக்காத் தலைமை அதிகாரியைச் சார்ந்ததாகும். இம்மதிப்பீடு, பட்டுவாடா ஆகியவறறைச் செய்யும் அலுவலாளர்களின் வேலையைக் கண்காணிப்பதற்கும் இணைப்பதற்கும் கண்காணிப்பு அதிகாரிகள் (controlling authorities) உள்ளார்கள். அவர்கள் மூலந்தான் மதிப்பீடு செய்யும் அலுவலாளர்கள் தங்கள் மதிப்பீடுகளை அரசாங்கத்தின் நிருவாக இலாக்காக்களுக்கு அனுப்புகின்றுர்கள். சம்பந்தப்பட்ட அரசாங்க இலாக்காதான் இறுதி நிருவாக அதிகாரியாகும். கொள்கையை நிர்ணயிப்பதும் இலாக்காவை நிர்ணயிப்பதும் அதன் பொறுப்பாகும். இலாக்காவின் தலைமையாய்

அமைச்சருக்கு நிருவாக இலாக்கா துணை செய்கிறது, இம்மாதிரி யான நிதி விஷயங்களில் அமைச்சருக்கு மிக்க பயிற்சி இல்லாததால் அவர் கொள்கைகளை நிருணயிப்பதுடன் தம் வேலையை நிறுத்திக் கொள்கிறார்.

இவ்விலாக்காவை மையமாகக் கொண்டு பாராளுமன்ற நிதிக் கண்காணிப்பு முறை இயங்குகிறது. செலவைப் பொறுத்த வரை நிதி இலாக்கா, கொள்கையை நிர்ணயிப்பதில் அக்கறை காட்டுகிறது. வருமானத்தைப் பொறுத்த வரை நிதி இலாக்காவின் கண்காணிப்பு ஒரு வரையறைக்கு உட்பட்டது. ஏனெனில், செலவினத்தைப் போல வரவினத்தை நிருவாகம் பரிசீலனை செய்வதில்லை.

தணிக்கை

நிதிக் கண்காணிப்பின் மூன்றாவது ஏஜென்ஸி தணிக்கை இலாக்கா. இவ்விலாக்காவின் கண்காணிப்புப் பிரேத விசாரணைக்கு ஒப்பாகும். தணிக்கை அதிகாரியின் வேலை ஒப்பிட்டுப் (சரி) பார்ப் பதே (verification). கணக்கு ஏடுகள் சரியாய் உள்ளனவா என்பதை யும் சட்டம் அனுமதித்த பல்வேறு பேரங்களுடன் ஒத்திருக்கிறதா என்பதையும் பார்ப்பதும் அவர் பணியாகும்.

தணிக்கை அதிகாரி ஓரளவு சுயேச்சை உள்ளவர். அவரைப் பதவியிலிருந்து நீக்குவது எளிதன்று. இலாக்காவினின்றும் பிரிந்து சுயேச்சையுடன் இருப்பதோடன்றி, நிறைவேற்றும் துறையிலிருந்தும் தனியானது தணிக்கை. இந்திய அரசியல் சட்டத்தின் 148ஆம் விதி பின் வருமாறு கூறுகிறது: "அதிபர் (President) தம் கையெழுத்திட்ட முத்திரையுடன் கூடிய கட்டளையின் மூலம் (warrant) இந்தியா முழுமைக்கும் கன்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரலை நியமிப்பார். தலைமை உயர்நீதி மன்ற (Supreme Court) நீதிபதி ஒருவரை எவ்விதக் காரணங்களுக்காகப் பதவியிலிருந்து அகற்றலாமோ, அதே போலவே இவரையும் அதே காரணங்களுக் காகப் பதவியிலிருந்து அகற்றலாம்." இவ்விதமான நிபந்தனை நிதிக் கண்காணிப்பிற்கு இன்றியமையாததாகும்.

தணிக்கை முறையின் நோக்கம், ஏமாற்று, நுட்பக் குறைகள் (technical errors), கொள்கையில் தவறுதல்கள் (errors of principle) ஆகிய இவற்றைக் கண்டு பிடிப்பதாகும். தணிக்கை முறை, சட்ட சபைக்குத் துணை செய்கிறது. மேலும் மேலும் இவ்வாண்டில் நடை பெற்ற ஒழுங்கீனங்களை நிதி இலாக்காவின் பார்வைக்குக் கொணர் வதன் மூலம் நிதி இலாக்காவிற்கும் நிறைவேற்றுத் துறைக்கும் தணிக்கை பெருத்ததோர் உதவி செய்கிறது. தணிக்கை முறை

மனிதனுக்குக் கீழ்ப்பட்டிருப்பதற்குப் பதிலாக, பலசமயம் மனிதனைக் கீழ்ப்படுத்தலாம். தணிக்கை இலாக்காவின் அறிக்கைகள் (reports) சட்டசபையின் மூலம் சட்டசபையின் ஒரு குழுவாகிய பொதுக்கணக்குக் குழுவின் முன்பும் (Public Accounts Committee) வைக்கப்படுகின்றன.

சட்டசபையின் பரிசீலனை

(Legislative Review)

பாராளுமன்றத்தைப் பொறுத்த முறையில் நிருவாகக் குழு, சட்டசபையில் ஒரு பிரிவேயாகும். நிருவாகக்குழு, சட்டசபைக்கு முழுப் பொறுப்பானதாகும். ஆகையால், கொள்கையையும் நிருவாகத்தையும் இறுதியில் நிருணயிக்கும் பொறுப்பு ஒரு தனி இலாக்காவை மட்டுமன்றி, அமைச்சர் குழு (cabinet) முழுமையையுமே சார்ந்ததாகும். சட்டசபை, கொள்கைகளை மட்டும் நிருணயிக்கிறது. நிதி நிருவாகம், கண்காணிப்பு ஆகிய இவற்றின் விரிவுகளை விவாதிப்பதற்குச் சட்டசபை தகுந்த கருவியன்று. நடைமுறையில் கொள்கைகளை நிருணயிப்பதிற்கூடச் சட்ட சபையின் அதிகாரம் ஒரு வரையறைக்கு உட்பட்டதே. ஏனெனில், அமைச்சு, சட்டசபையில் பெரும்பாலாரின் ஆதரவைப் பெற்றே இயங்குகிறது.

வரி விதிப்பு முறைகளைப் பொறுத்த வரை சட்டசபையின் அதிகாரம் பெரிய அளவில் காணப்படுகிறது. கடன் முழுவதும் செயற்குழுவின் (executive) பொறுப்பின் பேரிலேயே வாங்கப்படுகிறது. சட்டசபை ஒரு சட்டத்தின் மூலம் கடன் வாங்கப்படும் தொகையின் அளவையும் அதற்காகக் கொடுக்கப்படும் உத்தரவாதங்களையும் தீர்மானிக்கலாம்.

சட்டசபை மேற்கொள்ளும் நிதிக் கண்காணிப்புப் பெரும்பாலும் கொள்கை அளவிலேயே நிற்கிறது என்பது இதனால் பெறப்படும். இதிற்கூட நடைமுறையில் பல கடுமையான கட்டுப்பாடுகள் இருக்கின்றன. இக்காலத்துச் சட்டசபையின் மிகக் கேடான அமிசம், சிக்கனமாய் இருப்பதைவிட ஊதாரித்தனமாய் இருப்பதே. இதற்குக் காரணம், பொதுமக்கள் அபிப்பிராயமே. பொதுமக்கள் இக்காலத்தில் அரசாங்கம் மேலும் மேலும் அதிகமாகச் செலவழிக்க வேண்டுமெனக் கருதுகின்றார்கள்.

செயற்குழு தன் பொறுப்புகளை எவ்வாறு வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் செய்திருக்கிறது என்பதைச் சட்டசபை பரிசீலனை செய்வதும் மேற்பார்வையிடுவதும் இங்கிலாந்தில் பொது

மக்கள் சபையின் (House of Commons) பழக்கமான சம்பிரதாய மாகும். மக்கள் சபையில் முதன்முதல் 1861ல் கிளாட்ஸ்டனுல் அமைக்கப்பட்ட அரசாங்கக் கணக்குக் குழு, இப்பரிசீலனையை மேற்கொண்டது. இக்குழுவில் பெரும்பாலும் 15 உறுப்பினர்கள் இருப்பார்கள். இக்குழுவின் தலைவர் பெரும்பாலும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராய் இருப்பார். நிதித் துறையில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த அறிவுபடைத்த உறுப்பினர்களும் இக்குழுவில் உறுப்பினர் களாய் இருப்பார்கள். இக்குழுவின் வேலை முக்கியமாகக் கொள்கை யைப் பரிசீலனை செய்வதும் (review of policy) சரி பார்ப்பதும் ஆகும். பின்னர்க் கூறிய பணிக்கு அது ஆடிட்டர் அண்டு கன்ட்ரோலர் ஜென ரலின் அறிக்கைகளைப் பெரிதும் நம்பியிருக்கிறது. இவ்வாறு தணிக்கை அதிகாரியும் சட்டசபைக் குழுவினரும் ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்கின்றனர். ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிரச்சினையின் பிரதான அமிசத்தை வற்புறுத்துகின்றதாயினும், பிற அமிசங்களும் பரிசீலனைக்குத் தவறுவதில்லை.

ஆங்கில நடைமுறையின் சில அமிசங்கள் குறிப்பிடத்தக்கன. இக்குழு, தனியாகச் சந்திக்கிறது. இக்குழுக் கூட்டங்களில் பத் திரிகை நிருபர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. மேலும், இவ்விசாரணை யின் நோக்கம் திருத்துவதாகுமேயன்றி, அரசாங்கத்துடன் போராட் டம் நடத்துவதற்குத் தளவாடங்களைத் தயாரிப்பதன்று. இக்குழு, தன் அறிக்கைகளைச் சட்டசபைக்குச் சமர்ப்பிப்பதால் அதன் முடிவு களை எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எந்த உறுப்பினரும் அரசியல் கார ணங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இறுதியாகக் கருவூலத்தின் பிரதிநிதிகள் இக்குழுவில் உறுப்பின ராய் இருப்பதுடன் பெரும்பாலும் இக்குழுவின் முடிவுகளை ஏற்றுக் கொள்கிறார்கள். ஏனெனில், அவர்களது நோக்கம் அரசாங்க நிரு வாகம் மேம்பாடு அடையவேண்டும் என்பதே. எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அரசாங்கத்தின் குறைகளைச் சுட்டிக் காட்டு வதில் எவ்வளவு தீவிரமாக இருக்கிறார்களோ, அவ்வளவு தீவிர மாகத் தங்கள் பெரும்பான்மைக் கட்சியின் உறுப்பினர்களும் தங்கள் தவறுகளைத் திருத்துவதில் நாட்டம் கொண்டுள்ளார்கள். குழுவின் முடிவுகளைச் சம்பந்தப்பட்ட இலாக்காவுடன் கருவூலம் விவாதிக் கிறது. இக்குழு ஏதாவதொன்றில் குறை கண்டிருந்தால், அக் குறையைச் சம்பந்தப்பட்ட இலாக்காக்களுக்கும் கருவூலம் தெரிவிப்ப துடன், தன் முடிவுகளையும் தெரிவித்து, இக்குறை இன்னொரு முறை ஏற்படக் கூடாதென்றும் எச்சரிக்கிறது. மிகச் சாதாரணமாக ஒரு குழுத் தெரிவித்த ஒரு முடிவை மிகக் கடுமையான பதப் பிரயோகத் தினால் கருவூலம் வற்புறுத்துவது கண்கூடு. பிரிட்டிஷ் நிதி முறையில்

எத்தனை குறைகள் இருப்பினும் (பல குறைகள் உள), அது பல்வேறு நாடுகளின் நிதி முறைகளைக்காட்டிலும் சிக்கனமாயும் திறமையாயும் இருக்கிறது.

இந்தியாவில் நிதியைக் கண்காணிப்பதற்குச் சட்டசபை இரு குழுக்களை அமைக்கிறது. எல்லாப் புதிய செலவினங்களையும் மத்திய அரசாங்கத்தில் நிரந்தர நிதிக் குழுக்களும் (Standing Finance Committees) பரிசீலனை செய்கின்றன. அரசாங்கக் கணக்குக் குழு மத்திய அரசாங்கத்திலும் மாநிலங்களிலும் ஒதுக்கீட்டுக் கணக்குகளையும் அவற்றின்மீது தணிக்கையாளர் சமர்ப்பித்த அறிக்கைகளையும் பரிசீலனை செய்கிறது.

1938ஆம் ஆண்டு,செப்டெம்பர்த் திங்களில் அப்போது நிதி உறுப்பினராயிருந்த சர் ஜேம்ஸ் கிரிக் (Sir James Grigg) என்பார் மத்திய அரசாங்கத்தில் மதிப்பீட்டுக் குழு (Estimates Committee) அமைப்பதற்கு யோசனை தெரிவித்தார். அவ்யோசனைகள் பெரும்பாலும் பிரிட்டிஷ் மதிப்பீட்டுக் குழுவை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டவை. ஆனால், இங்கிலாந்தில் மதிப்பீட்டுக்குழு ஒரு பெருந் தோல்வி என்பதை யாவரும் ஏற்றுக்கொள்கின்றனர். இந்தியக் குடியரசின் முதல் வரவு செலவு திட்டத்தைச் சமர்ப்பித்த டாக்டர் ஜான் மத்தாய் (Dr. John Matthai) அரசாங்கச் செலவைப் பரிசீலனை செய்ய ஒரு புதிய மதிப்பீட்டுக்குழு அமைக்கப்பட்டதைத் தெரிவித்தார். ஆனால், இந்தியாவில் மதிப்பீட்டுக் குழுவினால் நிதி விவகாரங்கள் திருந்தமாட்டா. செயற்குழுக்களைத் தமக்குப் பொறுப்பாளியாக்குவதற்கும், தாம் நிதிக் கண்காணிப்பை மேற்கொள்ளுதற்கும் சட்ட சபைகளுக்குக் கருவியாய் இருப்பது அரசாங்கக் கணக்குக் குழு. ஆனால், இப்பரிசோதனை சம்பவம் நேர்ந்த பிறகு நடத்தப்படுகிறது. சட்ட சபையின் ஒரு நிரந்தரக் குழு அரசாங்கக் கணக்குக் குழுவாம். இது ஒவ்வொரு செஷன் (Session) ஆரம்பத்திலும் நியமிக்கப்படுகிறது. இதன் நோக்கம் கன்ட்ரோலர் அண்டு ஆடிட்டர் ஜெனரல் ஒதுக்கீட்டுக் கணக்குகளின் அறிக்கையைப் பரிசீலனை செய்வதும், நிதி இலாக்கா அனுப்பிய வேறு விஷயங்களைப் பரிசீலனை செய்வதுமாகும். பொதுவாக இக்குழுவில் 12 உறுப்பினர்கள் இருப்பார்கள். இவர்கள் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள்; சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இக்குழுவில் நிதியமைச்சர் உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர். அவர் விரும்பினால், இக்குழுவின் தலைவராயும் இருக்கலாம். பெரும்பாலும் அவர் இவ்வுரிமையை விட்டுக் கொடுப்பதால், இக்குழுவின் உறுப்பினர்கள் ஒரு தலைவரைத் தங்களுக்குள்ளாகவே தேர்ந்தெடுத்துக்கொள்கின்றார்கள். இங்கிலாந்தில் எதிர்க்கட்சியின் தலைவரை இக்குழுவின் தலைவராக

நியமிப்பது வழக்கம். இந்தியாவில் நிதியமைச்சரே பெரும்பாலும் இக்குழுவின் தலைவராய் இருப்பார். ஆங்கில முறையில் அதிகச் சிக்கனம் காணப்படுகிறது. ஏனெனில், ஆளும் கட்சியினர் உறுப்பினர்களைக்காட்டிலும் எதிர்க்கட்சியினர் ஒழுங்கீனங்களைப் பரிசீலனை செய்வதில் மிகவும் அக்கறை காட்டுகின்றனர். இந்தியாவில் எதிர்க் கட்சியின் உரிமைகளுக்கும் விருப்பங்களுக்கும் மதிப்புக்கொடுக்கும் நல்ல ஜனநாயகப் பழக்கம் இதுகாறும் ஏற்படாதது வருந்தத்தக்கது.

இக்குழுவின் உறுப்பினர்கள் ஓராண்டிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். ஆனால், மீண்டும் தேர்ந்தெடுக்கப்படலாம். ஒதுக்கீட்டுக் கணக்குகள், தணிக்கை அதிகாரியின் அறிக்கை, இவற்றைப் பற்றிய இக்குழுவின் பரிசீலனை பின் வருமாறு அமைகிறது; (அ) மானியக் கோரிக்கைக்கு மேற்போகாமல் செலவு இருக்கிறதா என்பது; (ஆ) சட்ட சபை அனுமதிக்காத எந்த நோக்கங்களுக்காகவும் பணம் செலவழிக்கப்படவில்லையா என்பது; (இ) அதைக் கண்காணிக்கும் அதிகாரிக்கு ஏற்பச் செலவு உள்ளதா என்பது; (ஈ) நிதி இலாக்காவின் திட்டமான நிதிகளை ஒட்டியே ஒவ்வொரு புது ஒதுக்கீடும் செய்யப்பட்டதா என்பது, (உ) ஸ்டோர்கள், இருப்புகள் (stocks), வாணிபம், உற்பத்தி, இலாப நஷ்டக் கணக்குகள், இவற்றைப்பற்றிய தணிக்கை அறிக்கை இவற்றையெல்லாம் பரிசீலனை செய்வது ஆகியவை இக்குழுவின் அலுவல்கள்.

முப்பத்திரண்டாமதிகாரம்

சமநிலை வரவு செலவு திட்டம்

சமநிலை வரவு செலவு திட்டம் என்பது என்ன?

(The Balanced Budget)

வருவாயும் செலவும் சமனுய் இருந்தால், ஒரு வரவு செலவு திட்டத்தைச் 'சமநிலைத் திட்டம்' எனலாம். வரவைவிடச் செலவோ, அல்லது செலவைவிட வரவோ கூடுதலாய் இருந்தால், அது சமன் இல்லாத வரவு செலவு திட்டமாகும். ஆயினும், வருமானம் உபரியாய் இருப்பதற்கும், வருமானம் பற்ருக்குறையாய் இருப்பதற்கும் பெரிய வேறுபாடுள்ளது. ஆகவே, வரவுக்கு மிஞ்சிய செலவுகளையுடைய திட்டமே சமமில்லாத திட்டம் எனப்படுகிறது. வருமானம் செலவுக்கு மிஞ்சியிருந்தால், வரி கொடுப்போரைத் தவிர வேறு யாரும் கவலைப் படுவதில்லை. வருமானம் செலவைவிடக் கூடுதலாய் இருந்தால், மிகைச் சமநிலைத் திட்டம் (over balanced budget) எனவும், செலவு வருமானத்தைவிடக் கூடுதலாய் இருந்தால், சம நிலைக்கும் தாழ்ந்துள்ள திட்டம் (under balanced budget) எனவும் டாக்டர் டால்டன் கூறுகிருர். ஆயினும், இவ்விடத்து நாம் ஒரு மரபை ஒட்டி, வரவுக்கு மிஞ்சிச் செலவிருந்தால், அதைச் சமநிலை இல்லாத திட்டமெனவும், வரவு செலவுக்குச் சமமாகவோ அல்லது செலவு எஞ்சியதாகவோ இருந்தால், அதைச் சம நிலைத்திடடம் எனவும் கூறுகிருேம்.

எப்பொழுது வரவு செலவு திட்டம் சம நிலையாகிறது?

(When is a budget balanced ?)

இப்பிரச்சினைமீது பல திறப்பட்ட கருத்துகள் உள்ளன.

(அ) எதிர்காலத்தில் வரவுகளை எதிர்பார்த்துக் குறுங்காலக் கடனை வாங்கினுலும், நிதி ஆண்டைப் பற்ருக்குறையாக முடிக்காது வரவை

யும் சரிக்கட்டினாலும் அது சமநிலைத் திட்டம் எனவும், அல்லாவிடில் சமநிலை இல்லாத திட்டம் எனவும் சிலர் கூறுகின்றனர். இக்கருத்தின் படி புதிதாக யாதொரு நிலையாகிய கடனையும் வாங்காது, வரவையும் செலவையும் சரிக்கட்டினால், வரவு செலவு திட்டம் சமநிலை அடைந்த தாக ஏற்றுக்கொள்ளப்படும். நடப்புச் செலவினங்கள் (current expenditures) நடப்பு வருமானங்களுக்குச் சமனாக இருக்க வேண்டும். இத்தகைய நிலையை ஓர் அரசாங்கத்திலும் காண முடியாது. ஏனெனில், பல அரசாங்கங்களும் நீண்ட காலக் கடன்களை வாங்கி யிருப்பதோடு சில சமயம் கடன் தொல்லையால் பெரிய அவதிக்கும் உள்ளாகின்றன.

(ஆ) வேறு சிலர் 'நடைமுறைச் செலவை நடைமுறை வருமானங் களைக்கொண்டே சரிக்கட்டும் அளவும் வரவு செலவு திட்டத்தைச் சம நிலைத் திட்டம் எனலாம்,' என்கின்றனர். 'நடைமுறையல்லாத செலவுகளுக்கும், மூலதன அபிவிருத்திகளுக்கும், வரவு செலவு திட்டத்தைச் சமநிலை இல்லாததாக்காமலே கடன் வாங்கிச் சரிக் கட்டலாம்,' என்கின்றனர். அரசாங்க வேலைக்கு மிகவும் பணம் கொள்ளுவதாலும், அவற்றுக்காக நீண்ட காலத்திற்கு முதலீடு செய்ய வேண்டி இருப்பதாலும், கடுமையான வரி விதிக்க வேண்டினமையா லும், அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் செலவுகள் நடைமுறை யில் கடன் வாங்கிய தொகைகளைக்கொண்டே நடைபெறுகின்றன. ஆயினும், பெரும்பாலும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான அளவுக்கு மீறிக் கடன் வாங்கப்படுகிறது என்பதும் குறிக்க வேண்டுவதாகும்.

சமநிலை அல்லாத வரவு செலவு திட்டத்தின் முக்கியம்

குறுகிய காலங்களுக்கு வருமானம் பற்றுக்குறையாய் இருந்தால், கவலைப்பட வேண்டுவதில்லை; செலவினங்களைக் குறைக்கலாம்; அல்லது, புதிய வரிகளை விதிக்கலாம்; அல்லது, பழைய வரிகள் வீதத்தை உயர்த்துவதாலேயே கூடுதல் தொகை பெறலாம். நடப்பு வருமானங்கள் நடப்புச் செலவுகளுக்குக் குறைவாக நீடித்த காலத் திற்கு இருந்தால், இதனால் அரசாங்கப் பணிகள் சீர் குலையும்; அல்லது பெருவாரியாகக் கடன் வாங்க நேரிடும். பாங்குகளும், முதலீடு செய்பவர்களும் விரும்பிய காலத்திலேயே ஸ்தல மாநில அரசாங்கங் கள் கடன் வாங்க முடியும். ஆனால், தேசிய அரசாங்கங்களின் கண்காணிப்பில் செலாவணி இருப்பதால், காகிதப்பணத்தை வெளியிடுவதன் மூலமாக மக்களைக் கடன் கொடுக்கும்படி அவற்றால் கட்டாயப்படுத்த முடியும். தேசிய வரவு செலவு திட்டம் சமநிலை யற்றதாய் இருந்தால், செலாவணி வீக்கம் ஏற்படக் கூடும் என்ற அச்சம் இருக்கிறது. செலாவணி வீக்கம் இறுதி நடவடிக்கையாய்

அமையும். நீடித்த காலத்திற்குப் பற்றுக்குறைக் கொள்கையைப் பின்பற்றினல், காகிதப்பணத்தை வெளியிடுவது இன்றியமையாத தாகும். தங்குதடையில்லாத பண வீக்கத்தால் ஏற்படும் தீமைகளைக் கண்கூடாகக் கண்டதால், தேசிய வரவு செலவு திட்டம் சமநிலை அற்றதாய் இருந்தால், எல்லோரும் கவலை கொள்வது இயல்பே.

சமநிலை வரவு செலவு திட்டத்தின் முக்கியத்துவம்

வரவுகளையும் செலவுகளையும் இம்மிகூடப் பிசகாது சரிக்கட்டுவது அசாத்தியமாகையால், செலவினங்களைவிட வரவினங்கள் சிறிது கூடுதலாய் இருந்து, அதனல் சுமாராக உபரி ஏற்படுவது வரவேற்கத் தக்கது. இதனல், இரு நன்மைகள் ஏற்படும். தவருன மதிப்பீடுகள் இட்டிருந்தால் அவற்றைச் சரிக்கட்டவும், புதிய நிதியாண்டைத் தொடங்கும் பொழுது வரவு செலவு திட்டம் கண்காணிப்புக்கு அடங்கியதாகவும் இருக்கும்.

அரசாங்க நிதித்துறையில் மிதமான உபரி வருமானம் இருப்பது இன்றியமையாததும் பாதுகாப்பு அளிப்பதுமானல், இதனல் ஊதாரித் தனம் ஏற்படாது. கடைகளில் கல்லாப்பெட்டிகளில் சிறிது பணம் வைத்திருப்பதைப்போல இவ்வுபரிக்கும்ஆசிரியர் சிலர் மிதமான அளவு பற்றுக்குறை இருக்கும்படி வரவு செலவு திட்டத்தைத் தயாரிப்பதால் சிக்கனம் ஏற்படுகிறது என நம்புகின்றனர். ஆயினும், நாம் கவனிக்க வேண்டுவது, அரசாங்கச் செலவில் பற்றுக்குறையைத் தவிர்ப்பதே யாகும். பாமர மக்களைப் போலவே அரசாங்கங்களும் தத்தம் வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமான வருமானத்தை ஈட்ட வேண்டும். தனிப்பட்டவர் வாழ்வில் காணப்படுதல் போல, அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் சமநிலை வரவு செலவு திட்டங்கள் வழக்கமானவையாய் இருக்க வேண்டும். புதிய உடைமைகள் இன்றிப் புதியனவாகக் கடன்களைப் படைக்காது ஆண்டு செலவைச் சரிக்கட்ட வேண்டும். *1920*ஆம் ஆண்டில் பிரஸ்ஸல்ஸ் நகரத்தில் கூடிய சர்வதேச நிதி மாநாடு (The International Financial Conference at Brussels) மிகத் தெளிவாகக் கூறியது வருமாறு: பற்றுக்குறை வரவு செலவுத் திட்டங்களைத் தன் கொள்கையாக ஏற்றுக்கொள்ளும் எந்த நாடும் பொது நாசத்தில் கொண்டுவிடும் சறுக்குப் பாதையில் செல்கிறது. இப்பாதையிலிருந்து தப்புவதற்கு எந்தத் தியாகமும் பெரியதன்று. "ஊதாரித்தனத்தினல் மட்டு மல்லாது, வரவுக்கும் செலவுக்கும் உள்ள சமநிலையைப் பொருட் படுத்தாததனல், பல்வேறுபட்ட நாடுகளிலும் நிதிக் குழப்பம் ஏற்பட்டு, அதன் விளைவாகப் புரட்சியும் அழிவும் ஏற்பட்டிருக்கின்றன. செலவுக்கு ஏற்ப வருமானத்தை நீங்கள் வைத்துக்கொள்ளுமளவும்

இவ்வருமானத்தை மக்கள் வரியாகக் கொடுக்குமளவும் இம்மாதிரி யான ஒரு நாட்டில் மக்கள் வரிச்சுமையை அதிகமானதெனக் கருதி ஞல் செலவைக் குறைப்பதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்வார்கள். ஆகையால், இதுவே உண்மையான சோதனையும், உண்மையான பாதுகாப்புமாகும். இதுவே சிறந்த நிதி மூறைக்கு உண்மையான அடிப்படையாகும்.''—(கிளாட்ஸ்டன்) ஸ்திரமான நிதி நிலைமை நம்பிக்கைகளைப் பொறுத்ததன்று ; வரவையும் செலவை யும் சரிக்கட்டுவதைப் பொறுத்திருக்கிறது.

செலவின் இயல்பு

வரவு செலவு திட்டத்தைச் சமனுக்குவதில் மூன்று கேள்விகள் எழுகின்றன : செலவின் தன்மை யாது ? வருமானத்தின் தன்மை யாது ? எக்காலத்துக்குள் வரவு செலவு திட்டத்தைச் சமனுக்க வேண்டும் ? செலவைப் பொறுத்த வரை கடன் திருப்பிக் கொடுப்ப தற்குச் செலவழிக்கும் தொகையை எல்லாம் செலவினத்திலிருந்து நாம் நீக்க வேண்டும். ஏனெனில், கடன் குறைப்பு நிரந்தரமாக வட்டித் தொகையைக் கொடுப்பதைக் குறைப்பதில் முடியும். அதே போல, நடைமுறை ஆண்டு செலவினின்றும் வேருகப் பொது வேலைகளுக்காக மேற்கொள்ளப்படும் செலவைக் கொள்ள வேண்டும்.

வருமானங்களைப் பொறுத்த வரை, அரசாங்க உடைமையை விற்பதால் வரும் வரவு தொகைகளையும், ஏற்கெனவே திரட்டி வைத்த உபரித் தொகைகளிலிருந்து எடுக்கும் தொகைகளையும் விலக்க வேண்டும். இறப்பு வரிகள் போன்ற வரிகளிலிருந்து கிடைக் கும் வருவாய் மூலதனத்திலிருந்து பெறப்பட்டாலும், வருமானக் கணக்கிலிருந்து விலக்கக்கூடாது என்பது டாக்டர் டால்டனின் கருத்து. ஆனல், மற்ற ஆசிரியர்கள் இக்கருத்தினின்றும் மாறுபடு கிருர்கள்.

வரவு செலவு திட்டக் காலம்

(Budgetary Period)

வரவு செலவு திட்டக் காலத்தைப்பற்றி அறிஞர்களுக்குள் கருத்தொற்றுமை இல்லை. பொதுவாக வரவு செலவு திட்டக்காலம் ஓர் ஆண்டாய் இருக்கிறது. ஆயினும், இது இரண்டு அல்லது நான்கு ஆண்டுகளாக இருக்கக்கூடும். பேராசிரியர் ஆல்பிரட் ஜி. பூலர் (Alfred G. Buehler) கூறுவது போல, ''ஆண்டு என்பது நிதியாண்டாகும்.'' அமெரிக்க, பிற நாட்டுப் பழக்கங்களின் வேற் றுமையால் நிதியாண்டு எந்த மாதத்திலும் தொடங்கலாம். வரவும்

செலவும் எக்காலத்திற்கும் ஒத்திருக்க வேண்டும் என்பதே வரவு செலவு பற்றிய கொள்கையின் பிரச்சினை எனலாம். இதற்குப் பல் வேறுபட்ட விடைகள் கூறப்படுகின்றன. சிலர் மிக்க செல்வம் கொழிக்கும் ஆண்டுகளில் மட்டுமே வரவும் செலவும் ஒத்திருக்க வேண்டும் என்கின்றனர். அவ்வாண்டுகளிலேதான் தேசிய வருமானம் மிக உயர்ந்து இருப்பதுடன் பூரண வேலையும் (full employment) இருக்கும் எனக் கூறப்படுகிறது. பிற 'சாதாரண' ஆண்டுகளிலும் சரி, சுபிட்சக் காலங்களிலும் சரி, வரவும் செலவும் ஒத்திருக்க வேண்டும் எனப் பிறர் சொல்கின்றனர். ஆனால், சாதாரண ஆண்டு என்பதற்கு விளக்கம் தருவது மிகக் கடினம். இன்னும் சிலர், "பொருளாதார நிலைமைகளில் ஆண்டுதோறும் பெருத்த வேறுபாடு காணப்பட்ட போதிலும், வரவு செலவு திட்டம் சமநிலையாக இருக்க வேண்டும் என்பது நிதி முறையில் ஒரு நியதியாகவே இருக்க வேண்டும்," என்கின்றனர்.

வரவு செலவு திட்டத்தைச் சமநிலையாக்குவதற்காக 12 திங்களைத் தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதில் யாதொரு தனிப்பட்ட சிறப்பும் இல்லை. பேராசிரியர் ஜேகப் வைனர் (Professor Jacob Viner) கூறுவது போல, "சந்தர்ப்பங்களைக் கவனியாது, ஆண்டுதோறும் அரசாங்கம் தன் வரவு செலவு திட்டத்தைச் சரிக்கட்ட வேண்டும் என்பது தவறாகும். ஏன் வரவு செலவு திட்டத்தை ஒவ்வொரு திங்களிலும், அல்லது மணியிலும் சரிக்கட்டக் கூடாது?" ஆயினும், பணத்திற்காக 12 திங்களைக் கொண்ட ஒரு குறுகிய காலத்தை எடுத்துக்கொள்வதற்குப் போதுமான முகாந்திரங்கள் இருக்கின்றன.

நீண்ட காலத்து வரவு செலவு திட்டங்கள்

இக்காலத்து வாணிபச் சுழல்கள் (business cycles), பொருளாதாரப் பாதுகாப்பின்மை ஆகிய இப்பிரச்சினைகளை ஆராயும் பொழுது, அரசாங்கங்கள் ஆண்டுதோறும் வரவு செலவு திட்டங்களைச் சமநிலையாக்க வேண்டுவதில்லை எனவும், வாணிபச் சுழல்கள் நிகழும் பல ஆண்டுகட்கோ அல்லது மேற்பட்ட காலத்திற்கோ சமநிலை ஆக்குதல் போதுமென்றோ அடிக்கடி யோசனைகள் பிறந்த வண்ணம் இருக்கின்றன. விஞ்ஞான ரீதியான வரவு செலவு திட்டக் காலம் (scientific budgetary period) ஒரு வாணிபச் சுழலின் காலமே எனவும் சில சமயம் கூறப்படுகிறது. சுபிட்சக் காலங்களில் வரிகளை அதிகப்படுத்தியும், அரசாங்கக் கடன்களைத் திருப்பிக் கொடுத்தும், மேலும் மேலும் வியாபார நடவடிக்கைகள் அலை அலையாக ஏறுவதைத் தடுக்க முடியும் எனவும், வியாபார மந்தக் காலங்

களில் வரிகளைக் குறைத்தும் அல்லது கடன் பட்டும் உற்பத்திப் பெருக்கத்திற்கு அடிகோல வேண்டும் எனவும் இவர்கள் கூறுகிறார்கள். வாணிபச் சுழல் காலத்தில் வரி விகிதங்களையும் கடன் வாங்குவதையும் கூட்டுவதும் குறைப்பதும் சாத்தியமென்றாலும், அல்லது சரியானபடி கட்டுப்படுத்த முடியும் என்றாலும், பொருளாதார நிலைமையை ஸ்திரப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் பிற முயற்சிகட்குத் துணையாக இதுவும் இருக்கும். ஆயினும், பொருட் புலவர் பலர் வாணிபச் சுழலுக்கு எதிரான பூரண நெகிழ்ச்சியைக் கொண்ட ஒரு வரவு செலவு திட்டத்தைத் தயாரிப்பது சாத்தியமா என ஐயப்படுகின்றனர் எனவும், வரியில் மாறுதல்கள் செய்வதனால் பொருளாதார நிலைமையில் கொந்தளிப்பு ஏற்பட்ட வண்ணமே இருக்கும் எனவும் நம்புகின்றனர். ஆகவே, அவர்கள் நிலையான ஓர் வரி அமைப்பையே (stable tax structure) விரும்புகின்றார்கள்; வாணிபச் சுழலுக்கு எதிரான மாறுதல்களை வளர்வீத முறை அடிப்படையில் விதிக்கப்பட்ட தனியார் வருமான வரியின் மூலம் சரிக்கட்ட முடியும் எனவும் நம்புகின்றார்கள்.

ஒரு வாணிபச் சுழல் காலத்திற்கு வரவு செலவு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்பதற்கான அடிப்படைகள் மந்தக் காலத்தில் அரசாங்கம் வாங்கும் கடன்களைச் சுபிட்சக் காலத்தில் அரசாங்கம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என நம்புவதேயாகும். மேலும், அரசாங்கங்களுக்குத் தாங்கள் எவ்வெக்காலங்களில் வரி விதிப்பிலும் கடன் வாங்குதலிலும் மாறுதல் செய்து நிலையற்ற தன்மையைச் சமாளிப்பதற்குத் தெரியும் அல்லது தெரிந்துகொள்ள முடியும் எனவும், அரசாங்கங்கள் இவ்வதிகாரத்தை வாணிபச் சுழல் மாறுதலைக் குறைப்பதற்கன்றி, கூட்டுவதற்குப் பயன்படுத்தமாட்டா எனவும் இவர்கள் நம்புகிறார்கள். தங்கள் செலவு, கடன், வரி விதிப்பு இவற்றைத் திட்டமிட்டு ஆண்டுதோறும் செயற்படுத்துவதுடன் பல்லாண்டுகளுக்குத் தொடர்ந்தும் தங்கள் செலவு, கடன், வரி விதிப்பு இவற்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்தினால் அரசாங்கங்கள் பொருளாதாரத் துறையில் நிலையான தன்மையையும், சிக்கனத்தையும் ஏற்படுத்திச் செலவுகளைக் கட்டுப்பாடு செய்வது திண்ணம்.

ஆயினும், வாணிபச் சுழல் வரவு செலவு திட்ட யோசனைகளை அரசாங்கங்கள் நடைமுறையில் கடைப்பிடிக்கும் போது பல குறைகள் தோன்றுகின்றன. பாதுகாப்பு எல்லையை அடைந்ததும் கடன் வாங்குதலைத் தவிர்க்கக்கூடிய சட்டம் இயற்றும் நிருவாக உத்தியோகஸ்தர்களும் இருக்க வேண்டும். மந்தக் காலத்தில் வரிகளைக் குறைக்கப் பண வீக்கத்தினால் பொருளாதார வீக்கம் ஏற்படும் போது இன்றியமையாததானால் வரிகளை உயர்த்தி, மந்தக் காலத்தில்

வாங்கிய கடனை அடைக்க வேண்டும். பேராசிரியர் ஆல்பிரட் ஜி. பூலர் கூறியது போல, ''எவ்வகை நீண்ட காலத்திற்குச் சமநிலையாக்காது இருக்கின்றனவோ, அவ்வளவுக்குப் பற்றுக்குறை நிதித் திட்டத்தின் சிக்கல்களிலும் விளையாட்டுகளிலும் அகப்பட்ட ஓர் அரசாங்கம் திடீரெனத் தன் போக்கை மாற்றி வரிகளை மாற்றியும் கடன்களை அடைத்தும் வரவு செலவு திட்டத்தைச் சமநிலை செய்யும் என எண்ணுவது கூடாததாகும். மந்தக் காலத்தில் 'இன்று கடன் வாங்குவோம்,' என்ற பழக்கம் ஏற்பட்ட பின்பு சுபிட்சக் காலத்திலும் அப் பழக்கம் தொடர்ந்து நீடிக்கலாம்.

வாணிபச் சுழல்களின் காலம் அவற்றின் பல பகுதிகளிலும் (Phases) உள்ள கொடூர வரி விதிப்பையும் கடன் வாங்குவதையும் உயர்த்த வேண்டிய அல்லது தாழ்த்த வேண்டிய காலம், அவற்றை எவ்வளவு உயர்த்த வேண்டும் அல்லது தாழ்த்த வேண்டும் என்ற இவற்றைப் பற்றி எல்லாம் முன்னதாகத் திட்ட வட்டமாகத் தெரியாததால், மேலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. பொதுவான வாணிபச் சுழல் மந்தங்களைவிட நீடித்ததொரு வியாபார மந்தம் ஏற்படுமானால், புதிய சிக்கல்கள் முகிழ்ப்பதுடன் தொடர்ந்த பற்றுக்குறை நிதித் திட்டத்தினால் கடனும் மேலும் மேலும் ஏறிக்கொண்டே செல்லும். இப் பிரச்சினைகளைச் சமாளிப்பது எளிதன்று. கடன் வாங்குவதைப் பகுத்தறிவுக்கு ஒப்ப மட்டுப்படுத்துவதும், அதனுடன் செலவு செய்வதையும் வரி விதிப்பையும் மட்டுப்படுத்துவதும், பொருளாதாரத்தில் நிலையற்ற தன்மையைக் குறைப்பதற்கும் சமுதாயத்தில் உண்மை வருமானத்தை அதிகரிப்பதற்கும் காரணமாகும். ஆயினும், வட்டிக் கட்டணங்களைவிட விரைவாகத் தேசிய வருமானமும் அதிகரிக்கும் என ஒருவர் திண்ணமாக எதிர்பார்க்க இயலாது. ஆண்டுதோறும் பற்றுக் குறைகள் தொடரும் போது பொருளாதார நிலைமை கட்டுக்கடங்கி இருக்கும் எனவும் எதிர்பார்க்க இயலாது.

ஆண்டுதோறும் அரசாங்கம் வரவு செலவு திட்டங்களைச் சமநிலை செய்வது என்பதைக்காட்டிலும் பொருள்கள் பணிகள் இவற்றின் உற்பத்தியை மேலும் மேலும் பெருக்க வேண்டும் என்றும், இவை சமுதாயத்தினிடைப் பரவலாகப் பகுக்கப்பட வேண்டும் என்றும் நினைப்பது சிறந்த பொருளாதார நோக்கம் என்பது இப்பொழுது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆண்டுதோறும் வரவு செலவு திட்டத்தைச் சமநிலையாக்குவது இயலாதது, அல்லது விரும்பத்தகாதது. ஆனாலும், பல ஆண்டு சேர்ந்த காலத்திற்கு வரவு செலவு திட்டத்தைச் சமநிலையாக்குவது சாத்தியமானதே. அதனால், கடன் குறைப்புக்கு வழி செய்ய முடியும். இதனால், படிப்படியாகக் கடன் அடைபடும். பேராசிரியர் பூலர் கூறுவது போல, ''நிதித் திட்

டத்திற்கு (finanical planning) நீண்ட கால வரவு செலவு திட்டம் இன்றியமையாதது. இதனால், கருமித்தனமாக நிதித் திட்டத்தை விளைவிக்க வேண்டும் என்றோ, அல்லது முடிவில்லாத பற்றுக்குறைத் திட்டத்தையும் ஏறிக்கொண்டே செல்லும் அரசாங்கக் கடனையும் விரும்புகின்றோம் என்றோ பொருள் கொள்வதற்கில்லை. வரவு செலவு திட்டத்தை சமநிலையாக்குவதில் உள்ள அடிப்படையாவது வரவு செலவு திட்டத்தைக் கட்டுப்படுத்துவதே. அதாவது, செலவு, வரி விதிப்பு, கடன் வாங்குவது இவற்றை நீண்ட காலத்திற்கும் குறுகிய காலத்திற்கும் கட்டுப்படுத்துவது ஆகும். அப்பொழுதுதான் அளவுக்கு மீறிய செலவினால் ஜனநாயக நாடுகள் ஓட்டாண்டி (Insolvent) ஆகி இறந்துபடும் என்று மான்டெஸ்கோ எச்சரித்த நிலை ஏற்படாது.

இரு வகைக் கொள்கைகள்

(Two Types of Policy)

சில சமயம் வேலை தருவதற்காக அரசாங்கங்கள் செலவை அதிகரிக்கவும், வரி விதிப்பைக் குறைக்கவும், பொது மக்களிடமிருந்து கடன் வாங்கவும் முயல்கின்றன. 1929ல் தொடங்கிய பெரிய வியாபார மந்தக்காலத்தில் உலகம் முற்றும் விலைவாசிகளின் சரிவினாலும் வேலையின்மை மிகுதியினாலும் தொத்துநோய் போலப் பற்றுக்குறை வரவு செலவு திட்டங்கள் ஏற்பட்டன. தனியாரின் பண வருமானமும், அரசாங்கங்களின் பண வருமானமும், விலை வாசிகளின் சரிவிற்கு ஏற்பக் குறைந்தன. இந்நிதி நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காகப் பெரிய பொது வேலைகள் (large public works) மேற்கொள்ளப்பட்டன. விலைகள் சரியும் போது அரசாங்கத்தின் வருமானமும் குறைகிறது. ஏனெனில், பொது மக்களின் பண வருமானமும் அப்பொழுது குறைகிறது. மேலும், நுகர்வோரின் வாங்கும் சக்தி குறைவதற்கேற்ப, அரசாங்கம் நடத்தும் தொழில்களின் இலாபமும் குறைகிறது. இவ்வாறு விலை வாசிகளின் சரிவினால் வருமானம் குறையும் போது அதற்கேற்ப அரசாங்கத்தின் செலவு குறைவதில்லை. ஏனெனில், அரசாங்கச் செலவின் பெரும்பகுதியும் நிலைத்த பணச் செலவுகளாகும். சுருங்கக் கூறின், வருவாயைவிடச் செலவு மிகவும் இறுக்கமானது (rigid) எனலாம். இவ்வாறு வரவு செலவு திட்டத்தில் பற்றுக்குறைகள் ஏற்படுவதைத் தடுக்கவும், அல்லது அவற்றை மட்டுப்படுத்தவும் இரு வகைக் கொள்கைகளை மேற்கொள்ளலாம். முதலாவது பணவாட்டம். இது பொதுவாக எல்லா நாடுகளும் மேற்கொள்ளும் கொள்கையாகும். அதாவது, விலை வாசிகளின் சரிவிற்கு

ஏற்ப வரவு செலவு திட்டத்தைச் சமநிலையாக்குவதற்காகச் செலவு களைக் குறைப்பதும், வருமானத்தைப் பெருக்குவதுமாகும். இன்னொரு வகைக் கொள்கை, பண வீக்கம் எனப்படும். அதாவது, வாணிபத் தைத் தூண்டுவதும், வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவதும், விலை வாசிகளை உணர்த்துவதும், அதனால் வருமானத்தைப் பெருக்குவது மாகும். இரண்டாவது திட்டம், வரவு செலவு திட்டத்தைச் சமநிலை யாக்கும் மறைமுகமான கருவியாகும். எதிரெதிரான இவ்விரண்டு கொள்கைகளின் நோக்கம் சமநிலையல்லாத வரவு செலவு திட்டங்களி லிருந்து தப்புவதே.

முடிவுரை

சிறிது காலத்திற்கு வரவு செலவு திட்டத்தில் ஒரு சிறிய பற்றுக் குறை விழுவது விரும்பத்தக்கதே எனப் பொருட்புலவர் பலர் இப் பொழுது ஒப்புக்கொள்கின்றனர். பின் வருவது 1933ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், 10ஆம் நாள் 'டைம்ஸ்' (The Times) என்னும் பத் திரிகையில் 12 பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் 33 பொருட்புல வர்கள் கையொப்பமிட்ட ஒரு கடிதத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

"எல்லா அரசாங்கச் செலவிற்கும் வரி விதிப்பினால் நிதி திரட்ட வேண்டும் என்பது நிதி முறையின் பொதுக் கூற்றாகும். இப்போதைய நிலைமையில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விலை உத்தர வாதத்திற்கு (Price restoration) அரசாங்கம் துணை அளிப்பதி னின்றும் இதனால் தடுக்கப்பட்டதெனக் கொள்ளக்கூடாது."

இக்கடிதத்தில் கண்டதை அப்பத்திரிகையில் வந்த தலைப்புக் கட்டுரையும் வாழ்த்தியது. பின்பு தொடர்ந்தாற்போலப் பல கட்டுரைகள் அப்பத்திரிகையில் வெளியிடப்பட்டன. அக்கட்டுரை கள் எல்லாம் பிற்பாடு 'சுபிட்சத்திற்கான வழிகள்' (Means to Prosperity) என்ற சிறு நூலாக வெளியிடப்பட்டன. அபிவிருத்திக் காக அதிகக் கடன் வாங்கிச் செலவு செய்யலாம் என்றும், எதிர் காலத்தில் வரவு செலவு திட்டத்தைச் சமநிலையாக்குவதற்காக இப் பொழுது வேண்டுமென்றே வரவு செலவு திட்டத்தைச் சமநிலையற்ற தாக வைத்துக்கொள்ளலாம் என்றும் அக்கட்டுரைகள் வற்புறுத்து கின்றன. இக்கருத்தை, சர் ஜோசையா ஸ்டாம்பும் ஆதரித்தார். முதலீட்டைவிடச் சேமிப்புகள் அதிகமானால், தாற்காலிகமாக வரவு செலவு திட்டத்தைச் சமநிலையற்றதாக வைத்திருக்கலாம் எனவும், ஆனால் இதனால் பிற நாட்டார் அச்சுறுத்தப்படாமல் இருக்கவேண்டு

மெனவும் உரை நிகழ்த்தினர் (மார்ச்சு 1923). 1923ஆம் ஆண்டு, மார்ச்சு, 31ஆம் தேதி உரை நிகழ்த்திய சர் பேசில் பிளாக்கெட்டு (ஒரு காலத்தில் இந்திய அரசாங்கத்தின் நிதி உறுப்பினராய் இருந்தவர்), ''வரிக் குறைப்பினலும் தாற்காலிகமாகக் கடன் வாங்குவதனலும் வரவு செலவு திட்டத்தைச் சமநிலையற்றதாக்கலாம்'' எனத் துணிந்து கூறினர். ''இப்போதைய சூழ்நிலையில், வரவு செலவு திட்டத்தில் பற்றுக்குறை விழுவது கெடுதலானது எனக் கருதும் பழைய காலத்து வைதிகக் கருத்துகளினல் கருவூலம் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது'' என்றுதம் கருத்தை ஒளிக்காமல் கூறினர்.

முப்பத்து மூன்றுமதிகாரம்

மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கங்களுக்கும் உள்ள நிதித் தொடர்பு

(Financial Relations between the Central and Provincial Governments)

1833 முதல் 1873 வரை எல்லா நிதி அதிகாரங்களும் இந்திய அரசாங்கத்தினிடம் குவிக்கப்பட்டிருந்தன. மாகாண அரசாங்கங்களின் எந்தச் சிறு செலவையும் இந்திய அரசாங்கமே கண்காணித்தது. மேயோ பிரபு (Lord Mayo) நிதி அதிகாரங்கள் ஓரளவு பரவலாக இருக்கவேண்டுவதன் அவசியத்தை உணர்ந்தார். நிதி அரசாங்கங்கள் பரவலாய் இருந்தால்தான் அரசாங்க வருவாய்களைப் பெருக்குவதற்கும், அவற்றைச் சிக்கனமாகச் செலவழிப்பதற்கும், மாகாண அரசாங்கங்கள் உற்சாகமாக உழைக்க முன்வரும் எனவும் உணர்ந்தார். 1871ல் அவர் 'மாகாண ஏற்பாடுகள்' (Provincial Settlements) என்ற முறையை ஆரம்பித்தார். இதன்படி மாகாணங்களுக்குச் சில செலவினங்கள் ஒதுக்கப்பட்டன. இவற்றை நிருவகிப்பதற்காக இலாக்காக்களிலிருந்து வரும் வருமானத்துடன் (departmental receipts) ஆண்டுதோறும் மாகாணங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை மானியமாக அளிக்கப்பட்டது. இதன் பின்பும் பற்றுக்குறை ஏற்படின், மாகாண அரசாங்கங்கள் வரி விதித்து அதை ஈடு செய்துகொள்ளலாம். இப்பரவல் முறை சிறிது சிறிதாக, 1867, 1882, 1904, 1912 இவ்வாண்டுகளில் விரிவாக்கப்பட்டது. 1919-ஆம் ஆண்டுக்கு முந்தியிருந்த நிதி நிலைமை வருமாறு: மத்திய அரசாங்கம் தன் நிருவாகத்தில் அபினி, உப்பு இவற்றின் மீது விதிக்கும் வரிகளையும், இருப்புப் பாதைகள், தபால், தந்தி இவற்றினின்று கிடைக்கும் வருமானங்களையும், இறக்குமதி ஏற்றுமதி

வரிகளையும் வைத்துக்கொண்டது. காடுகள், ஆயத்தீர்வை, பதிவு (registration), கல்வி, சட்டம், நீதி இலாக்காக்களிலிருந்து கிடைக்கும் வருமானம் மாகாணங்களுக்குத் தரப்பட்டன. இறுதியாக, நிலவரி, வருமான வரி, ஆயத்தீர்வை, நீர்ப்பாசனம், ஸ்டாம்பு, முத்திரைக் காகிதம் இவற்றினின்று கிடைக்கும் வருமானம் மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கத்திற்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டன. செலவினங்களைப் பொறுத்த வரை வரவினங்களைப் போன்றே ஓர் ஏற்பாடு நிலவியது. பஞ்ச காலங்களில் மாகாண அரசாங்கங்களின் செலவை மத்திய அரசாங்கம் பகிர்ந்துகொள்வதற்கும் வழி செய்யப்பட்டது.

1919ஆம் ஆண்டின் மான்ட்போர்டு சீர்திருத்தங்களின்படி (Montford Reforms) மாகாணங்களுக்கு ஓரளவு நிதி விவகாரங்களில் சுயேச்சை அளிக்கப்பட்டது. இதன்படி பிரிக்கப்பட்ட தலைப்புகள் (divided heads) என்ற இனம் அகற்றப்பட்டது. வருமான இனங்கள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டன. 1. மத்திய அரசாங்கத்தின் வருமான இனங்கள் : அபினி, உப்பு, இருப்புப் பாதைகள், தபால், தந்தி, இராணுவ இலாக்காவிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் ; 2. மாகாண அரசாங்கத்தின் வருமானங்கள் : நிலவரி (தண்ணீர்த் தீர்வை உட்பட), முத்திரைக் காகிதங்கள் (ஸ்டாம்புகள், நீதி, வர்த்தகம்), பதிவு, ஆயத்தீர்வை, காடுகள்.

மாகாணக் கொடைகள்

(Provincial Contributions)

பிரிக்கப்பட்ட வருமானத் தலைப்புகளை அகற்றியதாலும், நிலவரி, ஸ்டாம்பு முதலியவைகளை மாகாணங்களுக்குக் கொடுத்ததாலும் மத்திய அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தில் 1920ஆம் ஆண்டில் ரூ. 983 இலட்சம் பற்றுக்குறை விழுந்தது. ஆகவே, நிலைமையைப் பரிசீலனை செய்ய 1920ல் மெஸ்டன் குழு (Meston Committee) நியமிக்கப்பட்டது. அக்குழு, தன் தீர்ப்பை 1921ல் வெளியிட்டது. அது 'மெஸ்டன் தீர்ப்பு' (Meston Award) எனப்படும். அதன்படி மாகாணங்கள் மத்திய அரசாங்கத்திற்குக் குறிப்பிட்ட ஒரு தொகையும், ஆண்டுதோறும் குறிப்பிட்ட ஒரு சதவிகிதக் கொடையும் தரவேண்டும். மாகாணங்களுக்கு உபரி வருமானம் இருக்கும் என்ற கருத்தின்பேரில் மெஸ்டன் இத்தீர்ப்பை அளித்தார். ஆனால், மாகாணங்கள் இதனால் வெறுப்படைந்து கூக்குரலிட்டன. மத்திய அரசின் நிதி நிலைமை அபிவிருத்தி அடையவே, 1928-29ல் மாகாணங்கள் கொடுக்க வேண்டிய தொகைகளைக் கைவிட்டன.

1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் மூன்று நிதிப் பட்டியல்களை வகுத்தது. அவையாவன : சமஷ்டி அரசாங்கப் பட்டியல், மாகாண அரசாங்கப் பட்டியல், இரு அரசாங்கங் களுக்கும் பொதுவான பட்டியல். இதன்படி கீழ்க்காணுமாறு நிதியதிகாரங்கள் பிரிக்கப்பட்டன.

(அ) **சமஷ்டி அரசாங்கம் :** இறக்குமதி வரி, ஏற்றுமதி வரி, உப்பு வரி, ஆயத்தீர்வை, கார்ப்பொரேஷன் வரி, (விவசாயம் நீங்கிய) வருமான வரி, (விவசாயம் நீங்கிய) வாரிசு வரிகள், புரோநோட்டு கள், இரசீதுகள் ஆகிய இவற்றைப் பற்றிய முத்திரைக் காகிதங்கள் டெர்மினல் வரிகள் (terminal taxes), இருப்புப் பாதைகள்.

(ஆ) **மாகாண அரசாங்கம் :** நில வரி (தண்ணீர்த் தீர்வை உட்பட), மது, மருந்து இவற்றின் பேரில் ஆயத்தீர்வை, விவசாய வருமான வரி, விற்பனை வரி, தமாஷா வரி, விளம்பர வரி, சமஷ்டிப் பட்டியலில் காணப்படாத முத்திரைக் காகித வரி, பதிவு, காடுகள், மாகாணச் சேவைகள் இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம்.

(இ) **இரண்டிற்கும் பொதுவானவை :** தனியார் வருமானத் தின்மீது விதிக்கப்படும் வரிகள், சொத்து வரியும் (விவசாயமல்லாத) வாரிசு வரியும் (விவசாயமல்லாத) மாகாணச் சுய ஆட்சி (Provincial Autonomy) அமுலுக்கு வந்த பின்பு 1936ஆம் ஆண்டில் சர் ஓட்டோ நீமியர் (Sir Otto Niemeyer) என்பவரை இந்தியக் காரிய தரிசியார் இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். அவருடைய தீர்ப்பின்படி வருமான வரியிலிருந்து கிடைக்கும் சுமார் 12 கோடி ரூபாயில் பாதியை (6 கோடி ரூபாய்) மாகாணங்களுக்குக் கீழ்க்காணுமாறு பிரித்துத் தரவேண்டும். சென்னை 15%, பம்பாய் 20%, வங்காளம் 20%, ஐக்கிய மாகாணங்கள் 15%, பஞ்சாபு 8%, பீகார் 10%, மத்திய மாகாணங்கள் 5%, அஸ்ஸாம் 2%, சிந்து 2%, வடமேற்கு எல்லைப்புற மாகாணம் 1%. 1939ஆம் ஆண்டு ஏப்பிரல் முதல் தேதிக்கு முன்பு மாகாணங்கள் வாங்கிய நிகரக் கடன்களை நீமியர் தள்ளுபடி செய்தார். சணல் வளரும் மாகாணங்களான வங்காளம், அஸ்ஸாம், பீகார் இவற்றிற்குச் சணல் வரியிலிருந்து $12\frac{1}{2}$%ஐப் பிரித்துக் கொடுக்குமாறும் தீர்ப்பளித்தார் ; மேலும், ரொக்கமாக ஆண்டுதோறும் இந்திய அரசாங்கம் மாகாண அரசாங்கங்களுக்கு உதவித் தொகைகள் (subventions) அளிக்க வேண்டும் என்றார்.

சந்தானம் தீர்ப்பு (Santhanam Award)

இரண்டாவது நிதிக் கமிஷன் திரு கே. சந்தானம் தலைமையில் நியமிக்கப்பட்டது. இந்நிதிக் குழு வசூலிக்கும் தொகையைவிட

மக்கள் தொகைக்கும் நுகர்ச்சிக்கும் அதிக முக்கியத்துவத்தை அளித்துள்ளது. இந்நிதிக் குழு, வருமான வரியில் மாநிலங்கட்குப் பிரித்துக் கொடுக்கும் தொகையை 55% முதல் 60% வரை ஐக்கிய மாகாணங்களுக்கு ஐந்து ஆண்டுகட்கு ரூ. 25 இலட்சம் வீதமும், அஸ்ஸாமுக்கு ரூ. 30 இலட்சமும், ஒரிஸ்ஸாவுக்கு ரூ. 40 இலட்சமும், வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திற்கு ரூ. 100 இலட்சமும் (5 ஆண்டுகட்குப் பின்பு புனராலோசனை செய்ய வேண்டும்), சிந்துவிற்கு ரூ. 105 இலட்சமும் கொடுக்க வேண்டும் (10 ஆண்டுகட்குப் பின்பு படிப்படியாக இத்தொகை குறைக்கப்பட வேண்டும்). நீமியரின் தீர்ப்பு, பல மாகாணங்களுக்குத் திருத்தியை அளிக்கவில்லை. 1947ல் இந்தியக் குடியரசு, பாக்கிஸ்தான் என இரு கூறுகளாக இந்தியா பிரிக்கப்பட்ட பொழுது இச்சதவிகிதங்கள் மாற்றப்பட்டன. ஈராண்டுகள் கழித்துச் சிந்தாமணி தேஷ்முக்கு வருமான வரியிலிருந்து பிரித்துக் கொடுக்கப்படும் பகுதியைத் திருத்தி அமைத்தார். இதன்படி சென்னைக்கு $17\frac{1}{2}$%ம், பம்பாய்க்கு 21%ம், மேற்கு வங்காளத்திற்கு 21%ம், உத்திரப்பிரதேசத்திற்கு 18%ம், பீகாருக்கு $12\frac{1}{2}$%ம், மத்தியப் பிரதேசத்திற்கு 6%ம், கிழக்குப் பஞ்சாபிற்கு 5_1%ம், அஸ்ஸாமுக்கு 5%ம், ஒரிஸ்ஸாவுக்கு 3%ம் வருமான வரியிலிருந்து பங்கு கிடைத்தது. இதன் பிறகு முதல் நிதிக் கமிஷன் சிபாரிசின்படி (1952) மாகாணங்களுக்கு வருமான வரி கிடைக்கக் கூடிய பகுதி 50%லிருந்து 55% ஆக உயர்த்தப்பட்டது. வருமான வரியின் மாகாணங்கட்குப் பிரித்துக் கொடுக்கக்கூடிய பகுதியில் 80%ஐ மக்கள் தொகையின் அடிப்படையிலும், 20%ஐ வசூலித்த தொகையின் அடிப்படையிலும் கொடுக்கவேண்டுமென நியோகி கமிஷன் தீர்ப்பளித்தது. இதன்படி மாகாணங்களுக்குக் கிடைக்கக்கூடிய வருமான வரியின் பகுதி வருமாறு :

அஸ்ஸாம் 2.25% ; பீகார் 9.75% ; பம்பாய் 17.50% ; ஹைதராபாது 4.50%; மத்திய பாரதம் 1.74%; மத்தியப் பிரதேசம் 5.25%; சென்னை 15.25%; மைசூர்; 2.25%; ஒரிஸ்ஸா 3.50%; பெப்சு 0.75%; பஞ்சாபு 3.25; ராஜஸ்தானம் 3.50%; சௌராஷ்டிரம் 1.00%; திருவாங்கூர் கொச்சி 2.50%; உத்தரப்பிரதேசம் 15.75%; மேற்கு வங்காளம் 11.25%. புகையிலை, தீப்பெட்டி, வனஸ்பதி இவற்றின்பேரில் விதிக்கப்படும் ஆயத்தீர்வைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் 40%ஐ மாநிலங்களுக்கு அவற்றின் மக்கள் தொகைக்கு ஏற்பப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்றும் இக்கமிஷன் சிபாரிசு செய்தது. இந்தியப் பிரிவினையால் ஏற்பட்ட பிரத்தியேகப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக மேற்கு வங்காளத்திற்கும் கிழக்குப் பஞ்சாபிற்கும் மானியங்கள் கொடுக்கப்பட்டன.

சந்தானம் தீர்ப்பு (Santhanam Award)

இரண்டாவது நிதிக் கமிஷன் திரு கே. சந்தானம் தலைமையில் நியமிக்கப்பட்டது. இந்நிதிக்குழு, வசூலிக்கும் தொகையைவிட மக்கள் தொகைக்கும் நுகர்ச்சிக்கும் அதிக முக்கியத்துவத்தை அளித்துள்ளது. இந்நிதிக்குழு, வருமான வரியில் மாநிலங்கட்குப் பிரித்துக் கொடுக்கும் தொகையை 55% முதல் 60% வரை உயர்த்தியுள்ளது. மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டிய பகுதியில் 90% மக்கள் தொகையின் பேரிலும், 10% அம்மாநிலங்களில் வசூலிக்கப்படும் தொகையின் பேரிலும் கொடுக்கப்பட வேண்டும். நியோகி (Neogy Commission) தீர்ப்பளித்ததைவிட, அதிக ஆயத் தீர்வைகளைச் சேர்த்து, அதில் 25%ஐ மாநிலங்களுக்குப் பிரித்துக்கொடுக்கவேண்டும் என இக்குழுச் சிபாரிசு செய்தது. இறப்பு வரியில் ஒரு பெரும் பகுதியை மாநிலங்களுக்கு வழங்கியதோடு மாநிலங்களுக்கு உதவி மானியங்கள் (Grants-in-aid) கொடுப்பதிலும் தாராளமாய் உதவியிருக்கிறது.

மூன்ருவது நிதிக்கமிஷன் அண்மையில் மேத்தா (G. L. Mehta) தலைமையில் அமைக்கப்பட்டது.

புதிய இந்திய அரசியல் சட்டத்தின்படி வருவாய் இனங்கள் கீழ்க்காணுமாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன. இப்பட்டியல்கள் ஏழாவது அட்டவணையில் (Seventh Schedule) காணக்கிடக்கின்றன. இப்பகுதி 1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின் மறு பதிப்பாகும்.

பட்டியல் (அ) : யூனியன் அரசாங்கத்தைச் சேர்ந்தவை

1. விவசாய வருமானம் தவிர, பிற வருமானங்கள்மீது வரி; 2. இறக்குமதி ஏற்றுமதி வரிகள் ; 3. மதுபான வகைகளைத் தவிரப் பிற இனங்களின்மீது ஆயத்தீர்வைகள் ; 4. கார்ப்பொரேஷன் வரி ; 5. தனியார்கள், கம்பெனிகள் இவற்றின் பெறுமானத்தின்மீது வரிகள் ; 6. வேளாண்மை நிலத்தைத் தவிரப் பிற சொத்துகளின்மீது விதிக்கப்படும் மரண வரியும் வாரிசு வரிகளும் ; 7. சரக்குகளின் மீதும் பிரயாணிகளின்மீதும் விதிக்கப்படும் வரிகள் ; 8. நிதி ஏடுகளின் (Financial documents) மீது விதிக்கப்படும் முத்திரைக் காகித வரிகள் (Stamp duties) ; 9. இருப்புப்பாதை பிரயாணிகள் கட்டணம் சரக்குக் கட்டணம் ((Freight) இவற்றின்மீது விதிக்கப்படும் வரிகள் ; 10. செய்தித் தாள்களின்மீது விற்பனை வரியும், அவற்றில் காணப்

படும் விளம்பரங்களின்மீது விதிக்கும் வரியும் ; *11*. மாநிலப்பட்டியலில் காணப்படாத பிற வரி இனங்கள்.

பட்டியல் (ஆ) : மாநில அரசாங்கங்கள்

1. விவசாய வருமான வரி ; *2*. வேளாண்மை நிலத்தின்மீது விதிக்கப்படும் மரண வரியும் வாரிசு வரிகளும் ; *3*. கட்டடங்கள், நிலம் இவற்றின்மீது வரிகள் ; *4*. உலோக உரிமைகள்மீது வரிகள் ; *5*. மது, போதை தரும் பொருள்கள் இவற்றின்மீது ஆயத் தீர்வைகள்; *6*. ஸ்தலங்களுக்குள் சரக்குகள் நுழையும் போது விதிக்கப்படும் வரிகள் (Taxes on the entry of goods into a local area) ; *7*. மின் சார நுகர்ச்சி, மின்சார விற்பனை இவற்றின்மீது விதிக்கப்படும் வரிகள் ; *8*. விற்பனை வரி (செய்தித் தாள்களைத் தவிர்த்து) ; *9*. சாலை மார்க்கமாக, அல்லது உள் நாட்டு வாய்க்கால்கள் மார்க்கமாக வரும் சரக்குகள், பிரயாணிகள்மீது வரிகள் ; *10*. ஊர்தி வரிகள் (Taxes on vehicles); *11*. மிருகங்களின்மீது விதிக்கப்படும் வரிகள் ; *12*. வழிச் சுங்க வரிகள் (Tolls); *13*. தொழில், உத்தியோக வரிகள் ; *14*. தலை வரிகள் (Capitation taxes) ; *15*. போகப் பொருள்கள், தமாஷா, சூதாட்டம், பந்தயம் இவற்றின்மீது விதிக்கப்படும் வரிகள் ; *16*. யூனியன் பட்டியலில் காணப்படாத முத்திரைக் காகித வரிகள்.

முப்பத்து நான்காமதிகாரம்

ஸ்தல நிதி

(Local Finance)

ஸ்தல சுய ஆட்சியை நான்கு கூறுகப் பிரிக்கலாம். அவை யாவன : 1. கிராமப் பஞ்சாயத்துகள், 2. ஜில்லா போர்டுகள் அல்லது பஞ்சாயத்து யூனியன்கள், 3. முனிசிபாலிட்டிகள், 4. முனிசிபல் கார்ப்பொரேஷன்கள்.

1. **கிராமப் பஞ்சாயத்துகள் :** பல மாநிலங்களிலும் கிராமப் பஞ்சாயத்துகளின் முக்கிய வருமான இனம் வரி விதிப்பே. மாநில அரசாங்கங்களின் கொடை இரண்டாவது ஸ்தானத்தையே வகிக்கிறது. ஜில்லா போர்டுகளுக்குக் கிராமப் பஞ்சாயத்துகளைக்காட்டிலும் கூடுதலான மானியங்களை மாநில அரசாங்கம் கொடுக்கிறது. சொத்து வரி, சேவை வரிகள், நிலவரி, அல்லது நிலக் குத்தகையின் மீது தீர்வை, தொழில், உத்தியோகம் இவற்றின்மீது வரிகள், மிருகங்கள், வாகனங்களின்மீது வரிகள், பண்டங்கள் பஞ்சாயத்து எல்லைக்குள் வரும் பொழுதும் எல்லையை விட்டு நீங்கும் பொழுதும் விதிக்கப்படும் வரிகள், மாநில விற்பனை வரியில் கண்டிராத பண்டங்களின்மீது விற்பனை வரிகள், யாத்திரிகர் வரி, தியேட்டர் வரி, திருமண வரி, குழந்தைப் பிறப்பின்மீது வரி, சந்தை, கேளிக்கைமீது வரிகள், உழைப்பு வரி, இவற்றையெல்லாம் கிராமப் பஞ்சாயத்துகள் விதிக்கலாம். ஆயினும், வரி விதிப்பிற்கும், வரி விகிதங்களை மாற்றுவதற்கும், வரிகளை ஒழிப்பதற்கும் மாநில அரசாங்கத்தின் இணக்கம் தேவையானதாகும். நடைமுறையில் மேலே குறித்த நீண்ட பட்டியலில் கண்ட வரிகளில் மூன்று அல்லது நான்கை மட்டுமே பஞ்சாயத்துகள் விதித்திருக்கின்றன. இவை சொத்து வரி, நிலம் அல்லது நிலக் குத்தகைமீது வரி, தொழில் வரி, மிருகங்கள் வாகனங்களின்மீது வரி என்பனவாகும். பஞ்சாயத்துகளுக்குப் பல அலுவல்களைக்

கொடுத்திருப்பினும், அவை பிறப்பு இறப்பைப் பதிவு செய்வது, சாவடிகளைக் கட்டுவது பராமரிப்பது, குடி தண்ணீருக்காகக் கிணற்றைத் தோண்டுவது, பராமரிப்பது, பழுது பார்ப்பது, சில கிராமச் சாலைகள், சாக்கடைகள் இவற்றைக் கட்டுவது, பராமரிப்பது, உழைப்புத்தானம் செய்வது, கிராமத் தெருக்களுக்கு விளக்கிடுதற்கு வகை செய்வது ஆகிய சில பணிகளையே மேற்கொண்டிருக்கின்றன.

2. **ஜில்லா போர்டு :** ஜில்லா போர்டுகள், தங்கள் வருமானத்தில் ஒரு கணிசமான பகுதியை மாநில அரசாங்கங்களிலிருந்து மானிய உதவிகள் மூலம் பெறுகின்றன. அவற்றின் வரி விதிக்கும் அதிகாரம் ஒரு சிறிய வரம்புக்கு உட்பட்டது. பெருந்தொகைகளை மாநில அரசாங்கத்திடமிருந்து மானியமாகப் பெற்றாலும், அவை நகராண்மைக் கழகங்களைவிட ஏழ்மையான நிலையில் இருக்கின்றன. அவற்றின் முக்கிய வருமான இனம் நிலத்தின்மீது விதிக்கப்படும் செஸ் (Cess) வரியாகும். செஸ் வரியிலிருந்து கிடைக்கும் வருமானம் பல்லாண்டுகளாக மாறாது ஒரே படியாய் இருக்கிறது. சொத்துப் பட்டா மாறுதல்மீது வரி, உத்தியோக வரி, சுங்க வரிகள் செஸ் வரிக்கு அடுத்த நிலையில் உள்ளன. நாட்டின் பல பாகங்களிலும் பெரிய பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவை மேலும் மேலும் ஜில்லா போர்டுகளின் அலுவல்களையும் வருமான இனங்களையும் எடுத்துக்கொண்டு வருகின்றன.

3. **நகராண்மைக் கழகங்கள் :** நகராண்மைக் கழகங்களின் வருமானத்தில் சராசரி 63·2% வரிகளினின்று கிடைக்கிறது. நகராண்மைக் கழகங்கள் விதிக்கும் வரிகளில் கீழ்க்காண்பவை முக்கியமானவை. அவை வருமாறு : 1. சொத்து வரி, கட்டணங்கள், நிலங்களின்மீது வரி, சேவை வரிகள், சொத்துப் பட்டா மாறுதலின் போது விதிக்கப்படும் வரி ; 2. சாமான்களின்மீது வரிகள், சாமான்கள் நகர எல்லைக்குள் வரும்பொழுதும், எல்லையை விட்டு வெளியேறும் பொழுதும் விதிக்கப்படும் வரிகள் ; 3. தனியார்மீது வரிகள், உத்தியோகம் அல்லது வியாபார வரிகள் ; 4. தியேட்டர் அல்லது ஆட்ட வரி (show tax); 5. வாகனங்கள் மிருகங்களின்மீது வரி. பொதுவாகப் பார்க்குமிடத்து நேர்முக வரிகளைவிட மறைமுக வரிகளையே நகராண்மைக் கழகங்கள் விரும்புகின்றன போலத் தோன்றுகின்றது. நகராண்மைக் கழகங்களின் வருமானமும் செலவும் மிகக் குறைந்த அளவில் உள்ளன. செலவு ஏறுவதற்கு ஏற்றாற்போல, அவற்றின் வருமானம் ஏறவில்லை. நகராண்மைக் கழகங்கள் ஆற்ற வேண்டிய கட்டாயச் சேவைகள்கூடத் திருத்திகரமாக நிறைவேற்றப்படவில்லை.

4. முனிசிபல் கார்ப்பொரேஷன்கள் : நகராண்மைக் கழகங்களுக்கும், கார்ப்பொரேஷன்களுக்கும் இரு வேறுபாடுகள் உள்ளன. 1. கார்ப்பொரேஷன்கட்கு நகராண்மைக் கழகங்களைக்காட்டிலும் கூடுதலான வரி விதிப்பு அதிகாரங்கள் இருக்கின்றன. கார்ப்பொரேஷன் நிருவாக அலுவல்களிலிருந்து (administrative functions) சிந்திக்கும் அலுவல்கள் (deliberative functions) பிரிக்கப்பட்டிருக்கின்றன. முனிசிபல் கமிஷனர் தேர்ந்தெடுக்கப்பட்ட கார்ப்பொரேஷன் குழுவினின்றும் தனியாக ஓரேயளவு சுயேச்சை உள்ளவர். இப்பொழுது 12 கார்ப்பொரேஷன்கள் உள்ளன. கீழ்க்காணும் விளக்கம் அவற்றின் வருமானம், மக்கள் தொகை இவற்றிலுள்ள வேறுபாடுகளைத் தெளிவாகக் காட்டுகிறது :

	மக்கள் தொகை (இலட்சத்தில்)	1951-52ல் வருமானம் (லட்சத்தில்)
பம்பாய்	28·36	860·5
கல்கத்தா	25·21	542·5
சென்னை	14·29	230·0
ஆமதாபாது	8·14	110·6
திருவனந்தபுரம்	1·87	9·9
நாகபுரி	4·89	108·3

வரி வருமானங்களிலிருந்து பெருந்தொகையைப் பெற்றாலும், நகரத் திட்டத்தை நிறைவேற்றுதல் (implementation of town-planning schemes), சேரிகளைச் சுத்தம் செய்தல் (slum clearance), வீடுகள் கட்டுதல், தண்ணீர் சப்ளை, புதை சாக்கடை போன்றவற்றிற்குக் கார்ப்பொரேஷன்கள் வருமானம் போதாமல் திண்டாடுகின்றன. பெரிய நகரங்களில் மக்கள் தொகை பெருவாரியாக அதிகரித்திருப்பதால், மேற்கூறிய வசதிகள் எல்லாம் இன்றியமையாது தேவைப்படுகின்றன.

ஸ்தல ஸ்தாபனங்களின் எதிர்காலம்

ஸ்தல ஸ்தாபனங்களின் தேவைகளையும் பொறுப்புகளையும் எண்ணும்போது, இந்தியாவில் அவற்றின் வருமானம் மிகச் சொற்பமானது. மத்திய மாநில அரசாங்கங்களின் வருமானங்களை நோக்குமிடத்து, ஸ்தல ஸ்தாபனங்களின் வருமானம் மிகவும் மெதுவாகவே

வளர்கின்றது. ஐந்தாண்டுத் திட்டங்களின் வெற்றி, ஸ்தல சுய ஆட்சி நிலையங்களின் மனமார்ந்த ஒத்துழைப்பையும் முனைவையும் (initiative) பொறுத்திருக்கிறது. திட்டங்களைப் பொறுத்த வரை பல பெரும்பொறுப்புகளும் கடமைகளும் ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. 19ஆம் நூற்றாண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட சில வரிகளை ஸ்தல அரசாங்கங் களுக்காக விதிக்கும் அதிகாரத்தைத் தந்ததுமன்றி, ஸ்தல சுய ஆட்சி நிலையங்கள், வழிச்சுங்க வரி (tolls), நிலத்தின் பெறுமானத்தின்மீது வரி, கட்டட வரி, வாகனங்கள், படகுகள், மிருகங்களின்மீது வரி போன்ற வரிகளைப் பிறப்பிக்கவும் அதிகாரமளித்தது. ஆனால், இவ்விதிகள் 1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தினால் ரத்துச் செய்யப்பட்டன. முன்பு பட்டியல் வரிகள் எனக் குறிப்பிடப்பட்டவை மாகாணப் பட்டியலில் இடம் பெற்றதோடு, இவை ஸ்தல சுயாட்சி நிலையங்களுக்காக ஒதுக் கப்பட்டன, (**விளக்கம் இல்லை.**) இம்மாறுதலால் ஸ்தல ஸ்தாபனங் களின் நிதி நிலைமை மிகவும் பாதிக்கப்பட்டது. ஏற்கெனவே ஸ்தல வரிகள் என ஒப்புக்கொள்ளப்பட்டவை மாகாண அரசாங்கங்களால் சில சமயங்களில் தங்களுடைய நன்மைக்காகவே பயன்படுத்தப் பட்டன. மாநில அரசாங்கம் ஸ்தல ஸ்தாபனங்களுக்குக் கடன் அல்லது வேறு உதவி அளிக்கலாம். ஆனால், அவை ஸ்தல ஸ்தா பனங்களுக்குக் குறிப்பிட்ட சில வரவினங்களைக் கொடுக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. மத்திய அரசாங்கத்திற்கோ ஸ்தல ஸ்தாபன நிருவாகங்களுடன் நேரடியான தொடர்பு இல்லை. பஞ்சம், வெள்ளம், பிற இயற்கைக் கோளாறுகள் நிகழ்ந்த பொழுது மத்திய அரசாங்கம் நேரடியாக ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நிதி உதவி அளிக்கலாம்.

1953ஆம் ஆண்டின் வரி விதிப்பு விசாரணைக் குழுவினர் ஸ்தல ஸ்தாபனங்களின் புனரமைப்புக்காகப் பல்வேறுபட்ட சிபாரிசுகளைச் செய்தனர். கிராமப் பஞ்சாயத்துகளைப் பொறுத்த வரை, சட்டத்தின் படி அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட அலுவல்களை அவை திறமையா கச் செய்யும் என்பதில் அக்குழுவினருக்கு நம்பிக்கை இல்லை. குறிப் பிட்ட ஒரு சில தெளிவாக வரையறுக்கப்பட்ட கடமைகளே கிராமப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது குழுவின் கருத்து. பிற நாட்டுப்புறக் கழகங்கள் (rural boards), ஜில்லா போர்டுகள் ஆகிய இவற்றிற்குக் கொடுக்கப்பட்ட அலுவல்களுடன் கிராமப் பஞ்சாயத்து அலுவல்களையும் இணைக்க வேண்டும் என்பது இக்குழுவின் கருத்தாகும்.

ஸ்தல ஸ்தாபனங்களின் நிதியைப் பற்றிய வரை கீழ்க்காணும் வரிகள் அவற்றிற்காகத் தனியாக ஒதுக்கப்பட வேண்டுமென்று இக் குழுச் சிபாரிசு செய்தது. அவை வருமாறு : (அ) நிலம், கட்டடம்

இவற்றின்மீது வரி ; (ஆ) ஆக்ட்ராய் (Octroi duties) ; (இ) எந்திரங்களால் செலுத்தப்படாத வாகனங்களின்மீது வரி விதிப்பு ; (ஈ) தோணிகள், மிருகங்களின்மீது வரி; (உ) உத்தியோகம், வியாபாரம், தொழில் இவற்றின்மீது வரி விதிப்பு ; (ஊ) செய்தித் தாள்களில் வரும் விளம்பரங்களைத் தவிர்த்துப் பிற விளம்பரங்களின்மீது வரி ; (எ) கொட்டகை அல்லது ஆட்ட வரி ; (ஏ) சொத்துக் கைமாறும்போது விதிக்கப்படும் வரி, தரை மூலமாகவும், உள்நாட்டு வாய்க்கால்களின் மூலமாகவும் பிரயாணம் செய்யும் மக்கள்மீதும், சரக்குகள்மீதும் ஸ்தல ஸ்தாபன வரிகள் அல்லது வழிச் சுங்க வரிகள் (tolls) விதிக்க அதிகாரம் இருக்கவேண்டுமெனவும் குழுச் சிபாரிசு செய்தது. குழுவின் கருத்துப்படி ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வரிகளில் பங்கு கொடுப்பதைவிட மானிய உதவி கொடுப்பதே மேலாகும். ஆயினும், நிலவரி, மோட்டார் வரி இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தை மாநில, ஸ்தல அரசாங்கங்கள் தங்களிடையே பகிர்ந்து கொள்ள வேண்டும். வாணிகத் துணிவுகளையும், பிற வரியல்லாத வரவினங்களையும் ஸ்தல ஸ்தாபனங்கள் அபிவிருத்தி செய்யவேண்டும். பெரிய நகராண்மைக் கழகங்கள், கார்ப்பொரேஷன்களைத் தவிர்த்து, பிற எல்லா ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் மாநில அரசாங்கங்கள் 'பொது நலனுக்காக' அடிப்படை மானியம் (basic grant) கொடுக்க வேண்டும். இம்மானியம் தொடர்ந்து மூன்றாண்டு முதல் ஐந்தாண்டுகள் வரை யாதொரு மாறுதலுமின்றிக் கொடுக்கப்பட வேண்டும். இவ்வடிப்படை மானியங்களைத் தவிர்த்து, குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் மானியங்கள் கொடுக்கவேண்டுமெனவும் குழுச் சிபாரிசு செய்தது. நகராண்மைக் கழகங்கள் வெளியிடும் கடன்களுக்கு மாநில அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கவேண்டும். நாட்டுப்புறக் கழகங்களுக்கு ஏற்ற வரிகள் இரண்டேயெனவும், அவை செஸ் வரியும், சொத்துக் கைமாறும்போது விதிக்கப்படும் வரியுமாம் எனவும் குழுக் கருதியது. பஞ்சாயத்துகளுக்கு ஏற்ற வரிகள் சொத்து வரி, சேவை வரிகள், செஸ் வரி, சொத்துக் கைமாறும்போது விதிக்கப்படும் வரி என்பனவாம்.

இக்குழுவின் பிற சிபாரிசுகளில் சில வருமாறு : (அ) சிறிய நகராண்மைக் கழகங்களின் அபிருத்தித் திட்டங்களுக்காக மாநில அரசாங்கங்கள் போதிய நிதி உதவி அளிக்கவேண்டும். (ஆ) இப்பொழுது இருக்கும் குறைந்த விகிதச் செஸ் வரியை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக நில வரியின்மீது கணிசமான அளவு மேல் கட்டணம் (surcharge) வசூலிக்க வேண்டும். இவற்றை வசூலிக்கும் உரிமை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மட்டுமே இருக்க வேண்டும். செஸ் வரியின் குறைந்த வீதம் ஒவ்வொரு ரூபாய் நில வரியிலும் மூன்று அணுவாகவாவது இருக்க வேண்டும். நிலையில் பொருள்கள் கை

மாறும்போது விதிக்கப்படும் வரிகள் நகர ஸ்தல ஸ்தாபனங்களையே சார்ந்திருக்க வேண்டும். நகராண்மைக் கழகப் பிரதேசங்களில் இருப்புப்பாதை மூலமாகவோ, வானவெளி மூலமாகவோ ஏற்றிச் செல்லப்படும் சரக்குகளின்மீது ஓர் இறுதி வரியை விதிப்பதை மத்திய அரசாங்கம் ஆதரவுடன் பரிசீலனை செய்ய வேண்டும். (இ) நகராண்மைக் கழகங்கள், கார்ப்பொரேஷன்களில் குறைந்த அளவு தொழில் வரி விதிப்பது கட்டாயமானதாக இருத்தல் வேண்டும். பஞ்சாயத்துகளைப் பொறுத்த வரை தொழில் வரி விகிதத்தை அவற்றின் விருப்பத்திற்கே விட்டுவிடலாம். ஜில்லா போர்டுகள் தொழில் வரி விதிக்கச் சாதாரணமாக அனுமதி யளிக்கக்கூடாது. (ஈ) மோட்டார் கார்களின் சக்கரத்தின்மீது தனி யாக ஒரு வரியைக் கார்ப்பொரேஷன்கள் விதிக்கவேண்டும். நகராண் மைக் கழகங்களும், ஜில்லா போர்டுகளும் மாநில அரசாங்கங்கள் விதிக்கும் மோட்டார் வரி வருமானத்திலிருந்து ஒரு பங்கைப் பெற வேண்டும். (உ) வழிச் சுங்க வரிகளை (tolls) நீக்கவேண்டும். ஐந்து இலட்ச ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் செலவு பிடிக்கும் பாலங் களுக்காக மட்டும், அவற்றின் செலவுத்தொகையை ஈடுகட்டும் வரை யில் வழிச் சுங்க வரிகளை விதிக்கலாம்.

முப்பத்தைந்தாமதிகாரம்

பிற்சேர்க்கை

சமஷ்டி அரசாங்கங்களின் நிதி அதிகாரங்கள்

(Financial Powers of Fedaral Governments)

(1907, 1910, 1929ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டபடி)

51ஆம் விதி : இவ்வரசியல் அமைப்பின் வரம்புக்கு அடங்கிக் காமன்வெல்த்து அரசாங்கம் நல்லபடியாக நடப்பதற்கும், அமைதி ஒழுங்கு இவற்றை நிலைநாட்டவும் சட்டம் இயற்றப்பாராளுமன்றத்திற்குக்கீழ்க்காணும் விஷயங்களில் அதிகாரம் இருக்கிறது. 1. பிறநாடுகளுடன் வாணிபமும், மாநிலங்களிடையே வாணிபமும் ; 2. வரி விதிப்பு ; மாநிலங்களிடையே அல்லது மாநிலங்களின் பகுதிகளிடையே வேறுபாடு கற்பிக்கக்கூடாது ; 3. உற்பத்தியாகும் அல்லது ஏற்றுமதியாகும் பொருள்களின்மீது மானியங்கள் ; ஆனால், இம்மானியங்கள் காமன் வெல்த்து முழுவதற்கும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும் ; 4. காமன் வெல்த்து அரசாங்கத்தின் நாணயத்தின்பேரில் கடன் வாங்குதல் ; 5. தபால், தந்தி, தொலைபேசி (telephone) இன்னோரன்ன பணிகள் ; 12. செலாவணி, நாணயம் அச்சேற்றுதல், சட்டமுறைப்பணம் ; 13. பாங்கு முறை (மாநில முறையைத் தவிர்த்து) ; மாநில பாங்குகள் தங்கள் மாநிலத்தின் எல்லையை மீறினால், அவை காமன் வெல்த்து அதிகாரத்திற்கு உட்பட்டவை. பாங்குகளின் இணைப்பு (Incorporation of banks) காகிதப்பண வெளியீடு; 14. இன்சூரன்ஸ் (மாநில இன்சூரன்சைத் தவிர்த்து) : மாநில எல்லைகளை மீறிய மாநில இன்சூரன்ஸ் (State insurance extending beyond the limits of the state concerned); 15. எடைகளும் அளவைகளும் ; 16. வாணிப உண்டியல்கள் (bills of exchanges), புரோநோட்டுகள் ; 32. காமன் வெல்த்தின் கடற்படை, தரைப்படை பற்றிய பிரயாணத்

திற்காக இருப்புப்பாதைகளைக் கண்காணித்தல் ; 33. ஒரு மாநிலத்தின் இணக்கத்துடன் மாநில இருப்புப்பாதைகளை எடுத்துக்கொள்வது; 34. ஒரு மாநிலத்தின் சம்மதத்துடன் மாநில இருப்புப்பாதைகளை விரிவாக்குவது.

53ஆம் விதி : பணமசோதாக்கள், வரி விதிப்பு மசோதாக்கள் இவற்றையெல்லாம் முதியோரவையில் முதலில் கொணரக்கூடாது. வரி விதிப்பு அல்லது பண ஒதுக்கீடு இவற்றைப் பற்றிய சட்டங்களைத் திருத்த முதியோரவைக்கு அதிகாரமில்லை.

55ஆம் விதி : வரி விதிப்பைப்பற்றிய சட்டங்கள் வரி விதிப்பைப் பற்றி மட்டுமே பேசவேண்டும். பிற விஷயங்கள் அவற்றில் கண்டிருந்தால், அவை செல்லுபடியாகா. வரி விதிப்பைப்பற்றிய சட்டங்கள் ஒரே ஒரு வரி விதிப்பைப்பற்றி மட்டுமே பேசலாம். இதற்கு விலக்கு, ஏற்றுமதி இறக்குமதி வரிகளும், ஆயத்தீர்வைகளுமாம். ஏற்றுமதி இறக்குமதி வரிகளைப் பற்றிய சட்டங்களில் அவ்வரிகளைப்பற்றி மட்டுமே கண்டிருக்க வேண்டும். அதே போல ஆயத் தீர்வைகள் பற்றிய வரிகளில் அவ்வரிகள் பற்றியே கண்டிருக்க வேண்டும்.

81ஆம் விதி : காமன் வெல்த்தின் நிருவாகக் குழுவினால் பெறப்பட்ட வருவாய்கள் அல்லது பணத்தொகைகள் எல்லாம் இணைக்கப்பட்ட வருவாய் நிதி (Consolidated Revenue Fund) என்ற ஒரே நிதியில் சேரவேண்டும். அதிலிருந்துதான் காமன் வெல்த்தின் நலனுக்காகவும், இவ்வரசியல் சட்டத்தில் கூறிய முறைக்கு ஏற்பவும், நிதி ஒதுக்க வேண்டும்.

86ஆம் விதி : காமன் வெல்த்து நிறுவப்பட்டதும், ஏற்றுமதி இறக்குமதி வரிகள், ஆயத்தீர்வைகள் இவற்றின் வசூலும் கட்டுப்பாடும், அரசாங்கக் கொடைகள் (bounties) பற்றிய கண்காணிப்பும், காமன் வெல்த்து நிருவாகக் குழுவிற்குச் செல்லவேண்டும்.

88ஆம் விதி : காமன் வெல்த்து ஏற்படுத்தப்பட்ட ஈராண்டுக்குள் ஒரே மாதிரியான ஏற்றுமதி இறக்குமதி வரிகள் விதிக்கும் வரை 1. காமன் வெல்த்து தன்னால் ஒவ்வொரு மாநிலத்திலும் வசூலிக்கப்பட்ட வருவாய்களை அந்தந்த மாநில அரசாங்கத்தின் கணக்கிலேயே பற்று வைக்க வேண்டும். 2. (அ) மாநிலத்திலிருந்து காமன் வெல்த்துக்கு ஓர் இலாக்கா மாற்றப்பட்டபொழுது தொடர்ந்து அவ்விலாக்காவைப் பராமரிப்பதற்கு அல்லது நீடிப்பதற்குக் காமன் வெல்த்து செலவு மேற்கொள்ளலாம் ; (ஆ) காமன் வெல்த்தின் பிற செலவில் மக்கள் தொகைக்கு ஏற்றவாறு மாநிலத்தின் பகுதியை அதன் கணக்கில் எழுதுதல். 3. திங்கள்தோறும் காமன்வெல்த்து ஒவ்வொரு

மாநிலத்திற்கும், அதனதன் கணக்கில் நிகர வருமானம் ஏதாவது இருந்தால், அதை ஒப்புவிக்கும். மேற்கூறிய செலவுகளெல்லாம் காமன்வெல்த்து மாநிலக் கணக்கில் எழுதலாம்.

90ஆம் விதி : ஒரே மாதிரியான ஏற்றுமதி இறக்குமதி வரி விதிக்கப்பட்ட பின்பு, ஏற்றுமதி இறக்குமதி வரிகள், ஆயத் தீர்வைகள் இவற்றை விதிப்பதற்கும், உற்பத்தியாகும் அல்லது ஏற்றுமதியாகும் பொருள்களின்மீது அரசாங்கக்கொடைகள் அளிப்பதற்கும், பாராளுமன்றம் ஒன்றினுக்கே அதிகாரம் இருக்கும். ஒரே மாதிரியான ஏற்றுமதி இறக்குமதி வரிகளை விதித்த பின்பு, ஏற்றுமதி இறக்குமதி வரிகள் அல்லது ஆயத்தீர்வைகளை விதிக்கும் பல மாநிலங்களின் சட்டங்களும், அல்லது உற்பத்தியாகும் அல்லது ஏற்றுமதியாகும் பொருள்களின்மீது கொடுக்கப்படும் அரசாங்கக் கொடைகளும் செல்லுபடியாகா. ஆனால், இவ்வகை அரசாங்கக் கொடைகளைக் கொடுப்பதற்குச் சட்டப்படி ஒப்பந்தம் செய்திருந்தாலோ, அல்லது ஒரு மாநில அரசாங்கத்தின் அதிகாரத்தின்கீழ்க் கொடுக்கப்பட்டிருந்தாலோ, அஃது 1898ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 30ஆம் தேதிக்கு முன்பு அளிக்கப்பட்டிருந்தாலொழியச் செல்லுபடியாகாது.

92ஆம் விதி : ஒரே மாதிரியான ஏற்றுமதி இறக்குமதி வரிகள் விதித்த பின்பு மாநிலங்களிடையே தரை மூலமாகவோ, கடல் மூலமாகவோ, வாணிபம், முதலிய போக்குவரத்து எல்லாம் கட்டுப்பாடுகளின்றி இருக்கும்.

100ஆம் விதி :ஆற்று நீரில் போதுமான அளவைத் தேக்கத்திற்காகவோ அல்லது நீர்ப்பாசனத்திற்காகவோ உபயோகப்படுத்தும் ஒரு மாநிலத்தின் உரிமையையோ அல்லது அதில் வசிக்கும் மக்களின் உரிமையையோ காமன்வெல்த்து, வாணிபம் அல்லது வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு சட்டத்தின் மூலம் குறைக்கக்கூடாது.

II. பிரேசில்

(Brazil)

1937ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள், 10ஆம் நாள் இயற்றப்பட்ட அரசியல் சட்டம், 1942, அகடோபர், 12ல் திருத்தப்பட்டபடி)

3ஆம் விதி : சொந்த நலன்களைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு ஒவ்வொரு மாநிலமும் நிருவாகக் குழுவை (executive) அமைத்துக் கொள்ளவேண்டும் ; அதற்குத் தன் வரவினங்களிலிருந்தே ஊதியம் கொடுக்க வேண்டும்.

மூன்றாண்டுகட்குத் தொடர்ந்தாற்போல எந்த ஒரு மாநிலமும் தன் தேவைகளுக்கு வேண்டிய வருமானத்தை வசூல் செய்துவிட்

டால், அதன் நிருவாகத்திறன் மீண்டும் நிலை நிறுத்தப்படும் வரை அம்மாநிலம் ஒரு பிரதேசமாக மாற்றப்படும்.

10ஆம் விதி : யூனியன் அர்சாங்கத்தின் வர்த்தக உடன் படிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, ஒவ்வொரு மாநிலமும் அவசிய மான நடவடிக்கைகளைத் தன் அதிகார எல்லைக்குள் எடுத்துக்கொள் ளக் கடமைப்பட்டுள்ளது. மாநிலங்கள் கணிசமான காலத்திற்குள் இவற்றைச் செய்யத் தவறுமாயின், அந்நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கான சட்டமியற்றும் அதிகாரம் யூனியனைச் சாரும்.

15ஆம் விதி : யூனியனுக்குக் கீழ்க்காணும் விஷயங்களின்மீது பூரண அதிகாரம் இருக்கும். 1. பிற நாடுகளுடன் உறவு வைத்துக் கொள்ளுதல், அரசாங்கப் பிரதிநிதிகளை நியமித்தல், சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது சம்பிரதாயங்களுக்கு இணங்குதல், 2. எந்த விதமான போர்ச் சாமான்களையும், வியாபாரத்தையும், மேற் பார்வையிடுதலும் அவற்றை உற்பத்தி செய்ய அனுமதி அளித்தலும், 6. தபால் சேவைகள்.

16ஆம் விதி : கீழ்க்காணும் விஷயங்களைப்பற்றிச் சட்டம் இயற்ற யூனியனுக்கு முழு அதிகாரம் உண்டு.

6. இணைப்பு நிதிகள் (consolidated funds) செலாவணி, கடன், பரிவர்த்தனைகள் (exchange), பாங்குத் தொழில் பிரச்சினைகள்.

7. பிற நாட்டு வாணிபம், மாநிலத்திடை வாணிபம், நிதி களைப் பிற நாட்டுக்கு மாற்றுதல், பரிவர்த்தனை செய்தல்.

8. முற்றுரிமைகள், தொழில்களைத் தேசிய மயமாக்குதல்.

9. எடைகள், அளவைகள், பொன் வெள்ளி உலோகங் களுக்கு உத்தரவாதமளித்தல்.

13. சுங்கச் சாவடிகள், கிட்டங்கிகள், கப்பல் போக்கு வரத் துத் துறைமுகம், ஆற்றுப் போலீஸ் (river police).

20ஆம் விதி : 1. (அ) பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய் யும் பொருள்களின்மேல் வரி விதித்தல், (ஆ) எந்த வகையான சரக்கு அல்லது பொருளின் நுகர்ச்சியின்மீது வரி விதித்தல், (இ) எந்த விதமான வருமானம் அல்லது வரவுகள்மேல் வரி விதித்தல், (ஈ) நிதிகளைப் பிற நாட்டுக்கு அனுப்புதல், (உ) அரசாங்கத்தால் நிறைவேற்றப்படும் சேவைகள் மீதும், அதன் நிருவாகத்தில் இருக் கும் தொழில் மீதும், சமஷ்டிச் சட்டத்தால் கட்டுப்படுத்தப்படும் ஒப்

பந்தங்கள் அல்லது பரிவுகளின்மீதும், (ஊ) அரசியல் சட்டத்தின்படி மாநிலங்களால் அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களின்மீதும் வரி விதிக்க யூனியன் அரசாங்கத்திற்கே அதிகாரம் உண்டு.

23ஆம் விதி : 1. (அ) நகரத்தைத் தவிர்த்து, பிற எல்லாப்பிரதேச உடைமையின்மீதும், (ஆ) இறந்ததனுல் உடைமை கைம் மாறும்பொழுதும் வரி விதிக்கவும் ; 2. (அ) விற்பனை வரிகளை வசூல் செய்யவும் (எங்கிருந்து இவ்வரிகள் வசூலிக்கப்பட்டாலும், நோக்கம் யாதாயினும், அல்லது எந்த வகையான சரக்காயினும் ஒரே மாதிரி யான வரி விதிப்பு இருக்கவேண்டும்) ; (ஆ) தொழில்கள், உத்தியோகங்கள் இவற்றின்மீது மாநிலம் தீர்வை விதிக்கவும் வசூல் செய்யவும், மாநிலத்திற்கும் நகராண்மைக் கழகத்திற்கும் சம அதிகாரம் உண்டு. (இ) இவ்விதிக்குப் புறனடையாகச் சமஷ்டிக் குழுவின் இணக்கம் பெற்று, ஏற்றுமதி வரியைத் தாற்காலிகமாக அதிகரிக்கலாம். மேற் கூறிய அதிகாரங்கள் அனைத்தும் 35ஆம் விதியில் (டி) பிரிவில் கூறியதைத் தவிர்த்து மாநிலங்களைச் சாரும்.

24ஆம் விதி : மாநிலங்கள் பிற வகை வரிகளையும் விதிக்கலாம். ஆயினும், இரட்டிப்பு வரி விதிப்பு (double taxation) தடை செய்யப் பட்டுள்ளது. ஒரே விஷயத்தைப்பற்றி யூனியனுக்கும் மாநிலத்திற் கும் அதிகாரமிருந்தால், யூனியன் **ஆணையிட்ட** வரியே செல்லுபடியாகும். தானுகவோ, அல்லது வரி கொடுப்போரின் விண்ணப்பத் தின்மீதோ, இரட்டிப்பு வரி விதிப்பு விதிக்கிறதெனக் கூறி மாநில வரியை வசூல் செய்வதைத் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கச் சமஷ்டிக் குழுவுக்கு அதிகாரம் உண்டு.

25ஆம் விதி : தேசீயப்பிரதேசம் முழுமையும் வரணிப, பொருளாதார, சுங்கங்களுக்காக ஒரே அலகாகக் கருதப்படும். இவைகளிடையே போக்கு வரத்துக் கட்டுப்பாடுகளோ, அல்லது சுங்கத் தடைகளோ, நிறுவக்கூடாது. ஆகவே, மாநிலங்களும், நகராண் மைக் கழகங்களும் எந்தப் பெயரிலும் தங்குதடையின்றிச் சரக்கு களும் மனிதர்களும் செல்வதைத் தடைபடுத்தும் எந்த விதமான போக்குவரத்து வரிகளையும் மாநிலங்களிடை அல்லது நகராண்மைக் கழகங்களிடை வசூலிக்கக் கூடாதெனவும், அச்சரக்குகளை அல்லது ஆள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள்மீதும் கட்டுப்பாடுகள் விதிக் கக் கூடாதெனவும் தடை செய்யப்பட்டுள்ளது.

28ஆம் விதி : 23ஆம் விதியில் 2ஆம் பத்தியில் இப்போதைய அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டவைகளைத் தவிரவும், அவற் றுக்கு மாநில அரசாங்கத்தால் மாற்றப்படும் வரிகளைத் தவிரவும்,

நகராண்மைக் கழகங்கள் 1. லைசென்ஸ் வரிகள், 2. குடிமைசை வரி, நகர நில வரி, (urban land tax), 3. தமாஷா வரி, 4. முனிசிபல் சேவைகளின்மீது வரிகள் இவற்றை விதிக்கலாம்.

34ஆம் விதி : (ஆ) தன் உற்பத்தி ஸ்தானம் அல்லது மூல ஸ்தானத்தைப் பொறுத்துச் சரக்குகள் அல்லது சாமான்களிடை வரி விதிப்பில் எந்த விதமான வேறுபாடு கற்பிப்பதும், (இ) சமஷ்டிக் குழுவின் முன் சம்மதமின்றிப் பிற நாட்டில் கடன்களை வாங்குவதும், (ஈ) தேசீய நிலக்கரி, திரவ எரிபொருள்கள் (fuels), பூச்சு எண்ணெய்கள், இவற்றின் பங்கீடு, ஏற்றுமதி இவற்றின்மீதோ அல்லது இவற்றின் உற்பத்தி அல்லது வாணிபம் இவற்றின்மீதோ நேர்முகமான அல்லது மறைமுகமான வரிகள் விதிப்பதும் கூடாது என மாநில அரசாங்கங்களும், சமஷ்டி ஜில்லாக்களும், நகராண்மைக் கழகங்களும் தடை செய்திருக்கின்றன.

126ஆம் விதி : உழைப்பது சமூகக் கடமையாகும். அறிவு, தொழில் நுணுக்கம், உடல் உழைப்புகளெல்லாம் அரசாங்கத்தின் பிரத்தியேகப் பாதுகாப்பிற்கும் கவனத்திற்கும் உட்பட்டவை.

III. கனடா டொமினியன் (1867)

91ஆம் விதி : கனடிய பாராளுமன்றத்தின் பூரணச் சட்டமியற்றும் அதிகாரம் கீழே குறிப்பிட்டுள்ள எல்லா வகை விஷயங்களுக்கும் பொருந்தும்:

1. அரசாங்கக் கடனும் உடைமையும்.
2. வாணிபம், வர்த்தகக் கட்டுப்பாடு.
3. வரி விதிப்பு முறையாலோ, அல்லது வேறு எந்த முறையாலோ பணத்தைத் திரட்டுதல்.
4. அரசாங்க நாணயத்தின் பேரில் கடன் வாங்குதல்.
5. தபால் சேவைகள்.
7. பாதுகாப்புப் படை, தரைப்படை, கடற்படை, பாதுகாப்பு.
14. செலாவணி, நாணய வெளியீடு.
15. பாங்குத் தொழில், பாங்குகளை இணைத்தல், காகிதப் பண வெளியீடு.

17. எடைகள், அளவைகள்.

20. சட்ட முறைப்பணம் (legal tender).

92ஆம் விதி : கீழே குறிக்கப்பட்ட விஷயங்களைக் குறித்துச் சட்டங்கள் இயற்ற ஒவ்வொரு மாகாணச் சட்ட சபைக்கும் முழு அதிகாரம் உண்டு. அவையாவன :

2. மாகாண நோக்கத்திற்காக நேர்முக வரி விதிப்பால் மாகாணத்தில் வருமானம் திரட்டுதல்.

3. மாகாணத்தின் முழு நாணயத்தின் பேரில் கடன் வாங்குதல்.

112ஆம் விதி : யூனியன் ஏற்பட்ட பொழுதும், யூனியனுக்கு முன்பும் கனடா, நோவாஸ்கோஷியா, நியூபிரன்ஸ்லிக்குச் சட்ட சபைகளுக்கு இருந்த எல்லா வரிகளும், வருமானங்களும் இணைக்கப்பட்ட ஒரேவருமான நிதியைச் சேரும். இச்சட்டத்தில் கூறியாங்குக் கனடாவின் பொதுச் சேவைக்காக இப்பணம் ஒதுக்கப்படும்.

120ஆம் விதி : ஒவ்வொரு மாகாணமும் ஏற்றுக்கொண்ட அரசாங்கக் கடனின் கழிவுகளுடன், சம்பந்தப்பட்ட ஆஸ்திகள் அனைத்தும் மாகாணங்களையே சாரும்.

121ஆம் விதி: கனடிய யூனியன் ஏற்பட்ட பொழுது ஒவ்வொரு மாகாணத்திற்கும் இருந்த- கடன்களுக்கும், பொறுப்புகளுக்கும் கனடா பொறுப்பாளியாகும்.

132ஆம் விதி : கனடாவின் பாராளுமன்றத்தால் மாறுதல் செய்யப்படும் வரை ஒவ்வொரு மாகாணத்தின் சுங்க வரிகளும் ஆயத்தீர்வைகளும் இச்சட்ட விதிகளுக்கு உட்பட்டுத் தொடர்ந்து அமுலில் இருக்கும்.

133ஆம் விதி : கனடிய யூனியன் ஏற்பட்ட பொழுது எவையேனும் இரண்டு மாகாணங்களில் சாமான்கள், பண்டங்கள் அல்லது சரக்குகளின்மீது சுங்க வரிகள் விதிக்கப்பட்டிருந்தால், யூனியன் ஏற்பட்ட பின்பும், அச்சாமான்கள், பண்டங்கள் அல்லது சரக்குகள் ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்திற்கு ஏற்றுமதியாகும் பொழுது சாமான் எம்மாகாணத்திலிருந்து வெளியாகிறதோ அங்கு விதிக்கப்படும் வரிக்கும் மீண்டும் சாமான் இறக்குமதியாகும் மாகாணத்தில் வரி விதிக்கப்பட்டால் **சுங்க வரி** கட்டிவிட்டதற்கு அத்தாட்சியும் வைத்திருக்க வேண்டும்.

135ஆம் விதி: கனடா அல்லது எந்த மாகாணத்திற்கும் சொந்தமான நிலங்கள் அல்லது சொத்துகளின்மீது வரி விதிக்கக் கூடாது.

IV. சுவிஸ் சமஷ்டி (1874, மே, 29)

(Swiss Federation of May 29, 1874)

(1931 மார்ச்சு 15வ வரை திருத்தப்பட்டது.)

27ஆம் விதி: ஆரம்பக் கல்வியை அமுலாக்குவதற்குத் துணை செய்யும் வகையில் கான்டன்களுக்கு (cantons) மானியங்கள் அளிக்கப்படும்.

28ஆம் விதி: ஏற்றுமதி இறக்குமதிவரிகளாகிய சுங்க வரிகளை விதிக்கும் அதிகாரம் கான்பெடரேஷனையே (Confederation) சாரும்.

29ஆம் விதி: சமஷ்டி அரசாங்கத்தின் சுங்க வரிகள் கீழ்க் காணும் கொள்கைகளுக்கு இணங்க வசூலிக்கப்பட வேண்டும்:

1. (அ) நாட்டின் தொழில், வேளாண்மை இவற்றிற்கு இன்றி யமையாத பொருள்களின்மீதும், (ஆ) வாழ்க்கைக்கு இன்றியமை யாத பொருள்களின்மீதும் இலேசாகவும், (இ) போகப் பொருள் களின்மீது கடுமையாகவும் வரிகள் விதிக்க வேண்டும்.

2. ஏற்றுமதி வரிகள் கூடுமான வரை குறைந்த அளவினவாக இருக்க வேண்டும்.

3. எல்லைப்புறங்களில் வாணிப மார்க்கெட்டுப் போக்குவரத்துத் தொடர்ந்து நீடிக்கும் வகையில் சுங்க வரி பற்றிய சட்டத்தில் தக்க விதிகள் இருக்க வேண்டும். நெருக்கடியான காலங்களைச் சமாளிப் பதற்குத் தாற்காலிகமாகப் புறநடை நடவடிக்கைகளைக் கான்பெட ரேஷன் எடுத்துக்கொள்வதை மேற்கூறிய விதிகள் மறுதலிக்கவில்லை.

30ஆம் விதி: சுங்க வரிகளின் வருமானம் கான்பெடரேஷனையே சாரும்.

31ஆம் விதி: கான்பெடரேஷன் முழுமையும் தடையிலா வாணிப (free trade) உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

32ஆம் விதி: கான்டன்கள் கீழ்க்காணும் கட்டுப்பாடு களுக்கு உட்பட்டுச் சாராயங்கள், பிற மது வகைகள் இவற்றின்மீது

இறக்குமதி வரிகளை விதிக்கலாம். (அ) இவ்வரிகளை வசூலிப்பதால் சரக்குகள் தாராளமாகச் செல்வது பாதிக்கப்படக்கூடாது. கூடுமான வரையில் வாணிபம் யாதொரு தடங்கலும் இல்லாமலும் வேறு எந்த விதமான வரி விதிக்கப்படாமலும் இருக்க வேண்டும். (ஆ) நுகர்ச்சிக்காகத் தவிர்க்கப்பட்ட பொருள்கள் மீண்டும் கான்டனிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டால், இறக்குமதி வரி வேறு யாதொரு கட்டணமுமின்றித் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். (இ) பிற நாட்டிலிருந்து வந்த பொருள்களைக்காட்டிலும் ஸ்விட்ஸர்லாந்திலேயே செய்யப்பட்ட பொருள்களின்மீது குறைந்த வீத வரியே விதிக்க வேண்டும். ஸ்விட்ஸர்லாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட சாராயம், மது வகைகள் இவற்றின்மீது இப்பொழுது கான்டன்களில் இறக்குமதி வரி விதிக்கப்பட்டால், அதை உயர்த்தக்கூடாது; இப்பொழுது இவ்வரியை விதிக்காத கான்டன்களில் புதியனவாக இவ்வரிகளை விதித்தல் கூடாது.

36ஆம் விதி : ஸ்விட்ஸர்லாந்து முழுமையும் தபால் தந்தி கான்பெடரேஷன் அதிகாரத்திற்கு உட்பட்டது. தபால் தந்தியிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் சமஷ்டிக் கருவூலத்தையே சாரும். ஸ்விட்சர்லாந்தில் ஒவ்வொரு பகுதியிலும் கூடுமான வரை நியாயமாக ஒரே கொள்கையின்மீது தபால் தந்திக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

V. அமெரிக்க ஐக்கிய நாடுகள் (1787)

8ஆம் பிரிவு : வரிகள், கடமைகள், தீர்வைகள், ஆயத்தீர்வைகள் இவற்றை விதிக்கவும் வசூலிக்கவும், ஐக்கிய நாடுகளின் பொது நன்மைக்கும் பொதுப் பாதுகாப்பிற்கும் வகை செய்ய வேண்டும். கடன்களைத் திருப்பிக் கொடுக்கவும், காங்கிரசுக்கு (அமெரிக்கப் பாராளுமன்றத்திற்கு) அதிகாரம் உண்டு. ஆனால், எல்லாக் கடமைகளும், தீர்வைகளும், ஆயத்தீர்வைகளும் ஐக்கிய நாடுகள் முழுமையும் ஒரே தன்மையவாக இருக்க வேண்டும்.

2. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நாணயத்தின் (credit) பேரில் பணம் கடன் வாங்கவும்

3. பிற நாடுகளுடன் வாணிபத்தைக் கட்டுப்படுத்தவும், மாநிலங்களிடையும், இந்திய இனத்தார்களுடனும் வாணிபத்தைக் கட்டுப்படுத்தவும்.

4. ஐக்கிய நாடுகள் பூராவும் திவாலாக்களைப் பற்றியே ஒரு தன்மையான சட்டங்களையும், குடி மக்களாவதற்கு ஒரே தன்மையான விதி அமைக்கவும்.

5. நாணயத்தை வெளியிடவும், அதன் மதிப்பையும், அந்நிய நாட்டு நாணயத்தின் மதிப்பையும் கட்டுப்படுத்தவும் எடைகள் அளவைகளை நிர்ணயிக்கவும்.

6. ஐக்கிய நாடுகளின் செலாவணியிலிருக்கும் நாணயத்தைப் போலவும், கடன் பத்திரங்களைப் போலவும், போலியாகக் கள்ள நாணயங்களையும், கள்ளக் கடன் பத்திரங்களையும் வெளியிடு வோருக்குத் தண்டனை விதிக்கவும்.

12. படைகளைத் திரட்டவும், திரட்டி அவற்றுக்கு ஆதரவு அளிக்கவும், அமெரிக்கக் காங்கிரசுக்கு அதிகாரம் உண்டு. ஆனால், படைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ஈராண்டுக்கு மேல் நீடிக்கக் கூடாது.

9ஆம் பிரிவு : (4) மக்கள் கணக்கு (census) அல்லது வேறெந்த விதமான கணக்கையும் கவனத்தில் கொள்ளாது, ஆள் வரியோ, அல்லது வேறு எவ்வித நேர்முக வரியோ விதிக்கக்கூடாது.

5. எந்த மாநிலத்திலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள்மீதும் வரியோ அல்லது தீர்வையோ விதிக்கக்கூடாது.

10ஆம் பிரிவு (2) காங்கிரசின் இணக்கமின்றி எந்த மாநிலமும் தான் மேற்பார்வையிடும் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு மிகவும் தேவையான வரிகள் அல்லது கடமைகளை அன்றி வேறு வரிகள் அல்லது கடமைகளை விதிக்கக்கூடாது. இறக்குமதி அல்லது ஏற்று மதிகளின்மீது எந்த மாநிலமும் விதிக்கும் வரிகள் அல்லது கடமைகளி லிருந்து வரும் நிகர வருமானம் ஐக்கிய நாடுகளின் கருவூலப் பழக்கத் திற்கே இருப்பது. இவ்வெல்லா வகைச் சட்டங்களும் காங்கிரசின் புனராலோசனைக்கும், கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டவை.

VI. தென்னாப்பிரிக்க யூனியன் : 1909

(1937ல் திருத்தப்பட்டபடி).

85ஆம் விதி : இச்சட்டத்தின் விதிகளுக்கு இணங்கவும், கவர் னர் ஜெனலின் சம்மதத்தைப் பெற்றும், மாகாணக்குழு பின் வ்ரும் விஷயங்களைக் குறித்துக் கட்டளைகள் பிறப்பிக்கலாம்.

1. மாகாணக் காரியங்களுக்காக நிதி திரட்ட மாகாணத்தி லேயே நேரிடையாக வரி விதித்தல்.

12. கவர்னர் ஜெனரலின் சம்மதத்தைப் பெற்றும் பாராளு மன்றம் எடுக்கும் விதிகளுக்கு இணங்கவும் தம் சொந்தப் பொறுப்பின் மேல் மாகாணங்கள் பணத்தைக் கடன் வாங்கலாம்.

13. மேற்கல்வியைத் தவிர, பிற கல்வி, (பாராளுமன்றம் வேறு வகையான முடிவு செய்யும் வரை) ஐந்தாண்டுக் காலத்திற்கோ, அதற்கு மேற்பட்டோ மாகாணங்களின் வசமிருக்கும்.

124ஆம் விதி : காலனிகள் நிறுவப்பட்ட பொழுது இருந்த எல்லாக் கடன்களையும் பொறுப்புகளையும் யூனியன் மேற்கொள்ளுகிறது. இச்சட்டத்தில் அதற்கு முரணான விதிகள் இருந்தாலும், அவை செல்லா. இக்கடன்கள் அல்லது பொறுப்புகள் திரட்டப்பட்ட அல்லது ஏற்பட்ட பொழுது இருந்த சட்டம் விதித்த நிபந்தனைகளுக்கு உட்பட்டும் அசல், வட்டி, கழிவு நிதி, பிற கட்டணங்கள் எந்தக் காலனிகளின் கடன் கொடுத்தோருக்காவது கொடுக்கப்பட்டிருந்தால், அவ்வுரிமைகளுக்குக் குந்தகம் இல்லாமலும், இக்கடன்களை மாற்றவும் பதிக்கவும் ஒன்று சேர்க்கவுமான நிபந்தனைகள் அல்லது உரிமைகளுக்கு முரணில்லாமல் யூனியன் அரசாங்கம் மேற்கொள்ளும்.

தென்னாப்பிரிக்க யூனியன் சட்ட அமைப்பு ஒற்றைத் தன்மையதாயினும் (unitary) அதில் சமஷ்டி அமிசங்களும் இடம் பெற்றுள்ளன.

உ. கால்டர் அறிக்கை

(Kaldor Report)

இந்திய புள்ளியியல் கழகம் (Indian Statistical Institute) நிக்கோலஸ் கால்டர் என்ற புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பொருட்புலவரை இந்திய வரி முறையை ஆராய்வதற்காக வரவழைத்தது. அவர் 1956ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தம் வேலையைத் தொடங்கினார். 1956ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் தம் அறிக்கையை இந்திய அரசாங்க நிதியமைச்சரிடம் சமர்ப்பித்தார்.

இப்போதைய நேர்வரி விதிப்பு முறை அநீதியானதாகவும், திறமையற்றதாகவும் இருப்பதாக அவர் கருதினார். இப்போது 'வருமானம்' என்பதற்குச் சட்டத்தில் தரப்பட்ட விளக்கம் குறைபாடுடையதென அவர் கருதினார். அதனால், இக்குறைபாடுடைய விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு விதிக்கப்பட்ட வரி முறையும் அநீதியானது. நேர்முக வரி விதிப்புத் திறமையின்றி இருப்பதற்குக் காரணம் பெருவாரியான அளவில் வரி கொடாமல் தப்புவதற்கு அது இடம் அளிப்பதாகும். ஆண்டுதோறும் சுமார் முந்நூறு கோடி

ரூபாய் வருமான வரியாகக் கொடுக்கப்படாது வரியிலிருந்து தப்புவதாகக் கால்டர் நம்புகிருர். வரியிலிருந்து தப்புவதைத் தடுக்க நான்கு புதிய வரிகளை விதிக்கவேண்டுமென்று அவர் யோசனை கூறினுர். அவையாவன : 1 முதலீட்டு ஆதாய வரி (Capital Gains Tax). 2. செல்வ வரி. 3. செலவு வரி (ஆண்டுதோறும் நபர் ஒன்றுக்கு ரூ. 10,000 க்கு மேல் செலவழித்தால்). 4. கொடை வரி. வருமான வரி விதிக்கப்படும்பொழுது இவ்வரிகளும் விதிக்கப்படும். செல்வத்தை அல்லது வருமானத்தை மறைத்தோ, அல்லது குறைத்துக் கூறியோ, ஒரு வரி கொடாது தப்ப முடியாது. ஏனெனில், ஒரு வரியினின்றும் தப்பினுல் பிற வரிகள் வசூலிக்கும்பொழுது வரி கொடாது தப்பிச் சென்ற செல்வம், வருவாய் மீதும் வரி வசூலிக்கப்படும். அதுவுமன்றி, அதிக வரி வீதம் கொடாது தப்புவதற்காக ஒருவர் தம் செல்வம் அல்லது வருமானத்தைக் குறைத்துக் கூறினுல் அதனுல் பிறரது செல்வம் அல்லது வருமானம் கூடுதலாகக் காண்பிக்கப்படும். அதன் பேரில் வரி வசூல் செய்யப்படும். தனியார் வருமான வரியைப் பொறுத்தவரை மிக உயர்ந்த வரி வீதம் 45% க்கு மேல் இருக்கக் கூடாதென அவர் சிபாரிசு செய்தார். (இப்பொழுது வருமான வரியின் உச்ச வீதம் 92%). ஆனுல், கால்டரின் இச்சிபாரிசை அரசாங்கம் இது வரை ஏற்கவில்லை. இதனுல், அரசாங்கத்தின் வருவாய் மிகவும் குறையும். திட்ட இலட்சியங்களை அடைவதற்குப் பாமர மக்கள் மீது கூடுதல் வரி விதிப்பின் மூலமாகவோ அல்லது பண வீக்கத்தின் மூலமாகவோ பணம் திரட்டினுல், அவர்கள்மீதிருக்கும் வரிப்பளு அதிகரிக்கும். அதனுடன் நன்னிலையில் இருக்கும் சிறுபான்மையோரான செல்வந்தர்களின்மீதும் வளர்வீத நேர்முக வரி விதிப்பின் மூலம் சிறிது வரிப்பளுவை ஏற்றுவதும் இன்றியமையாததாகிறது.

வரி விதிப்பு விசாரணைக் குழுவைப்போன்றே கால்டரும் நில வரியை உயர்த்தும்படி கூறுகிருர். (இப்பொழுது விவசாய நிகர விளைவின் 1% தான் நிலவரியாக வசூலிக்கப்படுகிறது. நில வரி விகிதத்தை முன்னமே கூட்டியிருக்க வேண்டும்). பெருவாரியான அளவில் மக்கள் நுகரும் குறிப்பிட்ட சில பண்டங்களின்மீது அவசியம் ஏற்பட்டால், ஆயத் தீர்வைகள் விதிக்க வேண்டுமெனவும் கால்டர் சிபாரிசு செய்தார்.

௩. ரிக்ஞேவின் இறப்பு வரித் திட்டங்கள்

(Rignano's Scheme of Death Duties)

புகழ் பெற்ற இத்தாலியப் பொருட்புலவரான பேராசிரியர் யூஜெனியோ ரிக்ஞே (Eugenio Rignano) வருமானங்களில் ஏற்றத்

தாழ்வுகளைக் குறைப்பதற்கும், அதே சமயத்தில் அவை உற்பத்தியைக் குறைப்பதைத் தடுப்பதற்கும் ஒரு பிரத்தியேக வகை வாரிசு வரியை விதிக்கலாம் என்று யோசனை தெரிவித்தார். காலத்தில் வளர்வீத (Progressive in time) வரி முறையை வாரிசு வரி விதிப்பில் கடைப் பிடிக்க வேண்டுமென்று அவர் கருத்துத் தெரிவிக்கிறார். இதுகாறும் சொத்தின் அளவையும் பெறுமானத்தையும் பொறுத்து மரணவரி விதிக்கப்பட்டது. சொத்தின் வயதிற்கு (relative age) ஏற்ப மரண வரி விதிப்பது மூன்றாவது முறையாகும். சொத்தின் வயதை அடிப் படையாகக் கொண்டால், இறந்தவரின் சொத்தில் மிகப் பல கைமாறி வந்த சொத்துகள் கூடுதல் வரி வீதத்தையும், பிற சொத்துகள் குறைவான வரி வீதத்தையும் கொடுக்க வேண்டியிருக்கும்.

ரிக்ஞனோவின் திட்டங்களுக்குப் பல விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு விளக்கங்கள் தலையாயவை. ஒன்று, ‘உச்சத் திட்டம் (maximum project) என்றும், மற்றொன்று, குறைந்தபட்சத் திட்டம் (minimum project) என்றும் கூறப்படும். உச்சத் திட்டத்தின் கீழ் ஒரு சொத்து ஒவ்வொரு தடவை கைமாறும் பொழுதும் வரி வீதத்தை ஏற்றிக்கொண்டே வந்து, மூன்று தலைமுறைகளில் சொத் துப் பூராவும் மரணவரியாகக் கொள்ளப்படும். குறைந்த பட்சத் திட்டத்தின்கீழ் வரி வீதம் ஒருகாலத்தும் 100% ஆக உயராது. இத் திட்டத்தின்படி மரண வரியில் இரு வகைப்பட்ட வரி வீதங்கள் இருக்கும். உயில் எழுதியவர் தாமே தம் சொந்த முயற்சியால் சேர்த்து வைத்த சொத்துகளின்மீது சற்றுக் குறைந்த வீதத்திலும் அவர் வாரிசாகப் பெற்ற சொத்துகளின்மீது சற்றுக் கூடுதலான வீதத்திலும் இறப்பு வரி விதிக்கப்படும்.

திறனாய்வு

ரிக்ஞனோவின் திட்டங்களை நடைமுறையில் அமுல் செய்வதில் மூன்று கட்டங்கள் இருக்கின்றன. அவையாவன :—(1) நிர்வாகக் கட்டங்கள் (2) சமூக, தனிப்பட்ட அநியாயங்கள் (social and personal injustices), (3) பொருளாதாரக் குறைபாடுகள். பூரணமாக ரிக்கார்டுகளைத் தயாரிப்பதற்கு இரண்டு தலைமுறையாவது ஆகும். கூட்டு முதலீடுகளுக்கும் செட்டில்மென்டுகளுக்கும் (settlements) தனிப்பட்ட ஷரத்துகளைச் சட்டத்தில் சேர்க்க வேண்டும். வாய் மொழி மூலம் தரப்பட்ட கொடைகளை மறைப்பவர்களுக்குக் கடுந் தண்டனை அளிக்க வேண்டும். வாரிசுதாரர்கள் தாங்கள் வாரிசாகப் பெற்ற செல்வத்தை விற்காமல் தடை செய்ய வேண்டும். முதலில் வாரிசாகப் பெற்ற செல்வம் ஊதாரித்தனத்தினால் கரைக்கப்பட் டிருக்குமானால், உயில் எழுதியவர் வாரிசாகப்பெற்ற செல்வத்தை

அவர் சொந்த முயற்சியால் சேர்த்து வைத்த செல்வத்நிலிருந்து பிரிக்க முடியாது. பல்வேறு வீதங்களில் சொத்துகளின் பல பகுதி களின்மீது வரி விதிப்பதனுலும் அநீதி விளையலாம். முதல் முறை வரி விதிப்பிற்கும் இரண்டாம் முறை வரி விதிப்பிற்கும் இடைப்பட்ட காலத்தில் விலை வாசிகள் ஏறியிருந்தால், கூடுதல் வீதத்தில் வரி விதிப்பது அநீதியாகும். ஏனெனில், வாரிசுதாரர் இப்பொழுது பணத் திற்கு முன்னர் வாங்கியதைவிடக் குறைவாகவே பண்டங்களை வாங்க முடியும் (பணத்தின் வாங்கும் சத்தி குறைந்துவிட்டது). ஆனுல், விலை வாசிகள் குறைத்திருந்தால், அதே அளவு வரி விதிப்பது வரிப்பளுவைக் குறைப்பதில் முடியும். ரிக்ஞேவின் திட்டத்தால் சேமிப்பு அதிகரிக்கும். எவ்வாறெனில், ரிக்ஞே திட்டத்தின்கீழ் வாரிசுதாரர் தம் முன்ஞேரிடமிருந்து பெற்ற சொத்துகளில் சிறிது தொகை குறையலாம். அல்லது ஒன்றையுமே தம் மக்களுக்கு வைக்க முடியாமல் போகுமாதலாலும் தாம் சேர்த்து வைக்கும் சொத்தின் மீது கூடுதல் வரி விதிக்கப்படாததாலும் அதிகம் சொத்துச் சேர்த்து வைப்பார். கோல்வின் கமிட்டி ரிக்ஞேவின் திட்டங்களுக்கு ஓரளவு ஆதரவு தந்தது.

ஆசிரியர் பெயர் முதற்குறிப்பு அகரவரிசை

(எண்—பக்க எண்)

பொருட்குறிப்பு அகரவரிசை

(எண்—பக்க எண்)